Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS

ஓம்

தத்ஸத்

பரப்பிரஹ்மணே நமஃ.

சிவப்பிரகாசப்

# பெருந்திரட்டு

(குறுந்திரட்டுடன்).

24407

—— :(o): ——

2+8+16+இது4+588

சென்னை, பிரெசிடென்சி மாஜிஸ்டிரேட்டாயிருந்த

ஸ்ரீமத் P. இராஜரத்தின முதலியாரவர்கள்

பிரேரணையாலும், பேருதவியாலும்,

சென்னை-ஹிந்து தியலாஜிகல்

ஹைஸ்கூல், தமிழ்ப்பண்டிதர்

கோ. வடிவேலு செட்டியார் அவர்களாலும்

மங்கலம் - சண்முக முதலியார் அவர்களாலும்

பரிசோதித்து,

சென்னை-கோமளேசுவரன்பேட்டை, சச்சிதாநந்த

அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

*Copy-Right Registered.*

விலை ரூபாய் [redacted]

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம:

# முகவுரை.

எல்லாம் வல்ல விறைவன் நம்மனோர் கர்மக்கிரந்தி, இருதயக்கிரந்தி, அகங்காரக் கிரந்தியென்னு மூவகைக் கிரந்தியினின்று மகன்று சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்திவடிவ மோட்சத்தினை யடைதற் பொருட்டு, ஒவ்வொரு சிருட்டியி னாரம்பத்திலும் வெளியிட்டருளுவதாகிய வேதத்தை மூலமாகக் கொண்டெழுந்த நூல்கள் பலவாம்; அவை ஸ்மிருதி, புராணம், இதிகாச மென்றற் றொடக்கத்தனவாம். இவற்றுள், ஒவ்வொன்றும் சித்தசாந்தியை யடையும் வகையைப் போதிப்பதென்பது வித்வத் சிரோமணிகளறிந்த விஷயமாம். மேற்குறிப்பித்த நூல்களியாவும் சம்ஸ்கிருத பாஷையிலிருக்கின்றமையின், அவை சம்ஸ்கிருத பாஷைபுணர்ச்சியுடையார்க்கன்றி மற்றையர்க்குப் பயன்றருவனவாவதில்லை யென்னுங் குறையை நிவிர்த்திக்குமாறு சான்றோர்க ளவற்றின் றாற்பரியங்களை ஒத்துமுறை வைப்பாக வமைத்துப் பலவகைப் பட்டனவாக வளவிறந்த சாஸ்திரங்களைத் தத்தம் பாஷைகளி லியற்றி யருளினார்க ளென்பது மிகு பிரசித்தமாம். அங்ஙனமியற்றியருளிய சாஸ்திரங்களுள் பெருந்திரட்டென்பதுமொன்றாம். இப்பெருந்திரட்டு இதுகாறும் அச்சுவாகன மேறி வரவில்லையென்பதும் வெளிப்படையாம். இது கைலாசபரம்பரை-சிவப்பிரகாசசுவாமிகளின் சிஷ்யர் சொரூபாநந்த சுவாமிகள் ஞான சாஸ்திரங்கள் பலவற்றினின்றும் 2821 - செய்யுட்களைப் பொருத்தமாக வெடுத்தமைத்துத் திரட்டிய நூலாம். இஃது இற்றைக் கேறக் குறைய 600 வருஷத்திற்குமுன் திரட்டி யிருக்கலாமென் றவரது சரித்திரத்தால் விளங்குகின்றது.

இப்பெருந்திரட்டு ஒருவிருக்ஷத்தின் வடிவம் போன்று வகுத்தமைக்கப்பட்டிருக்கின்றது. அஃதித்திரட்டின் முகவுரைச் செய்யுளால் நன்கு விளங்கும். இதன்கணுள்ள வொவ்வொரு விஷயமும் இன்றியமையாதறியத்தக்கதாமென்பது இதனது விஷய வட்டவணையைப் பார்த்தபோது செவ்விதின் விளங்கும். இத்திரட்டைப் படிப்பவர் லோகாயத முதல் வேதாந்த மீறாகவுள்ள மதங்களின் சொரூபமும், கண்டன மண்டனங்களும், யோகலட்சணங்களும், ஞானத்தின் சாட்சாத் சாதனங்களின் சொரூபமும், குருபத்தியினருமை பெருமையும் பிறவும் செவ்விதி னுணர்ந்தவராவர்.

இப்பெருந்திரட்டிற் காட்டிய நூல்களுள் மாண்டொழிந்தன பலவாம்; ஜீவித்திருப்பன சிலவாம்; ஜீவித்திருப்பன வற்றுள்ளும், அச்சுவாகன மேறி [illegible]க்கவில்லையாம்

இத்திரட்டிலுள்ள செய்யுட்களுட்பலவற்றையும் வேறு செய்யுட்கள் சிலவற்றையும் சேர்த்துக் குறுந்திரட்டென்னும் நூல் தத்துவராய சுவாமிகளால் திரட்டப்பட்டதாகலின், பெருந்திரட்டிலில்லாத குறுந்திரட்டின்பாடல்களையெல்லாம் அவ்வவ்வதிகாரத்தின் கீழ்ப் படிப்பவரது உபயோகத்தினிமித்தம், அச்சிடப்பட்டிருக்கின்றன. இதனால் இப்பெருந்திரட்டை வாசிப்பவர் குறுந்திரட்டையும் வாசித்தவராவரென்பதினிது விளங்கும். இதனை யச்சிடவெமக்குக் கிடைத்த பிரதிகள் 11. அவற்றுள், பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) பெரும்பான்மையாகவொத்திருந்த பிரதிகள் நான்காம்; ஏனையவேழும் பெரும்பான்மையாக மாறுபட்டிருந்தன. பெருந்திரட்டை யச்சிட வாரம்பித்தபோது கிடைத்தபிரதிகள் - 4; அச்சிடுகின்றபோது கிடைத்த பிரதிகள் 3; அச்சிட்டுமுடிந்தபிறகு கிடைத்த பிரதிகள் 4. பின்னே பின்னே கிடைத்த பிரதிகளோடு முன்னே முன்னே யச்சிட்டுள்ளவற்றை யொப்பிட்டுப் பார்த்தபோது சிற்சில விடத்து இன்றியமையாத பாடபேதங்களும் பாடல்களும் காணப்பட்டன. அப்பாடபேதங்களையும் பாடல்களையும் இதனைப் படிப்பவர்க் குபயோகமாமாறிதன்கணச்சிட்டு வைத்திருக்கின்றனம். பல முறையும் பின்னே பின்னே கிடைத்த பிரதிகளோடொத்திட்டுப் பார்த்ததால் முன்னே முன்னே அச்சிட்டவற்றுள் அத்தியாவசியகமான திருத்தங்களும் காணப்பட்டன; அவற்றையெல்லாமச்சிட்டமைபற்றிப் பிழை திருத்தம் சிறிது பெரிதாயது.

சென்னை - பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டாயிருந்த ஸ்ரீமத் - பூ. இராஜரத்தின முதலியாரவர்கள் தாம் முதல் முதல் இப்பெருந்திரட்டை யச்சிட்டு முடிக்கவேண்டுமென்றெங்கட்குப் பிரேரேபணை செய்தவர். அவர்கள் அது பற்றித்தம்மிடத்திருந்த பெருந்திரட்டுப்பிரதிகளிரண்டைத்தந்ததோடு வேறு பல வுதவியுஞ் செய்தார்கள். வேதாந்த சாஸ்திரங்களிடத்தும் பெரியோர்களிடத்தும் பேரபிமான முடைய அவர்கள் இது விஷயமாகச் செய்தவுதவி யென்றும் மறக்கத்தக்கதன்றாம்.

சென்னை - ஆநந்தாசிரமத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் இது விஷயத்திற் கொண்ட பேருக்கஞ் சொல்லுந் தரத்தின தன்று.

காஞ்சீபுரம் - ஸ்ரீமத் - நிச்சல - ராமாநந்த சுவாமிகளவர்களும் இத்திரட்டை யச்சிடுமாறு பிரேரேபணை செய்தவர்களி லொருவர்.

இஃதச்சிடுங்காலத் துடனிருந் துதவிசெய்த வுத்தமர்கள் பலர். அவர்களது நன்றியும் மறக்கத்தக்கதன்றாம்.

இதனை யச்சிட்டு முடிக்குமாறு கருணை புரிந்த வெல்லாம் வல்ல விறைவன் இஃதென்றும் நிலைபெற் றுலாவுமாறுங் கருணைபுரிவாராக. இதிற்பிழையுளதாயின், உலகம் பொறுக்க.

கோ - வ.
ம - ச.

1—12—11.

# பெருந்திரட் டச்சிடக் கிடைத்த
# பிரதிகளின் விபரம்.

## அச்சிடுமுன் கிடைத்த பிரதிகள்.

சென்னை - பிரசிடென்ஸி மாஜிஸ்ரேட் - ஸ்ரீமத், பூ - இராஜரத்தின முதலியார் அவர்களின் பிரதி 2. அவற்றுள், ஒன்று ஏட்டுப்பிரதி; மற்றொன்று காகிதப் பிரதி.

சிதம்பரம் - ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளது மடாலயத்தின் காகிதப் பிரதி 1. இது ஸ்ரீமத் - சுப்பய்யசுவாமிகளவர்களது முயற்சியாற் கிடைத்தது.

சென்னை - தொண்டமண்டலம் ஐஸ்கூல் - தமிழ்ப் பண்டிதர் - ஸ்ரீமத் - சிவப்பிரகாச ஐயாவர்களின் (திருப்போரூர் ஸ்ரீசிதம்பர சுவாமிகள் ஆதீனத் தம்பிரானவர்கள்) ஏட்டுப் பிரதி 1.

## அச்சிடும்போது கிடைத்த பிரதிகள்.

பிரஹ்மஸ்ரீ - எம் - கே - நாராயணசாமி ஐயர் - பி-ஏ, பி-எல், அவர்களின் முயற்சியாற் கிடைத்த ஏட்டுப் பிரதி 3. இம்மூன்றும் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்தின் பிரதிகளாம். இவற்றுள், ஒன்று பூரணமானது; மற்றைய விரண்டும் பூரண மாகாதவை. பூரணமாயுள்ளது விருதை ஸ்ரீமத் - சிவஞானயோகிகளது பிரதியாம்.

## அச்சிட்டு முடிந்தபின் கிடைத்த பிரதிகள்.

| | |
|---|---|
| குறுந்திரட்டுக் காகிதப் பிரதி | 1. |
| பெருந்திரட்டுக் காகிதப் பிரதி | 3. |

இவை மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்துப் பிரதிகள். இவற்றுள், ஒன்றேனும் பூரணமானதன்று. ஆகப்பிரதி 11.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம꞉.

## சொரூபானந்த தத்துவராய சுவாமிகளின்

# சரித்திரச் சுருக்கம்.

வடக்கே திருவேங்கட மலையையும், தெற்கே குமரி யாற்றையும், கிழக்கே கடலையும், மேற்கே கடலையும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டின்கணுள்ள தொண்டைநாடு, மகதநாடு, சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, துளுவநாடு என்பனவற்று ளொன்றாகிய மகதநாடு அல்லது நடுநாட்டிலே வீரைமாநகரிலே இற்றைக் கேறக்குறைய 600 வருஷத்திற்கு முன்னர்த் தமிழ் மக்கள் செய்த தவப்பயனாக † வைதிகசைவப் பிராமண வருணத்திலே புண்ணிய மூர்த்திக ளிருவர் அம்மான் மருமகனென்னும் முறையுடையவர்களாகத் ‡ திருவவதாரஞ்செய்தார்கள். அவர்கள் நல்லாசிரியரை யடுத்து வடமொழி தென்மொழிகளுட் கற்கவேண்டியனவற்றை யையந்திரிபறக் கற்று அறிவொழுக்க முடையவர்களாய் வளர்பிறைபோல வளர்ந்துவருங் காலத்தில், அவர்களுள் ஒருவர் தத்துவவிசாரமும், மற்றொருவர் சொரூப விசாரமும்செய்து வந்தமையின், அவ்விருவரும் முறையே தத்துவராயரென்றும் சொரூபானந்தரென்றுங் காரணப் பெயர்பெற்று விளங்குவாராயினர்.

தத்துவராயரும், சொரூபானந்தரும், நீக்க மற்ற நண்புடையவராய்க் கல்வி யறிவொழுக்கங்களால் மேம்பட்டுப் பிரமசரிய நிலையினின்றுந் தவறாது விளங்கிவருங் காலத்தில் ஒரு நாள் அவ்விருவரும் நாம் சற்குருமூர்த்தியை யடைந்து தத்துவோபதேசம்பெற்று,உயர்வறவுயர்நலமுடைய முத்தியினை யடைதல் வேண்டும்; இதுவே மனிதப் பிறப்பின் பயனாகுமென்று தம்முட்பேசி யொரு முடிவிற்கு வந்து, பசியால் வருந்துவோன் அன்னத்தைத் தேடுமாறு போன்றும், தீயால் வருந்துவோன் தண்ணீரைத் தேடுமாறு போன்றும், வெயிலால் வருந்துவோன் நிழலைத்தேடுமாறுபோ

† மாத்துவப் பிராமண குலத்திலே என்றும சொல்லப்படுகின்றது.

‡ சொரூபானந்தர் ஜனனபூமி சேந்தமங்கலம்; தத்துவராயர் ஜனனபூமி வீரைமாநகர் என்று கூறுவாருமுளர்.

ன்றும், சற்குருநாதனைப் பிறவிப்பிணியை யொழிக்குமாறு தேடுவாராயி னர்; இவர்கள் புண்ணிய க்ஷேத்திரங்களிலும், புண்ணியநதி தீரங்களிலும், இன்னும் பலவிடங்களிலும் பல நாள் தேடிப்பார்த்தும் சிவசொரூபமாந் தேசிகமூர்த்தி தமக்கெதிர்ப் படாமையால் மிகவும் வருத்தமுற்று, நம்முள் யாவர்க்குமுன்னர்ச் சற்குருநாத னனுக்கிரகங் கிடைக்கின்றதோ அவர்க்கு மற்றவர் சீடராதல் வேண்டுமென் றுறுதிசெய்து கொண்டார்கள். பிறகு சொரூபாநந்தர் தெற்கிலும் தத்துவராயர் வடக்கிலுமாகப் பிரிந்துபோனார் கள். தெற்கேசென்ற சொரூபாநந்தர் திருப்பைஞ்ஞிலியென்னும்சிவக்ஷேத் திரத்தையும் திருவெள்ளறையென்னும் விஷ்ணு க்ஷேத்திரத்தையும் தன் பக்கத்தே யுடையதா யிருக்கின்ற கோவத்த மென்னு மூரையடைந்த போது அவர்க்கு "வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பிக்கு மெய்ந்நடுங் கும், வார்த்தை நழுவு மனம்பதறுங்—கார்க்கதமாய்க், காந்து மூரோ மாஞ் சலியாகுங் காதலித்தார்க், கேய்ந்தகுணங் காணிவையெட் டும்." என் றருழிவிலொடுக்கங் கூறுகின்றவாறு வேர்த்தல், கண்ணீர் ததும் பல் முதலிய நற்குறிக ளுண்டாயின; உண்டாகவே, அவர் இந்தப் பதி நமது குருநாதனெழுந்தருளியிருக்குந் திருப்பதியாகும் என்று சிந்தித்து ஊரினுட் சென்று, அங்குள்ளாரை நோக்கி இங்கே மகாத்மாக்களெழுந்தரு ளியிருக்கின்றார்களோ வென்று வினவினார். அதற்கவர்கள் இவ்வூர்ப் புறத்திலே நாணற் புதரொன் றிருக்கின்றது; அப்புதரிலே ஒருபெரியவ ரிருக்கின்றார்; அவர் பெயர் சிவப்பிரகாச சுவாமிகள்; அவர் எப்போதா வது மாலைக்காலத்திலே அப்புதரினின்று வெளியேவருவாரென்று கூறி னார்கள். அது கேட்ட சொரூபாநந்தர் அப்புதரிருக்குமிடஞ் சென்று அவ ரது வருகையை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வாறவர் காத்துக் கொண்டிருக்கும் போது ஒருநாள் மாலையிலே சிவப்பிரகாச சுவாமிகள் வெளியே வந்தார்; அது கண்டு சொரூபாநந்தர்" "சைதந்யம் ஶாஸ்வதஞ் சாந்தம் வியோமாதீதம் நிரஞ்சநம், நாத பிந்து கலாதீதம் தஸ்மைஶ்ரீ குர வேநம:." என்று கூறித்துதித்து,அவரது திருவடியில்விழுந்து நமஸ்காரஞ் செய்து, அடியேனைப் பிறவிப் பெருங்கடலினின்றுங் கரையேற்ற வேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

அவர் இவன் அதிதீவிரதர பக்குவனென்று குணங்குறிங்களால்செவ் விதாக வறிந்து, சொரூபாநந்தருக்கு "நினைவரிய வொருபிரமம் நீயே"என் று தத்துவோப தேசத்தை ஐயந்திரி பில்லாவாறு செய்தனர். அதனால் அவர் சகஜநிஷ்டைபெற்றவராகி யவ்விடத்திலேயேயிருந்தார். இஃதிங்ஙனமாக, வடக்கேசென்ற தத்துவராயர் குருநாதன் கிடைக்கப் பெறாமையால் மழை யில்லாப் பயிர் போல மனம் வாடித் தெற்கே வந்து கோவத்தத்தில் சொ ரூபா நந்தரைக்கண்டு பரவசமுற்று,நடந்த வரலாற்றினைச் செவ்விதாக வறிந் து, அவரிடத்து, ஒரு மொழியினுண்மைப் பொருளை யுள்ளவாறறிந்து, நிர்விகற்ப நிஷ்டை கூடி நிரதிசயாநந்த வடிவமாக விளங்கியிருந்தார்.

இவ்வாறிருக்குங் காலத்தில் சொரூபாநந்தர் தமிழிற் கவிபாடுந் திற மை கருவிலே யமையப் பெற்ற தத்துவராயரை நோக்கி அன்பனே! நீ உலோகோபகாரமாகச் சில நூல்களியற்ற வேண்டு மென்று குறிப்பாகப் பல முறை தெரிவித்து வந்தனர். சொரூபாநந்தர் வற்புறுத்திக் கூறுமையாலும் நிஷ்டையின் மிகுதியாலும் நூலியற்ற வேண்டு மென்னு மெண்ணம் தத்துவராயர்க் குண்டாகாதிருந்தது. அது தோன்றும்படி சொரூபாநந்தர் ஒரு நாள் அமாவாசையில் எண்ணெயிட்டுக் கொள்ள, ஏவலாளரை நோக்கி எண்ணெய் கொண்டு வருமாறு கூறினர். அதுகேட்ட தத்துவராயர் இன்று அமாவாசை யெனக்கூற வேண்டி அம் என்றார். அப்போது சொரூபாநந்தர் விதிநிஷேத சூனியஞன வெனக்கா, நீ விதிகற்பிக்க வந்தாய், எதிரே நில்லாதே, ஓடிப்போ என்று (வேண்டு மென்று) கடுகடுத்துக் கூறினர். அதற்குத் தத்துவராயர் மிகவும் பயந்து நடுக்கமுற்று இனி நானிச் சரீரத்தோடிருத்தல் தகுதியுடைய தாகாது; கடலில் விழுந்திறப்பதே தகுதியென்று குரு சந்நிதானத்தை நோக்கிக் கொண்டே பின்னடி வைத்து நடந்து பிரிவாற்றாமை காரணமாகக் கண்களில் நீர் தாரை தாரையாக வொழுக, பரமாசாரியராகிய சிவப்பிரகாச சுவாமிகள் மீதும் ஆசிரியராகிய சொரூபாநந்தர் மீதும் சிவப்பிரகாச வெண்பா, தத்துவாமிர்தமென்னும் நூல்களையும், திருத்தாலாட்டு முதல் அமிர்தசாரமீறாயுள்ள அடங்கல் முறையினையும் பாடிப் போம்போது, அவற்றைத் தொடர்ந்து சென்ற அடியார்கள் அப்போதப்போதெழுதிக் கொண்டுபோய்ச் சொரூபாநந்தர் முன்னர் வைத்தார்கள். அவர் அந்நூல்களின் மீது விருப்ப மில்லாதவர்போல மயிருள்ளவன் வாரி முடிப்பதுபோல வாயுள்ளவன் பாடி யனுப்புகின்றானென்று கூறிக் கொண்டிருந்தார். இஃதிங்ஙனமாக, தத்துவராயர் குருதரிசனங் கிட்டாது போனமை பற்றி மிகவும் வருத்தமுற்றுப் பாடுதுறையில் திருவடி மாலையைப் பாடிக்கொண்டு கடலில் விழுந்திறக்கச் சமீபித்துச் சென்றதை யடியார்களுட் சிலர் விரைந்தோடி வந்து சொரூபாநந்தருக்குத் தெரிவித்தார்கள். அதற்கவர் "அந்தக் குருவிற்கு வீங்கியை வரச்சொல்லுங்கள்" என்று கட்டளையிட, அவ்வடியார்கள் விரைந்தோடிப் போய்த் தத்துவராயருக்கதனைத் தெரிவித்தார்கள். அதனாலவர் அங்கமெல்லாம் பூரித்து, 'என்னையும் சுவாமி வரக் கட்டளை யிட்டதோ? என் பிழையையும் பொறுத்தருளிற்றோ? என்று தழு தழுத்துக் கூறிப் பின்னர்

"ஆடுங் கழலா மடியி லொளித்தக்கால், தேடுவ தில்லையென்றாடாய் கழல், திருவடியல்லதென்றாடாய் கழல்" என்றிறுதியாகவுடைய பாடுதுறையைப் பாடிக்கொண்டே வந்து சொரூபாநந்தரை யடைந்து "பிழை பொறுத்தருள்க" என்று பலமுறை வணங்கி, அவரிருவெனக்கூற, பரவசப்பட்டிருந்து பணிவிடைகளைச் செய்துகொண் டிருந்தார். இவ்வாறிருக்கும்போது சொரூபாநந்தர் தத்துவராயர் பாடிய நூல்களைச் செவ்விதாக வாராய்ந்து பார்த்துப் பெருமகிழ்ச்சி யடைந்து அதை வெளியே காட்டாது தத்துவராயரை நோக்கி அன்பனே! இந்நூல்கள் உனக்கே யுபயோகமாம்.

பொதுவாக யாவருக்கு முபயோகமாகா என்று கூறினர். கூறினவச்சம யத்தில் மடைத்தொழிலாளர் சொரூபாநந்தரை யமுதுகொள்ள வழைத் தார்கள். அவர் அமுது கொண்டு வருவதற்குள், தத்துவராயர் குருமூர்த்தி யின் குறிப்பைச் சிந்தித்துணர்ந்து மோகவதைப் பரணியில் ஒருபிரகரண மாக வமைத்துச் சசிவர்ண போதத்தைப் பாடி முடித்து, குருமூர்த்திவந்த தும்; அவர் திருவடியில் அந்நூலை வைத்து வணங்கினர். அதனைச் சொரூ பாநந்த சுவாமிகள் பார்த்து வியந்து பெருமகிழ்வடைந்தனர்.

பிறகு தத்துவராய சுவாமிகள், ஈசுவரகீதை, பிரமகீதைமுதலிய நூல் களைப் பாடி முடித்து நிர்விகற்ப சமாதி புரிந்திருந்தார். இவரிவ்வாறிருக் குங்காலத்தில் யாத்திரை செய்து வந்த சில வாராத்தியர்களும் சில வித்து வான்களும் சொரூபாநந்தரது சந்நிதானத்திருந்த தத்துவராயர் முன்னர் வந்து † போர்முகத்தாயிரங் களிற்றியானையைத் தனக் கூறுபா டின்றிக் கொன்ற வீரனைத் தலைவனுகக் கொண்டு பாடப்படும் பரணியென்னும் பிரபந்தத்தை வீரமென்பதைச் சொப்பனத்தும் பெற்றில்லாத வும்முடைய குருவைத் தலைவனுகக் கொண்டு அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பர ணி என்னும் பிரபந்தங்களை நீர் பாடிய தெவ்வாறமையும் என்று வினவ, அதற்கவர் நமது தேசிகோத்தமர் தம்மை யடுத்த அளவிறந்த சிஷ்யர்க ளது அகங்காரமாகிய யானைகளை யுபதேசமாகிய போர்முகத்திலே மிகு வெளிதாகக் கொன்றுவிடுகின்றமைபற்றி அப்பிரபந்தங்களைப் பாடினே மென்று கூறினர். அதற்கவர்கள் நீர்கூறும் அகங்காரமாகிய யானை நேத் திரேந்திரியத்தா லறியப்படுவதன்முகலின், அது பொருந்தாது; பொருந் துவதாகக் கொள்ளினும், ஒரு சிஷ்யனது அகங்காரமாகிய யானையைக் கொல்லுவதற்கு அநேகநாள் வேண்டும்; உமது குரு ஏககாலத்தில் ஆயிரஞ் சிஷ்யர்களது அகங்காரமாகிய யானைகளைக் கொல்லுவ தெவ்வாறமையு மென்று வினவ, அதற்குத் தத்துவராய சுவாமிகள், அதனை யவர்கட்கனுப வமாகக் காட்டவேண்டுமென்று கருதி விடைகூறாது மனத்தை யுள்விழிப் பார்வை யாக்கிச் சமாதிகூடியிருந்தார். ஆட்சேபஞ்செய்தவர் சொரூபா நந்தரது சந்நிதான விசேஷத்தால், இராப்பகலறியாது மூன்றுநாள் பரி யந்தம் நிருவிகற்ப ஸ்திதியினைப் பெற்றிருப்பாராயினர். நாலாம் நாளில் தத்துவராயர் சமாதிகலைந்து வெளிமுகப்பட்டபோது, அவர்களும் வெளிப் பட்டெழுந்து, சொரூபாநந்தரையும் தத்துவராயரையும் பலமுறைவணங் கித் துதித்து, நாங்கள் அஞ்ஞானத்தின் மிகுதிப்பாட்டால், ஆட்சேபித் தோம்; தங்களது சந்நிதான விசேஷம் பதினயிரஞ் சிஷ்யர்களது அஞ் ஞானத்தையு மேககாலத்தி லொழிக்குமாற்றலுடையதென்று கூறி வித் வான்க ளியாவரும் தத்துவராயரது பிரபந்தங்கட்குப் போற்றுக் கவிகள் புகல, யாவரும் அவ்விருமூர்த்திகட்குஞ் சிஷியர்களாகிச் சென்றார்கள்.

---

† "ஆனை யாயிர மமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி": இலக்கணவிளக்கம்.

பிறகு சொரூபாநந்தர் உலகோபகாரமாகத் தமிழிலுள்ள வேதாந்த சாஸ்திரங்கள் பலவற்றையும் நன் காராய்ந்து வேண்டிய செய்யுட்களை யதிகாரவடைவாக வெடுத்தமைத்துத் தமது குருமூர்த்தியின் பெயர் விளங்கச ‡ சிவப்பிரகாசப் பெருந்திரட்டென்றொரு நூலைத் திரட்டியருளினார்.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டென்று சொல்லப்படு மத்திரட்டைத் தத்துவராயர் சங்கிரகமாகத் திரட்டி, இடையிடையே தாம்வகுத்த வகுப்பிற்கேற்ற வண்ணம் 424 செய்யுட்களைச் சேர்த்துக் குறுந்திரட்டென்றொரு நூலைத் திரட்டியருளினார். சிவப்பிரகாசப் பெருந்திரட்டின் செய்யுட் டொகை 2821. குறுந்திரட்டின் செய்யுட்டொகை 1390. பின்னர்த் தத்துவராயர் சொரூபாநந்தரை (கண்) இமைபோற் பிரியாதிருந்து வருங்காலத்தி லொருநாள், சொரூபாநந்தர் தத்துவராயரை விட்டுப் பிரிந்து போவாராயினர். அதுகண்டு தத்துவராயர் அவரைப் பின்றொடர்ந்து போகையில், சொரூபாநந்தர் காடென்றும் மலையென்றுங் கருதாது பல விடங்கட்குச் சென்று இரிந்து பின்னர்க் கடற்கரையை யடுத்துப் போய்க் கடலின்மீது தமது யோகமகிமையாற் போவாரானார். பிரியாது கூடவேசென்ற தத்துவராயர் தாம் செல்லுவதற்குக் கடலிடங் கொடுக் காமைக்காகப் பெருங்கவலையுற்று, தேசிகோத்தமரை நினைந்து நினைந்து இளங்கன்றைப் பிரிந்த பசுவைப்போலக் கதறிக் கதறி யழுது தேடிச் சோர்வுற்றபோது, சொரூபாநந்தர் அவர்க்குத் தரிசனந்தந்து சில நாளவருடனிருந்து திருநெல்வேலிக்கு வடக்கு ஆற்றங்கரை யோரத்துள்ள சேந்தமங்கலத்தில் பரிபூரண தசையை யடைந்தார். தத்துவராயர் சிதம்பரத்திற்கும் விருத்தாசலத்திற்கு மிடையேயுள்ள எறும்பூரில் மகாமௌன தசையையடைந்தார்.

இச்சரித்திரச் சுருக்கம் எமக்குக்கிடைத்த பிரதிகளி லெழுதப்பட்டுள்ள வரலாற்றினை யாதாரமாகக்கொண் டெழுதப்பட்டது.



‡ சிவப்பிரகாசர் திரட்டியது பற்றி அது சிவப்பிரகாசப் பெருந்திரட்டென்று பெயர்பெற்றதென்று கூறுவாரு முளர்.

24407



# பெருந்திரட்டச்சிடுகின்றபோதும் அச்சிட்டு முடிந்தபிறகுங் கிடைத்த பிரதிகளிற்கண்ட

# பாடபேதம்.

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 3 | 31 | யருளான் மதுரநன் புன்செய்ச் - யருள்பெறு மதுரநம் பண் செய் |
| 9 | 24-25 | வேழெனு, மாயவை - வேழ்முத, லாயவை |
| 12 | 18-19 | பெரியசொரு பன் - பெருமான் செம்பொற் |
| 15 | 3 | வேதமான் - வேதகான் |
| 16 | 29 | யருள்கொண்ட - வருள்கொண்ட |
| 18 | 33 | னருளான் - னருளாகம |
| 19 | 15 | நினையாது - நினையெல்லா |
| 20 | 26-27 | வுற்றவர்க், கார்த்தரான - வுற்றவ, ரார்த்தராவ |
| 21 | 12 | கரைந்தவர் - கரைந்தவா |
| 22 | 3 | ருகிப் - ருதிப் |
| ,, | 4 | மாய்ந்த - மாய்ந்து |
| 26 | 15 | நெறியுமன்றே - நெறிவேறின்றே |
| 27 | 3 | நினைத்திடுஞ் - நினைத்திடு |
| 29 | 27 | தினைத்துவீடு மேறினு - து வீடுபேற தின்மையா |
| 30 | 19 | தாம்பினிற் றெளியத் - தன்பிறத் தெளியத் |
| 31 | 10 | வைகுவார் - வைகாரி |
| ,, | 11 | தேய்ந்திடு மப்பிராகிருதர் - தேய்ந்தவர் பிராகிருதர், |
| ,, | 26 | சொல்ல - செல்ல |
| 32 | 11 | தேவனுக்கே காண - தேவவ னுக்கேகாண் |
| ,, | 33 | லதுவுங் - லறவுங் |
| 33 | 4 | வஞ்சித் - வருஞ்சித் |
| 34 | 5 | முண்மை - முறைமை |
| 35 | 12 | தணர் - தகர் |
| ,, | 13 | திருத்தமுங் கற்பின் - திருத்தமுற் றதற்பின் |
| ,, | 16 | த்திறமும் போக்கிநன் - ப் புலனுமோம்பனை |
| 36 | 7 | வலரவர் - முடையவர் |
| 37 | 8 | னென்றே - ன் றன்னை |
| ,, | 15 | ருகுமால் - ருவரால் |
| 38 | 4 | ம்வடி - மேவடி |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 38 | 5 | பகரும் - பரவும் |
| 39 | 4 | யுருவித் - யுருவாத் |
| ,, | 10 | யானென்றுரைக்குமாஞ் - யாதென்றுரைக்குவஞ் |
| ,, | 11 | ரன்றே - தல்லால் |
| ,, | 25 | யாமுனுஞ் - யாமுணுச் |
| ,, | 31 | மிரத்தலாலே யாசகனுந் - மிரவாமையினு லயாசகனுந் |
| ,, | 32 | யாசகனென் - வயாசகனென் |
| 41 | 30 | மெங்குங் - மென்றுங் |
| 42 | 5 | மற்று - மாமோ |
| 43 | 5 | மகழிடை - ங் கழிகடை |
| 52 | 26 | மகிழ்விலர் - மகிழ்வறல் |
| 53 | 11 | கலவிக் - கல்விக் |
| ,, | 29 | ரெனல்வி - ரெனில்வி |
| 54 | 8 | ரவரோ - ரெவரோ |
| ,, | 22 | தறிவாசற - வறிவாசற |
| ,, | 27 | மாறறு - மாறிலர் |
| 55 | 24 | டிடவெச் - டிகெ |
| ,, | 29 | ளென்று - ளென்னு |
| 56 | 10 | தவராற் - தவாவாற் |
| ,, | 14 | வுற்றிடுஞ் சோரனினந்தோ - விறந்திடுசோரமானுனி |
| ,, | 32 | புழுகின - புழுகின் |
| 57 | 33 | மயினி யுவர்ப்பப் படியேநல் - மினிய வுவப்பப் படியே [நல் |
| ,, | 35 | கற்றார் - பெற்றார் |
| 61 | 5 | வோர் - வொடு |
| ,, | 16 | மோவறக் - மோவற்ற |
| ,, | 27 | மேறினார் - மாற்றினார் |
| ,, | 28 | ணர்துணி - ணர்துனி |
| ,, | 30 | மாத்திலரயி - மாத்திரமதி |
| 62 | 24 | செய்யவினை - செய்யும்வினை |
| 63 | 11-12 | லத்துடன், றன்னரும் - லத்துள, வுன்னரும் |
| ,, | 30 | சிலைகலந்தெய்வமாவகை - சிலைகணற் றெய்வ மாம்வகை |
| 64 | 10 | வேறிது - வேறெது |
| ,, | 21 | மறுகி - மறிதி |
| 65 | 23 | விண்ணியல் - விண்மதி |
| ,, | 28 | னரும்பரம் பரமும்வந் - னரும்பரா பரமுவந் |
| ,, | 32 | னுண்செரு - ஞெசெரு |
| ,, | 35 | செய்தது - செய்தல்போற் |
| ,, | 36-37 | தடிபோற்றி, யீது - தடிபோற்ற, வீது |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 66 | 4 | செய்வித் - சேவித் |
| ,, | 17 | மத்தாகிக் - மந்தாறுய்க் |
| ,, | 19 | புருவகடுவெரியாறுதலென்றே - புருகமெமேசர்......வென்றே |
| ,, | 22 | ழுறலினிற் - ழுரலினிற் |
| ,, | 23 | றவர்க்கியக்கச் - றவர்க்கீயச் |
| ,, | 26 | வேரு - பேரு |
| ,, | 36 | சஞ்செய்தரை - சஞ்செய்தவர் |
| 68 | 25 | கூடிக் - கூட்டிக் |
| ,, | 27 | சடங்கடகத்தாக்கொண்டு - சடங்கடாஞ் செய்யவென்று |
| 70 | 13 | னின்மி தன்னிலே யாமைமித் தியமில் லுளபல - னின் மிதகிலே யாமைமித் தியமில வுளபல |
| ,, | 14 | லமும்வேறென் - லமும்வேறுன் |
| ,, | 28 | மாகிமறை - மாதிமறை |
| 71 | 31 | தேபரிணுமமென் - தேபரிணமித்ததென் |
| 72 | 12 | பிதையாகி - விதையாகி |
| 73 | 16 | வணுரூபத்தாய்ப் - வனிரூபத்தாய்ப் |
| ,, | 22 | கமத்துறை - கமத்தறை |
| 74 | 20 | பிறியாதாய்க் - பிறிதாய |
| ,, | 24-25 | தோன்றலாலே, யசத்திற் கலைதின்றுஞ் - தோன்று மாறு, லசத்தசத் தாகுஞ் |
| ,, | 26 | தோன்றுமித் தனைக்கும்-தோன்றியித் தனைக்குங் |
| 75 | 16 | கிகழ்ந்திடு - கிகழ்த்திடு |
| ,, | 28 | கூட்டிச் - கூடிச் |
| ,, | 29 | கூட்டி - கூடி |
| 76 | 8 | திறமதுற்றுச் - திரயமுற்றுச் |
| ,, | 21 | யீசன்வந்த - யீசனந்த |
| ,, | ,, | திலவேதுவாய்ப் - ததனி லேதுவாய்ப் |
| 77 | 22 | பொருள்க - பெயர்க |
| 78 | 4 | மாகா - மாய |
| ,, | 8 | யலாதவைங்நான்கி - யல்லாதவைநான்கி |
| 79 | 4 | தாமும்புணர்பவை - தாமுன்புணர்ப்பவை |
| ,, | 5 | னுடனுட - யிடனுட |
| 80 | 9 | வந்துவகை வகைகரணங் களைமதித்தா - வகைவகை யாங் கரணங்க டமைமதித்தா. |
| ,, | 14-15 | கடகலசா திகளை யாகி யப்பொருட்டோற் றகல்வாறு யனுவே சித்துத் - கடசார வாதிகளை மற்று மாய பொரு டோற்றகல்வா னனுவே சித்துத், |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 80 | 20 | பிரிந்தே - பகிர்ந்தே |
| 84 | 19 | கூடாத் - கூடத் |
| 85 | 6-7 | சித்தத் தன்ன - சித்தந் தன்னிற் |
| 92 | 33 | மாறு - மாரு |
| ,, | 37 | செறிவதாமவனே யதனினுல் வினையினுற் - செறிவ தாம் வினை யதனினும் வினைவினுற் |
| 93 | 9 | மித்தவ - மத்தவல் |
| 94 | 23 | வரால்கள்பல - துரால்கள்பல |
| 95 | 8 | தியாவும் - தியாரும் |
| ,, | 34 | முகிள - முகுள |
| 97 | 26 | வீறிது - வீறிலாச் |
| 102 | 21 | சொண்டபல் - கொண்டில |
| 104 | 28 | நரகிவற் - நரகிவண் |
| 105 | 22 | சுருங்கி - சுருங்க |
| 111 | 29 | பேரா - விற்போர் |
| ,, | 31 | பொருந்து - பொருநு |
| 113 | 11 | கழுவு - கழுவக் |
| ,, | 31 | முடம்பித்துவக்கை - முடம்பிற்றுவக்கை |
| 114 | 33 | கன்னி - தன்னில் |
| 118 | 33 | திவணேகு - திவனேகு |
| 119 | 23 | தம் பெருமத முக்கிய ருவனைக் - தன் னெருத்தமர் முக்கிய நமனைக் |
| 124 | 26 | லாவிலா - லாதிலா |
| 127 | 24 | ச் சிநதித் - திந்தித் |
| 146 | 34 | னுயிர்வா - னுயர்வா |
| 154 | 12 | கேடின்முற் - கேடின்றேற் |
| 155 | 4 | யிறையின் - யிறைமுன் |
| 157 | 34 | பவநாச முத்த பரிசொரா துபாட லுணராத போதபானைச் - பவநாச மற்ற பரிசோது பாட லுணராத பேத பானைச் |
| 158 | 32 | போட - பாடா |
| 159 | 18 | கமிழ்தி - கமதி |
| 160 | 20 | வல்வினைமேல் வினையாலுடலம் - வினையான்முன் வினைக்கீடுடலம் |
| ,, | 26-27 | மீளு, முற்பவ - மீள்வ, ருற்பவ |
| 169 | 30-31 | னெழுந்திடுபோர், வருண - னெழுந்திடுமோ, ருருண |
| 172 | 28 | வேதனத்தான் - வேதத்தான் |
| 180 | 4 | முத்திதன்னி - மந்திரத்தி |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 187 | 31 | ளைந்துமுறு கன்மகதி யாவறையு - ளந்தமுறு கன்ம கலை யாயறையு |
| 188 | 25 | வாவத்தை - வவத்தத்தை |
| ,, | 31 | லுற்றமீ - லற்றமீ |
| 190 | 10 | முத்திய - முத்தியி |
| 194 | 19 | போதகனை மற்றறிது மென்றுபுக லுற்ற - போதகன மற்றிதுவ தென்றுபுகல் கின்ற |
| ,, | 21 | தத்துவம - தத்துவமி |
| ,, | 24 | பூதியது - பூதியன |
| 196 | 15 | மதிப்படு - முதிப்படு |
| 197 | 10 | வாதி - வாது |
| 198 | 22 | கொண்டுகொண்டு - கொளக் கொண்டு |
| ,, | 23 | மண்டாநின்ற மனமாண்ட மாட்டார்வாத நூல்கற்றுப்- மண்டாநிற்கமாட்டாதார் வாதநூலின் வலிமிக்குப் |
| 201 | 23 | மன்றுமறை - மென்றவக |
| ,, | 24 | கண்ட - கண்டு |
| ,, | 26 | தொன்றியேநின்று - தொன்றனுக் கொன்று |
| 205 | 21 | சொல்வார் - செல்வார் |
| 207 | 3 | மேவு - மேவ |
| ,, | 5 | போவதே - போவரே |
| 210 | 29 | சொல்லல் - சொல்லில் |
| ,, | 31 | மலதன்மை - மல்லதிலை |
| 212 | 24 | பாரிற் - பரன்றன் |
| 213 | 28 | மருளிற்சார் - மருளிற்சாரா |
| 214 | 20 | மடிக்கச்சானுவுருக்களின் - மடித்த சானு வூருக்களின் |
| 215 | 26 | இடப்பக்கத்தல - இடப்பதத்தல |
| ,, | 30-31 | கவினுறு பாதுனிக-கவின்கூரப் பாநுதிக |
| 216 | 27 | தாரமுந்திக் - தாரத்திற் |
| 217 | 29-30 | பின்முன்,னிடத்தயற்கண்ணி னளவுறும் பூவார்ந்தியங் குபா தாங்குட்ட மளவா - பின்ற, னிடப்பதாங் குட்டத் தளவுறல் பூடா விடப்பதாங் குட்டகால் விரல |
| 218 | 21 | றதியாம் விழுவதஃதா மந்தமாம் விழுவதந்த - றதி யா மவிசு மஃதா மந்தமா மவிசுமிந்த |
| ,, | 29 | திகழ்தரு - திகழ்குரு |
| 222 | 20 | யிவற்றை - வயிற்றை |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 222 | 28-29 | செய்வது தொழில்யாம, மூன்றது முப்பொழுதுந் துறந்தவர் முப்பரிசே செய்ய வெனச்சுருதி செப்பிடு முத்தமமாய் - செய்து செயத்துறவ, தோரநிலாயாம மூன்றது முப்பொழுதுந் துறந்தவர் முப்பரிசே செய்ய வெனுஞ்சுருதி |
| 226 | 27 | பதுவு, முத்து - பதுமுப், பத்து |
| 227 | 16-17 | வாயுநேர், வலக்க - வாயுநோ, யலக்க |
| ,, | 20 | நலமதா - நவமாத |
| ,, | 21 | மாண்டொரைம்மூன்றில் - மிரண்டொரைம் மூன்றில் |
| ,, | 23 | மாண்டுமூன் - நாள்கண்மூன் |
| ,, | 36 | நாளிவனுமறிந் - நாளினளவறிந் |
| 228 | 24 | முகையு - முகைக்கு |
| 230 | 20 | போக்கியுண் டில்லை யொன்றது வேறென் - போக்கியில்லையுண் டிரண்டுறு மதுவென் |
| ,, | 29 | ஞானத் - ஞானந் |
| 231 | 27 | விருந்தங் - விருந்த |
| 233 | 25 | டுளவீ டுணருவ ருணர்வுக் குட்பா - டுள்ளவீடுணரு முணர்வுக் குடலாய் |
| 243 | 26 | அட்டராகம் - அட்டவிகாரம் |
| 244 | 30 | மூத்தலு - பிறத்தலு |
| ,, | 31 | கென்றுமிவ்வாறு - கூர்மிகளாறு |
| 249 | 29 | வென்றே - வன்றோ |
| 251 | 33 | ருக்குமக் - ருக்குமுக் |
| 256 | 31 | சொல்வண்மை - சொல்வன்மை |
| 257 | 22 | பரிவால் - பிறவால் |
| ,, | 31 | வியாவர்க்குஞ் - வியர்கருச் |
| ,, | 33 | மேலெழு - மேவிழ |
| 262 | 10 | மிகழ்ந்துள - பகுந்துள |
| 268 | 3 | வுணர்வுண - வுருவுண |
| 269 | 33 | மறிவர்மற்றவ - மறியவல்லவ |
| 275 | 28 | னதையும் - ந்தனையும் |
| 281 | 27 | றுக்கம் - றாலம் |
| 290 | 31 | யதன்மே - யதைமே |
| 292 | 17-18 | வலியோகரு முயல்கின்றார் - வினில்யோகரு மியற்றாற்றார் |
| 293 | 9 | யறியக்கூறிஞ - யறியிஞன்மாவா |
| ,, | 17 | யிகநின்ற - மிகநின்ற |
| 307 | 10 | னொப்பி - ஞலப்பி |

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 311 | 18 | யுறைவனுன் - யுறையுமான் |
| ,, | 19 | வியப்புண்டோ - உதிப்புண்டோ |
| 320 | 26 | தானு - தன்னை |
| 325 | 9 | சுவர்க்கம் - சுருக்கம் |
| 331 | 29 | யாதிலொரு - தாகியொரு |
| 334 | 32 | எட்டனை - எட்டினை |
| 335 | 33 | டிந்த - டிருந்த |
| 354 | 29-30 | தாலமு மணலிற் குசையினிற் குளமுஞ் சசத்தினிற் கொம்பினுற் றனுவும் - கோலுமா மணலிற் றயில முங் குசையிற் குளமதுஞ் சசத்தின்மேற் கோடும். |
| ,, | 31 | புணர்வார் - புணர்வாற் |
| 381 | 8 | மறிவுவறித - மறிவறியாத |
| 386 | 20 | நானன்று - நீயன்று |
| 387 | 26 | மச்சைக்கணி - மச்சைக்கடி |
| 388 | 3 | லயிற்பின் - லயிர்ப்பின் |
| ,, | 14 | கண்டிடு மபிமானுன்மகமாய - கண்டிடும் பிராணனுத் மகமான |
| 395 | 3 | றுணரா - ரொளிரா |
| 396 | 32-33 | மறிவையுணர்ந்திட, வெல்லா - மறிவினை நானெனன்னி, [னெல்லா |
| 397 | 3 | உயிருயிர்த் - உயிருறத் |
| 421 | 16 | பரங்கம - பாங்கம |
| ,, | 18 | மேல் வினவ - மேலிசைவ |
| ,, | 19 | வியம்புதலிறந்த - னியம்புதலிறந்து |
| 428 | 22 | இல்லையென்றுலகை - எல்லையிலுலகை |

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS

பாடபேதம்

முற்றிற்று.

### குறுந்திரட்டிற்கண்ட

# வதிகபாடல்கள்.

## கடவுள் வணக்கம்.

1. யாதொன் றெல்லாப் பொருளுக்கு முதலா யிருக்கு மெய்ப்பொருட்கும்
யாதொன் றின்பாற் றோற்றநிலை யிறுதி யாகு மெய்ப்பொருளும்
யாதொன் றுண்மை கண்டால்வே றிலதா மந்த வெழின்மறைக
ளோர்துஞ் சச்சி தானந்த வொன்றை யுள்ளத் துள்ளுவாம்.

2. எப்பொரு ளறிந்தா ரெல்லாப் பொருள்களு மறிந்தா ராவ
ரெப்பொருள் கண்டார் பின்னை யாவையுங் காணு ராவ
ரெப்பொருள் பெற்றோர் வேறோர் பொருள்பெற விரும்பா ரந்தச்
செப்பரு மனந்தா னந்தச் சிவப்பிர காசம் வாழி.

3. சொலவும் பொருளுங் கனியுஞ் சுவையு
மலரும் மணமும் மணியும் மொளியு
முலவும் முடலும் முயிரும் மெனவே
நிலவும் மறிவன் னிலையை நினைவாம்.

4. துதியுந் துதிசெய் பவனுந் துதிகொள்
பதியும் பரமன் பதமும் மறிவும்
மதியும் மெண்ணின் றமறைத் தலையி
னிதியை நினைநெஞ் சினிரந் தரமே.

## அருளிறை வணக்கம்.

5. எலையி லின்பமெய் யுணர்வொளி யிலயமின் றியதன்
னிலையி னின்றொரு வடிவமாய் நீள்பவக் கடலி
னலையு நெஞ்சின ரச்சம தறும்வகை யவர்தந்
தலையின் மன்னிய தம்பிரான் சரணமே சரணம்.

6. மின்னை யேயன மெய்யைமெய் யென்றுமெய் யுணரா
வென்னை யேயனை யேனுறு மின்னல்கண் டிரங்கி
யன்னை யேயென வன்புசெய் தடியனெற் கழியாத்
தன்னை யேதருந் தம்பிரான் சரணமே சரணம்.

## வேதச் சிறப்பு.

7. உளக்க ணூன்கணிற் றெரிதரு பொருளையுங் காண
வுளக்க ணூற்றெரி பொருளினைக் கண்டிடா தூன்க
ணளக்கு மார்க்கநூல் சொல்லுவ தருமறை சொல்லு
மளக்கு மார்க்கநூ லருமறை சொல்லுவத றையர்.

8. மனமி றந்திடம் பிறந்திட மறைந்துமா சறுஞ்சிற்
கனம றைந்திடு மறையினைக் கண்டதே காணு
மனம றிந்ததே யறைந்திடு மார்க்கநூ லோதுஞ்
சனம றிந்திடா தறிவர்மெய்த் தத்துவ முணர்ந்தோர்.

9. தோற்ற மாய்விலாச் சொருபன துருவிலே யுலகந்
தோற்றி மாய்வகை யறிந்துரை செய்தலா லுலகிற்
றோற்றி மாய்பவ ராய்வினுற் றுணிந்துசொல் லுமதோ
தோற்ற மாய்விலாச் சொரூபன துருவமே சுருதி.

### ஆத்தருரைச் சிறப்பு.

10. சகலமு மறிவெனச் சமைந்து சந்ததம்
பகலிர வறுமனு பவத்திற் பார்ப்பவ
ரிகலறு மார்க்கிக ளெம்ம தென்னவே
புகலரு மறைப்பொருள் புகல்வ தாகுமால்.

11. துனிவந்திடு பிறவிப்படு துயர்தீர்வகை தேனுங்
கனியும்மமிர் தொடுகன்னலு மெனலாதிய கடுவா
யனியந்தனி லறியாதவ ருமாலு மலாவு
முனிவும்மறு முனிவோர்தரு மொழியேமறை மொழியே.

12. பெருகும்மதி சயமாம்வகை பெருமானடி பிறழா
முருகொன்றிய மணிமாலையின் மொழியுந்துதி மாலை
திருகும்மன முடையார்களுஞ் செவிசென்றுற நீரா
யுருகும்படி சொலவல்லவ ருடையானரு ளுடையார்.

### ஞானி மகாத்மியம் (பெருமை).

13. வீங்கு புண்ணரிந் தழலெழ வெதுப்பவென் வேதனை யேயெல்லாந்
தீங்கெ னுவிதந் தானெனப் போற்றினு லிருவினை தருநன்றுந்
தீங்கு மூட்டிய வுடற்பிணி யறுத்தவர் திறத்தினிற் கைம்மாறே
தாங்கொ லென்பதற் றுணைவரோவ் வாசெயல் விளைவினை யறிந்தோ
[ரே.

14. அருந்துயர்ச் சிறையிட் டாரி னச்சிறை விடுவித் தாரைப்
பரிந்துயி ரளித்தா ரென்று பகரவேண் டுவது முண்டோ
விருந்துயர்க் கிடமாம் யாக்கை யீன்றவ ரின்னு ரென்று
மரிந்தவர் நட்டா ரென்று மறிகில ருலக ரந்தோ.

### வாத சங்கற்பம்.

15 எது வாவ திடனுடை நூறுரு
மோது வாதிக் குதாரணங் காட்டியே
வாது கூறி மயிர்ப்பிடி யாகினின்
றியாது மின்றி யிழுக்குப் பெறுதலே.

16. வாதசெற் பம்விதண்டை யேதுவென நான்காம்
வாதமொரு வன்மதத்தாற் றருக்கமுரைப் பதுவா
மோதுமவன் றருக்கத்திற் கெதிர்விடயம் பொருந்த
வுரைப்பதுவே செற்பமென வுலகறிய மொழியு.

நீதியினு லவனுரைகொண் டவனுரையை மறுத்தே
நிலையான பொருளுண்மை நிறுத்திடுதல் விதண்டை
யேதுபல நூலினுதா ரணமெடுத்துக் காட்டி
யெதிரிமத மறுத்திடுத லெனுந்தருக்க நூலே.

### மகாவாக்கியம்.

17. அண்ணல் கூறிடு மரியவா ரணக்கட லேழும்
வண்ண மின்றிவா சாமகோ சரமெனு மமிர்தைக்
கண்ண தாயிடக் கரதல மணியெனக் காட்டுந்
திண்ண முள்ளமா வாக்கிய நிலைமையைத் தெளிப்பாம்.

18. நீதி யாலிரு பாதி நீக்கிட நீயெனச்சொல் பதத்தினு
மாதி யாகிய தற்ப தத்து மசுத்தசுத்த முரைக்குமே.

### கன்மநிந்தையும் ஞானப்பெருமையும்.

19. கழிபெருந் துன்பமாய்க் கருமஞ் செய்வுழி
வழுவின்மா நிரயமாய் மறுப்பி லாதுறு
தொழிறரும் பயனது சுருக்க மாயினும்
விழுவதெவ் விதத்தின்மெய் யுணர்வை விட்டவர்.

20. இன்ப வீடிம்மை யின்னிடை யூறின்றி
நன்ப தந்தரு ஞான முயற்சியின்
றுன்ப மில்லை யெனமறை சொல்லினு
மன்பு செய்கில ரந்தோ வறிவிலார்.

21 செயும்பொழு திடரே யேனுஞ் சிதையிலாழ் நிரயமெனும்
பயம்பரி தேனு மெய்தும் பயன்பரி தல்லவேனுங்
கயம்படு வினையின் மாந்தர் கருதுறு ஞான மார்க்கத்
தியம்பிடா ரதுவு மில்லை யின்பவீ டெனினு மெண்ணார்.

### பெருந்திரட்டு, 17 - வது பக்கத்து ஞானமிர்தச் செய்யுளினுரை.

(இ-ள்). தேன்...சுவைய — தேனும் அமிழ்தமும் கலந்தாற்போன்ற இரதத்தை யுடையன, அமிழ்து...தகைய — அமுது புசித்தற்குப் புண்ணியவான்களாகிய தேவர்களுங் கிட்டுதற்கரியன, தண்டா...எறிப — எல்லையில்லாத சனனமாகியபெரிய துக்கத்தைத்துறப்பன, உரை...உய்ப்ப — மனவாசகங் கடந்த மேன்மையாகிய முத்தியிலே செலுத்துவன, மதியோர்...பருகுவ—ஞானவான்கள் அளவறப்புசிப்பன, பருகியும்...அமைதிய — இங்ஙனம் புசித்தும் ஆராது பின்னும் விரும்பப்படுந் தன்மையன, பாச...திமிர்ப — பாசமாகிய விலங்கை வேரோடே போக்குவன, எல்லை...அறுப்ப—அளவில்லாத பாவமாகியகுறும்பை யறுப்பன, அறத்தின் வேலிய—புண்ணியத்திற்குக் காவலாயுள்ளன, தனக்கு...தகைமைய — தனக்கு உவமையில்லாத வழகையுடையன, மனத்தின்...களைவ — மனோதோடமாகிய ராகத்துவேஷத்தைச் சேடமற வொழிப்பன, தேசொடு திவந்த —பிரகாச முடையனவா யோங்குவன, ஆகிய இத்தனை நன்மையுடைய கன்மச் சேத வுபாயத்தை, உரைத்தனன்...கோவே — உபசாந்தத்துதிற்கெல்லையாகிய தருமத்திற்குக் கர்த்தாவாயுள்ள பரமாசாரியர் பிரசாதித்தனரென்று மகான்கள் சொல்லுவார்கள், (எ-று).

(இவ்வுரை முன்னர்க் கிடைக்கவில்லை).

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 10 | 30 | குறுந்திரடடு - குறுந்திரட்டு |
| 11 | 14 | கித்தமெனு - நித்தமெனு |
| 14 | 28 | தைபா - தையா |
| 36 | 10 | சூத்திரர் - சூத்திரர்க் |
| 40 | 29 | போது - யோது |
| 42 | 16 | பெல்லா - யெல்லா |
| ,, | 25 | ரேணையே - ரேணையேய் |
| ,, | 37 | ணிச்சயிப - ணிச்சயிப் |
| 44 | 17 | பயற்றி - பயிற்றி |
| 54 | 2 | தத்துவா - தத்துவர |
| 55 | 14 | வழிதரு - வுழிதரு |
| 56 | 1 | 59 - 56 |
| ,, | 5 | தகரிற் - தகரிப் |
| 62 | 35 | ழதலாகிய - தழலாகிய |
| 64 | 24 | போய்த் - பொய்த் |
| 65 | 34 | யரது - யாது |
| 66 | 31 | திரயோடே - திரியோடே |
| ,, | 34 | லாமலரில் - லாய்மலரில் |
| ,, | 37 | தெறு - தொறு |
| 67 | 10 | யுள்ள - யுள்ளது |
| 69 | 22 | நினையீரல - நினைவீரல |
| 71 | 15 | பொன்றே - பென்றே |
| ,, | 17 | டனனலா - டன்னலா |
| 72 | 20 | சித்தது சிவன் சிற் - சித்துசீ வன்சிற் |
| 81 | 7 | திருப்பாட்டு - திருக்கடைக்காப்பு |
| 82 | 23 | ஞானசித்திதரிசனம் - சொரூபானந்தசித்தி |
| ,, | 26 | மாறுமெனனே - மாறுமெனவே |
| 93 | 23 | கடுமகாத்தான - கடுமகரத்தான் |
| 97 | 1 | சரிரம் - சரீரம் |
| 100 | 29 | னுகர்தல் - னுகர்த |
| 102 | 29 | நிற்பன - நின்றது |

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 112 | 26 | வேண்டாச் | வேண்டா |
| ,, | 29 | படிய தெல்லையம் | படிவதெல்லையும் |
| 116 | 21 | சோரணில் | சோரரில் |
| 117 | 33 | னற்றூர் | னற்றூற் |
| 123 | 29 | துன்பம் | துன்பப் |
| 125 | 20 | யிகழ்ந்தது | யிழந்தது |
| 126 | 25 | னுருவின் | னணுவின் |
| 137 | 23 | பொருவினை | யொருவினை |
| ,, | 28 | வயிரொன்றான் | வுயிரொன்றான் |
| 140 | 9 | னடுப்பதித் | ளடுப்பதித் |
| 147 | 24 | சுரர்சளா | சுரர்களா |
| 153 | 17 | வநது | வந்து |
| 156 | 7 | பேராளி | பேரொளி |
| ,, | 9 | லததலையிற் | லத்தலையிற் |
| 157 | 32 | முததவைத | முதத்வைத |
| 164 | 26 | யவிகார | யவிகாரம் |
| 167 | 9 | மூகமுகம் | முகமுகம் |
| 168 | 13 | பகுத்தானே | பகுத்தானேற் |
| 172 | 22 | சத்தா | கத்தா |
| 180 | 27 | சேர்ந்து | சேர்த்து |
| 183 | 29 | விவினு | வினு |
| 188 | 11 | மார்க | மார்க்க |
| ,, | 21 | யொததா | யொத்தா |
| ,, | 24 | சராதியாஞ் | சுராதியாஞ் |
| 192 | 15 | கண்ட | காண்ட |
| 193 | 20 | ஞசித்த | மசித்த |
| 198 | 8 | செமமை | செம்மை |
| ,, | 27 | கூடாக் | கூடா |
| 200 | 11 | சிவர்க்கு | சிவற்கு |
| 205 | 25 | ரில்லினிற் | ரிலவினிற் |
| 210 | 22 | சுருங்கல் | சுருக்கல் |
| 211 | 6 | போலுனுக்கு | போலுனக்கு |
| 212 | 11 | சேர்வை | சேவை |
| 213 | 28 | சேர்வை | சேவை |
| 215 | 33 | மருவுரு | மருவுறு |
| 216 | 27 | தாரமூந்திக் | தாரத்திற் |
| 218 | 29 | புரும் | புருவம் |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | |
|---|---|---|
| 226 | 33 | மாளுமாதந்தான்ருனறை - மாளுமாதந்தான்ருணரை |
| 227 | 26 | செப்புவா - செப்புவர் |
| 230 | 24 | பொருளு - பொருளின் |
| 240 | 29 | தூலவ்புடம - தூலவுடம் |
| 244 | 19 | யுளார்த்திற் - யுளத்திற் |
| 256 | 22 | பஞ்சயக - பஞ்சயக் |
| 280 | 29 | பஞ்சாயன - பஞ்சசயன |
| 296 | 16—9. | சிவபரவேறு - II-ஈசன் சிவன்பணை. I சிவபரவேறு |
| 316 | 11 | லன்றினே - லன்றிவே |
| 324 | 17 | யாய் நள்ள - யா யுள்ள |
| 353 | 28 | ஞகிலேன் - ஞகிலென் |
| 414 | 25 | நாவேழ்ப் - நாலேழ் |
| 416 | 10 | காசத் - காசங் |
| 422 | 9 | சயம்பிர - சுயம்பிர |
| 429 | 1 | 18-அனுபூதிப்பணை - 20-அனுபூதிப்பணை |
| 437 | 10 | வைப்னே - வைப்பனே |
| 445 | 1 | 19-அருட்டிறப்பணை - 21-அருட்டிறப்பணை |
| 454 | 13 | சணக்கில் - கணக்கில் |
| 467 | 1 | 20-இறையியற்பணை - 22-இறையியற்பணை |
| 494 | 5 | செல்வினை - செய்வினை |
| 501 | 33 | யாட் - யாட்கொண்டு |
| 507 | 9 | லுறுதுயர - னுறுதுயர |
| 511 | 13 | வெந்தை - வெந்தைப் |
| 523 | 3 | னேற்றினர் - ளேற்றினர் |
| 572 | 7 | வாயக் - வாய்க் |

# பெருந்திரட்டின்

# நூலட்டவணை.

அ

அஞ்ஞான நிவிர்த்தி
அஞ்ஞான நிவிர்த்தி நாடகம்
அதிக்கிருதாமிருதம்
அருகர் சாஸ்திரம்
அருணெறி விளக்கம்
அருணெறி விளக்கம் (இதுவேறு)
அருளியற் சதகம்
அவிரோத போதம்
அனந்த போதம்
அனந்தானந்த நிலயம்
அனந்தாநந்தமாலை
அனுபவசாரம்
அனுபவசித்தி
அனுபவசூரியன்
அனுபவாமிருதம்
அனுபவதீபிகை
அனுபூதி நிலயம்
அனுபூதி நிலைமை
அனுபூதி விளக்கம்
அன்பா

ஆ

ஆனந்த சித்தி
ஆனந்த போதம்
ஆனந்தாமிருதம்
ஆன்மப் பிரகாசம்

உ

உத்திரார்த்தம்

க

கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி
சமாதி
சமயாசாரம்
சங்கற்ப நிராகரணம்
சனற் குமாரம்
சதகம்

சி

சிந்தாந்த தீபிகை
சிவப்பிரகாச தரிசனம்
சிவாநந்த நிலயம்
சிவவாக்கியம்
சிவப்பிரகாசம் (ஈசுவரகீதை)
சிவஞான நிலயம்
சிவஞான சரிதை
சித்தாந்த ரத்னாகரம்
சிவஞான விளக்கம்
சிவஞானச் சிறப்பு

சீ

சீர்பாதத் தாழிசை

சு

சுயம்பிரகாச தரிசனம்
சுவானுபவ சித்தி
சுயம்பிரகாச நிலயம்
சுயப்பிரபோதம்
சுவானுபவாமிருதம்

க்ஷே

க்ஷேத்திரத் திருவெண்பா

சொ

சொரூபாநந்த சித்தி (பிரமகீதை)
சொரூபாநந்த தரிசனம்

சொரூபானந்த நிலயம்

ஞா

ஞானசூரியன்
ஞானோபதேசம்
ஞானாமிருதம்
ஞானசூளாமணி
ஞான சூடாமணி
ஞானசாரம்
ஞானசித்தி
ஞானதீபிகை
ஞானசித்தி தரிசனம்
ஞானவிநோதம்
ஞானசிகாமணி
ஞானவிநோதன் கலம்பகம்
ஞான திலகம்
ஞானாநந்தசித்தி

த

தத்துவாமிருதம்
தத்துவப் பிரகாசம்
தத்துவ ரத்னாவலி
தத்துவ போதம்
தத்துவரத்னாகரம்
தத்துவ சரிதை
தத்துவ சாரம்
தத்துவ சித்தி
தத்துவ சூளாமணி
தத்துவதரிசனம்
தத்துவ தீபிகை
தத்துவதேசிகம்
தத்துவ வர்க்கம்
தத்துவ விளக்கம்
தத்துவநிலயம்
தத்துவ மாலை

தி

திருவாசகம்
திருவாய்மொழி
திருமந்திரம்
திட்டாந்தமாலை
திருக்கடைக்காப்பு
(திருஞான சம்பந்தர்).
திருமொழி
(திருமங்கை யாழ்வார்)
திருப்பாட்டு
(சுந்திரமூர்த்தி சுவாமிகள்).
திருக்களிற்றுப் படியார்
திருச்சந்த விருத்தம்
(திருமழிசை யாழ்வார்)
திருவந்தாதி
திருவெண்பா வந்தாதி
திருமாலை
திருநூற்றந்தாதி

தே

தேவாரம்
(அப்பர் சுவாமிகள்).

தோ

தோன்றி

ந

நடராஜமாலை
நடராஜ நிலயம்
நடராஜர் திருவந்தாதி
நக்கீரர் திருநூற்றந்தாதி
நடராஜசரிதை
நன்னெறி விளக்கம்

நா

நாராயண மனனம்

நி

நித்தியாநந்த சரிதை
நித்தியாநந்தப் பிரகாசம்
நித்தியபோதம்
நிருமலப்பிரகாசம்
நித்தியாநந்த தரிசனம்
நித்தியானந்த தீபிகை

ப

பரமார்த்த தரிசனம் (பகவற்கீதை)
பட்டினத்துப் பிள்ளையார்பாடல்
பரமானந்தசித்தி

பா

பாடுதுறை

பி

பிரபோத ரத்நாகரம்

பிரபோதனம்

பூ

பூரணப்பிரகாசம்

பூரணபோதம்

பெ

பெரியதிருமொழி

பே

பேரொளிவிளக்கம்

பொ

பொன்வண்ணத்தந்தாதி

போ

போதாமிருதம்

போதரத்நாகரம்

போதரத்நாகரவல்லி

போதாந்த நிலயம்

போதசித்தி

போதசாரம்

போதாநந்த சித்தி

போதரத்நாவலி

மு

முகுந்தப் பிரகாசம்

மூ

மூல சித்தி

மெ

மெய்ஞ்ஞான விளக்கம்

மெய்ம்மொழிச் சரிதை

மெய்ம்மொழி

மெய்ஞ்ஞான நிலயம்

மெய்ஞ்ஞான சரிதை

மெய்நெறி விளக்கம்

மெய்ந்நெறி

யோ

யோகாநந்த சரிதை

யோகசிகாமணி

யோகசித்தி

வா

வாசுதேவ சதகம்

வி

விநாவிளக்கம்

விஞ்ஞான நிலயம்

விண்ணப்பமாலை

வியந்துறை

வீ.

வீட்டுநெறி

வெ.

வெண்பா வந்தாதி

ஆகமோத்தம் நூல் 146.

# பெருந்திரட்டின்

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம் |
|---|---|
| முகவுரை 1—9. | |

## I. கலைக்கட்டவிள. 10-390.

### 1. பாயிரப்பணை. 10-24.

| | |
|---|---|
| 1. கடவுள் வணக்கம் | 10 |
| 2. அருளிறை வணக்கம் | 12 |
| 3. வேதச் சிறப்பு | 14 |
| 4. ஆகமச்சிறப்பு | 17 |
| 5. ஆத்தருரைச சிறப்பு | 19 |
| 6. நூற்பெயர் | 21 |
| 7. அறிஞரைப்புகழ்ந்தவை யடக்கம் | 22 |

### 2. இதப்பணை. 25-33

| | |
|---|---|
| 1. இதோப தேசம் | 25 |
| 2. அருமையுரைத்தல் | 29 |

### 3. பரமர் திறப்பணை. 34-66.

| | |
|---|---|
| 1. வன்ஞச்சிரமம்-அதிவன் ஞச்சிரமம். | 34 |
| † (கு) ஞானிலட்சணம் | 39 |
| 2. ஞானிமகாத்மியம் | 40 |
| 3. ஞானிசீலம் | 44 |
| (கு) ஞானிசரிதை | 54 |
| 4. கூடாவொழுக்கம் | 55 |
| 5. ஞானியேவற்சிறப்பு | 59 |
| 6. அறிஞரை யிகழ்ந்தோர்கேடு | 61 |
| (கு) ஞானிபூசை | ௵ |
| 7. கனனவிதி | 64 |

### 4. பரவுலகப் பணை. 67-83

| | |
|---|---|
| 1 காரணகாரிய வியல்பு | 67 |
| (கு) காரணகாரிய வேறின்மை | ,, |
| 2. பிரபஞ்சோற்பத்தி | 70 |
| (கு) காரணம் | ,, |
| நிலோற்பத்தி | 74 |
| (கு) படைப்பு | 76 |
| 3. சிருட்டி | 77 |
| 4. அநுப்பிரவேசம் | 80 |
| (கு) நிலைபேறு | ,, |
| 5. சஙகாரம் | 81 |
| (கு) அழிப்பு | 83 |

### 5. பவான்மாப்பணை. 84-126.

| | |
|---|---|
| 1. ஜனஞன்மாவாலுறும்பந்தம் | 84 |
| (கு) பந்தகாரணம் | 92 |
| 2. ஜனனசாகரம் | 93 |
| (கு) பிறவிக்கடல் | 94 |
| 3. ஜனனமரம் | 95 |
| (கு) ஜனனவிருட்சம் | 96 |
| 4. சரீரம் | 97 |
| (கு) தேசோற்பத்தி | ,, |
| 5. பிண்டகோசம் | 101 |
| 6. அண்டகோசம் | 102 |
| 7. அண்டபிண்டவேறின்மை | 106 |
| 8. வீடுபெற்று | 107 |
| 9. அனித்தியதரிசனம் | 113 |
| (கு) உடலிழிவு | ,, |
| (கு) சம்சாரநிந்தை | ,, |
| (கு) போகநிந்தை | 114 |
| (கு) பெண்ணிந்தை | 115 |
| (கு) அருத்தநிந்தை | 116 |
| (கு) அரசநிந்தை | ,, |
| (கு) சுவர்க்கநிந்தை | 117 |
| (கு) நிலையாமை | 118 |
| 10. அசேஷதுக்கம் | 119 |
| (கு) துக்கத்தொகுதி | 121 |
| 11. நைராச்சியம் | 124 |
| (கு) துறவு | ,, |


† குறுந்திரட்டு.

**6. சமயப்பணை. 127-209.**

1. புத்தம் 127
2. அருகம் 133
3. லோகாயதம் 140
   (கு) சாருவாகம் 141
4. மீமாம்சை 144
5. நியாயம் 147
6. வைசேடிகம் 149
7. சாங்கியம் 151
8. சைவம் 152
9. சம்மேள சைவம் 153
10. பாசுபதம் 154
11. வாமம் 155
12. பயிரவம் 158
13. காளாமுகமாவிரதம் 160
14. வைணவம் 161
15. மாயாவாதம் 164
16. சிவாத்துவிதம் 167
17. சவுரம் 168
18. சந்திரவாதம் 170
19. ஊழ்வாதம் 172
20. காலவாதம் 173
21. மந்திரவாதம் 179
22. ஔஷத (மருந்து) வாதம் 180
23. சாதிசங்கற்பம் 182
24. தீர்த்தசங்கற்பம் 183
25. அருச்சனாசங்கற்பம் 185
26. அத்துவாசங்கற்பம் 186
27. சாத்திரசங்கற்பம் 190
28. பிரமாணசங்கற்பம் 192
29. வாதசங்கற்பம் 195
30. சமயாதித் தொகுத்துரை 199
31. கேடுகண்டிரங்கல் 202
32. சன்மார்க்கம் 207

**7-யோகப்பணை. 210-238.**

1. இயமம் 210
2. நியமம் 212
3. ஆதனம் 213
4. ஆதாரநாடி 216
   ஆதாரம் 216
   நாடி 219
5. நாடிசுத்தி 221
6. பிராணாயாமம் 222
7. ஆயுட்பரீட்சை 225
   (கு) பிரத்தியாகாரம் 228
8. பிரத்தியாகாராதி 229
   (கு) தாரணை ,,
   (கு) தியானம் 230
   (கு) சமாதி ,,
9. ஆதாராதியோகம் 231
10. அணிமாதியட்டசித்தி 233
   (கு) அணிமாதியிகழ்ச்சி ,,
11. அட்டவைசுவரியம் 234
12. கன்மயோக நிராகரணம் 236

**8. தத்துவப் பணை. 239-272**

1. தத்துவவருக்கம் 239
2. ஈருடல் 240
3. பஞ்சகோசம் ,,
4. சதுர்த்தசநாடி 241
5. சதுர்த்தசவாயு ,,
   (கு) சடாதார மும்மண்டலம் 242
6. சடுவிகாரம் 243
7. சட்பாவனை ,,
8. சட்கோடி ,,
   (கு) அட்டராகம் ,,
9. சடூர்மி 244
10. காரகத்திரயம் ,,
   (கு) மூக்காரகம் 245
11. கரணத்திரயம் 247
12. பாசம் 248
   (கு) நாற்கரணம் ,,
13. மலத்திரயம் 249
14. குணத்திரயம் 250
15. சங்கத்திரயம் 254
16. குற்றத்திரயம் 255
17. பிணித்திரயம் ,,
18. பந்தத்திரயம் 256
   (கு) மூப்பிணி ,,
19. துக்கத்திரயம் 257
20. ஏடணைத்திரயம் 260
21. அவஸ்தாத்திரயம் 261
22 வேதனைத்திரயம 262
23. பூதவியற்பஞ்சவிம்சதி ,,
24. புறநிலைப்பஞ்சவிம்சதி ,,
25. உண்ணிலைப்பஞ்சவிம்சதி 263
26. தூலபஞ்சவிம்சதி 264
27. சூக்கபரபஞ்சவிம்சதி ,,
28. மறையியற்பஞ்சவிம்சதி ,,
29. அட்டவிம்சதி 265
30. சடுத்திரி

31. தொண்ணூற்றாறுதத்துவம் 268
32. பல்வகைத்தத்துவம் 269
33. தத்துவத்துணிவு 271

## 9. அவத்தைப்படலம். 273-283.

1. தாதுகதாவத்தை 273
2. குணாவத்தை 274
3. அவத்தாந்தராவத்தை 275
4. ஆதாரகரணகதாவத்தை 276
5. கரணகதாவத்தை 281
6. சங்க்ஷேபாவத்தை 282
7. அநுபவாவத்தை 283

## 10. வாக்கியப்படலம். 284-296.

1. வாக்கியவருக்கம் 284
2. மாவாக்கியம் 286
(த) இலக்கண வாக்கியம் ,,
3. அவாந்தரவாக்கியம் 288
4 பிரணவம் 290
5. அசபை 292
6. ஸ்ரீபஞ்சாக்கரம் 293
7. ஸ்ரீ அட்டாக்கரம் 294
8. வாக்கிய நிரூப்பியம் 295

## 11-ஈசன் ஜீவன்படலம். 296-309.

1. சீவபரவேறு 296
2. சீவ விலக்கணம் 298
3. பரவிலக்கணம் 301
4. ஜீவபரவேறின்மை 307

## 12-மாயாப்படலம். 310-315.

1. மாயாநிரூப்பியம் 310
2. பிரபஞ்ச நிரூப்பியம் 312

## 13. ஞானப்படலம். 316-341.

1. ஞானப்பிராதான்யம் 316
2. ஞான விலக்கணம் 317
3. ஞானமான்மியம் 319
4. கருமநிந்தையும் ஞானப்பெருமையும் 322
5. ஞானார்ச்சனை 325
6. ஞானாசாரம் 327
7. ஞானயோகம் 331
8. ஞானயோக நழுவினார்கதி 334
9. ஞானவலி 335
10. பிராரத்த விவேகம் 339

## 14. ஏது சாதனப்படலம். 342-345.

1. முத்திக் கேது 342
2 முத்திசாதனம் 344

## 15. குரு வியற்படலம். 346-355

1. ஆசாரியிலக்கணம் 346
2. ஆசாரியர் மான்மியம் 350
3. அநாசாரியரிலக்கணம் 353

## 16. பக்குவரியற்படலம். 356-390.

1. பக்குவரிலக்கணம் 356
2 அபக்குவரிலக்கணம் 359
3. அதிகாரியிலக்கணம் 362
(த) புதல்வர் சரிதை 364
4. சீடாசாரம் 365
5. சம்பிரதாய விலக்கணம் 372
6. சிர்பாதத் துதி 377
7. ஊனுயிர் வேறுபாடு 380

# 2. அநுபவக்கட்டளை. 391-582.

## 17-உபதேசப்படலம். 391-428.

1. உயிருண்மைதரிசனம் 391
2. துரியமான்மியம் 395
3. துரியதூடணம் 397
4. அதீததரிசனம் 398
வியோமமான்மியம் 400
5. வியோம தூடணம் 401
6. பரவிலக்கணம் 403
7. பரவபேட்சை 405
8. பரதரிசனம் 409
9. விசுவக்கிராசம் 410
10. உபசாந்தம் 413
சொரூபாபேட்சை 415
சொரூபஸ்திதி 418
சொரூபதரிசனம் 420
11. சுவானுபூதி 421
12 கிருதகிருத்தியவிலக்கணம் 426

## 18. அனுபூதிப்பணை. 429-444.

1. அருட்டிறம் வினவல் 429
2. அநுபூதியுரைத்தற்கருமை 432
3. அநுபூதி நிலைமை 435
4. அநுபூதி வியப்பு 439
5. அநுபூதி யாராமை 443

## 19. அருட்டிறப்பணை. 445-466.

1. அருட்டிறம் வியப்பு 445
2. அருணினைந்தழிதல் 449
3. அருளிரந்துரைத்தல் 453
4 அருள்விருப்பதனாலச்சம் 459
5 பவநடந்திளைத்துப் பரமனுக் கிசைத்தல் 461
6 அருட்டிறநோக்கிப் பிறவி விரும்பல் 463
7. அருள்வியந்தாற்றாமை 465

## 20. இறையியற்பணை. 467-529.

1. இறையிய லுரைத்தல் 467
2. இறையொடு துணிதல் 472
3 இறைவலிநோக்கிமகிழ்தல் 475
4. இறைகுறி யுரைத்தல் 479
5. இறைவர் சுதந்தரம் 481
6. இறைதிரு விநோதம் 484
7. இறைதிரு விழியாட்சி 486
8 இறைமொழி யாட்சி 488
9. ஆட்சியதருமை 490
10. இறையுடன் மகிழ்தல் 492
11. இறையருள்காலம் புகழ்தல் 495
12. கழிந்தநாட் கிரங்கல் 497
13. கேடுநினைந்திரங்கல் 500
14. இறைவனைப்பிரிந்தழுங்கல் 502
15. இறைவனை நினைந்தழிதல் 504
16. பரமராகம் 507
17. இறைவனைக்காண விரும்பல் 512
18. இறைவனைக்கூடவிரும்பல் 514
19. இறைதிருக்குறிப்பாட்சி 515
20. இறையொடு நோதல் 519
21. இறைநிலைமயக்கமுணர் தற்கருமை 521
22. கேடுகண்டிரங்கி யிறைவனைப்புகழ்தல் 524
23. தலைவனைநோக்கித்தமை வெறுத்துரைத்தல் 527

## 21. ஏற்பணை. 530-535.

1. ஏவல் விரும்பல் 530
2. ஏவற்சிறப்பு 531

## 22. அன்பியற் பணை. 536-540.

1. அன்பினை வேண்டல் 536
2. பத்தி மான்மியம் 537

## 23. அன்புப்பணை. 541-556.

1. அன்பர்கூட்டம் 541
2. அன்பரிற்கூடவிரும்பல் 543
3 அன்பரிற்கூடிய வியப்பு 546
4. அன்பர்தஞ் சிறப்பு 549
5. அன்பர்திறத்தின் அறிகுறி 551
6. அன்பொடு கூடா வன்பருக்கஞ்சுதல் 554

## 24. நெஞ்சுப்பணை. 557-572.

1. அன்பொடு கூடாநெஞ்சினை நோதல் 557
2. நெஞ்சினையிரத்தல் 560
3. நெஞ்சினையுடன் படுத்தல் 561
4. நெஞ்சினையுணர்த்தல் 565
5. நெஞ்சொடுமகிழ்தல் 569

## 25. தோத்திரப்பணை. 573-580.

1. பாடவிரும்பல் 573
2. புனிதனைப்பாடாப்புலவருக்கிசைத்தல் 575
3. தோத்திரச்சிறப்பு 577

## 26. மங்கலப்பணை. 581-582.

1. மங்கலவரம் 581

சொரூபானந்தர் நாமஸ்துதி 583
மாதவம் 585
அருமை 586
பகிடி 587
திருமுடியடைவு 588


விஷய அட்டவணை முற்றிற்று.

ஓம் தத்சத்.

பரப்பிரஹ்மணே நமஃ.

# பெருந்திரட்டு
## (குறுந்திரட்டுடன்).

### முகவுரை.

### குருவணக்கம்.

* † தந்தை தாயுமெய்த் தகவுடை யுறவுஞ்
சாலுங் கல்வியுந் தகுமுயிர்த் துணையுஞ்
சிந்தை யாருநற் சீலமும் வலியுந்
திருவு மின்பமுஞ் சிதைவிலா வறிவு
முந்தை யாமுளத் துவகையு முயிரு
மூல முத்தியு மொழிவருஞ் சமைவு
மெந்தை யாகிவந் தேழையே னையுமா
ளிறைவ னார்கழ லாகுமென் றனக்கே. 1

ஒருநாம மோருரு வோரூரு மின்றிய வொண்சுடரென்
கருவே ரறுக்கையின் காரண மாக்கச்சி நாடதனிற்
றிருவார் குடந்தை நகரறி வானந்தத் தேசிகனென்
றொருநாமஞ் சாத்தி யருள்வடி வோடும்வந் துற்றனனே. 2

அருட்டிறந் திகழ வந்தா னடியிணை மலர்க ளேத்தி
மருட்டிற மாயை நீக்கி மனமுரை யிறந்த வின்பப்
பொருட்டிறந் திகழ்த்தி மாளாப் போதவா னந்த மாக்குந்
திரட்டின தியல்பை யெல்லாந் ‡ தெளிதரச் செப்ப லுற்றும்.

‡ திகழ்தரச் என்றும் பாடமுண்டு.

---

† அன்னை யத்தனு யழகுறு கிளையா யரிய நூலதா யாருயிர்த் துணையாய், மன்னு சிந்தைசொற் சீலமாய் வலியாய் மருவு நற் றிரு மகிழ்வுமின் பமுமாய்த், துன்னு போகமிக் குவகையா யுயி ராய்த் துணிவு முத்தியாய்ச் சொல்லருஞ் சமைவா,யென்னை யாளு டை யெழின்மிகு மைய னிருங்க ழற்புணை யிருந்தவா றெனக்கே. என்றும் பாடமுண்டு.

தாற்பரிய முழுதுமெழிற் றருவதுவாய் முளைத்துத்
தகுநூலோ டனுபூதி கவடுகளாய் விரிந்து
பார்ப்பரிய வகையிருபத் தெட்டாகிப் பணைத்துப்
பழுதில்விதக் கொம்பிருநூற் றீரொன்பான் பரப்பி
யோர்ப்பரும்வே தாகமத்துட் பொருளதுவாய்க் காய்த்தங்
குறுகவி ¶ யாங் கனியிரண்டா யிரத்தெண்ணூ றுகச்
சீர்ப்பெறவே பழுத்துறுநற் சிவச்சுவைய துடைத்தாய்த்
திகழன்பர்க் கமுதளிக்குந் திரட்டெனுங்கற் பகமே. 2

¶ யீர்ங் என்றும் பாடமுண்டு.

பாயிரமே ழிதமிரண்டாம் பரமர்திறத் தேழாம்
பரனுலகத் தஞ்சுபவான் மாமுதல்பத் தொன்று
மாயசம யத்துறுமுப் பத்திரண்டா மியோகத்
தாறிரண்டு தத்துவத்தெண் ணான்கொடொன்று மவத்தை
யேயவித மேழுறுவாக் கியத்தினிய ஞலா
மீசன்சீ வன்மாயை யீரைந்தா ஞான
மேயவே துக்குருபக் குவம்புதல்வ ரிருவர்
விதமிருமூன் றீரிருமூன் றுங்கலைக்கட் டளையே. 3

அனுபவவா தனையுரைக்கி லரியவுப தேசத்
தாறிரண்டாங் கனுபூதித் திறமைந்தா மருளி
னினமுறுமே ழிறையினிய லிருபத்து மூன்று
மேவவிரண் டன்பிரண்டா மன்பரிலா றெனலா
முனவரிய நெஞ்சதனி னைங்குதிற மைந்தா
முரைப்பரிய தோத்திரத்தி னுறுவிதிமூன் றதுவா
மனைவருமின் புறவறைமங் கலவரமொன் றுடனே
யையிரண்டு திறத்தினினன் கறைந்ததென வறியே. 4

மருவார் கொம்பின் றிறமறு மூன்றோ டிருநூறுங்
குருபா ரம்பரி யத்திய லேத்திக் கூறக்கே
டிருகா வுள்ளஞ் செம்மையி னோங்கித் திகழன்புற்
றுருகா நின்ற தரமிகு ஞானத் துயர்மைந்தா. 5

---

குறுந்திரட்டு.

எண்ணிய வெண்ணியாங் கெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானைதன் கழல்பணி வோர்க்கே. 1

துவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே. 2

## ஆசிரியப்பா.

நான்முகன் முதலா நலந்திகழ் மூவரும்
வானவர் குழுவு மறைகளு முறையிடப்
பூரணன் கருணையிற் பொலிதிரு வுருவாய்
மாரணம் பிறப்பறும் வகையினை யருள்செய
வாரருட் கொம்பொடு மழகுறு கயிலையி

லேர்பெற விருந்தரு ளிறைகழல் வணங்கி
யப்பெருந் தேசிக னடியிணை புனைதரு
செப்பரு நந்திதன் றிருவடி வணங்கி
நந்திநற் சேவடி நலம்பெறச் சூடிய
வெந்தைநற் சனற்குமா ரன்றனை யிறைஞ்சி

யாங்கவன் சேவடி யழகுறப் புனைந்த
வோங்குநல் வியாத னொண்கழ லிறைஞ்சி
யருளுடை வியாத னளியினிற் சிறந்த
தெருளுடைச் சூதன் றிருவடி யிறைஞ்சிச்
சிற்பரன் சூதன் றிருவடி புனைந்த

நற்பெருங் கடவு ளுதனை யிறைஞ்சி
யவ்வழி வந்திங் கருளினிற் சிறந்த
தெய்வநற் கருவைச் சித்தனை யிறைஞ்சி
யத்தவ னடிபுனை யழகுறு சோதிச்
சித்த வடத்தவன் றென்றிசை விளங்க

வந்துநற் புலியூர் மகிழ்ந்தினி திருந்த
வந்தமி லருண்முனி யருட்கழ லிறைஞ்சி
யாங்கவ னருளா லழகுறு கீழையி
லோங்கிய முனிவர னொண்கழ லிறைஞ்சி
யழகுறு கீழையி லாரிய னடிபுனை

யொழிவறு பரமுனி யொண்கழ லிறைஞ்சி
யுரைத்தநற் றிருமுனி யொண்கழல் சூடிய
திருப்பனந் தாளிறை சேவடி யிறைஞ்சி
மாமுனி யருளான் மதுரநன் புன்செய்ச்
சேமநல் வைப்பின் றிருந்தடி யிறைஞ்சிச்

சீர்தரு மிறையடி சென்னியிற் புனைந்த
வேர்தரு வடமுனி யிணையடி யிறைஞ்சி
யலகில்சீர் முனிவர னடியிணை முடிபுனை
யுலகுய வந்தோ னெண்கழ லிறைஞ்சிக்
குருபர னுலகுய வந்தவன் கழல்புனை
திருநட ராசன் சேவடி யிறைஞ்சித்
தத்துவன் றிருநடன் சரணமும் புயம்புனை
சுத்தநற் சொரூபன் றுணையடி யிறைஞ்சி
யையனற் சொரூப னடியிணை புனைந்த
செய்யநற் சிவப்பிர காசனென் செல்வன்
றன்னையோர் மொழியினிற் சதுர்பெற வளித்திங்
கன்னையி லன்புசெய் யாரருட் பெருங்கட
லருளார் குன்ற மருட்பெருங் கற்பக
மருளார் மேக மருட்பெரு முழுநிதி
யென்னையும் பொருளா வாண்டவ னிணையடி
தன்னை நூ றுயிரங் கோடிகால் வணங்கி
யருமறை முதனூ லனைத்துமற் றுத்தர்
தருதிரு மொழிகளுந் தகவுட னாய்ந்து
தாற்பரி யத்தினைத் தனித்தனி யெடுத்துச்
சேர்த்துடன் விளக்கிய சிவப்பிர காசங்
கடவுளோ டருளிறை வணக்கமுங் கலைமறை
யடைதரு மாகம மாத்தர்சொற் சிறப்பதூஉ
நூற்பெய ரறிஞரைப் புகழ்ந்தவை யடக்கமு
மேற்றிய விதோப தேசமு மருமையும்
வன்னாச் சிரமமுங் கடந்தவர் வனப்பு
மன்னவர் பெருமையு மவர்தம தியல்பும்
விட்டசா ரத்தை விரும்பியங் கவாவிற்
பட்டுழல் பாதகப் பரிசிழித் துரைத்தலூ
மேவலின் சிறப்பு மிகழ்ந்தவர் கேடு
மோவலின் ஞானித னுயிர்விடு முடலமுன்
பரந்திகழ்ந் தமையிற் பன்னிய கனனமுந்
திருந்திய ஞானிக டிறமுறைத் தழகுற
வொன்றதை யுணர வுலகினை யுணர்ந்திடு

மென்றெழு காரண காரியத் தியல்பது
நிகிலோற் பத்தியு நெறிமையிற் படைத்தலுஞ்
சகலமு மனுவே சித்தலு மழித்தலும்
பிறப்பவன் றனும் பிறப்பொடு பெத்தமும்
பிறப்பெனுங் கடன்மரம் பெருகுச ரீரமும்
பிண்டமோ டண்டமும் பிறிதவற் றின்மையும்
விண்டிடற் பற்றது மெய்ம்முத லனித்தமு
மூவுல கதனின் முழுவதுந் துன்ப
மாவகை காட்டலு மழகுறு துறவு
மின்புறு வீட்டினை யெய்தின மெனப்பக
ரன்புறு புத்த மருகம்லோ காயத
நிலவுமீ மாம்சை நியாயம்வை சேடிகஞ்
சலமுறு சாங்கியஞ் சைவசம் மேளிதம்
பாசு பதத்தொடு வாமம் பயிரவ
மாசுறு காளா முகமா விரதமு
மாலவன் சமயமு மாயா வாதமும்
போல்சிவாத் துவிதம் புகலுமத் திறமது
முதயனன் சந்திர னூழொடு காலமும்
விதமுறு மந்திர மருந்தின தியல்பதுஞ்
சாதிசங் கற்பமுந் தீர்த்தமர்ச் சனைவழி
யேதநூ லளவைவா தென்றசங் கற்பமு
மோதிய வவைதொகுத் துரைத்தலு முணரா
வாதரங் கேட்டுக் கிரங்கியங் கழுங்கலுஞ்
சத்தா மார்க்கமுந் தகுமியோ கத்தினி
லுய்த்திடு மியம நியமமா தனமுட
னுதா ரத்திய லாங்குறு நாடியு
மீதார் சுத்திமெய்ப் பிராணா யாமமும்
பிரியுநா ளளத்தலும் பிரத்தியா காரமுந்
தருமுத லாகச் சமாதியீ றியோகமு
மாதா ராதி யறைந்திடு மியோகமு
மேதமில் பயனுஞ் சித்தியெண் செல்வமு
மோதிய கரும யோகமும் பயன்களு

மேதம தென்றே யிழித்திடு மியல்பதுந்
தத்துவ வர்க்கமுந் தருமுடற் கோசமும்
வைத்திடு நாடியும் வாயுவும் விகாரமும்
சட்பா வனைசட் கோடி சடூர்மியு
முக்கா ரகநாற் கரணமைம் பாசமு
மலங்குணஞ் சங்கங் குற்றம்வா தாதி
பெலந்திகழ் பெந்தந் துக்கமே டணையுட
னுறைதரு மூவகை யவத்தைவே தனையெனச்
செறிதரு மூவகைத் திறமுமு துரைத்தலும்
பூத வியல்புபூ தாங்கிச முண்ணிலை
யேதமி றாலரூக் கம்பர மறையிய
லாதிய வெழுவகை யறைந்தவை யைந்தது
மோதிய வேழுநா லுடனா றுறதூஉ
மறுபதோ டாறு றுகுதத் துவமது
முறுமியற் பல்வகை யுரைத்ததத் துவமதுந்
தத்துவத் துணிவதுஞ் சாற்றிய வவத்தையின்
மெய்த்தா துக்குண மேவவத் தாந்தரஞ்
சாற்று மாதாரங் கரணசஞ் சேபமு
மேற்றிய வனுபவ மெனவே ழுவத்தையும்
வாக்கிய வர்க்கமு மாவாக் கியமது
மாக்கிய வவாந்தரம் பிரணவமோ டசபையு
மஞ்சொடெட் டெழுத்தாம் வாக்கியத் தியல்பது
மிஞ்சுவாக் கியங்கண்மெய் காட்டமாட் டாமையு
முயிர்பர வாசியு முயிரது மீசனுஞ்
சயமுறு முயிர்பரத் தாதான் மியமது
மாயையி னியல்பினை மதித்துற வாய்தலு
மாயநற் பிரபஞ்ச மதுநிரு பித்தலு
ஞானநற் பிரதானநல் லிலக்கணஞ் சிறப்பது
மூனமக் கரும மெனவிழித் துரைத்தலு
ஞானுர்ச் சனையுடன் ஞானவா சாரமு
ஞானநல் லியோகமு நழுவினர் கதியது
மூனமின் ஞான வலியுமூழ் வேகமு
மீனமின் முத்திக் கேதுசா தனமதுங்

கோதில்கா ரணனுங் குருபர னியல்பது
மாதிதன் பெருமையு மபக்குவ ரியல்பதும்

பரமனைச் செறிபவர் பக்குவத் தியல்பதுங்
கரமுறு மபக்குவங் கண்டுகை விடுதலுந்
திகழ்தி காரமுஞ் சீடா சாரமுந்
தருசம்பிர தாயத் தியல்பது சாற்றலுஞ்
சிரமுறு மடியிணை திகழ்தரத் துதித்தலு

முரமுறு மூனுயிர் வேறீ றாகிய
வினையவை முழுது மிலங்குநூற் கட்டளை
அனுபவ வாதனை யறைந்திடும் பரிசது
முயிரினைக் காண்டலு மோங்கதன் பெருமையு
மயர்விலத் துரியத் தாய்வருங் குற்றமுந்

துரியா தீதந் துகளறக் காண்டலு
மரியதன் குற்றமங் கயர்வற வுரைத்தலு
மொருமைத் தாமிறை யுண்மையி னியல்பதும்
பெருமைத் தாம்பரம் பொருணனி விரும்பலுந்
தற்பரம் பொருளினைத் தான்றரி சித்தலுஞ்

செப்புல கழித்தலுந் தேசிகன் றிதியதுந்
தானனு பூதியுஞ் சமைந்தவ னியல்பது
மானவவ் வனுபவத் தருட்டிறம் வினாவலு
மனுபவ முரைத்தற் கருமையு நிலைமையு
மினியதன் வியப்புமற் றெழிலா ராமையு

மருட்டிற மெச்சிநின் றழகுற வியத்தலு
மருட்டிற நினைந்தழிந் தருளிரந் துரைத்தலு
மருள்விருப் பதனா லச்சமும் பவகடத்
திருளினுக் கிளைத்தங் கிறைவனுக் கிசைத்தலும்
போரு ணோக்கிப் பிறவியை விரும்பலு

மாருள் வியப்பினாற் றாமைய திசயித்தலு
மிறையிய லுரைத்தலு மிறையொடு துணிதலு
மிறைவலி நோக்கியங் கெழில்பெற மகிழ்தலு
மிறைவனற் குறியது மெழிற்சுதந் தரமது
மிறைவிநோ தமுமிறை விழிமொழி யாட்சியு

4407

மாட்சிய தருமையு மவனொடு மகிழ்தலுங்
காட்சிய திறையருள் காலம் புகழ்தலுங்
கழிந்தநாட் கிரங்கலுங் கருணையி னழுந்தா
திழந்தகே டஃதுனி யேங்கிநின் றழுங்கலுந்
தனைப்பிரிந் தாற்றாத் தன்மையு மிறைவனை
நினைத்தழிந் தாற்று நெறிமைய துரைத்தலு
மன்புறு பரமரா கத்திய லறைதலு
மின்புறக் காண விரும்பிநின் றிசைத்தலுங்
கூடிட விரும்பலுந் திருக்குறிப் பாட்சியும்
பீடுற விரும்பல்பெம் மானொடு நோதலு
மிறைநிலை மயக்க மிசைத்தலுங் கேடுகண்
டுறவுற வழுங்கியங் கும்பனைப் புகழ்தலுந்
தலைவனை நோக்கித் தமைவெறுத் துரைத்தலு
மெலையறு மிறைகழற் கேவல் விரும்பலு
மேவலின் சிறப்புமங் கிறைகழற் கன்பினை
மேவுற விரும்புமெய்ப் பத்தியின் பெருமையு
மன்பர்தங் குழுவது மதிற்புக விரும்பலு
மன்பரிற் கூடிய வழகுறு வியப்பது
மன்பர்தஞ் சிறப்புமங் கவர்குறி யறைதலு
மன்பொடு கூடா வன்பருக் கஞ்சலு
நெஞ்சினை நோதலு நெறிமையி னிரத்தலு
நெஞ்சுடன் படுத்துநெஞ் சினையுணர்த் திடுதலு
நீங்கலி லன்புடை நெஞ்சொடு மகிழ்தலும்
பாங்குறு பரன்கழல் பாடிட விரும்பலும்
புனிதனைப் பாடாப் புலவரை யிகழ்தலு
நனிமிகு தோத்திரப் பெருமைநன் குரைத்தலும்
வையநன் கினையுற மங்கல வரமுமென்
றையமி லிருநூற் றொருபதெண் டிறத்தினின்
முத்திநன் னெறியினின் மொழிதரு முழுமையுங்
கைத்தல மணியெனக் காட்டுநன் குறவே.

* † வேத மேமுதன் முழுதினு மொழிதரு
மெய்ம்மையாம் பொருளெல்லாங்
கோதிலாவகை மொழியுமித் திரட்டிவை
கூறுமொன் றொன்றைத்தா
னாத லான்முழு தினையுமங் கைக்கனி
யெனவளித் திடலாலே
நாத னாரருள் விழியிது வென்னிலார்
நவில்கலை யெனலாமே. 7

† வேத மேமுதற் கலைமுழு தினுமொழி என்றும் பாடமுண்டு.

வேதமுடி வினின்விளைவா கமத்தின்மிகு பயன்மிருதி
புராண சாரங்
கோதருஞா னிகண்மொழிகள் குலவியநல் லனுபூதிக்
குறிப்பி லின்பம்
வாதவிருட் கெழிலிரவி மன்னுசிவம் வெளிப்படுத்து
மணிநற் றீபஞ்
சோதிசிவப் பிரகாசன் றொகுத்தமைத்த திரட்டெனுநற்
சிவப்பிர காசம். 8

* எப்பொருள் களுமுண் டிஃதி லிதிலிலா தெதினு மின்றாற்
பற்பல பனுவ லாகும் பரப்பினி லலைய வேண்டாம்
ஒப்பரும் பரானு பூதி யுண்மையு மளிக்கு மென்று
‡ லிப்பெருந் திரட்டீ தீச னெழிலருள் விழிய தன்றே. 9

‡ லிப்பரங் என்றும் பாடமுண்டு.

பாயிர மென்னமுன் பகர்ந்த வேழெனு
மாயவை தனித்தனி யடைவிற் கூறிடக்
காயமு முரைமன மொன்றிக் காதலா
னேயமு மொருமையு நிகழக் கேட்டியால். 10

# 1. பாயிரப்பகுதி.

## 1. கடவுள் வணக்கம்.

### தந்துவாமிர்தம் (மூலசித்தி).

* உளவிரு ளொழிதர வொளிர்பவ னெவனவ
னளவறு மரியநல் லறிவின னெவனவன்
வளமலி யடியவர் மதிநல மெவனவ
னளிதரு மடிதொழு தனமன வரதமும். 1

### ஆன்மப்பிரகாசம்.

* ஓங்குமுயிர்க ளொருகாலு முணரும்வண்ண முணராமற்
பாங்கிலுலக முழுதினையு மறைத்தபடலப் பெருமாயை
யாங்குமேவரோ டழியும்வண மகமும்புறமு § மறநிறைந்து
தீங்கிலின்பந்திகழொளியாஞ் சிவப்பிரகாசத்தினைப்பணிவாம்.

§ நிறைந்திலகும் என்றும் பாடமுண்டு.

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

ஆதியா யுலகுக் கெல்லா மணிகயிற் றரவு போலப்
பேதமாய்த் தோன்றிப் பார்த்தாற் பேரிலா னந்தச் சித்தாய்ச்
சோதியா யெங்கு மாகித் தோன்றிநின் றவனை நானிவ்
வாதமா னதுமு டிப்பான் வல்லவா வணங்கி னேனே. 3

### சொரூபானந்தசித்தி.

* இரவியு மதியும் வானும் வாயுவு மனலு மப்பு
முரவிய மண்ணு மற்றை யுணர்பவன் றானு மாகிப்
பரவிடுங் கரணம் பன்னூன் காயுமன் றாகி நின்றே
யுரைமனமிறந்துளோங்கு மொளியினை †வணங்கல்செய்வாம்.

† வணங்கலுற்றாம் என்றும் பாடமுண்டு.

### சமாதி.

ஞானமா யின்ப மேயா யனந்தமா யொன்றாய் நின்றான்
றானலா மாயை யாலே தறிநின்ற கள்வன் போல
வீனமாஞ் சராச ரங்க ளாயவிவ் வுலகந் தானே
யானவிவ் வீசன் பாத மழுந்துறச் சென்னி வைப்பாம். 5

---

### துறுந்திரட்டு.

ஆதியா யனாதி யாகி யந்தமா யனந்த மாகிச்
சோதியா யிருளு மாகித் தொந்தமாய்த் தொந்த மில்லா
நீதியாய் நினைந்த தாகி நினைவரி தென்று வேத
மோதிய பரமா னந்த வொளியினை யுளத்துள் வைப்பாம். 1

### மெய்ம்மொழிச்சரிதை.

திருந்துநல் வியாப னேகன் சேதனன் செகநி மித்தன்
றருந்தகைச் சத்த னித்தன் சதோதிதன் சம்பு சாந்தன்
பெருந்தகை யனாதி முத்தன் பேரின்பன் மாயாதீதத்
திருந்தவன் யாவ னிங்ங னிருந்தவா றேத்த லுற்றும். 6

### பேரொளிவிளக்கம்.

மத்திமமாம் பகல்வெயிலிற் புனல்போல் ஞால
மலர்ந்துளதாம் யாதொன்றை யறியா ராலுற்
றொத்தலர்மா லையினுரகம் போல ஞாலந்
தோன்றுதாம் யாதொன்றை யறிவா ராலு
லத்திகழும் பரஞ்சுடரைத் தன்னைத் தானே
யளந்தறியும் பேரறிவை யறியா தான
நித்தமெனு மொருபொருளை நீங்கா வின்ப
நிறைகின்ற தற்பரத்தை நினைக்கின் றேனே. 7

### சுவானுபவசித்தி.

* உலகமா முருவு தானு முணர்பவன் றானு மாகி
யலகிலாப் பரமு மாகி யவைமிரு கண்ணு நாகி
யுலைவிலா வாதி கட்கு மொத்தவை யாகி யன்றுஞ்
சலமிலாச் சங்க ரன்றன் றாளிணை வணங்க லுற்றும். 8

### பரமார்த்ததரிசனம்.

* ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம். 9

### ஞானசூரியன்.

* என்றுமோர் தன்மை யாகு மெழிலறி வுருவ தாகிப்
பொன்றுபூ தாதி யுந்தா னாகியே புரையொன் றின்றி
நின்றபே ரின்ப நாத னிலவுநா † மகட்குக் கேள்வன்
பொன்றிகழ் தாமரைத்தாள் பொலிவுறச்சென்னிவைப்பாம்.

† மகடன் கேள்வன் என்றும் பாடமுண்டு.

கடவுள்வணக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 10.

## 2. அருளிறை வணக்கம்.

சொரூபானந்தசித்தி.

* நித்த னிர்க்குண னின்மல னீடொளிச்
சுத்த னேகன் சுருதித் தொடர்பிலா
னத்த னென்னையு மாண்ட † வருளினன்
றத்து வன்றிருத் தாளை வணங்குவாம். 1

† வறிவினன் என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவ
னயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
றுயரறு சுடரடி தொழுதெழுன் மனனே. 2

ஆன்மப்பிரகாசம்.

* அறுநான் கதுவும் புருடனொடு பரமும் வியோம மானது
மங், கிறவே கழனற் கண்ணெனுநல் வியோமா தீத மெனு
நான்கு, மறவே ¶ நிறைந்து நிகழ்குரவ னருளா லடியேன்
கண்காணப், பெறவே யுருவாய் வந்தாண்ட பெரிய சொரூ
பன் றுள்பணிவாம். 3

¶ நினைந்து என்றும் பாடமுண்டு.

தத்துவப்பிரகாசம்.

* $ மறையீ றறையா கமங்களுடன் மாகர் முனிவர் மற்றெவரு
முறையோ வெனநின் றினும்பர மூடனேனைப் பொருளாக
வறைதான் கூவி வந்தாட்கொண் டடியனேனைத் தானுக்கிச்
செறிவாய்நிறைந்துதித்நிக்குஞ்சிவப்பிரகாசன்றுள்பணிவாம்.

$ மறையீறறியா என்றும் பாடமுண்டு.

சொரூபானந்தசித்தி.

* முன்னநற் சுருதியோதி முடிவுறற் கரியதாக
வின்னமத் தேவர்மூவ ரெய்துதற் கிடரேமேவத்
தன்னையிப் படியேகாணத் தாளளித் தெனக்கோர்வார்த்தை
சொன்னநற்சொரூபானந்தச் சோதியைத்தொழுதல்செய்வாம்.

### மூலசித்தி.

* ஆன தாகி யழிந்தொழி யாவணு
மூனை நானென தென்றுணு ராவகை
தான தாகிய தன்மை யளித்திடு
ஞான வானந்த னுமை நவிற்றுவாம். 6

### சுவானுபவசித்தி.

உலகமதா யுயிர்பரமா யுருவி ரண்டென்
றுளியமா மாயைதனு ணுரைக்க நின்றே
யலகிலறி வதுவாகி யனந்தா னந்த
வழிவிலா மெய்யாகி யகண்ட மாகிப்
பலவெனலா யொன்றாகிப் பலவொன் றென்னப்
பார்ப்பவர்க்கங் கவையவையாய்ப் பார்ப்பா னுகி
யிலகுவான் றுள்வணங்கி யிவனு மென்ன
வங்குருவாய் வந்தான்ற னிணையடியுள் வைப்பாம். 7

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

சோக மோகச் சுழியதனுட் டுயராய் வளருஞ் சுறவெறியப்
போக முண்ணும் புலன்முதலை புகுந்து தொடரும் பொய்ப்பிறவி
வேகக் கடலுள் விழுந்தவெனை மெய்த்தா ளதனு லெடுத்தேற்றி
நாகப் பணத்தி னடமாடு ஞானகுருவை நான்பணிந்தேன். 8

---

### திருந்திரட்டு.

உயிரு மியாக்கையு முளவுற வுளவண முரைத்துச்
செயிர ருப்புலன் வழியினி லுழல்வறத் திரித்திங்
கயர்வு மூக்கமு மறுமறி வுருவென வளித்தென்
றுயரை நீக்கிய சொரூபன தடியிணை தொழுவாம். 2

அந்த மாதி யிலாதது மண்டர்தஞ்
சிந்தை யாலுந் தெரிதற் கரியது
மிந்த மேனி யெனும்படி கண்டிட
வந்த நாதன் மலரடி வாழ்த்துவாம். 3

இரைத்த வேழ்பிறவி யாழி யேறிட
வரைத்த பல்சமய மாறு ருவகைக்
குரைத்தல் தீரவோர் கணத்தின் மெய்ப்பொரு
ளுரைத்த கொண்டலடி யுச்சி வைத்துமே. 4

### வாசுதேவசதகம்.

உற்றவெம் பிறவிப் பௌவங் கடந்துயர் கரையி னேற
நற்றுணைப் புணையாய் நின்ற நன்முனி சுகரோ ரூபக்
குற்றமில் குணத்தெங் கோவைக் குரவனைக் கோதின் ஞானப்
பற்றினைப் பணித்தான் றன்னை வணங்குவன் பகலிரா வே. 9

### தத்துவாத்திறவலி.

வேதத் தால்விதி மிக்க நற்கலை
யோதிப் பேத முரைத்தி ளைத்தலை
வாதை தீர மயக்க மறுத்தவர்
பாதத் தேதலை வைத்த பண்பரோ. 10

### ஞானோபதேசம்.

* எண்ணரும் பிறப்பிறப்போ டிடைந்தபல் யோனியெய்திக்
கண்ணொதிர் கண்டதன்றிக் காண்கிலா வறிவிலேனைத்
தண்ணளி தந்துதன்று ளளித்தருள் செய்தஞானப்
புண்ணிய னவனையேத்திப் போக்கினம் பிறவியெல்லாம். 11

அருளிறைவணக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 21.

## 3. வேதச் சிறப்பு.

### சித்தாந்ததீபிகை.

* ஓதிய கால மூன்று முணர்ந்துரை செய்த லானு
நீதியா லெல்லா நூலி னினைவுதா னிகழ்த்த லானுங்
காதுநா லியாது மஃதின் கருத்தறி யாமை யானும்
வேதமே நூல்கட் கெல்லா மிக்கது வேறு முண்டோ. 1

* பேதமு மபேதந் தானும் பெருகிய வுபயமற்று
மோதிய யாவும் வேத முரைத்திடு மல்லா நூல்க
ளேதமா மோரொன் றைத்தா னிசைத்தல தறியாவென்றால்
வேதமே யெல்லாங் காட்டும் விளக்கெனப் படுவ தையா. 2

---

### தூறுந்திரட்டு.

சிறையுடல் விடத்தனது செம்மையை நிகழ்த்து
மிறையுட னிகர்க்கவல வீசருள ரென்னி
னிறைவுட னனைத்தையு நெறிப்பட நிகழ்த்து
மறையுட னிகர்ப்பதொரு † மாகமுள தாமால்.

† மாநூலுள என்றும் பாடமுண்டு.

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

* வேதமா நாமத் தாலும் வேதமான் மாவி னுண்மை
தீதற வுரைத்த லாலுஞ் செற்றமோ டார்வ மில்லாப்
போதமா மூர்த்தி தேசிற் ‡ புரிந்தநூ லாத லாலும்
வேதமா நூலின் றேசு விளம்பலா மளவைத் தன்றே. 3

‡ புரித்த (ஸ்புரித்த) என்றும் பாடமுண்டு.

* வேதத்தின் பெருமை வேதந் தன்னாலு முரைக்கொ ணாதா
லோதத்தான் வேறு மெல்லா ருலகினி லொருவ ருண்டோ
கோதற்ற வமிர்த ஞானங் குலவுமா மறையி னல்லான்
மீதுற்ற நாலிற் காண்டன் மின்மினி விளக்க மையா. 4

### தத்துவபோதம்

* விளங்கிய கலைகட் கெல்லா மிறையதும் வேத நன்னூல்
களங்கமில் பொருளா ஞானக் கண்ணதும் வேத நன்னூ
லளந்தறி வொண்ணு வின்ப மளிப்பதும் வேத நன்னூ
லுளந்தெளி பவனே வேதத் தொப்புமற் றெங்கே யெங்கே.

### நடராஜநிலயம்.

* கேதங் கூடும் பிறவி கெடுக்கும் படிகேட்க
வாதங் கூடா வாய்மன மெய்தா வடிவெய்தும்
¶ போதங் கூடிப் புந்தியி லேயங் கெடமெய்யே
வேதங் கூறிற் றென்று மொழிந்தான் விடையோனும். 6

¶ போதங்கூறி என்றும் பாடமுண்டு.

### சொருபானந்தசித்தி.

சாத னம்மாஞ் சதுட்ட யங்கள் சமைந்த வத்தன் மையோர்க்கு
நீதி யாக வருமறைதா னின்றே யிவர்க ளறியும்வணம்
பூத மாயும் புவனங்கள் பிறவு மாகி யிருந்ததுவு
மேத மில்லா வொன்றாய பரமே யென்றே யியம்பியதால். 7

கேட்பவ னுடைய சித்தம் பரிபாக மிலாமை கண்டு
மீட்சியாய் வசம தின்றி வேதமோ ரிடத்தி னோர்காற்
காட்சிய தின்றி யுள்ள பரத்தினை யொழிந்து வேறு
மாட்சியி னொன்றுண் டாக வகுத்துரை செய்ததன்றே. 8

### அஞ்ஞானநிவிர்த்திநாடகம்.

அந்தணர்க டங்களுக்குஞ் சுருதிபேத மதிகார பேதத் தா லல்லதில்லை, புந்தியிலே மயலுடையோர் தங்களுக்கும் போதத்தி னதிகாரம் போதாதானு, லிந்தவுல கங்களையே யிவருக்கேற்றி யேகத்தை யுத்தமருக் கேற்றிக்காட்டு, மந்தி யினிற் புரியரவ மறியாதார்க்கே யறிந்தவர்க்குப் புரியேயா மதுபோற் காணே. 9

யாகத்தாற் ஞானத்தா லெழுந்தவத்தா லிடையிலுள கருமபலம் விட்ட வர்க்குச், சோகத்தான் மோகத்தான் றவ ளாதுள்ளச் சுத்தியினுற் † சோகமெனுஞ்சுகத்தைக்காணத் தாகத்தாற் கருமங்க ளனைத்தும்விட்டுத் தன்னையுணர் வோ மென்னுந் தன்மையாலே, மோகத்தான் முன்புசொன்ன விரோதமில்லைமுன்முன்மறை பின்பின்மறைக்குதவிகாணே.

† சிவோகமெனுஞ் என்றும் பாடமுண்டு.

### சொரூபானந்தசித்தி.

* காதலாற் றத்தங் கடவுள ரருளாற் காலபா கத்தினு லறத்தாற், போதரா தலினுல் வேதவா தத்தைப் பொருந் துவர் புகன்றவவ் வடைவே, வேதவா தத்தை மேவுநல் வினையால் விருப்பினு லன்றிமே வினருஞ், சாதலா னதுவும் பிறத்தலு மில்லாத் தற்பதந் தன்னையே சார்வார். 11

* வான்கரு தியமறை வழியை விட்டுமேற்
றூன்கரு துதல்சது ரன்று தன்கையிற்
றேன்கமழ் திரளையைச் சிந்திச் ‡ சந்தியாக்
கூன்கையில் விழுதுளி கொண்ட தன்மையே. 12

‡ சிந்தியாக் என்றும் பாடமுண்டு.

பொருள்கொண்ட மறைநின்று புகல்கின்ற றுணரா
மருள்கொண்ட சமயங்கண் மதிகொண்டு கதியா
யருள்கொண்ட பரவின்ப மடைகின்ற வவர்கூ
ரிருள்கொண்டு பொருள்கண்ட வவரன்றி யிவரார். 13

மையறு வேத மார்க்க மறந்துபா சாண்ட மார்க்கக்
கையரான் மயக்கப் பட்டுக் கலியுகந் தன்னி லுள்ளோர்
மெய்யுணர் வனந்தா னந்த மேனியாஞ் சிவனைப் பூசை
செய்யவா தரியார் செய்வார் தம்மையுஞ் செய்ய வொட்டார்.

காதும்வா தியர்களாலே கலியுகத் துள்ளோர் கெட்டு,
வேதமோ தியதுஞ் செய்யார் மிருதிசொல் லுவதுஞ் செய்
யார், பூதியு மணியார் ஞான சாதனம் பூத மாக, வோதுவ
தொன்றுஞ் செய்யா ரொழிந்ததே யுவந்து செய்வார். 15

† பெட்டாய் மார்க்க நூலிற் பிணிப்புணுப் பெரிய ராகிச்
சிட்டராய்த் தீர ராகிச் சிவனரு ளுடைய ராவர்
கட்டமாம் பிறவி தீரக் காதலால் வேதஞ் சொல்லப்
பட்டதே செய்யா நிற்பர் பரமமாம் பதத்தை யுன்னி. 16

† துட்டரா மார்க்கர்நூலிற் றுவக்குணுப் என்றும் பாடமுண்டு.

வேதச்சிறப்பு முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 37.

## 4. ஆகமச்சிறப்பு.

### ஞானமிர்தம்.

தேனுட னமிழ்து கலந்தன்ன சுவைய
வமிழ்தா னண்டரும் பெறற்கருந் தகைய
தண்டாப் பிறவிப் பேரிட ரெறிப
வுரையுணர்வு கூடா வான்கதி யுய்ப்ப
மதியோ ரானாது பருகுவ பருகியு
மமையா துவனு மமைதிய பாச
வல்லி வேரற நிமிர்ப வெல்லையின்
மறக்குறும் பறுப்ப வறத்தின் வேலிய
தனக்குநிக ரில்லாத் தகைமைய மனத்தின்
மாசறக் கழுவ தேசொடு நிவந்த
வுரைத்தன னென்ப மாதோ
பொறைக்குவரம் பாகிய வறத்தின் கோவே. 1

---

### குறுந்திரட்டு.

### ஆகமச்சிறப்பு.

நிலையா ததுநிலைப்ப நெஞ்சறியச் செய்யப்
புலையா மவாவறுப்ப புன்மையெலாந் தீர்ப்ப
தலையாய சாந்தி முதனான்குந் தருப
வுலையாத வீட்டின்பத் துள்ளத்தை யுய்ப்ப.

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

* ஆரணப் பொருளா மைய னருளினுன் மூர்த்தஞ் சாத்திக்
காரணப் பொருளாந் தன்னைக் காணுமா றருளிச் செய்த
சீரணி சிவாக மத்தின் றேசினைப் புகழ முன்னை
யாரணத் தாலு மொன்று வதனையாம் புகல்வ தென்னே.

* புரையற நிறைந்து நின்ற பூரணன் சகளஞ் சாத்தி
வரைவிலாப் பிறவிப்பௌவங் கடந்துமன் னுயிர்களெல்லாங்
கரையில்பே ரின்பந் தானுங் கரையினைச் சேரும் வண்ண
முறைசெய்நற் சிவாகமத்திற் கொப்பொரு நூலுமுண்டோ.

### சிவப்பிரகாசதரிசனம்.

செப்பரும் பொருளைக் காட்டுஞ் சிவாகம முயிர்கள் சித்த
மெய்ப்பட வேறு யுள்ள விபாசபா கங்கட் கீடா
வப்படி பாத நான்கா வறைந்தேயுங் கொடுபோந் § துய்ப்ப
மெய்ப்படு சிவந்தா னுக்கும் † பெற்றியெந் நூலுக்குண்டே.

§ துய்ய என்றும் பாடமுண்டு. † வெற்றி என்றும் பாடமுண்டு.

* ¶ அருமறை நூல தென்னு மாகம மருநூற் றன்னின்
கருதரும் பொருளைக் காட்டுங் காரண னிறையா மென்றும்
பெரிதுணர் ஞானத் தோர்கள் பீடுறு மதமீ தென்றுற்
றெருளுறு சிவாக மந்தான் றேசிக னுருவ தன்றே. 5

¶ அருமறை நூலதென்று மாகம மந்நூற் றன்னின் என்றும் பாடமுண்டு.

ஆகமச்சிறப்பு முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 42.

---

### தருந்திரட்டு.

அறவித் துதவுவன வாரமிர்த மன்ன
துறவித் துணையாவ துன்பந் துடைப்ப
மறவிப் படாத மதிதருவ மாயப்
பிறவிப் பகைதணிப்ப பேரின்பத் துய்ப்ப. 7

அழியா வறமு மரும்பொருளு மின்பு
மொழியாத வீடு மொருநிலையே யாகப்
பொழியா மகிழ்விப்ப போத கனமாவ
மொழியா மொழியா னருளான் மொழிந்த. 8

## 5. ஆத்தருரைச்சிறப்பு.

### போதாமிர்தம்.

* சொற்பத மானஞ் சொல்லுந் தன்மதம் பிறர்ம தங்க
ளொற்பட வுணர்தல்வாக்குக் கருணைசீ ரெழில்கொள்வாய்மை
நற்பத ஞானம் பத்தி நல்வயி ராக்கி யந்தா
னற்புத மாக வுள்ளோ ரவர்கணல் லாத்த ராவார். 1

* அளவி லாரண மரனெடு மாலய னறைதரு பொருளாகித், தளர்வி லாவகை யனுபவ மதனிலுங் காணலாந் தகவாய்மற், றுளவெ லாஞ்சொலி முடிதரு பொருளுமா முண்மையைத் துதிசெய்பு, மளவின் ஞானநற் றுறவினை யுடைய நல் லவர்களாத் தர்களையா. 2

### அருள்நெறிவிளக்கம்.

* ஓது நீதியு மொழுக்கமும் விழுப்பமு முடலழி தருபோழ்து, மேது மொன்றசை வின்றிய நிலைமையும் யானென நினையாது, மோது ஞானமு மமுதசீ லமுமொழி $ விரதமு முடையோர்க, ளாதி யாகுநல் லவர்களாத் தர்களென வறைகுவர் பெரியோரே. 3

$ விரகது என்றும் பாடமுண்டு.

### ஞான்சூரியன்.

* உடலை யொண்பொரு ளினையுல கியல்பினை யுயர்குல நெறிதன்னை, யடையு மைந்தர்தாய் தந்தைநன் மனையென வறைதரு மிவர்தம்மை, விடவிகழ்ந்திறை கழலிணை மருவிய விமலர்தங் களையெல்லா, முடைய நன்குறு மொழிமறை முனிவர்க ளுரைப்பராத் தர்களென்றே. 4

### தத்துவாமிர்தம்.

மறைக ளாகம முதற்கலை முழுமையு மயலற மிகவோதிக், குறைவி லாவகை பொருடனை மதுரமாக் கூறவல் லவரேனு, நிறைவ தாகிய பொருளினுக் குத்தகு நிலையவ ரிலராகி, லறைவ தாகிய வவர்மொழி யாத்தவாக் கியமென வறையோமே. 5

### அநுபவசித்தி.

இறைக ணன்பினை யுரைசெய்து தாமிறைக் கன்பது விலரேனுந், துறவு நன்றென வுரைசெய்து துறவினி னிலைமைப திலரேனுங், கறைக ளென்றுள செயல்களின் மூளுமக் கருத்தறு கிலரேனு, மறையி னன்குறு மவர்மொழி யாத்த வாக் கியமென வறையோமே. 6

### பூரணப்பிரகாசம்.

தேய்வ வாணிநற் செந்தமி ழியலிசை தெரிந்துபா டைகளும்போய், மெய்ய தாகவெப் பொருள்களும் விளங்கிட விளம்பவல் லவரேனு, மையி லாவகை மொழிவதொன் றவர்செயன் மருவலொன் றெனிலஃதை, யைய மூவரின் முதல்வரே மொழியினு மாத்தவாக் கியமென்னார். 7

### ஞானசூளாமணி.

ஆத்த வாக்கிய மருமறை யாகமப் பொருள்களின் முடிவாகச், சீர்த்த நற்சொரு பானு பவத்தினைத் திகழ்த்திடு மதனாலே, யார்த்த வாயிரங் கோடிநூல் களினவ ரமுதமாமொழியொன்றைப், பார்த்து மாசினற் பரமதாய் வாழலாம் பழுதற விதுமெய்யே. 8

---

### குறுந்திரட்டு.

தோன்றும் யாவும் நிலையா தொலைதலிற்
கான்ற சோறென யாவையுங் கைவிட்டுச்
சான்ற தாந்தமைக் கண்டவர் தம்முரை
யான்ற வாய்மை யருமறை யாவதே. 9

பார்த்த பார்த்ததெல் லாம்பர மாகிய
தீர்த்தன் மேனி யெனத்தெளி வுற்றவர்க்
கார்த்த ரான வவரரு ளிச்செயும்
வார்த்தை யேநல்ல மாமறை யாவதே. 10

சோகப் பந்தந் துறவுசெ யாதே லறமின்றே
லாகத் தந்தக் கரணந் தன்னை யடக்காதேற்
பாகச் செஞ்சொற் பனுவல்க ளேனும் பழுதாகுங்
காகத் தின்கத் தென்பர்கள் கல்விக் கரைகண்டோர். 11

வரும்பர நெறிதேர் விலரேனு மாய வாழ்க்கை நிலையாக
விரும்பா திறைவன் பதநோக்கி யிருப்புற் றோது மெய்ம்மொழிக
ளிரும்பா முள்ளத் தவருங்கேட் டின்புற் றென்பெல் லாமுருகி
யரும்பா வங்கங் கண்பனிவந் திடுமே லாத்தர் வாக்கியமாம். 12

சிவானந்தநிலயம்.

திகழு மாத்தவாக் கியத்தொரு மொழியினிற் சித்தி யாம் பொருள்போலப், பகரு மாகமப் பரப்பெலா மோதினும் பலிக்குமா றதுமுண்டோ, புகழுந் தேசிகன் புரணபூ ரணக் கழற் பொற்புடை யமுதுண்டோர், மகிழும் வாக்கிய மாதலா லம்மொழி மகிமையை யறிவாரார். 9

மறைக ளீறுட னாகம முதற்கலை மதித்தறைந் திடு போழ்திற், குறைவி லாவகை கேட்பவ ருடலுளங் குறியழிந் ததுமுண்டோ, வறைவ தாகிய வாதவூ ரன்முத லாத்தவாக் கியங்கேட்கிற், கறையி லாவுள முடல்கனன் மெழுகெனக் கரைந்தவர் கண்டீரே. 10

ஆத்தருரைச்சிறப்புமுற்றிற்று.

ஆகச் செய்யுள் - 52.

## 6. நூற்பெயர்.

அருமறை யாக மங்க ளாத்தவாய் மொழிக டம்மின்
மருவுதாற் பரிய மெல்லாம் வகைபட வுணர்த்தி யின்பந்
தெரிவருஞ் சிவத்தை யுந்தான் றிகழ்த்தலாற் றிரட்டி னுமம்
பொருவினற் சிவப்பிர காச மென்னவே பொலியு மன்றே. 1

ஆகச் செய்யுள் - 53.

---

திருந்திரட்டு.

நூற்பெயர்.

நாலு மாமறை யாகமப் பொருளதாய் ஞானநூல் பலவாய்ந்து
சில மார்தரு தேசிகன் றிரட்டிய சிவப்பிர காசத்தைத்
தால மானவென் மதிகொடப் பெயரினுற் சுருக்கியான் சொல்வேனென்
யோலு மாந்தர்க ளறிதலும் புரையிலோர் நகுதலும் பொருட்டாக. 13

## 7. அறிஞரைப்புகழ்ந் தவையடக்கம்.

### அவிரோதபோதம்.

பன்னிய மறையீ ருகிப் பனுவற்கட் டளேயின் றன்மை
யுன்னிய வனுபூ திக்க ணுணரும்வா தனையு மாய்ந்த
மன்னிய சிறப்பா லிஃதின் வான்பொருள் கொள்வர் நல்லோர்
துன்னிய குற்றந் தேடிச் சொல்லுவர் சிறியோ ரன்றே. 1

நற்பொரு ளெங்குங் கொண்டு நன்றலா † தெங்கு நீக்கி
யற்புத வண்டே யென்ன வரும்பயன் கொள்வ தன்றித்
தற்பொரு ளென்று மற்றைத் தமதலாப் பொருள தென்றும்
பற்பல கூறிக் காதும் பரிசது பெரியோர்க் கின்றே. 2

† தென்று என்றும் பாடமுண்டு.

எடுத்தவெம் மதமெந் நூல்க ளியாவையுந் தமதா யாங்கு
வடித்தநற் பொருளே கொண்டு வளம்பட மகிழ்வ தல்லாற்
படித்தொரு பொருளைப் பற்றிப் பாங்கினு லதிலொ துங்கிப்
பிடித்தது பிடித்துக் காதும் பேதைமை பெரியோர்க் கின்றே. 3

### ஞானமிர்தம்.

உரைசால் பகுதிப் பெரியோர் போலத்
தமிழ்த்துறை நிரம்பாத் தன்மை யேனை
யறத்தின் விருப்புச் சிறப்பொடு நந்தப்
பாப்புனை பான்மை நோக்கினன் வலித்துழி
யெழுதாக் கேள்வியுங் கேள்வி பழிவா
ழேனோர் கேள்வியுங் கேள்வி மாண
வருபடை தாங்கிய கிளர்தா ரகலத்
தெறிவே லிளைஞர் போலப் பொறிவாழ்
புலப்பகை தாங்கிப் பிறப்பற வெறியு
மறப்பேர் வாழ்க்கையும் வாழ்க்கை திறப்பட
விம்மையும் பயவா தும்மையு முதவாது

செச்சைக் கண்டத் தொத்தான் போல
வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை தாவா
தொருமைத் தன்றே யாயினுஞ் சான்றோர்க்
கெம்முடைப் புன்சொற் றம்முடைச் சிறப்பே, அதனால்
அவரினு மளியமற் றியாமே கவரா
வேறோ ரளிக்குந் தானீ றின்றே, அவரே,
தம்பா டெய்த றம்பா லோர்க்கே
யெம்பா டெய்த விருமையு முடைத்தே
யிவ்விரு பகுதியு மெழுத்துச் சொல்யாப்
பவ்வயி னடைத்தே பொருட்பா டின்றே.

(இ - ள்.) உரைசால்......நோக்கினன் - தமிழினியல்பு நிரம்ப வறியாத வென்னைத் தன்மத்திற் றூற்பரிய மிகவுஞ் செலுத்தலாலே வசனமாகிய பதினெட்டுப் பாஷையையு முணர்ந்த நல்லோரைப்போல ஒரு சாத்திரம் பண்ணு முறைமையைப் பார்த்தேன்;

வலித்துழி - பார்த்தவாறே திகைத்தவிடத்து;

எழுதாக்......கேள்வி - வேதவாக்கியமும் ஒருசத்தம், பழிப்புண்டாக வாழும் பாவகாரிகள் வசனமும் ஒரு சத்தம் ஆதலாலும்;

மாணவரு......வாழ்க்கை - அச்சுண்டாக வருகின்றதூசிப்படையைத் தாங்கிய வண்டின் கிளர்ப்படராநின்ற மாலையை யுடைத்தாகிய மார்பையுமுடையராய்ச் சத்துருபட்சத்தாரையெறியும் வேலையுடைய வீரபுருடரைப் போலச் சுரோத்திராதி (சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை யாக்கிராணம் என்று சொல்லப்பட்ட) இந்திரியங்களிலே வாழுஞ் (சத்தாதி) புலனாகிய பகைகளைத்தாங்கி உற்பீசம், அண்டசம், சராயுசம், சுவேதசம் என்னும் நான்கு வர்க்கத்துப் பிறப்பையும் அறவெறியும் ஞானவான்கள் திருவுளாச் செய்தருளுதலும் வாழ்க்கை, நன்மையுண்டாக இம்மையினுந் தமக்கும் பிறர்க்கும் பிரயோசனமின்றியே மறுமையினுஞ் சுவர்க்க மோக்ஷங்களுக் கிடமின்றியே ஆட்டின் கழுத்தின் அதர்போல உயிர்வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கை ஆதலாலும்;

தாவா......ஆயினும் - கேடெடாத ஒருபடித்தே யாயினும் நன்மை தீமையாயிருந்த பொருள்களிலெல்லாம் ஒக்க வியாபரிக்கும் ஆதலால் இந்தச் சாத்திரம் பண்ண விசைந்தேன்; அதுவுமன்றி;

சான்றோர்க்கு.........யாமே - ஞானவான்களுக்கு எம்முடைய புன்சொல்லுந் தாமருளிச் செய்த நூலுக்குச் சிறப்பாகு மாதலாலே யாம் அவரிடத்தும் அநுக்கிரகம் பெறுதலுடையோம்; (மற்று - அசை).

கவரா......இன்றே - எம்மில் வேறில்லாத அஞ்ஞானிக ளிடத்தும் தமக்கினமாதலால் அநுக்கிரகத்திற்கு முடிவில்லை;

அவரே......உடைத்தே - இந்த நல்லோருந் தீயோரும் பெருமை பெறுவது தத்தமக் கினமானோரிடத்து, யாம் இரண்டு திறத்தாரிடத்தும் அநுக்கிரகம் பெறுதலுடையோம்;

இவ்விரு......இன்றே - இப்படிச் சொல்லப்பட்ட (நன்று தீது என்னும்) இரண்டுவேறுபாடும் (இந்நூலிலுள்ள) எழுத்துஞ்சொல்லும் யாப்பும் அலங்காரமு மென்னும் நான்கு வர்க்கத்துக்குமாம்; இந்நூற்பொருள் பரமசிவனருளிச்செய்த திவ்வியாகமத்தின் பொருளாதலாற் பொருளினிடத்தொரு குறையில்லை (எ-று). 4

சோநபானந்தசித்தி.

தானு காதி யாவையுமாந் தன்மைத் தாய வொருபொருளை
யூனு மென்றன் வாக்கதனு லுண்மை யறிய வுரைத்திடுதன்
மானா கந்தான் மலர்தலையில் வையந் தரிப்ப மற்றதுபோற் [கால்.
பூநா கந்தான் பொறுப்பனென்னும் புன்சொற் போலும் புகலுங்

அறிஞரைப்புகழ்ந் தவையடக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 58.

பாயிரப்பகுதி முற்றிற்று.

# 2. இதப்பவண

## 1. இதோபதேசம்.

### வினாவிளக்கம்.

அறிவரு முத்தி மார்க்கத் தரும்பொரு ளவற்றை யெல்லாங்
கறையற மொழிவ தாகக் கருதிநற் கருணை யாலே
செறிதரு முயிர்க ளின்பஞ் சேர்ந்திடத் தெளிந்தோர் கூறும்
நெறிதரு மிதோப தேச நெறிமைய தறைவன் மைந்தா. 1

### மெய்ம்மொழிச்சரிதை.

சத்திய முரைக்க நாளுஞ் சகலபல் லுயிர்கட் கெல்லாம்
நித்தலு மிதமே செய்ய நினைப்பது சிவத்தை யென்று
மத்தன்வே தாக மத்தி னருளிய பொருளிம் மூன்று
மெத்திறச் சமயத் தோர்க்கு மெம்மதங் களுக்கு மிட்டம். 2

நன்றிடு மாயி னெஞ்சங் கண்டவா றுண்மை யேனு
மன்றது சத்தி யந்தா னசத்திய மாயி னுங்கே
ணன்றது பிறருக் † கெண்ணி நாளுநற் சத்தி யந்தா
னென்றுமுன் னல்லோ ரெல்லா மெடுத்துரை செய்த தன்றே. 3

† கன்றி என்றும் பாடமுண்டு.

என்றுமெவ் வுயிர்க ளுக்கு மிதஞ்செய்கை தனக்கி தங்காண்
கன்றிடும் வயிரி யேனுங் காப்பது தனைத்து றந்து
நன்குணர்ந் தோர்க்கீ திட்ட நானிலத் தருளி லாதோர்
கொன்றிடு மாகிற் றன்னைக் கொல்லென்பர் பசுவு மன்றே. 4

‡ தன்னைத்தா னோக்க வெண்ணித் தான்பிறி தொன்றைக் கொல்வான், றன்னைத்தான் கொல்லுகின்றான் றன்னுயிர் விடுத்து மொன்று, தன்னைத்தான் கொல்லா தான்காண் டன்னைமுன் னோக்குகின்றான், றன்னைத்தா னோக்கு கின்ற தத்துவ ரிட்ட மீதால். 5

‡ தன்னைத்தான் காக்கவெண்ணிற் றான்பிறி என்றும் பாடமுண்டு.

கொல்லுதல் கொலைதா னிற்கக் குவலயத் தோர்க்க திட்டஞ்
சொல்லுத னினைத்தல் செய்தல் † சுத்தமே கொன்றோன் மற்றுங்
கொல்லுதல் சாத்தி ரங்கள் கூறுமா சாரத் தட்டுச்
சொல்லுத ரூறு மென்றே சொல்லுவர் நல்லோ ரெல்லாம். 6

† சுற்றமே என்றும் பாடமுண்டு.

கொல்லாதான் றன்மந் தன்மேற் கூறின்மற் றில்லைத் தன்மங்
கொல்லாதான் செல்வந் தன்மேற் குவலயத் தில்லைச் செல்வங்
கொல்லாதான் றுறவு தன்மேற் கொள்ளலாந் துறவு மில்லைக்
கொல்லாதான் ஞானந் தன்மேற் கூர்த்தமெய்ஞ் ஞானமில்லை. 7

## நன்னெறிவிளக்கம்.

கூறுக வாய்மை கோறல் களவுகட் காமம் பொய்ம்மை
மாறுக வெவர்க்குந் தம்மால் வல்லவா பகுத்தே யுண்க
வாறுக வாசை யைந்து மடக்குக வறிஞர் சொற்க
டேறுக விதுவே முத்தி செறிவுறு நெறியு மன்றே. 8

நீக்கமி லவாவறுக்க நிலையாமை முழுதுங் காண்க
வாக்கினை வருந்திக் காக்க மன்னுயிர்க் கிதமே செய்க
தாக்கிய தனக்கின் னாத தான்பிறர்க் கொழிக வென்று
மாக்கமு மறிவுஞ் சேரு மழகுறு நெறியி தன்றே. 9

நற்றவர் தம்மைச் சேர்மி னல்லவாஞ் சித்த மஞ்சிப்
பெற்றதி லமைந்து வாழ்மின் பிறர்பொருள் வெஃகாதேய்மின்
மற்றவர் நலமுந் தீங்குந் தம்மில்வந் தனபோற் காண்மின்
கற்றவ ரெல்லாம் போன கருதரு நெறியு மீதால். 10

தம்மின்மூத் தோரை யெல்லாந் தந்தைதா யெனவே காண்க
தம்முடற் கிளையோர் தம்மைத் தமதுபுத் திரர்போற் காண்க
வெம்மத மென்ன வேண்டா மெங்குநன் குளதே கொள்க
செம்மையொன் றுணரிற் றம்மைத் தெளிவுற நெறிவேறின்றே.

கொலைமுதலைம் பாதகமுங் கோதறவே தமையுணரா தவர்க்
குண் டெங்ஙன், சலமறுசே தனவடிவைச் சடவுடம்பாக் கலிற்
கொலைதன் மயக்கங் கள்ளா, மலைமனமா திகளெனதென் றிடல்
களவச் செயல்செய்தே னென்றல் பொய்யா, நிலைப்பதென ‡ வுடம்
பொடுறை காமமைப்பா தகமுணர்ந்தோர் நித்தசுத்தர். 12

‡ உடம்பொடுறு காமமென்றைம்பா என்றும் பாடமுண்டு.

### மெய்ம்மொழி.

நினைத்திடுஞ் சிவத்தை நீதா னென்றவப் பொருளைச் சொல்லி
னனைத்துயிர் தனக்கி ரங்கு மருளுடை யறிவ தேகாண்
மனத்திலே யருளை வைப்பான் மாசிலாச் சிவனு மானு
னினைத்துநீ தயாவின் கண்ணே நித்தலு நின்றி டாயே. 13

### அஞ்ஞானநிவிர்த்தி.

தொடுத்ததொடை முடியுமெனுந் துணிவுகண்டீர் சோம்பி யலம் வந்துலர்ந்து தூங்கிடாதே, யடுத்தகரு மங்கடமை யத்தற் கென்றே யாதரத்தா லருச்சனைசெய் தருளும் பெற்று, முடித்து விடை கொடுத்துமன முதலுக்கெல்லா மோனமெனும் பெரும் பதத்தே முனிந்திருந்து, நடித்தவுல கனைத்தினையு ஞானத்தாலே நம்மிலிலை யென்றறிகை நன்றுகாணே. 14

### திருவாய்மொழி.

வீடுமின் முற்றவும் வீடுசெய் தும்முயிர்
வீடுடை யானிடை வீடுசெய் மின்னே. 15

மின்னி னிலையில மன்னுயி ராக்கைக
ளென்னு மிடத்திறை யுன்னுமி னீரே. 16

நீர்நும தென்றிவை வேர்முதன் மாய்த்திறை
சேர்மி னுயிர்க்கத னேர்நிறை யில்லை. 17

இல்லது முள்ளது மல்ல தவனுரு
வெல்லையி லந்நலம் புல்குபற் றற்றே. 18

அற்றது பற்றெனி லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே. 19

பற்றில னீசனு முற்றவு நின்றனன்
பற்றிலை யாயவன் முற்றி லடங்கே. 20

அடங்கெழில் சம்பத் தடங்கக்கண் டீச
னடங்கெழி லஃதென் றடங்குக வுள்ளே. 21

உள்ள முரைசெய லுள்ளவிம் மூன்றையு
முள்ளிக் கெடுத்திறை யுள்ளி லொடுங்கே. 22

ஒடுங்க வவன்க ணொடுங்கலு மெல்லாம்
விடும்பினு மியாக்கை விடும்பொழு தெண்ணே. 23

### அப்பர்சுவாமிகள் தேவாரம்.

### திருப்பாட்டு.

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரேற்
புனிதன் பொற்கழ லீச னெனுங்கனி
யினிது சாலவு மேசற் றவர்கட்கே. 24

உரைத ளர்ந்துட லார்நடுங் காமுன
நரைவி டையுடை யானிட நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே. 25

---

### குறுந்திரட்டு.

உடம்புடை யோர்கட் குளதாவ தென்று
மிடும்பை யேயின்ப மிலதென் றுணர்க
மடம்படுஞ் சனன மரணநோய் தீரத்
திடம்படு முத்தியே சேரச்சிந் திக்க. 14

பகவனைப் பேணுக பல்லுயிர்க் கெல்லா
மகவெனப் புரிகநல் வாய்மை யோம்புக
தகவெனப் பெரியவர்ச் சார்க சந்தத
மிகவினைக் கஞ்சுக வெகுளி யாறுக. 15

உலையா வவாவொழிக வோதிமம் போலக்
கலையாப் பொருடெரிந்து கைக்கொள்க வொன்று
மலையா தொழிக மறவற்க யாது
நிலையா ததுநன் னெறியொழுகி வாழ்க. 16

பொன்றினும் வெஃகா தொழிக பிறர்பொருளை
நன்றி மறவற்க நன்றல் லவைமறக்க
வன்றினர்க்கு மாவதே செய்க வகிலத்தி
லொன்றினு மூன்றூ தொழிக வுளதுணர்க. 17

காயத் தாலுப கார மாம்பயன்
வாயத் தாற்பயன் வாய்மை யுள்ளவா
றூயத் தம்மனத் தாற்பய னற்றவர்க்
கீயத் தம்பொரு ளாற்பய னென்பதே. 18

வந்திக்க குரவர் தம்மை வாய்மொழி விரும்பிக் கேட்க
சிந்திக்க வநுப வத்திற் றெளிகவிப் பொருளே தீய
பந்தித்த பிறவி தீரப் பரமஞா னிகளும் பண்ணு
மூந்தித்த மறையுந் தேவர் மூவரு மொழிந்த தன்றே. 19

திருவாசகம்.

பற்றுங்கவை யற்றீர்பற்றும் பற்றுங்கது பற்றி
நற்றுங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
றெற்றூர்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றுங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. 26

புகவே வேண்டாம் புலன்களி னீர் புயங்கப் பெருமான் பூங்
கழல் கண், மிகவே நினைமின் மிக்க வெல்லாம் வேண்டா போக
விடுமின்க, ணகவே ஞாலத் துள் புகுந்து நாயே யனைய நமை
யாண்ட, தகவே யுடையான் றனைச் சாரத் தளரா திருப்பார்
தாந்தாமே. 27

தோன்றி.

கூறிய பொருள்கட் கெல்லா மொருபொரு டெரியுங் காலைத்
தேறிநீர் தெளிந்து கொண்மின் றெய்வந்தா னதுவி தென்பீ
ராறியுட் டெள்ளி நின்று ரடிதொழு தெழுந்தீ ராயின்
மாறுமிப் பிறவி யுங்கட் கரிசற மறுக்கு மன்றே. 28

இதோபதேசம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 86.

## 2. அருமையுரைத்தல்.

மெய்ம்மொழிச்சரிதை.

எல்லையி லறிஞ ரெல்லா மின்புற வறிஞர் கூறு
நல்லவா மிதோப தேச நற்பொருண் முடிவா யுள்ள
சொல்லரு மீசன் பொற்று டொடர்வுறு மருமை யெல்லா
மெல்லவே முறைமையாக விளம்பிட விரும்பிக் கேண்மோ. 1

சிவவாக்கியம்.

புல்லையாதி தாவரம் புகன்ற கோடி யாயிர
மெல்லவே பிறந்திறந் திளைத்து வீடு மேறினு
லெல்லையில் லனந்த கோடி யோனியேறி யிங்ஙனே
நல்லயோனி மானுடத்தை வந்து நண்ணு நன்மையால். 2

பிறந்ததா வரத்தினிற் பிழைத்த லெங்ங னென்றிடிற்
சிறந்ததேவர் சித்தர் பத்தர் சேய்பசுக்க ளந்தணர்
துறந்தமேனி யோர்க டய்த்தல் சூழ்தன் மேய்தல் சேர்தலா
லுறைந்ததா வரத்தைவிட் டுடம்படைந்த யோனியாம். 3

ஏன்றதா வரத்தினின்ற யோனி யெங்ங னென்றிடி
னன்றுதீ தெனுங்குணங்க ளூடும் வந்து நண்ணலாற்
றின்றல் கோறல் சேர்தரேச மேவல் செய்யயோனியு
மன்றன் மாலை யன்னமா னுடத்தை வந்து பற்றுமே. 4

மெய்ம்மொழி.

எண்பத்து நான்கு நூறு யிரத்தினும் பிழைத்தங் கேறிப்
பண்புற்ற மனித னாகிப் பாரிடைப் பிறக்கும் பான்மை
திண்பெற்ற தென்பால் வீரைச் செறிநுகத் துளையி னூடே
வண்பெற்ற வடபால் வீரைக் கழிசெல மருவு மாபோல். 5

கோலையினி னுணவால் வாழ்ந்து குறிச்சியாய்த் திரண்டு கூடிச்
சிலையினி னுயிரைக் கொன்று தின்பவர் தேசந் தப்பி
வலையினி னுணவின் வாழ்வார் கூட்டமும் வழுவி மன்னு
வலையுநீர் நாடு சேர்வா னதனினு மருமை யாகும். 6

சுனையினின் மண்ணீர் வாரித் தூம்பினிற் றெளியத் தேற்றி
மனையினிற் புதைத்துக் காக்கு † மருளில்கா னகமுந் தப்பி
வினையினின் வெப்பு மாறி விரவுநா டதுவும் விட்டு
நனையுநீர் நாடு சேர்வா னரபதி யருமை யாகும். 7

† மருநிலக்களமுந் என்றும் பாடமுண்டு.

நல்லநீர் மண்டிப் பாயு நாடக நண்ணி னாலுஞ்
சொல்லிய சாதி நான்கிற் றோன்றுத லருமை யாகு
மெல்லவே தோன்றி னாலும் வேதியர் குலத்தைச் சார்வா
னல்லியங் கோதை மன்னு வதனினு மருமை யாகும். 8

அந்தணர் குலத்துட் டோன்றி யரசர்க்குத் தூத ராவர்
புந்திகெட் டயலே நின்று பொருட்டிறம் புலைய ராவ
ருந்திமா வோட்டி ‡ யோட்டி யுடறுணிப் புண்டு வீழ்வ
ரிந்தவன் னெறியைத் தப்பு மீதுபே ரருமை யாகும். 9

‡ வெட்டி என்றும் பாடமுண்டு

சாதிவே தியனாய்த் தோன்றிச் சகலசாத் திரமுங் கற்று
வேதபா ரகனு மாகி விளங்குத லருமை யாகும்
வேதபா ரகனா னாலும் வேட்டலுந் தண்டிகைக்கு
மோதுநூல் காட்டி யுண்ணா தொழிவது மருமை யாகும். 10

வேதமுன் மூன்று மோம்பி வேதபா ரகனா னாலுஞ்
சுந்தர வேதாந் தத்தின் சுருதிசே ரருமை யாகும்
வந்துவே தாந்தி யானோன் மாயையால் யானெ னாதே
யந்தமெய்ப் பரமானந்தத் தன்புசே ரருமை யாகும். 11

வாய்ந்தமு வகைஞானத்து வைகுவார்கன்ம காண்டத்
தேய்ந்திடு மப்பிரா கிருதர் யோகசித் தத்தாராவ
ராய்ந்திடும் விப்பிரா கிருத ரானந்தான் மாவைக் கண்டே
யோய்ந்துமற் றியாவும் விட்டோ ருலகினி லரிய ரேகாண். 12

ஆனந்தபோதம்

சனித்திடுஞ் சராச ரத்திற் றன்மிக வரிய தொன்றே
மனித்தரா யறிவுண் டாகை மற்றிதி லரிய தென்று
மனித்தமி றன்னை யாயு மறிவதி னரிய தையா
வினித்தமா வின்பங் காண்பா ரியாரினு மரிய ரன்றே. 13

அருணெறி யறிந்து சார்வா ரவர்களா யிரத்தி னொன்றுங்
குருநெறி யறிந்து சார்வார் குருநெறி கூடி வாரிற்
பொருணெறி யறிந்து சார்வார் புகலினா யிரத்தி னொன்றுங்
கருநெறி கடக்கின் றுறைக் காணமற் றரிதே யன்றோ. 14

ஞானசாரம்.

நல்லவா முலக னூல்க ளோதினு ஞான நூலைச்
சொல்லுவா ரரிது சொன்னாற் பொருட்டுணி வரிது தேர்ந்து
சொல்லவப் பொருளை வாயாற் செப்புவ தரிது செப்ப
வல்லரே யெனினு மற்றப் பயன்றுய்ப்பா ரரியர் மன்னோ. 15

பெறுதற் கரிது துறவதினும் பெறுதற் கரிது நல்லறிவஃ, அறுதற் கரிதிவ் விரண்டொருவ னுற்றோன் றன்னைத் தெரிந் தொருவன், செறிதற் கரிது செறிந்தவன்பாற் சிறந்த ஞானங் கொளற்கரிதா, மறிதற் கரிய தறிந்தாலு மறிவின் றன்மை வர லறிதாம். 16

பரமார்த்ததரிசனம்

மாயு மாயைமறை யாத நெஞ்சினிடை மற்றெ னுண்மை யினை வாய்மையா, லேயு மாறுற வறிந்து ளோர்களறி யாத தொன்றுமிலை யென்னினும், மாயு மானுட ரனேகர் பாலொருவ னென்னை யாயுமனம் வைத்துளா, ராயு மானுட ரனேகர் பாலொருவ னேயறிந்து முடிவா னையா.

மெய்ம்மொழி.

தேசிக ரனந்தர் தத்தஞ் சிசுக்களு மனந்த மாகும்
பேசிடிற் பலமு மங்ஙன் பேதையாம் பெருங் கடற்கு
ளாசிலா வின்ப மாய வான்ம தேவனுக்கே காண
வாசிதா னுள்ள தையா மற்றவர்க் குரைக்க வுண்டோ. 18

---

குறுந்திரட்டு.

நிற்பன வாம்பவ நீங்கி யோடக்
கிற்பன வாம்பவங் கிட்டிக் கேள்வியா
லற்புத மாமறி வ்ஃதியு மாநுடத்
துற்பவ வருமையிங் குரைக்க லாகுமோ. 20

ஒளிமணி யெறிதிரை யுவரி யொன்றிட
வளையெறி யுவரிமற் றொன்றில் வானுகத்
தொளைவழி கழிசெறி வென்னத் துர்லபம்
வளமிகு மாநுடப் பிறப்பு வாய்த்தலே. 21

தின்ன லாதியே சிந்தைசெய் விலங்கெனத் திரிவா
ரின்ன லாகிய தேயம்விட் டிலங்குநீர் நாட்டுச்
செந்நெ லார்வயற் பதியினிற் செல்வநற் குலத்துப்
பன்ன லாளரிற் பிறக்கையிப் பாரிடத் தரிதால். 22

சாதி யந்தணர் குலத்தினிற் பிறப்பினுஞ் சடங்கே
யோதி யங்கிருந் தொழிற்படா தும்பரிடத் தோது
மாதி யந்தமி லரும்பொருள் விருப்பரி தருளும்
வேதி யன்றனை விரும்புத லதில்மிக வரிதே. 23

சீரிய குருவினைச் சேர்த லுர்லபங்
கூறிய வறிவவன் கொடுத்த லுர்லபம்
நேரிய பொருணிகழ்த் திடினு நெஞ்சிலே
யாரிய னிலைவர லதுவுந் துர்லபம். 24

அறியலாம் புண்ணியங்கள் பண்ணிடு மவரை யெல்லா
நெறியினான் மந்திரத்தி னிட்டரைக் காண லாகுஞ்
செறியலா மியோகத் தாலே திரிகாலம் வஞ்சித் தாரை
யறியொணா தரிதா மென்று மான்மவே தகனை யையா. 19

சோல்லுஞ்சாத் திரமெங் கேனுஞ் சுருதியின் சொல்லெங் கேனும்
நல்லுல கிற்கி லேச மதுவுமெங் கேனு மாகும்
பல்லுரை யில்லா வின்பப் பரமுமெங் கேனு மாகு
நல்லுரை நாடிக் காண்பார் நானிலத் தெங்கே யெங்கே. 20

ஞானசாரம்.

துன்பத்தை யின்ப மென்றுந் தூய்தின்மை தூய்மை யென்று
மின்பத்தைத் துன்ப மென்று மில்லதை யுள்ள தென்றும்
புன்புற்ற நன்மை யென்றும் பொன்றுவ பொன்றா வென்று
மன்புற்ற வுலகர்க் குண்மை யுரைத்தல்போ லருமை யுண்டோ.

அருமையுரைத்தல் முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 107.

இதப்பணை முற்றிற்று.

# 3. பரமர்திறப்படலம்.

## 1. வன்னாச்சிரமம்—அதிவன்னாச்சிரமம்.

### வினாவிளக்கம்.

அரியதா மானுடத்தி லரியநால் வருணந் தானும்
பெரியவாச் சிரம நாலும் பேணிடு முண்மை தானு
முரியதா மவைக டந்தங் கொண்பொரு ளுணர்ந்தோன் றன்மை
தெரியுமா றதனை யுந்தான் றேவினை திகழ்த்த வேண்டும். 1

### பரமார்த்ததரிசனம்.

கறைசெணயம் புலன்களைக் கரண நான்குடன்
றுறைதுறை யடக்கலுந் தவமுந் தூய்மையும்
பொறையொடு கல்வியும் பொருந்து ஞானமு
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டவே. 2

தலைமையுங் கொடையொடு தறுக ணாண்மையு
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுஞ்
கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமையுஞ்
சிலைமலி தோளினு யரசர் செய்கையே. 3

உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிபம்
வழுவறச் செய்கைதொல் வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள்வே ளாளர்க் கென்பவே. 4

அடுத்த † தன் றொழில்செய் யாதாற் கறிவிலை யறிவினருக
விடுத்தமெய் யுணர்வின் றுமான் மெய்யுணர் வில்லை யாகிற்
தொடுத்தபின் சித்த சாந்தி தோன்றிடா ததுதோன் றுதே
லெடுத்தநல் லின்பந் தானு மில்லையென் றிசைக்க வேண்டாம். 5

† அடுத்தலைம் புலன்செ யாதார்க் கென்றும் பாடமுண்டு.

## மெய்ஞ்ஞான நிலயம் (பரமானந்ததரிசனம்).

இரவுண லெண்ணெய் சாந்த மேழையர் கலவி மற்றும்
விரவறப் புலன்கள் வென்று வேத மங்கந் தரித்து
மருவுமுப் போது நிட்டை மாசிலூண் பிச்சை கொண்டு
பரவுநற் பிரம சாரம் பகர்ந்தநன் மறைக ளன்றே. 6

சடையென மயிர்பே ணாது தரைகிடை யுணவு பிச்சை
யிடைதரு விடய மெல்லாம் விடமென விரவ லின்றி
யடைதரு பிரம சார மறைந்ததி னொன்று தப்பிற்
கடுநர கூறுவ ரிந்தக் காசினி யளவு மன்னே. 7

துறந்தவர் மூவர் தேவர் துளக்கமில் பிதிரர் நோய
ரறந்திகழ் விருத்தர் பால ரயலாரந் தணர் விருந்தர்
சிறந்ததாய் தந்தை சுற்றந் திருத்தமுங் கற்பின் மிக்க
வறந்தரு மில்லா ளோடு மருந்தலில் லறம தன்றே. 8

கொலையொடு களவுகட் காமங் கோபமென்
புலைகடிந் தைவகைத் திறமும் போக்கிநன்
னிலையினி லுறுவது வழுவி னில்லறம்
‡ புலையுறு நரகிடை போக்கு மல்லவோ. 9

‡ அலையுறு நரகிடை யடைக்கு மல்லவோ என்றும் பாடமுண்டு.

தனமுத றுறந்து கானத் துறைந்துசா காதி யூணாய்
நினைவருந் ¶ செபந்தி யான நிட்டனாய்ப் புலன்கள் வென்றே
பனிவெயி றமிற்ப தைத்தும் பஞ்சவங் கியுட் டவித்தும்
வனசராய் முபலும் வண்ணம் வழுவின்மா நிரய மாமே. 10

¶ சிவத்தியான என்றும் பாடமுண்டு.

தரித்தவச் சிகைநூன் மாற்றித் தரித்துச்செங் துகிலுந் தண்டும்
புரித்தநற் கலைக ளோதிப் பொழுதுமுக் காலு மூழ்கிச்
சரித்தவப் பிச்சை யூணாய்ச் சகலமு மீசற் கர்ப்பித்
திருத்தல்சன் னியாசந் தப்பி னெலையிலா நிரய மன்றே. 11

உத்தமர் மத்திம ரதம ராமென
வித்திற மூவரா மிவரைக் கூறிடி
னுத்தமன் மறையவ னதமன் வாணிபன்
மத்திம னரசனென் றறையு மாமறை. 12

மறையவன் மறையவ ரரசர் வாணிபர்
குறைவறு சூத்திரர் தமக்கு நற்குரு
வறமுய லரசனக் குலத்துக் கீழுள
துறைகளி னவர்க்குநற் குரவன் றாசற. 13

சொன்னவவ் வதமனும் வணிகர் சூத்திரர்
நன்னய வவரவர் தமக்கு நற்குரு
மன்னிய வவரவர் தமக்கு மேலவர்க்
குன்னிய குருவல ரொளிரு மேதையாய். 14

ஒளிமிகு முருவினுய் மகளிர் சூத்திரர்
களிமிகு குருத்துவ மறைவு றுமறை
வளமிகு குரவர்தம் வகைமை யின்னமுங்
கொளவுள மகிழ்செயக் கூறக் கேளெனு. 15

ஏதம தறமுய லில்ல றத்தவ
ரோதிய பிரமசா ரிகள்வ னத்தவர்
கோதறு துறவரென் குலவு நால்வரை
யோதிய மறைமுறை யுணர்த்த நீயுணர். 16

---

## குறுந்திரட்டு.

சாதப்படு பூதங்களி லுயிருள்ளவை தலையா
வோதப்படு முயிருள்ளதி லுணர்வுள்ளன வெல்லா
மேதக்கன வுணர்வுள்ளதின் மேலானவர் நரரே
கோதற்றவர் நரரிற்றிகழ் குலநான்கி லுதித்தார். 25

நலங்க ணான்கினும் பெரியர்வே தியர்களக் குலத்தி
லிலங்கு வார்கள்கற் றவர்கண்மற் றவர்களிற் பெரியார்
நலங்கொள் கல்வியின் பயன்கொள்வா ரவரினு நல்லார்
புலன்கொ ளப்பிறர் பொருண்மையைப் பனுவலிற் புனைவார். 26

கலைவ லாளரிற் கசடறத் துறந்தவர் பெரியர்
குலவு மத்துற வரிற்றலை குடீசக ரவரிற்
றலைவ ராகுவர் பகூதகர் பகர்ந்தவம் முறையே
தலைவ ராகுவ ரமிசரும் பரமமி சருமே. 27

### வினாவிளக்கம்.

சன்னி யாசி தகவுடை நால்வர்க்கு
மன்ன வேகுரு வாரும் வனத்தவ
னுன்னின் மற்றவர்க் கோங்கிய நற்குரு
பின்னா ளோர்களு மவ்வகை பேணிடே. 17

விச்சையின் மிகுதி யாலும் விளங்கிய வொழுக்கத் தாலு
முச்சனாங் கீழோ னென்றே யுயர்ந்தவத் துறையி னுள்ளோ
ரிச்சியா நிற்பர் கீழோர் தமைக்குரு $ வாக்கு மிக்கோள்
விச்சையான் மொழியி னல்லால் விளம்பினற் கிரம மன்றே. 18

$ வாக வேகோள் என்றும் பாடமுண்டு.

* அத்தி யாச்சிர மத்துறை யற்புத
ரெத்தி றத்தவர்க் கும்மிவ ரேகுரு
வெத்தி றத்தவ ராயினு மிங்கவர்க்
குத்த மத்தரொன் றானுமின் றாகுமால். 19

### மெய்ஞ்ஞானநிலயம்.

விதிவன் னாச்சிர மத்தவர் தங்குறி
பொதுவ றப்புவி யெங்குமுன் கண்டன
மதிவன் னாச்சிர மத்தவர் தம்பரி
சிதுவெ னாத்திகழ் வித்திடெம் மீசனே. 20

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

சாக்கி ராதிக ளின்றி யெவற்றினு
நீக்க மில்லறி வாகி நிமலமாய்த்
தாக்கி யாவையுந் தாக்கறு சோதிதா
மாக்கு வாரதி வன்னாச் சிரமரே. 21

* பூத பௌதிக மாய்ப்பொலி பேதமு
மேத மின்றி யிருஞ்சிவ மாய்விடப்
போத மாமனு பூதியிற் கண்டவ
ராதி யாமதி வன்னாச் சிரமரே. 22

* வன்ன மாச்சிர மம்மவற் றின்குறி
யென்ன லாமொழுக் கத்தியல் பானவை
யின்ன தென்றிவ னுக்கொன் றிலாமையி
னன்ன வன்னதி வன்னாச் சிரமியே. 23

* வார ணஞ்செயுட லிந்தி யாதியென வந்த காரிய வுபாதி போய்க், கார ணஞ்சகல வத்து விற்குமிறை யென்ற கார ணவுபாதிபோய்ப், பூர ணஞ்சுகமெய்ப் போத நம்வடிவெனத் தெ ளிந்தவனு பூதியா, ரார ணம்பகரும் யாவ ரும்பரவு மதி வன் ணுச்சிரம ராவரே. 24

* மைய லாகிய வையத் தினைவெறும்
பொய்ய தாய்விட வேபரி பூரண
மெய்ய தாமனு பூதியிற் கண்டவ
ரைய கேளதி வன்ணுச் சிரமரே. 25

* மதிசெய் மாமறை வன்ணுச் சிரமிகள்
விதிசெய் யாவிடின் வெந்நர கென்றது
† துதிசெய் கின்றதி வன்ணுச் சிரமியோ
ரெதுசெய் தார து வேதவ மென்றதே. 26

† துதிசெய்துற்றதி என்றும் பாடமுண்டு.

விரதம் விச்சைதான் வேண்டிய தேகுறி
யிரத நற்கதி தானல தேதிலைக்
கருதி மற்றொரு கற்பனை யற்றவச்
சரத ருக்குமுண் டோகுறி சாற்றவே. 27

ஆவ தென்பது மல்லது மன்றியோர்
மேவி டும்விதி யோடு நிடேதமும்
பாவ மும்மற னும்பய னும்மிவை
யோவி றன்னுணர்ந் தாற்குமுண் டாகுமோ. 28

வன்ணுச்சிரமம், அதிவன்ணுச்சிரமம் முற்று.

ஆகச் செய்புள்-135.

---

குறுந்திரட்டு.

எதிகள் யாரினும் பெரியரா வியம்புமா மறைக
ளதிவன் ணுச்சிர மத்தவர் தங்களை யவரி
லதிக ராமவ ரொருவரு மில்லையீங் கிவரே
துதிசெ யாச்சுரர் நரர்கள்யா வருந்தொழப் படுவரர். 28

## துறுந்திரட்டு.

மயலாகிய புலனும்வழி மறியாமன முதலின்
செயல்மாள்வுறு தெரியாமையை யுருவித்திக ழறிவும்
வியன்மாள்வுற வொழியாமிகு விழியாலுல கழியா
வயன்மாள்வுற வுரையாகிக ழறிவானறி வறிவான். 29

தோன்றுமெய்ப் பொருளும் பொய்ம்மையே போதச் சொரூபமெய் யெனவனு பவத்திற், றோன்றுமேன் ஞானி யவனிலுத் தமன்சிற் சொரூபமே யாகவெப் பொருளுந், தோன்றுமேற் றோற்றந் தோற்றமில் லாமை தோன்றிடா வின்பமாஞ் சொரூபத், தோன்றலே யாமெனன் றுரைக்குமாஞ் சுருதிப் பொருளெனச் சொல்லுவ ரன்றே. 30

உலகெலா முணர்ந்த விடத்திலே யுறங்கி யுறங்கிய விடத்திலே யுணர்வ, ருலகிலெப் பொருளுந் தம்மினுந் தம்மை யுலகினெப் பொருளினுங் காண்ப, ருலகிலெப் பொருளு மன்றியே தம்மை யன்றியொன் றின்றியே யிருப்ப, ருலகமு முயிரும் பரமுமாய் நிகழ்ந்த வொருபொருளுணர்ந்தவுத் தமரே. 31

இனமுறு புலன்பொறி யியங்குறுபி ராணன்
மனமுதன் முதற்பகுதி மன்னு முயிர் மாயை
யுனவரு பரம்பகர வுற்றமுழு துஞ்சித்
ஈனநிகழ் வெனும்பரிசு கண்டவர்கள் கண்டார். 32

இருமையுல கும்மிடரு மின்பமு மிலங்கும்
பரமுமுயி ருந்துயர்செய் பந்தமொடு வீடுங்
குருவுமுல கும்மிலைய கூறுபடு மெல்லா
மொருபிரம மாமியல் புணர்ந்தவ ருணர்ந்தார். 33

பிள்ளை யாமுனுஞ் சிந்தைசெ யாமையிற் பித்தன்
கொள்ளு மார்வமுங் கோபமு மறுதலிற் கூளி
யுள்ள தன்னுரு வொளித்தலி னுளதுணர் முனிக்குப்
பிள்ளை பித்தன்வன் பேய்நிக ருரைத்தனர் பெரியோர். 34

தாதா வாகு மடைந்தவர்க்குத் தன்னை யீத லாற்பஞ்ச
பூதா கார மிமைப்பொழுதில் விழுங்க லாலே போக்தாவாம்
யாதா னுந்தான் யாவரையு மிரத்த லாலே யாசகனுந்
தாதா போக்தா யாசகனென் றுரைத்தார் ஞானி யைச்சான்றோர். 35

செயலி லோர்செய லின்மையு மொன்றையுஞ்
செயலி லாமையி லேயெச் செயலையு
மயலி லாவகை கண்டவர் வைகலுஞ்
செயலி லேபயின் றுஞ்செயல் செய்கிலார். 36

## 2. ஞானிமகாத்மியம்.

### வினாவிளக்கம்.

ஆதியா மமல னய வதிவன்ஞச் சிரமி தன்மை
யோதியே யடியே னுக்கிங் குய்வகை யுணர்த் துவித்தாய்
நீதியே நிகரின் ஞான நிமலர்தம் பெருமை யின்ன
மேதைசே ரடியார் காண விளம்பியே யருள வேண்டும். 1

### அஞ்ஞானநிவிர்த்தி.

அடியறிந் தாறி யமைந்தவ ரைம்புல வாசமெல்லா
மொடியெறிந் தார்மன முள்ளத் தமுதினை யுண்ணவைத்தார்
முடியெறிந் தார்முன்பு செய்வினை யன்றிமற் றில்லையென்று
வெடியெறிந் தார்வேத வான்பொருள் பற்றிய வித்தகரே. 2

### பரமார்த்ததரிசனம்

காரண மிறந்தொன் றிற்குங் காட்சியிற் படாத தொன்றைச்
சேர்பவர் வருத்தம் வேறு செப்பிட லாவ தன்றே
லோர்வரி திறுதான் வாழு முயிர்களா லாவ தொன்றே
வாரவர் பெருமை தன்னை யளவறுப் பவர்க ளையா. 3

---

### திறுந்திரட்டு.

### ஞானிலக்ஷணம்.

சுத்தமாக வுள்ளதன் சொரூபமே தெளிந்தவன்
முத்தனுகு முத்தனும் மலனிவன் மொழிந்திடிற்
சத்துஞான வின்பமான தற்சொரூப மன்றியோர்
வத்துவின்மை யிற்பிணிக்க மாயைதானு மில்லையே. 37

கண்டவன் கண்படைக் கனவு ணர்ந்தபின்
கண்டதன் னெழியவக் கனவு கண்டில
னுண்டபோற் கண்டவ னுலகு ணர்ந்தபின்
கண்டதன் னெழியவே யுலகு கண்டிலன். 38

சாதி யந்தகர் தாமெனக் காணினுஞ் சகத்தினைக் காணாராய்
வாது சொல்லுமி டத்திலுஞ் செவிடராய் மற்றவர் தமையுண்மை
போது மென்றுரை செய்பொழு தூமரா யுண்மையா யொழிவில்லாப்
போத ரூபராய்ச் சுதந்தா ராகியே யிருப்பர்கள் புரையற்றோர். 39

ஞானிலக்ஷணம் முற்று.

### சமாதி.

கன்றுத லின்றி யாறிக் கழிந்தகா மத்த னாகி
யொன்றவெவ் வுயிருந் தன்னை யொக்கவே யுணரு ஞானி
சென்றதோர் நெறியிற் செல்வன் சென்னிமே லவன்காற் றூளி
துன்றுமேற் சுத்த னாவே னெனுமிது துணிவிற் கொண்டேன். 4

### சொரூபானந்தசித்தி.

* அத்துவி தந்தா னாகு மவிகற்பத் தடைந்த போதே
புத்தியி னினைப்பும் போகும் போகுறிற் பிறப்பு நேரா
வெத்திகழ் வாலும் பேத மின்மையா லிறையே யென்னுந்
தத்துவ வித்தே யென்றன் றலையினால் வணங்கத் தக்கான். 5

### ‡ சமாதி.

ஒழுக்கமே புரிந்தோ னாத லதனைவிட் டொழிந்தோ னாத
லிழுக்கஞ்செய் மூர்க்க னாதல் பண்டித னாத லெண்ணிற்
பழிப்பறு ஞானந் தன்னின் முயல்பவன் பணியத் தக்கோன்
றொழத்தகு ஞானி யென்று சொல்லவேண் டுவது முண்டோ. 6

மன்னனை மனித ரெல்லா மரிமானா தனத்துள் வைத்து
மன்னிய வுபசா ரத்தால் வந்தனை செய்யு மாபோற்
பன்னரு மறையி னந்தம் பயின்றநன் ஞானி தன்னைப்
பொன்னுல கத்திற் றேவ ரிருடிகள் பூசை செய்வார். 7

யாவர்தம் மில்லின் ஞானி யெய்திடு மவனைக் கண்டு
மேவிய பிதிர ரெல்லாம் விரும்பிநின் றாடா நிற்பர்
பாவிய நரக மென்னும் பற்றினை யொருவி யென்று
மோவிலா வீடு பெற்றே மெனவெழு முவகை யாலே. 8

கரையின்மெய்ஞ் ஞான வின்பப் பிரமமாங் கடலி னுள்ளே
யொருவன துள்ள மொன்றி யொடுங்குமே லவனைப் பெற்றாள்
பெரியபே றெல்லாம் பெற்றாள் பேணுமக் குலமுந் தூய்தாம்
பொருவிலோ னிருந்த தேசம் புண்ணிய தேய மன்றே. 9

### மெய்ம்மொழி.

சிற்சொரூ பத்து ஞானி சேர்ந்திட மிகவு மெங்குங்
குற்சிதத் தான மேனுங் கோடிவிற் கிடைக்கு ளெங்குந்
தற்சிவ தானஞ் சுத்தந் தபோவனந் தீர்த்த மாகு
நற்சுடர் புக்கிடந்தா னன்மையாய் விளங்கு மாங்கே. 10

பாத்திர மனைத்திற் சத்தாம் பாத்திரம் பரம்யோகி
யேத்திசைத் திவருக் கீய்ந்த தெவ்வுல குக்கு மாகும்
பார்த்தவிப் பதுமா காரம் பணிந்தவர் வேண்டிற் றீந்தா
லேத்திசை தேவு மற்று ரியோகீசர் தம்மை விட்டே. 11

### சொரூபானந்தசித்தி.

* எல்லாமுஞ் சிவரூப மாகித் தோன்று மியாவனுக்குத் தன்னுடைத்தா யவனே மிக்க, சொல்லாறு மளப்பரியா னவன்றனிச்சை சுருதியினாற் றுணிந்துரைத்த சரிதை தானும், பல்லோரு மவனையருச் சனைசெய் தேத்தப் பரரூபந் தனக்கேற்ற பூசை யாகு, நில்லாத வவிச்சையினை நீங்கி யுள்ள நிர்க்குணனு மவனாகு நினையுங் காலே. 12

### பரமார்த்ததரிசனம்.

யாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மிருள்போற் காணா
ரோதரு ஞானி யத்தை யுளங்கையிற் கனிபோற் காணு
மியாதொரு பொருளை யெல்லா வுயிர்களு மென்றுங் காண்பார்
காதலின் ஞானி யத்தைக் கண்ணினாற் றெரியக் காணான். 13

கண்ணிற் கருதரு மறிவைக் கருதிய வறிவே மிகவரு களிகூர்வோ, னெண்ணிற் றொழிற்ரு பயனுற் றிடும்வகை யிசையாறுதலின் வினையாவும், பண்ணிப் பெறுவதோர் பயனுண் டோவவை பண்ணா துறுவதோர் பழியுண்டோ, மண்ணிற் பிறரிவனிவையுற் றிலனென மதியா ரவைசெய விதியாரால். 14

உணையே முதலா வென்பா லாக்கியென் னுணர்வோர் நாளு
நாணையே விட்டுத் தீமை புரியினு மவர்க ணல்லா
ரேணையே புயத்தா யென்றுங் கேடிலா வின்ப மல்லா
தாணையே யொருகே டில்லை யெங்களு மவருக் கையா. 15

### சொரூபானந்தசித்தி.

* பரப்பி னுலிந்தி யங்களைப் பராக்குறப் பரம்பர னுள்ளாகி, யிருத்த லாலறி வொண்கிலன் புறம்புள ‡ விகாரமே காண்கின்றான், றிருப்பி ஞானநாட் டத்தின லப்பொரு டெரியவே பெறுந்தீர, னொருத்த னேயவி நாசியாம் பரவொளியாயவ னொளிர்கின்றான். 16

‡ விதரமே என்றும் பாடமுண்டு.

எச்சகத் துஞ்சலிப் பிக்குமீ சானனும்
வச்சிரத் தைப்பெறு மனிதன்வீ டுறுமிவற்
கச்சமுற் றங்கிகா லருக்கனிந் திரன்யம
னிச்சயிப் பானதந் தொழில்செயா நிற்பரால். 17

### தோன்றி.

கோதிலா வமுத ஞானி குரைகழல் குறுகிற் கீழாஞ்
சாதியிற் கடைப்பட் டோர்க ளாகிலுந் தலைவ ராவர்
வீதியி லொழுகு நீரு மகழிடை விரவு நீரும்
பாய்தலா னதியி லந்நீர் தீர்த்தமாம் பரிசு போல. 18

அஞ்சையு மறுத்து மிக்கோ ரடிதொழு தெழுவ ராயின்
வஞ்சமா மனத்த ரேனு மதித்துற வணங்க வேண்டுஞ்
செஞ்சடை யொருவன் கண்டஞ் சேர்தரப் படுத லாலே
நஞ்சுமிவ் வுலக மெல்லாந் தொழப்படு நலத்த தன்றே. 19

### மெய்ம்மொழி.

அழுக்குடைச் சாதி யோரு மடையின்மெய்ஞ் ஞானி தன்னை
விழுப்புடன் றலைவ ராவார் வேதகக் குளிகை சேர்ந்த
விழுக்குடை யிரும்பும் செம்பு மிலங்குசெம் பொன்னு மாங்கே
யொழுக்கமோ டவன்றாள் சேர்மி னோங்குவீ டெய்த லூற்றீர்.

இருடிக ளிமையோர் மற்று மியோகத்தால் விடவல் லோர்க்கு
மருடிக ழுடல்விட் டோடா மாயையின் வலியைப் பாரா
யருடிகழ் மெய்ஞ்ஞா னத்தா லாக்கையைப் போக்கி யின்பப்
பொருடிகழ் முத்தி சேர்ந்த புண்ணியர்க் குவமை யுண்டோ. 21

* பலன்கள் வேண்டிலப் பரிசெலாம் பலித்திடும் பரமதத் துவஞானி, நலங்கொ ளுமமா மந்திர நாடொறு நயந்தவ னீராடுஞ், சலங்க டீர்த்தமா மவன்றிரு மேனியே சகலதெய் வமுஞ் செவ்வாய், மலர்ந்த வாசக மறுபிறப் பெனவரு மயற்பிணி மருந் தாகும். 22

ஞானிமகாத்மிய முற்றிற்று.
ஆகச் செய்யுள் - 157.

---

### துறந்திரட்டு.

யாவ னிங்குமெய் யுணர்ந்தவ னவனையே யிமயப்
பாவை தன்னையோர் பாகம்வைத் தவன்பர வுவது
நாவின் மங்கையை நயந்தவ னவில்வது மவனைப்
பூவின் மங்கையைப் புணர்ந்தவன் புகழ்வது மவனே. 40

பண்டை நான்மறை பகருதற் கரியவன் பரந்த
வண்ட நாடரு மனந்தகோ டிகளுமா ரமுதா
யுண்ட நாயக னுருவுதன் னுளத்துளே யடக்கிக்
கொண்ட ஞானிதன் பெருமையைக் கூறுவா ரெவரே. 41

24407

# 3. ஞானிசீலம்.

### வினா விளக்கம்.

ஒப்பிலா வமரர்தங்க ளோதரு பெருமை யெல்லாஞ்
† செப்புநின் றிருவாக் காகுஞ் செழும்பரா வமுதந் தன்னை
யப்பனே பருக மென்மே லார்கின்றிலை யின்னஞ்
செப்பரு மவர்கள் சீலத் திறமெலா மருள வேண்டும்.

† செப்பருந் திருவாக்காகும் என்றும் பாடமுண்டு.

ஞானமிர்தம்

பையு ணீங்கப் பயன்பல பெருகக்
கைதூவாத செய்தி யோர்க்கும்
பருவரல் வருவ துருவ மல்லதை
வருவது நன்னய மற்றே வறிவழிந்
தவல மாக்கட லழுங்கல் செயலின்
றுசற வுணர்ந்த தீதி லாளர்
மான்மதம் பனிதம் வார்நறுஞ் சாந்தந்
தான்முதற் பழிச்சுநர் தைவந் திடினுஞ்
செவிசுடூஉத் தகைய மொழிபல பயற்றி
மயிரிற் றகைத்து வறுத்தெரித் திடிப்பினு
ஞான மாத்துலை சீர்புகுத் தாநா
முனைப்பாற் செய்தி நகைப்பாற் பட்டென
வூரன் முறுவ லல்லதை தேரி
னுவகை கலுழ்ச்சியோ விலரே யானே
யுரையிடை மறந்தனன் மாதோ வுவகை
யிவர்க்கிட ரிலமென மனக்களி யோரே
கலுழ்ச்சி தீங்கு செய்தியோர் நீங்கா
திரயத் தழுந்துதற் கேது வாயின
மெனவே யிழந்த நெஞ்சமோ டினைபா
றோரே பெயர்த்துமொன் றயர்த்தனன் பெரிதே
தொடுத்த வெவ்வினை யெவ்வள வுடைத்தெனக்
கையற் றின்ன லெய்தலு முரிய
ரன்றோ வீடித னாங்குமற்
றெவனோ நாடருங் கேள்விநெடி யோர்க்கே.

(இ - ள்.) பையுணீங்க.........மற்றோ - வறுமையாகிய விதனம் நீங்குவான் பல பிரயோசனங்களு முண்டாக வேண்டுமென்று கையொழியாதே யுறச்சாதித்தோர்க்கு மிடியாகிய விதனமேவருவது ஊழ்முறையானற் சுகம் வருவதும் அந்த ஊழாலல்லது வேறொன்றுலாமோ?

அறிவு.........அழுங்கல் - அறிவுகெட்டு மகத்தாகிய துக்கசாகரத் தழுந்தாதே கொள்ளாய்;

செயல்......தீதிலாளர் - பூருவ கிருதம (முன் செய்தத) ல்லது ஒருவர்க் கொருவர் செயலில்லையென்று குற்றமறவறிந்த நல்லோர்;

மான்மதம்.........இடிப்பினும் - கத்தூரியுங் கர்ப்பூரமுங் கொழுவிதாகிய நறுநாற்றத்தையுடைய சந்தனக்குழம்புங்கொண்டு பாதாதி கேசமாகச் சாத்தித் தோத்திரங்களைப்பண்ணினுலுஞ் செவியில்நாராசத்தைக் காய்ச்சியேற்றினற்போன்ற வசனங்கள் பல சொல்லி மயிர்போல நுண்ணிதாகச் சரீரத்தையரிந்து சுட்டுத் தின்னென்று குத்தினுலும்;

ஞான.........அல்லதை - இவ்விரண்டு மொக்க ஞானமென்னு மகத்தாகிய தராசிலே சீர்தூக்கி யென்னே யென்னே நாம் முற்பவத்திற்செய்த கன்மபல மிப்பொழுது சிரிக்கும் பகுதியாயதென்று சிறுமுறுவல் கொள்ளுமதல்லது;

தேரின்.........விலரே - விசாரிக்கின் பிரியாப் பிரியங்கொள்ளுமதிலர், (ஏ - அசை);

யானே......மாதோ - ஆகிலுஞ் சொல்லுமிடத்தே நான்கூற மறந்தனன் சில, (மாதோ - அசை);

உவகை.........களியோரே - இவர்களுக்குப் பிரியமாவது இவ்விரண்டிற்கும் விதனப் படுவதில்லையென்னு மனக்களிப்பையுடையார்;

கலுழ்ச்சி.........பாலுரே - இவர்களுக்குத் துக்கமாவது தமக்கு விதனம் பண்ணினோர் சின்னாளிலொழியாத நரக யுக்தராகைக்கு (நரகத்திலழுந்துதற்கு) நாமேதுவாயினே மென்னு மதனுலே மனதழிதலோடே அளவில்லாத துயரமுடையர்;

பெயர்த்தும்.........பெரிதே-மற்றும் பெரியதோர் பொருளைக்கூற மறந்தனன்;

தொடுத்த.........உரியர் - பந்திக்கப்பட்ட வெவ்விதாகிய பிராரத்த கன்மமின்னு மெவ்வளவு காலமுடையதோ வென்று மனமழிந்து துக்கப் படவு முரியார்;

அன்னே.........நெடியோர்க்கே - ஆதலால் ஐயோ! கிட்டுதற்கரிதாகிய முத்திக்குபாயம் விசாரிப்போர்க்கு இவ்வனுபவத்தின் மேற்பட்ட மோட்சம் வேறு யாதோ (எ - று).

இது வினையுணர்ந்தோர் செயலறுதியாலே யாவை யாவராற் றமக்கு வரும்; நன்மை தீமைகள் ஊழுக்குமேல் வருவதில்லையென் றறிந்து பிரியாப் பிரியங்கொள்ளா தொழிதலால் ஞானசித்தர் வரிட்டஞ் சொல்லியது.

அயிலரி யரலை விழுப்புண் ணெரிபழுத்
தனல்கால் கோலிற் பன்முறை யடினும்
பேரிடர் நீத்த பெருந்தகை யோனென்
றூர்வ நெஞ்ச மல்லதை யாரே
வேரங் கொண்டோர் வேறே மாறெழூந்
துடம்பிடி யுடறுணி படுப்பினும் விரையொடு
மலையச் சந்தும் வழுத்துங் கொண்டு
தலையிற் பாதந் தாங்கினு முலையாப்
பிறவிப் பிணிதணி யறவ ரிவரென
வினையா வின்பம் வினையி னல்லதை
யுளைவதை யுடையரோ வினைவுணர்ந் தோரே.

(இ - ள்.) அயிலரி......கொண்டோர்-அழகிய பக்குவத்திலே கத்திகளாலே யறுக்கப்பட்ட கழலையான புண்ணை நெருப்புப் பழுத்தாற்போலக் காய்ந்து அக்கினியைக் காலுகின்ற கோலாலே பலகாலுஞ் சுடினு மிப்படி சுட்ட வைத்தியனை யென் மிக்க துக்கத்தைக் கெடுத்த பெருந்தன்மை யுடையோனென்று உள்ளத்திற் சினேகங் கொள்ளுமதல்லது அவனுடன் செற்றங் கொண்டாரார்தாம்;

வேறே - இவனில்வேறே சரீரமாகிய கிரந்தியைச் சேதித்தவன்;

மாறு......தாங்கினும் - எதிரியாய்வந்து வேலைக்கொண்டு சரீரத்தை யிருதுணியாக்கி விடினும் புஷ்பாதிகளோடு பொதியமலையிலுண்டாகிய சந்தனத்தையுங்கொண்டு பாதாதி கேசமாகச் சாத்தித் தலையிற் பாதம் பொருந்தத் தோத்திரம் பண்ணினும்;

உலையா......வுணர்ந்தோரே - இரண்டு திறத்தோரும் புசித்தறவேண்டும் பிராரத்த கன்மஞ் செலவழிதற் கேதுவானோ ராதலாற் கெடுத்தற்கரிதாகிய பிறவித் துக்கத்தை யொழித்த தன்மமித்திர ரிவரென்று இவர்களிடத்துப் பெறுதற் கரிதாகிய பிரியமுண்டாவதல்லது செற்றங் கொள்ளுவதுண்டோ மேல் வருவது மோட்சமென்றுணர்ந்தோர் (எ - று).

இஃது அசேதன வேதுவன்றியே சேதனவேதுவிலும் வந்தவாதைக்குப் பிற்பயன் பார்த்துச் செற்றஞ் சிநேகங்கொள்ளாதொழிவது மூண்டென்று ஞானசித்தர் வரிட்டஞ் சொல்லியது.

மறைமுறை யுணர்ந்த வறிவின் கிழவரு
மம்ம ரெய்திய மடவ மாந்தருங்
கைதொடல் கண்படை வெய்துறு பெரும்பயங்
களிபடு காமத் தளிதலை மயங்கிய
தகுதி யல்லது பகுதி யின்றெனிற்
கேளினி வாழி கெடுகநின் னவலங்
கொய்தளி ரன்ன குலக்கோ மளத்தை
மெய்யுற முயங்கி விடனு யினனே
கொம்மை வெம்முலைத் தன்மகட் டழீஇ
யம்முலை நல்கிய வாயென வுவந்தனன்
மற்றுங் கேண்மதி முட்டாட் டாமரை
நுண்டாது பொதிந்த செந்தோ டன்ன
செங்கை கொங்கைக் கருங்கண் டைவர
மைந்த னென்ன மனமெனகிழ் புருகிப்
பெருவரை கான்ற சிறுவெள் ளருவியிற்
சொரிதலானு பாலே யவையே
யாடவன் வருட வறிவுபிறழ் வெய்தி
மெய்புகு வென்னக் கைகவர் முயக்கமோ
டின்ப வெள்ளத் தன்பி யைந்தாங்
கறங்கரை நாவி ஞன்றே ருள்ளஞ்
சிறந்தன்று மன்னோ தெரியுங் காலே.

(இ - ள்) மறைமுறை......யின்றெனில் - ஆகமத்திற்சொல்லுகின்ற முறைமையறிந்த ஞானவான்களும் மயக்க முறுகின்ற வஞ்ஞானிகளும் ஆகாரம், நித்திரை, துக்கம் பொருந்திய பெரிய பயம், சந்தோடத்தைத் தரு மைதுனமென்னு மிந்நான்கு மயங்கு முறைமையல்லது அவ்விருவர்க்கும் வேறுபாடு கண்டதில்லை யென்னில்;

கேளினி......அவலம் - இனிநின்னஞ்ஞானங் கெடக்கேட்பாயாக, (வாழி - அசை);

கொய்தளிர்......விடனுயினனே - கொய்யப்பட்ட தளிரையொத்த வங்கிஷத்திலே பிறந்த கோமளம் போன்ற ஸ்திரீயைச் சரீரத்தொடே பொருந்தப் பரிசித்து விடயபரனுன புருடன், (ஏகாரம் - தேற்றம்);

கொம்மை......உவந்தனன் - பெரியவாய் விரும்பப்பட்ட முலையை யுடைய தன்மகளைத்தழுவி அம்முலை தந்து வளர்த்த தாயெனப்பிரிய மானவாறு போலவும்;

மற்றுங்கேண்மதி - மற்றுங்கேட்பாயாக, (மதி - அசை);

முட்டாள்......பாலே - முள்ளுண்டான தண்டையுடைய தாமரையி னுண்ணிய தாதைப்பொதிந்த செவ்விதழ்போன்ற தன்மகனுடைய செங்கை முலையிற் கருங்கண்ணைத் தடவத் தாய் என் பிள்ளையென்று மன நெக்குருகிப் பெரியமலையினின்றும் விழப்பட்ட நுண்ணிய வெள்ளருவி போல அம்முலைகள் பால் சொரிதலை யமையாதனவா யிருந்தன;

அவையே......யிலையந்தாங்கு - இத்தன்மையாகிய முலை யிவள் பக்குவத்தான் ஒரு புருடனைத் தனக்குப் பத்தாவாக நினைந்து அவன் வருட அறிவுகெட்டு இருவர் சரீரமு மொன்முன தன்மைத்தாகிக் கையைக் கவர்ந்து கொள்ளு முயக்கத்தோடே போகசமுத்திரத்திலே யன்புகூடின தன்மை போலவும்;

அறங்கரை......காலே - தன்மத்தைச் சொல்லும் நாவையுடைய ஞானவான்களுள்ளத்தை விசாரிக்குமிடத்து அப்பியந்தரபுத்தி பிறர்க்குத் தெரியாது வேறுபட்டுக்கா ணிருப்பது (எ - று).

இது ஞானசித்தர்க்குப் பாகிய (வெளி) வேறுபாடில்லை யாயினும் ஆப்பியந்தர (அந்தரங்க) வேறுபாடுண்டென்று சொல்லியது. 4

கரைகாண் கல்லாக் கற்பனை யளக்கர்
வரைபொரு திரையின் மடிந்தோர் தகுதியு
மடியா துயர்ந்த நெடியோர் பகுதியு
நொடியக் கேண்மோ வொடியா வாய்மைப்
பார்ப்பன வாகை சூடித் தீத்தொழி
லொருமூன்று வளர்த்த வருமறை நாவின்
வேள்வி யெடுத்த கேள்வி யாளன்
மனத்தின் மாண்டன்று மாதோ பிறந்தை
யினத்தின் மாண்டோ ரீடே வேள்வி
யாசான் முதலிய வத்தொழின் முடிமார்
தேசொடு நிவந்திசிற் பெரிதே யுள்ள
மாசறக் களைவோர் மாண்பே வேறு
திவாகரற் றொழிலுமுண் டவனே தனுது
விரிகதிர் பரப்பி விசும்புசெல் காலைப்
பெரிதுவந் திசினோர் பலரே யுவவாத்
துனிகூர்ந் திசினோர் நனிமிகப் பலரே
யவரே யின்ன ராயினுந் தம்முறை
யிதுவென வுன்னு தேகு மன்னோன்
போன்று மரும்பா வியரே மன்ற
கரும்பின் சிலைபொழி கணைபல தைத்து
நிலைதொலை வெய்தினுங் கலைவல் லோரே.

(இ - ள்.) கரைகாண்......கேண்மோ - எல்லை காணுதற்கரிதாகிய சங்கற்பமான சமுத்திரத்திலெழும் மலைபோன்ற திரையிலே யழுந்துவோர் செய்தியும் அதிலே யழுந்தாமல் நீங்கின பெரியோரியல்பும் வேறுபாடு சொல்லக் கேட்பாயாக; (மோ - அசை).

ஒடி.........ரீடே - பிறப்பிற்குக் காரணமாகிய ஈஷணைத் திரயங்களிலே மாட்சிமைப்பட்டோர் செய்தியானது யாகம்பண்ணுவானாக வேறிட்டுக்கொண்டு கெடாத மெய்ம்மையாகிய பார்ப்பனவாகையைச் சூடி அக்கினி மூன்றையும் வளர்த்த அரிய வேதங்களை யோது நாவையும் அழகிய வுபதேசத்தையுமுடைய வைதிக வேதியன் மனதாலே இந்தக் கிரியையாலுள்ளபலனைப்புசிப்பானாக விருந்தவழகுபோன்றிருக்கும்;(மாதோ-அசை).

வேள்வி...... மாண்பே - சித்தத்திலுண்டாகிய கன்மத்தை க்ஷயிப்பித்தோர்செய்தி வேள்வி வேட்பிக்கு மாசிரியன் முதலாக வக்கிரியையை முடிக்க வேவல் செய்வோர் சங்கரித்து (விரும்பி) க்கொள்ளாமலெய்திற் பல மவர்களுக்குச் சித்தியாமை யாவரு மறிய வெளியுடைத்தாக வோங்கின பெருமை யல்லவோ;

வேறு......முண்டு - இஃதொழிய வாதித்தியன் செயலிலுங் காட்டலாம்;

அவனே......பலரே - அந்தவாதித்தியன் (சூரியன்) தனது விரிந்த கதிரைப் பரப்பி யாகாசத்தி லியங்கு மிடத்து மிகவும் பிரியப்பட்டோர் பலர், அப்படியன்றி விதனப்பட்டோ ரவரினு மிகப்பலர்; (ஏ. அசை).

அவரே......போன்றும் - இவர்களிருதிறவரு மித்தன்மையரான விடத்துந் தங்க ளூழ்முறைமை யதுவென்று புத்திபண்ணாதே யியங்குமத்தன்மையனான வாதித்தியனைப் போலவும்;

அரும்பாவியரே.........வல்லோரே - சாத்திரங்களை யுணர்ந்த ஞானவான்கள் காமனுடைய கருப்புவில்லிடத்தினின்றும் பொழியப்பட்ட புட்பபாணங்கள் பலவும் பட்டுருவி நிலைகலங்கவரினும் நிச்சயமாகவரிய (ஞான) பாவகத்தை யுடையரா யிருப்பார் (எ - று). (ஏ. அசை).

இஃது அஞ்ஞானத்தாற் கூடின மமதை பந்தகாரண மென்றும், ஞானத்தால் மமதையில்லாமை மோட்சகாரண மென்றும் பாவனை விசேடஞ் சொல்லியது. 5

வாகை வன்னெற் றொலிப்பக் கூகை
குழறுகுரல் பல்லியந் துவைப்ப வோரி
தழங்குகுரன் முரசந் ததும்ப விளிந்தோர்
பிணத்தின் கைவிளக் கெடுப்பக் கூளிக்
கணங்கொள் பேரவை யணங்குநட நவிற்றுங்
காடுபதி கொண்ட வொருவற் றொரூஉ

மாடவ னுள்ளங் கடுப்ப நீடிய
மலப்பொதி யிரிய நூறி யுரைத்துடக்
குணர்வொடு கழிந்த வினையி லின்பத்
தென்றுகொ லெய்துநா னென்று நன்று
நெடிது நினைகுவர் மாதோ
வடுநீங்கு சிறப்பின் வயங்கி யோரே.

(இ - ள்.) வாகை......கடுப்ப-வாகைமரத்தின் முற்றியநெற் றொலிப்பக், கூகை குழறு குரல் பல்லியமாக முழங்க, ஓரிகள் கூப்பிடுங் குரல் முரசாக வறைய, இறந்தோருடலாய வேகின்ற பிணத்தின் நெய்யைச்சில பேய்கள் கௌவிக் கொண்டாடி விளக்காக வெடுத்துக் காட்டப் பேய்கள் திரட் கூத்துக்காணும் பெரிய வோலக்கத்திலே, ஒரு பெண்பேய் கூத்தாடுதலைச் செய்யும் மயானத்தை யிடமாகவுடைய தொரு சவத்தைக் கூலி கொண்டு சுமந்து வரும் புருடன் மனத்திலே கடுகே விச்சுமையைப் போட விரும்பின தன்மைபோல;

நீடிய......மாதோ - அநாதியாகச் சுமக்கின்ற மும்மலங்களாலான சரீரத்தைக் கழியப் போட்டு மனவாசகங் கடந்த வுவமனில்லாத பிரமானந்த மோட்சத்திற் கிட்டுநா ளெந்நாளோ வென்று நன்றாக மிகவும் நினைத்துக்கொண் டிருப்பர்; (மாதோ - அசை).

வடு......யோரே - குற்றமற்ற ஞானக் காட்சியாலழகு பெற்றோர் (எ - று).

இஃது அரும்பாவிய ரென்றது குறித்துக்கொண்டு சரீரபாரமொழித்தலால் ஞான சித்தர்க்குப் பாவக விசேடஞ் சொல்லியது. 6

நஞ்சுவிற் றிருந்த வெஞ்சினப் பகுவாய்ப்
போர்வை நீத்த புயங்கத் தன்ன
வாசறு படிவத் தான்றோர் நிற்க
நிலஞ்சேறு படுத்த கருங்கைக் கொண்மூப்
பொரியரை விளவின் புனிறுதீர் பெரும்பழ
மரிதுபெற் றயின்றதற் கருமை சாலத்
தெரியாத் தேர்ச்சித் தீரா வுள்ளத்துப்
பெரியோர் விட்டனர் பிறழா வினையே
யளியவு முடையதொன் றுளதே விளியா
துடனுறை பழமை யூங்கே கடனறி
மண்வினை மாக்க டம்வினை முடிமார்
திகிரி யுருட்டி யொருவி யாங்கும்
வருத லோவா மாறுங் குவிவாய்த்

தகம்புறை யிங்காங் கசும்பறத் துடைத்து
மிருங்கடி யிகவாப் பெருங்கட னல்லனந
யுடையதை யுடையரோ மற்றே யுடையதை
வரையளக் தறியாத் திரையருந் திருத்தப்
பேரா னந்தப் புணரி
யோராங்குப் படிந் தலுடைய ரீண்டே.

(இ - ள்.) நஞ்சு .....நிற்க - நஞ்சுக் கிருப்பிடமா யிருக்கும் வெவ்விய சினத்தையும் பெரிய வாயையு முடைத்தாய்த் தோலுரித்த சர்ப்பத்தை யொப்பவராகிய சுத்தியாகிய திருமேனியை யுடைய வறிவுடையோ ரழிவின்றி நிற்க;

நிலம்......வினையே-மதத்தாலே பூமியைச் சேருக்கிய பெரியகையை யுடைய யானை பொரிந்த வடிவை யுடைத்தாகிய விளவி னுள்ளுறப்பழுத்த பெரிய பழத்தை யரிதாகப்பெற்றுப் புசித்தா லுள்ளோர் பற்றற்றதன்மை போலப் பிறரறிதற் கரிதாகிய கன்ம வுபாயத்தை விடாத வுள்ளத்தை யுடைய ஞானவான்கள் வாகிய (வெளி) சுத்தியின்றியே அப்பியந்தர (உள்) சுத்தியுடையராய்க் கெடுதற்கரிய கன்மங்களை க்ஷயம் பண்ணி யிருப்பர்; (புனிறு - இளமை).

அளியவும்......உளதே - ஆகிலு மவரை விடாத தொன்றுண்டு;

விளியா......பழைமை - அறுதியாகப் பழகிப்போந்த சரீர வாதனை பிராரத்தகன்மம் புசித்தறு மளவு மொழியாது; (என்போல வென்னில்);

ஊங்கே......மாறும் - மிகவுந்தத்தங் கிரியைகளை யறியுங் குலாலர்தங் காரிய முடிப்பான் காரணமாகத் திகிரியை விசையுண்டாக வுருட்டி யொழிந்தவிடத்தும்(அது) சிறிது பொழுது தானே சுழன்றேயுமாறுபோலவும்;

குவிவாய்......மற்றே - குவிந்த வாயை யுடைத்தாகிய குடத்திலிட்ட பெருங்காய மதிற் பற்றறத் துடைத்தாலு மிக்க நாற்ற மொழியாதது போலவு மல்லது இவர்கள் பாகியத்திற் பற்றுடையாரைப் போலே யிருக்குமது பற்றுகவற்றே; (ஐகாரம் சாரியை;மற்று அசை; ஏகாரம் தேற்றம்).

உடையதை.......ஈண்டே - இனி இவருடையது யாதென்னி லெல்லையளத்தற் கரிதாகிய அசைவில்லாத பெரியவானந்த மாக்கடலாகிய தீர்த்தத்திலே யிடைவிடாதே முழுகுதலை யுடையார் எடுத்த இப்பிறப்பிலே (எ - று).

இஃது என்றுகொ லெய்துநா ளென்ற வையந்தீர ஞான சித்தற்குப் பூருவ வாசனையா லுள்ள வனுபவ மல்லது வினையிற் பற்றிலை யென்று சொல்லியது. 7

### தோன்றி (நந்துவரந்நாவலி).

நல்லமு தாட்டினு நஞ்சை யூட்டினுந்
துல்லிய மாக்கினுந் தொழிலை மாற்றினுங்
கல்லினும் பொன்னினு மொத்த காட்சியர்
சொல்லிறந் தோரெனத் தொகுத்த தெங்கணும். 8

* காலமு மகாலமுங் கருத லின்மையுஞ்
சீலமு மொருவராற் றெளிவொ ணுமையும்
பாலவுன் மத்தப சாச மாவது
மேலவர் தம்மிலக் கணத்தின் பெற்றியே. 9

துறையொடு சயனமு மொக்குந் தன்மையு
முறைபதி யிதுவென வொன்றி லாமையு
முறவொடு பிறரையு மொக்க நோக்கலு
மறிகுறி யிவையறி யறிவி னோர்கட்கே. 10

வேதனை படுத்தினும் விடினு மொப்பவர்
சாதலும் வாழ்தலு மொக்குந் தன்மைய
ரியாதொரு பொருளினு மிசைவி லாதவ
ருதிய மதுதனை யுணர்ந்த வுத்தமர். 11

தெரிதரு மொழியிடைச் செவிடு போலவு
முருகவி ரொரியிடைக் குருடு போலவும்
பரிவுடை யமுதிடைப் பாலர் போலவும்
பெரியவர் தம்மிலக் கணத்தின் பெற்றியே. 12

வையினும் வாழ்த்தினு மலர்கொ டேத்தினும்
வெய்யவா ரெரியிடை வீழ நூக்கினு
மெய்யினு மெறியினு மியாது செய்யினு
நைவொடு மகிழ்விலர் ஞானி சீலமே. 13

### திருமந்திரம்.

சேற்றிலென் புகழிலென் செஞ்சாந் தணியிலென்
மத்தகத் தேயுளி நாட்டி மறிக்கிலென்
வித்தக நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிக டன்மைகுன் றாரே. 14

ஆனை யுழக்கிலென் னம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனப் பெரும்பன்றி யெங்கு மடக்கிலென்
ஞானத் தலைவர்க ணன்கழி யாரே. 15

### தோன்றி.

அகழினு நிகழுஞ் சாந்த மணியினு மடைய வைதிட்
டிகழினும் புரள வெட்டி யிடிப்பினும் பொடிய தாக்கித்
திகழினுஞ் செழுந்தண் மாலை தீயொடு மலத்தை யேயிட்
டிகழினும் பொறுத்த லானல் யோகியைப் போலு ஞாலம். 16

கணக்கண்ணுங் கலவிக் கண்ணுங் காரியத் தியல்பின் கண்ணு
மணக்கண்ணு மகளிர் கண்ணு மாநிலத் தனைத்தின் கண்ணு
மிணைக்கண்ணு மிளைஞர் கண்ணு மெங்கண்ணும் யோகிநோக்கிற்
பிணக்கண்ணும் பீலிக் கண்ணும் பாவைகண் ணிவையும்போலாம்.

---

### குறுந்திரட்டு.

வீங்கு புண்ணரிந் தழலெழ வெதுப்பவென் வேதனை யெல்லாந்தீர்த்
தீங்கெ னுவிதந் தானெனப் போற்றினு லிருவினை தருநன்றுந்
தீங்கு மூட்டிய வுடற்பிணி யறுத்தவர் திறத்தினிற் கைம்மாறே
தாங்கு வென்பதற் றளைவரோ யவர்செயல் விளைவினை யறிந்தாரே. 42

துணங்க ணன்குழுண் டெனினுமுக் குற்றமன் னுளத்தி
லுணர்ந்த ஞானிக ளுள்ளம்வே றுருகுமென் றுணர்க
மணந்த மாதினைத் தழீஇமன மயக்கமுற் றவனே
யணைந்த தன்மகட் டழீஇயின்ற வன்னையென் றுணர்ந்தான். 43

நீவந்த வெங்கதிர்க் குளைவுறச் சிலர்நெஞ்சு மகிழத்
திவந்த னூடுபோ மினனவை சிந்தியா னவன்போற்
றுவந்த நீக்கினுன் றுதிப்பவ ரிகழ்பவர் திறத்தி
லுவந்தி டேன்முனி யேனெனு முள்ளமு மிலனுல். 44

துகளறு ஞானிக டுதியி னிந்தையி
னிகழ்விலர் மகிழ்வில ரெனல்வி னைப்பய
னுகர்தலின் மகிழுவர் நோவர் மேற்றமை
யிகழ்பவ ரருநர கெய்த லெண்ணியே. 45

அருந்துயர்ச் சிறையிட் டாரிலச்சிறை விடுவித்தாரைப்
பரிந்துயி ரளித்தா ரென்று பகரவேண் டுவது முண்டோ
விருந்துயர்க் கிடமாம் யாக்கை யீன்றவ ரின்று ரென்று
மரிந்தவர் நட்டா ரென்று மறிந்தில ருயர்ந்தோ ரன்றே. 46

### தத்துவாத்நாவலி.

இழையார் மொழிபொய்ந் நெறியெய் திலரைக்
கழியார் கவலைப் படுகா மமுறா
ரிழியா ருபரார் மன்மெய் பொருளும்
பழியா ரவர்தத் வபரா யணரே. 18

நன்றா தரியார் நலனல்ல செயார்
கன்றா ரவரோ டுகலக் கமுறார்
குன்றார் குறையின் மயல்கொண் டவையு
மொன்றா கவுணர்ந் துகொளுந் தமரே. 19

மதியார் மனைவாழ் வுகண்மன் னரையுந்
துதியார் துயரோ டுதுடக் கறியார்
நிதியான் மகிழார் நினைவற் றவிடம்
பதியா கியதத் வபரா யணரே. 20

ஞானிசீலமுற்றிற்று.

ஆகச்செய்யுள் 177.

---

## குறுந்திரட்டு.

### ஞானிசரிதை.

சரிதங்குணம் விரதஞ்செய றவம்வேதன முழுதும்
பெரிதும்முள னெனவும்மில னெனவும்பிற ரறிவால்
தெரிதந்திட வரிதாம்வகை திரியுந்தெரி வுறுதற்
கரிதென்றரு மறையோதிய தறிவாசற வறிவான். 47

ஒழிக வுடம்பு நிலையதா யுறுமலர் மங்கை யொழிகவே
பழியை விளம்ப வினியவே பகர்க வகந்தை மகிழ்வுறார்
மொழியி னுளங்கண் மகிழவே மொழிவ ரிங்கிசை மொழிகளே
யழியு முடம்பி லழிவிலா வறிவை யறிந்த வறிஞரே. 48

மல்லன் ஞாலமுடி மன்னர் தம்மையும் வழுத்து மாறறு மனத்தினு
னல்லர் தீயரென நாடிடார் பிறரை நாகமேல் விழினும் வேகமாய்க்
கொல்ல வேலர்புடை சூழினுஞ் சிறிது கூசிடார் மெலிவு கூறிடா
ரல்லவா மென விகற்பியார் சமய வாத ரோடெறி வாளரே. 49

புண்ணிய பாவ பலன்களுங் கருதார் பூசியார் புனலினைத் தீர்த்தம்
பண்ணிய பதுமை தெய்வமென் றுணரார் பட்டினி விடார்மகம்பண்ணார்
மண்ணிய மணிமந் திரவிழ்மதியார் வடிவிலோர் குறிகொளார்மற்று
மெண்ணிய கருமமியாவையுஞ் செய்யா ரிம்மையு மறுமையு மிகழ்ந்தார். 50

## 4. கூடாவொழுக்கம்.

24407

ஞானசித்தி.

அளவிலா வமுத சீலத் தமுதஞா னிகடம் முண்மை
யுளமெலா மகிழும் வண்ண முரைத்தவா றதுபோ லின்னம்
வளமிலாக் கூடா சார மயக்கினை விட்ட சாரத்
துளமதா மறிஞ ருண்மைத் தன்மையு முரைக்க வேண்டும்.

தன்னெஞ்சந் தனக்குச் சான்றது வாகச் சத்திய நன்குணா ராதே, வன்னெஞ்ச னாகிக் கூடமே புரிவோன் வஞ்சகக் கூற்றி னுங் கொடியோன், பன்னுங்கா லவன்றன் றரிசனம் பரிசனம் பழு துறு நிரயவே துவுமாம், புன்னெஞ்சா லவனும் பொய்நர கெய் திப் பூமியுள் ளளவுமே ருறுனல். 2

ஞானமா † மின்பந் தம்முளத் தின்றி ஞானிகள் வேடமே மருவி, யூனமே தே வளர்த்தங் குண்டிமை துனத்தின் பொருட்டுற வழிதரு கின்ற, வினமாஞ் சோர ஞானிக ணிரய மெய்துவ ரெய் தியங் குழைத்துத், தீனமாந் திரியக் கியோனியை யடைந்து செனிப்பது மரிப்பதா வர்களே. 3

† மிலிங்கம் என்றும் பாடமுண்டு.

---

குறுந்திரட்டு.

ஞானிசரிதை

நண்ணி தானசண் டாளர்கள் சாதிவே தியரென்
றெண்ணு மாறிலன் ஞானியிச் சகத்தியா வையுந்தா
னுண்ணு மோதன மாதலி லுண்டியா தியிலுந்
திண்ணி தாநலந் தீங்குசிந் தித்திடான் சிறிதும் 51

ஓசைகேட் டிடவெச் செவியறு சுவைபு முண்ணநா வுடலுற்ற றறிய
வாசமூக் குயிர்ப்ப வுருவு கண்காண மற்றுமெக் கருமமுஞ் செய்ய
வாசுடைப் புலன்க ளனுபவித்திடினு மப்பின்மூழ் கிடினுமம் புயத்தின்
பாசடை நீரிற் பற்றுறா ததுபோற் பற்றிலாப் பரமயோ கிகளும். 52

ஒழுக்க மேவின ரொழிந்தவ ரும்பர்மா முனிவ
ரிழுக்கு நீசர்க ளென்றுநான் மறையவர் யாரும்
பழிக்கு மூர்க்கர்நற் பண்டிதர் பாவிய ரறவோர்
புழுக்கள் யாவையும் போதமென் றிகழ்வுறார் புகழார். 53

லோகா சாரந் தன்னையு முன்னு ரொன்றுந்தா
மாகா தாமென் பதுநினை யாரிவ் வவனிக்கே
யேகா திபமன் னவனெப் படியப் படிவாழ்வார்
தேகா தியைவிட் டின்பக் கடல்சந் தித்தானர். 54

மறைமுதல் கலைகள் யாவையு முணர்ந்து மாசற வுரைத்துமா சொடுந்தான், கறையுறு விடயக் கடுவிடக் கடலிற் கருத்தனுத் தினவிழு மாகி, லறைதரு மவனே கன்மசண் டாள னறிவற மிரு மையு மிழந்த, பொறியிலி யிவனைப் போலும்பா தகரிற் புவியினி லொருவரு மிலையே. 4

சாதிசண் டாளன் கதிபெறுந் தருமம் வழுவலிற் கன்மசண் டாள, ஞோதிய வழிக ளொன்றிலுங் கதிதா னுற்றிடா னென்ப துண் மையதே, நீதியாங் கன்மம் விட்டுஞா னத்தே நின்றவர் நிலைபிறழ்ந் தவராற், றீதுற வொழுகுஞ் சோரமே யென்றுற் றீக் கதி யுறுதலே திடமே. 5

ஞானசாரம்.

விடய வேலையி னிட்டசா ரத்தனுய் மிக்குச்
சுடரு நற்றுற வுற்றிடுஞ் சோரனி னந்தோ
மிடையு நற்புதர் மறைந்துபுட் படுத்திடு வேட
னடைவ னற்பத மவன்றன தறந்திரிந் திலனால் 6

தத்துவார்த்நாகரம்.

வாக்கொடு மனமு மிறந்ததி மதுர வாரியா யொழிவறநிறைந்து போக்கொடு வரவ தின்றிய வமுதைப் பூரண மாகவுண் டவர்தாம் வீக்கிய கான னீரெனும் விடயம் மேவுற முயல்வரோ முயலி ஞெக்குறு மந்த ஞானியு நாயு மொத்திடும் வாசியொன்றிலதே.7

தத்துவசரிதை.

அந்தமு முதலு மின்றியே திகழு ம ம ல ம ா மமுதினை யார்ந்து, பெந்தமும் வீடு மின்றியே திகழும் பெரியவப் பிரம வித்தர்கடா, முந்தொரு விடயத் துழல்வரோ கெட்டே னுழல் வரே லெனினவர் தாமு, முந்திய மலமே சுவடுகொண் டுழலூர்ப் பன்றியு மன்றியொப் பிலதே. 8

சிவப்பிரகாசம்

வேதவா கமங்கண் மிருதியும் புராண மிக்கவெக் கலைகளும் பயின்று, போதமே சொல்லிப் போதமங் குணராப் புலையருங் கழுதையு நிகராங், கோதிலா வாரங் குங் கு ம ம் பனிதங் குலவிய புழுகின முழுது, மேதமே சுமந்த கழுதையிங் கிவணி னேற்றமாம் வஞ்சமின் மையினால். 9

கீழுறு கருமவேள்வியாம் பதத்தோன் கிளர்தவவேள்வியங் கடையின், வாழியங் குயர்ந்தோ னெனமறை வழுத்து மற்றவனப்பத மிழியி, னூழிய நரக மலத்திலே யெனுமா லதிவ னாச்சிரம முற் றிழிந்தோன், சூழிய பதித னுய்வில னவன்பேர் சொல்லினும் பஞ்சபா தகமே. 10

பிரமசாரிவே றிழிதொழில் புரியுமேற் பதிதன் பெரியவில்லவ னிலைகுலைந் திழிதரிற் பதிதன், வரம தாகிய வனத்தவ னில்லுறிற் பதிதன் வரமதாஞ்சன்னி யாசிகீழ் வுற்றுறிற் பதித, னாரம தாயவ னாச்சிர மத்தினைக் கடந்தோ னுரைத்த வற்றிழிந் திட்டசா ரத்திலே யுறுமேற், கருது முவகை பதிதரிற் பதிதனு மவனைக் காணல் கேட்டல்செய் தவர்களும் பதிதரே கண்டாய். 11

ஞானதீபிகை.

பாவமா நெறியாற் பலிப்பது பவமும் படுதுய ரதுவுமென் றஞ்சி, மேவுறு முன்னை விட்டுநற் றரும மேவலும் விலக்கென விகழ்ந்தே, தாவிலா ஞான வுறுபத மடைந்தோர் சகத்துளோர் களுமிகழ் விடயப், பாவமா நெறியிற் படுவரோ படிலங் கவர்பரம் பதமடைந் திலரே. 12

---

குறுந்திரட்டு.

சச்சிதா னந்தமாந் தன்னை யெய்தினு
னிச்சியா னொருபொரு ளிச்சை செய்யுமேல்
வைச்சபா லடிசிலை மறுத்தி டாமலே
நச்சு நாயல்லது ஞானி யல்லனே. 55

சகத்தவ ரிகழ்தொழி றற்ப ரந்தனை
யகத்தினி லுணர்ந்திடு மவர்கள் செய்வரோ
மிகப்பசி யாளனும் விரும்பி டான்விட
முகப்பன நிறையவுண் டவனு முண்ணுமோ 56

ஞான முள்ளவர் போல நடித்துமுன்
பான வன்ன வறமு நழுவினு
ரூனை யன்றி யடைவ தியர்ந்தவீ
டேனை யின்ப மிரண்டு மிழப்பரே. 57

தூமங் காட்டுஞ் சுடுதழ லுண்டென் பதுதுய்ப்பார்ச்
காமங் காட்டு மயினி யுவர்ப்பப் படியேநல்
லேமங் காட்டு ஞானிக ளென்று மிவர்நெஞ்சிற்
காமங் காட்டும் பெற்றிலர் கற்றார் கலையன்றே. 58

மெய்ஞ்ஞானவிளக்கம்.

ஒப்பிலா வுண்மைப் பொருளினைக் காண வொருப்படு கின்ற வப்பொழுதே, யற்பமீ ருலகும் பொருளல வெனவே யருவருத் தேகின ரென்றூற், றற்பரா வமுதந் தன்னையே நாடி யுண்டதத் துவர்விட யத்தே,நிற்பரோ நில்லார் நின்றிடி னவர்தா நின்மலன் பதமுணர்ந் திலரே. 13

பூரணபோதம்.

ஞானவா ரமுதச் சுவையினைச் செவியா னலம்பெறக் †கேட் டவப் பொழுதே, யானகா ரியமு மாருகா ரியமு மாய்வறக் கட வகா ரியமுங், கானனீ ராயே கழிதரு மென்றூற் களிதர வமுதமே யுண்ட,ஞானிதா னிழியும் விடயமே விடுமோ நண்ணிடின் ஞானியன் றவனே. 14

† வுண்ட என்றும் பாடமுண்டு.

திட்டாந்தமாலை.

நெய்யொடு பாலுந் சோறு நிறையவே யுண்ட நற்பி
னெய்யொடு வெய்ய கூழை நுகர்ந்திடா வாறு போல
வையமி லறிவா னந்தத் † தமிர்தினு லார்ந்த ஞானி
செய்திடான் கரும மொன்றுஞ் செய்யுமேல் யோகி யல்லன்.

‡ தமிர்தினை யுண்ட என்றும் பாடமுண்டு.

தத்துவதர்சனம்.

நற்றவ வேடங் கொண்டற முரைத்து நானிலத் துணவதின் பொருட்டாற், பற்றறு மவர்கள் போலவே நடித்துப் பற்றவா வொடும்பிறர் கடையின், முற்றவே யுழலு மூடரு மவரை யடைந் திடு மூடரு மொக்கச், சுற்றியே பாசப் பவக்கடற் பட்டுக் கறங் கெனச் சுழல்வர்வீ டிலரே. 16

போதரத்நாகரம்.

தத்து வத்தொடு சமதம நியமனு மெவர்க்கு
மொத்த னுக்கிரக பானுவா யொன்றெறுடு தனக்குத்
தொத்து மற்றுறு விடயநிக் கிரகமுடைச் சுபாவ
சுத்த னற்றவன் மற்றவர் சோரஞா னிகளே. 17

கூடாவொழுக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் 194.

## 5. ஞானியேவற் சிறப்பு.

வினாவிளக்கம்.

ஆதலா லமல ரல்லா தவரையு மறிஞர் தங்க
ளோதரு மரிய சீலத் துண்மையு முணர்த்தி னற்போ
னீதியா லறிஞ ரேவற் சிறப்பையு நிகழ றாயேற்
காதியே யளவி லாத வமுதனே யருள வேண்டும். 1

சிவஞானநிலயம்.

ஆடையு மலருஞ் சாந்து மகிற்புகை தூப முன்னாக்
கோடிவே தியரைப் பூசை குறைவறச் செய்த ரானும்
பீடுறு ஞானி தன்கைப் பிடித்திடு பிச்சை தானு
நாடிடிற் சமம தென்றே நாதனா னவிலு மன்றே. 2

ஓதிய பரம யோகி யுண்டதெவ் வுலக முண்ட
தாதலா லவனைப் பூசித் தவனால கங்கண் மூன்றுங்
கோதிலாச் சிவன்மா லோடுங் கூடவே குறைவில் பூசை
காதலாற் செய்தா னென்றே யருளினான் கருணை வாரி. 3

காணுறி லெழுந்திருத்தல் காதலித் தெதிரே செல்லல்
பேணிநன் மொழிகள் சொல்லல் பின்புபோய்ச் செல்லநிற்ற
லாணியா ஞானிக் கிவ்வா றனைவை செய்தன் மெய்யே
யேணியாம் பரக திக்கிங் கேறுவோற் கென்றா னீசன். 4

---

ஆறுந்திரட்டு.

ஆவ தாவதில தற்ற வன்னர்தம்
பாவம் யாரு மறியப் படாதவர்க்
கேவல் செய்து திரிபவ ரெய்துவார்
மூவர் தேவர் மொழிந்தருண் முத்தியே. 59

† ஞாலமுண்டவன் றலையினாற்சுமப்பன்மெய்ஞ் ஞானிவேண்டிய தென்று
ஆலமுண்டவ னவன்பினே திரிகுவ னவன்பதப்பொடிக் கென்றான்
சீலமொன்றையுந் தெரிவருஞானிதன் சேவடிபணி செய்வான்
காலிரண்டுமென் றலையவேயென்றனன் கமலநான் முகத்தோனும். 60

† ஞால முண்டவன் றலைமிசை சுமப்பன்மெய்ஞ் ஞானிவேண்டுவ தெல்லாம், ஆல முண்டவ னவன்பின்னே திரிகுவ னவனடித் துகட்கன்றே, சீல மன்னரு மற்றுள தேவருந் திசைதிசை பணிந்தேத்தக், காலி ரண்டையுந் தலைமிசை வையெனக் கழறுவன் கமலத்தோன்.

என்றும் பாடமுண்டு.

ஞானத்தா தரவின் றேனு நன்முனி யிருந்தி டத்தங்
கூனத்தா லான வேவ லுழந்தோற்கு மரணப் போதில்
வானத்தோர் விமானம் வந்து மற்றவன் குலமூ வேழு
மேனைத்தான் சிவபுரத்துக் கொண்டெய்து மின்னங் கேளாய். 5

அச்சிவ புரத்துத் தெய்வ வனிதைய ராயிரத்தான்
மெச்சுநன் முனிபோ கங்கண் மிகுகோடி கற்ப முய்த்துப்
பிற்சிவ புரத்தை விட்டுப் பெரியவை குந்தந் தன்னிற்
றுச்சிடு மளவில் போகந் துகளின்முற் கற்பகாலம். 6

பின்னைய னுலகிற் போந்து பெரியவக் கால முய்த்துச்
சொன்னவிந் திரலோ கத்துத் துளக்கிலாக் காலம் வாழ்ந்து
மன்னுகந் தருவ லோகில் வளங்கெழு மியக்க லோகிற்
பின்னுமக் கால முய்த்துப் பெரியநன் புவியைச் சேர்வன். 7

பெரியநன் குலத்துட் டோன்றிப் பீடுடைச் செல்வங் கல்வி
யரியநற் சீலத் தோடு மாகியோ கீசற் சேர்ந்து
திரியமுற் குறையே யேவல் செய்துபின் சிவன் முத்தி
யுரியகைத் தலத்து நெல்லிக் கனியென வுறுவ னன்றே. 8

பஞ்சபா தகமுன் னாய பரமபா தகங்க ளெல்லா
மஞ்சிடா தியற்றி மூர்க்க னச்சசி வன்னன் றானும்
மிஞ்சுவே தனைபா லான்ம வேதிதாட் கேவல் செய்தே
யெஞ்சிடா வீடுபெற்றா னேவலின் பெருமை பாராய். 9

துளக்கமில் பாதகந்தான் செய்தவச் சுபகை யுற்ற
வளப்பரும் வருத்தந் தன்னா லாங்கொரு ஞானி தன்னை
யுளத்தினால் வணங்கி யேவல் செய்துற வீடு பெற்றாள்
விளக்கமா ஞானி யேவல் வேதியா தேது முண்டோ. 10

அறிஞரைப் புகழ்ந்தோர் கேட்டோ ரனுமதி செய்தோ
ராங்குச், செறிவதுற் றிருந்தோர் தம்மைச் சேர்ந்தவ ரென்ன
வைவர், முனிவதற் றிலங்கு மின்ப மூரிவெள் ளத்தை நாளும்,
பெறுவதற் குவம மில்லாப் பெருமையுற் றுயரு வாரே. 11

ஞானியேவற் சிறப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 205.

## 6. அறிஞரையிகழ்ந்தோர் கேடு.

---

### வினாவிளக்கம்.

அமல ஞானிக ளடியிணை தமிலுறு மரியவே வவினுள்ள
நிமல மாகிய பெருநல நிகழ்வுற வருளிய நெறியேபோல்
விமல ஞானிக ளிடையிகழ் வோர் †பிழை மேவிய வவரெல்லா
மமைவி லாதடை தருநெறி யதனையு மழகுற வருளெந்தாய். 1

† பினை என்றும் பாடமுண்டு.

### யோகாநந்தசரிதை.

பெரியனு முனிவன் றன்னைப் பேதைமை யதனின் மிக்குத்
தெரிவிலா தொருவன் சொல்லுந் தீமொழி யதனி னாலே
யரியதீ நரகந் தன்னி னழுந்துமோர் கற்ப மென்று
பொருவிலா மறைக ளெல்லாம் புகன்றிடும் போத மிக்கோய். 2

தேவர்க்குந் தேவ னாகித் திகழ்தரு ஞானி தன்னைப்
பாவத்தி னொருவன் மிக்குப் பண்ணிய நிந்தை சொல்லிற்
றுவற்ற வயன்மா லீசன் றன்முதல் சகத்தி லியார்க்கு
மோவறக் கொடிய நிந்தை யெனமறை யுணர்த்து மன்றே. 3

---

### குறுந்திரட்டு.

### ஞானிபூசை.

மலக டாதியில் வைத்த மனத்தினை
விலகி மெய்ம்மை யுணர்ந்திடும் வித்தக
ரிலகும் யாவரும் யாவையு மாதலா
லுலகெ லாமுண்ட தாமிவ ருண்டதே. 61

படித்தமறை யோர்கள்பல கோடிபல கால
மிடித்தல்கெட வைத்தவர்கள் வேதமுடி வோதி
முடித்தபர முத்தியுணர் வுற்றமுனி வன்கைப்
பிடித்தொருகை யிட்டவர்கள் பெற்றது பெருதே. 62

வைய மாமணி யாதியாக வழங்கினர் மக மேறினர்
தூய மாநதி யாடி னர்துணி யார்தவங்க டொகுத்துளார்
மெய்ய மாநிக ளொட்டு மேவிய மெய்புணர்ந்தவர் கையிலே
யைய மாத்திரை யிட்டவர்க்குறு தான பேறடை யார்களே. 63

தன்னுணர் பரமயோகி தனக்கிழுக் கதனைச் சொல்லன்
மன்னுறு மறையோர் தம்மை வதைத்தபா தகத்திற் கோடி
சொன்னது கேட்ட லொக்கத் துணிதல்கோ வதையிற் கோடி
யென்னவே மறைக ளெல்லா மெடுத்துரை செய்த வன்றே. 4

தத்துவ வித்தா மேலோன் றனக்கொரு தீமை தன்னைப்
புத்தியா னினையி லுந்தான் பொருட்கள வதனிற் கோடி
மத்தமா மவனிற் கூடின் மத்யபா னத்திற் கோடி
யொத்தபா தகங்க † ளென்றே யுரைத்தன மறைக ளன்றே. 5

† ளொக்கு மென்றன என்றும் பாடமுண்டு.

---

## குறுந்திரட்டு.

என்று முள்ள வறிவுமெய் யின்பமா
மொன்றை யன்றி யுணர்வ திலார்தமை
நன்று தீங்குணர் நாட்டமி லாதவ
ரென்று ஞான மிலாரிகழ் கிற்பரே. 64

முன்னை யிறந்த முதற்றனி வித்தா
முன்னை யிறந்துள வொன்றை யுணர்ந்தோன்
றன்னை யிகழ்ந்தவர் சங்கை யறத்தா
மென்னை யிகழ்ந்தன ரென்றன னீசன். 65

கண்ட கடவுளக் கடவுளெனக் காணாதே
பண்டை நிலைநினைவார் பாதகரே யானக்கா
லண்ட முழுது மகத்துணர்ந்த வற்புதரைப்
பண்டை நிலையை நினைந்திகழ்வார் பாவிகளே. 66

செய்யவினை யிற்சிறிது தப்புமவர் சேர்வார்
வெய்யநர கென்னுமறை மெய்யினை யுணர்ந்தார்
செய்யுமது வேதவ மெனத்தெளி வுறாதே
வெய்யவுரை செய்துசிலர் வெந்நரகில் வீழ்வார். 67

நயப்பெருகு வீடுதவு ஞானியை யிகழ்ந்தே
யியம்புமதி கேடரெரி வாய்நிரய மெய்தி
வயங்குகதி ரோனுமொளிர் மாமதியும் வான்மே
லியங்குவர்க ளெவ்வளவு மவ்வளவு மேறார். 68

எழின்ஞானியை யிகழ்வானிகழ் கேட்டா னிகழ்கேட்டுள்
ளழலாதவ னிசையுற்றவ னெனநால்வரு மவரைத்
தழுவாதுட னுறைவாரிவர் கான்மேலுற வாறாத்
தழலாகிய நிரயத்திடை தலைகீழுற வீழ்வார். 69

கோடுகிய மொழிகொடு கோதின் ஞானியை
வடுவது பேசிடு மறிவில் பாதக
னிடைவிடா வெரிநர கத்தின் வீழ்ந்தழிந்
துடுமதி யளவுமங் குழைத்து மாயுமே. 6

அறிவினின் மிக்கனு மரிய யோகியை
மறுவது பேசிடு மறிவில் பாதக
னுறுபுழு நரகின்வீழ்ந் தூழி யூழியங்
கிறுதுயர் படுவதை யியம்ப லாகுமோ. 7

உன்னரு மறிவின்மிக் குணரு ஞானியை
யின்னல்செய் பாதக னெழுகு லத்துடன்
றன்னரும் பிதிரர்க ளொடுசு ழன்றுதான்
வெந்நர கினில்விழும் வேத மோதுமே. 8

சிவஞானநிலயம்.

தோமறு ஞானியைத் துகளு ரைத்தவ
ரேமுறக் கேட்டவ ரிசைந்தி ருந்தவ
ராமென மதித்தவ ரவரிற் கூடியோர்
தாமிவர் பஞ்சபா தகரிற் றண்ணியோர். 9

உள்ளத்தே யுணர்வு நட்ட யோகியி னிந்தை கேட்கிற்
றெள்ளத்தஞ் செவி புதைத்துத் தூரத்தாம் போவ தேயாங்
கள்ளத்தார் தம்மைக் காணல் கருதுதன் மொழிதல் வேண்டா
வெள்ளற்பா தகரைக் கோற லறத்தையும் வித்ததன்றே. 10

நிந்தித்தார் துதித்தா ரென்னு நினைவுஞா னிகட்கு முண்டோ
பந்தித்தங் கவர்பாற் செய்யப் படும்வினை தம்மைச் சூழ்ந்தங்
குந்தித்தீ நரகின் வீழ்த்தி யுழக்குத லயர்த்தி மேல்போய்ச்
சந்தித்த சுவர்க்கத் தின்பந் தருகுதல் செய்யு மன்றே. 11

சமயாசாரம்.

யாவரே யெனினு மிறைவனை வணங்கி யருந்தவ முயல்வரே லவரைத், தேவராய் நினைவாற் குய்யலா முன்னைத் திறநினைபவர்க்கரு நரகாந், தேவரா மவரே சிலைகலந் தெய்வ மாவகை சிந்தனை செய்தால், யாவரே யவரை முற்றொழி னினைவ ரிறைவரென் றிறைஞ்சுத லல்லால். 12

அறிஞரை யிகழ்ந்தோர்கேடு முற்றிற்று.

ஆகச் செய்யுள் - 217

# 7. கணணவிதி.

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

அண்ணலை யரிய ஞானி திறமெலா மருளி னாற்போ
லுண்ணிலா வாவி போனா லோங்கிய ஞானி காயம்
பண்ணுறு செயறா னேது பகர்வுறும் பரிச தெங்ங
னெண்ணிலா வடிய னேனுக் கியம்பிநீ யருள வேண்டும். 1

கூறிய வுடலினைக் கொளுந்துந் தீயினாற்
றேறிட மறைமுறை செய்வ தோவிது
பாறவை முதலுணப் பழிக்கத் தக்கதோ
வேறிது தருசெயல் விமல கூறுவாய். 2

ஆறிய ஞானிக ளாக்கை முன்னமே
தேறிய ஞானவெந் தீயிற் சுட்டனர்
வேறினி யிவ்வுடல் வேவ வென்றுரை
கூறவுந் தகாதெனக் குரவன் கூறுவான். 3

* முன்னமே பாகமா மூர தீயினாற்
பின்னரும் வேவவேண் டுமோ பேசிடா
யன்னதே யிவ்வுட லறிவா லட்டது
பின்னினிச் சுடுவதும் பிழையே யாகுமால். 4

பிறிவி லாத பிரமபீ சன்னுட
லிறுதி யாவன நீண்டிடி லெங்கணு
மறுகி விற்கிடை கோடி யனலதாய்ச்
செறிவு செய்யுமத் தேசமென் றோதினான். 5

பாறவை முதல வுண்ணப் பார்தனி லிகழ்ந்து போக்கி
னேறிய செருவா லென்று மிறுதியா மாரி யும்போய்த்
தூறிய பசியு நோயு முறுதியா முயிர்கட் கென்று
கூறினான் ஞான மென்னுங் குரைகடற் கருணைக் குன்றம். 6

ஆதலா லிந்தக் காயத் தறிவதாம் பிரம பூசை
யேதம தறவே கொண்ட வியல்பினா லிதன்ற னாம
மோதிய பிரமகோச மெனவறிந் தோன்கோ சத்தைக்
காதலா லர்ச்சித் துப்பின் களிப்பதே கருமங் கண்டாய். 7

* அர்ச்சிக்கும் படி † மெய தென்னி னுங்குருஞ் சனமீ ராட்டி
மைசசுத்தா னேங்கா ரத்தால் வந்தனு திமெலாஞ் செய்து
மெச்சித்தான் சுண்ணங் கூத்துப் பாட்டுமே வலங்கா ரத்தா
லர்ச்சிப்பா ரரச ரில்லோ ரறத்தினல் லோர்க ளாயர. 8

† கோசத்தை யாங்கு என்றும் பாடமுண்டு.

* ஆங்குமற் றரச ரில்லோ ரறநெறி யறியா ராகி
லோங்குநல் லோகி செய்வா ‡ னுலகுற மோங்கற் காகப்
பாங்கினு லிவணஞ் செய்தாற் பயன்மழை நல்கு மென்மேற்
றீங்கிலா வளஞ்சி றந்து திகழுமத் தேச மென்றும். 9

‡ னுலகிட்சார்த்தமாகப் என்றும் பாடமுண்டு.

மறையோருற்ற வரசாளராதி மதியோர்கள் கோசத்தா, புறைவார்க்கு நல்ல விடமேவியங்க ளெறியார மல்கு குழிசா, வரிறைவாக வாரி யூடுறு கல்வி திகழ்கோசம் வைத்ததனின் மேன், மறையோது பஞ்ச ருடனாயு மன்கொடியையாக வூழியிடவே. 10

## தறுந்திரட்டு

பாலறிவ ரானவர் மரித்தலென் மரித்தான்
மேலியுடல் செய்துவதென் னென்னின் மிருஞானத்
காலறியு நுண்ணுட லமர்ந்தவை நுகர்ந்தாற்
றூலவுடல் போமிவர்க டுஞ்சினமை யின்றே. 70

நண்ணிய காயஞ் சுத்த ஞானியை நழுவும் போது
விண்ணியல் வடக்கே போயென் வெய்யவன் றெற்கே போயென்
புண்ணிய பூமி யாயென் புலையர்தம் மிடமே யாயென்
றண்ணிய வழியாற் போயென் றலையினூ டுயிர்ப்புப் போயென். 71

பரம்பர முன்னர்ந்திடு ஞானி பாரவர்
விரும்பிய வகைபெற விளங்கு மேனிதா
னரும்பரம் பாமுடிவந் தமர்ந்த தாதலாற்
குரம்பையென் றிகழலற் கோயி லென்பவே. 72

அந்தமின் ஞானிதன் னுடற் றீயினுல்
வெந்திடி னுடலாம் வெப்புந் தீயினி
னொந்திடு நாயநரி நுகரி னுண்டெரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே. 73

யாது செய்வதிக் கோசமென் றுரைசெயி லிலங்கிய மூவர்க்கு
மாதி சொல்லிய பரிசிலே யருச்சனை செய்தது கணித்தங்கோர்
போதிற் பீடமா லயமியன் றதுசெய்து பூசைசெய தடிபோற்றி
மீது செய்வதல் லாதுபின் போதகக் கிரியைசெய் திடவேண்டா. 74

சாற்றிய பிரம கோசந் தரித்துடன் சென்றோர் தங்கட்
கேற்றிய வடிக்கோ ரசுவ மேதமென் றியம்பும் வேதம்
போற்றியே செய்வித் தோர்க்குப் புகலும்பா ரசுவ மேத
மாற்றவங் கப்போ தூற்ற பிரமபா தகனுஞ் சுத்தன். 11

சூலங்கெழு பிண்ட முன்னாக் குலவிய கிரியை வேண்டா
திலங்கிய ஞானி கட்கே யியைந்தபூ சையதே செய்க
நலங்கெழு மிடத்திற் பீடம் பதுமைநல் லரசு முன்னா
வலங்கிருத மெவையுஞ் செய்க வெனமறை யறைந்த தன்றே.

ஆண்டுக டோறு மந்த நாளிலே யோகி சற்கு
ஞீண்டிய பூசை செய்வ தென்றரு மறைக டாமும்
பூண்டவா கமபு ராணம் புகல்வுறு மிருதி யுண்மை
காண்டமால் பிரம னீசன் கருதிய திதனைக் கண்டாய். 13

## கனன விதி முற்றிற்று.

ஆகச் செய்யுள் 230.

---

## கூறுந்திரட்டு.

மஞ்சனஞ் செய்து மணியணை யிருத்திமன் னவன்மரு மத்தாகிக்
கஞ்ச நற்பதங் காசினி கதிரவன் கண்டிசைக் கிறைகன்ன
மஞ்சு டர்க்கன லவர்க்கிரு புருவநு வெரியா னுதலென்றே
யெஞ்ச லில்லவர் நாமயோங் காரமுன் னியம்பியர்ச் சனைசெய்க. 75

பாடி யாடிடப் பாவையர் பல்லியம் பலமுழங் கிடமஞ்சட்
கோடி யாடைபூ மாலைகு ழறலினிற் கொம்பனா ரிடத்தெண்ணெ
யாடல் செய்துசென் னியினமிசைச் சுண்ணமு மப்பிநின் றவர்க்கியக்கச
சேட வெண்ணெய்சுண் ணங்கடாம் பூலமுஞ் செழுமல ருடன்சாந்தும். 76

சயசய வெனுஞ்சுருதி சங்கமுட னேபல்
லியமுழவ மேவவுட னேகினவர் வேறோ
ரயமக பயன்றலை தரிக்கி லடிதோறும்
பயனது தரும்பிரம பாதகனு முத்தன். 77

பிரசஞ் சிந்தும் பிரம தருக்கீ ழேயாத
லரசின் கீழே யாகுதல் செய்யப் படுமாதி
திரிவன் னத்தோ ருகிற் காயத் திரியோடே
யரிதன் சூத்தமு மதயபனஞ்செய் தபிடேகம். 78

படியினிரு மூன்றுமுழ மட்டகலம் வெட்டிப் பழிப்பினவு ரத்தின
மணிப் பீடமதி லிட்டுச், சுடரிசையி லாமலரில் வைத்திலவ ணைத்தைக்
கொண்டுபொடி மஞ்சண்மிசை மண்கொடு நிறைத்தங், கிடமுடைய பீட
மது பண்ணிவிழ வங்கை யிரண்டுதிவ சஞ்செய்தனர சாதிலியன்ற, படி
செய்ததி லாண்டுதொறு நல்விழவு செய்யப் படுமென விதித்தது பழிப்பின
மறையன்றே. 79

# 4. பரணுலகப் பவணை.

## 1. காரண காரிய வியல்பு.

### போதரத்நாகரம்

தெரிவு று மறிஞர்க டுறந்தி றப்பட
விரிவுற வருளிய விமல நாயகா
வொருபொரு ளுணரமெய் யுலகுணர்ந்ததென்
பொருவரு பொருளையும் புகல வேண்டுமால்.

காரணமா மொருபொருளைக் காணவத்தின் காரியமாம் பலவு மவன் கண்டானாகு, மோரணமா மண்ணொன்றை யுணரவத்தி னிலகியகா ரியங்களெலா முணர்ந்தாற்போலக், காரணமா யுள்ள சிற் சத்தொன்றத்திற் காரியமா முலகெலையு மாதலாலே, பூர ணமா மொன்றுணர வுலகமெல்லாம் புரையறவே யறிவது மெய்ப பொருண்மைகாணே. 2

### குறுந்திரட்டு.

#### காரண காரிய வேறின்மை.

யாது மறியவொ மொன்றறிய வென்றுமறை
யோது பொருளை வுணரி னுலகெல்லா
மாதியா மேது வறிய வறிந்ததாம்
எதுவா மண்காண வெக்கடமுங் கண்டாற்போல் 80

ஈசனை யொழியவே றில்லை யிசசகம்
பேசின வணிகலம் பொன்னிற் பின்னமோ
காசினி யல்லவோ கடாதி நூலலாற்
றாசினை யுண்டெனச் சொல்ல லாகுமோ. 81

பேர்வேறு பாட்டாலே பேதமுள தென்னிற்
பார்வேறு பட்டதிலைப் பண்ணுகின்ற பேரொழிய
வார்வேறு கண்டார் கடங்க ளகிலமெனும
பேர் வே றொழியப் பிரமமல தில்லையால். 82

உண்டான தொன்றே யுரைப்பதனி லுண்டாமோ
வண்டார் குழன்மலடி மைந்தனெனும் வார்த்தையாற்
கண்டோ மெனிலுளது போலே கனவத்தார்
வெண்டேர் முதலைத் தனைதோன்று மெய்ப்பேபோல். 83

### சொரூபானந்தசித்தி.

காரிய மெல்லா முள்ள காரணம் வேறு மன்று
காரிய மொருகால் வேறாய் வேறன்றி யிருப்ப தன்று
காரியங் கார ணத்தின் வேறன்று கருதி னந்தக்
காரிய மசத்தோ சத்தோ சதசத்தாய் வேறோ வென்றான். 3

சத்தாயே வேற தென்னிற் காரண முடைய தொன்றே
பொய்த்தாய காரி யத்தின் சத்தைதா னெங்ங னென்னின்
மெய்த்தாய பானு மொன்றாய்க் கடங்களின் வேறாய் நிற்கும்
வித்தார மொக்கு மென்றே வேதங்கள் விளம்புமன்றே. 4

சத்தாயே வேற தென்னிற் காரண முடைய தொன்றே
பொய்த்தாய காரி யத்தின் சத்தைபோ புகலுங் காலை
யொத்தாகி நின்ற தென்றே யுரைத்தன னுலக மெல்லாம்
வைத்தாயு மறைக ளோது மலர்மிசை மன்னும் வானோன். 5

### குறுந்திரட்டு.

#### காரண காரிய வேறின்மை.

ஆற்பர போத சற்பா வத்தினாற் சகத்தின் றோற்றங்
கற்பித மான மாயா காரியம் பரிணா மந்தான்
புற்புத வாகா ரத்தாற் றோன்றினும் புனலில் வேறோ
சிற்பரம் பொருளை யன்றித் திகழ்வது பிறிதொன் றில்லை. 84

மண்ணாதி கடாதிக்கு வருங்காரண முழுதும்
பண்ணாது குலாலாதி யொழிந்தென் றனைப் பகர
வொண்ணுபா மவைபோற்சட மன்றேயுணர் வன்றோ
விண்ணாதிய வுலகஞ்செய வேறோர்பரன் வேண்டா. 85

இடஞ்செயுங் கருவி கால மண்வினை யெல்லாங் கூடிக்
கடஞ்செயுங் குலாலன் போலக் கட னுல கங்கள் செய்யச்
சடஞ்செயு முதவி வேண்டுஞ் சடங்கட கத்தாக் கொண்டு
மடஞ்செயு முள்ளத் தார்க்கு வாசகஞ் செய்வ தென்னே. 86

சராசர மான வுலகுசெய வேறு தலைவரிலை யான சகலமும்
பிரமவி கார நிலையில்வழு வாது பெறுவதென வேத மறையவே
பரமனா னுக்கு மெனவரியை யாதி பகவனென ஞால முதவினான்
பிரமனென மாதர் சனமுதல தேவர் பிறிதுமென வாத மறைவரால்.

காரிய மதனைச் செய்வான் செய்வினை கருவி காலஞ்
சீரிய பொருளனைத்துஞ் சிறந்தசிற் சொரூப மாக
வாரிய ரறிவர் வெவ்வே றாகவே யறிவி லாத
பூரிய ரறிவ ரொன்று புகன்றன மறைக ளன்றே. 88

காரண சத்தை தானே யென்றிடில் வேறு சொன்ன
காரிய சத்தை யில்லை யாயிடு முன்பு சொன்ன
காரண சத்தை யொன்றே யானபி னந்தச் சத்தைக்
கோதொரு பேத முண்டாம் படியெங்ங னுரைமி னென்றான். 6

சத்தைதா னொன்றாய் நின்ற தாயினுங் காரி யங்க
ளொத்தபேர் வேறு பட்டா லுள்ளகா ரணத்தின் வேறே
யித்தகைத் தென்ற வார்த்தை யியம்புபே ரளவே யானால்
வைத்தகா ரியமுண் டென்னும் வார்த்தையு மசத்தே யாகும். 7

காரண சத்தை யேயக் காரிய சத்தை யின்று
வேறொரு சத்தை யுண்டே யென்றிடின் வேறு சொன்ன
காரிய சத்தை யுள்ள காரண சத்தை யோடு
கூறிய சத்தாய்க் கொண்டோ வசத்தாயோ நிற்ப தென்றான். 8

சத்தாய்க் கொண்டே வேறென்னி னொன்றே சத்தை யிரண்டாகா
தசத்தாய்க் கொண்டு காரணத்தோ டாகி வேறே நிற்குமென்னி
னசத்தா மிதுதா னிலாமையினா லசத்தே யாகுங் காரியத்தை
யிசைத்தே யுளதாய்ச் செயமாட்டா தென்றுமலடி மகன்போல.

இரண்டிற்கு மொன்றே சத்தை யெனுமிது வேறேயென்னிற்
றிரண்டிடுங் குற்ற மெல்லாஞ் செறிதனிச் சயமெப் போதுந்
திரண்டகா ரியம சத்தே யாதலாற் சதசத் தென்னி
லிரண்டிற்கு முரைத்த குற்ற மிசைந்திடு மியல்பி னாலே. 10

ஆமன்றென நினையீரல தன்பின்வழி யறிவீர்
நாமுன்சொன முதற்காரண மறிய முழுதறிவாஞ்
சேமம்பட மிகவுந்தெளி வுறுவீரிது வேறே
தாமந்தரு மலர்மேலுறை தலைவன்னுரை தருமால். 11

பேதந்நெறி யோரின்னில தாகும்மத னாலே
பேதம்மொ டபேதம்மது பேசல்பிழை யேயா
பேதம்மில தாயெங்கணு மொன்றாயொழி வில்லா
தியாதொன்றது முதற்காரண மெனுமாமலர் மிசையோன். 12

எப்பொருள் களுக்குந் தோற்றமு நிலையு மிறுதியு மிதன்கணே யாகி, யொபபிட வொன்று மின்றிபே யென்று முள்ளதா யுரை யுணர் விறந்த,வப்பொருணேரே யறிந்தபோ தெல்லாப் பொருள் களு மறிந்ததாமந்த,மெய்ப்பொரு டானே யெப்பொருள் களுமாய் விளங்கலான் வேறிலாமையினால். 13

காரண காரிய வியல்பு முற்றிற்று.

ஆகச் செய்யுள் 243

# 2. பிரபஞ்சோற்பத்தி.

## சித்தாந்ததீபிகை.

அலகில்கலைச் சமயிகடா மகிலமுதல் கொளுமாறு
நிலவியசீர் மறைமுடிவு நிகழ்த்தியிநிம் பரிசனுவுங்
குலவியநற் சிவாகமங்கள் கூறித்துரைத்த வதுதானு
மிலகுதவத் தெழின்முனியே யிசைத்தருளி யிடவேண்டும். 1

சாற்று மாத்துமி சகவிதை தான்சதுட் கோடிகூ னிய மென்னு, மேற்று புத்தியாஞ் சித்தென வியோகவா சாரனு மிசைக்கின்றான், மாற்றும் வைபாடி யனுவெனு மற்றவ னவ்வ ணுப் புணர்வென்னும், போற்று மிவ்வகை புகன்றனர் புத்தராம் போதகி னர்களையா. 2

* கன்ம நின்மித மாயிடு முலகனு † குணபரி கன்மந்தா
னின்மி தன்னிலை யாமைநித் தியமில் ஓளபல வொன்றென்னப்
பன்னி நின்றிட வருவதிவ் வுலகியல் பார்க்கின்மூ லமும்வேறென்
றுன்ன நின்றது மிலையென வுரைசெய்வா ரருகரா முணர்வில்லார்.

† குணம்பகர் என்றும் பாடமுண்டு.

---

## தாறுந்திரட்டு.

### காரணம்.

ஆதியி லுளதறி வனந்த சிற்சுகப்
பேதமில் பிரமமே பேத மில்லென
வோதிய முடிவினு முள்ள தப்பொரு
ளாதலி லகிலகா ரணம தாகுமால். 89

காதும் வாதியர் கற்றநற் றளவினு லுலகுக்
கேது வாகவிங் கியம்பிய பொருட்கெலா மேது
வேத மோதிய பிரமமே யென்றுமெய் யுணர்ந்த
போது மாநுடன் பொன்றுமிப் பிறவியிற் புகுதான். 90

சகலசம யத்தவர்க டத்தமத நூலின்
வகிலமுதல் சொல்லுவது மாகிமறை யந்தம்
புகலுபரி சும்புரையி லப்பொருள் விரித்தே
யிகலிலர னுகம மிசைப்பது மிசைப்பாம். 91

ஓர்த்து நான்கு மதம்புத்தத் தியோகாசார னுணர்வென்றான்
மாத்து மிகன்றான் சதுட்கோடி மாண்ட தென்றான் வைபாடி
யாத்த வணுவே யெனவுரைத்தா னகிலோற் பத்தி யறிவின்றி
யார்த்துச் சௌத்தி ராந்திகனு மணுவின் புணர்வே யென்றனனால்.

பூதநா லுள வவற்றினுற் பொலிவது புகலுல கதுதானு
மேத மானதொன் றறவுயிர் பரம்வினை யியற்றிடு மெனவில்லை
யாது மாவது மழிவது முலகிய லலதிலை யெனநின்றே
யோது மாமுணர் வெதுமறு காயலோ காயத னெனுமுடன். 4

சித்த தேவடி வாயிக பரமுறு சிவனின் மிதமாகி
யுய்த்ததாமுல கதுசெய வேறொரு பரனுள னெனவில்லை
வித்ததாவது முலகினில் விளைவது † மளவில திலதென்றே
கொக்கை யாமறி வதுகொடு குலவுமீ மாம்சகர் கோளாயா. 5

† மவனல திலையென்றே என்றும் பாடமுண்டு.

## குறுந்திரட்டு.

### காரணம்.

என்றுமுள ஞானபர னில்லையுயி ரில்லை
நன்றியொடு தீவினையு மில்லையகன் ஞாலம்
பொன்றிவ ரனுலுரைசெய் பூதவியல் பொன்றே
யொன்றுமறி யாதவுல காயத னுரைத்தான். 93

போத மேவடி வாம்புரு டனனவா
றோத ருகியிஞ் ஞாலஞ்செய் வானிலை
யாத லாலவ னுற்பத்தி யாமென
வேத வாதரின் மீமாஞ் சகன்சொன்னான். 94

சுகதி தேடும் புருடன் சுரேசனும்
பகுதி தானப் பரமன்றன் முன்னரே
விகுதி முற்றும் விரித்த தொடுக்கிடுந்
தகுதி வித்தெனச சாங்கியன் கூறினான். 95

க்ஷணிக புத்தவை பாடியன் கழறிய பரிசே
யணுவி னிற்றிர ளுலகசத் தணுவசத் தல்ல
வினையி னற்பரன் குணங்கொடு செயுமறு வென்றிவ்
வணமு ரைத்தன ந்யாயவை சேடிகமார்க்கம். 96

சத்த வாதிகள் சத்தமே யென்றனர் சைவர்
நித்த மாயையென் றுரைத்தனர் நிகிலவுற் பத்தி
சித்த தேபரி ணாமமென் றனர்சிவாத் விதிகள்
மத்தயாகிய சாத்தருஞ் சிவமென மதித்தார். 97

ஒப்பற விப்படி யுற்பவஞ் செய்ததைத்
தப்பற வொருவரோ டொருவர் தர்க்கமுஞ்
செப்புவர் நூலினுஞ் செவ்வி தாவிவை
மெய்ப்பொரு ளன்றெனும் வேத மந்தமே. 98

சாற்றியசி வான்மாவே பரமுமவன் சன்னிதிக்கே
யேற்றமிகு பகுதியது விகுதியினு லிவ்வுலகை
யாற்றவிரித் தொடுக்குதலா லதுசகவித் தாகுமெனப்
போற்றுவர்கள் சாங்கியராம் போதமிலி களுடையயா. 6

நெறியில் புத்தவை பாடிக ருரையென நியாயவை சேடங்கள்
செறிய ணுத்திர ளுலகத்தின் முதலணு சத்துல கசத்தென்றுங்
குறியறச்சக மதுசெய்வ திறையுறு குணமது கொடுவென்று
மறிவ தற்றவ முறுமறி வதுகொடு மறைவரப் பரிசந்தோ. 7

---

## குறுந்திரட்டு.

### காரணம்.

பிதையா கிவிளங் தபெருந் தருவோர்
விதையா லுளதே னியனு கிகளுக்
குதையா தியிலா வொளியே முதலிற்
சிதையா விதையென் றமறைச் சிரமே 99

கறைய தாகிய தமத்துடன் கலந்தசித் ததிலே
யறைவ தாகிய வகிலவுற் பவமெனை வாய்ந்த
மறையினீறது தொகுத்துரை செய்பொருள் வகுத்திங்
கிறைவ னுகம மியம்பிய பரிசினை யிசைப்பாம். 100

தமத்தொடு கலந்த சித்தது சிவன்சிற் சத்தியாந் தமஞ்சட மாயை
யமைத்தநாள் கூற வில்லையா மிறைவற் கயின்னபின் னங்களா யிருக்குஞ்
சமத்தசத் திக்கு மடியிவை மாயா சத்திதான் சகத்தினுக் கெல்லா
நிமித்தமா ஞான சத்திமுத் திக்கு நிமித்தமா நிமலன்சன் னிதியில். 101

சேதன மல்லா மாயையிச் சகத்தை செய்பமாட் டாதுசிற் சத்தி
வேதன வுருவ தாதலாற் செய்யா விண்முதல் விளக்குமா றெங்ங
னாதபகிரணப் புணர்ச்சியாற் காந்த மனல்செயுஞ் சேட்டையா மெனவே
சாதமா மிறைசிற் சத்தியின் புணர்ப்பாற் சடமதா மாயையிற் சகத்தே 102

மாயை யோனியான் வையக் கருச்செய்வான்
றூய னாகிலு மென்றனன் றூயவ
ரோயும் ஞானி களுமவர் தந்தையுந்
தாயு மிச்சகத் திற்கென்று சாற்றினான். 103

தருமொலி பிரமம தெனச்ச மைந்திடு
மகமுறு மறிவிலி யகில மூலமு
மிருதரு மொலியல திலது வேறென
விகபர மெதுமறி யாம லோதுமால். 8

பதியென நிகழ்பசு மாயை நித்தமா
யதுமுதன் முடிவற வனாதி ‡ சித்தமாய்
விதமுறு முலகதின் விதைய தாமெனச்
சதுமறை யறிவில்லை வாதி சாற்றுமால். 9

‡ நித்தமாய் என்றும் பாடமுண்டு.

சத்தி யேபரப் பிரமமத் துவிதமாய்ச் சாற்றும்வா தியரோடு
சித்த தேபரி ணமமென் றறைசிவாத் துவிதியு முதலாக
வுய்த்த வாதிய ருலகது வாய்விரி வதுமுயர் பரமென்றே
சுத்த வேதவா கமமறை துணிவறி யாதுசொல் லுவர்தாமே. 10

* சாற்றிய பிரம மென்று மவிகாரி சன்னி திக்கே
போற்றிய † வனுரு பத்தாய்ப் பொய்யதா மாயை யிந்த
வேற்றிய வுலகுக் கெல்லா மூலமா யாவுஞ் செய்து
மாற்றிடுந் தானே யென்று மதித்தனன் மாயா வாதி. 11

† வவனி ருப்பப் என்றும் பாடமுண்டு.

படைப்பொடு சகத்துற் பத்தி பழுதற வறிவி லாதார்
வடுப்படு மதிமயக்கால் வகுத்தவ ருரைத்த தெல்லா
மடுப்பதன் றரிய வேதா கமத்துறை துணிவுக் கென்றே
யெடுத்துரை செய்வர் மேலோ ரிசைத்திட வதனை யுங்கேள். 12

சொரூபானந்தசித்தி.

பரமன்செய லறியாது படைத்தானுல கெல்லா
மரனென்பவ ரரியென்பவ ரயனென்பவர் சிலரிந்
திரனென்பவன் முதற்றேவர்கள் செயலென்பவர் சடமா
மருவுங்குண வடிவென்பவ ரணுவென்பவர் மயலால். 13

வானிலா வோசை யென்பர் வந்தொரு கணத்திற் றோன்றி
யானியாம் புந்தி யென்ப ரடையவுங் கெட்டு நின்ற
சூனிய மென்பர் ‡ பூதத் தொழிலெனச் சொல்லா நிற்ப
ரானவா றுருவ ராலன் றடையவு மியல்பே யென்பர். 14

‡ பூத மென்னவே என்றும் பாடமுண்டு.

தந்தமா லான பெத்தவா தியர்தாந் தங்களிற் றுங்கடர்க் கங்
கள், கந்திடா † நிற்ப ரிவைபெலாஞ் சுருதி மிருதிகள் கருதிய

வழிக்குஞ், சுத்தமா விருத்த மாகுமென் றேயென் றுணியுமதால் பிறவியிற் சுழல்வார், சித்தமா னதுமேபோ யிவற்றிலே காதல் செய்யுமுன் செய்ததீ வினையால். 15

† நிற்கும் பரிசெலாஞ் என்றும் பாடமுண்டு.

## நிகிலோற்பத்தி.

### மெய்ம்மொழி.

ஆதலால் வாதச் சமயிக ளுரைத்த வழுக்குடை யறிவெலாம் விட்டுக், கோதிலா வுண்மைத் தன்மையை யுணர்த்துங் குலவுநல் லுபநிடதங்க, ணீதியா முறையா னிகிலவுற் பத்தி நிகழ்த்திடும் பரிசினை நிகழ்த்த, வாதிலா மதியான் மதுரசீ லத்து மகிழ்தரு புதல்வநீ மதியே. 16

### சொருபாநந்தசித்தி.

தோன்றலா லசித்து மாகித் தமத்தொடு கலந்து நின்றே
யான்றவம் முனிகள் பண்ணு மனனத்தா லளப்பொ ணாதாய்ச்
சான்றதா யெங்கு நின்ற சங்கர னுடைத்தா யொன்று
யீன்றிடு மரிய வெல்லா மித்தன்மைத் தெனவொன் றுண்டு. 17

அறியாதா ரசத்தாய் முன்பு காரண முளதாய்த் தென்பர்
நெறியாலிவ் வசத்துண் டாக்குங் காரண மாகா தென்றும்
பிறியாதாய்க் காரி யங்க ளிதனின்றும் பிறக்கு மென்னின்
வறிதாய மலடி மைந்தன் காரண மக்கட் கெல்லாம். 18

அசத்துத்தன் சத்தி யாலே யாவுக்கு முதலா மென்னி
லசத்துக்குச் சத்தி கூடா தாமசத் தாத லாலே
யசத்தலா வித்தி லென்று மங்குரந் தோன்ற லாலே
யசத்திற்கஃ தின்றுஞ் சத்தே யாவையு மாவ தென்றும். 19

எல்லாமுண் டாவதற்கு முன்னே தோன்று மித்தனைக்குங் காரணமாஞ் சத்தே யாகு, மில்லாத முதன்முடிவை யுடைத்தா யொன்று யிருக்குமிது வென்றுமுள வியல்பிற் றாகி, நில்லாத வுலகனைத்து முன்புசெய்த நெறியதனை யுடைத்தாகி நிமல மாகிச், சொல்லாலு மளப்பரிதாய்த் தன்ன துண்மை சுருதிமுடி வதனா லுந் தொடர்வொ ணாதாய். 20

### மெய்ம்மொழி.

சுத்தையாய்ப் பரையா யிருந்துள சுருதி சுருங்கிட நிகழ்த் திய பொருளை, நித்தவா கமங்க ளொறிகையால் விரிந்து நிகழ்த்

24407

திடு மெங்ஙன மென்னிற், சித்ததாய் நின்றே தமத்தொடு கலந்த
வென்றவத் தெரிவரும் பொருளை, வித்தக மாக விளங்கிட
வுணர்த்து மதுதனை விருப்பொடுங் கேளாய். 21

மன்னுநற் சிவத்திற் சத்தி மதித்திடி னிருவ கைத்தாம்
பின்னமற் றிருப்ப தொன்று பின்னமா யிருப்ப தொன்று
மன்னிய சிவத்த பின்னை மாசில்சிற் சத்தி யாகும்
பின்னமா வதுச டந்தான் பேர்சொலின் மாயை யன்றே. 22

அரியதா யறிதற் கொண்ணு வரும்பெருஞ் சிவத்தை நாளுந்
தெரியுமா றதனைச் செய்யுஞ் சிறந்தசிற் சத்தி தானும்
பிரிவிலாச் சிவத்திற் றென்றும் பின்னமா மாயா சத்தி
விரியுமச் சகத்திற் றென்றும் வித்தாயே மேவு மன்றே. 23

ஒத்தவவ் வியத்தம் பீச முபாதானஞ் சகத்தி யோனி
† பெத்தகா ரணம நித்தம் பிரதானம் பகுதி யென்று
மத்தமா மாயை யென்று மாமாயை யென்றும் பேராய்
நித்தமாய்ச் சிவமென் றன்றே நிகழ்ந்திடு மதுவு மன்றே. 24

† பெத்தகாரண நிமித்தம் என்றும் பாடமுண்டு.

பரஞ்சித்தி னுதியா நின்ற பலகிர ணம்ப தித்தங்
கிரஞ்சித்த போது நாம மெழில்கொள்குண் டலிமா யைக்குச்
சிரஞ்சித்தின் புணர்ச்சி யாலே செகத்தைமுன் கர்ப்பந் தாங்கி
யுரஞ்சித்தாய் நின்று தானே யுலகங்க ளீன்ற தன்றே. 25

சுருக்கமில் சிவசிற் சத்தி தோய்ந்தபின் மாயா சத்தி
தருக்கியே கர்ப்பந் தாங்கிச் சகத்தைமுன் பெற்ற தன்மை
யருக்கனற் கிரண யோகா லந்தரத் தியங்கு மேகம்
பெருத்தநீர் கர்ப்பந் தாங்கிப் பெய்யுமா மழைபோ லன்றே. 26

சிற்சத்தி தானே யொன்றைச் செய்திட மாட்டா தாகுஞ்
சிற்சத்தி பொழியச் சேட்டை செடமாயை தனக்கு மில்லைச்
சிற்சத்தா முயிரைக் கூட்டிச் செடவுடல் சேட்டித் தாங்குச்
சிற்சத்தி கூட்டி மாயை செகத்தினை நடத்து மன்றே. 27

சித்துட னசித்து மாயே சிவசத்தி யிருப்ப தென்றுஞ்
சித்துட னசித்தி டத்தே செகத்தினுற் பத்தி தானுஞ்
சித்துட னசித்து மாகுஞ் செகத்தினிற் சராச ரங்கள்
சித்துட னசித்தா யுள்ள சிவசத்தி மயஞ்ச கத்தே. 28

நித்தம்போ லநித்த ‡ யாக்கை நிலையெனக் கருது வித்துச்
சுத்தமா மின்ப மேபோற் றுன்பத்தைத் தோற்று வித்துப்
பெத்தமா முயிர்கள் புத்தி பிரமிக்கப் பண்ணு மித்தான்
மத்தமா மாயை யின்றன் மயமதே யகில மெல்லாம். 29

‡ வாழ்க்கை என்றும் பாடமுண்டு.

பிறப்பதே பேணி நாளும் பெரியதோ ரின்ப மென்றே
யிறப்பதே தொழிலா யென்று † மேடணைத் திறம துற்றுச்
சிறப்பதே யுடைய வின்பச் சிவத்தினைக் கூடா வண்ண
மறப்பதே பண்ணு மத்தான் மாயையின் மயஞ்ச கத்தே. 30

† மேடணை யின்பமுற்று என்றும் பாடமுண்டு.

பிரபஞ்சோற்பத்தி நிகிலோற்பத்தி முற்றும்.

ஆகச் செய்யுள் 273

---

## குறுந்திரட்டு

### படைப்பு

இருக்கினின் முடிவோ ரெலையற நானா விதமோதுஞ்
சுருக்கமி லுலகின் றோற்ற முரைக்கத் தொலையாவாங்
திருக்கிய மனனைத் தேசிகன் மீட்டுச் சிற்சத்தா
யொருக்கிய வகையே யுதயமு முலகிற் குரைசெய்வாம். 104

வாச கஞ்செய வொணாத சத்திபர வத்துவின் கணவர வத்திலே
யீசன் வந்தவிறை வன்கணே பரவி யோமம்வந்த திலவே துவாய்ப்
பேசு காலபரம் வந்து டன்புருடன்வந்து பின்பகுதி வந்துபின்
மாசின் மானதனில் வந்தகங் கரம தாகி முக்குண மளித்தலால். 105

சத்துவவாங் காரத்தே தருமனஞா னேந்திரியஞ் சனன மாகுஞ்
சத்தமுதற் பூதமெலாந் தாமதவாங் காரத்தே சனன மாகு
மத்திமமா மிராசதவாங் காரத்தே வருங்கன்மேந் திரிய மென்றிட்
டுத்தமமா மறைபுரைக்கு முலகமெலா மாங்காரத் துதித்த வன்றே. 106

சாற்றப் படும்பூத தன்மாத் திரத்தைத் தனித்துத் தனித்தொன் றிரண்டாக்கி யோரோர், கூற்றைப் பகுத்தொன்று நாலாக்கி யேதன் கூறல்ல வானு லினுங் கூட்ட வானங், காற்றுக் கனற்றோய மண்ணென்று தூலீ கரித்தண்ட மாய்முன்செய் கருமத்தின் வகையே, தோற்றப் படுந் தேவர் நராதியென்றே சொல்லப் படுந்தூய சுருதித் தலைக்கே. 107

முந்து சத்தி முதலா முடிவென
வந்த மண்ணள வாக வரம்பிலாப்
பந்த மாண்டெ லாமுண்மை பார்த்திடி
னந்த மாதியி லானன்றி யில்லையே. 108

## 3. சிருட்டி.

மெய்ம்மொழி (நடராஜநிலயம்).

உலகினுற் பத்தி தன்னை யொண்மறை யாக மங்க
ளிலகிட வறைந்த வண்ண மெடுத்துரை செய்தாற் போல
நிலவிய வுலக மெல்லா நிகழ்ந்திடப் படைத்த வாறு
மலகில்சீர் கருணை யாலே யடியனேற் கருள வேண்டும். 1

தத்துவஞ் சகலோற் பத்தி தான்சகம் படைத்தற் காக
வுத்தம யோகி கட்கு முபகார நிமித்த மாகச்
சுத்தநற் சிவத்தோர் சிந்தை சுபாவசத் தியினுற் றோன்றிற்
றத்திலா யிரத்தொன் றீன்ற தரும்பரா சத்தி தன்னை. 2

ஆதியாஞ் சத்தி தோன்றிற் றத்திலா யிரத்தி லொன்றிற்
பேதியா விச்சை யத்திற் பிறந்ததாங் கதனிற் பின்னை
யோதிலா யிரத்தி னொன்றி னுதித்தது ஞான சத்தி
தீதிலாக் கிரியை யின்பின் செனித்ததாங் கத்தினன்றே. 3

சாற்றிய விந்தச் சத்தி தன்னிலா யிரத்த தொன்றிற்
றோற்றிடுஞ் சதாசி வந்தான் றுகளிலாச் சதாசி வத்திற்
போற்றுமா யிரத்தி லொன்றிற் புகன்றிடு மகேசன் றோன்று
மாற்றவங் குருத்தி ரன்பின் னயன்மாலு மவண மன்றே. 4

ஓதிய சதாசி வாதி யோங்குவா னுதி கட்கு
நீதியாந் தொழிலைந் திற்கு நிகரில்கர்த் தாக்க ளாகு
மோதிய தெல்லா மோரி லொண்சிவந் தானே பார்த்த
பேதமில் பருவந் தோறும் பெற்றவப் பொருள்க ளன்றே. 5

சொரூபாநந்தசித்தி.

அந்தத்துள தன்சத்தியை யடைவுற்றுள தாமிச்
செந்துக்கள்செய் கருமந்திகழ் காலம்பரு வஞ்செய்
தெந்தப்பொருள் களுமாக்குவ னெனவேயிறை யுன்னுப்
பந்தப்பட முன்போற்பல வுலகங்கள் படைத்தான். 6

காலமுங் கன்மந் தானும் பரிபாக மான வாற்றுன்
ஞாலமுண் டாக்கு நல்ல குணத்தினைக் கலந்து நிற்கும்
பாலதொன் றில்லா விந்தச் சத்திமான் படைத்தற் காக
வேலவே யெல்லா மாவோ மென்றுகொண் டிசைந்து பார்த்தான்.

பார்த்தபின் முன்னு காசம் வாயுவைப் படைத்துப் பின்பு
தீத்தனை யப்பைச் செய்தே யனமெனச் சொலப் பட்ட
பூத்தனை யுளதாய்ச் செய்த காரண மாகா வீசன்
வாய்த்தநுண் பூத மைந்தாய் வகுத்தவா றியம்பக் கேண்மோ. 8

தன்மாத் திரைக ளைந்தினையு மோரொன் றிரண்டாய்ப் பகுத்தொன்றை, நன்னு லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி னுடன் கூட்டி, யின்னே யலாத வைந்நான்கி லியல்பிற் கூட்ட வானுதி,பின்னே தூல பூதமெனப் பிறக்குமெனவே பெயர்த்து ரைத்தான். 9

### நித்தியானந்தசரிதை.

பூமியாம் பொன்னின் வண்ணம் வெள்ளியாம் புனலின் வண்ணம்
நாமமா மிரத்த மாகு நலந்திக ழங்கி வண்ணங்
காமமாஞ் சித்தம் போலக் கறுப்பதாங் காற்றின் வண்ணந்
தூமமாம் வடிவ மாகுந் துய்யவா னத்தின் வண்ணம். 10

வட்டமாம் வானின் ரூபம் வாயுவின் வடிவ மாறு
சட்டமாங் கோண மாகுந் தழறிரி கோண மாகு
மெட்டுநாட் பிறையே போல விலங்குநீர் நான்கு மூலைப்
பட்டிடு மண்ணின் ரூபம் பஞ்சபூ தத்து ரூபம். 11

சத்தப் பரிச ரூப விரத கந்த மைந்துந் தரணியதாஞ்
சத்தப் பரிச ரூப விரத நான்கும் புனலுக் கியல்பதாஞ்
சத்தப் பரிச ரூபமெனு மூன்றுந் தழலின் குணமாகுஞ்
சத்தப் பரிசங் காலதாம் வானிற் சத்தந் தானேயாம். 12

### சொரூபாநந்தசித்தி.

அறியாமை வடிவா யுள்ள புவனங்க ளமைத்துப் பின்பு
பிறியாத கன்மந் தன்னின் வசத்தினு லுயிர்கட் கெல்லாஞ்
செறிவாய கால பாக மானபி னீசன் றனே
பிறிவாகு நான்கு யோனி பிறந்திடும் வகையே செய்யும். 13

### சமயாசாரம்.

திண்ணார் சிலையின் மண்டேகந் தேசு கொண்ட வியல்புபோல்
விண்ணார் மேகம் வித்தின்றி விளைந்த வாறும் போலுயிர்கள்
தண்ணார் சகளஞ் சார்வின்றிச் சகளீ கரித்த முற்கருத்தாற்
பெண்ணு ணலியாம் வேற்றுமையும் பிறந்து தம்மிற் பிணித்தன
[வால். 14

நடராஜநிலயம்.

* உணர்வுயி ரொடுங்கி மாத ருதரத்தி லேய்ந்த யோனி
புணர்வழி போந்தோர் தாமும் புணர்பவை யுணரா வாபோ
லுணர்வுமெவ் வுயிரின் சத்தி னுடனுட னொடுங்கி யத்தின்
புணர்வழி யாகத் தோற்றும் புமான்களு மதனை யோரார். 15

ஈசனு மிறைவ னொத்த வறிவினு லெங்கு மாகிப்
பேசிடு நாமரூப முன்புபோ லுண்டாய்ப் பேணு
மாசிலாச் சகத்துத் தானே யுளதுபோ லாயி னுனு
மீசனை யொழிய வேறு நிற்பதொன் றில்லை யென்றும். 16

சோருபானந்தசித்தி.

சிலர்தி யுமிழ்ந்து விழுங்குவ தெப்படி தேகத்தே
மலந்தரு கேச வுரோமம தெப்படி மண்ணிற்கே
பலந்தரு மோடதி யெப்படி யப்படி யீசன்பா
லலர்ந்த தடங்கல் வெறுங்கன வொக்கும தாயுங்கால். 17

பன்னு தவத்திர ளுற்ற பரத்திடை யேமுன்ன
மன்ன மெழுந்ததி னின்று பிராணன் மனங்கன்மந்
தன்னி னுறும்பல லோகமும் வந்தது தாவில்லா
வின்னமு தென்றுணர் முத்தியும் வந்த திதன்கண்ணே. 18

அஞ்ஞானநிவிர்த்தி.

ஆனந்தங் காரணமென் றறையு மொன்றங் கான்மாவே காரணமென் றறையு மொன்று, வானின்று முலகம்வரு மென்னு மொன்று மாயையினுல் வருமென்னு மற்று மொன்று, தானுந் தா னுகுமெனுந் தனியே யொன்று சத்தி னின்றும் பிறப்ப தென்று மத்தி னின்றும், வானுந்தன் பெருமைகொடு வந்த தென்று மறைமொழிக டம்மிற்று மயங்குங் காணே. 19

சன்மத்தை வருக்கின்ற சுருதிகட்குந் தனித்தனியே தம் முடைய விரோதத் தாலே, சன்மத்திற் றுற்பரியந் தானுமில்லைச் சத்தினின்று முலகங்கள் சனிக்கும்போது, முன்மத்த மாயை தனை மூலமாக்கி மோகமய மானவுல கங்க ளானுற், பின்முத்த னேக னெனுஞ் சுருதி கட்குப் பேறுகொடுத் தொன் றுகையே பேறென் றுமே. 20

சிருட்டி முற்றிற்று.

ஆகச் செய்யுள் 293

---

* உணர்வுயி ரொடுங்கி மாத ருதரத்தி லேய்ந்த யோனி
யுணர்வழி போந்தோர் தாமுன் புணர்ப்பையு முணர்வர் போலு
முணருமெவ் வுயிருஞ் சித்தி னுடனுட னொடுங்கி யத்தின்
புணர்வழி யாதித் தோற்றம் புமான்களு மதனை யோரார்
என்றும் பாடமுண்டு.

## 4. அநுப்பிரவேசம்.

### அஞ்ஞானநிவிர்த்தி.

ஓங்கிய வுலக மெல்லாம் படைத்தவா றுரைத்தாற் போலப்
பாங்கினுற் படைத்த விந்தச் சகத்தினிற் பரமன் றானே
தீங்கற நிறைந்த தன்மைத் திறமுநா னறியும் வண்ண
மீங்கருள் செய்ய வேண்டும் யாவையு மாய வெந்தாய். 1

உருவங்க ளெவ்வகையிவ் வுலகி னுள்ளே யுறவுறவவ் வுருவாகி யுணர்ந்து நின்றான், மருவியமா மாயையினு லிந்தி யந்தான் வந்துவகை வன்கரணங் களைமதித்தா, னிருவகையாம் பதமுடைய மனிதனுஞ் னீரிரண்டு பதமுடைய பசுக்க ளானு, னிருவகையா மிறகினையு முடையனுகி யிப்புரங்க ளுட்புகுந்தா னிறைவன் காணே. 2

வானாதி பூதங்கள் படைத்தவற்றின் மன்னியபெள திகபுரங்களனைத்துஞ் செய்து, தானேவந் துயிர்க்குயிரா யுட்புகுந்து தற்பரனே தழைத்தமர்ந்தா னென்போ லென்னி, லானுத கடகலசாதிகளேயாகி யப்பொருட்டோற் றகல்வானு யனுவே சித்துந், தானேயுட் புறமதுவாய்த் தழைத்துநின்ற தன்மையினிற் றற்பரன்ற னிலையுங் காணே. 3

### சொரூபானந்தசித்தி.

இந்த மகாபூ தங்கள் பிரிந்தே யெல்லை யிலாநா மங்களை யும் பெற், றந்த விகாரங் களுநிகழ் போது மவ்வவை யாயே நிகழ்வது போன்மற், றந்தமி லாவொன் றுகியி ருந்தே யளவறு பேதப் பல பொரு ளாயிட், டெந்த வுபாதிக் குங்கரி யாய்நின் றெங்கும் வியாபிக் கும்பர மீசன். 4

---

### திருமந்திரட்டு.

### நிலைபேறு.

முத்த ராகுவர் முன்னவர் யோனியெண்
பத்து நான்குநூ றாயிரம் பண்ணியே
யொத்த வற்றி னுயிர்க்குயி ராய்நின்ற
வித்த கம்மறி வார்பிறர் வீடுரர். 109

வானது கடந்தொறு நின்ற வண்ணமே
யோனிக டொறுமிறை யுள்க லந்தவா
றூனதி லானது மிலன மிந்துதான்
போனது மிலனவை பொன்றும் போதமே. 110

பின்னகடாகா யாதிகளாலா காயமபேதம் பேதமுறுதே
யன்னவனேகா காரனனேகா காரவகம்புக் காலுமனைத்தா
மன்னியபேதா காரம்பேதா காரமுமாய்மா தேவனிராமே
லின்னதெனுமத் தானெனுமாறெ னியாவையுமீசா னன்பிறிதன்
[றே. 5

(திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்)

திருப்பாட்டு.

உரைச்சேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனி பேத, நிரைச்சேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான் கோயில், வரைச்சேரு முகின்முழவ மயில்கள்பல நடமாட வண்டு பாட, விரைச்சேர்பொன் னிதழிதர மென்காந்தள் கைமேற்கு மிழலை யாமே. 6

அநுப்பிரவேச முற்றிற்று.

ஆகச் செய்யுள் 299

## 5. சங்காரம்.

சிவப்பிரகாசதரிசனம்.

இகபர மிறந்த விச னியாவையும் படைத்துந் தானே
யகமுற வனுவே சிக்கு மதனெறி யருளி னூற்போற்
சகலமும் படைத்த சம்பு சகமழித் தருளு மாறுந்
தகுபர னிலைமை குன்றாத் தன்மையு மருள வேண்டும்.

* எழுதரு முழுது மவனியி லழிய வெழுபுவி புனலிடை யழிய
முழுதுறு புனலு மனலிடை யழிய முரணெரி வளியினி லழிய
விழிவுறு வளிய துடைவளி ககன மதினிற விருளினி லதுவு
மழிதர விருளு மறிவினி லழிய வழிவுறு நிலைபெறி வனுவாட். 2

## போதாத்திநாகாவல்லி.

எச்சராசரமு மிற்றுவிடு மத்தரையிலே யெந்தராதலமு மப்பி
லிறு மப்பனலிலே, மிச்சமாம்வளியி னக்கனலு மிற்றுவிடுமால்
வெளியின்மாயும்வெளி மாயையினில் வாலுமிறுமா, லச்சமாயை
யெனு மாரிருளு மாசிலறிவா மரியசிவனி லழிந்திடு மகண்டபர
மாய்ச், செச்சமேவதிகழ் பரப்பிரம மாயுறுமவென் றீர்விலாநிலை
பரப்பிரம மென்றுதெளிவாய். 3

## சுயம்பிரகாசநிலயம்.

* உருவமா மெவையு மாளுமூல கங்களதிலே மூலகமனைத்
மதின் மாளுமுபா தனமெவையு, மருவ மாளுமிகு பூதமதின்
மாளுமவையாவு காரணமியக மாருநூம் மகானிடையகான், மருவ
தாகிவரு மூலவுட னாமிருளிலே மாளு மாளுமது மேலுயரு
சோதியொளியாற், றிரிய மாளும்வகை யேயெழுமில் வாறழியு
மிச் செயலுநாயகன் விளைதமல் தேதுமிலையால். 4

## போதாத்நாகரம்.

வாக்கினு லெழுவ தாகியுள பேதமதெலாம் வாக்கினு லழி
யும் வாக்குமன மீதழியுமா, னீக்க லாவது பிராணனதின் மாளுமா
து தானிகழ்வி லாதவ்வி யத்தமுறு நீளுயிரெலாந், தூக்கி லாவகை
சுழுத்திய தடைந்தெழுவ போ றகளி லாவகை யொடுங்கியதி லே
திரியவு, மாக்குமா றனைய வேயடைய வாதி பரசிவ னவிலமாக்கி
யழி விக்குறிய லாருமிகுவார். 5

## ஞானசித்திதரிசனம்.

வானின் மேகமெ தெழுந்தழியு மாறு மலைநீர் வந்து புற்புத
மெழுந்தழியு மாறு மனல்சேர், மேனி லாவுமொறி வந்தழியு
மாறுமெனவே மிகுமு லோகமுயிர் காலம்வினை மேவியவெலா,
மூனிலாதொழிவி லாதழிவி லாதசொருப னொளியினு லழியுமுன்
னையிது வென்ன மறையோ, டான வாகம புராணமனு வாதிய
யன்ப மனைநு மெதமற வேயமையு மாறறிவாய். 6

### சொரூபானந்தசித்தி.

எங்கு நிறைந்த பரத்தி னுமேலாக மெழுந்தழி யும்படிதா
னங்கி யெழும்பொறி போலு மகம்புற மாயது மாயையெனுங்
கங்குல் கடந்துயி ருக்குயி ராயொரு காலெழி வற்றகமா
யங்கயி ரானன் மனங்க ளறுஞ்சிவ னாகிய வக்கரமே. 7

### (திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்)

### திருப்பாட்டு.

இருநிலந் தனது புனலிடை மடிதர வெரிபுக வெரியதுமிகு
பெருவளியினி னழிதர வளிகெட வியனிடை முழுவதுகெட
விருவர்களுடல்பொறை யொடுதிரியெழி லுரு வுடையவனினமலர்
மருவிய வறுபத மிசைமுரன் மறைவன மமர்தரு பரமனே. 8

### சங்கார முற்றிற்று.

ஆகச் செய்யுள் 307.

---

### தூறுந்திரட்டு.

### அழிப்பு.

ஆகமாதி யாமுபாதி யவைகடேகி யதனிலே
தேகிகால மதனிலுஞ் செறிவியோம மதனிலே
மாகமாசில் போதமீது மற்றதுஞ்சிற் சத்திபா
லேகசத்தி சச்சிதானந் தத்திலே யிறக்குமால். 111

# 5. பவான்மா.

## 1. ஜனனான்மாவாலுறும் பந்தம்.

மெய்ம்மொழி.

ஆனாத பரமனுல கனைத்தினிற்கு மகம்புறமாய் நிறைந்துயி ருக் குயிராயெங்குந், தானாகி யளித்தவுல கதனையெல்லாந் தானழிக் கும் வகைதெரியச் சாற்றினாற்போ, லானாய பிறப்பவன்றன் முதல வன்றா னுதித்துவரு மியனாலின் வினையாய்நின்று, தானாகவிரியும் வகை யதனையெல்லாஞ்சங்கைகெடத் தமியேனுக்கருளவேண்டும்.

சாற்றிடிற் பசுவ னாதி சகலமு மனாதி யென்றுந்
தோற்றமுஞ் சிவத்தி லென்றே சொல்லும்வே தாகமங்கள்
சாற்றிடிற் சகத்துற் பத்தி தனக்குமற் றின்மை யாலே
தோற்றமுஞ் சிவத்தி லென்றே சொல்லவும் படுவ தன்றே. 2

விண்ணியன் மனழுக்குற் பத்தி வேலைநீர் வெய்யோன் காந்தக்
கண்ணிய நீக்குற் பத்தி கலந்ததீ யன்றி யில்லை
நண்ணிய பிறப்பி றப்பி னுடங்குசே தனங்கட் கென்று
மெண்ணின்மற் றுண்டோ சொல்லி னிருஞ்சிவ மன்றி வித்தே. 3

முந்தனு முத்தான் மாவு முத்தியி னேக மாகு
மத்தன்மை யானு மன்பு மொன்றனு மானத் தானு
மொத்தலும் பூத மைந்து மொன்றோடொன் றொன்றிற் கூடாத்
தத்தந்தா யோடுங் கூடுந் தன்மைபோ லான்மாத் தானும். 4

சின்மய மாத லாலே செகத்தினிற் சரா சரங்க
டன்மய முணர்ந்து பார்க்கிற் சத்தியுஞ் சிவமு மேகாண்
சின்மயச் சிவன்றான் சீவன் சிற்சத்தி யறிவு மாயை
தன்மயங் காய மென்று சாத்திர நிச்ச யார்த்தம். 5

† வித்தன்றி முளைவே றில்லை வித்தன்று முளைவே றன்று
மத்தன்மை சிவத்தின் கண்ணி னான்மாக்க ளனாதி தொட்டு
நித்தனுஞ் சகத்தி யாவு நிகழ்ந்திடுஞ் சுபாவ மிங்ங
னத்திக முயிர்ப ரத்தின் றாகிய பரிசுங் கேளாய். 6

† வித்தன்றி முளைவே றில்லை வித்தென்று முளைவே றென்று என்றும் பாடமுண்டு.

### உத்திரார்த்தம்.

ஆதிபரா பரத்தா லசைந்ததா ¶ னந்தசத்தி
சோதியுணர் வினிற்றோன்று மூலகுயிர். தோன்றுமாங்கே 7

¶ லந்தச்சத்தி என்றும் பாடமுண்டு.

சொன்னவுணர் விற்றடித்த புருடன்சொல் லுஞ்சித்தத்
தன்னபுரு டனுமாங்கே யிருந்துதடித் தான்காணே. 8

தடித்தலுமாங் காரம்புத்தி மனமென்னுந் தன்மையெல்லாந்
துடித்ததுதா னிச்சூழ னெனச்சொன் னன்காணே. 9

‡ நானிதுதா னெனநாட்டி யிருந்தானிஃ தியானெனதா
மூனுயிரா யுறுபுலனைப் போகமுண் டனன்காணே. 10

‡ நானெனநா னேநாட்டி யிருந்தானிரா யானெனதா யூனுயிரா என்றும் பாடமுண்டு.

உண்டிவன் வந்தவுவலைச் சுகத்தினு லானுடம்பின்
விண்டிடும்போ கத்தின்மேன் மிகச்சங்கைவைத் தான்காணே.

† வைத்தவதனால் பரன்புரியெட் டால்வரவு போக்காகப்
பற்றிவருமிது காண்போக்காய்ப் பிறப்பான்பிறப் பிக்குமாறே.

† வைத்தவத னலேவான் புரியெட்டால் வரவுபோக்காய்ப்,
பற்றிவரு மிதுகாண்பிறப் பாகையி னுக்குமாறே என்றும் பாடமுண்டு.

### தத்துவவர்க்கம்.

எட்டென்ற பொருடாம் யாவை யென்னினிந் திரிய மைந்துஞ்
சுட்டிய கரண மூன்றுஞ் சூக்கும வுடலாய் நின்று
கட்டிய வினையி னலே கருவயிற் றகத்துட் டங்கி
யிட்டவித் தெழுந்தாற் போலப் புறத்துட லெடுக்கு மாறே. 13

### ஞானமிர்தம்.

வெருவரும் பூட்சி யிருவினை வெறுப்ப
யாங்குப் பட்டதை யெனினே வீங்கிய
விந்தியப் போகி விரும்பறைத் தொழுதி
தன்மாத் திரைத்தாய்ப் பன்முறை தொழுத
முப்பொறி யாண்டுச் செப்பட நிறீஇத்
துன்பப் பண்ணைத் துடர்பின்றி யொரீஇ
யின்பப் பண்ணைத் தாங்கி யாங்கது
பொறியி னல்லதை புணர்திறம் படாதென

வறிவின ராக்கத் தறுதொழின் மரீஇ
முயற்சி தழீஇ யியற்றுங் காலை
யூழு ழன்றித் தாழ்திற மில்லென்
றைப்பின் றுயர்ந்த மெய்ப்பொருட் பேருணர்
வொப்பா ராகிக் கைதூ வாமை
வென்னை செய்யி னென்னை யாமென
வுளைப் பெளவத் தளறுபட வழுந்தி
யுள்ள முறைசெயற் கல்லோ லத்தி
னூங்கிட வெழுந்து மூழ்கி
பொங்குபுழி யீண்டு நுவலுவஞ் சிறிதே.

(இ - ள்) வெருஉநும் ........எனினே - பயப்படத்தக்க சரீரத்திற் புண்ணியபாவ மிகவுண்டாம்படி யெவ்வண்ணமென்று வினவில்,

வீங்கிய......கொடூஉ-பரந்த விந்திரியமென்னும் பறவையான பெரிய விறகை யுடைத்தாகிய கூட்டந் தன்மாத்திரைகளான விடயங்களிலே தாவிப் பல முறைமையாலே சென்றுகோத,

முப்பொறி........நிறீஇ - அவ்வப்பொருள்களிலே மனோவாக்குக் காயங்களைச் செல்விதாக நிறுத்தி,

துன்ப.........சாங்கி - துன்பத் திரட்சியி லுண்டாகிய விசனத்தி லாசையொழிந்து இன்பத்திரட்சியிலே யாசையுண்டாகி,

ஆங்கது.........மரீஇ-அந்த வின்பங்கடாம் திரவியத்தாலல்லதுகூடும் வழியில்லையென நினைந்து இந்தத் திரவிய முண்டாகைக்கு முன்புள்ளோ ராலே சொல்லப்பட்ட உழவு - தொழில் - வரைவு - வாணிபம் - வித்தை - சிற்பமென்னப்படா நின்ற வாறுதொழில்களிலே கூடி,

முயற்சி.........காலை - உற்சாகங்கொண்டு பண்ணுமிடத்து,

ஊழுழன்றி......கைதூவாமை - இந்தச்சுகமுந் துக்கமு மூழின்முறை மையல்லது வருவதில்லை யென்னு முவமையின்றி யுயர்ந்த வுண்மையான ஞானத்தை யறியாராகிக் கையொழியாதே,

என்னை......அழுந்தி - என்செய்தா லென்னமோவென் றாசையாகிய சமுத்திரத்திலே சேறுபட மூழ்கி,

உள்ளமுறை......சிறிதே - மனோ வாக்குக் காயமாகிய திரையாலே தள்ள முழுகுவ தெழுகுவதாகி விசனப்படு மிடத்துப் புண்ணிய பாவத் தைச் செய்து கொள்ளுகிற படியை யிவ்விடத்திலே சிறிது சொல்லப்புகு கின்றோம் (எ - று).

பொய்ப்பொறி புணர்க்கு முப்பொறி யுள்ரு
முள்ளச் செய்தி தெள்ளிதிற் கிளப்பி
னிருவர் காட்சி யருளொடு புணர்தல்
பெரும்பொறை தாங்கல் பிறன்பொருள் விழையாமை
செய்தநன் றறிதல் கைதவங் கடிதல்
பால்கோ டாது பகலிற் றோன்றன்
மான மதாணி யாணிற் றுங்க
லழுக்கா றின்மை யவாவிற் றீங்க
லருந்துய ருயிர்கட் கிருந்த காலை
யழுதோய் வன்ன ராகி யாருக்
கழுவு நெஞ்சிற் கையற் றினைதல்
பன்னருஞ் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட்
கறிவும் பொறியுங் கழிபெருங் கவினும்
பெறற்கருந் துறக்கமு மிறப்ப வூங்குந்
தம்மினும் வேண்டுமென் றெண்ணரும் பெருங்குணம்
வாக்கொடு சிவணிய நோக்கின் மீக்கொள
வறட்பெரி தகறுதல் புறங்கூ றாமை
வாய்மை கல்வி நிலையிற் றிறம்ப
வின்மொழி யிசைத்தல் வன்மொழி மறுத்த
லறிவனூல் விரித்த லருமறை கழறு
லடங்கிய வறைதல் கடுஞ்சொல் விடுத்தல்
பயனின்ற படித்தல் படிற்றுரை விடுத்தல்
காயத் தியைந்த வியா வினையு
ளருந்தவந் தொடங்க றிருந்திய தானங்
கொடைமடம் படுதல் படையுடன் படாமை
யமரர்ப் பேண லாகுதி யருத்த
லொழுக்க மோம்பும் விழுப்பெருங் கிழமை
யுடம்பிடி யேந்தி யுடற்றடுந் திடுமா
றடைந்த காலை யவணிய றுயரந்
தேரா ரல்லர் தெரிந்து மாருயிர்
பெரும்பிறி தாக விரும்பின மிசைஞரி
ஞேராங்குப் படாஅ மாசில் காட்சி
யைம்பெரும் பாதகந் தாழி நீந்
திந்தியப் பெரும்படை யிரிய நூறும்

வன்றறு கண்மை வாளிட் டாங்கு
நோவன செய்யினு மேவன விழைத
றவச்சிறி தாயினு மிகப்பல விருந்து
பாத்தூண் செல்வம் பூக்கம ழிரும்பொழி
றன்மனைக் கிழத்தி யல்லதை பிறர்மனை
யன்னையிற் றீரா நன்ன ராண்மை
கார்கோ ளன்ன கயம்பல கிளைத்தல்
கூவ ரொட்ட லாதுலர் சாலை
யறங்கரை நாவி னான்மறையர் பள்ளி
கடவுள் கண்ணிய தடவுநிலைக் கோட்ட
மிவையவை முதல நினைவருந் திறத்த
புரத்தன் மாதோ வறத்துறை மறத்துறை
யிவற்றின் வழிப்படா தெதிர்வன கெழீஇ
யுஞற்றன் மொழிய வுணர்ந்திசி னோரே.

(இ - ள்.) பொய்ப்பொறி......கிளப்பின் - அனித்தியமாகிய சரீரத்தினைக் கூடிய மனோ வாக்குக் காய கன்மங்களில் வைத்து மனத்தாலார்ச்சிக்குங் கன்மங்களைத் தெளியச்சொல்லின்,

இருவீர்காட்சி - ஐயப்படாமை, அவாவொன்றின்மை, அறம்வரம்பின்மை, மூடமறுத்தல், அறப்பழிமறுத்தல், அழிந்தோரை நிறுத்தல், அறத்தை விளக்கல், சமயத்தவர்க்கன்பு இவற்றியலாகு மெண்வகைக் காட்சி,

அருளொடு புணர்தல் - எல்லா வுயிர்கட்குந் தன்னுயிர்போலக் கிருபையுடையவனாதல்,

பெரும்பொறை தாங்கல் - பொறுத்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தாற் சகித்தல்,

பிறன் பொருள் விழையாமை - சரீரசுகத்தை வேண்டிப் பிறன் பொருளை விரும்பாமை,

செய்தநன்றறிதல்-பிற ரிலாபங் கருதாமல்செய்த நன்றியையறிதல்,

கைதவங் கடிதல் - மனத்தி லக்கிருத்தியத்தை யொழிதல்,

பால்கோடாது [illegible]ற்றோன்றல்-சத்துருக்களு மித்துருக்களு முதாசீனருமான [illegible]கு மொக்க வொருபக்கத்திற் சாயாதே நடுவிற் சீராணியோன் றிருத்தல்,

மானமதாணி யாணிற்றுங்கல் - மானமாகிய பேரணிகலத்தைத் தரிக்கும் வீரியம்,

அழுக்காறின்மை - பிறர்செல்வங்கண்டு பொறாமை யில்லாமை,

அவாவிற்றீர்தல் - பிறப்பிற் குற்பன்ன (காரண) மாகிய வாசை யறுத்தல்,

அருந்துயர்...கையற்றினைதல்-பொறுத்தற்கரிய விதனம் பிராணிகட் குண்டான காலத்துத் தம்மை நெருப்பிலே தோய்த்தாற்போல விதனப் பட்டு அமையாதே யுருகி விழும் நெஞ்சுபோலக் கையறவாகிய துக்கப்படு தல்,

பன்னரும்..... பெருங்குணம் - சொல்லுதற் கரிதாகிய சிறப்பினை யுடைய நித்தியமாகிய வான்ம வர்க்கத்திற்கு ஞானமுந் திரவியமு மிகவும் பெரிதாகிய ரூபவழகும் பெறுதற்கரிய சுவர்க்கபலமு மிவையொழிய மோ ட்சமுந் தம்மிலு மிகப் பெருக வுண்டாகவேண்டுமென்று நினைத்திருக்கு மெண்ணுதற்கரிய பெரியகுணம்,

வாக்கொடு சிவணிய நோக்கின் - (இனி) வாக்குக் கன்மமாய்க் கூடிய புண்ணியத்தைச் சொல்லின்,

மீக்கொள வறம்பெரி தறைதல் - மிகுதியுடைத்தாகிய தன்மங்களைச் செய்யக்கடவபடி சொல்லுதல்,

புறங்கூறாமை - பிறர் புறம்பார்த்துப் பொல்லாங்கு சொல்லாமை,

வாய்மை - யாதாமொரு வசனமும் பிறர்க்ககிதம் வாராதபடி மெய் சொல்லுதல்,

கல்வி - போக்கியமானவற்றை (உயர்ந்த சாத்திரங்களை) ஐயந்திரக் கற்ற கல்விஞானமுடையராதல்,

தீமையிற் றிறம்பல் - கேட்டார்க்கு நன்றா யிருந்து பிறர்க்கு விதன மான பொருள் பயக்குந் தீயவசனங்களைச் சொல்லாமை,

இன்மொழி யிசைத்தல் - இனியவை கூறல்,

வன்மொழி மறுத்தல்-மறமாயிருக்கும் வார்த்தையைச் சொல்லாமை,

அறிவனூல் விரித்தல் - பரமசிவனுடைய திவ்விய வேதாகம புரா ணங்களைப் பிறர்க்கு விரித்துரைத்துக் கொண்டாடுதல்,

அருமறை கழறல் - அரிய வேதமோதுதல்,

அடங்கிய வறைதல் - மந்திரங்களைச் செபித்தல்,

கடுஞ்சொல் விடுத்தல் - யாதானுமொரு வசனமுங் கடிதாகச் சொல் லாமை,

பயனின்ற படித்தல் - பிறர்க்குப் பிரயோசனப்படும் வசனங்களைச் சொல்லுதல்,

பழிப்புரை விடுத்தல் - பொய் சொல்லாமையாம்,

காயத்திலையந்த வியாவினையுள் - (இனிக்) காய கன்மமாகிய கெடாத வினையைச் சொல்லில்,

அருந்தவந் தொடங்கல் - அரிய தபசுகளைத் தொடங்கிச் செய்தல்,

திருந்திய தானம் - நல்லோர்க்குக் கனகதிரணிமணி காலேகம் (கலவைச்சேறு) செம்பொன்முதலாக வுள்ளவற்றைத் தானம் பண்ணுதல்,

கொடை மடம்படுதல் - அகாரணத்தால் கொடைகொடுத்தல்,

படை யுடன்படாமை-ஆயுத மெடேனென்று வரைந்து கொள்ளுதல்,

அமரர்ப்பேணல்-திருமால் முதலையனந்தமான தேவதைகளை யருச்சனை செய்தல்,

ஆகுதியருத்தல் - யாகாதிகன்மங்களைத் தொடங்கி ஓமம் பண்ணுதல்,

ஒழுக்கம்........கிழமை - தானின்ற நிலைக்குப் பொருந்திய ஒழுக்கத்தைப் பாதுகாக்கு மழகிதாகிய பெரியதலைமை,

உடம்பிடி........காட்சி - வேலை யேந்திக்கொண்டு தம் முடலைத் துணிப்பார் கூடியபொழுது அவ்விடத்துத் தாம்படுந்துக்க மறியாரல்லர்; அறிந்து வைத்தும் நிறைந்தவுயிர்களை யுடலைவிடுத்து அவற்றின் பெரிய பிணத்தைத் தின்பாரொடு கூடாத குற்றமற்ற வறிவாலே கொல்லாமை,

ஐம்பெரும் பாதகத்தாழி நீந்தல் - கொலை, களவு, கள், குருநிந்தை யிவற்றைச் செய்வாருடனே பயிறலென்று சொல்லப்பட்ட பஞ்சமாபாதகமாகிய சமுத்திரத்தி லழுந்தாமற் றப்புதல்,

இந்திய........தறுகண்மை - இந்திரியமாகிய பெரும் படையைக் கெடவோட்டவல்ல வலியதறுகண்மை,

வாள்........விழைதல்-வாளையிட்டுத் தேகத்திலே நோவாயிருப்பன செய்பவர்களுக்குஞ் சுகமாயிருப்பவற்றை யப்பொழுதே விரும்பிச்செய்தல்,

தவ........செல்வம் - தன்னுடைய சம்பத்துச் சாலச் சிறிதாயினும் பலவிருந்தினர்க்குப் பகுத் துண்ணுதலாகிய செல்வம்,

பூக்கமழிரும் பொழில் - பூக்கள் பரிமளிக்கின்ற பெரிய நந்தவனஞ் செய்தல்,

தன்மனை........ஆண்மை - தன்னுடைய தாரமல்லாது பிறருடைய தாரத்தை மாதாவாகப் பார்க்குஞ் செயலொழியாத நல்ல வாண்பிள்ளைத் தன்மை.

கார்கோள்........கிளைத்தல்-சமுத்திரத்தை யொத்த பெரிய குளங்கள் பலவுங் கல்லுதல்,

கூவறொட்டல் - கிணறுகளகழுதல்,

ஆதுலர்சாலை.........வறத்துறை - வழிக்கரை மடங்கட்டுதல், தன் மதத்தைச் சொல்லுவானவனுடைய தபசிகளுக்கு மடமெடுத்துக் கொடுத்தல், தேவதைகள் பூசைகொண்டருளச் சுவர்க்கத்தைக் கிட்டுவது போன்ற தேவாலயங்கள் செய்தல் இத்தன்மையன வாகிய விவைமுதலாக வின்னபடி யளவென்று நிச்சயித்தற் கரியவான வேறுபாடான புண்ணியங்களைச் செய்த லறவினையாவது,

மறத்துறை - உணர்ந்திசினோரே-பாவகன்மமாவன விப்படிச் சொல்லப்பட்ட புண்ணிய கன்மங்களைச் செய்யாம லிவற்றிற்கு மாறுபாடாயவற்றைக் கெழுமிச்செய்த லென்று சொல்லுவர் ஞானவான்களென்றவாறு.

இஃ துள்ளமுறைசெயல் கல்லோலத்தி னுந்திட வெழுந்து மூழ்கி னெந்தழிப் போதித்தல் வினவ, மனோவாக்குக்காய தன்மலட்சணஞ் சொல்லியது. 15

இசைத்த மூன்றின் வியப்பற விறந்த
வாருயிர்க் கின்ப துன்ப நேரிய
துடியிடைப் படாது கடுகொள வியற்றி
யெற்பிறர் பிறர்க்கியான் றப்புறத் தந்தென
மனப்படை யிம்மைய வம்மை வினைத்திற
னுண்டுப் பூட்சி யீண்டுப்பட வியற்றல்
சார்ந்தவை வதிதல் யாங்கு மிங்கா
தாடிப் படர்ந்த பேரிருள் புடமடி
கூடிய குற்றங் கோடேந் தல்குன்
மாதோர் பாகற் சேர்வோ ரின்பம்
பாதவக் கண்ணிழல் பனுவல் கோளிப்
பெருப்பணை பொதிந்த சிறுநுண் வித்தி
னிருந்தவை விரிய மிருவினைக் கிடைக்க
நாற்கதி நரலை யார்த்தவிழ் புணரி
மூவகைத் துக்கத்து முடிய
மாவகை விழ்த்த மன்னுயிர்ப் பரப்பே.

(இ - ள்.) இசைத்த.........இயற்றி - முற்பாட்டிற் சொல்லப்பட்ட மனோவாக்குக் காயகன்மங்களா லளவறமிக்க நிறைந்த வான்மாக்களுக்குச் சுகதுக்கங்களை நுண்ணிதாகிய துடியளவு மிடைவிடாதே கடுகச்செய்து,

எற்பிறர்.........இம்மைய - எனக்குப் பிறர் நன்மை தீமை செய்தாரென்றும் நான் பிறர்க்கு நன்மை தீமை செய்தேனென்று மொருபொருளொழியாதே சித்தத்திலே மமதை பண்ணிக்கொள்ளுமது சுலயங்கன்மமாவது,

அம்மை.....இயற்றல் - பூர்வகன்மமாவது முன்னெடுத்த சரீரங்களி லிப்படியால் அகங்கரித்துக்கொண்ட கன்மம்,

சார்ந்து.........யாங்கு - இக்கன்ம மொருவனிடத்து ஆர்ச்சிதமான படியுங் கிடந்து பக்குவப்படுகிறபடியு மெங்ஙனே யென்னில்,

நீங்காது.........இன்பம் - ஒருவனிடத்திற் கூடினபடிக்குத் திட்டாந்த மருளிச்செய்தபடி பரிணமியாதே (ஒரு முறையிற் பெருக்காது படிப்படியாக) கண்ணாடியி லேறின மாசு கூடினாற் போலவும், கூறை மாசேறினாற்போலவும், அகலிய வல்குலையுடைய தம் பிராட்டியைப் பாகத்திலே யுடைய பரமேசுவரனை யோகம் பண்ணுவோர்க்குச் சுகங் கூடினாற் போலவும்,

பாதவ.........விரியும் - பந்தித்தகன்ம மனுபவிக்கும்படி மரத்தி னுச்சிப்பொழுதி லடங்கினநிழல் விரியுமாறு போலவும், தான்கற்ற கல்விப் பரப்புத் தன்னிடத்திலே யடங்கிக்கிடந்து பரிணமித்தாற்போலவும், ஆலினுடைய பெரியபனைமுதலிய பரிணாமமெல்லாம் அடங்கிய சிறிய நுண்ணிய ஆலம்வித்திற்கிடந்து பரிணமித்தாற்போலவும், காரணமான கன்மத்திலே புண்ணியபாவங்கள் காரியரூபமாய்க்கிடந்து பக்குவப் பட்டபோது கன்மபலங்களாகிய சுகமுந் துக்கமுமாய் விளையும்,

இருவினை...........புணரி - பக்குவப்பட்ட கன்ம பலம் அனுபவிக்கைக்குப் பொருந்தின உற்பீசம், அண்டசம், சராயுசம், சுவேதசமென்னுமிந் நாலு வர்க்கத்திலே திரைபோலச் சரீரங்களை யெடுத்தும் விட்டுந் திரிகிற பிறப்பாகிய சமுத்திரத்தில்,

மூவகை.........முடியும் - ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிக மென்னப்பட்ட மூன்று வாதகத்தில் துக்கமாய் முடியும்,

மாவகை.........பரப்பே - மகத்தா யிருக்கு முண்மையை யுணராத நித்தமான ஆன்மவர்க்கத்திர ளென்றவாறு.

இது மனோவாக்குக் காயங்களா லறமு மறமும் பந்தமானபடி யெங்ஙனே யென்ன, கன்ம பந்தமும் நிலையும் விரிவுஞ் சொல்லியது. 16

---

## ஆறுந்திரட்டு.

### பந்தகாரணம்.

அனாதியகி லோற்பவமு மானநிலை பேறும்
வினைசமுமெ னுந்தொழில்கண் மேவுபுரு டன்றன் 112
பினைவகை தானடைதல் பெத்தமுறு மாறு
முனைவகை தானடைதன் முத்திபுகு மாறும்.

அறிவி லாமையை யடைந்தவன் றனலா வாகமா தியைத்தானக்
குறியு ருவவற் றின்செய றன்செய லாகவே குறிக்கொள்ளும்
செறிவ தாமவனை யத்னிறேல் வினையினாற் றேகமாந் தேகத்தா
லுறுவ தாகுமேழ் முறைமுறை யிடைவிடா துடம்பெடுத் திடுமன்றே. 113

மெய்ம்மொழி.

நானலா தொன்று தன்னைத் தானென்னக் கருதிக் கொண்டே
நானெலாஞ் செய்தே னென்னு ஞானமஞ் ஞான மத்தா
லீனமாம் வினையி ரண்டா மிருவினை யாலு டம்பா
மூனமா முடம்பா லூழா மூழினா லாகா தூண்டோ. 17

வித்திலே விளைவு தோன்றி விளைவிலே வித்தா மாங்கே
யெத்தமுன் வினையி னாலே பிறந்திடு முடல தென்று
மித்தவ வுடலி னாலே மீண்டுவல் வினைக டோன்றி
நித்தமா யிடைய றாதே நிகழ்ந்திடு மனாதி யன்றோ. 18

ஜனனன்மாவாலுறும் பந்தம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 325.

## 2. ஜனன சாகரம் (பிறவிக்கடல்).

மெய்ஞ்ஞான விளக்கம்.

இடையறா திடரே செய்தங் கெண்ணிலா வூழி யூழி
யடைதரு பாசந் தன்னா லாகுமிப் பிறவி வேலை
யுடையவப் பரிசை யெல்லா முரைத்திட வுள்ள மொன்
தடையிலா தரத்தி னோடுந் தருதியாற் கேட்டி யையா.[றித்

பாய்ந்தமா வேழம் போலப் பார்ப்பரி தாய்ம தந்த
வேய்ந்தவை சுனமா கின்ற நுரைதிரை யெல்லை யின்றிச்
சார்ந்திடா வகையாற் றாவுந் தகுகத முதலை சார்வாய்
வாய்ந்தமா பிறவிப் பௌவ வகுப்பினை முன்னமே கேளையா. 2

காலமாம் பொல்லா வஞ்சக் கடுமகாத் தான மிக்குச், சால
வே பயத்தைப் பண்ணித் தப்பொணா வகைசு ழித்துக், கோலி
யே யொருவ ரித்தைப் பார்க்கவுங் கூட வொட்டா, வாலிதாம்
பெருமைத் தாகு மாபவக் கடல தையா. 3

சுற்றமா முவட்டாற் றந்தை மைந்தராந் துராக்கள் சேர்ந்து
குற்றவாங் கார வாமை குறியற வுடைத்தா யாசைப்
பற்றதா மீன்க ணத்தாற் பரந்துபாய் போகப் பாம்பாற்
செற்றியே கிடக்கும் பௌவத் திறத்தினை யின்னுங் கேளாய்.

இப்பரி சாகுந் துன்பத் தொகையிலாப் பிறவிப் பௌவ
மொப்பிலா ஞான மென்னு மொண்புணை யுடையோர் தப்பி
மெய்ப்படு மீளா வின்ப வேதகக் கரையைச் சேர்வ
ரப்பரி சில்லா ரெல்லா மழுந்தியே யிறுவ ரன்றே. 5

ஜனனசாகரம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 330

---

## குறுந்திரட்டு.

### பிறவிக்கடல்.

காதல் வாழ்தலென மேவிய சலத்தை யுளதாய்க்
கோதை மாதரொடு கோண்முதலை யாக வுளதாய்
நோத லாகவரு நோய்நிரைய தாக வுளதாய்க்
காத லாணிலை கலங்கவரு காலு முளதாய். 114

வாதமி குத்துவரு கோபவட வன்னி யுளதாய்
விதம ளப்பரும்வி ரோதநதி வீழ வுளதாய்ச்
சுதமு றப்படுசுகத் திவலை வீசி யுளதாய்
மதமெ னப்படு மகாமகரம் வாழ்வ துளதாய். 115

தீவாவி ராவிடய சிந்தைதிரை யாக வுளதாய்த்
தவாத வாறுதொழின் மேவிவரு சங்க முளதா
யவாவென் யாவரு மளப்பரிய வாழ முளதாய்
விவாத மாமலை யெறிந்தவொலி விஞ்சி யுளதாய். 116

ஒடும்பை யாமளவி லாதமலை யெங்கு முளதாய்க்
குடும்ப மாகிய வரால்கள்பல கூடி யுளதா
யுடம்ப தாகியது புலாலொழிவி லாமை யுளதாய்
விடங்கள் சேர்விவித மானவினை மீன முளதாய். 117

அவச மாகவிடு காமமெனு மால முளதாய்
நவைசெய் போகமெனும் வேகவிட நாக முளதாய்ச்
சுவைசெய் துண்டுவிடு சுற்றமெனு மட்டை யுளதாய்
பவம கோததி பகுப்பவர் பகர்ந்து முடிவார். 118

வெருவாரு மெழிற்பிறவி வேலையில்வீழ்ந் தழியாமே
திருவாரு முத்தியெனுந் தீரத்தைச் சேர்வுறுதற்
கொருஞான நாவாய்கொண் டோங்கருளா லேயுய்க்குங்
குருவாகு மீகாமற் கூடுநேர்க்குங் கூடுமால். 119

# 3. ஜனன மரம்.

ஓதிய பிறவி தன்னை யுலைவிலாக் கடல தாக
வேதமே துறவே வேத மிசைத்தவா றதுவு மன்றி
நீதியான் மரமே தாக நிகழ்த்திடும் பரிசி னாலவ்
வாதிமா மரத்தின் றன்மை யதனையு மறைகு வன்கேள். 1

## பரமார்த்த தரிசனம்.

வேர்போல தூ நிலைகிழது விவில்லது வேதக்
கோதுபோலிய விலைமேலிய கியபாவுபாயக தலினு
லார்மேவிய வசுவத்தமெ தெனவேயபர சுதனின்
போர்மேயது பெருமாலையெய் பிறவிப்பெரு மரமே. 2

இவ்வாறித னியல்பாகிய வகையாவெனி லாது
மொவ்வாவகை பொரிதாகிய பிரமத்துரு விடையே
யவ்வான்வளி யுருவாவன முறையேயவன் முறையே
மெய்வான்முதல் வருபூதமின் மேலானது வேர். 3

ஊழால்வரு முலகாகிய முளியாகிய பொழுதாற்
கீழானது தலையாகிய முதலீறிடை கிளர்வாய்ச்
சூழாகிய பிறவித்தொடர் பெருகாலமுடமை யப்
பாழாமவகை யழியாமையி னறியாதவர் படியே. 4

கருநான்முதல் வினையாலது வளர்காதல்செய் தவினை
லருநான்முறை யவைவேயபிலை யவையாமென வறிநீ
வருநாள்களி னொருநாள்பெறும் வகையின்மையி னாலே
பெருநாடறி யசுவத்தம தெனலாயது பெயரே. 5

மற்றிப்படி நிகழ்கின்றவிம் மாயாமர மிதனின்
பெற்றித்திற மிதுவல்லது பிறிதின்மையி னாலே
யுற்றிப்படி யுணர்வார்பொரு ளெல்லாமுமுணர்ந்தா
ரிற்றிப்பெரு மரத்தின்றிற மின்னுஞ்சில வுளகேள். 6

## தத்துவசித்தி.

வித்து விச்சைமுனை மாயைமிகு சங்கையெனவே
ரொத்து ரக்குபணை பூதமென வைந்துடையதாற்
றொத்து தொக்கற மரங்கொடொரு சாகைகிளைரூழ்ப்
பத்தி ரட்டியொடு பண்பமையு மைந்துபரிவால். 7

தாரிக ளாயின விராகமிலை தாக முதலா
வுளவெ லாங்கரைகள் பாலுபர யோது மதனு
லளவிலா முகின மாயின வுலோப கதமாய்
வளரு மானமல ராகமிரு வாசை பலவால். 8

முழுதுமே பானிகளுமாய் விழுதுமுள் ளினமுமா
மெழுவ சோகமகிழ் வாயுற விசைந்தகனியா
யழிவி லாதபுல னைசயென வந்தநிழலே
வழுவி லாதுயர் பொருமைகொடு வஞ்சனைகளாய். 9

போது நீள்வெயிற் கைந்துவளர் புள்ளி னினமாய்ப்
போத நூல்கள்பெயர் பொன்றுபிர பஞ்ச மெனலாய்ச்
சாதி யாவகை தழைத்துயரு மிந்த வியல்பா
லாதி மாபிறவி மாமரம தோர்வ ரியதால். 10

கூறு ஞானவொளி மெய்க்கருவி கொண்டு சூரவோ
ரீர நான்மல ரிணைச்சர ணிறைஞ்சி யருளால்
வேரி லேயிதனை வெட்டிவிழ வுன்னி னவரே
சீரி தாயவகை முத்திதிக ழுந்திருவினோ. 11

ஜனனமரம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 341.

---

## குறுந்திரட்டு.

### ஜனனவிருட்சம்.

மானமலை நாடரிய மாயவிதை யாகி
யாணவத னங்குர மவிச்சையது வாகி
மேனியுறி யாமையது வீழவிடும் வேராய்த்
தானலது தானெனு நினைக்குமுத ருவாய். 120

உணக்கரு மகங்கரன மோங்கிவளர் வாய்முக்
குணக்கவடு போகியவை தோறுமுது கோடாய்ப்
பணைக்குமன னாதிசெவி யாதிபடி யாதித்
தணக்குதலி லாவினைக டண்பணைக ளாகி. 121

சாகைபல யோனிக டழைத்ததளி ரிச்சை
மோகமுகிழ் போகமுகை சோகமொளிர் மொட்டா
யாகமது வாகிமல ரல்லல்பல மாகிக்
காகமுண வீழுமர ணங்கனிய தாகி. 122

கலங்கவரு காமமுதல் கட்செவிக ளேயாஞ்
சலங்கொள்ப றவைத்திர டமக்கொர் முடிவின்றி
யிலங்குமறி வெல்லிலிரு ளாயவிது கெட்டார்
மலங்குகில ரிப்பிறவி மாமர வகுப்பே. 123

ஆரிய னருட்கவச மிட்டறிவ தாகுங்
கூரிய குடாரமது கொண்டளவு கூறு
மூரிய பெருந்தருவை மூலமொ டெறிந்தா
ரோரியைபு முத்தியுல கத்தினி லிருப்பார். 124

# 4. சரீரம்.

### வினாவிளக்கம்.

வாதிலா மதுர வாரி வள்ளலே பிறவித் தன்மை
காதலா லருளி னூற்போற் கருவுறு மூலு டம்பா
மாதரார் வயிற்று வந்து மன்னிமேய பரிண மித்துப்
போதரும் பரிசு மெல்லாம் புலையனேற் கருள வேண்டும். 1

### அனந்தபோதம்.

ஓதிய வுதரச் சேற்றி னுரைத்தசுக் கிலநீர் பாய்ச்சி
† மீதுறு விந்து நாத மேனிவித் ‡ ததனை வித்தி
யாதலை யழித றன்னை ¶ யன்மைநோய் மூப்பைச் சாவை
நாதனு மன்றே $ செய்யி னறகரு வுருவை நட்டான். 2

† மீதுற, ‡ தகனை, ¶ யனைய, $ செய்து நரகரு என்றும் பாட முண்டு.

தொழிலும் வினைவுந் துயருஞ் சுகமு
மழிவும் பெறுபே றவையு மடைவுங்
கழிவும் † மிடமுங் கதியின் பதமுங்
குழுவுங் கருவித் துடனே குணமாம். 3

† மடமுங் என்றும் பாடமுண்டு.

மறையா னவையு மனுவா னவையும்
மறையா ரணமு மருளா கமமும்
முறையார் கலையும் மொழியார் தமிழு
‡ மிறையார் கருவித் துடனே யிசைவாம். 4

‡ மிறையாம் என்றும் பாடமுண்டு.

---

### குறுந்திரட்டு.

### தேகோற்பத்தி.

மோக சிந்தை முதனடு வீறிது
சோக மென்று துணிந்து துறந்திடு
பாகம் வந்திடு மாறு பழிப்புறுந்
தேகம் வந்த பரிசினைச் செப்புவாம். 125

பண்ணுமா குதியாற் பகலவன் விளங்கும் பகலவன் மழையினைப் பலிக்கும்
விண்ணினு ளுளதா மோடதி யதனால் விளைந்திடும் மன்னமன் னத்தை
யுண்ணுமாம் புருட னுண்டது கிட்ட சாரமென் றோரிரு வகையாந்
தண்ணிய கிட்டம் புருடநீர் மேதந் தானரம் பெலும்பெனச் சமையும். 126

புல்லிய வுவர்நீர் மலங்களை யகிலம் போக்கிடும் புகன்றசா ரந்தான்
சொல்லுவர் தூல சூக்கும மென்னத் துவிதமாந் தூலபா கந்தா
னெல்லையில் பஞ்ச பூதத்தின் கூறு மிவற்றினு லியம்புமவ் வடைவே
மல்கிய வளர்வு வலியொடு மச்சை யிரத்தமுந் தசையுமாய் வளரும். 127

### விஞ்ஞானநிலயம்.

தந்தைதன் வலத்தே வாயுச் சரிக்கச்சுக் கிலமு மிக்காற்
சுந்தர வாணாந் தந்தை வாயுவு மிடத்திற் றோன்றிக்
கந்தமா மிரத்த மிக்காற் கருதுபெண் ணிருநீ ரொத்து
வந்திடி னலியாந் தந்தை வாயுவு மிருபாற் றோன்றின். 5

தோன்றிடும் வாயுத் தந்தை தொக்குட லெங்கும் புக்குத்
தோன்றிடி னவய வங்க டோன்றிடும் பிள்ளை பாலுந்
தோன்றிடும் வாயுப் புக்குத் தோன்றிடா வவய வங்க
டோன்றிடும் பிள்ளை பாலுந் தோன்றிடா தென்று கொள்க.

என்றவிவ் வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கச்
சென்றிடும் போது வந்த சிறுவனுக் காண்டு நூறு
மன்றியவ் வாயு வைந்து நாழிகை யிடத்தி யங்கிப்
பொன்றிடும் போது வந்த புதல்வனும் பொன்று மன்றே. 7

அக்கணந் தந்தை வாயு வைந்துபூ தத்தின் மாறிப்
புக்கிடும் பூத மேதவ் வண்ணமாம் புதல்வன் வண்ண
முக்குணந் தம்மின் மாறி முயங்கிடுந் தந்தைக் கப்போ
தெக்குண முதிக்கும் பிள்ளைக் கதுகுணம் விதிய தாமால். 8

---

### குறுந்திரட்டு.

சத்துவ மிரசத மெனவிரு குணத்தாற் சாரநுண் கூறிரண் டாகிச்
சத்துவ குணத்திற் றரணியின் கூறு தான்மன மபானமூக் கிவையுஞ்
சுத்தமாஞ் சலக்கூ றுபத்தநற் பிராணன் சுவையறி நாவையும் வளர்க்குஞ்
சத்தம்வாக் கொடுகண் டழலினாற் காலாற் சன்மவத் தங்கடான்றழைக்கும்.

வரையறு வானாற் பாதகன் னங்கள் வளர்ந்திடு மற்றரா சதஞ்சே
ரிரதமாங் கால கன்மக மான கூறுதா னிரத்தமுண் டாக்கும்
விரவுதி ரத்தா லிறைச்சிமற் றதனான் மேதமா மேதத்தி னரம்பா
முரவிய நரம்பா லெலும்பதின் மச்சை மச்சையால் வீரிய முளதாம். 129

இருதுகா லத்தில் யோனிசேர் பெலத்தை யியங்குகா லேழைசோ
ணிதத்தை, மருவுமா செய்பு மற்றைநாள் கலங்கல் வந்துபுற் புதமதா
மைந்தி, லுருவுபிண் டமதா மேழிலே யெழிலா யுரக்குமங் குரிக்குமை
யைந்திற், சிரமொடு கிரியந் தோண்முது குதாஞ் செனித்திடுந் திங்க
ளொன் றளவில். 130

கால்கைகடி பக்கமுறு காத்திரமி ரண்டிற்
சாலுமொரு மூன்றினுள சந்துவ கிரற்க
ளாலின்முக நாசிசெவி நண்ணியிடு மைந்திற்
கால்கைநக் தந்தசிகை கண்ணதுளை யாறில். 131

ஆயவக் கர்ப்ப மங்க ணறைந்தவா யுவினாற் பேதித்
தேயுமேன் மகவ னேக மெனவுடல் பலவுந் தோன்றும்
போயமற் றுடல்வீழ் போதும் பொருந்துகா றந்தைதாய்க்கு
மாயையசத் துவமேன் முன்னை யறிந்துதான் பிறக்குமன்றே.

### சிவஞானசரிதை.

கிருமிகண் மிகுதலானுங் கெழுமுதீ மிகுதலானுங்
கருமலர் கவிழ்தலானுங் கடுவிசை வாயுவானும்
வருமுரு மாய்ந்துகேடாய் மலடுகண் மாதர்க்குண்டாம்
புருடனு மலடனாகும் புகமெரி மிகுதியாலே. 10

### மெய்ம்மொழி.

விட்டவவ் வுடலாற் செய்த வினைக்குடல் பிதாவாற் பெற்று
மட்டவிழ் நெறிமென் கூந்தன் மாதாவி னுதரம் புக்குக்
கட்டிய கர்ப்பந் தேரிற் கரும்புன்னை வெண்முத் தன்ன
மொட்டலர் பவளம் போலு முதனாளென் றறிக வன்றே. 11

நீருறு குமிழி போல நிரம்புமைந் தாநா ளண்டச்
சீருறும் பதினைந் தாநாட் சிரந்தோன்றுந் திங்க ளொன்றின்
மார்புறு தோளுந் தோன்று பிரண்டினில் வயிறு மூன்றிற்
பேர்வுறு தாளி ரண்டும் பிறந்திடு நாலா மாதம். 12

---

### குறுந்திரட்டு.

உந்தியுழல் சந்தக ளுபத்தமொடு பாயு
தந்திடுவ தேழ்மதி சமத்தமும் நிரம்பி
வந்துசிர கேசமுறு மாதமிரு நாலி
னுந்திவழி தாயுணவி னூலுட றடிக்கும். 132

ஒன்பதி லுதித்துணர்வு யோனிநிரை யத்திற்
றுன்பமிக நொந்துதுயர் தீரும்வகை யீசற்
கன்புசெய் தவன்றனரு ளாலரிய வீடுற்
றின்புறுவ னென்றுநினை வுற்றதி லிருக்கும். 133

மலமே னின்று வீழ்வார்போன் மாதம் பத்தில் வாயுவினாற்
றலைகீ ழாக விழுமந்தத் தாபத் தோடே வேகத்து
நிலமேல் விழுவ தன்முன்னே நெடியோன் மாயக் கால்வீசி
மலமே வுடலாய் நினைவெல்லா மறக்கு முன்னை வல்வினையால். 134

தூக்க ணத்துறிற் றந்தைகால் வீரிய
மிக்கி ருக்கிலாண் வீரியந் தாழ்ந்திடப்
பக்க மேவுறிற் கான்மடப் பாவையா
மொக்கிற் சண்டமா மூதையு நீருமே. 135

மாதமைந் திற்கு ளெல்லா வவயவம் வகுத்துப் பின்பு
பேதமி லாமை யின்றன் பிண்டம்போன் றிருக்கு மாறிற்
சேதமொன் றின்றி யென்பு சிக்கெனு மேழா மாதம்
போதவும் பயிரு ரோம நகங்களும் பொருந்தி யாங்கே. 13

ஆனபி னெட்டா மாத மாக்கையி னூக்கம் போதந்
தானுமுண் டாகிப் பின்பு நவதிங்கட் சார்ந்த போது
ஞானமு மிகுத்துத் தோன்றி நன்னிலை யுறுதி யோர்ந்தே
யூனமார் கர்ப்பத் துன்ப முணர்ந்திட வுற்ற தன்றே. 14

உற்றெரி கொளுநீ ருற்ற வாமைபோ லுதரத் தீயி
னெற்றிநின் றுன்ப மாற்றே னென்றிரு வினையை நொந்து
மற்றினிப் பிறவா வண்ண மாற்றிடெம் மிறைவா வென்று
தற்சொரு பத்தை நோக்கித் தாய்வீணு தண்டைச் சாரும். 15

சார்ந்தவவ் வளவிற் பத்து மாதமாய்த் தாய்பா னின்றும்
போந்தமெய் வருத்தத் தாற்றான் பொருந்திய ஞானம் விட்டுச்
சோர்ந்துபா ரதன்மேல் வீழ்ந்து தொடர்வுறும் பசிதா கத்தான்
மாந்தனுய் வருந்தி நாளும் வல்வினைக் குழலு மன்றே. 16

சரீர முற்றிற்று.

ஆகச் செய்யுள் 357.

---

## குறுந்திரட்டு.

வாயு வைந்து நாழிகை வலத்தி யங்கின் மைந்தனுக்
காயுது றதற்ற வெல்லை யாகி லாயு வில்லையாம்
வாயு வெங்கு மொக்க வோடி லயவங்கண் மைந்தனுக்
கேயு மஃதி யங்கிடா விடத்து றுப்ப தேய்ந்திடா. 136

தந்தைக் கெந்தக் குணமு திக்குஞ் சனிக்கும் பொழுதின் மைந்தற்கு
மந்தக் குணமா மெய்பூதத் தவன்ற னுடலிற் காலியங்கு
மைந்தற் கதுவே நிறமாகு மாதா பிதாக்கள் சத்துவத்தை
யந்தப் பொழுதி லடைகுவரே லறிந்து பிறக்கு மம்மகவே. 137

சந்தம லாகவீழ்தல் புழுத்தா னுகர்தல் நீமிகுதல்
வந்தநில மதுவீழக் கலக்கல் செயில் வந்தியையா
வந்தவண லேமிகுக்கி லாடவன்வந் தியனுகு
மைந்தர்பல ராயுதிப்பர் வளியேறிந்து கருச்சிதறில். 138

—:o:—

# 5. பிண்டகோசம்.

சித்தாந்ததீபிகை.

உரைத்தவக் கர்ப்பந் தொட்டு மொழுகவே பரிணமித்து
நிரைத்தவல் வினையா னீடி நிகழ்ந்துள பிண்ட கோசம்
வரைத்தவெண் சாணு மில்லின் வகுப்பினை மறையி னீதி
யுரைத்திட வுணர்வின் மிக்க வுத்தமா வுன்னிக் கேளே. 1

* அத்திறற் றானே டெத்தரந் தலாங்கொண் டமுகுறு சட்டமா வமைத்து, வித்தக மாகப் பழுக்கழி நிரைத்து விவிதமாஞ் சிரையினாற் கட்டி, மெத்தநீ ருதிரந் தசையெனு மண்ணான் மேவவே சுவர்செய்து மேலந், குய்த்ததோல் கேச வரோமத் தால் வேய்ந்த வுரோககா யத்தினை யுரைப்பாம். 2

* உரைத்தவாய் வாய்தல் செவிமுதலெட்டு மோங்குசா ளரங்களா யதரந், திருத்துநற் கபாடம் பற்கடா ளாகித் திகழுநா மொக்கர மலாதிப், பெருத்தபண் டமதாய்ப் பேதநா டிகளாற் பெருகையும் பித்துமே மிகுத்து, வரைப்பில்சோ காதி மூப்பி னாற் பரந்த மனைவித மார்வகுத் துரைப்பார். 3

* அறுபதிற் றூறு மென்பது தசையின் பேதமைஞ் ஞாறுகேசரோம; முறுவமுக் கோடி யுடனரை நாடி யுறுபேத மவ்வணமாந் தந்தம், பெறுமவற் றெண்ணான் கிரு பானும் பிண்டமா யிரம் பலமிரத்த, முறுமவற் றொருநா றும்பல மலாதிக் கோரள விலை யுரைத் திடவே. 4

* ஓதிய விதற்கு ணிணமிரு பானு மொழுகிடும் வழும்பதிற் பாதி, மேதைமற் றவண மற்புத மைந்தாம் விளம்பிய மச்சைநாற் பலமாந், தாதுவிற் பதான் விரதமுப் பலமாந் தயங்குபித் தழுக் கதைந் நாழி, மீதுசுக் கிலமா ‡ மூாக்கிவண் மைந்தர் மேவுபிண் டத்தியல் பறியே. 5

‡ மூாக்கிதிவ் வாறு என்றும் பாடமுண்டு.

* இப்பரி சுரைத்த விழுக்குடைப் பிண்ட மெமக்குரு வென நினைந் துயிர்க, டப்பற நானென் றெழுமகங் காரச் சழக்கினாற் ¶ பெத்தம துளதா, யொப்பமை வில்லா வுறுதுயர்ப் பிறவிக் கடலினே யுறவிழுந் தழுந்திச், செப்பரு மனந்த யோனிக டோறுஞ் சேர்வது விடுவதாச் செலுமே. 6

¶ பேதம என்றும் பாடமுண்டு.

பிண்டகோசமுற்றிற்று.

ஆகச்செய்யுள் 363.

# 6. அண்டகோசம்.

### வினாவிளக்கம்.

அண்ணலே யமல நாதா வாதனேன் பொருள தாக
மண்ணின்மேல் வடிவஞ் சாத்தி வந்ததோர் கருணை வாரி
நண்ணுமூ னைய பிண்ட கோசமுன் னருளி னாற்போ
லெண்ணரு மண்ட கோச மிருக்குமா றருள வேண்டும். 1

### போதாந்தினாகாம்.

* வான்வளி தீநீர் மண்ணாய் வந்தவைம் பூதந் தம்மு
ளானபே ரண்ட மெண்ணி னனந்தமாம் பிண்டம் போலத்
தானதி னொன்றின் றன்மை தனைச்சுருங் கிடவு ரைக்க
வூனமி லுணர்வின் மிக்க வொளிதிக ழுரவ நீகேள். 2

நண்ணிய மேரு வென்னுந் தூணினை நடுவு டைத்தா
யெண்ணிய வீரே ழாகு நிலமியல் படவு டைத்தாய்ப்
பண்ணிய விதற்குட் பேத வுலகவை பலவு டைத்தாய்க்
கண்ணிய கடலே ழாகுங் கழிதுடைத் தின்னங் கேளாய். 3

---

### குறுந்திரட்டு.

### அண்டகோசம்.

அண்டவித் தாரத்தைக் கூற வாயிரங் கோடி வாணா
ளுண்டெனு மவற்கு மொண்ணா துலகவ ருணரும் வண்ணம்
பண்டையோர் தொகுத்துச் சொன்னா ரதுபெரும் பரப்பெ னக்குட்
கொண்டபல் விதங்கூ றென்னக் கூறுவ னண்ட கூடம். 139

பாதல மேழு கீழ்மேற் பரவைசூழ் தீபேழ் நாவற்
பூதல நடுவு மேருப் பொருப்பத னடுவுத் தீவுக்
கேதன வொன்றாக் கொன்ற திருமடங் கிருமடங்கா
மோதுதீ பேழி னெல்லை யுடுத்தவே லைகளி னெல்லை. 140

எலையிலக்க நாவற்றீ விவ்வுயர்வர் மேரு
நிலைபதி னாறாயிரங்கீழ் நின்றதுபார் மேலே
தலையகல முப்பத்தீ ராயிரமாந் தற்பாதி
நிலையகலந் தற்சூழ நிற்பன வெண்குன்றம். 141

வடதிசையுந் தென்றிசையு மன்னுபயம் மூன்றாங்
குடதிசையி லொன்றுங் குணதிசையி லொன்று
மிடையிடையிற் பட்டவிட மேழுதீ வுக்கு
நடுவுபடு நாவ லவகண்ட மாகும். 142

எட்டெனுந் திசைநல் வாயி லெழில்பட வுடைத்தா யோங்கிக்
கிட்டருஞ் செயநற் றம்பக் கிரிகளும் பலவு டைத்தாய்
முட்டிய சக்ர வாள முரண்கிரி மதிலு டைத்தா
விட்டபே ரண்ட மத்தி னியல்பினை யிசைக்கக் கேளாய். 4

### சொரூபானந்தசித்தி.

பாரிலே யெல்லாப் பொருள்களுங் கோவைப் பட்டதெப் படியதப் படியே, நீரிலே பாரு நெருப்பிலே நீரு நிலவுகா லதனி லே நெருப்பு, ஊருகா லந்த ரிக்க லோகத்து முண்டையும் பாவு மே போலச், சாருமா மொன்றோ டொன்றுவே றறவே தன்னி லே பின்னியிச் சகத்தே. 5

அந்தரிக் கங்கள் கந்தரு வத்தே யாதித்த வுலகங்க ளிடையே
கந்தரு வங்கள் சந்திர வுலகிற் கதிரவ ருலகுக ளெல்லாஞ்
சந்திர வுலகந் தாரகை யுலகிற் றாரகை வானவ ருலகி
னிந்திர வுலகில் வானவ ருலகம் யாவையுங் கோவையா யிருக்கும்.

அரசாகிய வமராதிப னுல்கானவை யடையப்
பிரசாபதி யுல்கங்களி னிடையேபிர மனதா
† முரைசானுல கிடையேயவை யுயர்மாலவ னுலகிற்
பிரமாவின துலகங்கள் பிணிப்புண்டு கிடக்கும். 7

† முரைசாருல கினின்மற்றவை யிதுமாலய னுலகிற், றிருமா லுல கஞ்சேர்வுறு மிடமுஞ்செப் புதுமே என்றும் பாடமுண்டு.

---

### குறுந்திரட்டு.

இசைதீ பேழ்நா வலிறலி யிலவங்
குசைகௌஞ்சஞ் சாகமுடன் புட்கரமாக் கூறுங்
கசியுமுப்பு கன்ன லுடனெய் தயிர்பா
லுசிதமாந் தேனீ ருததியே ழாகும். 143

இனியநீர்க் கடற்கி ரட்டி யியங்குமா ருயிரொன் றில்லாத்
தனியதாந் தமனி யப்பூ தலமது லோகா லோக
மெனுமலை சூழு மெல்லை யியம்பிலோ ரயுத மாம்யோ
சனையகல முயர்நூறு சதமடங் கதனுக் காகும். 144

ஆரிருள் சூழு மந்தப் பொருப்பினைத் தெரிக்க வொண்ணுக்
காரிரு ளதனை யண்ட கடாகந்தான் சூழு மாக
வாரியா வர்த்தந் தானு மைம்பது கோடி யென்ப
ரேரியல் பூமிக் கெல்லை யியம்புபா தலங்கட் கெல்லை. 145

உருத்திர வுலகின்மா லுலகு ருத்திர
னிருக்குமவ் வுலகெலா மீச லோகமே
திருத்தகு மீசலோ கங்க டண்ணமாய்க்
கருத்தருஞ் சதாசிவ வுலகின் கண்ணதே. 8

தற்பரந் தன்னிலே சதாசி வன்றனை
யுற்புவ வுலகெலா முறுதி யாமதிற்
றற்பித மாய்நிகழ்ந் திடுமெய் காணுறி
னற்புத மாம்பர னல்ல தில்லையே. 9

சித்தாந்ததீபிகை.

இன்னுமிவ் வண்டந் தன்னி னியல்சொலி னனந்த கோடி
பன்னிய தெல்லா மண்ட மொன்றதின் பரிசு கண்டாய்
துன்னிய வண்ட கோசங் கதிரெழுந் துகள்போல் வான
மன்னியங் களவி லாத வகையென வுணர்தி மைந்தா. 10

இப்பரி சனந்த வண்ட கோசங்கள் யாவி னும்புக்
கொப்புட † னெருமயிர்க்குத் தொழிவற வுடலங் கொண்டு
செப்பரு முயிர்க ளெல்லாம் பிறந்திறந் தெய்த்தே செல்லு
மொப்பனை யில்லா தான்ற னுண்மையை யுணரா தந்தோ 11

† னெருமயிர்க்கு மொழிவற என்றும் பாடமுண்டு.

அண்டகோச முற்றிற்று.

ஆகச்செய்யுள் 374.

---

குறுந்திரட்டு.

பார்சின் றிடைவெளி பதினு யிரம்யோ சனையாங்கீ
ழாரும் புகலுந் தலாதிக் கிடைவெளி யவ்வாறு
மோரொன் றுளகன மாயிரம் யோசனை யொன்றாகச்
சீரொன் றியபணி சேடன் றனது சிகாமாலை. 146

கோர மன்ன கொடுவினை யாளர்சே
ரோர வாதி நரகிவற் கீழதாம்
பாரின் மேலுல கங்களைப் பாருளோர்
சீரி தாவறி யும்படி செப்புவாம். 147

காசி னிக்குநூ றாயிரம் யோசனை கதிரோன்
மாசி லவற்கு நூறாயிரமேன் மாமதியா
மாசி லுடுயோ சனையவற் கப்படிமே
லேசில் புதனீராண்டு நூறா யிரமிதற்கே. 148

## குறுந்திரட்டு.

### அண்டகோசம்.

உசநாவுஞ் செவ்வாயு மும்பர் குருவு
மசையாத சௌரியு மப்படிமேன் மேலா
மிசையார் சனிக்கிலக்கத் தேழ்முனிவர் மேலே
யசையாத் துருவனவற் கப்பரிசே யாகும். 149

பூமிசை வெய்யோன் போமள வாகப் புவலோகந்
தோமில தன்மேற் றுருவ னளவாச் சுவலோகங்
காமுறு மியாகா தியிலுறு யேறு மிதுகற்றோர்
தாமுரை செய்பூ முதலிவை யாகுந் திரைலோக்யம். 150

கூசலிற் றுருவனுக்குக் கோடியோ சனையிற் கற்ப
வாசிகண் மகவுலோக மற்றதற் கிரட்டி மேலே
தேசுறு சனந்தனுதி சேர்சென லோக மெட்டு
யோசனை கோடி மேலே யுடம்பிலார் தவப்புலோகம். 151

அருந்தவ வுலகி னும்ப ராறிரு கோடி மெய்யென்
றிருந்தவா விளம்பு லோக மிதுமுடி பிரம லோகம்
பரந்தபூ வாதி யேழும் பாதல மேழு மாக
விருந்தது பிரமாண் டந்தா னேமகோ ளகையான் மூடி. 152

கோழியண் டத்தை யொத்துக் கோடினூ றியோச னைத்தாம்
பாழியண் டங்கள் பிண்டப் பன்மைபோ லெல்லை யில்லைச்
சூழுமா வண்டத் துள்ளோர் தோயத்தே சுருங்கி மாநீர்த்
தாழியே யவியே போலச் சகலமு மிதக்கு மன்றே. 153

பன்னுபே ரண்டங் கீழ்மேல் பக்கநீர் பதின்ம டங்காம்
வன்னிகால் வான்பூ தாதி மகானிவை யொன்றை யொன்று
சொன்னவம் முறையே சூழுஞ் சூழ்ந்திடும் பகுதி மானை
மின்னிய விறகிற் றீப்போல் வியாபிக்கும் புருட னத்தை. 154

பகுதியென் றுரைக்கப் பட்ட பதானமும் புருடன் றானுந்
தகுதியாம் பரமீ சன்றன் சத்தியி லடங்குஞ் சத்தி
மிகுதியாம் பரமீ சன்பா லடங்கிடு மெய்ம்மை பார்த்தாற்
சுகதியாம் பரமீ சன்றன் சொரூபமே யன்றி யில்லை. 155

# 7. அண்டபிண்ட வேறின்மை.

## வினாவிளக்கம்.

* அண்டத்தி லுளது பிண்டத் துளதெனு முறைமை யேது
பிண்டத்தி னண்டந் தன்னைப் பேதம தறவே காணத்
தண்டற்ற வறிஞர் கூறுந் தன்மைதா னேது தேடும்
பண்டுற்ற மறைகட் கெட்டாப் பாதனே பணித்தி டாயே. 1

## சித்தாந்ததீபிகை.

அண்டமா னதுவான் வாயு வனல்புன றரைய தென்னக்
கண்டனை யேதான் காய மதனினு முளது காணும்
மண்டிகழ் கடின மப்பு நெகிழ்ந்ததீச் சுடுதல் வாயுக்
கண்டிடுஞ் சலனம் வானம் புரையெனக் கருது மைந்தா. 2

அண்டத்திற் பேதமெல்லா மறைந்தவைம் பூத நீக்கிக்
கண்டத்தை யுரைதேற் சொல்லு கருதிடும் பிண்டந் தன்னின்
மண்டுற்ற பேதந் தானு மைந்தவைம் பூத மாகு
லண்டத்தி லுளது பிண்டத் துளதென வறிந்து கொண்ணீ. 3

காரண காரி யங்க ளாகியே காணி ருப்ப
தேரண வண்ட பிண்ட மெனுமவை யிரண்டு மத்தாற்
காரணந் தானே பிண்டக் காரியந் தனிலாந் தன்மை
பூரண மறைகள் செப்பு மதுதனைப் புகலக் கேண்மோ. 4

அண்டத்தி னங்கி பிண்டத் தழகுறு வாக்காய்த் தோன்று
மண்டுற்ற வாயு வூனிற் பிராணனாய் மன்னித் தோன்றுங்
கண்டுற்ற விரவி யூனிற் கண்ணதாய் விளங்கித் தோன்று
மெண்டுற்ற திசைக ளூனிற் செவியென் விசைந்த தன்றே. 5

---

## தூறுந்திரட்டு.

### அண்டபிண்டவேறின்மை.

திங்களா மனஞ்செவிக ளெண்டிசைக ளாத்திகழு
மங்கியா கும்வாக்குப் பிராணனதி யாமநில
மங்கணு யருமசல மாமெலும் புடலதனிற்
பங்கமா முவர்நீர் முதனெகிழ் வெலாம்பாணி. 156

கேசரோம மாங்கிளர்வன பதியுமோ டதிபு
மேசு மிவ்வுடம் பாகுவ திருகில மிதிலா
காச மாம்வெளி கற்பகோ டிகளிலு முடியா
பேச வண்டத்தி லுளதுபிண் டத்திலு முளதே. 157

ஓடதி தானு மற்றை யுயர்வன பதியு மூனிற்
கூடிய ரோம கேச மாகியே குலவித் தோன்று
நீடுசந் திரனு மூனின் மனமதாய் நிகழ்ந்து தோன்று
மோடுநீ ரூனின் வந்தங் குவர்நீர்சுக் கிலாதி தானும். 6

ஆங்குமண் டானென் றுக வாக்கையா யமைந்து தோன்று
மோங்குவான் றனேகாயா காயமா யுருவித் தோன்றும்
பாங்கிறு விவணமண்டத் துளதுபண் பூனிற் கண்டு
நீங்கிலா மறைகளெல்லாந் திகழ்ந்திடச் செப்பு மன்றே. 7

இப்பரி சண்ட ரூப மாகுமா பூதந் தாமே
செப்புறு பிண்ட மாகித் திகழ்ந்திடல் பிறப்ப தென்றுந்
தப்பற விவைதாந் தத்தந் தானத்தை யடைத றன்னை
யொப்பமை வில்லா வேத மரணமென் றுரைத்த தையா. 8

ஆதலா லண்ட பிண்டத் தடைவுறு முண்மை காண
வோதிய பிறப்பிறப்பிற் றுடைந்துயர் முத்தி தானு
நீதியா லுண்மை கண்டு நிலவிடா துயிர்க ளெல்லா
மேதமே யுடலங் கொண்டங் கெடுப்பது விடுவ தாமே. 9

அண்டபிண்டவேறின்மை முற்றிற்று.

ஆகச் செய்யுள் 383.

## 8. வீடுபேறு.

### வினாவிளக்கம்.

பண்ணிய வண்ட பிண்டப் பரிசெலா மருளி னுப்போழ்
கண்ணிய வுடல்விட் டான்மாக் கருவுட லெடுத்துச் செல்லுந்
திண்ணிய வீடு பற்றின் றிறமது திகழும் வண்ண
மெண்ணியல் கடந்த விசா வேழையேற் கருள வேண்டும். 1

### மெய்ம்மொழி.

தாயையா ரறியார் மற்றுந் தந்தையா ரறியார் தாமே
போயையா புக்குப் பற்றும் புதல்வரு மறியா ரன்றே
மாயையார் செய்தி யெல்லா மயக்கமா யிருப்ப தன்றோ
காயையார் கருத்துத் † தன்னைக் கருதினற் பிறப்ப தாமே. 2

† தன்னிற் கருத்தினற் என்றும் பாடமுண்டு.

திருத்தமா மலர்போய்த் தெங்கே சென்றவவ் விரைபோ லங்கே
கருத்தது † போமி டத்தே கட்டும்போய்ச் சிவ னன்றே
பொருத்தமா முடலை விட்டுப் புரியுமட் டகத்தி னோடும்
வருத்தமே பண்ணு முன்னை வல்வினை வசத்தா லன்றே. 3

† போனிடத்தே என்றும் பாடமுண்டு.

சத்தமும் பரிசந் தானு முருவமோ டிரதங் கந்தம்
புத்தியு மனமாங் காரம் புரியுமட் டகமா மன்றே
பொத்தவச் சூக்கு மத்தோ டேழ்வசத் தியோனி புக்குப்
பெத்தமாந் தூலங் கொண்டு பிறந்திடா நிற்கு மன்றே. 4

## அஞ்ஞானநிவிர்த்தி.

வாகாதி கரணங்க டம்மைத் தத்தம் வசத்தினின்றும் வலியுடனே வாங்கிக் கொண்டு, சோகாதி பலவுடனே கூடிக் கொண்டு துடித்திடவத் தோகைநல்லார் கண்ணீர் சோர, மீகாம னின்றியிலே வினைகள் சூழ வெப்புற்று வேகத்தே போகும் போது, மோகாதி யினையடைந்து முன்பு தோற்று முடையுடற்கீ டாக முகஞ் செய்யுங் காணே. 5

வாக்கைமுத லாயுள்ள கரணந் தன்னை மனத்தினுடன் கூட்டியந்த மனனூர் தம்மைப், போக்கரிய பிராணனுடன் கூட்டியங்கே பொருளனைத்தும் பொதிந்துகொண்டு * புறப்படுங்கான், மூக்கினொடே வாக்கினொடே முன்கணொடே முதல்புகுது மியோனியொடே யுடலைவிட்டுஞ், சாக்கியொடே கூடிக்கொண் டுலகமெல்லாஞ் சஞ்சரித்துத் திரியும்வணஞ் சாற்றுவோமே. 6

* புறப்படுங்காண் என்றும் பாடமுண்டு.

## மெய்ம்மொழி.

விட்டிடுந் † தேகஞ் செய்த வினைதனக் களவிற் சென்று
கட்டிடுங் காயந் தன்முன் கனவுபோற் புணரக் கண்டு
விட்டிடுங் கருத்தங் குற்று வினையுடன் காலங் கூட்டிக்
கட்டிடும் பாத்தி ரத்தே காரண ‡ நீட்டு மாயை. 7

† தசையிற் ‡ நீமொயை என்றும் பாடமுண்டு.

தோயுமுன் னுடலை விட்டுச் சூக்குமத் தோடும் போந்து
வாயுவா கனமாய்த் தந்தை வாயுவி னோடும் புக்குப்
பாயுமா தாவிடத்தே பாய்ந்துபின் பாச யத்தி
னோயுமவ் விருநீர் ¶ பெய்ய விட்டவித் தெழுந்தாங் கன்றே. 8

¶ மெய்யா மிட்டவித் என்றும் பாடமுண்டு.

### சமயாசாரம்

ஊனா தார மொழிந்தவுயி ருலவா தென்ப ரூனதற்குத்
தானா தார மாயுழலுந் தனக்கா தாரம் வேண்டிடுமோ
வானா தார மாயுலவு மாகா யத்தோ டுயிர்காணீர்
தானா தார மகம்புறமும் வானா தாரங் கருத்தினால். 9

கானினும் பரிதாய்த் தோன்றுங் கதித்திடி னந்த ரான்மா
வானினு நுண்ணி தாகு மன்னுயி ரொடுங்கு மாகி
னானினுந் தோயு முள்ளம் பற்றறி லொன்றுந் தோயா
வானினுந் தோயா துள்ள மலமறும் வீட்டி னன்றே. 10

அலகை நின்றவர் மேலவணாசியாற்
‡ கலக நீங்கக் கருத்தது வாதலுஞ்
சிலர்கண் யானை நிழற்செறி யும்மென
வுலவு வானுயி ரூன்கொண்டு நீங்குமால். 11

‡ கலவி கலவக் என்றும் பாடமுண்டு.

### பரமார்த்ததரிசனம்.

பூக்கமழ் நாற்றங் கொண்டு பொருவளி போகு மாபோற்
றீக்கனல் கின்ற வேலோய் சீவனென் கின்ற சீரோ
னாக்கையை யெய்தும் போது மதனைவிட் டேகும் போதும்
போக்கரி தாய வாறு புலன்களைக் கொண்டு போமால். 12

பீறிய போர்வையைப் பெபர்த்துப் பின்னரே
வேறியல் போர்வையை விரும்பு வாரென
வூறிய வுடம்பினி னுதித்த வுண்மைதான்
மாறியோ ருடம்பினை மருவு மன்னனே. 13

### ஞானாமிர்தம்.

இருந்துயர் கெழீஇ வருந்தியாப் புற்ற
முற்பய னீண்டுத் துய்த்தனர் கழிப்பிற்
கருங்கயல் கிழியப் பெரும்பகடு துரந்தாங்
குழவ ராக்கிய விளைவயற் சாலி
பிற்பயன் றந்தாங் கிச்செய லுதவ
வெய்திய குகையின் மையறப் படர்த
லிருங்கழன் மள்ளர் பதய்படர் திருந்தடி
சாப வான்புழுக் காழக மடியக்

கடிபடு புட்டகம் வடிவொடு புனைதல்
கண்படை யொன்னார் கடிமதில் பாய்ந்த
தும்பி வன்பிடர்த் தோன்றன் மேலதை
யுள்ளமு றழைபா லூங்குங் கிழதை
யெழுதல மிறந்த கீழும் புடையதை
நேமி மால்வரைப் புறனுந் தாடோய்
தடக்கை மாவிழ் மணியினு மடுக்கிய
சிறுமணித் தானும் பெருஞ்சேய்த் தானும்
வினைமாண் டேப்பின் மனமாண் டேரிற்
றுடிபல பகுத்த 0 விசையிற் சேறல்
கார்முகங் கான்ற பூமுக விசிக
முள்ளிபது கிழித்தல் பள்ளி நீங்கி
பொருபெருந் தமியன் விரிபுல னுடுத்த
பேரத் தாணிப் பெயரினுந் துணையின்
றறிவருந் துரியத் தல்கினுந் தெரிபொன்
றிசையா தேகி யாங்கு வசைதபு
கடிகலை முதறா வந்த
படியென வறிநெடி தொடிவுட னுகவே.

0 விடையிற் சேறய் என்றும் பாடமுண்டு.

(இ - ள்) இருந்துயர்........அறப்படர்தல் - இப்படி மிகவுஞ் சொல்லப்பட்ட துக்கத் திரயங்களுடனே கெழுமி வருந்தி யார்ச்சிக் கப்பட்ட பூருவ கன்ம பலத்தை யிந்தச் சரீரத்திலே நின்று போசித் தற்ற பின்பு பெரிய கயல்களெல்லாங் கெட்டுப்போக மகத்தாகிய கடாவை யேரிற்பூட்டி யவ்விடத்துழுது பயிர் செய்வோராலே விளைக் கப்பட்ட விளைவயலி லுண்டாகிய நெற்பயிர் பின்பே போசிக்கைக்குரிய பயனை விளைத்தாற் போல விந்தச் சரீரத்திலேநின் றார்ச்சித்த கன்மபல மனுபவிக்கைக்குப் பக்குவப்பட்ட தேகத்தைக் குற்றமற வெடுக்கு மியல் பிருக்கும்படி சொல்லின்,

இருங்கழன்.........திருந்தடி - பெரியவீரக் கழலையுடைய மனிதர் வழியிலே செல்லுகிற திருந்திய வடியிட் டடியெடுத்து வைத்தாற்போல வும்,

சாபவான்.........புழு - வில்லூன்றிப் புழுப்போலவும்,

காழகம்.........புனைதல் - பீறிய கூறையைப் பெயர்த்துப் புதிய தோர் கூறையை வடிவிலுடுப்பானைப் போலவும்,

கண்படை.........ஊங்கும் - நித்திரையிலே சத்துருக்களாலே யாக் கப்பட்டுக் காவலுடைத்தாகிய மதிலையிடித்த யானையின் வலிய கழுத்தில்

இருந்ததாகக் கனவு கண்டாற்போலவும், மேலெல்லாவற்றிற்கு மேலாய் மனத்தாலு நினைத்தற்கரிய இடத்திலும்,

கீழதை.........கீழும் - கீழேழு பாதலங்களுக்குக் கீழும்,

புடையதை.........புறனும் - பக்கத்திற் சக்கிரவாள பருவதத்திற் கப்பாலும்,

தாடோய்.........செய்த்தானும் - முழந்தாளிலே தோயும் படியான நெடியகையி லழகிய விருப்பமுள்ள மாணிக்கத்திலு மணித்தாகச் செறிந்த நுண்மையின் அண்மையிலு முன்பு சொன்ன விடங்களாகிய மிக்கதூரத்திலும்,

வினை.........சேறல் - மாட்சிமைபுடைய வினையாகிய வலியாலே மனமென்னு மழகியதேரிலேறி யொருதுடி யோசனையைப் பலகூறிட்ட கடுமையிலே நினைவு பொருள்க டோறுஞ் சென்றாற் போலவும்,

கார்முகம்.........ஆங்கு - வில்லினின்றும் விடப்பட்ட கூரிய முகத்தையுடைய அம்பு வில்லியானவன் நினைத்த பதார்த்தத்திலே பட்டுருவினாற் போலவும் (கேவலத்துத் துரியாவத்தையிலே நின்ற) ஒப்பற்ற பெரிய ஆன்மா உறக்கத்திலே நின்று நீங்கிப் பரந்த விந்திரியங்களாலே போகம் புசிக்கும் பெரிய வத்தாணியாகிய சாக்கிராவத்தைத் தானத்திற் சாக்கிரா வத்தையிலே வந்தாலும் சாக்கிராவத்தையிலே நின்ற இவன் இந்திரியங்களை யொழித்து அறிவில்லாத துரியாவத்தையிலே வந்து தங்கினு லும் இவை யிரண்டுபெற்றியும் பிறர்க்கு ஒன்றுந்தெரிதல் கூடாமற் போந்தாற் போலவும்,

வசைதபு.........உகவே - குற்றமற்ற விளக்க முடைத்தாகிய கலை முதலாகவுள்ள தத்துவங்கள் பக்குவப்பட்டவாறே கன்மம் பொசித்தற் கிடான சரீரமான படியென் றன்னை நொடிதாகக் கூடிய தோடமெல்லாங்கெட வறிவாயாக (எ-று). 14

---

## குறுந்திரட்டு.

## வீடுபேற்று.

விட்டெ லெடுக்கு மாறு விற்புழு போல மள்ள
ரிட்டடி யெடுக்கு மாறு மிலக்கரிட் டுவைத்து வேறோர்
புட்டகம் புனையு மாறும் பொருந்துகண் படையி லொன்றோர்
கட்டா ணழித்து வேறுக் கழுத்தினி லிருக்கு மாறும். 158

சிறந்தகை மணியி லண்மை சிந்தைமேற் கீழுஞ் சூழு
மிறந்ததூ ரமும்போ மாறு மிமைப்பினிற் சராச ரத்தைத்
துறந்துபல் லவமி லக்கைத் துளைத்தலுந் தோன்றா வண்ண
முறங்கினு லுணர்ந்த வாறு முணர்ந்தவ னுறங்கு மாறும். 159

சமயாசாரம்.

உறக்கம்வந் தெய்தும் போது மூனுயிர் வளரும் போது
பிறக்குமப் போதுந் தன்னோ டிசைவின்றி யெய்துமா போற்
† பிறிக்குமப் பெற்றி தானும் பேணுநால் வகையுந் தன்னை
மறக்கவந் தயர்வு சீவன் மனுதியின் புணர்ப்பி னன்றே. 15

† பிறக்குமப் என்றும் பாடமுண்டு.

பிறப்பனவுந் திரிவனவும் பிறிவனவு மறைவனவுந்
துறப்பனவு மிவையைந்தாற் சுழலுறுங்கோட் டாரகைபோற்
பிறப்பனவுந் திரிவனவும் பிரிவனவு மறைவனவுந்
துறப்பனவு மவ்வகையாற் சுழலுமுல குயிர்தானே. 16

கருவினிற் ற்றோன்று யோனி காட்டத்தி னுயிர்கள் போல
வுருவினைக் கொண்டு நீங்கு மும்பர்தந் தோற்ற மெல்லாந்
தெரிவுறிற் றீபமோங்கிச் செறிதல்போற் சீவன் றன்னின்
விரிவுற ‡ வோங்கலின்றி விடுவதோர் காய மின்றும். 17

‡ வொடுங்கலின்றி என்றும் பாடமுண்டு.

வீடுபேற்று முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 400.

குறுந்திரட்டு.

காயம் விட்டுயிர் பற்றிடுங் கான்கொடு காற்றுப்
போய வாறெனப் போய்ப்புரி யட்டகத் துடனே
தாயுந் தந்தையுந் தானுமங் கறிவுறு வகையிம்
மாயை வல்லப மிறையலான் மற்றறி பவரார். 160

துலைதல் செய்வினை யாலுடல் கொள்ளுதல் செய்யு
மெலையி லிவ்வுயி ரியங்குவ தெவ்வழி யென்னி
னுலைவி றன்னினை வாதலி னுடல்வழி வேண்டாச்
சிலையின் மண்டுகஞ் செனித்ததெவ் வழியினுற் சென்றே. 161

வடிவி றன்னையோர் வடிவமா மனனஞ்செய் வகையாற்
படிய தெல்லையம் பரம்பரி ணமித்தவா போல
வுடல மாய்ப்பரி ணமித்ததன் னுளதனை யுணர்ந்தால்
விடுதல் பற்றுத லிலனவன் வியாபியாய் விளங்கும். 162

# 9. அநித்திய தரிசனம்.

### சித்தாந்த தீபிகை.

இப்படி யெடுத்தும் விட்டுஞ் செல்லுயிர்க் கெங்கு மெல்லா
நிற்பதொன் றின்றி மாயு நிலையாமை யிருக்கு மாறுந்
தப்பற வுணர்ந்த மேலோ ருணர்ந்தவத் தன்மை கூற
வப்படி முழுது மெய்யே யனித்தமென் றறிக வையா. 1

### குறுந்திரட்டு.

#### உடலிழிவு.

விழுமிதா மதிப்ப தெனமெய் விளைந்திடும்
புழுமலங் கண்டுகண் புதைத்துப் புன்மல
மொழுகுவாய் கழுவுகை யுரிஞ்சி மண்கொடு
கழுவுவா ரழிவுறுங் காயந் தன்னையே. 163

மலத்தினாற் பொதிந்தவிக் குரம்பை மண்ணினாற்
சலத்தினாற் றன்மலந் தவிர்க்க லாகுமோ
பெலத்தினா லிருந்தையைப் பிசைந்து பாலிலே
யுலர்த்தினா லதனிற மொள்ளி தாகுமோ. 164

பீறி நாய்கள் பிணங்கிக் கொளுமலக்
கூறி யைப்புறக் கோலங்கள் செய்வரா
லூறி யூத்தைநீ ரொன்பது வாயினு
மாறு பாயினு மந்தோ வறிகிலார். 165

### சம்சாரநிந்தை.

இன்சொ லேமொழி பொழுதுமின் னுதன மொழிவார்
பின்செல் வேமெனும் பேதைமைக் கடும்பசிப் பிணியா
முன்செய் தானையைப் பிடித்தழு மகவினை முகங்கண்
டென்செய் வேனெனு மில்லவ னில்லவற் றிலதே. 166

அயலா ரிடுதல் கொளலே யறனுக்
கியல்பா மெனவோ தியனூ லெவையுந்
துயரா கியசுற் றமொடுற் றவர்கட்
குயலா நெறியில் லெனவோ துபவே. 167

இடும்பைக் கிலக்கா முடம்பென்று மெல்லா விடும்பை யுந்தீரு, முடம்பித் துவக்கை விடிலென்று முணர்ந்தோ ரெல்லா முரைத்திடவுங், குடும்பத் திடும்பை யுந்தனதாக் கோலிக் கொள்ளும் படியுள்ள, மடம்பட் டதுவென் னெனின்முன்னை வினையின் செயலா மதிக்கின்றேன். 168

* பாலனும் பருவ மாயும் பண்ணிய குமார ராயுங்
† கோலவெவ் வனமு மாயுங் குலவிய நலனு மாயும்
வாலிய செல்வ மாயும் வலியுட னனைத்து மாயுஞ்
சாலவே நிலைஞா லத்துத் தானிலை யாமை யன்றே. 2

† கோலவேள் வனப்பு மாயும் என்றும் பாடமுண்டு.

* தேடிய பொருளு மாயுந் திகழ்ந்திடுங் கல்வி மாயு
நாடிய வீர மாயு நலந்திகழ் குணமு மாயுங்
கூடிய சுற்ற மாயுங் கொண்டாடு மனைத்து மாயு
நீடிய ஞால மெல்லா நிலையாமை மயமென் றோராய். 3

மெய்ஞ்ஞான விளக்கம்.

* இந்திரன் செல்வ மாயு மிமையவர் பதங்கண் மாயு
மந்தரம் பொடியாய் வீழு மறிகடல் வறள லாகுஞ்
சந்திர னிரவி மாண்டு தரையது மழியு மென்று
விந்தநீர்க் குமிழி யாக்கை யியல்பினை யிசைத்தற் குண்டோ. 4

திருஞானசம்பந்தர் திருப்பாட்டு.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார், கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவா, ரெந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழை நெஞ்சே, யந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே. 5

---

குறுந்திரட்டு.

போகநிந்தை.

நல்லவா மறுசுவை நாவின் மட்டல
தில்லவா மிலங்கிழை யார்க ளின்பமு
மல்லவா மக்கணத் தருவ ருக்கவே
வல்லவா விவற்றினின் மயக்க மாந்தரே. 169

மருந்தென ரருந்துவர் பசிக்கு மாதரைப்
பொருந்துவார் மலக்கழி வெனப்பு லன்கொளா
ரருந்தலும் பொருந்தலு மல்ல தில்லையென்
றிருந்துவாழ் பவர்வெளி றியம்ப லாகுமோ. 170

நாவார் சுவையின் மீனுற்றத் திலேயளிகைம்
மாவூறு கன்னி வனத்தகுண மோசையினி
லோவாது விட்டி லுருவில்விழு மொன்றன்றி
யாவாவிம் மாநடவ ரைந்தாலு மென்படார். 171

செடிகொண்ணோ யாக்கையாம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை, கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புற லாமென்று கருதினாயே, முடிகளால் வானவர் முன்பணிந் தன்பரா யேத்தும் முக்கண், ணடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சு நெஞ்சே. 6

வாகீசர் திருநேரிசை.

நடலைவிலாக் காலன் வந்து நண்ணும்போ தறியப் வொண்ணு
வடுவன வைந்து பூத மவைதமக் காற்ற கில்லேன்
படுவன பலவுங் குற்றம் பாங்கிலா மனிதர் வாழ்க்கை
கெடுவதிப் பிறவி சீசீ கிளரொளிச் சடைய னீரே. 7

சுந்தரமூர்த்தி திருப்பாட்டு.

மணமென மகிழ்வர் முன்னே மக்கடாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் † பேய்த்தேர்ப் பிறவியை வேண்டே னாயேன்
பணையுடைச் சோலை ‡ தோறும் பைம்பொழில் விளாகத் தெங்க
ளணைவினைக் கொடுக்கு மாரூ ரப்பனே யஞ்சி னேனே. 8

† பேர்த்தே என்றும் ‡ சூழும் என்றும் பாடமுண்டு.

பட்டினத்துப் பிள்ளையார் பாடல்.

நீரின்மே லெழுத்தை யதனின்மே லெழுந்த மொக்குளை நிகரில்பேய்த் தேரைக், காரின்மேன் மின்னை யென்னுடம் பென்று கருதினேன் கடைப்பிடி காணேன், † மேருவே வில்லாய்ப் புரமொரு மூன்றும் விண்ணெழச் செற்றவெண் காடா, வாரு நேரொவ்வா வையனே யடியேன் செய்வதென் னருளிச்செய் யாயே. 9

† மேருவே வில்லாய்த் திரிபுரமெரித்த விகிர்தனே மேவுவெண் காடா என்றும் பாடமுண்டு.

---

குறுந்திரட்டு.

பெண்ணிந்தை.

மாதி யானத்தின் மந்திரத் தாலிடும்
பூதி யால்விடப் போகப் படாதுநூ
லோதி யாது முணர்ந்தவ ருள்ளமும்
பேதி யாநிற்கும் பெண்ணெனும் பேயரோ. 172

கூடிற் கைப்பொரு ளியாவையுங் கொள்ளுவர்
வீடி லாருயிர் தன்னையும் வீட்டுவ
ராட வற்கில் வரிவைய ரொப்பதோர்
கேடு முண்டோ முழுதுங் கெடுப்பதே. 173

### நம்மாழ்வார் திருவாய்மொழி.

ஒருநா யகமா யோட வுலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண விம்மையிலே பிச்சைதாங் கொள்வர்
திருநா ரணன்றாள் காலம்பெறச் சிந்தித் துய்மினோ. 10

உய்ம்மின் றிறைகொ ணர்ந்தென் றுலகாண்டவ ரிம்மையே
தம்மின் சுவைமட வாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மின் னொளிவெயிற் கானகம் போய்க்குமை தின்பர்கள்
செம்மின் முடித்திரு மாலை விரைந்தடி சேர்மினோ. 11

---

## குறுந்திரட்டு.

### அருத்தநிந்தை.

ஆக்க றுன்ப மரும்பொரு ளப்பொரு
ணோக்க றுன்ப நுகரினுந் துன்பமே
போக்க றுன்பமாம் போதத் துலையினிற்
றாக்கி னுலகில் வேறில்லை துன்பமே. 174

துப்புறு பொருளினைத் தேட றுன்பமாங்
கைப்பொரு ளுண்டெனிற் கருத்து மோகமா
மப்பொரு ளழிந்திடும் பொழுது மல்லலா
மெப்பொழு தோபொரு ளின்ப மாவதே. 175

விறல்கொண் மன்னரிற் சோரனில் விரும்பிய மகவி
லறலி லங்கியிற் கிளைஞரி லரும்பொரு ளழிவா
யுறவி னெஞ்சினுக் கொழிவற வெருவுத லுளதா
மறலி யாற்பிறப் பவர்க்கெலாம் வருபயம் போல. 176

### அரசநிந்தை.

மாத வத்தினால் வானவர்க் கரசனாய் மதத்தாற்
பாத லத்திலே நகுடனோர் பாந்தளாய் விழுந்தான்
மாத னத்தினால் வருவது மதமெனி லதுசிங்
காத னத்தின்மே லிருந்தவர்க் கன்றிவே றுளதோ. 177

மத்திய முண்டவன் மத்த னாகுவா
னத்தனை பொழுதுமே யவனற் பாதகன்
மத்தனா மிடையற மகிழு மன்னவ
னெத்தனை பாதக னியம்ப லாவதோ. 178

மருவ லாரை மக்வை வரைந்துகொள்
குரவ வார்குழ லாரைக் குணத்தொடும்
பரவு வாரையுந் தன்பயத் தாற்பட
உரவுபொன் மன்னனை யாரு மஞ்சுவார். 179

அடிசேர் முடியின ராகி யரசர்க டாந்தொழ
விடிசேர் முரசங்கண் முற்றத் தியம்ப விருந்தவர்
பொடிசேர் துகளாய்ப் போவர்க ளாதலி னொக்கெனக்
கடிசேர் துழாய்முடிக் கண்ணன் கழல்க ணினைமினோ. 12

நினைப்பான் புகிற்கட லெக்கலி னுண்மண லிற்பல
ரெனைத்தோ ருகங்களு மிவ்வுல காண்டு கழிந்தவர்
மனைப்பான் மருங்கற மாய்வதல்லான் மற்றுக் கண்டிலம்
பனைத்தாண் மதக்களி றட்டவன் பாதம் பணிமினோ. 13

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளின் மாய்ந்துமாய்ந்
தாழ்ந்தார்க ளன்றலா லன்று முதலின் றிறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்ப ரென்பதில்லை நிற்குறி
லாழ்ந்தார் கடற்பள்ளி யண்ண லடியவ ராமினோ. 14

---

## தறுந்திரட்டு.

### சுவர்க்கநிந்தை.

குருடன் புகரா மார்த்தாண்டன் குட்ட ரோகி யாமெஞ்ஞ
புருடன் றலைநோய் புரந்தரற்குப் புயத்தில் வாதந் தக்கற்குச்
சுரநோ யுண்டு கயரோகஞ் சோம னுக்கு நீரிழிவு
வருணற் இவ்வா றமரர்க்கு நோயுண் டுண்டே. மருத்துவரும். 180

கார்த்தி கேயனைத் தந்தனன் கண்ணுதல்
பேர்த்தி யான்மயக் குற்றான் பிதாமகன்
றூர்த்தன் மால்சுற வக்கொடி யான்வலி
மூர்த்த மானவ ரியாரே முருக்கினார். 181

விழுப்ப மான வினையின்றி மேலோர் பதத்தி னுலோகத்
தழுக்கா றெய்தி யதனாலே யமரர் தாமு மறிவில்லாய்
புழுக்க ளாகி யேறாத பொல்லா நரகம் போய்ப்புகுது
மிழுக்குண் டானால் விண்ணுலகி னின்னா நிரய மினிதன்றே. 182

தீய வசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிகவுண்டு
நோயுண் டனங்க னுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான
காய முண்டு கைதொழவேண் டினரு முண்டு கற்பத்தே
மாயுந் தன்மை யுண்டானால் வானோர்க் கென்னை வளனுண்டே. 183

பொருளற் றவரைத் தள்ளிவிடும் பொதுமா தரைப்போற் போகங்
டருளற் றருளத் தள்ளுவர்க ளரமபை மாத ரறனற்றார் [கொண்
சாளற் றருவோர் தறித்ததெனத் தலைகீழாகத் தாம்வீழ
வெருளற் றவர்க ளுண்டாகில் விண்ணோ ருலகம் விரும்புகவே. 184

## திருமங்கையாழ்வார் திருமொழி.

முற்ற மூத்துக் கோறுணையா முன்னடி நோக்கிவளைந்
திற்ற கால்போ றள்ளிமெள்ள விருந்தங் கிளையாமுன்
பெற்ற தாய்போல் வந்தபேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்ற வாங்கி யுண்டவாயான் வதரி வணங்குதுமே. 15

முதுகு பற்றிக் கைத்தலத்தான் முன்னொரு கோலூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சுழன்று மேற்கிளை கொண்டிருமி
யிதுவென் னப்பர் மூத்தவாறென் றிளையவ ரேசாமுன்
மதுவுண் வண்டு † பண்கள்பாடும் வதரி வணங்குதுமே. 16

† பாடுஞ் சோலை என்றும் பாடமுண்டு.

பீளை சோரக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்திருமித்
தாள்க ணோவத் தம்மின் முட்டித் தள்ளி நடவாமுன்
காளையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத் தன்று நின்றான்
வாளை பாயும் பூம்புனல்சூழ் வதரி வணங்குதுமே. 17

அநித்தியதரிசன முற்றிற்று.

ஆகச்செய்யுள் 417.

---

## குறுந்திரட்டு.

### நிலையாமை.

பிறந்தவ ரிறத்தல்பிழை யாதெனவ றிந்தா
ருறுந்துய ரொழிந்தினிய துண்ணநினை வாரோ
மறந்துவிட யத்தின்மய லுற்றிடுதல் வான்மீ
திறந்தவரை யுச்சிவிழு வோனிடைகொ ளின்பம். 185

கலைமதி தாரகைக் கணம்பதங் கண்மூ
வுலகமு மிறுமய னொருதி னத்திலவ்
வுலைவறு மயற்குமாற் குருத்தி ரர்க்குமுண்
டிலையம தெனிலிருப் பவர்கள் யாவர்தாம். 186

ஒருபா தியிலே யுலவா துறைதற்
கொருபா யமுமில வெனுமுண் மையுணர்ந்
தொருபா தியிலா வுணர்வா னவனே
நிருபா திகனாய் நிலையாய் நிகழ்வான். 187

பரண மாகிய பெண்டிருஞ் சுற்றமும் பண்டுதங் கையிற்றந்த
விரண மானவை கொண்டிட விவரைவிட் டியம்பிடா திவனேகு
மரண வேதனை யாவரா லறியலா மயங்கியைம் புலனந்தக்
கரண மியாவையுங் கலங்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான். 188

# 10. அசேஷதுக்கம்.

### சிவஞான சரிதை.

முடங்குட லிளமை செல்வ முரண்வலி முதலா யுள்ள
வடங்கலு மகில முற்று மனித்தமென் றதுவே யன்றித்
தொடங்கிய விடங்க டோறுந் துன்பமே யாகுந் தன்மை
யடங்கிய வறிஞ ராய்ந்த பரிசது மறைகு வன்கேள். 1

புனலிடை மூழ்கி நின்று புகழ்தவஞ் செய்வார் போலக்
கனலிடை வயிற்றி னுள்ளே கருப்படும் வருத்தந் தன்னை
மனமிக நடுங்கு முன்னின் வாயுரை குழறுஞ் சொல்லி
னினைதொறு முள்ளஞ் சோரு நிலைதளர்ந் தழியு நெஞ்சம்.

### மெய்ஞ்ஞான விளக்கம்.

ஆலையிற் கரும்புஞ் செக்கி னிட்டிய வெள்ளும் போலச்
சாலவே நெரிந்து கோதாய்ச் சனிக்குங்கா லந்தோ துன்பம்
பாலனி லறிவொன் றில்லாப் பண்பினான் மிகவுந் துன்பங்
கோலியே யமுக்கிக் காது குத்தலா திகளாற் றுன்பம். 3

தந்தைதாய் முனிந்து சாலக் குருவோத லடித்த லாதி
வந்திடுங் குமாரந் துன்ப மல்கிடுந் தருணந் தன்னின்
முந்திடு மிராகந் தன்னான் மூண்டிடு மளவிற் றுன்பந்
தந்திடு முழவே யாதித் தொழிலினாற் றணிவி றுன்பம். 4

### குறுந்திரட்டு.

### நிலையாமை.

பேணு டம்பினை வினைப்பய னுகர்ந்திடப் பணித்த
நாணி லைந்துதம் பெருமத முக்கிய ருவனைக
காணி லியாவரோ காரியங் கருதுவார் கருதநா
னூணும் வேண்டல ரொழிவற வுளநெக் குறலால். 189

வில்வி ளங்கிய விண்ணவர் மிகுத்தவாழ் நாளு
மல்ல ரும்பக லென்னுமீர் வாளினா லரிந்து
கொல்லும் வெங்கொடுங் கூற்றையார் குலைவுறார் குறுகி
னல்வி ருந்தென வுவந்தெதிர் கொள்குவான் ஞானி. 190

உண்டலுங் குறையிற் றுன்ப மிகிலதிற் றுன்ப மந்த
வுண்டலைத் துறக்கிற் றானே † யொழிவிலாத் துன்ப மாகு
மண்டுநற் சுவைக ளாறும் வருந்தியார்ச் சித்தங் குண்டாற்
கண்டமெய் திடுங்கா லின்றிக் கழிதலாற் றுன்ப மன்றே. 5

† யுலைவிலாத் என்றும் பாடமுண்டு.

பேதையர்க் கூட றுன்பம் பிரியினங் கதினுந் துன்ப
மேதமில் விழைவிற் காய முழுத்தலா லெலையி றுன்பங்
காதலுற் றிடுமவ் வின்பங் கருதின்முள் ளித்தே னென்றான்
மாதர்தம் பொருட்டா மெய்யே வந்திடு மெங்குந் துன்பம். 6

உறங்கிடிற் பிணமே யென்ன வுணர்வுமாய் தலினாற் றுன்பம்
பிறங்குமக் கனவிற் றோன்றும் பிருவான் மிகவுந் துன்ப
மறங்கணற் றோர்ச்சி முன்னா மனைத்துமாய்ந் திருளே மூடு
முறங்கலிற் கொடிய துன்ப மோர்ந்திடி னில்லை யன்றே. 7

நனவினி லுழவே யாதி நாநாவாந் தொழிலாற் றுன்பம்
† வினைகளின் விகிதத் துன்பம் விவாதத்தான் மிகவுந் துன்ப
மினைவலி யிலதேற் றுன்ப முண்டெனின் மிகையாற் றுன்ப
நனவிலோர் காலு மில்லை நாடிடிற் றுன்ப மல்லால். 8

† வினைகளின் விகாரந் துன்பம் விபலித்தன் மிகவுந் துன்பம் என்றும் பாடமுண்டு.

காலையின் மலாதி துன்பங் கடும்பகற் பசியாற் றுன்ப
மேலவே யிடையி னுள்ள ‡ வியாதியான் மிகவுந் துன்ப
மாலையிற் காம வெந்நோய் வந்திடு முறக்கம் பின்பு
கோலிடிற் றுன்ப மல்லாற் குறுகமற் றொருநா ளுண்டோ. 9

‡ வியற்றி (காரியம்) என்றும் பாடமுண்டு.

சீதமுங் குளிராற் றுன்பஞ் செழும்பனி யதனிற் றுன்பம்
போதவந் தேறும் வாதம் ¶ பொறுக்கொணா மிக்க துன்ப
மோதிய கோடைத் தீப்போ லுலைவிலா வழலாற் றுன்ப
மேதுதான் காலத் தின்பமெப்போதுந் துன்ப மேகாண். 10

¶ பொறுத்த நாண் என்றும் பாடமுண்டு.

பொருளது தேட றுன்பம் பொருந்திடிற் காத்த றுன்பம்
வெருளுறக் கெடினுந் துன்பம் விபத்துவந் தழியிற் றுன்ப
மருளுற மனத்தின் மாளாத் துன்பமே வளர்ப்ப தானுற்
பொருளது துன்ப மெல்லாம் பொதிந்திடும் புஞ்ச மன்றே. 11

மனையவளுணு வாகமகச் சவலையாக மனையிடிந்து விழமாடுங் கெடமுன் றந்த, வனையர்கடன் றனக்கலைக்க வடிமைசாக வரிய விருந் தினர்வரவூர்க் கிறையும் பூண, மனையிலொரு பொருளின்றி வாங்கலாகு மிடந்தேட வழக்கினருந் தடுக்க நின்று, நினைவரிய சலமதிபோற் குலையும் பொல்லா † நிலைகுடும்பி தன்றுயர நினைக்கி லந்தோ. 12

† நிலையில்குடும் பத்துன்ப என்றும் பாடமுண்டு.

செல்வந்தான் மிகவுந் துன்பஞ் செருக்கினுற் செவிகண் கேடாய், நல்லவர்க் காணல் கேட்டல் செய்திடா நவையாற் றுன்ப, மல்லலா ளவிறுன்ப மாங்கார மதத்தாற் றுன்ப, மில் லையே செல்வம் போல விடையறுத் றுன்ப வாழி. 13

ஏற்றுநல் குரவிற் றுன்ப மேதெனி னதுவே பின்னும்
போற்றுதாய் தானும் பாராள் புன்மையா லிகழ்வா ரெல்லாங்
கூற்றிதன் மேலு முண்டோ கொடுநர கிதுவே யென்று
ஊற்றமாந் துன்ப வாழி யுண்மையி னின்மை யன்றே. 14

சாற்றிடின் வலியுந் துன்பந் தம்மின்மிக் கடர்ப்பா ருண்டே
லேற்றிய வெளியோர் தம்பா லெழுச்சியா லென்னே துன்ப
மாற்றரு ஞெருமைத் தாகா தழியுமா ளவி றுன்பந்
தோற்றிய வெல்லாம் பார்க்கிற் றுன்பமே யல்லா துண்டோ. 15

---

குறுந்திரட்டு.

துக்கத்தோதகி.

கருப்ப மென்னுமக் காரிருட் சிறையினிற் கதுவு
நெருப்பின் வெந்துள நிலைகெடத் தலைதகர்ந் திடவே
பொருப்பி னின்றுவீழ் பவரெனப் போந்தமை நினையா
விருப்பு நெஞ்சினர்க் கென்னையா மினியியம் புவதே. 191

குழவியி லறியாத் துன்பங் குரவராற் குமாரந் துன்பங்
கழிதரு காம நோயாற் காளையாம் பருவந் துன்பம்
விழைவுறு போகஞ் சுட்டி வெறுக்கையை விரும்பி மேவுந்
தொழிலினுற் றுன்ப மந்தத் தொழிலிடை யுறுத துன்பம். 192

பிணியினல் வலியுங் கேடாம் பிணியினு லழகுய் போகுந்,
துணிவெலாம் பிணியாற் குன்றுந் தொலைவில்லே தனையைச் செய்
யுந், தணிவிலா துள்ளே நின்று சாலவு மொறுக்கும் பொல்லாப்,
பிணிபதே யொக்குந் துன்பம் பேசிடிற் பிறிது முண்டோ. 16

நலமிலா மூப்புத் துன்ப நடைதளர்ந் துரைத ழுத்துச்
சலமதே மிகவுந் தோன்றித் தண்டுகண் ணுகிச் சித்தக்
கலனமே பிறந்து கண்டார் காறித்தங் குமிழும் வண்ண
மலைவெலாஞ் செய்யு மூப்பின் வருந்துய ரந்தோ பாராய். 17

வந்திடு மரணத் துன்ப மறித்துரை செய்யப் போமோ
வுந்திமே லையும் பித்து முணர்வொடு பொறிக லங்கி
நந்திடா விருளே மூடி நாவுலர்ந் தலமந் தென்னே
யிந்தமா விறப்பிற் றுன்பம் பவத்துன்பத் தெண்ம டங்கே. 18

வந்திடும் பிறப்பே யாதி மரணமே யந்த மாக
விந்தமா னிடத்திற் றுன்ப மின்றியெக் காலி லாப்போற்
பெந்தமா மிமையோர் பாலும் பிறப்புட னிறப்பு வெந்நோ
யுந்துமா லார்வச் செற்றத் துறுதுய ரளவ தன்றே. 19

மானிடத் தினிஞர்ச் சித்த வறப்பயன் புசிப்ப தன்றித்
தானொரு விளைவங் கில்லாத் தன்மையாற் றனே துன்ப
மானமுற் பயனு கர்ந்தா லசங்கித மாக வேரற்
றீனமாய் விழும ரம்போ லிமையவர் விழலாற் றுன்பம். 20

மோகத்தான் மிகவுந் துன்ப முழுமதச் செருக்காற் றுன்ப
மாகத்தின் பிணிக டர்க்க வசுவனி கலையுங் கொண்டு
சோகித்தங் கமா ரெல்லாந் துயருழந் தழிவ ரென்றுன்
மாகர்க்குந் துன்ப மல்லான் மன்னிய தேது முண்டோ. 21

---

குறுந்திரட்டு.

கோடையில் வெப்பாற் றுன்பங் குளிரினுற் றுன்பங் கூதிர்
வாடையி லேற்றுற் றுன்பம் வார்பனி நோயாற் றுன்பம்
நீடிய தாக மோக நித்திரை மலாதி தம்மா
ளுேடொறுந் துன்பமாகு னலமொரு நாளு மின்றே. 193

அல்லலாற் செல்வந் துன்ப மதினுநல் குரவுந் துன்பங்
கல்வியாங் காரந் துன்பங் கற்றில ருயிற் றுன்ப
மல்லன்மா ஞாலந் துன்னரில் வலிமிகின் மதத்தாற் றுன்ப
மில்லையேல் வலியோர் தம்மா லிடழி யுறலாற் றுன்பம். 194

தேவின்மா னிடத்திற் றுன்பந் திகழ்வதிப் பரிசே யென்று
லாவகீழ் விலங்கு பக்கி யாதிதா வரமற் றெல்லா
மோவிலாத் துன்ப வெள்ளத் தழைத்தலோ ரளவு முண்டோ
பாவமா நிரயந் தன்னிற் படுதுயர் பகர வேண்டா. 22

எவ்விடத் தினுமெக் காலும் யாவையுந் துன்ப மாணுற்
பொய்வகைப் பிறப்பி றப்புப் போகுமா றதனை நாடி
மைவகைத் துவந்து வங்கண் மயக்கினை யறத்து றந்தங்
குய்வகைத் திறத்தை யோர்வா னொருப்பட வடுப்ப தையா. 23

### சமயாசாரம்.

பொருளின்றி யொழித லின்பப் புகழின்றி யொழித றம்பா
லருளின்றி யொழிதன் மக்க ளவையின்றி யொழித னல்ல
வுருவின்றி யொழிதல் † செய்யு முளதெனின் முழுதுந் துன்பந்
தெருள்கொண்ட துறவின் பம்போ லிகபரஞ் சிறந்த துண்டோ.

† செய்பி னுளதெனின் என்றும் பாடமுண்டு.

### பேரொளிவிளக்கம்.

அருந்து மன்பல ‡ தழிகிலா வின்பமு மழிவதாஞ் சிறுவாழ்
வும், வருந்து பல்பிணி யிடங்கொளு முடம்பது மடந்தைமா ரொ
னுங்கோளு, மிருந்து துன்புற வன்னைமார் வயிறெனு மிருட்சிறை
புகுங்கேடும், பொருந்து ¶ மிவ்வழி நல்வழி யறிந்தவர் போவ
ரோ போகாரே. 25

‡ அழகிலா என்றும், ¶ மில்வழி யென்றும் பாடமுண்டு.

அசேஷதுக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள் 442.

---

### குறுந்திரட்டு.

சிறப்பறு நோயாற் றுன்பஞ் செடிகொண்மூப் பதனாற் றுன்ப
மறப்புறத் தியக்கஞ் செய்யு மரணமே தனையாற் றுன்பம்
பிறப்பவ ரெக்கா லத்தும் பெறுவது துன்ப மாணுற்
றுறப்பதே கருமந் துன்பம் பிறவியாந் துயர நீங்க. 195

## *11.* நைராசியம் - துறவு.

### வினாவிளக்கம்.

அடங்கலுந் துன்ப மாகி யழிந்திடும் பரிசு தன்னை
யிடம்பெற வுணர்ந்த நல்லோர் யாவையுந் துறந்த வண்ணந்
திடம்பெற வடிய னேற்குச் செப்பியென் றுவந்து வங்க
ளடங்கலு மறுக்க வேண்டு மகிலமு மாய வெந்தாய்.

### போதாரத்தினகாம்.

உடலினைப் பேணல் விட்டா ரொன்றிய செல்வம் விட்டார்
விடலருஞ் சுற்றம் விட்டார் வேட்கைவே ரோடும் விட்டா
ரிடனுடைக் குலமும் விட்டா ரியானென்ன தறவே விட்டார்
கடனுடைக் கல்வி விட்டார் கற்பனை † பலவும் விட்டார். 2

† முழுதும் என்றும் பாடமுண்டு.

போற்றிய வெவையும் விட்டார் புண்ணிய பாவம் விட்டா
ரேற்றுவே தனையைக் காயத் தியல்பது வென்று விட்டார்
மாற்றருந் துவந்து வங்கள் வந்திடத் தொத்து விட்டா
ராற்றவே துறவி னெஞ்சத் தசைவிலா வரிய நீரார். 3

ஊரொடு பேரும் விட்டா ருலகியன் முழுதும் விட்டா
ராரொடு மார்வம் விட்டா ரதனினுஞ் செற்றம் விட்டார்
பாரொடு விண்ணுந் துன்ப மெனப்பழு தறவே விட்டா
ரோர்திக ழெவையும் பேய்த்தே ரெனநகை செய்து விட்டார். 4

---

### குறுந்திரட்டு.

#### துறவு.

ஒன்ன லாருமுற் றவருமென் செய்குவா ரொருவர்க்
கின்ன லாவினி தாவனு பவிப்பன வெல்லா
முன்ன லாகிய தன்வினைப் பயனதாய் முடிந்தாற்
றன்ன லாவிலா தாக்கவுங் கெடுக்கவுஞ் சமைவார். 196

பேறுமாது பிதாமனை யாள்பிறகு
முறுமாகமு நாமுள தாமுறவே
புறமாவுடல் போகுமிவ் வாருயிருக்
குறவாமவர்வே றனரோ வுணர்சகல். 197

* பாய்ந்துமா வேழ மொற்றிப் பிளர்க்குமத் தறுகண் யாளி
தேய்ந்தழி வுறினுந் தேரை யிரையெனச் செல்லா தாற்போ
லாய்ந்தநன் முத்தி யின்ப மருந்திட வுற்ற நீரார்
சாந்துயர் வரினு மொன்றிற் றளர்ந்தெழா ராகி விட்டார். 5

### வாசுதேவசதகம்.

இல்லையீ ருலகி லின்ப மெனமனத் தெழுந்த போதே
தொல்லைசூழ் வுலகும் விட்டார் சோறுகான் றதுவு ணப்போ
னல்லவாங் காம போக நஞ்செனை வெறுத்து நீத்தார்
சொல்லொடு மனமிறந்த சுத்தரூ பத்தை யுன்னி. 6

### ஞானந்தபோதம்.

கள்ளக் கோலக் கருங்குழன் மாதர்பா
முள்ளித் தேனை முனிந்துயர் முத்தியாம்
வெள்ளத் தேனை விரும்பும் விடாயினு
னெள்ளிற் போது மிராதுட னேகினான்.

அண்ணலே யரசனே யென்ற ரற்றினர்
திண்ணிய மனமுடைத் தேவி மார்சிலா
புண்ணிய மூர்த்திநீ போவ தோவெனக்
கண்ணினீர் கலுழ்ந்தனர் கலைவ லோரெலாம்.

நலந்தனை யிகழ்ந்தது நகரி நாடெலா
முலந்தன வமைச்சரா யுலகங் காக்கின்றோர்
குலைந்தனர் நெறியெலாங் குலுங்கிற் றியாவையு
மலந்தலை புகுந்ததா லரச னேகினான். 9

மங்கைமா ரமைச்சர்கண் மறைஞர் மைந்தர்க
ளங்குணர் புரோகித ரரச ராயினார்
தங்கைமார் தேவிமார் தாயர் தாந்திரண்
டிங்கிவன் பொற்கழ லிறைஞ்சி யேத்தினர். 10

---

### துறுந்திரட்டு.

கனைப்பரு வெறிநீர் வேலைக் காசினி யதனின் மாறி
யெனைப்பெறு தவருமில்லை யான்பெறு தவருமில்லை
நினைப்புறி லயலா ரென்று நீக்கிடப் படுவார் யார்தான்
வனைப்புறு முற்று ரென்று வரைந்திடப் படுவார் யார்தான். 198

எம்மையார்க் கிட்டுநீ யேகு வாயெனச்
செம்மையா லழுதுசே வடியில் வீழ்ந்தன
ரம்மையா ரத்தனு ரற்ற சுற்றமா
ரும்மையா மறிகிலோ முரைமின் யாவர்நீர். 11

துறையின் மேல்விழுஞ் சருகிலைக் கூட்டமும்
பறவை மாமரத் திற்பயில் கூட்டமும்
வெறியின் கூட்டமு மின்னினக் கூட்டமு
முறவின் கூட்டமு மோர்ந்திடி னொக்குமே. 12

வந்து டற்கண் மயிர்நரை முள்ளூறி
னொந்து வாடி நடங்கிடு † மின்னுயிர்
தொந்தம் விட்டுயிர் போமது சொல்லியோ
தந்தை தாயருந் தாமுமத் தன்மையே. 13

† மன்னுயிர் என்றும் பாடமுண்டு.

சித்தாந்ததீபிகை.

ஒன்றிய தோலை நீத்த வொள்ளிய வரவே யென்னத்
துன்றிய பற்றை யெல்லாந் துவக்கற விட்ட தூயோன்
கன்றிய பிறவி மாளக் கருதரு முத்தி காண்பா
னின்றவச் சமய மெல்லா நெறிபட வாய லுற்றான். 14

நைராசியம் - துறவு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 456.

---

திருந்திரட்டு.

முண்டக மலரோ னாதி முதன்மொழி கின்ற வெல்லா
வண்டமும் பெறினும் வேண்டா னழிவுறு மாத லாலே
தெண்டிரை வேலை சூழ்மட் டிரளையி னுருவின் பாகங்
கொண்டவர் சாருஞ் செல்வங் குறிக்குமோ பிறப்பு ணர்ந்தான். 190

# 6. சமயப்பவணா.

## 1. புத்தம்.

### வினாவிளக்கம்.

புத்தனே † முதலா யுள்ள புகலுமச் சமய மெல்லா
‡ முத்தியே கண்டாற் போலத் தனித்தனி மொழியா நின்றார்
பித்தரோ வவைய னைத்தும் பெரியவீ டுறலு முண்டோ
வத்தனே யவற்றின் றன்மை யதனையு மருள வேண்டும். 1

† முதலதாகப் ‡ முத்திமெய் என்றும் பாடமுண்டு

### சித்தாந்ததீபிகை.

ஓதிய சமய மெல்லா மொன்றுட னொன்று மாறிக்
காதியே விடுவ தல்லாற் கதியவற் றுணர வுண்டோ
நீதியா லவற்றை யெல்லாந் தனித்தனி நிகழ்த்த விப்போ
தாதியாம் புத்தந் தன்னை † யழகுற வறைகு வன்கேள். 2

† தனித்தனி யறைகு என்றும் பாடமுண்டு

பூசல்புக் கிடுவா னல்லன் புரங்கள்சுட் டிடுவா னல்லன்
வாசமார் குழலா டன்னை வடிவினின் வைப்பா னல்ல
னாசையுற் றிடுவா னல்ல னாக்குத லழித்தல் செய்யா
னேசமுற் றவர்க்கு மொப்பா னிர்க்குணன் புத்த னெம்மான். 3

---

### தருந்திரட்டு.

#### புத்தம்.

தீமையாஞ் சார்பினாலே செய்யுமுற் பவநற் சார்வா
லாமையா முத்தி யென்று யாரதச் சார்வுந் தீர்வுந்
தூய்மையாஞ் சுத்தன் புத்த னென்றுகை தொழுதார்ச் சித்த
நீர்மையாற் கொண்டோ ரீச னில்லெனச் சிந்தித் தாயே. 200

மீண்டெனக்கா ணும்புத்தன் வீடுமரண மேயென்றான்
கண்டங்குருவ மின்மையினா காயமிலதே யெனச்சொன்னா
னண்டன்றானென் பதுமில்லை யென்றானந்தோ வறநெறியை
யுண்டென்பான்போ லில்லையெனு முலோகாயதனை யொத்தொழிந்தான்.

அலைகட லலறவெய்யா னணையடைத் திடுதல் செய்யான், சிலை
மணி கனக னென்னச் செருக்களத் தழிவு செய்யான், கொலை
படு நெறியிற் சேரான் கொடுந்தொழிற் படைகை யேந்தான்,
றலைகடை யென்றொன் றில்லான் றருமநா யகனெங் கோமான். 4

ஊதிக்கண் பிளை சாறி யுடையொழிந் துணைவு மாறித்
தாதுக்கள் கலங்கும் வண்ணந் தலைமயிர் பறிக்கச் சாற்று
னேதுக்கு மிய வேண்டா னீந்திடிற் பாவ மென்னுன்
போதிக்கண் ணிழன் மன்னும் புண்ணிய மூர்த்தி யெம்மான். 5

கோலமுத றவிர்ந்து கூறுங் குற்றமி லருளி னூலை
நிலையிலா முழுது ணர்ந்து நின்றவர் துயர்கட் கெல்லா
மலைவிலாத் துக்கி யாகி யானறூன் மதித்துச் சொன்ன
தலைவனே சுத்த நாதன் சாற்றிய பொருளுங் கேளாய். 6

மெய்ம்மொழிச்சரிதை.

* ஒன்றுரை பஞ்சகந்த முறுநவத் தானம் வாய்மை
யென்றுநா லளவை யொன்றொன் றிலக்கண மூன்று றுப்பேழ்
சென்றுறு சார்பி ராறு தெசபார மங்க மெட்டும்
பொன்றுதன் முத்தி யென்ற பொருட்டிற மடைவிற் கேளாய். 7

* மலைவது முன்பி னின்றி மறையிலா வுரையொன் றென்ற
வுலவிய பஞ்ச கந்த முருவம்வே தனைசம்ஸ் காரஞ்
சலமுறு சம்ஞை விஞ்ஞா னமுமெனச் சாற்று மற்று
நலமலி யாக மந்தா னவினவத் தான முங்கேள். 8

* அருவுருப் பிரம ரும்ப ரமரரோ டசுரர் நாகர்
நரருருப் பேய்வி லங்கு தானவத் தான மென்ப
வுரியவக் கொலைமு னைந்து மொழிந்தெலா யோனி தோறும்
புரையறப் பிறந்தி றந்த புத்தர்சா வஞ்ஞர் வாய்மை. 9

* என்றுநா லின்ப வின்பக் காரண மெதிரா மற்றைத்
துன்றிடுந் துன்பந் துன்பக் காரண மென்ப தாகு
மென்றுமா னந்தான் காண்ட லனுமான விலக்க ணந்தா
னன்றியு மனித்தந் துன்ப மனான்மிக மென்ன மூன்றே. 10

* உறுப்பது பிரம ரும்ப ரசுரர்மா னிடர்வி லங்கு
சிறப்பில்பேய் நாகர் சார்வு பேதைமை செயலு ணர்ச்சி
யுறைப்பரு முருவா யூறு நுகர்வேட்கை பற்றுக் கன்ம
மெறித்திடுந் தொகுதி யேனை வழித்தோற்றம் பிணிமூப்பன்றே 11

* என்றவம் முறைமை யாலே யிசைந்தவற் பவச்சார் வாகித்
துன்றிடு முறுப்பில் வந்து சொன்னவத் தானத் தேது
மன்றிய சார்வுங் கெட்டங் காயசந் ததியு மாயச்
சென்றநற் சார்வு செப்பிற் றேசபார மங்க மெட்டே. 12

* தேசபார மொழுக்கந் தானந் தூறவன்பு முயற்சி ஞான, மசையாமை பொறையும் வாய்மை யறநெறி நிற்ற லங்க, மிசை யாநற் காட்சி † யூக்க மெய்செய்கை முயற்சி வாழ்க்கை, யசை யாநற் கடைப்பா டான்றோர்த் தலைப்படன் முத்தி யென்றல். 13

† யூக்கஞ் செயல்செய்கை என்றும் பாடமுண்டு.

* போதமாங் கந்த மைந்திற் போதமும் பங்க மாகும்
பேதைமை யாதிச் சார்வாற் பிறந்துபின் பனித்த மாரு
மாதிநற் கன்ம நோன்புண் டாகாச மீச னென்மா
சாதமே யில்லை யென்று சாற்றுநற் சுகத நன்னூல். 14

## மெய்ஞ்ஞான விளக்கம்.

அரியநற் புத்த நான்கு மதமுள வவற்றுட் போத
முரியபே ருலக மூலத் துரைப்பது வன்றி வேறு
பெரியநல் வான மீசன் பேறுறு மான்மா வின்றிப்
பொருவிலா வீடு கொள்ளும் பொருண்மையும் புகலி னன்றே. 15

## பிரபோதசந்திரோதயம்.

ஆனபொரு ளித்தனையு மனித்த மென்றே மறிவானை யுமா னென்கை யசத்திய மென்றே, ஞானமுள சதுநான்கா நடக்கு மென்றே நடக்குமவை † நேராகை நல்வீ டென்றே, ஊனமி லாப்பொருளாகி யுலவா தாகி யுள்ளதுநிர் வாணமெனு மொன்றே யென்றே, மீனமிகு முடம்பான வுருவ மெட்டி னியைபாக விளை யிழைக்கு மிழைப்பென் றோமே. 16

† நேராக என்றும் பாடமுண்டு.

## (நிராகரணம்).

## சித்தாந்த தீபிகை.

உறைவாய சகமீச னுயிர்பிறப்பு வீடெல்லா
மறைவாய பொருளுணர்த்தும் வாய்மைமறை முபதேச
மறைவாய பொருளில்லை வாயிலுடம் புணர்வென்று
மறையாத பொருளுரைத்தன் மறைபயிலா வுரைபென்றாய். 17

கந்தத்திற் போத மாமேற் கந்தமோ போதந் தானே
முந்திற்றே றுரைத்தி டாயான் முற்பிற்பா டிருக்கு மாறு
சந்தித்துக் கந்த மைந்துஞ் சடங்கண்முன் பிறக்கக் கூடா
சிந்திக்கும் போதங் கந்தஞ் செனியாமை யில்லை யன்றே. 18

பெத்தமா முடலி னன்றிப் பிறந்திடா துயிர தென்று
மொத்துள வுயிரை யன்றி யுடலமுண் டாகக் கூடா
வித்துடன் மரமும் போல மேவியே வருமா மாகி
னித்தமா மனித்த மென்று நிகழ்த்திடக் கடவ தன்றே. 19

தோன்றுநீர் வரவே போலத் தொடர்ந்துணர் வழிந்து தோன்றி
ஞான்றநீ ரிட்ட தெல்லா மத்துடன் கழிதல் போல
† மேவன்றுணர் பொருடஞ் சீலம் பாவனை வினைக ளெல்லாங்
கான்றுணர் வதனே ‡ டேகிக் கழிந்திடுங் கருத்து ளையா. 20

† மேன்றுணர் பேதஞ் சீலம் என்றும் ‡ டொக்கக் என்றம் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

† சனித்திடாச் சிருட்டி முன்னாட் சப்பவித் திடாது நிற்க
வனித்தமாம் போத மென்னி னம்மையிற் செய்த வூழைச்
சனித்தனு பவிப்பார் செய்வார் தாமன்றேற் செய்யக் கூடா
வனித்தமா மென்ற தென்னே வம்மையோ டிம்மை கண்டாய். 21

† சனித்திடச் என்றும் பாடமுண்டு.

தீபத்திற் றீபம் போலச் செனிக்குமவ் வழியிற் போதந்
தீபத்திற் றிரியு நெய்யுஞ் செனித்ததன் பின்செல் லாது
தீபத்தைப் பேதிப் பாருஞ் செய்விக்கும் வினையும் வேண்டுந்
தீபத்தை யேது சொல்ல றிட்டாந்த விரோத மாமே. 22

இட்டவித் திறந்து வித்தவ் வழியெதிர் வருமா றேபோற்
கெட்டுமவ் வழியிற் றோன்றிக் கீழ்வினை புசிக்கு மென்னி
னிட்டவித் திறந்து சித்தங் கிடையறு தெழில்வித் துண்டாங்
கெட்டது முருவ மங்ஙன் கேடிலை யறிவுக் கன்றே. 23

அஞ்ஞானநிவிர்த்தி.

கண்டபொருள் கணிகமெனிற் கணிகந் தன்னைக் காண்பா ரார் காண்பவருங் கணிக மாகி, னுண்டபொரு ளைநினைந்து பினை யுண் பாரா ருண்பவரு முண்பனவுங் கணிக மாகிற், கண்ட வரை யொருகாலம் பின்பு கண்டாற் கழறுவர்க ளவனிவனை யென்று கொண்டு, பண்டையவ னிப்பொழுது மல்லவாகிற் பரா மரிசந் தனையெங்ஙன் பணிக்கு யாமே. 24

### சித்தாந்ததீபிகை.

வெங்கனற் சுடர்போற் புத்தி மென்மேலு மெழுந்து தோன்றிப்
பங்கமாங் கணத்தி னென்னிற் பண்டுள † வுணர்வு கூடா
பொங்குமவ் வனல்போல் புத்திக் காதார பூத னாகி
யங்கவை யுணர்தற் கேது வான்மாவென் றறிந்து கொண்ணீ. 25

† துணரக் என்றும் பாடமுண்டு.

விரிந்தவெங் கதிரோன் முன்பு விளங்குகண் சேட்டை யாங்குத்
தெரிந்தசே தனன்றன் முன்னே செடபுத்தி சேட்டை பெற்றுப்
பரிந்துறும் விடயந் தோறும் பங்கமா யனித்த மாகும்
புரிந்தனை யுயிர தென்றே புமான்றனை யறியா தையா. 26

படைத்தளித் தழிப்ப தென்றும் பாவபுண் ணியங்க ளின்றிப்
படைத்தளித் தழிப்பா ரில்லை யென்றனை பகரக் கேளாய்
படைத்தவிப் புவன மான்மாப் பலதனு கரண போகம்
படைக்குமா றென்ச டந்தான் பாவபுண் ணியங்கள் சொல்லாய். 27

சோறிட்டுண் டாலொ ருத்தர் சொல்லாமற் பசிபோ காதோ
வேறிட்ட கல்லைப் பின்பங் கிழியிட வொருவர் வேண்டா
சீறிட்டே சர்ப்பந் தீண்டச் சிலர்துன்பங் கொடுக்க வேண்டா
மாறித்தம் வினைபு சிக்க மற்றொரு கர்த்தா வென்னே. 28

அக்கணம் பலிக்கை யாலே யவைதமக் காரும் வேண்டா
வக்கணம் புசிக்கி னூழு மவைநல்ல வேது வாகு
மக்கணம் புசியாச் சென்ம மனேககா லங்கள் போயு
மெக்கணும் புசிக்கை யாலே யினைபுசிப் பிப்பார் வேண்டும். 29

### பிரபோதனம்.

எப்பொருளு மநித்தியமெனி னிலங்கியதிர் வாணமெனு
மப்பொருளு மனித்தியமா நித்தியநீ யதற்கிசைந்தாய். 30

ஊன்புக்க வுணர்வொழிய வுணர்வுடையோர் நாத்திகெனின்
யான்றுக்கி யான்சுகியென் றிருத்தனர் விருத்தமன்றோ. 31

விஞ்ஞானமுஞ் சம்ஸ்காரமும் வேதனையுஞ் சஞ்ஞையுமா
மிஞ்ஞான பின்னபோக மேகநின்னயம் பனுமாறேன். 32

சித்தத்தின் கணிகசந்ததி தீர்கைதானே மோட்சமெனிற்
சித்திப்பது மரணமானபின் சித்தியௌடத சேவையென்றான். 33

நிர்விகற்பமென் றொருபதார்த்த நித்தியமென்று நிச்சயிக்கிற்
சர்வார்த்தமுங் கணிகமெனுமுன் சத்தியவாக்கியமு மசத்திய [மாம்.
பூதங்களைப் பொருந்துவித்துப் புண்ணியபாவமே தேகம்பண் [ணிற்
பேதங்களாய விசித்ரமான பித்திசித்திரமுங் கன்மசித்திரமாம்.
நீடாத துர்ப்புத்தி யிப்படியா நீணிலத்தி
லாடாத படிசொல்லி யறிவழிந்தா யாருமே. 36

சித்தாந்ததீபிகை.

சார்பினிற் பிறப்ப தாகுந் தசபார மங்க மெட்டாற்
சார்பற வீடே யென்று சாற்றினை சளமோ ராதே
யாருநல் லான்மா வில்லை யார்மேலே சார்புந் தீர்வு
மோர்வுறிற் பித்தர் வார்த்தை போலுமுன் னுரைய தையா.

சமயசாரம்.

இறந்தோர் பிறவா ரென்றுரைத்து மேகமுலகத் திலதென்றும், பிறந்தோ னுடம்போ டொர்வென்றும் பிறந்தா னொருவ னிலனென்றுந், துறந்தோன் வீட்டி னிலனென்று முணர்வா தாரந் தொக்குடம்பென், றறைந்தோன் புத்த னுதலா லுலோகாயதனோ டறியொன்றாய். 38

சேத்தனர் பிறப்ப தில்லைச் சீவனு மான்மா வில்லை
முத்தியெய் துவதொன் றில்லை முயங்குமா காச மில்லை
நித்தனு மீச னில்லை நினைந்துநாம் வணங்கு கின்ற
புத்தனு மில்லை யென்றாய் பொருளறி விலாமை யாலே. 39

ஆனந்தபோதம்.

புத்தியதன் சந்ததிதான் பொன்றக் கேட்டாற் பொருந்திய நல் வீடென்றாய் புத்தி யன்றி, முத்திபெற வொருவரிலைப் புத்தி பொன்று மானக்கான் முத்திபெறு மொழிதானர்க்குச், சத்தமது கலகமெனத் தர்க்கங் கற்றுத் தலைகெட்ட நாலோதித் தர்க்கிட் டாடும், புத்தியிலா தவர்கட்குப் புகலே தென்னிற் பொருவருநற் சவுகதமே யன்றி யுண்டோ. 40

உள்ளதும் புத்தி யாகி யுரைத்ததும் பங்க மாகிற்
றெள்ளுநன் முத்தி சேரச் சேதன னில்லை யாகி
லள்ளனூல் பிடக மோதி யவியச்சீ வரமும் போர்த்துப்
பொள்ளல்வாய்ப் புத்த னேநீ பெற்றதென் புகன்றி டாயே.

ஈசனை யில்லை யென்று யிங்குநீ கோயில் வைத்துப்
பூசனை செய்வ தார்க்குப் † புத்தரார்ச் சனைக ளென்று
யாசினை யறவு ரைப்ப தொன்றுசெய் வதுவோன் றுகு
நேசனு மிதுவோ முன்பின் மலைவிலா நிலைமை யுந்தான். 42

† புத்தரார்ச்சனையேன்றனே, வாசினை என்றும் பாடமுண்டு.

நித்தனென் பதனைவிட்டு நிர்க்குண னென்கை விட்டுப்
புத்தனே யகண்ட மெங்கும் பூரண னென்கை விட்டு
மத்தியா னத்திற் குள்ளே மனந்திரி யாத கஞ்சி
யத்திலே புத்தி பண்ணி ரதுவலா லறிவொன் றில்லீர். 43

சமயாசாரம்.

மாயன் புத்த வேடமாய் மயக்கத் தெய்வங் கைவிட்டு
மேய வசுர ரதின்மூவர் விடாது மேன்மை பெற்றமையான்
மாய்வி றெய்வ † மிலதென்னு மயக்கந் தன்னுன் மயக்குண்டோர்க்
கேயு முத்தி யிலதாகு மீச னுளனென் றேத்தாமை. 44

† மிலதென்னும் புத்தன் பஞ்சி என்றும் பாடமுண்டு.

புத்தம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 500.

## 2. அருகம்.

விறுவிளக்கம்.

முத்தியைப் பெறுமான் மாவு முழுதரு ளிறைப்பு மில்லைப்
புத்தியுங் கணிக மூனைப் புகல்வினை பண்ணு மென்ன
மத்துறு புத்தந் தன்னின் வகையெலா மருளி னுற்போ
லத்தனே யருகன் றன்மை யதனையு மருள வேண்டும். 1

அனந்தபோதம்.

தானம்விட் டறஞ்செய்வார் தவத்தைவிட்ட தன்மையார்
மானம்விட்ட † மண்டிரிந்து வற்கமற்ற சங்கையார்
ஞானம்விட்ட வாய்மையார்க ணன்மைவிட்ட தீமையா
ரூனம்விட்ட பானை யென்ன வுண்டுபட்ட பண்டியார். 2

† மண்டிருந்து என்றும் பாடமுண்டு.

சேறிர்திருட் குழாமெனத் திரண்டுருண்ட மேனியா
ரறிந்துபா தகஞ்செய்வா ரறங்கொடே மறஞ்செய்வார்
பிறிந்தபீலி யோடுபாய் பிடித்திடுக்கும் பெற்றியார்
குறைந்தவள்ளி யின்கிழங்கு கொண்ட † கோச மேனியார். 3

† தன்ன என்றும் பாடமுண்டு.

பேய்படிந்த மேனியார் பிணம்படிந்த வாயினார்
நோய்படிந்த வுள்ளமென்ன நொந்துநைந்து வாடுவார்
வாய் ‡ மலிந்த நாவினார் வழக்கிழந்த செய்கையார்
தூய்மையின்றி மாசுதுன்று துட்டதுன் மனத்தினார். 4

‡ படிந்த என்றும் பாடமுண்டு.

சித்தாந்த தீபிகை.

வேடசார மிப்பிரகார மேவமண்கை மூடர்தங்
கூடஞான மோதுவார்தங் கொள்கையாவு மோதுவன்
பாடுவேத வாகமப் பரப்பெலாந் தெரிந்துமெய்
தேடிநாட வென்றுவந்த தீரதீர கேளொறு. 5

அநந்தபோதம்,

மடவாரையு மில்லான்மக வில்லான்மனை யில்லா
னுடையானது மில்லானுற வில்லானுட னில்லான்
றிடமாகிய விரதச்செய லுடையான்செறி வினையா
னடமாடலு மில்லானமக் கிறையாகிய நாதன். 6

பகையாகவு நினையான்படை பிடியான்கொலை புரியான்
புகையாதெழு தழலாகிய பொறிவாயில்க ளைந்து
மிகையாவகை யவைமாய்தரும் விரதாதிக ளுடையா
னகையாகவு மிகையானசை வசையாகவு நண்ணான். 7

திரிபுரஞ் சுடுதல் செய்யான் செய்தவேள் வியினைச் சிந்தான்
வரியர வல்குலாளை வடிவினில் வைத்துக் கொள்ளான்
வெருவர வுலகைச் சுட்டு வெண்பொடி மெய்யிற் பூசா
னிருவினை கடிந்து வாய்மை யெய்துவ னெங்கள் பெம்மான்.

தேவியைப் பிரிந்து தேடித் திகைத்தலம் வருவா னல்ல
னாவியே யழுதே யென்றன் றமர்களைத் தழுவா னல்லன்
மேவிய † பிறவித் தாயான் மேவுகா னடைவா னல்லன்
றூவியீ ருலகங் கொள்ளான் றருமநா யகனெங்கோமான். 9

† பிறவிப்பத்தான்மிடிப்படுவானுமல்லன் என்றும் பாடமுண்டு.

சீவரம் புனைந்து கஞ்சி செஞ்சிறு காலை யுண்ணான்
யாவரு மொப்ப ரென்னான் யான்பிறர்க் குழைப்ப னென்னான்
பூவல ராத போதிப் பொங்கிலை மூர்த்தி கொள்ளான்
றேவர்க ளகண்ட னெங்கள் செம்மைமா முனிவ னெம்மான். 10

மதுவி ரும்பிட வுரைத ருந்திரு வதன பங்கய வணிதைமார்
புதுவை தங்கிய மதன வின்பம தொடும யங்குவர் புலனிலா
ரதிம தம்பொழி புலனெ னுங்களி றவையடங்கிட வறிவுசேர்
விதித யங்கிய விரத புங்கவர் விரத ரெங்கணு மருகரே. 11

சித்தாந்ததீபிகை.

சகலபல் லுயிர்க டாமுஞ் சரீரமே பரிமா ணந்தான்
சகலர்கள் கட்டும் வீடுந் தன்மபா வங்கள் செய்யுஞ்
சகவனுக் கிரகத் தோடே தமக்குநிக் கிரக மின்றிச்
சகலலோ கர்க்கி தத்தோர் சரீரியோ வருக ராத்தர். 12

* உருவள வளவை தானு முருவனுத் தொகைநாற் பூத
மிருவகைத் தாறைந் தாகும் பொருளவை வினையி ரண்டு
முரியவத் தனையைந் தட்ட வினைமலம் பதினெட் டிங்கற்
றருகர்பா லறத்தான் மாக்க ளடைவரெண் குணங்கள் கொண்டே.

* இசைத்தவப் பொருள்க டம்மை யிலங்கிட வடைவிற் கேளாய்
வசித்துயிர்க் களவூன் காண்டல் கருதனூ லுவமை மானந்
தசைத்துரு வெட்டுக் காறீ நீர்தரை யணுவப் பூத
மிசைத்திரு வகையா றென்ற வியல்பையு மிசைப்பன் கேளாய். 14

* அருவுரு நித்தா நித்தங் குணங்குணி யத்தி நாத்தி
துரிசறு மேகா நேகந் தூலசூக் குமமற் றைந்து
பொருளது சிவ தன்மம் புற்கலா காசங் கால
† முறைசெய்வத் தனைகாலங் கோத் திரம்பவம் யோனி பேதம். 15

† முறைசெய்வ தனைக்கால் கோத் திரம்பவ மியோனி பேதம் என்றும் பாடமுண்டு.

* செறிவினை யெட்டு ஞானந் தெரிசனம் பெத்த மோக
மறிவரு மாயுக் கன்ம மந்தர ‡ நரகக் கன்மங்
குறியுறு கோத்தி ரந்தா னெனப்படு மலம தென்றங்
கறைதரு மீரொன் பானு மறிதர வறைகு வன்கேள். 16

‡ யந்திர நாமங் கன்மம் என்றும் பாடமுண்டு.

* பசிதாகம் பயம்வெ றுப்புச் சிந்தனை யிராக மோகங்
கசிவாய வேர்வு கேதம் மதம்பிணி மூப்புக் கேடு
நசையாரும் வியப்பு றக்க † நனவொடு களிப்பி கழ்ச்சி
யசைவாய மலம்விட் டான்மா வனையுமெண் குணமுங் கேளாய்.

† நகலொடு அல்லது பிறப்பொடு என்றும் பாடமுண்டு.

* அனந்த ஞானம் மனந்த தரிசன மனந்த வீர்ய
மனந்தநற் சுகநிர் நாமங் கோத்திர நிராயுஷ் யந்தா
னனந்தமில் சம்யதா பாவ மாவவென் றெண்கு ணங்கள்
புனைந்துநல் லருகர் தம்பாற் பொன்னெயில் வட்டத் துய்ப்பர். 18

ஞானவிநோதம்.

* பொன்னெயிலாம் வட்டத்துட் போய்ப்புக்கங் கருகருடன்
றன்மையுடை விதராகந் தளர்வின்றித் தாம்பெற்றுத்
தொன்மையுடை யதுதானுந் துகளறவே தான்வெடித்துப்
புன்மையறப் போவதுவே பொருவருகன் புகன்முத்தி. 19

அருகர் சாத்திரம்.

வினையற விட்ட போதின் வெடித்தபே ரண்டம் போல
நினைவருங் குணங்க ளெட்டு நிறைந்துமே னோக்கி யோடி
முனிவரு முலக மூன்று மிறைஞ்சமூ வுலகி னுச்சிக்
கனைகழ லரச நிற்றல் கைவல்ய மாகுங் கண்டாய். 20

அனந்தபோதம்.

இரவினி † லுணவு மூனு மெண்ணெயு மேழை மார்பால்
விரவலுங் குளியும் பூவும் வெற்றிலை பாக்கு மின்றி
மருவலி லெங்க ணீதி வழிபட மதியொன் றுண்டேற்
பரகதி கண்டு மீண்டிப் பரமன துலகஞ் சார்வார். 21

† லுணர்வு மூனு என்றும் பாடமுண்டு.

கொன்றல் வெட்டல் குறைத்தல் கூப்பிடல் கோழி கூகைக ளுப்களுந், தின்றல் சாறெனத் தீய சொற்கள் புலாலி றைச்சிகள் செப்புத, லென்ற சொற்க ளனந்த முஞ்செவி யெய்திடிற்சரி தைத் திற, மன்று முட்டென வோதுமுக்குடை யாதி நாதர்தம் மாகமம்.

அடுப்புலக்கை யுரற்கள்சால்சுளகம்மிகட்டி லளிக்குல, மடக்கைபானைகள் வாருகோலொடு தோலுகிர்மயிர் மண்ணிடைப், படுக்கைபாய்பரி நாய்கள்பூனைகள் பன்றியாடுகள் பாதக, முடிக்கும்வேதியர் முண்டநீற்றரு முட்டின்முட்டு மொழிந்ததே. 23

(நிராகரணம்).

மெய்ம்மொழி.

மெய்யுள வளவு மான்மா வியாபியா யிருக்கு மாகிற்
கையொடு காலும் வாங்கக் கழிந்திடு மவற்றுட் சிவன்
பையவே யறிவு வேட்கை பண்டுபோ லுண்டு மாகா
னையவித் தட்டு மன்றி யவத்தைக டாமுங் கூடா. 24

அணுப்புரைக் கண்ணு ழன்றங் கடைந்ததிற் பற்று மாங்கே
யணுக்களாய்த் திரிந்த வூழ்க ளவ்வவர் தம்மைப் பற்றி
லணுக்களூழ் சடமா மத்தா லறிந்துசெய் தாரைப் பற்றா
வணுக்களூழ் செய்பா † தாகு மணைந்திடிற் பாவ மென்னாய். 25

† தாரு மணைந்திடிற் பற்று மென்றாய் என்றும் பாடமுண்டு.

உருவணு வாகி யவ்வூ ழுழவின்மண் ணெழுத லத்து
னொருவுயிர் புகவேண் டுங்கா லதனுடன் புகவுங் கூடா
விருவினைப் பிறப்புக் கேது வென்றுமீண் டிவற்றி னொன்று
தருநல முத்தி யென்று சாற்றுதல் சழக்க தன்றே. 26

அடர்த்திரு வினைகொ டுப்ப தருந்துயர்ப் பிறப்பை யன்றி
யிடத்தினை யுடைய வின்ப வீட்டினை யளிக்க மாட்டா
விடத்தினைக் காலு நாக மிக்கமிர் தளிக்க வற்றோ
வெடுத்துற வெற்றுஞ் சூல மெட்டிசந் தனமு மன்றே. 27

நித்தியானந்தசரிதை.

இருவினையும் பிறப்பென்பா யொருவினைக்கு நீயிசைதி
யொருவினைதா னுண்டாமே லுடலுண்டா முடலுண்டே
லிருவினையு முண்டாகு ‡ மெங்ஙனே பிறப்பறுப்பா
யருவினையிற் பட்டழுந்த வழகியநூல் கண்டாயால். 28

‡ மெங்ஙனீ என்றும் பாடமுண்டு.

---

துறுந்திரட்டு.

வெய்யோன் மதிசென் றறிந்தாலும் வியாபி யல்ல வயிரென்றான்
கையைக் காலைக் குறைத்துமுயிர் சிறிதுங் கழியா வகைகண்டு
மெய்யி னளவே யுயிரென்றான் வினைக ளிரண்டும் பிறப்பேயென்
றையோ மீண்டிங் கதிலொன்றான் முத்தி யென்றா னாமருகன். 202

ஏக மென்றான் பலவென்றா னிலதே யென்றா னுளதென்றா
னாநித்த மென்றுரைத்தா னதனை யநித்த மாமென்றான்
மோகம் போல வருவாகு மென்றான் மறித்து முருவென்றான்
யோக மில்லா வார்த்தைகளை யுரைத்தா னிவ்வா றுறியமணன். 203

கண்ணிமைக்கி னுடறுடிக்கிற்கைமறித்துக் கால்பெயர்த்து
மண்மிதிக்கி னெண்ணிறந்த பிராணிபடு மெனவகுத்தாய்
கண்ணிமைப்பை யுடறுடிப்பை கைமறிப்பை கால்பெயர்த்து
மண்மிதிப்பை நீகண்ட நூலோடு மலைதியால். 29

சமயாசாரம்.

புன்புலான் மறுத்தோ மென்பர் போசனம் புசியாக் காலைத்
தன்புலா லுடலைத் தின்னத் தாமுட னளர்ந்த தோரார்
வன்புலா றயிர்நெய் பாலு மனப்புலான் மறுக்க மாட்டார்
துன்புலா விருந்து மெய்யூன் றுறந்தன ரென்றல் பொய்யாம். 30

அநந்தபோதம்.

ஒன்று கோடி நா ளுகி யுதித்திடுங்
கொன்று தின்ற மரத்துயர் கூறிடி
னன்று நீதென் றிடாதெனி னல்லராய்ச்
சென்று நீதின்மை யாரையுந் தின்மினே. 31

நித்தியானந்தசரிதை.

உனக்கென வாக்க லாலே யூண்பொரு ணிமித்த மாக
மனத்தினிற் கவலை யோடு மரிப்பன வினைகளுஞ் செந்து
சினத்தொடு கிருமி † கீடஞ் செத்திட மருந்து தின்னை
யனத்தமி லறநன் றந்த வறஞ்சொன்ன வவரைக் கூறுய். 32

† கீரை யென்றும் பாடமுண்டு.

சமயாசாரம்.

ஆர்த்தகிக் கிரகத் தோடே யனுக்கிர கமுமில் லென்றூ
யார்த்தரை யறிய வுங்கட் காகமஞ் சொன்னு ரார்தா
‡ ஞார்த்தரென் றருளா லோதா னன்றிநிக் கிரகத் தாலோ
வார்த்தர்தா மன்றூ மாகி லாகமம் பொருளன் றையா. 33

‡ ஞார்த்தரே யருளா லோதா என்றும் பாடமுண்டு.

சகலாத்தர் தம்பாற் சென்று தன்மமே யோனி யாக
விகலாத்தர் கதம்ப தென்ன விகாரமின் முரசே போலச்
சகலாத்த மடக்கிக் கொண்டு பஞ்சசாத்தி காய மென்றூர்
விகலாத்தர் விரித்தச் சொல்லை விளம்பினு ராக மங்கள். 34

கதம்பக வென்று லதுவுங் கதம்பக வென்ப தன்றே
விதஞ்செய வுயிர்கட் காத்த ரியாவையு முணர்ந்து பார்த்து
விகம்பல பொருளோர் சொல்லால் விளம்பிடக் கூடா தாகு
மதன்குறை யோரீர் முத்த ரானவர்க் குண்டோ சிந்தை. 35

## மெய்ம்மொழி.

சிந்தனை யில்லா வாத்தர் திறத்துறு பறையிற் போல
வந்தவவ் வொலிக ளியாவு மதித்தனர் விகல ரென்னிற்
சிந்தனை யில்லாச் சத்தம் பொருட்செறி வின்மை யாலே
முந்தையி விருவ ருக்கு முழுதுணர் வில்லை யாகும். 36

சிந்தையி லேக தேசி சேர்விட † முலோகாந் தந்தான்
சிந்தையி லேக தேசி தெரிவிக்கு மாறெ னெல்லாஞ்
சிந்தையி விரவி போலச் செறிகதி ரவற்குண் டெங்குஞ்
சிந்தையி லாத்தர்க் காங்கே தெளிவறி வியாப மென்றாய். 37

† முதலோ காந்தஞ் என்றும் பாடமுண்டு.

அடுத்தது காட்டு கின்ற வரும்பளிங் கறுபோ லென்னி
லடுத்திடா தவற்றைக் காட்ட மாட்டாரே யாத்தர் பின்னை
யடுத்ததே சகத்தி யாவு மக்கிரத் திருக்க வென்னி
னடுத்தெலா மொன்றாய்த் தோன்றுமதுவிதென் றறிவொணாகாண்.

பொறியுறு சரீரி யாகிற் புவனந்தத் திருப்ப ராகிற்
செறிவுறு நிறைவி லாகிற் செய்தன வறியா ராகி
‡ னறைவுறு விரதி யாகி னவர்தம்மாற் பெற்ற தென்னி
னெறியுறு மவர்கட் காத்தர் நிழல்போலு மென்னிற் கேளாய். 39

‡ னறிவரு ளில்லை யாகி என்றும் பாடமுண்டு.

ஓர்ந்துரை நிழலிற் புக்கா லல்லது கிலேசந் தீரா
சார்ந்ததோர் சரீரி யாத்தர் தம்முன்னும் புகக்கூ டாது
சேர்ந்தவச் சமீபத் தாலே தீராது துக்க மையா
வார்ந்தநல் லறிவை விட்டுன் னரியவி டதனைக் கூறாய். 40

எட்டெனுங் கருமந் தானு மீரொன்பான் மலமு மிங்கே
கெட்டெயி றனின்வி டென்றாய் கிறிபடத் தலைப றித்து
முட்டவை யுறாமற் காத்து முன்புள மலநீங் காதாற்
றட்டிலை யருக னேயுன் றலைமயிர் பறித்து வீடே. 41

பன்னிய வினைவெ டித்துப் பறந்துபோ யுலகி னுச்சி
மன்னல்கை வல்லிய மென்றாய் மற்றணு வுடலங் கொண்டே
யுன்னிய வுலகி னுச்சி யிசையுட னுறுமேல் வீழு
மன்னுறு மிக்கை வல்லியம் வாய்த்தவா றருகர்க் கம்மா. 42

உடுப்பதோர் கோவ ணந்தான் மிகையென வுடைது றந்தாய்
படிப்பன வெல்லை யில்லைப் பாவெனி னங்கு ணுகு
மெடுப்பன நிலையேழ் பாழி யிருந்தன தானி யங்க
ளடுப்பதித் துறவின் முத்திக் காகியே யிருந்த தையா. 43

அநந்தபோதம்.

உருவது மெலிய வூனை மறுத்துட றனையொ றுத்துக்
கருவுருப் புகாமற் காமங் காக்கவே யருக ராகி
னருகினிற் பிடித்துக் கட்டி யமுக்கியான் கட்டப் பட்ட
வெருதுக ளெல்லா முங்கட் கிறைவரா மருக ரேயோ. 44

நிலைமையா லுடையை நீத்து நேத்திர நீரே யோடத்
தலைமயிர் பறித்துத் துன்பந் தாங்குதல் சமணு மென்னின்
விலைபடு பீலி சிந்தி வெற்றரை யாகி நிற்கு
மலைகளின் மஞ்ஞை யெல்லாம் வாலிய வருக ரேயோ. 45

புத்தியின் வழிபோ காது புலன்களின் வழிபோ காது
தத்தம நெறியைப் பற்றிச் சரிப்பது சமணு மென்னிற்
புத்தியின் வழிபோ காது புலன்களின் வழிபோ காத
பித்தரு முங்க ளாலே பேசிய வருக ரேயோ. 46

நளிரி னொதுங்கி முழைகள்சேர் நவிலும் வெறும்பொய்
யமணரே, குளிரி னொதுங்கி வரைகள்சேர் குறவரு முங்க ளற
வரே, களிவர வின்றி யொழிகிறீர் கடவுள் பதங்கள் பெறுவரோ,
லெளிவர வுண்டு மிடியரா யிடுமெவ ருங்க ளறவரே. 47

அருகம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 547.

## 3. லோகாயதம்.

வினைவிளக்கம்.

அய்யமி லறம்போற் சொல்லி யழிகொலை மறமே செய்
யும், பொய்யரா மருகர் சொல்லும் பொருண்மையும் போக
விட்டு, மெய்யதாம் பூத நான்கும் விடயமே கமுமெய் யென்றங்,
குய்வகை யுரையா லோகா யதமதம் முரைக்கக் கேண்மோ. 1

ஞானவிநோதம்.

வானல்லா மாபூத சதுட்டயத்தின் விகாரமெலா
மூனல்லாக் கரணங்க ளுடனிகழ்ச்சி யேயுளதங்
கூனல்லா வான்மாவென் றுரைப்பதுவுந் தானில்லைத்
தானல்லாப் புத்திரருந் தாய்தந்தை புணர்ச்சியதால். 2

அஞ்ஞானநிவிர்த்தி.

அறிவுடைய வூனன்றி வேறேவ யான்மா வன்றி யகத்தாதல் புறத்தாத லறியி னுண்டோ, பிறிவுடைய கரணங்க ளாதல் பேசிற் பெயர்த்துமன மேயாதல் பிறிதொன் றுண்டோ, முறைமொழிய மொய்குழலார் மணமே முத்தி முகரியசந் தனமலரே சுவர்க்க மாகும், பிறியிலது வேநரக மெனவும் பேசிப் பின்பிணியொன் றில்லையெனப் பிறழ்வித் தானே. 3

மெய்ம்மொழி.

சைதன்ய மீச னுன்மாச் சார்வினை மறுபி றப்பூழ்,பொய்பதா மளவை யொன்றே பூதங்கள் புணர்ச்சி காலஞ்,செய்தவவ் வியல்பா மெல்லாஞ் செனித்தவா றடங்கு முத்தி, மைதுன முதலோகாயதன் வடித்தநற் பொருளி தன்றே. 4

பிரபோதனம்.

மட்டவிழுங் குழலாரும் பொருளு மல்லால் வாய்த்தபொருளிலதென்றும் வடிவை யிங்கே, விட்டொருவன் போய்ப்பிறத்தல் பொய்யேயென்று மேதினிநீ ரனல்காற்று மெய்யே யென்றுங், கட்டழிந்திவ் வுடல்விழுகை வீடாமென்றுங் கண்டறியுங் காட்சியே காட்சி யென்று, முட்டெளிந்த சுரர்குருவி னுழைச்சார் வாகவோதியலோ காயதநா லுண்மை நூலே. 5

உருவினை யொழிய வேறே யொருவனுண் டுணர்வாய் நிற்ப
னிருவினை யியற்றித் தானே யிருவினைப் பயனு மெய்துந்
திருநெறி யிதுவே யென்று தேறுவ ராகா யப்பூந்
தருவளர் கனியை வாங்கித் தாமுணச் சமைக்கின் றாரே. 6

---

திரட்டு.

சாருவாகம்.

அம்பரமான் மாவீச னறம்பாவ மூளவல்ல
செம்பொனுமா தருமல்லாற் சிறந்தபொருட் பிறிதில்லை
நம்பளவை காட்சியுட னசமே வீடென்ன
வும்பர்குரு சார்வாக வுரைத்தனன்லோ காயதனே. 204

இல்லாத பொருளுலகி லுண்டாத லியல்பல்ல வென்றோ மென்றும், பொல்லாத வழிபொருந்தும் புலைமக்க ணம்வழியிற் பொருந்தார் மாந்தர், சொல்லாதல் பொருளாமே சுடர்வாள் கொண் டோருடம்பு துணித்துப் பூத, மல்லாத பொருள்காட்டார் காட்டழைப்பு நின்றணைப்பா ரளியற் றோரே. 7

வேட்டதழன் முதலாகத் தாமிறந்து தீவேட்டோர் விண் போய்ச் சேர்தல், காட்டழலால் வெந்தமரந் தளிரெழுந்து மலர் பூத்துக் காய்த்தலாகு, நாட்டிலுயி ரிழந்தார்தம் புதல்வர் செயு நல்வினையா னலத்தைச் சேர்தன், மாட்டியசெஞ் சுட ரவிந்து பின்சொரிந்த நெய்யினால் வளர்கை காணே. 8

### மெய்ம்மொழி.

உண்டலு முடையு மின்றி யுறக்கமு மின்றி யோய்ந்து
வண்டுவார் குழலி மார்பான் மருவுத லின்றி வற்றித்
தண்டலில் சிறையே போலத் தவப்படு முடலுக் கியாங்க
ளுண்டெனு முண்மை யேறு துள்ளத்தின் கலக்கந் தன்னால். 9

சுத்தநீ ராடி வெள்ளைத் துகிலுடுத் தகிலின் றூபம்
வைத்துமெய்க் காரம் பூசி மாலையுஞ் சாந்துஞ் சாத்தி
யுத்தம மங்கை மாரோ டுறைந்துண்டி பாலோ டுண்ணச்
சித்தமுந் தெளியு மித்தைச் செய்துநீர் தெளிந்து தேறீர். 10

சாத லெவர்க்குந் தவிர்விலை வாணா ளதுதன்னில்
பாதி யுறக்கத் தேகழி வாகும் பாதிக்கே
தீதுறு நோயிற் சென்றழி வாகுஞ் செயலில்லைப்
பேதையர் போகம் பெறுவது காணும் பெறுபேறே. 11

### (நிராகரணம்).

### சமயாசாரம்.

அன்னத்தி லிருநீர் மெய்யே லன்னமுன் பாக்கி னாரா
ரன்னத்தி லிருநீர் காணோ மாக்கையா மாறெ னன்றி
யன்னத்தை நுகர்ந்த யாக்கை யிழைந்திடத் திருநீ ரென்னி
லன்னத்தி லிருநீர் தோன்று மதற்குமுன் பாக்கை யுண்டோ. 12

ஆதலா லன்னந் தன்னா லாக்கைசம் பவியா மற்றுந்
தாதுவா முடல்க டம்மில் விழைந்தநீ ராக்கை யென்னின்
மாதரார் மைந்த ரோடே மகிழ்ந்துழை யிருநீ ரென்றும்
பேதமா முடல்க ளாகா பிறப்புட லிருநீ ரன்றே. 13

* உடலாகா திருநீர் நானு முக்கமே சதளமாய்ப் போகை
யுடனுமே யுயிரா காவவ் வுயிர்போக † வுடல்சா வாயா
னுடலாவ திருநீர் சார்வா னுயிர்வந்து புகுதி லையா
வுடலாவி வருமா றோரா யுரைக்கையைத் தவிரி னித்தான். 14

† வுடல்வே மத்தா என்றும் பாடமுண்டு.

தாம்பூலக் கூட்டத்துச் சிவப்பெழூந் தன்மைபோல
வாம்பூதக் கூட்டத்தி னுடம்பினுணர் வெழுமென்பீர்
தாம்பூலம் புணர்ந்தாரார் தாம்பூல நிறம்போல
வாம்பூதத் துளவுடம்பு முடம்புண்டே லறிவுண்டாம். 15

சித்தாந்த தீபிகை.

* உடம்பினி லுணர்வா மென்னி லுதித்திடுங் காட்டத் திப்போ
னுடம்புள வளவு மாங்கே யுணர்வது முறைய வேண்டு
முடம்பது கிடக்க விங்கே யுணர்வது போத லாலே
யுடம்பினி லுணர்வு வேறு ‡ முணர்விலீ ருணரு மன்றே. 16

‡ முணர்வினி னுணரு மன்றே என்றும் பாடமுண்டு.

* ஓங்கிய மரத்தின் † மீண்டு முதிர்ந்தவச் சருகெ மூாது
வாங்கென விறந்த வாக்கை யறிவுபின் பிறவா தென்னி
னோங்கிய மரம தன்றோ வுதிர்ப்பது தளிர்ப்ப தையா
வாங்கது போல வான்மா வாக்கைவிட் டெடுக்கு மன்றே. 17

† மீதே யுதிர்ந்தவச் என்றும் பாடமுண்டு.

* கோலமாங் கலைகள் † கூடி யிறந்தபின் சிறந்தங் காகிப்
பாலனாய்ப் பிறந்து பைய வளர்ந்திடு மதியே போலத்
தூலமா முடல்விட் டான்மாச் சூக்கும வுடலாய் நின்று [றும்.
மேலுஞ்சென் றிருநீர் தோய்ந்து வினைவசத் துடலுட் டோன்

† கூடிக் குறைந்துதேய்ந் திறந்த பின்னும் என்றும் பாடமுண்டு.

* வினைப்பய னில்லை யாகின் விரும்பியே நீதா னுரு
நினைத்தெழுங் கரும மெல்லா நினைத்தவா முடியா வாறெ
னனைத்துமுன் வசமொன் றின்றி யாக்கமு மழிவுங் கண்டான்
முனைப்பவத் தளவா ‡ முன்றன் முயற்சியின் பலமென் றோராய்.

† மிம்மை யென்றும் பாடமுண்டு.

* இறந்தவர் பிறவா ராகி னிருவினை யில்லை யாகி
னறிந்தவர் பெறுவ தென்னை யறியாதா ரிழப்ப தென்னே
கறங்குபோற் பிறந்தி றந்து கடுவினைத் துயர மெல்லாஞ்
செறிந்தனை கெடுவாய் முத்தித் திறமுமை துணைமென் பாயே. 20

அனந்தபோதம்.

ஓலு மொன்பது வாசலி னூத்தையுஞ்
சாலும் போலும் வயிறுந் தசைகளுஞ்
சேலு நீருஞ் செறிந்த புழுக்களுந்
தோலு மோசொலு முத்தியின் பத்திறம். 21

என்புந் தோலு மிறைச்சியு மச்சையு
மொன்ப தாலு மொழுகிடு மூத்தையும்
புன்பு லாலும் புழுவும் பொதிந்துடற்
றுன்ப மோசொலு முத்தியின் பத்திறம். 22

ஒக்க வொன்பது வாயிலி னூத்தையும்
புக்கு நாற்றப் புழுக்கள் புரண்டிடக்
கக்கி விக்கிக் கடுவினை நோய்களாந்
துக்க மோசொலு முத்தியின் பத்திறம். 23

சாற்றும் வெற்றிலை தானிலை யாயிடி
னூற்றுப் † பானை யெனும்படி நாவிழைந்
தாற்ற மாய்மிக வூத்தை யுலாவிடுந்
தோற்ற மோசொலு முத்தியின் பத்திறம். 23

† பாளை என்றும் பாடமுண்டு.

லோகாயதம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 571.

## 4. மீமாம்சை.

வினுவிளக்கம்.

ஓதிய வேத நிந்தை யுரைப்பதா யுணர்வொன் றில்லா
வாதியர் தம்மை விட்டு வைதிகப் பொருளை நாடக்
கோதறு மறையி னீதி குலவுமீ மாம்சை தன்னைக்
காதலா லுரைக்க லுற்றே னதனைநீ கருதி டாயே.

மெய்ம்மொழி.

† அறிவுறு மனேக மான்மா வனேகமும் வியாபி புத்தி
பொறியுறு குணமா மென்றும் பூதமீ ருடல்க ளாகிச்
செறிவுறு நரக சொர்க்கஞ் செய்த ‡ நல் வினையான் முத்தி
பிறிவுறு மறிவு சத்தம் பிரமமீ மாம்ச ருக்கே. 2

† அறிவுறிலனேக என்றும் ‡ வல்வினை அல்லது வல்வினை என்றும் பாடமுண்டு.

### அஞ்ஞானநிவிர்த்தி.

உண்டான பொருளைமறை யுரைத்த தென்று மோவாமற் காரியத்தை யுரைக்கு மென்று, விண்டார்க்கு ஞானத்தால் வீடு மில்லை வினைகடமை விடுகைக்கு விதியு மில்லைக், கண்டானு முலகு தனைக் கத்தாவேகாண் காரணனா யிருப்பானா னீசனில்லை, யுண் டாகிற் சுவர்க்கமல தொன்று மில்லை யோத்தினுக்கு மிதுபொரு ளென் றுரைக்கின் றோமே. 3

கன்மத்தா லிந்திரனார் கதியைக் காணக் கதியென்று காரியத் தோடுணர்வைக் † கூட்டிச், சன்மத்தா னெடுங்காலஞ் சரித்துப் போந்த சாதனத்தாற் றேவர்கதி தன்னைச் சார்ந்து, தன்மத்தாற் பிரமபுரந்தனைய டைந்து சதுமுகனார் தம்மோடே சமைந்திருந்து, பின்பத்தாற் பிறவிகளை யெல்லாம் விட்டுப் பிரமத்தோ டொன் றாகை பேறென் றோமே. 4

† கூடி என்றும் பாடமுண்டு.

காரியமாங் கருமத்தை யெல்லாஞ் செய்து காமியபா வக் கரும மெல்லாம் விட்டுக், கூரியனாய் மேற்குறையுஞ் † செய்வோ மென்று குறித்திருந்த வவனுடைய குரம்பை வீழ்கா, லீரியல்பா மிருவினைக ளெல்லாங் கூடி யிவனுக்கோர் குரம்பையினை யெடுத்த தற்கே, வாரியுணக் கருமபல மாண்டு நின்றால் வானகத்தே முத்தியென மதிக்கின் றோமே. 5

† செய்யோ என்றும் பாடமுண்டு.

(நிராகரணம்).

### மெய்ம்மொழி.

ஆன்மாவின் வியாப நிற்க வதன்குணம் புத்தி யென்றா
யான்மாவி னளவு முண்டா மங்கியின் குணமே போல
வான்மாவு நிற்கப் புத்தி யவத்தைக டாமுங் கூடா
வான்மாவு மவத்தை கொள்ளி லானியாம் வியாப மன்றே. 6

பசுப்படுத் தியாகம் பண்ணிப் பலத்தினிற் சுவர்க்கஞ் சென்று
புசித்துமீண் டிழிந்து பின்னும் பூமிமேற் பிறக்கு மென்று
நசித்திடுங் கொலைபா வத்தா னரகுறுங் கிருமி † யாகும்
‡ வசித்துநீ சுவர்க்கந் தன்னை யடைபவர் பலமென் பாயே. 7

† யாமென்று என்றும் ‡ விசித்துநீ சுவர்க்கந் தன்னை மிருபோக பலமென் றாயே என்றும் பாடமுண்டு.

எல்லையி றனங்க ணோர்ந்து பசுப்படுத் தியாகஞ் செய்தாய்
சொல்லிடின் முள்ளிப் பூவின் றேன்சுவை தானு மில்லாப்
புல்லிய சுவர்க்கந் தன்னிற் போய்மீளு மளவுக் கேநீ
நல்லியன் மறைக ளோது நல்லமெய்ஞ் ஞானி ஞானி. 8

சத்தமா னதுச யம்புத் தற்பரம் பிரம மென்று
யத்தவத் தோதான் சத்த மன்றியே நிரத்த வத்தோ
நித்தம்வே றத்த வத்தே னிரத்தக மென்னிற் கேளாய்
கத்துகா வோலை செக்குக் கடலொலி போல்வ சத்தம். 9

சுருதிமந் திரங்க டம்மைச் சொல்லிநாஞ் செபங்கள் பண்ணக்
கருதிய பலங்கொ டுக்குங் காரண மிதுவே யென்றே
விரிதரு பிரம மென்று விளம்பிய சத்த மன்றிப்
புரிதரு பொருள்வே றில்லை யென்றனை புகலக் கேளாய். 10

அரிந்திட வேண்டு மாங்கே யரிவாள தென்ற போதே
பரிந்துநீ யுண்டா யென்னப் பசியது போக வேண்டு
மெரிந்திட வேண்டு மீண்ட னெரியென்ற பொழுதி னில்வாய்
புரிந்திடுஞ் சத்தந் தோறும் பொருள்கண்மற் றில்லை யாகில். 11

சத்தந்தான் பிறப்ப தென்றுந் தானுதந் தோட்டத் தாலே
யொத்தவான் குணம தாகு முரைப்பதோர் பொருள்கு றித்து
நித்தமன் றத்தந் தோறு நேர்ந்தெழுந் திறக்கு மாங்கே
வத்துவென் றித்தைச் சொன்ன மதியின்மை யென்னே யென்[னே.

சத்தந்தா னுருவத் தன்றிச் சயம்புவேற் றுனே யென்றுஞ்
சத்தமாச் சத்தி யாமை சயம்புவன் றுமே யையா
சத்தமா நாத சத்தி தானெழுந் தன்மை காணாய்
சத்தமாஞ் சத்தி காணிற் சத்திமான் றுனே தோன்றும். 13

குறுந்திரட்டு.

சத்தமெய் யாம்பிரம மனேக மாத்மா சகலமுந்தான் வியாபிகளா மாத்மா வுக்குப், புத்திதான் குணமாகும் வினைக டாமே பூதமீ ருடலாக்கிப் பொருந்து வித்துத், துய்த்தலாஞ் சுவர்க்கநிர யத்தி லின்பந் துன்பங்கள் பயன்கருதாக் கன்மத் தாலே, முத்திபா டாணமென வுணர்வொன் றின்மை யதுவேமீ மாம்சகன்றன் மொழிவுற் றனே. 205

செய்தசட வினைதானே பலிக்கு மென்றன் சேதனஞ் கியசீவன் செடமே யாகை, யுய்தரும்வீ டெனவுரைத்தா னதுவுஞ் சொர்க்க வுலகத் தே போமென்றா னுயிர்வா னத்தின். மைதருமோர் குணம்பிரம மென் றன் மாசின் மறையோதி மன்னுபரம் பிரம மோரான், பைதலிவன் றன் னைமீ மாம்ச னுசும் பாடாண்ட னெனவறிஞர் பகர்கின் றரே. 206

முத்திபா டாணம்போல முழுதுணர் விறக்கை யென்றாய்
சுத்தசை தனமா ஞானச் சொரூபமா மான்மாத் தன்னைப்
பெத்தமா மலங்கள் பொன்றப் பேரறி வாத லன்றோ
சத்தமே பிரம மென்று யிதுசொலத் தட்டெனையா. 14

புத்தி முத்திக்க ணில்லை யாதலாற் போத மின்றே
லொத்துயிர்க் குணமே புத்தி யென்றவுன் னிட்டத் தாலே
நித்தமாய்க் குணியி ருந்தா னிகழ்ந்திடுங் குணமு மென்றுஞ்
சுத்தமாஞ் சுடரி ருக்கச் சோதிதா னசியா தாங்கே. 15

தூசது மாசு போனாற் சொரூபமாம் வெண்மை போமோ
பாசமா மலங்கள் போனாற் பண்டுள வறிவு போமோ
வாசிலா முத்தி யுண்மை யங்கணத் தமிழ்து நின்முன்
மாசற வுரைக்கை யையா வார்த்தையு மமையு முன்பால். 16

அனந்தபோதம்.

என்புக்கடம் வானுற மாமறை யேயணியிட்டுத்
துன்புற்று வேள்வி தொடங்கிச்சுர ராகுமுண்மை
வன்பொற் கடல்வற்றி மச்சங்க டின்னவெண்ணி
யன்புற் றொருபூனை யருந்தவஞ் செய்தல்போலாம். 17

முப்பொழு தளவி னீரின் மூழ்கிய முறைமை யாலே
செப்பிடுஞ் சுருதி யோதித் திரிபவர் தேவ ராகி
னெப்பொழு தளவி னீரின் மூழ்கியிட் டேறிக் கத்துத்
தப்பளை யினமு மும்மிற் சாலவுஞ் சுரரா வேண்டும். 18

பாடுறு மறையி னாலே பகர்வுறு சமிதை தன்னைச்
சூடுறு தழலிற் சுட்டார் சுரர்களா யிடுவ ராகி
னாடுகள் சுடுவார் நல்ல நகரிகள் சுடுவார் நண்ணிக்
காடுகள் சுடுவா ரும்மைக் காட்டிலுங் கடவு ளாவர். 19

மீமாம்சை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 590.

## 5. நியாயம்.

வினாவிளக்கம்.

ஓதிய வேத மார்க்கத் துரைத்தமீ மாம்சை யென்னும்
வாதமாங் கோதை விட்டு மற்றைநை யாயி கத்தை
பேதம தறவே யுள்ள பரிசெலா மெளிதிற் கூறக்
காதலா லிதனை யுந்தான் கருதிநீ கேட்டி யையா. 1

### மெய்ம்மொழி.

* திரவிய மைந்து நான்குஞ் செறிகுணம் பத்தோ டேழு
நிரவிய கரும மைந்து நிகழிலக் கணங்கண் மூன்றும்
விரவிய தகில மான்மா வியாபிகள் குணங்கள் புத்தி
கரவியல் கட்டும் வீடுங் கன்மமுங் கத்தா வானும். 2

* செறிதிர வியமைம் பூதந் திசைகால மனமோ டான்மா
வுறுகுணம் பரிச மாதி நாலொடெண் பரிமா ணந்தான்
பிறிவொடு கூட்டம் பேசுஞ் சராசரம் புத்தி யின்பந்
திறிதரு துன்பம் வேண்டல் வேண்டாமை முயற்சி கேடே. 3

* ஏற்றிய கரும மைந்து மிலங்கிட வறியக் கூறிற்
போற்றிய பக்குவா பக்குவம் புகன்றிடும் விரிவொ டுக்க
மேற்றிய கரும மென்றுங் கைந்தினி னிலக்க ணந்தான்
சாற்றிய விசேடஞ் சாமா நியஞ்சம வாய மாமே. 4

### (நிராகரணம்).

### சித்தாந்ததீபிகை.

* சட்டமே யகில மான்மாச் சகலமும் வியாபி புத்தி
யிட்டமாங் குணங்கள் கன்ம மீசனு மெவ்வு யிர்க்குங்
கட்டுவீ டிரண்டி னுக்குங் காரண மென்று கொண்டு
துட்டினை யோரா னையா யிகனூர்தாஞ் சாற்ற லென்னே. 5

* புத்தியு மான்மாப் போல வியாபியாங் குணம தென்னி
னொத்துறு பரிச மெல்லா மொருபொழு துணர வேண்டுஞ்
சத்தமுன் விடய மெல்லாந் தனித்தனி யுணரக் கண்டு
மத்தையே வியாபி யான வான்மாவின் குணமென் பாயே. 6

* வியாபக னுரு மான்மா விரிவுட னொடுக்கங் கூடா
வியாபகன் குணமு மங்ஙன் வெய்யதீக் குணம்போ லன்றே
வியாபகஞ் சுழுத்திக் கில்லைத் திரியவும் விரியக் கண்டோம்
வியாபகக் குணங்க ணீரே விரிவுட னொடுக்கஞ் சொல்லீர். 7

---

### குறுந்திரட்டு.

மூன்வினைப் பயன்புசிக்க மூர்த்தியாய் மூர்த்திதன்னாற்
பின்வினை பிறந்ததாலே பிறந்திறந் துழலுமென்றுங்
கன்மமு மாயைதானுங் காரணம் பிறப்புக்கன்றித்
தன்மமன் றருளாலீசன் றான்செய்வ னென்னினன்றே.

* கன்மமுங் கத்தா வாலுங் கட்டுவி டிரண்டு மென்றாய்
கன்மமோ கந்தாத் தானோ கட்டினைப் பண்ணு கின்றார்
கன்மத்தாற் கத்தாப் பண்ணிற் கன்மமே கத்தா வாருங்
கன்மந்தான் செய்த தன்றாங் கத்தாவின் செயல தென்னில். 8

* செய்வினை புசிக்கக் கத்தாச் செய்திடு மென்னிற் கேளாய்
செய்வினை புசிக்கக் கத்தாச் செய்திடா தொழியி லென்றுஞ்
செய்வினை புசிக்க வேண்டா செறுதுயர்ப் பிறப்பு மில்லைச்
செய்வினை புசிப்பிப் பான்போற் றீவினை யாள ருண்டோ. 9

* பிறக்குமவ் விடத்திற் றுன்பம் பிணிபல வுறுகை துன்ப
முறக்கமு முணர்வுந் துன்ப மொண்பொரு டேட றுன்ப
மிறக்குமவ் விடத்திற் றுன்ப மிழுக்குடைப் பிறப்பை யென்று
மறத்தனு மீசன் செய்யி னருளினுக் கானி யையா. 10

* ஓதுயிர் பெத்த நீங்க வுரைப்படி யிறைவற் பாவித்
தேதமில் சடமே யென்ன விருப்பது முத்தி யென்றாய்
போதமா முயிரின் முத்தி பொய்ச்சட மாவ தேநன்
றீதையா வறிஞர்க் கேறு திசையுமீ மாம்ச ருக்கே. 11

தேரை தெங்கிள நீர துண்டது வென்று செப்புமன் னீதி
போற், † பேரு நன்றுன் மதத்தி னுக்கு நியாய மென்று பிதற்
றின, யோரி னெண்மறை யாக மங்க ளுரைத் தொவாவனி யாய
முன், னேர தொன்று நியாய நன்றினி நிற்க நிற்க நையா
யிகா. 12

† பேரினின்றவுன் மத்தனுக்கு நியாயனென்று என்றும் பாடமுண்டு.

நியாயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 602.

## 6. வைசேடிகம்.

### வினாவிளக்கம்.

ஓதிய வேதநீதி யுற்றுமொன் றினையு மோரா
வேதமில் விருளேயென்ன விசைத்திடு நியாயம் விட்டுத்
தீதில்வை சேட மார்க்கத் திகழ்தரு பொருளை மைந்தா
நீதியா லுணரும் வண்ண நெறிதர வறைது வன்கேள். 1

சித்தாந்ததீபிகை.

* மைவண்ண மில்லாத பொருள்க டம்மால் வாய்த்ததரி சனம்வைசே டிகமே யன்றோ, வவ்வண்ண மிதனுடைய மதமுங் கூறினான்மாக்கள் சடராகி யனேக ராகி, மெய்வண்ணங் குணங் குணியா யவத்தை மேவி வியன்பாச பெத்தர்களாய்ப் பிறந்திறந் தே, யிவ்வண்ண மதுவின்றி யுழல்வார் தங்கட் குயர்வீடு பாவனை யா லுளவா மன்றே. 2

* அரும்பாசத் தகப்பட்ட பெத்தான் மாக்க ளனேகபவந் தமின்முயன்ற வறங்க டம்மாற், றிரும்பாத பத்தியது சிவன்பா லுண்டாய்ச் சிவனையே பாவித்தங் காரா திக்கப், பெரும்பாலுங் கருடனையே பாவித் தத்தாற் பெருவிடந்தீர்ந் ததுபோலப் பாசம் விட்டுப், பரன்போல நிர்க்குணனு யவத்தைக் கெட்டுப் பரனைத் தங் கிருப்பதுவே பகர்வீ டாமே. 3

(நிராகரணம்).

. * கூறரிய வான்மாக்கள் சடரே யென்றாய் குறித்துணரிற் சடங்களெலா மனுன்மா வன்றோ, வேறுகுணன் முத்தியினிர்க் குணனே யென்றாய் வெம்மைபோ யனலிருக்கை மேவுமோதான், மாறரிய வவத்தையினிற் படுவ ரென்றாய் மையன்மன மாதிகளுன் னுன்மா வோதான், றேறுமுணர் வேதுமிலாத் திண்ணற் கேற்ற தெரிசனம்வை சேடிகமாய்ச் சிறந்த தன்றே. 4

* பாவனையான் முத்தியது வாகு மென்றாய் † பாவித்த தக் கணம்வந் தழியாதோதான்,மேவரிய கருடனையே பாவித் தத்தால் விடந்தீர்ந்த வாறதுபோ லென்னிற் கேளாய், தாவரிய கருடனை முன் கண்டாற் போலத் தற்பரனைக் கண்டோபா வித்தா யன்றே, யோவவிலாப் பாவ கத்தாற் பரனீ யாகா யொப்பாகாய் பாசமு மங் கொழியாய் காணே. 5

† பாவித்த தக்கணமங் கழியா தோதான் என்றும் பாடமுண்டு.

வைசேடிகம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 607.

## 7. சாங்கியம். 24407

வினாவிளக்கம்.

புத்தனே முதலா வேதப் † புறம்புறச் சமய மூன்றும்
சுத்தமீ மாம்சை யாதி துகளறு மதமிம் மூன்று
மித்தகைத் தாறும் விட்டங் கெழின்மறை நெறிவி கற்பா
யுய்த்தசாங் கியத்தி னுண்மை யதனையு மொழிவன் கேளாய். 1

† புறப்புறச் என்றும் பாடமுண்டு.

சித்தாந்ததீபிகை.

* இலங்கிய புருடன் மற்று மேய்ந்தநற் பகுதி யென்னத்
துலங்கிய விரண்டு முண்மை சொல்லிய பகுதி யின்பான்
மலங்கெழு மானாங் காரம் † வகுத்தன விகுதி யெல்லாஞ்
சலங்கெழு கட்டும் வீடுந் தனக்குத்தான் புருடன் செய்யும். 2

† வகுத்ததன் என்றும் பாடமுண்டு.

* பகுதியின் விகுதி யாகிப் பரந்தெழு மின்ப துன்பந்
தகுதிநற் சித்தாந் தன்மே லேற்றுதல் பெத்த மாகும்
விகுதிநற் பகுதி யெல்லா மெனக்கிலை யென்று பார்க்க
வகலுமற் றதுவே வீடா மருளமற் றிறைவே றின்றே. 3

(நிராகரணம்).

* பகுதியும் பரமன் றானு முண்மையேற் பரமன் றன்னை
விகுதியால் கட்டு பாதி மேலுநீங் காது நிற்கப்
பகுதியான் மானாங் காரம் படைத்தன முழுது மென்றாய்
பகுதிமா னாங்கா ரந்தான் சேதனம் படைக்கு மாறென். 4

* அறிந்தரு ளீசன் வேண்டா வான்மாவே கட்டும் வீடுஞ்
செறிந்திடு மாகிற் * றுன்பப் பெத்தந்தான் செய்த தென்னே
மறந்தன னாகி மற்றை † வீடுதா னறியா தெய்த்தங்
கறிந்தருள் குரவற் றேடி யலம்வரப் பெறுமோ சொல்லாய். 5

† வீடுதேர்ந் தறியா என்றும் பாடமுண்டு.

ஆதலா லோத லேது மறிவிலாச் சாங்கி யாவுன்
நீதிலா மதமுன் போலத் தெளிந்தவர்க் கொப்ப தல்லால்
வேதவா கமங்க ளாய்ந்து மெய்யுணர் வுணர்ந்த நல்லோர்க்
கேதமா யிருப்ப தென்று மினியுரை வேண்டா வுன்பால். 6

சாங்கியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 613.

# ౨. சைவம்.

### வினாவிளக்கம்,

உரைத்தசாங் கியமீ ருாக வுள்ளவச் சமய மெல்லா
நிரைத்தருள் செய்த ளித்த நீதிபோ லாக மந்தி
னுரைத்தசை வாதி யாறு முண்மைநற் பரிசு மெல்லாங்
கருத்துற வடிய னேற்குன் கருணையான் மொழிய வேண்டும். 1

### சித்தாந்ததீபிகை.

சாற்றுமச் சைவஞ் சுத்தஞ் சம்மேள மெனவி ரண்டா
மேற்றதிற் சுத்த மெண்ணிற் பேதமாம் பேதா பேதம்
போற்றுமச் சம்மே ளந்தான் புகன்றுள விரண்டின் முன்னந்
தோற்றுமச் சுத்த சைவத் துணிவுறு பொருளுங் கேளாய். 2

* பதிபசு பாச மூன்றும் பார்த்திடின் வியாப நித்தம்
பதியவன் சத்தி மூன்றும் பாசத்திற் கனந்த சத்தி
விதியினாற் பசுவ னாதி மலநிறை விமல னாகுங்
கதிபசு பதியை யொத்துக் கண்டுகொண் டிருத்த லாமே. 3

* பதியாவான் பேரறிவன் பசுவாவான் பதியன்றி
மதிதானுஞ் சிறிதாகி மறவியொடு மவிச்சையுளன்
கதிநாளுங் காட்டாத கார்மலமுஞ் சடமாகும்
பதிதானும் பசுமலமும் பார்க்கினிவை யனாதியாம். 4

### (நிராகரணம்).

* பதிபசு பாச நித்த மனாதியாய் வியாபி யென்றுப்
பதியினுக் கேற்ற மென்பின் பார்க்கினங் கவைதா னொக்கும்
பதியவன் சத்தி மூன்றேற் பாசத்திற் கனந்த மாகிற்
பதியினிற் பாச மன்றோ பரமது வாவ தையா. 5

* பதியலாற் பசுவை யார்த்தார் பாசமோ பதிதா னேயோ
பதியெனிற் பாசம் வேண்டா பாசமுன் பிலையு மாகும்
பதியல பாச மென்னிற் பதிதனால் விடுங் கூடா
மதியுடைச் சைவா வுன்றன் மதிநல மிருந்த வாறென். 6

* சுபாவமே மலனான் மாவின் மலங்கெடல் சுகவ் டென்றுய், சுபாவந்தான் கெடுமே யாகிற் பதிசுத்தந் தானுங் கேடாஞ், சுபாவம்போய்ச் செம்புபொன்னா மிரதத்தா லதுபோலென்னிற், சுபாவமாய்ப் பதியப் போதவ் விரதம்போ லொழியுங் காணே. 7

* சித்தமே வடிவ தாகிச் சிவன்சிவன் முத்தி தன்னி
லொத்துற வொருவன் காட்ட வொருவன்கண் டிருப்ப தென்றா
யத்தகு மவர்கட் கப்போ துடலொடு கரணம் வேண்டும்
பித்துறு சைவா முத்திப் பேரின்பத் திரண்டுண் டாமோ. 8

* முத்தனே முத்தி யீவான் முத்தான்மா வீய மாட்டா
னத்தகைச் சிவனே முத்தன் குருமுத்தான் மாவா மென்றாய்
மெய்த்தகு முத்தி யீவான் வியன்குரு வொழிந்து மற்றோர்
மத்தனோ கெடுவாய் சைவா மலர்க்கழல் சூட்டி னோரார். 9

அங்கையிற் கனிபோன் முத்தி யனுபவ மாகப் பெற்றா
ரிங்குநற் சைவா நீயே யன்றிவே றாரு முண்டோ
துங்கநற் சிவமு நீயுஞ் சொல்லிய குருவு மென்னப்
பங்குபட் டிருக்கு முத்தி யெங்ஙனே பலித்த தோதான். 10

தத்துவந் தொண்ணூற் றாறு முதற்பல வவத்தை யங்ங
னத்துவா வனேக மாமற் றளவற வெவையுங் கொண்டு
மெத்தகக் கழியச் சொல்லி மெய்ஞ்ஞானஞ் சித்தத் துள்ளே
சத்திய மாக வந்து பலிப்பது சைவர்க் கேயோ. 11

### அவிரோதபோதம்.

ஆதிநா யகனமரர்க் கறியொ ணாதா னாரணங்கட் களப்பரிய வரனை மைய, னேதுமா கமங்கடமிற் குறைவுண் டோதா னுனக் கவற்றின் றற்பரிய முணர்வொ ணாகாண், காதும்வா தங்களறத் தானே வந்து காசரணா தி யவயவனைக் கழல்கள் சூட்டி, யோது மொரு மொழியாலே யுணர்த்தி னப்போ தொண்சைவா கமப பொருளங் குணர லாமே. 12

சுத்தசைவம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 625.

## 9. சம்மேள சைவம்.

### சித்தாந்ததீபிகை.

* நித்தமாம் பதியினொடு பசுபா சந்தா னிகளமதாம் பசுவிற் குப் பாசந் தானு, முத்தனும் பதியவனு மனாதி யாக மூமலனும் பசுப்பெத்த மவனே யாம், பத்திஞா னத்தாறுமப் பாசங் கெட்டுப் † பதியோடு மொளித்தொன்றாய்ப் பகரு முத்தி, சுத்தமாஞ் சம்மேள சைவ மன்றித் துரிசறுநற் பொருளதோ சொல்லுங் காலே. 1

† பதியொடுமே ளித்தொன்றாய் என்றும் பாடமுண்டு.

(நிராகரணம்).

* அநாதியே பதிபசுக்கண் முத்தி பெத்த மாமென்றே பசுவுக்கு முத்தி சொன்னா, யநாதியாம் பசுப்பெத்த மொழியிலங்ஙனாளில்பதி யநாதி முத்தி யொழியா தோதா, னநாதியாம் பாசமது நித்த மாகி னதுகெடுமோ விட்டிலதன் சத்தி யென்னிற், றநாதனலின் சுடுகையதாஞ் சத்தி கெட்டுத் தான்குளிர்ந்தங் கிருக்குமெனச் சமைந்தாய் காணே. 2

* பதிபசுக்க ளநாதியே பேத மென்றே பாராதே முத்தியினி லொன்றா மென்றாய், பதியினுட னொன்றுதல் பசுக்கெட் டேயோ கேடின்றி யோசொல்லாய் கெட்டே யென்னிற், கதிபெறுவான் பொன்றுமெனிற் கதிதா னார்க்குக் கேடின்றாற் கருதிரண்டொன் றாகா தென்று, மதியுடைய சம்மேள சைவா † முன்பின் மலைவுறவே மொழிந்ததற்கு மாறொன் றுண்டோ. 3

† நீதான் என்றும் பாடமுண்டு.

சம்மேளசைவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 628.

## 10. பாசுபதம்.

விநாவிராக்கம்.

ஓதிய சைவ மாாக்கத் துரைத்திடு மிரண்டும் விட்டு
நீதியா மிறைவ னூலி னிசழ்த்துபா சுபதத் துண்மை
யேதம தறச்சு ருங்க வெளிதினி னுரைப்ப னையா
காதல துறவே யித்தின் கருத்தையு முணர்ந்தி டாயே. 1

சித்தாந்ததீபிகை.

* பரமாணு வுபாதான மாய வற்றின் புணர்ப்பதுகா ரணமாகி யுலகம் பண்ண, வரமாக விறைநிமித்த மாகி நிற்கு மலமூன்றின் பிணிப்பாகும் பசுக்க ளெல்லாந், திரமாக வாகமத்தின் முறைமை யாலே திகழாவா கனமுதலாம் படியே யர்ச்சித், தரமாகும் பாசமற வணுக்க ளெல்லா மொண்பதியுற் றிருப்பதுவே யுயர்வீடாமே. 2

(நிராகரணம்).

* பரமாணு வுருமுதலா யவற்றின் கூட்டம் பாராதி யினை † யிறையின் பண்ணு மென்றாய். பரமாணு வுருவதுவும் பூத மன்றோ பார்க்கினது சடமுலகம் பண்ணு மாறெ, னுரமாக மேருமுத லணுவி றாக வொன்றாகப் படைத்ததுதா னெதுவென் றோராய், பரமாணு வுருத்தேடிப் பற்றிக் கொண்ட பாசுபதா வுன்பெருமை பகரப் போமோ. 3

† முறையின் என்றும் பாடமுண்டு.

* மலமூன்றும் பாசத்தின் பிணிப்புப் போக மன்னுபசு பதி யினையா வாக ளுதி, நலமாகு முபசார மனைத்தி னாலு மர்ச்சிக்கப் பாசம்போய் நல்வீ டென்று, யுலவாத பாசமெனுங் கன்மந் தானுன் னுபசார கன்மத்தா லொழியு மாகிற், குலவாத விருளை யிருள் போக்கு மென்னிற் குலவியநற் பாசுபதா குறைதா னுண்டோ. 4

பாசம்போய் வீடாமர்ச் சனையா லென்றும் பாசுபதா கரு மிறைவன் பகர்ந்தா னென்று, யாசின்று மதனின்றாற் பரியங் கேளா யர்ச்சனையா னிமலாந்தக் கரணம் வந்து, தேசுண்டாய் ஞானத்திற் கேது வாகி யதனாலே பாசம்போய்ச் சிவத்தைக் காண்பா, னீசன்று † னருளினனிக் கருத்தை யோரா தேதேதோ மொன்றாக விசைக்கின் றாயே. 5

† னருளுள்ளக் என்றும் பாடமுண்டு.

பாசுபதம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 633.

## 11. வாமம்.

விநவிளக்கம்.

மதியிலப் பாசுபத மயலினைப் போதமென வருமிருட் போயகலவே, யுதிசெயப் பானுவொளி யெனவுரைத் தேயெனுள முறுமருட் சாடியதுபோற், கதியுமெய்ப் போகமது வலியுமிக் கா மறிவு கலைகண்மற் றாயினவெலா, மிதுவெனப் பேசுறுமை நெறி யெனக் கேடுகளியு மியல்புமற் றோதியிடுவாய். 1

### சங்கற்பநிராகரணம்.

விரவு தமருகக்கை வெள்ளெயிற்றுச் சூலத்
திரவு பகலெழுந்த தென்னப்—பரசமயந்
தாமப்பிர தானமெனச் சாதிக்குஞ் சாதகரின்
வாமப்பிர தானன் வரும். 2

### போரளிவிளக்கம்.

பானத்தா லித்தலையிற் கிடைப்பதான பரமசுக மனுபவிக்கப் பாரார் தேவி, தியானத்தா லததலையிற் கிடைப்பதான திவ்விய சுக மனுபவிக்கச் செல்லா ரையோ, ஞானத்தான் மலமறுக்குந் தீட்சையாலே நம்மைபோ லிருதலையு நடத்தா ரான, வீனத்தா லிகலோக பரலோகங்க ளென்னேவிப் பசுசாதி யிழந்த வாறே. 3

கரிய நாயகி யகிலநா யகனைத்தன் கலவியாற் பணிகொள்ள
வுரிய நாயகி யொருதனி நாயகி புணர்ந்தவ ருணர்விற்கு
மரிய நாயகி யிவளெனத் திரண்டுபின் றமரரோ விடுமெங்கள்
பெரிய நாயகி பெருமையை யுணர்ந்தவர் பிறப்பரோ பிறவாரே. 4

தழைக்கின்ற பிறவியறுஞ் சக்கிரபூ சைச்சென்று சமைத்த வாசம், விளைக்கின்ற நறுமலரும் விரைநாறும் பசுஞ்சாந்தும் வெறி சூழ் வண்டுந், திளைக்கின்ற தெளிமதுவுஞ் சேதாவின் செவ்விறைச் சிக் கறியுந் தேவர், வளைக்கின்ற பதயுகத்தாண் மாகாளத் திடை கொண்டு வரச்சொல் லாயே. 5

### சித்தாந்ததீபிகை.

உத்தம மாகும் பூசை யொளிமது முதலைந் தாலா
முத்தம சத்தி மாரு மொண்புலை மாத ராவ
ருத்தமத் தானந் தானு முரைத்தவ ரிடங்க ளாகு
மித்திறத் தத்தம் போலோ † ரிடமவர் மடவா ரன்றே. 6

† ரிடம்வாம என்றும் பாடமுண்டு.

வலைபுலை வண்ணார் செம்மார் மற்றுமிப் படியில் வந்த
குலமதிற் றைய லாரைக் குறித்துநா யகிதா னென்றே
யலம்வர வவரை யர்ச்சித் தவரொழிற் சேடம் வாங்கித்
தலையுறக் கொண்டங் குண்ணத் தலைவிசன் னதியா மன்றே. 7

* சக்கர மதிலா னந்தத் தலைவிசன் னதியைப் பண்ணு
முக்கிர பாத்தி ரத்து முடம்பினு மவளைப் பாவித்
தக்கர சரீர மாக்கி யானந்த சத்தி தானாய்த்
தக்கவொன் றாறவை யுண்ணத் தலைவிதன் வடிவே தானும். 8

* வாக்கொடு மனத்திற் கெட்டா மனோன்மணி தன்னை யுன்னி
நீக்கிலா மதுவை யுண்டா னினைவெலா மிறந்தோன் றேயா
மோக்கொணு வின்ப வெள்ள மொளியதாய்ப் புத்தி முத்திப்
பாக்கியந் தானே தானும் பரமசாம் பவமீ தன்றே. 9

ஆக்குத லழித்தல் செய்ய வல்லசா மர்த்தி யந்தா
னீக்கொரு சமயத் துண்டோ நிகரில்சாம் பவத்தி னல்லாற்
றேக்கிட மதுவை யுண்டு தெரிவைமார் முலையே தோய்ந்து
வேட்கைவேண் டியவா செய்ய வினையும்வி டெங்கட் கன்றே. 10

### சித்தாந்தரத்திருகாரம்.

சோமனைப் பணையம் வைத்துந் தொடர்புலி தனைமேற் கொண்டு
மூமனைப் பேசு வித்து முலோகத்தை யுருகப் பார்த்து
மேமமுற் றிடப்பி ணத்தை யெழுப்பியு மின்னு மெல்லாந்
தாமநற் சாம்ப வத்திற் றகுபவர் செயல்க ளன்றே. 11

### (நிராகரணம்).

### சமயாசாரம்.

* நித்தமாஞ் சத்தி தன்னை நினைந்துதா மதுவை யுண்ணச்
சித்தமுஞ் செயலு மாய்ந்து தெளிவதா மொளியா மென்றாய்
பித்தர்போற் செயலு மாகிப் பேச்சும்வே றாய்ப்பு லன்கண்
மத்தமாய்க் கைக்குத் தாயோ மனோலய மிருப்ப தையா. 12

* அளியுண்ட லாதி யைந்தா மானந்த முத்தி யென்றா
யளியுண்டு மைது னித்தா ரனேகரு முத்த ரன்றோ [றாற்
வொளியுண்ட வுணர்வு தோன்றி யுள்ளுணர் வொளிக்கு மென்
களியுண்டல் காம நல்லோர் கழித்தபா தகங்க ளன்றோ. 13

மதுவை † யுண்டே முன்னோர்தாம் வலிய ராணு ரெனினின்று, மதுவை யுண்டார்க் கந்தவலி யிலதா வானேன் வரருசிதான், விதியி னூலே மதுவுண்ண வெய்ய வாக்கு வாய்ப்பெய்தான், மதுவை யுண்டன் மயக்கேயா மனத்தான் முன்னம் ‡ வலிசெய்தார். 14

† யுண்டோர் தாமிக்க என்றும், ‡ பலிசெய்தார் என்றும் பாடமுண்டு.

---

### குறுந்திரட்டு.

அவிநாசி யான பரமா முதனை யகமே நிறைந்த வவனைச்
சிவனுத லான்மு னவனிக்க ணின்று வலிசெய்து தேசமறியப்
பவனா சமுத்த பரிசொரா துபாட லுணராத போத பரனுய்ச்
சவனாற வுண்ண வதுபுத்தி முத்தி தருமோவி தென்ன அவமே. 208

மெய்ஞ்ஞானவிளக்கம்.

நீசமாஞ் சாதி தங்க ளிடநீச பதார்த்த மேலென்
றாசிலா வாக மங்க ளறைந்தன வென்னிற் கேளாய்
நீசமா மவருந் தெய்வ மெனநினைந் திடற்பொ ருட்டாற்
பேசிய வதற்கு நீயும் பிரமித்தங் கதனில் வீழ்ந்தாய். 15

நீசர்மே லாரெ றிக்கங் கருகரல் லாமை யானு
நீசமென் றவற்றி லார்க்கு நெஞ்சுசூழ் ளாமை யாலும்
பேசியங் கவைய வர்க்கு முக்கியம் பிறிது கிழென்
றீசனங் கருளி னாலே யிசைத்தன னென்ன வோராய். 16

அம்மிதான் மிதந்து தோளாச் சுரையது வாழு மென்று
லம்மிதான் புணையாக் கொண்டா றிழிபவர்க ளைவோ நீயு
மிம்மையே புலைமை யாகி யிகழும்பா தகமாம் பானஞ்
செம்மையென் றுணர்ந்த நின்றன் றெளிவது நன்று நன்றே. 17

வாமம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 650.

## 12. பயிரவம்.

வினாவினக்கம்.

ஓதிய சாத்த மென்றங் குரைத்தவா மத்தை விட்டு
நீதியாம் பயிர வத்தி னிலைமைதா னறியக் கூறி
ஞாதியாம் பயிர வந்தா னகிலமு மாகி நின்றே
யேதமில் புத்தி முத்தி யிசைத்திடு மியல்புங் கேளாய். 1

சித்தாந்தநிலை.

* ஆதியாம் பயிர வந்தா னட்டதத் துவங்க ளாகிச்
சோதியா மவையே வந்தெட் டாகிய கலையாய்த் தோன்றி
நீதியாங் கலைக டாமே நிகிலமாம் பெத்த முத்தி
யாதியாம் பயிர வத்தி னுஞ்ஞைநயா லுயிர்கட் காமே. 2

* என்றவத் தத்து வங்க ளிசைந்தவவ் வடைவிற் கேளாய்
துன்றுநற் சுதந்த ரந்தான் சுவேச்சையா லுலோகங் கால
நின்றவுக் கிரம் † பிரஞ்ஞை நின்மாண மோட னந்தா
மென்றப யிரவ மெட்டா மினிக்கலை விதமு நீகேள். 3

† பிரச்சனை நின்மாணம் போடணந்தா என்றும் பாடமுண்டு.

* வான்வளி யங்கி யப்பு மண்ணென வறைந்த வைந்தின்
ருனுறு ‡ விச மாருந் தத்துகலை யைந்துஞ் சாற்று
மூனமி லமுத மோடு விடகலை கார ணந்தா
ஞனவெண் கலையா லிந்த வகிலமற் றுஞ்ஞை யுங்கேள். 4

‡ மீச ஞருந் என்றும் பாடமுண்டு.

* ஆபத்து † விக்க பயமந்த மறைந்த நான்கின்
சாபத்தி ‡ னுத்தாரண பயிரவர் தாமோர் நால்வர்
சார்வுற்ற காலங் கருமமுணராமை சன்மஞ்
சேர்பற்றை நாசையாம் பயிரவர் செப்பி ஞல்வர். 5

† விக்கமபய என்றும் † னுத்தான என்றும் பாடமுண்டு.

* ஆகிய வாஞ்ஞை யெட்டி ஞபத்துத் தார ஞதி
போகவை ரவர்க ளாலாற் பொலிந்திடும் போக மார்க்கம்
யோகமுங் கால பைர வாதியோர் நால்வ ராலே
சோகமி லணுக்கள் சேருஞ் சுத்தநிர் வாண முத்தி. 6

* போகமார்க் கத்த வர்க்குப் பொலிந்திடு பூசை யாலும்
பாகுறு பலிக ளாலும் பண்ணுமுத் திரைக ளாலு
மாகிடும் விபவ மெல்லா மன்றியோ கமிழ்தி ரண்டால்
வேகமா மனநிர் வாண விடது விளையு மன்றே. 7

(நிராகரணம்).

* ஆதியாம் பயிர வந்தா னட்டதத் துவமாய்த் தென்று
யாதிபோ யட்ட மாய்த்தே லப்பொழு தாதி கேடாஞ்
சோதியா மவையும் வந்து துரிசறக் கலையாய்த் தென்று
யாதிபோய்ச் சடமாய்ச் சொல்லா யழிகலை யாகு மோதான். 8

* கலையதே யுலக மாய்த்தேல் கலையசத் தோசத் தோதான்
கலையது சத்தே யாகிற் † கலவியாய்க் கழியு மோதான்
கலையசத் தேலசத்துக் காசினி முதலா மாகி
னிலையுடை மலடி மைந்த னிகலமு மாக்க வேண்டும் 9

† கல்வியாற் என்றும் பாடமுண்டு.

* இம்மையாம் போக நான்கும் பயிரவ ரிசைப்ப ரென்று
‡ யம்மைநன் றுளதோ வன்றி யில்லதோ † வுனக்கி சைப்பார்
செம்மையா லுளதேற் றுனே செறிதரு மவர்கள் வேண்டா
தன்மைதா னிலதேல் வான்பூ முயற்கொம்பு தருவ ரேதான். 10

‡ யம்ம என்றும் † வுணக்களிப்பார் என்றும் பாடமுண்டு.

* முத்திதா னமுதி ரண்டான் முயன்றுள யோகா லென்றுய்
சுத்தபா வனையோ பொய்யாய்த் தொடரவே யழிவு மற்றை
மத்தமா மதுவா லென்னின் மலமுவர் நீருஞ் சோர்ந்து
பித்தறு யுடையோ மீதோ பேசுநிர் வாண முத்தி. 11

எம்பிரா னன்றோ பயிர வாகம மிசைத்தா னென்னிற்
றம்பிரா னருளிச் செய்த தாற்பரி யார்த்தங் கேளாய்
தெம்பரா மசுரர்க் கேற்ற திகழுபா சாண்ட மார்க்க
மெம்பிரா னவரைச் சுட்டி யிசைத்தன னென்ன வோராய். 12

பயிரவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 662.

## 13. காளாமுகமாவிரதம்.

விறுவிளக்கம்.

* காளா முகமா விரதந்தான் கருதிற் சுருதி யாகமங்க
ணீளா ருகுஞ் சமயமென வகுத்த வற்று ளிவைநிமலர்க்
காளாம் வேட மடையாள மதுவே பொருளாக் கொண்டென்று
மீளா விரத மிறைநூலின் விதித்த படிசெய் வதுவேயாம். 1

* அத்தி யக்கஞ் சடைமுதலா மடையா ளங்கள் கொண்டரன்பாற்
பத்தி யோடும் வழிபட்டுப் பகரு நியமங் குலையாமன்
மெய்த்தா னரிய வல்வினைமேல் வினையா லுடலம் விடும்பொழுது
சித்தர் பரவுஞ் சிவலோக மடைவர் சிவன்பாற் சிவார்ச்சனையால். 2

(நிராகரணம்).

சித்தாந்ததீபிகை.

* புற்புத வுடலிற் கொண்ட வேடம்புற் புதத்திற் றுச்சங்
கற்பனை விரத மெல்லாங் கனைபரம் வீழ்ந்த பின்போ
யற்புத முத்தி யோரு ரடைவரேற் றிரிய மீளு
முற்பவ மொழியு மோதா லுணருமெய்ஞ் ஞானத் தல்லால். 3

பாகம் வந்து தெள்வதற கருக ரலலா
மத்தமாஞ் சித்தத் தார்க்கு வரம்பிலாக் கிரியை கோடி
† பத்தியின் முயன்ற னேக பவங்களிற் சித்த பாக
மெய்த்துற வருதற் காக விதித்தன னிவையென் றோராய். 4

† யத்தினின் என்றும் பாடமுண்டு.

காளாமுகமாவிரதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 666.

# 14. வைணவம்.

### வினாவிளக்கம்.

ஆகலான் முத்தி யாகா வவற்றினாற் சைவ மாதி
யோதிய தெல்லா மோரி னுருத்திர மார்க்க மேயா
நீதியா னெடுமா றன்னை நிகழ்த்துமா கமங்க டம்மி
லோதிய பரிசை யெல்லா முறைசெய்வ னுணர நீகேள். 1

### பேரொளிவிளக்கம்.

* ஆதிமூ லந்தனதாம் விண்டு மாயை யதனாலே யுலகுயிர்க ளனைத்துஞ் செய்ய, வோதுமா மாயையின்றன் வசம தாகி யுயிர்க ளெலாம் பிறந்திறந்தே யுழலுங் கண்டாய், நீதியால் வசுதேவர் முதலா நால்வர் நிகரில்சமா ராதனத்தாற் பெத்தம் விட்டுத், தீதி லாப் பரமபதத் திவரோ டொன்றாய்ச் சீவரெலாம் பேரின்பந் திளைப்ப ரன்றே. 2

* கருதருமூ லமதாகும் வாசுதேவர் கருடணராஞ் சீவரொடு பிரத்தி யும்நன், பொருவிலகங் காரவனு ருத்தரென்னப் புகன்ற வர்நால் வருஞ்சமராய்ப் பின்ன ராவர், தெரிவரிய விவர்கள்சமா ராதனத்தாற் றிகழுயிர்கள் பரமபதத் † திவர்பா லெய்தி, விரவிய பின் னருமாகி வியாவின்பத் திருப்பதுவே முத்தியென விசைக் கின் றோமே. 3

† திவர்போ லெய்தி என்றும் பாடமுண்டு.

### சித்தாந்ததீபிகை.

* ஆதிபுரு டன்றிருநா ராயணன்றா னறம்வளர மறமொழிய வகிலந் தன்னிற், றீதிறச வவதாரஞ் செய்துதுட்ட நிக்கிரகத் தாற்சிட்டர் தமையும் பாலித், தேதமற விலங்கியதன் னுடைச் சோதிக்கே யெழுந்தருளு மெழிலவதா ரங்கடம்மை, நீதியுறத் திருமகளோ டாராதித்து நிகரில்பதத் தடைவுறுமந் நெறியின் னங்கேள். 4

ஆழியுடன் சங்கமங்க மெலாந்தரித்தே யாறிரண்டு திரு நாம மழகா விட்டு, வாழியசீ வைணவருக் கிச்சைசெய்து மன்னு திரு விலச்சினையே குறியாக் கொண்டு, கீழுறுசா தியரேனு மவர்த மக்குக் கிங்கரராய் நீறிடுமா சண்டாளர், பாழுரையு மனு காப்பா கவதர்க் கன்றோ பரமபதங் கிடைப்பதுமற் றவர்கட் குண்டோ. 5

### சித்தாந்தாந்திருகாம்.

* ஓங்கியசீ வைணவர்தம் புருடாகார முயர்சேனை முதல்
வர்திரு வடியி னுய்ப்பப், பாங்கொடுமற் றவரருணற் புருடாகாரம்
பழுதறவே யுலகுடையாள் பதத்திற் சேர்க்கத், தீங்கறநற் றிருமக
டன் புருடாகாரந் திருமாறன் றிருவடித்தா மரையிற் கூட்ட,
வாங்கரிய பரமபதத் தவரோ டொன்று யமர்ந்திருக்கு மதுகாணு
மமலவீடே. 6

(நிராகரணம்).

### சித்தாந்ததீபிகை.

* சமராகிப் பின்னருமாய் வாசுதேவர் தாமுதலா மிறைவர
வர் நால்வ ரென்று, யமைவாக நால்வர்க்குந் தரமொத்தோரு ரான்
பவரோ விறைவரவர்க் கிறையா ரோரா.யிமையோர்பா தலர்நரர்மற்
† றெவையுந்தாணு யுண்டுமிழ்ந்த விறையுணரி னொருவ னென்றே,
சமைவாக மறையறைத லறியாயேனுஞ் சடகோப ரருட்டிருவாய்
மொழியோ ராயோ. 7

† றெவருந்தாணு என்றும் பாடமுண்டு.

* மூலமே வசுதேவ ரென்று பொன்றை முன்னிபதிற் சிவ
ரென மொழிந்தா யொன்றைச், சாலவே மனமென்று யொன்றுங்
கார மெனக்குறித்தங் கவர்கடமிற் சமரே யென்று, பேலவே
கரணமதா யழிவ தன்றோ விருண்மனமாங் காரமவற் றொப்பா
மென்றுற், சாலவே வசுதேவர் தாமு மங்ஙன் கரணமதா யழிவ
தற்குத் தட்டுண் டோதான். 8

* திருமாறன் றிருக்கரத்தி லாழி சங்கைத் தரித்தவர்சீ
வைணவரா மென்று சொன்னாய்,பெருமான்றன் னாழிமனந் தரிப்ப
தன்றிப் பெருநெருப்பி விட்டவர்பே தைகளே யன்றோ, வுருநீறு
கண்டவரை நிந்தித் தாய்நீ யுருத்திரன்மால் வேறெனவே நிந்தித்
தார்க்குத், திருமாலே யிரவிவரை நரக மென்ற திருமொழியா
னீநரகுக் கிரையா னாயே. 9

மருளாலே † யுணர்வழிந்த பூனை போல மண்கொடுடம்
பெழுதல்வயி னவம தென்றாய், ‡ பொருளானல் வியாத்தபத
மாகும் விண்டு பதமுணர்த றிகழ்தருசீ வயிண வந்தா, னிரு
ளான பரிச்சின்ன மலவு டம்பி னிழுக்குமண் கொண்டுவயி னவ
மென் றத்தாற், பொருளாகா தனுவுணர்தல் பிறப்புக் கேது
வென்பதனாற் பொய்ப்பிறவிக் கிரையா னாயே. 10

† கீழான என்றும். ‡ தெருளானல் என்றும் பாடமுண்டு.

கோலைகளவு கட்காமம் பொய்ய தைம்பா தகமெனநற் குல மறைகள் கூறு நிற்க, மலவுடலி னிலச்சினைமண் குறியாக் கீழ் மேல் வரம்பழியக் குழைமணிவை ணவமே யாகி, னலைவுறு டா னழுமைம்பா தகத்தொன் றன்றோ வறியாமைம் பாதகத்து ளொன்று மென்று, றலைமையதாம் விண்டுபத நாடப்புக்குத் தனை யுணரா தமோகதிக்குத் தலையா னாயே. 11

* ஓங்கியமா மறைதத்வ மொன்ற தென்றே பொருகோடி சாகைகளா லோதா நிற்கப், பாங்கறியாய் பலவென்ற தென்னை நின்று பழுதுறவே தாபேதம் பகரா நின்றாய், தீங்கறுமா ரணக் கருத்துத் தெரியா விட்டாற் றெரிந்திடவே தந்தமிழ்செய் குருகை வள்ள, லோங்குதிரு வாய்மொழித்தா னுணரி னும்ப ரொருவனே யென்றருணிச சயமோ ராயே. 12

* திருமானற் றிருமகளென் றுவய மொக்கச் சிந்திக்குஞ் செழு மிதுனப் புணர்ச்சி மெய்யே, வருமாசற் றிடுமுத்தி நல்கு மார்க்கம் வயிணவமென் றுய்மறையீ றனந்தங் கோடி, திருமால சுவப்பிரிய ருன்ய னென்னச் செறிமிதுனங் கொடுவந்த திணிமூ டாநற், றிருவாகத் தன்மார்பிற் றேனென் றோதுந் தெளிவறியா மையினீசி வயிணவனு மன்றே. 13

எழுமறைகட் கவதார பூமி யாகி யியலிசைக்குப் பிறந்தகமா யிதார்த்தந் தன்னை, வழுவறவே காட்டுமணி விளக்கா யுள்ள வள்ளறிரு வாய்மொழியை மதிகே டாநீ, யெழுநாசிப் புடமுடையோர் போல மூக்கா லிசைத்துக்குங் குமஞ்சுமந்த கழுதை போல, விழுதாய்நல் வைணவத்தை யிழுக்காக் காதே யினியமையு முன் மொழிக ளேறப்போகாய். 14

* பரம்பரனு முகுந்தனவன் பரந்தாமன் றான் பரப்பிரமம் பரங்கருணைக் கடலா மையன், விரும்புவா ருளத்துணர்வாம் விண்டுவின்றன் வியாத்தியினை யுணர்ந்தவர்வை ணவர்க ளாவார், திரும்பலற வவர்திறத்துக் கயிங்கர்யத்தாற் றிருமாறன் றிருவுருவு முணர்வின் பத்தைப், பொருந்துமுளம் பாமபத முணர்தன் முத்தி புயல்வண்ணன் றிருநூற்குப் பொருளென் றோராய். 15

வைணவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 681.

24407

## 15. மாயாவாதம்.

வினவிளக்கம்.

ஓதிய திருமான் மார்க்கத் துரைத்தவப் பொருளை விட்டு
நீதியான் மாயா வாத நிகழ்த்திடும் பரிசு தன்னை
யேதம தறவே யுண்மை யுரைத்திட வுள்ள மொன்றிக்
காதலா லதனை யுந்தான் கருதிநீ கேட்டி யையா. 1

சித்தாந்ததீபிகை.

* சாற்றிய பிரம மென்று மவிகாரி சன்ன திக்கே
யேற்றிய மாயை தானிவ் வுலகுயி ரனைத்து மாகித்
தோற்றரு மனந்த பேத மாய்ச்சுழன் றழியுந் தானே
யாற்றரும் பெத்த முத்தி பேறிழ வவையு மித்தை. 2

* ஆதலா விகமு மித்தை பரமது தானு மித்தை
பேதமி லிதமு மற்றை யகமெனு மதுவு மித்தை
யோதிய மயல்போய்ப் போத முதித்ததென் பதுவு மித்தை
சாதமே பிரம முத்தர் தானவி காரி யென்றும். 3

சாற்றிய வதுநீ யென்று தருமறை குரவர் கூற
வேற்றிய வதுவே நானென் றிசைத்தன்மாத் திரமே ஞானம்
போற்றிய வதுவு மோரிற் பொய்யதா மாயை யென்றே
யாற்றவங் கறிதன் மாயா வாதவத் துவித மையா. 4

சுத்தவத் துவித மிங்ஙன் றுகளறத் துணியா வாதர்
மெய்த்தகு பிரமந் தாங்கண் டனுபவித் திடவீ டென்ப
ரத்தகு பிரமங் காணி னழிவுறு மறியா ரேது
மித்தையென் றிச்சை செய்தே விளையாடித் திரிவ ரையா. 5

(நிராகரணம்).

* அவிகாரம் பிரம மாயை விகாரமா மெவையு மென்று
மவிகார விகாரங் கண்டிங் கறிந்துசாற் றியதே தையா
வவிகார மென்னிற் றன்போய் விகாரியா மாயை யேலுன்
னவிகாரந் தானும் பொய்யாய் மாயையா யழியு மன்றே. 6

* உலகுட லுயிர்மற் றேது மாகியே தான்வி ரிந்தங்
கிலகிடு மாயை தானே யிறந்துபோ மென்று சொன்னாய்
நிலவிய மறைநீ யோதி நிமலமாங் குரவற் றேடி
யலகிலாப் பிரம நானென் றறியவேண் டியதென் சொல்லாய். 7

ஒன்றுமப் பிராந்தி யேமற் றொன்றிலைப் பிரம நானே
யென்றுநிச் சயித்தற் காக விசைந்தமாத் திரமே பின்போய்த்
துன்றிய மாயை தானே துலங்கிநின் றிறக்கு மென்றே
பின்றுமிப் படிநீ சொன்னாற் பின்முறு மலையா தோதான். 8

* அறிந்ததும் பொய்யே யென்று யறிவுனக் குபதே சித்த
சிறந்தநற் குருவுஞ் செய்ய மறைகளு மதனாற் பொய்யா
மறைந்தவங் கவைதாம் பொய்யா யிடவவி கார மாமுன்
னிறைந்தவப் பிரமந் தானு நிகரிலாப் பொய்யே யன்றோ. 9

போற்றிட வுலகின் மெய்யே பிரமநீ புகலப் புக்கே
யேற்றிய தனையுங் காணு தியாவையு மித்தை யாகத்
தோற்றரு மாயை யென்றே சொல்லிவேண் டியவா செய்தங்
காற்றமே ‡ யறநீ கேட்ட தனத்தமாய் முடிந்த தோதான். 10

‡ யறமு நீகெட் டனத்தமாய் என்றும் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

இலங்குமக் காந்த முன்னே யிரும்பது திரிந்தாங் கென்ன
நலங்கொள்சை தனன்றன் முன்னே நடந்திடும் புத்தி யென்னிற்
சலங்களிற் பரமான் மாவின் சதோதிதந் தட்டுப் பட்டோ
புலங்கொளா துடலை விட்டுப் போயது புத்தி சொல்லாய். 11

சற்பமென் றிரச்சு தன்னிற் சனித்தவப் பீரு போல
நிற்பதிப் பிறவிப் பீரு நிரூபிக்கு மளவு மென்னி
னற்பமோ வனித்த முண்டோ வறிவில்லை யோதான் பீரு
வுற்பவிப் பானேன் சொல்லா யோங்குநற் பிரமந் தன்பால். 12

சலிக்குமச் சலனம் புத்தி சைதன னீரி னிந்து
சலிக்குமச் † சலத்துக் குள்ளுஞ் சந்திரன் சாயை யன்றோ
சலிக்குமப் புத்தி தன்னிற் சைதன னில்லை யத்தாற்
சலிக்குமச் சரீரம் புத்தி சடம்பின்னைச் சரீரி யாரோ. 13

† சலனத் துள்ளுஞ் என்றும் பாடமுண்டு.

ஞானசாரம்.

காரண மாயை யருவாதல் காயந் தாங்கி நடத்தாதா
லரண மான்மாத் தோய்வின்மை‡யுடம்பைப் பரித்து நடத்தாதாற்
பிராண வாயுக் கருத்தின்மை பேணி நடத்தா தசேதனமாற்
புரண வுடம்பு தானடவா துடம்பை நடத்தும் பொருளெதோ.

‡ யனித்தக் குரம்பை என்றும் பாடமுண்டு.

### மெய்ம்மொழி.

இருளொடு ‡ வெளிக்கே தேனுஞ் சம்பந்த முண்டோ சொல்லின்
மருளுடை மாயை யோடு வான்பர மங்க னென்னி
லிருளொடு வெளிபோ லன்றி யானென தென்று நீயுன்
மருளற மதிநூல் கற்குங் காரண மதித்தோ ராயே. 15

‡ வொளிக்கே என்றும் பாடமுண்டு.

### சமயாசாரம்.

யான்பிரம மென்றுரைக்கு மிருளறிவு பொருண்மலைவாம்
வான்பிரம னுனெனுமோ மலவுடம்பு கொள்ளுமதோ
தேன்பிரமன் மாலன்று தேடியது நின்றனைபோ
யூன் † பிறந்து பேயுருவா யுழலுமோ வுயர்பரந்தான். 16

† பிரிந்து என்றும் பாடமுண்டு.

நீர்கனலா யெரியுமெனி னெருப்பவிக்கு நெறியின்று
மேரொளியே யிருளாகி னிருளிருக்கு மியல்பில்லைப்
பேரறிவி னறியாமை பிறக்குமெனின் மருணீங்கா
வோர்பிரமந் தான்பிறக்கி னுறுபவமே விடில்லை. 17

### நித்தியாநந்தசரிதை.

அகண்டமு நீயே யாகி னறியவோர் குருவும் வேண்டா
வகண்டமு நீயே யாகி னறிவிக்கை தானும் வேண்டா
வகண்டமு நீயே யாகி னென்னறி வுனக்கும் வேண்டு
மகண்டமா முண்மை காணு யறைவதென் வறிது நின்றே. 18

---

### மாயாவாதம்.

### குறுந்திரட்டு.

அத்துவிதஞ் சாதித்தற் கிலமு மாயையென்று
யத்துவிதத் தில்வேறு வல்லவோ வம்மாயை
யத்துவிதத் தில்வேறு மெனிலத்து விதமாகா
வத்துவிதந் தானுகி லதுமரு ளாகுமன்றே. 209

பேதமது பேசினரை மாறுகோ டபேத
மேதமென வோதினரு மேகவுணர் வான
வோதமலர் பாலதுவ தாய்நிகழ்தல் போல
யாதுமலை யாதமைத லேகமென லாமோ. 210

தேவரு நரருங் கல்லுஞ் சிதல்புழு வனைத்து மற்றும்
யாவையு நீயே யாகி † யகிலமாய் நின்று யாகி
ஞுவியன் மறைக ளோதி ஞானிநா னென்று சொல்லிப்
பாவிநீ படுவ தெல்லாம் பயன்கொளப் படுவ தன்றால். 19

‡ யேகமாய் என்றும் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

அகமுகம் பார்த் தனைத்து ளவிகார பரநா னென்று
மூகமுகம் பார்த்துச் சொன்னுய் முன்பினு மலேவோ ராதே
சகமுக மாயை யில்லாத் தற்பரப் பிரமம் வந்து
பகமுகம் பார்ப்ப தானுற் பார்க்குமோ குறைக ளாயா. 20

சித்தாந்ததீபிகை.

ஆதியா மறையி னேடு மிருதியா கமம னைத்து
மோதிய பரம முத்தி யுணர்ந்திடிற் பரமன் சிவ
னீதியா லிரண்டு முண்மை கண்டபா திகளை நீக்கிக்
காதலா லொன்றுந் தன்மை கண்டனு பவித்த லேகாண். 21

ஆதலா லார ணங்க ளறைந்தவத் துவித நிங்ஙன்
காதலாற் குரவன் காட்டக் கரத்திலா மலக மென்ன
நீதியா மனுப வத்தி னிலேயிலாச் சுட்க வாதப்
பாதகா மாயா வாதா பகர்தலு மமையு முன்பால். 22

மாயாவாதம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 703.

## 16. சிவாத்துவிதம்.

விஞவிளக்கம்.

சாயா வகிலத் தறமறிவு தன்னை யெடுத்துக் கவிழ்க்கவரு
மாயா வாத மெனுஞ்சண்ட மாரு தத்தின் மயனீக்கி
யாயா வறிவாஞ் சிவாத்துவித மறையும் பரிசு மறிவுறவே
தேயா வன்பி னுரைத்திடவத் தன்மை யினையுந் தெளிவையா. 1

சித்தாந்ததீபிகை.

* ‡ தனிற் சிவன் ருனுகித் தடுப்பரிய வுலகமதாய்
முனிற்ருனே கருத்தாவாய் முடியாத வினைப்பிறப்பைப்
பினிற்ருனுஞ் சிவனையே பெந்தித்து விரித்தெல்லா
மினித்தாய வின்பதுய ரீவானுய்ப் பெறுவானுய். 2

‡ தனிச்சிவந் தானுகித் என்றும் பாடமுண்டு.

* முத்திதான் கொடுப்பானுய் முன்னைத்தா னடையும்வணஞ்
சத்தியா லிவைசெய்து தானிகழ்த லனுதியாம்
பத்தியா லிறைபரவிப் பழையதனை யிவனடைதல்
சித்தியாஞ் சிவாத்துவிதந் திகழ்த்தியவீ டதுவன்றே. 3

(நிராகரணம்).

* தன்னையே சகமாகப் பகுத்தானே ருனக்கூ
றுன்னிலோ சடமாய்ப்போ முயிரதுவாய்ப் பகுத்ததுவுந்
துன்னியே பிறப்பிறப்பிற் றுயருறுமற் ரெழிந்துளது
பின்னையோர் பெலங்குறைந்து பீடின்றி யழிந்திடுமால். 4

* தன்கண்ணைத் தான்கலக்கி மருந்ததற்குத் தேடுதல்போன்
முன்றன்னை யுயிராகப் பகுத்தந்த மோகம்விடப்
பின்றன்னைத் தான்பரவி முத்திபெறுஞ் சிவம்போல
நன்கெண்ணிச் சிவாத்துவிதா நலமறிவார் வேறுளரோ. 5

சிவாத்துவிதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 708.

## 17. சவுரம்.

வினுவிளக்கம்.

ஓர்விலாச் சமய மெல்லா முரைத்தவப் பரிசு போல
வோர்விலாப் பிராந்தி மார்க்க மின்னமும் பலவு வற்றுட்
சோர்விலாக் கதிபோற் சொல்லித் துகளுறு சவுர மென்னு
மோர்விலாப் பொருளை யுந்தா னுணர்தர வறைகு வன்கேள். 1

உதயந்தனி லயனுய்வரு முயிர்காவலி லரியாய்
வதைவந்திடி னரனுய்வரு மாறும்பிற வங்கு
னிதையங்களி னிவனேயிறை யெனவையெங் கனுமிவனே
*தைதயென்றறி காணுமிறை காணும்மிறை கதிரோன். 2

அறியாத வண்ண மணுமேரு வாக வணுவா யடங்கிபருளும்
பிறியாத வண்ட பகிரண்ட மந்த வணுவாக வேபெருகிடுங்
குறியா லமைந்த நெறியாகி நின்று குருவாகி வந்துகுறுகுஞ்
செறிவா னிறைந்த சிவமா யமர்ந்து தெளிவாய வன்றினகரன். 3

இப்படி முழுது மாப்பா ராதித்தன் கதிரோ னென்றுஞ்
செப்பிடுஞ் ‡ சிவாக மத்தின் றேகத்தி னுயிரா மென்று
மப்படி யவனே டொன்று யவன்றன்மந் திரத்தா லன்றே
தப்பிலா முத்தி யென்று சாற்றிடுஞ் சவுர மன்றே. 4

† சிவவா தித்தன் என்றும் பாடமுண்டு.

(நிராகரணம்).

அனந்தபோதம்.

உதயவத் தமன முண்டா யொள்ளர வதன்வாய்ப் பட்டுப்
பதிவதற் றொருகா லோடும் பானுவை யிறைவ னென்று
யுதயவத் தமன மாக்கி யொருபொழு தயர்த்து மாற
விதியதற் றேட வேவும் விகிர்தனு ரவனை யோராய். 5

உலகையுண் டாக்கிக் காத்தங் கொழிப்பவ னிரவி யென்று
யுலகினோர் திசையி னுளு முதித்தவ னோடு வானே
னிலையிலா தோடு கின்ற விவனிலை யுலகஞ் செய்யிற்
கலையெலா மூமன் சொல்லுங் காரண மதுவா மன்றே. 6

இறைவனே வலினி யங்கு மிரவியிற் றுடுமற் றெல்லா
மறைவுறு மவற்றொன் றென்று தருளிறை யிரவி யென்றுப்
பறைவுறு மந்தி ரத்தாற் பானுவீ யாகத் தட்டென்
குறையிலை சவுர வாதா குறுகினை முத்தி யன்றே. 7

---

குறுந்திரட்டு.

அகில முணர்ந்திட விவனுத யஞ்செயு மளவி லயன்பெயராம்
பகன்முழு தும்பணி செயவுல வுந்தசை படியை யளந்தவனு
நிகில மொடுங்கிட மறைய வுறுந்தசை நிலவை யணிந்தவனும்
டகர வுறுந்திரி விதமிறை யென்றரு மறைகள் பகர்ந்திடுமே. 211

அருமறை மண்டல மளவில் சிரங்கதி ரதன்மு னெழுந்திடுபோர்
வருண னிலங்கிய வருண பதங்கிரம மெனுமொளி யெங்கணுயா
மிருள தகன்றிட வெழுசுர மும்பரி யெனவிசை விஞ்சாதத்
தருளில் வருந்தின கரனை வணங்கிடு மவர்கள் பவங்கெடுமே. 212

ஞானவிநோதம்.

* † அனலது மருக்கன் றனு மல்லது சிவப்ப தெல்லா
மனலதி னுருவ மாகு மார்வெளுப் பப்பின் கூறுங்
கனிற மன்றி வேறுங் கறுப்பது பூமி யாகு
மனன்றுத லொளியு தெல்லா மார்பூதத் தொளியா மன்றே. 8

† அனலவ னருக்க னிந்துங் கனையவை சிவப்ப தெல்லா என்றும் பாடமுண்டு.

சவுரம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 716.

## 18. சந்திரவாதம்.

அனந்தபோதம்.

உரைத்திடுஞ் சவுர வாதத் தோர்விலாப் பொருளை விட்டு
நிரைத்தசந் திரவா தத்து நிலைமையு நிகழக் கூறிற்
றிரத்தினிற் பிறப்பில் வாராச் சிவகதி ‡ யதுவே யென்று
மருத்தமு மதுவே யீச னுவது மதிய மேகாண். 1

‡ யென்று கூறு என்றும் பாடமுண்டு.

ஊனு முயிரா யுணர்வா யொளியா
யானு வறிவா யனுபோ கமுமாய்
நானு விதமாய் நறவா யுறவாய்
வானுய் நிலனுய் வருவான் மதியே. 2

மனுவா ரமுதும் மடவா ரமுதும்
மனுபோ கமுமா மருளா ரமுதுந்
தனுவா னதிலே தருமா ரமுதுங்
கனியா ரமுதுங் கலையா ரமுதே. 3

ஞானவிநோதம்.

* இந்துவினி னெழுகோடி ரேகை யுண்டா மிரேகை யொன்றி னெழுகோடி கலைக டோன்றும், வந்துகலை யொன்று தனி னேழு கோடி மதியாகு மதியொன்றிற் பிறையேழ் கோடி, யந்தமிலாப் பிறையொன்றி னுங்கே யுண்டா மகிலத்தை யாக்கிப் பூத்திடுதற் காக, வந்துபிறை பிறந்திறந்து மதியிற்கூடி வரு வதுபோ வதுமதியி னியல்பு தானே. 4

* ஆதலான் முழுது மாகிய பரம வமுதநற் கலையதா மதியே
யோதிய வமுத கலைகளா யுள்ள வொப்பிலாச் சக்கர முணர்ந்து
தீதறு மமுத மந்திர மதனாற் றிகழருச் சனையினான் மதியோ
டேதம தறவே யேகமா மதுவி டவனெலா மியற்றுமீ சனுமாம். 5

* திகழ்தரு மமுத கலையுணர் பவர்க்குத் தெறுகனல் குளிர்ந்
தநீர்த் தடமாந், தகுவிட மமுதாஞ் சார்பிணி பூதக் கோள்கள்பேய்ப்
தாமெலா மகலு, மிகுதரு போகம் வீடது மெளிதாம் வேலைநீர்
தண்ணீராம் விளம்பின், மகிழ்தரு மறைக ளறிகிலர் மதிகொள்
பெருமையை மதிக்கவல் லவரோ. 6

(நிராகரணம்).

ஞான சித்தி.

* பகலினிற் புழுதி பூத்துப் பானுவி னொளியான் மங்கி
யகமதிற் களங்க மேவி யரவதுண் டுமிழப் பட்டு
வகையறப் பிறந்து மாய்ந்து வளர்ந்துதேய்ந் திடுவ தொன்று
புகலுதற் கரிய வீச னாகுமோ போத மில்லாய். 7

அளவிலா வுலக மெல்லாம் படைத்தளித் தழிப்ப தென்று
முளமிலாய் மதிய மென்று முரைத்தமீன் கணத்தி னொன்றாய்
வளமிலா மாதத் தோர்கான் மாய்ந்துள துலகம் பண்ணிற்
றளர்விலாத் திகழ்மீ னெல்லாந் தனித்தனி யுலகம் பண்ணும். 8

தத்துவசரிதை.

* ஏழு கோடிகிற் றுடையது பரமென விசைக்கிற்
றாழ்வு தாழ்வரை வயல்கழிக் கரையவை தம்மி
லேழை யோலைகீற் றெழுபதி னாயிர கோடி
தாழ்வி லாவகை யுடைத்ததன் பரத்தினும் பரமாம். 9

* இந்து மாமதி பிறைகடா மெலையில வென்றாய்
வந்து தோன்றிய மதிபிறை யொன்றுநேர் கண்டோ
ரந்து மற்றுள வவையெலா நானில மதனி
லுந்து மின்மினி யானவோ வுணர்விலாய் சொல்லாய். 10

போதாந்திஞகாம்.

* நன்றி விச்சையாற் பிணிகெடும் வலியெலா நணுகு
மென்று ரைத்தனை யிந்துவுக் குட்கயந் தீரா
சென்று பாம்பொரு தேரைபோற் றின்றுமீண் டுமிழூர்
தன்றன் விச்சையின் வலிகதி சாற்றவேண் டுவதோ. 11

* சந்திர பக்தன் கண்டிடிற் கடனீர் தண்ணீரா மென்றனை யந்த, விந்துவின் கிரண நாடொறுங் கடலிற் கலந்துமுப் பான தென் கெடுவாய், மந்திர மதனுன் மதியொடொன் றும்வீ டென் றனை மதிபர மானு, லுந்துமந் திரத்தா லுரைத்தவீ டாகா தொழியுமோ வுரைத்தலைத் தவிர்நீ. 12

சந்திரவாதம் முற்றிற்று.

அகச்செய்யுள் 728.

## 19. ஊழ்வாதம்.

விறுவிளக்கம்.

ஓதிய மதியின் வாதந் தோர்விலாப் பொருளை விட்டு
நீதியா லூழ்வா தந்தா னிகழ்த்திடும் பரிசு கூறிற்
பேதையா யிறையை யோராப் பிராந்தியா லூழ்கத் தாவென்
றேதமே யறையு மித்தி னியல்பையு முணர்த்தக் கேண்மோ. 1

அனந்தபோதம்.

வாழ்வுக ளாலென் மறைநெறி ஞான மதனாலென்
கேள்விக ளாலென் கிளர்மனு வாலென் கிளையாலென்
வேள்விக ளாலென் விண்ணவ ராலென் வினைவெல்லா
மூழ்வினை தானே தருதலி னூழே யிறையென்றான். 2

(நிராகரணம்).

நித்தியாநந்தசரிதை.

ஊழையே கத்தா வாக வுண்மையா வுனக்குக் கொண்டா
யூழிவன் றன்னா லாமோ வூழினா லிவனுண் டாமோ
வூழிவன் றன்னா லாமே லூழ்கத்தா வாகா தாகு
மூழையே கத்தா வென்னி னிவன்செய்த வூழன் றாகும். 3

---

குறுந்திரட்டு.

வாழ்வினான் மந்திரத்தா லியந்திரத்தான் மருந்தினால்
வேள்வியால் விண்ணவரால் வேதனத்தான் மேதையாற்
கேள்வியான் மாதவத்தாற் சாதகத்தாற் கீழ்ச்செய்த
வூழ்விடா செய்தவனா லுண்டாறத்தே விடவேண்டும். 213

ஞானவினோதம்.

* ஊழேதா னூழ்செய்த வுடம்போதான் முன்னென்னி
னூழென்னி னுடல்பின்னு முடலென்னி னூழ்பின்னு
மூழ்செயலிங் கனுதியெனி னூழ்சடமா னூழ்செய்யா
வூழ்முதலா மஞ்ஞான மொழிந்தூழின் முதலிலதாம். 4

* தான்செய்த வினையாயிற் றன்வெறுப்ப வீடிலதாற்
றன்செய்த போததனிற் றன்கருத்துத் தழும்பியதாற்
றன்செய்த † வினைவிடத் தழும்புவனேல் வினையாகா
தான்செய்யா வினையுளதேற் றன்வீட வீடாதால். 5

† வினையைவிடத் என்றும் பாடமுண்டு.

ஊழ்வாதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 733.

## 20. காலவாதம்.

வினாவிளக்கம்.

ஆதலாற் றன்முன்செய்த செயலூழென் றறியாம
லேதமே யூழ்கர்த்தா வெனுமிவனை விட்டிவன்போற்
பேதையாய்ப் பிறழ்கால மதுபிரம மெனநின்று
காதலா லறைகால வாதத்தின் கருத்துங்கேள். 1

அனந்தபோதம்.

காலமெனுங் கடவுளினைக் கழியவுள தேதுமிலை
யாலநிழ லமர்ந்தவரு மரிபிரமா திகளவருஞ்
சீலமுடைச் சிருட்டிமுதற் றிகழ்வனவா கச்சுழற்றித்
தூலமொடு சூக்குமமாய்த் தொடர்ந்துதொடர் தேவருமால். 2

ஊழியுமாய்க் கற்பமுமா யுகங்களுமா யாண்டாகி
வாழியதிற் றிங்களுமாய் வளங்கொள்ளும் பக்கமுமாய்
நாழிகையா யிராசிகளாய் நாளாகி நாயிறுமாய்ச்
சூழுலக முயிர்காலச் சக்கரத்தாற் சுழற்றியிடும். 3

ஞானசிகாமணி.

எழிற்றரு காலங் கடவுளென் றறியா வேழைகாள் கேண்மி னிங் கின்ன,மொழிதரு கால பாகமென் பதுதான் மூடருக் குந் தெரியாதோ, கழிவுறு முங்கள் கடவுளா மெவரும் காலத்தே கழிதரும் பரிசு, மிழிவறு கால சுதந்தரத் தியல்பு மிசைத்திட வினித்தெளிந் திடுவீர். 4

கணந்துடி நிமிட மாத்திரை விநாடி கருதுநா ழிகையினாட் டிங்க, ளணைந்திடு மாண்டு நானூறா றதன்மேல் முப்பதோ டிரண்டதா யிரத்தா, லிணைந்தது கலியாந் துவாபர மிருமை மும்மையாந் திரேதைநால் கிரேதை, யிணைந்தநற் சதுரி யுகமுமொன் றிரண்டா யிரத்திநற் பிரமனுக் கொருநாள். 5

முன்புபோ லந்நாட் டிங்களாண் டாக மொழிந்தநூற் றுண்டினி னயனும், தன்பத மழியுந் தனதொரு பகலிற் சகலமு மழிதரும் பிரமன், பின்பொரா யிரத்திற் பெரியமான் மடியும் பேசுமா னூறுகோ டியினில், வன்புருத் திரனு மடிதரு மகேசன் சதாசிவன் முதலுமவ் வணமே. 6

ஆதலான் முழுதுந் தோன்றிநின் றழிய வழிவிலாக் காலமாம் பரத்தி, னேதமில் வசமே முழுதுமென் பதுதா னெவர்க்குமே யிடப்பகர்ந் திடுவன், பேதகா லத்தில் கலியினுக் கியல்பாற் பேசிய வகைவரும் பரிசிங், கோதவுங் கட்கே யொத்திடின் முழுது மிப்படிக் கொக்குமென் றறிவீர். 7

மறையவ ரொழுக்கங் குன்றி மறைநெறி பேணா ராகிக்
கறையுறு நெறியிற் சென்று கடையவர்க் கேவல் செய்வ
ரறிகொலை களவு கட்பொய் காமமுற் றேமம் மற்றே
முறைகெட முழுதுஞ் செய்வர் முரண்கலி முறைமை யீதால். 8

குடிபுறங் காத்த லின்றிக் குலவற மரபு குன்ற
வடுதுய ரவர்க்குங் கூர வறங்கெடப் பொருளை வெஃகி
நடுவொடு நலம நின்றி நடுங்கமர்க் கஞ்சி யோடி
வடுவுறு குணத்த ராவர் மன்னவர் கலியின் மாதோ. 9

---

குறுந்திரட்டு.

இழியு மைந்துபூ தங்க ளீசரா
மொழியு மைவரு முடிவர் நாளிலே
யழிவ தாவதா மியாரு மியாவையுங்
கழிவில் காலமே கடவு ளாவதே. 214

காலந் தன்னின் முழுது முதித்திடுங்
காலந் தன்னின் முழுது நிலைபெறுங்
காலந் தன்னி னழிவுறு மாதலின்
மூலங் காலமே யென்றனர் முன்னினோர். 215

படைகுடி கூழு நட்புப் பண்புசீர் நிலைமை வென்றி
யடைதரப் பழுதில் சூழ்ச்சி யமைக்குமா றமைச்சர்க் கின்றி
யிடைதரு வலியும் பொன்ற விரைந்தெழுந் தமரி னஞ்சி
யுடைதரச் சூழ்வர் நூலோ ருறுகலி மரபி தன்றே. 10

அன்பொடு மாண்டு தன்னை யாக்கிய வரச னுக்குத்
துன்புறு மமரின் முன்னே துணிவொடும் படுவோ மென்னார்
வன்புடை யெதிரி தன்பால் வாழ்வுகந் தறைபோய் நாதன்
றுன்புறப் பொருவ ருட்கார் சுடுகலி மரபு தானே. 11

கொடுப்பக்கொள் பவற்றின் மெய்போல் கூறியே கோளும் வேறு
யெடுப்பவுற் றளப்ப மற்று மியாவினுஞ் சோரஞ் செய்து
நடுப்பட லுள்ள மின்றி நவைபடப் பலிசை வெஃகி
வடுப்பட வொழுகி வாழ்வர் வணிகருங் கலியின் மன்னோ. 12

அந்தணர் முதல தாக வறைந்தவ ரறத்திற் கோடி
வந்தவா றதுபோல் வேளாண் மாந்தரு மரபிற் குன்றித்
தந்தம தொழுக்க மாறித் தகவொடு சால்பொ ழிந்து
வந்தவா செய்வ தன்றே வன்கலி மரபு தானே. 13

மனைவியர் கற்பி னில்லார் வருத்தவன் றன்னைப் பேணார்
புனைவுறு பொருளி னன்பாய்ப் பொய்யன்பு கொழுநர்க் காவர்
தனதுறு தையல் வாடத் தாம்பிறர் மனைமேற் காத
னினைவது செய்து நீடுங் கொழுநருங் கலியி னோரே. 14

மக்கடாய்த் தந்தை தம்மில் வஞ்சமே செய்து மாறாய்த்
தக்கவர் பசித்தி ருக்கத் தாம்பிறர்க் கறமுஞ் செய்வார்
மிக்கவர் மொழிம றுத்து மெல்லியர்க் கேவல் செய்து
முய்க்கவே செல்லு மிந்த வுறுகலி மரபு தானே. 15

நட்பது மொன்றை நச்சி யஃதுறு மளவு நட்டுத்
திட்பமு மன்பு மின்றி செறிதுய ரவருக் கெண்ணி
பொட்டிய மறையுங் காளத் தோசைபோற் சாற்றி நாவாற்
சுட்டெதிர் நிற்பர் நட்டார் சுடுகலி மரபு தானே. 16

துறந்தவர் தவத்தி னில்லார் துன்பமுற் றிடக்க லங்கி
யறந்திக ழொழுக்கங் குன்றி யல்லவை செய்து வாழ்வர்
சிறந்தநூல் பிறர்க்குச் செப்பி யப்படி தாஞ்செய் யாதே
திறங்கெட நிகழ்வ ரந்தோ நீள்கலி நெறிமை தானே. 17

போதகஞ் செய்யு நாதன் றன்னொடும் பொய்வ ழுங்கி
யோதிய கல்வி செல்வங் குலத்தபி மான முற்றுக்
காதலு முளத்தி னின்றிக் காரியத் திகழ்வுஞ் செய்து
நாதனைப் பேணல் செய்யார் நவைதரு கலியின் மன்னோ. 18

அறம்பொரு ளின்பம் வீடு மழகுறு தந்தை தாயுஞ்
சிறந்தன முழுது நாத னேயென்று சிந்தை செய்யார்
மறந்தவ னருளும் வாழ்வு மக்கடாய் தந்தை சுற்றஞ்
சிறந்தன வாக வெண்ணிச் செல்லுவர் கலியின் மன்னோ. 19

மேதகு மேலோர் கீழோர் வினைசெய்து வீழ்வர் கீழாஞ்
சாதியிற் கீழோர் மேலோர் தங்கிலை விரும்பித் தாமு
மோதிய நியமஞ் செய்தங் கொழுக்கமே லாகி யுய்ப்பா
ராதலாற் றலைகீ ழாகி யழியுமால் கலியி னந்தோ. 20

வீரர்பால் வென்றி குன்று மெய்யர்பால் வாய்மை குன்றுஞ்
சீரிதாம் வண்மை யோர்பாற் றிகழ்தரு மருளுங் குன்று
மாரவே யமுத மீயு மாபயன் குன்று மொன்று
மோர்விலாக் கலியை வென்றங் குய்பவர் யாவர் மன்னோ. 21

மந்திர சத்தி குன்று மருந்தொடு மணியும் பொய்க்குந்
தந்திர முழுதும் பொய்க்குஞ் சகத்தினிற் சகுனம் பொய்க்கு
மந்தர மாரி பொய்க்கு மவனியுள் விளைவு பொய்க்கு
வந்திடுங் கலியை வெல்ல வுரியவர் யாவர் மன்னோ. 22

தருமமுந் தானந் தானுஞ் சகலருஞ் செய்ய வெண்ணார்
பெருமறை நெறியிற் செல்லார் பின்னமா நெறிமேற் கொள்வா
ரருள்பரற் கன்பு செய்யா ரழிபொருட் கன்பு செய்வார்
வருகலி மரபு கால பரமது வலிய வாபார். 23

சாதமே யுரைத்த பரிசினி னென்றுந் தவறுத லறவொத்து வரலா, லேதுமொன் றில்லா வுணர்விலி களுக்கு மீதுபொரு ளெனக்கண்டு கொளலா, மாதலா லறிஞர்க் கையமொன் றுண் டோ வதன்மிகு பரிசெலா மின்ன, மோதநான் வாதக் கோதெ லா ‡ முணர்ந்திங் குண்மையை யுளத்தினிற் றெளிவாய். 24

‡ மிகழ்ந்திங் என்றும் பாடமுண்டு.

### அனந்தபோதம்.

எட்டெட்டா மொருகால மெண்மூன்று மொருகாலஞ்
சட்டுற்ற வாறாறு தத்துவமா மொருகால
மிட்டத்தா லிருபத்தைந் திருபத்தே ழொருகால
மிட்டத்தா லிவையெல்லா மிகழ்வாக்கு மொருகாலம். 25

மந்திரத்தின் வலிகாட்டி மாரணமா திகள்செய்து
தந்திரத்தை யுலகமெலாஞ் சாற்றுவிக்கு மொருகாலந்
தந்திரமுந் தடுமாறிச் சதுமறையுந் தலைமயங்கிப்
புந்திகளும் பொறிகலங்கிப் பொன்றுவிக்கு மொருகாலம். 26

நேல்லுடைத்தாய் நீருடைத்தாய் † நெறியுடைத்தா யறிவுடைத்தாய்ச், சொல்லுடைத்தா யுறவுடைத்தாய்ச் சோர்வுடைத்தா மொருகாலம், பல்லுடைப்பார் பலருடைத்தாய்ப் பழியுடைத்தாய்ப் பசியுடைத்தா, யில்லிடைத்தா மிராதவண்ண மேகுவிக்கு மொருகாலம். 27

† நேதியுடை நெறியுடைத்தாய்ச என்றும் பாடமுண்டு.

மந்திரத்தா லியந்திரத்தான் மருந்துகளால் வானவராற்
றந்திரத்தான் மாதவத்தாற் சாதனையாற் சகலத்தா
லந்திபடா வணங்காவி ரழுகுழவிக் கறிவுகொடீர்
கந்தமலர் கனியாக்கீர் காலமலாக் காலத்து. 28

(நிராகரணம்).

### சித்தாந்ததீபிகை.

* படைத்தளித் தழித்தறன்னைப் பண்ணிடுங் காலமென்றாய்
படைப்பதற் குணர்வுமுண்டோ பகர்காலஞ் சடமதன்றோ
வுடைத்தவக் காலமாவ துறுபொரு ணிகழ்ச்சியேகா
ணிடைத்தலை யறிவிலாதா யிகழ்கால மிறையதாமோ. 29

தூலமொடு சூக்கமெனத் தொடர்ந்தூழி மாத்திரையா
மேலவருங் காலமதே யிறையெனவு மியம்பினையாற்
றாலமத னளவூழி சூக்கமது சிறுதுடியென்
றேலவது கற்பித்தா ரியாரெனநீ யோராயே. 30

எட்டெட்டா முதலவைதாங் தனித்தனியோர் காலமென்
தட்டத்தாய் வருமென்றாய் சட்சமயத் தவரிங்கே
முட்டுத்தா னறமுழுது மொழிகின்றா ரதுவென்னோ
கெட்டற்றாய் மதிகால மிறையென்றல் கிறியன்றோ. 31

பாலகனுக் கறிவதுவும் பரிதியவ னந்தியதுங்
காலம்வரி னலதிலையாற் காலமதே பொருளென்றாய்
பாலனுக்குக் காழியினி னளித்ததுமோர் பதிவிரதை
சாலமிகு மிரவிதனைத் தடுத்ததுநன் றுணராயோ. 32

ஞானவினோதம்.

* அறைந்தனை பஞ்ச மூர்த்தமுங் காலத் தழிதலா லதுபர
மென்மீற, யுறைந்தவக் கால லோககன் மத்தோ டுயிர்மூர்த்த
மமூர்த்தமா மெவையு, நிறைந்திடப் படைத்து நிறுத்தியங் கழித்
து நின்மல மாய்வினை யாடுஞ், சிறந்தசிற் பரனை யறிந்திடா வுனக்
குச் செடகாலங் கடவுளா காதோ. 33

நண்ணுநா ளுகமு நலமொடு தீங்கா வகுத்துயிர் வினைகளுக்
கீடாய்ப், பண்ணியே யூட்டி முழுதுமாம் பரனைப் பார்க்கிலை பர
மடா தகநீ, யெண்ணிலாய் குருட ரெத்தனை யேனு மியானையை
யிடறிடா ரந்தோ, கண்ணிலா யழியுங் காலமாஞ் சடத்தைக்
கண்ணிலார் கடவுளென் பர்களே. 34

உரைத்திடு முகங்க ளூழிமாத் திரையா மளவுட னியல்
பெலா மொக்கு, நிரைத்தவை யெல்லா நெறிபட வகுத்தந் நிலை
தொறு மியல்புக ளடைத்த, பரத்தினை யறியா யாதலா லவைநீ
பகர்ந்ததுங் காலமே பரமா, யுரைத்ததோ டொக்கு நீயுணர்ந்
திலையா லுணர்விலா யுரைத்தலைத் தவிர்நீ. 35

அனந்தபோதம்.

உற்றவொரு நாடொறு மரங்கள்பழ மாக
விற்றைமுதன் மற்றொர்திசை யின்றிவிடு வானென்
பற்றியொரு நாடுபனி யாலுயிர்கண் மாய
வுற்றவொரு காலமொரு தேசமொழி வானேன். 36

திருந்தவொரு நாடுமழை மேவிவிளை காலம்
புரிந்தொர்திசை போகம்விளை யாதுவிடு வானேன்
வருந்தவரு காலமதி லேசிலவர் வாழ்வர்
பிரிந்துவரு காலமுத லோவுரைசெய் பேதாய். 37

சித்தாந்ததீபிகை.

* காண்பவ னன்றி யில்லைக் காண்பொருட் டோற்ற மெல்லாங்
காண்பவ னொழியத் தோன்றுங் காலமுஞ் செயலு மின்றாங்
காண்பவன் வேறதென்னிற் கண்டுவே றென்ன வேண்டுங்
காண்பவன் காணு துண்டேற் கருதுத ரூனு மின்றே. 38

காலவாதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 771.

# 21. மந்திரவாதம்.

### வினாவிளக்கம்.

சாற்றிய கால வாதச் சழக்கினை யறுத்தாற் போலப்
போற்றுமந் திரவா தத்தின் பொய்ம்மையு மருந்து தன்னு
லேற்றுவே தகமா மென்னு மியல்பையு மறியும் வண்ண
மாற்றவே யறிவி லேனுக் கண்ணலே யருள வேண்டும். 1

### சித்தாந்ததீபிகை.

* மந்திரத்தா லழைத்திடவே வானவரும் வந்திடுவர்
மந்திரத்தால் வசிகரண முதல்வலிகள் வந்தெய்து
மந்திரத்தா லாக்கியளித் தழித்திடனு மாகியிடு
மந்திரத்தின் வலியவர்காண் வானவரு மானவர்தாம். 2

* மந்திரவா னுகத்தே வான்முதலாம் பூதங்கள்
மந்திரவா னுகத்தே மன்னுசரா சரங்களெலா
மந்திரவா னுகத்தே வரம்பிலா ஞானமது
மந்திரமா மிதன்பெருமை யாவர்களு மறியாரால். 3

* மூலமா நாதத் தாண்மை யுணரவப் பொழுதே முத்தி
யாலமுண் டானு மானு மயனுமிப் படியு ணர்ந்தே
சாலமா விறைவ ராகிச் சமைந்தது சகத்துக் கென்று
மேலுமந் திரவா தத்தே யிருமையும் பெறலா மன்றே. 4

### அனந்தபோதம்.

பார கத்தி னிருக்க வும்பர காய மானது பாயவு
நீர கத்தி னிருக்க வும்மெய் நினைந்தி டத்தினி லேகவும்
போர கத்தினில் வெல்ல வும்பொரு ளென்று பொன்னுல கேறவு
மார ணைக்க மதிக்க வும்மிவை மந்தி ரத்தவர் வல்லரே. 5

### (நிராகரணம்).

### ஞானவினோதம்.

* மந்திரத் தழைக்க வுன்பால் வந்தவா னவரார் சொல்லாய்
மந்திர மனத்திற் றோன்றி வார்த்தையா யழிவ தேதான்
றந்திடு மார ணுதி வலியெனிற் சடமா நாத
மந்தமில் வலிக ணல்க வறியுமோ வறிவொன் றில்லாய். 6

* நாதமா மோனை தன்னைக் கருதானன் முத்தி யென்று
போதமார் கடலிற் செக்கின் மரத்தின்வாச் சியத்தி னுனைச
யோதுமுன் முத்தி தன்னி லொன்பது கோடி மேலாம்
வேதகஞ் செய்யு மித்தை விரையநீ கருதி டாயே. 7

அனந்தபோதம்.

மீனு மாமையு மண்டு காதியும் வெள்ள நீரின் மிதப்பதும்
வானி லேபற வைகளு லங்கள் வருந்தி டாது பறப்பதுங்
கானி லேசில மாம ரம்மொரு கற்ப நின்று கதிப்பது
ஞான மந்திர வாத சாதனை யாலன் றேபிணை மண்ணேகாள். 8

மந்திரவாதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 779.

## 22. ஔஷத (மருந்து) வாதம்.

ஞானசாரம்.

* கருதுநன் கல்வி யெல்லாங் காயத்தி னன்றி யில்லை
யுரியசா தனையு மெல்லா முடம்பினி னன்றி யில்லை
விரிதரு ஞான மேவு மெய்யினி னன்றி யில்லை
பெரியநன் முத்திப் பேறும் பேறுடம் பன்றி யில்லை. 1

* அதலாற் காயந் தானே யழியினோர் பயனு மில்லை
யோதுநன் சிவன் முத்தி யொண்காயத் திதியே யன்றோ
போதமே யுடைய மேலோர் போற்றுவ ருடம்பை யல்லா
வாதரோ யன்றோ காய மழிவதென் றறைகின் றார்கள். 2

* ஆகம முறைமை யாலே யடைந்தவம் மருந்திற் கேற்கத்
தாகமோ காதி காற்றுத் தண்பனி முதலை மாற்றி
யேகனுய்க் குகையிற் புக்கங் கிருந்திட வறைந்த நாளி
லாகம்வே தகமா யின்பத் தழுந்துறு நாத ராவார். 3

* கோதுறு செம்பு தன்னைக் குலவிய விரதஞ் சேர்ந்து
வேதகஞ் செய்யு மாபோன் மெய்யெனுங் காயந் தன்னை
வேதக மருந்தாற் செய்து மேவுநன் முத்தி சித்தி
காதரா யிருக்க நாத ருகமே நவிலு மன்றே. 4

* வேதித்த காயத் தோர்க்கு விளங்குமெய்ப் பொருளு ஞானம், போதிக்கத் தானே தோன்றும் பொருவிலாக் காயந் தனிற், போதுற்ற மலநீர் வேர்ப்பும் பொருந்திடும் பஞ்ச லோகம், வேதித்துப் பொன்றுங் கல்லும் விமலமா மணிய தாமே. 5

* பரவுவார் வேண்டிற் றெல்லாம் பெற்றிடப் பணிக்க லாகும்
விரவிடுஞ் சித்தி யெட்டும் விளங்கிடுந் திரிகா லங்கள்
கருதருங் காயம் பின்னைக் காலவஞ் சகமா மான
வரியதனை மருந்தே யாவு மாய்பொருள் வேறு முண்டோ. 6

(நிராகரணம்).

* கல்விசா தனைகடாமே காயத்தி லுளவா மென்னிற்
சொல்லிய வுடம்புண் டியார்க்குந் துகளற † வுணர்விப் பானே
னல்லலா யழியுங் காய மவிநாசி யுணர்வ தென்றோ
நல்லவ ரெல்லாஞ் சொல்லு நன்குரை யதனை யோராய். 7

† வுணர்ந்துண் பானேன் என்றும் பாடமுண்டு.

* காயமே தழித லின்றி யிருத்தலே கருது ஞானத்
தேயுநன் பொருள தென்று யிழிவதாங் கவலைத் துன்பக்
காயம தொருகா லத்துங் கைவிடா ஞான முத்தி
யேயவிஃ தெங்கே பெற்று யுனக்கென விருந்த தோதான். 8

* மருந்தினுற் காயம் வேதித் திருந்திட வாக மங்கள்
புரிந்துரை செய்த தென்றாய் புற்புதக் கவலை யாக்கை
யருந்துய ரென்று கோடி விதங்களா லறைந்து மோரா
திருந்திடச் சலித்து னிச்சைக் கேயவே யறைந்த தன்றே. 9

* காயவே் தகர்தாங் கால மூன்றுங்கண் டிடுவ ரென்றாய்
நீயுமுன் குருவுங் கால முணர்ந்தமை நன்று நிற்க
வேயவே யுலக மெல்லாம் வெயர்ப்பின்வே திக்கு மென்றாய்
காயம்வே தித்தல் கண்டா † மவையுனக் கரிய தொன்றே. 10

† லவையுங்கை கண்டதன்றே என்றும் பாடமுண்டு.

அனந்தபோதம்.

ஆறுயிர கோடி மருந்துகளு
நூறுயிர மந்திர மும்மணியும்
வேறுகிய வேதக மும்முடையார்
நீறுவர்க ளாமிது நிச்சயமே. 11

பொருந்தாவுடல் பொன்றுத லின்றிவிடப்
பெருந்தாக மதாயுழல் பித்தர்களே
மருந்தாலிறை யாலுறை வாயுவினு
லிருந்தாருள ரோவிதி யம்பிடுமே. 12

இலதொன்றை யிருந்திட வென்றுகினைத்
தலம்வந்து வருந்திடு மண்ணைகளே
மலமென்று மிருக்கு மருந்துளதே
லுலவும்முட லென்று முலப்பிலதே. 13

ஔஷதவாதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 792.

## 23. சாதிசங்கற்பம்.

### வினாவிளக்கம்.

இன்னமும் பிராந்தி தன்னி லெழுந்தசங் கற்ப மென்னப்
பன்னிய வவற்றை யுந்தான் பார்த்திடி னநேக மாகு
மன்னவை தம்மின் முன்ன மறைந்தவச் சாதி பேத
நன்னய முடைய மைந்தா நவிலுவ னினிது கேண்மோ. 1

* நலமறை யவர்முத லான்கு சாதியுங்
குலநெறி வழுவறல் குலமுந் தன்மமு
நிலைகுலைந் திழிதரி னிரய முற்றிடு
முலகவர் புலையரென் றொதுங்க வும்படும். 2

(நிராகரணம்).

### மெய்ம்மொழி.

ஆதியிற் பிரமனேதா னனைவர்க்கும் பிதாவா மென்றும்
வேதியர் வேந்தர் மிக்க வணிகர்சூத் திரர்கண் மற்று
நீதியிற் சங்க ரங்க ணீசராம் பறைய ராதி
சாதிபே தங்கள் சொல்லுந் தன்மையா மறிகி லோமே. 3

தந்தையாம் பிரமன் றன்பாற் சனித்தவத் தானந் தோறு
மந்தண ராதிசாதி யன்றுபோற் பிறக்கக் காணோ
முந்தியி னுதிர வூத்தை யொழுக்குறு வாச லாலே
வந்தெலாம் பிறந்து செல்லும் வாசியென் சாதி யையா. 4

### நித்தியாநந்தசரிதை.

தாதுவின் மயம தொக்குஞ் சமத்தபூ தங்க ளொக்கு
மோதுமன் புலன்க ளொக்கு மவ்வவ வுருவந் தோறு
மாதியாய் நின்ற நாத னொருவனே யாத லொக்கும்
பேதமாஞ் சாதி பேத மென்கொடு பேச லுற்றாய். 5

---

### குறுந்திரட்டு.

பேதமா முலக மெல்லாம் பெற்றவ னொருவ னேயம்
பூதமே யெவ்வு யிர்க்கும் பொருந்திய வுடல மாஞற்
பூதத்திற் சாதி யில்லைப் போதத்திற் சாதி யில்லை
யேதுக்கோ சாதி பேத மெனக்குநீ யியம்ப வேண்டும். 216

தானம்வே றுகத் தோன்றுந் தன்மையாற் சாதி பேத
மானதுண் டென்றா யின்று மப்படிப் பிறப்ப தென்னே
மானிட ராகி யிந்த மண்ணினிற் பிறப்பா ரெல்லாம்
யோனியொன் றாலே தோன்றித் துணர்ந்திடா யுணர்வோன் றில்லாய். 217

பிரமனுக் குருவசி பெற்ற பிள்ளைதான்
வரமுடை வசிட்டனவ் வசிட்ட மாமுனி
விரைவினூற் குலுங்கிதோள் † விழையச் சேர்தலாற்
சரதமாஞ் சத்திமா முனிவன் றன்னையே. 6

† விழையப் பெற்றது என்றும் பாடமுண்டு.

சத்திமா முனிவன் றன்பாற் பராசரன் பராசரற்கு
மச்சிய கந்தி யென்பாள் வயிற்றினி னவதரித்து
விச்சையின் மிகுதி யாலே வியாதனு முனியுமானூற்
கொச்சைநீ சாதி பேத மென்கொடு கூறலுற்றாய். 7

தந்துவாத்திறவலி.

சாதிபொன் றுயர்ந்தது தாழ்ந்த தொன்றெனப்
பேதமே வல்லராய்ப் பிதற்று வார்சிலர்
சோதியே யனுதியாய்த் துன்னி நின்றமை
போதியா மையின்வரும் புன்மை வேகமே. 8

தோன்றி.

சாதி பேதம தோதிய சாதிக
ளாதி பேத மிலாமை யறிந்தில
ராதி பேத மிலாமை யறிந்தவர்
சாதி பேத மிலாத தாத்தவர். 9

ஞானசாரம்.

யான்றுடக்கோ மெனுமறைஞர்க் கெலாந்துடக்கும் யாவரையும், வான்றுடக்கும் புனறீகான் மண்டுடக்கும் விட்டாரோ, வூன்றுடக்கா தியானெனதென் றொருபொருளொன் றினுமுள்ளாந், தான்றுடக்கா நின்மலரே தலைமறைஞ ரெனப்படுவார். 10

சாதிசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 802.

## 24. தீர்த்தசங்கற்பம்.

விவினுளக்கம்.

சாதி பேதசங் கற்ப மழிந்திடு
நீதி கூறிய வாறென நின்மலா
வோது தீர்த்தசங் கற்பமா முண்மையு
மாதி நாத வருளிட வேண்டுமே. 1

### சித்தாந்ததீபிகை.

தீர்த்தத் தாற்சிதை யாவினை யொன்றிலை
தீர்த்தத் தாற் † சிதை யாமல மொன்றிலை
தீர்த்தத் தோடுவ மிப்பது மொன்றிலை
தீர்த்தத் தேதிகழ் முத்தியு மென்பரால். 2

† செறி யாமல என்றும் பாடமுண்டு.

### (நிராகரணம்.) ஞானசாரம்.

தீர்த்தநீ ராடப் பாபம் போமெனுந் திண்ணர் கேண்மின்
தீர்த்தநீ ராடிப் பின்னுந் தீவினை துய்த்தல் காணீர்
தீர்த்தமின் கொலைகடரா சேர்ந்தவர் சிதைவ ரென்று
மூத்தைபோ முடம்பி னல்லா லுயிரினுர் வினைகள் போமோ. 3

### சங்கற்ப நிராகரணம்

போமே வினைகள் பொறியைந் தையுமடக்க
லாமே யறிவு தலைப்படுமே—தாமே
பெருந்தீர்த்த மென்று பிறிதின்மை காணு
தருந்தீர்த்த மாகு மவர்க்கு. 4

### சிவஞானவிளக்கம்.

* சித்ததாய்த் தானுந் தீர்த்தந் தன்னுளே திகழா நிற்கப்
பித்ததாய்ப் புறம்போர் நீரைத் தீர்த்தமாப் பேணிச் செல்லல்
சுத்தமாந் தன்கை யுற்ற சுடர்மணி யதனை விட்டுக்
குத்திரக் குருவிஞ் சக்கல் குறித்துத்தே டிடுத லன்றே. 5

### திருமந்திரம்.

உள்ளத்தி னுள்ளே யுணர்வெனுந் தீர்த்தநீர், மெள்ளக் குடைந்துநின் ருடார் வினைகெடப், பள்ளமு மேடும் பரந்து திரிவரிக், கள்ள மனமுடைக் கல்வியிலோரே. 6

### திருப்பாட்டு.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை,யாடி னாலு மரனுக்கன் பில்லையே, யோடு நீரினை யோட்டைக் குடத்தட்டி, மூடி வைத்திடு மூர்க்கரோ டொக்குமே. 7

தீர்த்தசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 809.

---

### குறுந்திரட்டு.

சேதப் படாது தினகரனாற் றீயாற் காலாற் செந்துக்கள்
சாதப் படாது வெண்ணுரையுஞ் சாரா வானுந் தரவேண்டா
வோதப் படும்பூ தங்களெலா மொளித்து மொளியா தொழிவில்லாப்
போதத் தீர்த்த மறிஞர்க்கா மல்லா தவர்க்காம் புனறீர்த்தம். 218

# 25. அருச்சனாசங்கற்பம்.

விருவிளக்கம்.

ஆர்த்த நீர்பர மென்று மயங்கிட
நீர்த்த வாறென வேதிகழ் நாயக
சீர்த்த தாமுய லர்ச்சனை யின்றிய
போர்ந்து நானுனை ரும்படி யோதுவாய். 1

சித்தாந்ததீபிகை.

* முபது மர்ச்சனை தன்னை மொழிந்திடி
னிபது மெய்ப்பொரு ளும்மொழின் முத்தியும்
வயம துற்றிடு மற்றுமெல் லாம்வரு
மயம தற்றதை யாருணர் வார்களே. 2

(நிராகரணம்).

பரமார்த்ததரிசனம்.

சிந்தையினித்தெய்வ மெய்த்தெய்வ மென்கிற
முந்த வருச்சனை செய்து முடிக்கு
மந்த மனத்தர் பெரும்பயன் வாளா
வந்த முடைத்த தனித்தமு மைமபா. 3

ஞானமா யொன்றாய் நின்ற வென்னையே நாநா வாகப்
போனதீ வினையின் மாந்தர் வேள்வியாற் பூசித் தத்தால்
வானமா முலக மேறி வாழ்ந்துமண் ணிடையே வீழ்ந்திட்
டூனமா மாசை யாலே யிறப்பது பிறப்ப தாவார். 4

தத்துவாந்திருவலி.

தேடியய புற்பிறிது தேவதெளி வில்லா
மூடருப சாரமதின் முற்றவறி வில்லா
வாடைமலர் சந்துமணி யாதரி சனந்தே
கூடுநிழ லுக்கணிதல் கூடியிட வற்றே. 5

குறுந்திரட்டு.

முற்றுணர் ஞானத்தோர்கண் முழுதையு மிறையாய்க் காண்ப
ருற்றுண ரியோகத்தோர்க ளுளத்திலே யொளியாய்க் காண்பர்
கற்றுணர் மறையோர் தாங்கள் கைதொழு மனலிற் காண்பர்
மற்றறி விலாதோர் வைத்த பதுமைமுன் வணங்கிக் காண்பர். 219

### சங்கற்பநிராகரணம்.

பூவும் புகையுங்கொண் டேத்திப் புறமேபோய்ப்
பாவனையால் வாளா பரிசிழப்பா—ராவா
நமையுறப்பார்க் கிற்றெய்வ நாமேயா மென்று
தமையுறப்பா ராதவர்க டாம். 6

### தோத்திரம்.

சதிர்மாமணி தனியேதம துளமேவிய தறியார்
மதிமால்கொடு பிறிதியாவையும் வழிபாடுசெய் துழல்வா
ரெதிர்மாமணி யினமாய்மிளி ரெழின்மால்வரை யேறிக்
கதிர்மாமணி யிகழாமுழு கனகற்றழி யிழிவார். 7

தற்பர னைப்பொரு ளாத்தனி யைப்பல
கற்பனை விட்ட கருத்தை விடச்சிலர்
கற்பனை யைத்தறி யைப் † பொறி யைத்திரள்
கற்கனி யைச்சிவ மென்று களிப்பார். 8

† பொரு ளாத்திரள் என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்பர்பொன் னார்சடைப் புண்ணியர்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே. 9

அருச்சனைசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 818.

## 26. அத்துவாசங்கற்பம்.

### வினாவிளக்கம்.

அருச்சனை சடங்காங் கற்பனை யழிய வருளிய வகையதே போல, விரிச்சுநற் சுருதி யாகம புராணம் வழிபல விதித்ததென் றுரைக்கு, முரைச்செய்கற் பனையின் றிறமது முண்மை யியல்பது மருளிட வேண்டு, மரிச்சுமுற் பவித்துஞ் சுழன்றிடு வேனை வந்துயக் கொண்டமா மணியே. 1

ஞானவிநோதம்.

அருமறைகள் விதித்தவழி யிரண்டவற்றை யறைந்திடினுத் தரந்தெற்கா மயன மார்க்க, மருவுமதிற் றெற்கயனம் புகைகறுப்பு † மருளாங்க வக்கரத்தோ டவையுங் கூடி, விரவியத்தாற் றேவதைக ளானோர்தம்மை மேவியவர் மீண்டிடுவர் மீளா தேபோ, முராவியவுத் தரமார்க்கப் பரிசையுந்தா னுரைத்திடுவ ‡ னத்தினையு முணர்க வையா. 2

† மருளாரங்க பரபக்கத் தோடேங் கூடி, ‡ னக்கதியு என்றும் பாடமுண்டு.

அஞ்ஞானநிவிர்த்தி.

அழலினொடும் வெளியினொடு மகத்தி னோடு மதுக்குடலாமுற் பக்கந் தன்னி னோடுங், கழிவிலா வறுதிங்க ளாண்டிற் புக்குக் கடுகியவா யுவையடைந்து வாயு வாலே, கழலவிட விரவியினர் மண்டலத்தைக் கழித்துப்போ யிந்துவினு ருலகைக் கண்டு, பொழிகின்ற வயனுலகிற் போய்மீள் வின்றிப் † பூசுரர்க ளெல்லாரும் போவர் காணே. 3

† பூசுரரா யெல்லாரும் என்றும் பாடமுண்டு.

பரமார்த்ததரிசனம்.

அங்கியொளி பகல்வெண்மை யாங்கால தேவதைக ளவர்களோடுந, தங்குமறு திங்களிடை யுத்தரா யணஞ்சார்வார் மறுத்துஞ் சாரார், கங்குல்புகை கறுப்பென்னுங்காலதே வதையடைந்து பிறக்குங் கண்டா, யெங்குமறு திங்களிடைத் தக்கணா யனத்திறந்த யோகி யென்பான். 4

---

குறுந்திரட்டு.

மந்தி ரம்பதம் வன்னம் புவனமே
சந்த மாகிய தத்துவ நற்கலை
யிந்த வாறுஞ் சிவகதி யென்றுகொண்
டெந்தை யாகமத் தேயிசைக் கின்றதே. 220

ஐந்துகதி யென்றுமறை சொல்லுமவை தம்மு
ளைந்துமுறு கன்மகதி யாவறையு நாலே
நந்தலறு வீடுபுகு ஞானமெனு மொன்றை
யைந்துகதி யுந்தெரியு மாறதுறை கிற்பாம். 221

## தத்துவதீபிகை.

விதித்த தாகம மறுவகைத் தவற்றையும் விளம்பின்மந் திரத்தோடு, மதித்த வப்பதம் வன்னநற் புவனத் துவங்கலை யவைதம்மை, விதித்த வாறதும் விளம்பிய வகைகளும் விதியெலா முடிவிற்போ, யுதித்த வுண்மையிற் கொண்டிடும் பரிசது முறைசெய வுணர்வைந்தா. 5

## மெய்ம்மொழி.

நின்றவன் விடத்தி னின்று நீங்கிவே றிடத்தை நோக்கிச்
சென்றிடு நெறிய தாகுஞ் செப்பிடி னத்து வாத்தா
வென்றவம் மார்க்க மிங்கே தென்றிடி னிருஞ்சி வத்தோ
டொன்றிட வுயிர்கள் செல்லு மொண்ணெறி யாகு மன்றே. 6

† சேடிபடி மாயாக்கூட்டந் தேசிகன் கிரமத் தாலே
யடியெடுத் தடியிட் டாற்போ லகிலதத் துவங்க ளெல்லாம்
படியவிட் டேறி மேன்மேற் பரந்துபா வனையாற் பெத்த
முடியவிட் டுயிரை முத்தி கூட்டிடு நெறியம் மார்க்கம். 7

† செடிபடு மாயா கூடந் தேசிகன் றிடமத் தாலே என்றும் பாடமுண்டு.

## குருத்திரட்டு.

விரும்பா தமல ஞானத்தை விலங்கி யோனி யிற்றன்னை
யரும்பா வத்தா னினையுமதி யதம கதியாம் வினையொத்தா
னரனாஞ் சுக நினையுமதி நடுவாங் கதிநல் வினைமிக்கார்
சுரனா மென்னு மதியாமக் கதியுத் தமமாய்ச் சொல்லுவரால். 222

துரியமான கதியர்க் சராதியாஞ் சுத்தையாமக் கதிசென்ற மானவர்
திரியமான வரவத்தை வந்துறார் தெய்வஞான மெனப்படு மக்கதி
புரிவிலக்கதி போனவ ரியாருமே பெரன்றுமூழியிற் பொன்றிப் பிறப்பரா
துரியவக்கதி நான்குமே பக்குவர்க் குத்தமர்க்கன் றெனமறை யோதுமால்.

யாக சித்தன்வே தாந்தவே தனமெனும் பஞ்சம நெறியெய்தி
மோக முற்றகா லந்திசை தேசமு மொழிவுறு பொருண்முற்று
மேக முற்றதன் பாகமே லமித்திட வீசன தருளாலே
யோக லுற்றுமீ ளுதலுமற் றிடுமவன் பெருமையைப் புகல்வாரார்.

மாறுமந் திரமைந் தாறும் வான்பத மெண்பத் தொன்றும்
வேறுமவ் வருணந் தன்னை விளம்பினம் பத்தொன் றாகுங்
கூறுகு மண்ட ரண்டங் கூறினூ றெழுபத் திரா
மாறாறுந் தத்து வங்க ளாறுங்கலை யைந்தா மன்றே. 8

(நிராகரணம்).

சிவாநந்தநிலயம்.

விதிய தாகவிப் பரிசனே தாகமம் விளம்பிடல் பவமென்று, முதலி மேவுபி ரொழுக்கவின் வழிகளா மொழிவிலா வுயர்ஞானக், கதிய தாகிய கரையினி லேறியக் கரையில்சிற் சுகமாகும், பதியில் வாழ்வதற் காகவிப் பரிசுபக் குவர்க்குரைத் ததுங்கேளாய். 9

உரைதருமவ் வழிகளையு மறியா ரூட ரொருகணத்தி லுற்ப வித்திங் கிறப்ப தான, கிருமியொடு கிடமச காதி தம்மிற் கிடந்துழைப்பர் கதியுமில ராத லாலே, கருமநெறி முறையவர்க்கு விதித்ததன்றிக் கருதருஞா னத்தநிநா ரிகளுக் கன்று, நிறைதருமவ் வழிகளையு நிமலர் மெய்ய னிகழ்த்தியிடும் பரிசினையு நிகழ்த்தக் கேளாய். 10

மந்திரந் தேசி கன்பே ரகிழ்பத மவன்றன் பாதஞ்
சுந்தர வன்ன மண்பாந் துநிறம் புவனஞ் செப்பி
னந்தமி லருளோன் மேவு மரும்பதி தத்து வந்தா
னுந்திநி நிவிர்த்தி யாதி யுணர்விறந் திருந்த லேயாம். 11

ஞானசாரம்.

திகழு மாமறை தெற்கொடுத் தரமெனத் திகழ்த்திய வகைசெப்பி, னிகழு மாசரந் தெற்கது பவத்திருட் கேதுவா மதுகன்ம, நிகழுந் தெய்வவுத் தரந்திகழ் வீட்டொளி நிகழ்நிவிர்த் தியதென்றே, புகழு மாரண மிருநெறி முடிபொருள் போதமாய் விட லேதான். 12

அத்துவாசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 830.

## 27. சாத்திரசங்கற்பம்.

### வினாவிளக்கம்.

சரிக்கு மத்துவாத் தான்பொரு ளென்றுணர்
பொரிச்சை மக்கடம் பொய்யழி யும்படி
விரிச்செ னக்கு விளம்பிய வாறெனத்
தெரிச்ச நாற்பரச் செய்தியுஞ் செப்புவாய்.

### தத்துவதரிசனம்.

* சாத்தி ரப்பயி லாதவர் தாஞ்சடர்
சாத்தி ரந்தனி லேசக லார்த்தமு
மேத்து முத்திய தென்றுணா ருண்மையுஞ்
சாத்தி ரத்தொழி யத்தரு மோசொலாய். 2

### (நிராகரணம்).

* சாத்திரத் தாலே யுண்மை தானறி வுறலா மென்னிற்
சாத்திரம் பயின்று ரெல்லாந் தம்மைத்தா முணராப் பாடென்
சாத்திரச் சடலே விட்டுத் தாமுண்மை யுணர்வுற் றோர்க்கு
வார்த்தைதயான் றலே தீர்ந்தால் வரம்பினூல் செய்த தென்னே.

### திருக்களிற்றுப்படியார்.

சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்க்கும்வளம் வந்துறுமோ—வார்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு. 4

### அனுபவசாரம்.

வேதங்க ளாகமங்கள் வெவ்வேறு நூலுரைக்கும்
பேதங்க ளெவ்வளவும் பேசுவது—நாத
னருளா லளவிலா வானந்த முண்டு
தெருளாகக் கண்டோர் சிலர். 5

---

### குறுந்திரட்டு.

கதிக்கும் வாக்கி யாதொன்றைப் பெற்றுற் கதிக்க வற்றுகு
மதிக்கு [illegible]மும் யாதொன்றைப் பெற்றுன் மதிக்க வற்றுகு
மதிக்கச் [illegible]திக்க யாதொன்றில் வழியின்மாட்டார் மனம்வாக்கப்
பதிக்கு [illegible]ணர்ந்த வாக்கும்[illegible]ம் பகரும் பரிசே நினைவகையென். 225

### ஞானசாரம்.

சுருதி நாலோ டாறங்கஞ் ‡ சமைந்த தொல்லா கமநாலேழ்
மிருதி புராண மீரொன்பான் மிக்கவெண்ணில் சாத்திரமு [ற்
மொருசொன் முன்பி னெவ்வாது பிறிதோ டொவ்வா வுரையாலு
பெரிய குருவி னருளல்லா லுரையாற் பிழைக்கு நெறியுண்டோ.

‡ சமயங் என்றும் பாடமுண்டு.

பலகி ரந்தமுந் தமிழ்களு மெழுதிய புத்தகஞ் சுமந்திடும் பற ண்போ, லலகி றந்தன வாகம மருமறை யோதியுங் கோர்பய னில்லை, மலக ரந்தனை யறுத்துயக் கொள்வதோர் வள்ளலை வழிபடு மிதுவே, நிலைமை யென்றுணர்ந் தவரல தியாவர்நீள் பவங்கடந் துய்ந்தோரே. 7

### திருமந்திரம்.

† அண்ணன் முதலா வறுபதி னாயிர
மெண்ணிலி கோடி தொகுத்தவிவ் வாகம
மண்ண லறைந்த வறிவறி யாவிடி
னெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே 8

† அண்ண லருளா லருளுஞ் சிவாகம, மெண்ணிலி கோடி தொகுத்திடு மாயினு என்றும் பாடமுண்டு.

### தத்துவாத்திஞவலி.

கற்று ரென்பவர் கற்ப ஞதிக
னற்று ரல்லவ ரல்ல ராயினர்
பெற்று ராவர் பேத பாவனை
பெற்று ரல்லவர் பீடுடை யாளரே. 9

### தேவாரம்.

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்கா ள்
கோத்திர முங்குல முங்கொண் டென் செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிந்திரேன்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே. 10

சாத்திரசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 840.

# 28. பிரமாணசங்கற்பம்.

விருவிளக்கம்.

சாத்திரம் பொருள தென்று தலைபறிந் தலையா வண்ணம்
வார்த்தையொன் றுலே யுண்மை வாய்க்குமா றருளி றைப்போ
லேத்திடு மளவை தன்னின் வகையது மியல்பு தானும்
வாய்த்திட வடிய னேற்கு வள்ளலே யருள வேண்டும். 1

நடராசநிலயம்.

* அளவையா லகிலத் தெல்லா மறிந்திடப் படுகை யாலு
முளவைதா னில்லா தெல்லா மருத்தமாக் கொளாமை யாலு
முளதில திரண்டு மோரி னளவையா லுணர்த லாலு
மளவிலா விறைவன் றானு மளவையாற் றேன்று மன்றே. 2

* பிரமாண மதனைப் பேசிற் பிரத்தியக் கனுமா னந்தா
னுரமான வாக மத்தோ டுவமான மருத்தா பத்தி
வரமான வபாவ மென்ன வகுத்திடு மளவை யாறிற்
றிரமான கண்ட ஞான்கத் திறத்தினைத் திகழ்த்து வன்கேள். 3

சாற்றுமிந் தியம னந்தன் வேதனை யோடு ஞான
மாற்றவங் கவைதா நான்கா மவற்றினை யடைவே செப்பி
னேற்றுமை யுணர்வா லேயு மனத்தினு லின்ப மாதி
தோற்றுவே தனையாற் சுத்த ஞானத்தாற் காண்டல் காணே. 4

* தோற்றிய வனுமா னந்தான் சுவார்த்தமும் பரார்த்த மென்ன
வாற்றிய விருவ கைத்தா மவற்றினிற் சுவார்த்த மாவ
தோற்றிய வைய மாதி துகளற வேது வாற்றான்
பார்த்துணர் தல்சு வார்த்தம் பரர்க்குணர்த் திடல்ப ரார்த்தம். 5

* ஆயவை தமக்குப் பேரா மன்வய வெதிரே கந்தா
மேயவை தமக்கு முன்சொல் லேதுவா மவற்றைச் சொல்லி
னாயுநற் சுபாவத் தோடு காரிய மனுப லத்தி
மேயவத் திறத்தா னூல்கள் விதித்தவன் னுவய மையா. 6

* காண்டலுங் கருத லாலுங் காணுறைப் பொருளை யெல்லா
மீண்டிட வுணர்த்த வல்ல விளங்குநூ லளவை செப்பிற்
பூண்டதந் திரமு மன்றிப் புகலுமந் திரமும் போதங்
காண்டிடு முபாய மூன்று மலைவறக் கரைத லாமே. 7

* ஓங்கிய வுவமா னத்தை யுரைத்திடி னிருவ கைத்தா
பாங்கவை யுருவந் தன்னோ டருவமென் றுரைக்கு நூல்க
ளங்கற வுவமை தன்னைத் திட்டாந்த மென்றுஞ் செப்பு
மாங்குறு பொருளி னுண்மை முழுதுங்காட் டாமை யாலே. 8

* செப்பிடி னருத்தா பத்தித் திறம்புறத் தில்லை யென்று
லப்பொரு ளகத்துண் டாகு மல்லினுக் குணர்வின் றென்றுற்
றப்பறப் பகலுக் குண்டாந் தன்மைபோற் பொருள்க டோறு
மொப்பறக் காட்டு மென்றே யுரைத்தன மறைக ளன்றே. 9

* பேசிடி னபாவ நான்காம் பிராகபிரத் தொம்ச மோடு
தேசித ரேத ரந்தான் செப்புமத் தியந்த மாக
மாசிலூன் முன்பில் பின்பின் மறித்தொன்றில் விசேட மொன்றி
லாசில்சே தனமூ னுக்கி லசேதன மாத லாலே. 10

* பக்கப் போலி விருத்தமுட னேதுப் போலி பகர்சித்த
மிக்க வனைகாந் திகத்தோடு மேவு முவமைப் போலியதுந் [ன்றே
தொக்க வளவைத் தூடணமாஞ் சொல்லும் பொருட்கு மழிவெ
மிக்க மறைக †ளறிந்திவற்றை மேவா வகையே விளம்பிடுமால். 11

‡ ளறைந்திவற்றை என்றும் பாடமுண்டு.

* விளம்பிரு பக்கத் தேதுவாம் விருத்தம் விளங்கநிச் சயித்திடாப் பக்கத், துளங்கொள வேது வுரைத்தலாஞ் சித்த முறைத்தமூன் றினுமுறு மேது, வுளைந்திடு மனைகாந் திகமுதா ரணம் போன் றுதாரண மன்றியே யொழிதல், விளைந்ததிட் டாந்தா பாசமிங் கிவைதீர்ந் திடவிவ கரிப்பர்வித் தகரே. 12

(நிராகரணம்).

* அளவைக ளுளத்தி னுமேலை யமைந்தன வளவைக் கெட்டா
வளவறு புராணன் றன்பா லவைசெலு மாற தெங்ஙன்
னுளமதி னளவை மாயு மவையுளத் தப்பா லானைத்
தளர்வறக் காட்டு மென்று சாற்றிய சமுக்கி தென்னே. 13

---

### குறுந்திரட்டு.

காட்சி யோடனு மானமெய்க் கடவுளா கமந்தா
ளுட்சி யாகிய வுவமையர்த் தாபத்தி யபாவஞ்
சேட்சி யாகிய மெய்ப்பொரு டெளியவேண் டினர்க்கு
மாட்சி யாமிவை யாறென மதித்தனர் மானம். 226

நாடிடிற் காட்சி நான்கு விதப்படு நயன மாதி
யோடுமைம் புலனுற் காட்சி யுள்ளுறு மனனுற் காட்சி
யீடுறு மின்ப துன்பத் தெய்தும்வே தனையாற் காட்சி
வீடுறு மியோகி தன்பால் விளங்குஞா னத்தாற் காட்சி. 227

சொரூபானந்தசித்தி.

* பிரமா ணங்க ளாயவைதாம் பேத மில்லா வொருபொருளைத்
திரமா விதுவென் றிடமாட்டா செல்லா தாமங் காதலினு
லுரைமாத் திரமா யாவையினு முளவஞ் ஞான மதுதானும்
பரமா மொளிமெய் யாகியிடும் பார்க்கி னுண்மைப் பரிசிதுவே. 14

சதகம்.

காட்டுமொன் றுய கண்ணன் சுயம்பிர காசன் கண்டா
யீட்டிய வளவை தன்னு லிடுமதி சயமொன் றில்லான்
வாட்டமின் மான மெல்லாம் வகுப்பவன் யாவன் முன்னுக்
கேட்டிடி னவனை மானங் கிடைத்திடக் கடவ தன்றே. 15

சுபானுபவசித்தி.

* முத்திசா தனமா நூலோர் மொழிவுறு காட்சி புத்தி
யுத்தியா மனுவை முன்னே ரேதுநா லுவமை யர்த்தா
பத்திதா னபாவ முற்றும் பார்த்தறி பவனைப் பின்னர்ச்
சித்தியா வண்ண மான மெங்ஙனந் திகழ்த்து மாறு. 16

* காணுமொரு வர்க்கொருவர் காட்சிமுத லாகுஞ்
சாதனம திட்டுரைசெய் சாதன மனைத்தின்
போதகனை மற்றறிது மென்றுபுக லுற்று
ராதப னனைச்சுடுவர் பாதவம திட்டே. 17

* சாதனமி லாதுபர தத்துவம தென்றென்
றோதுவர்கள் வாதியர்க ளுள்ளம தொருக்குற்
றுதிமறை தேர்பொரு ளறிந்தவர்க டாமும்
பூதியது வேயளவை யென்றுபுக லுற்றார். 18

* ஓதிய வளவை யெங்கே யுரையுட னுணர்வுக் கெட்டாப்
போதமாய்ப் புரையற் றேங்கும் பூரண னிலைய தெங்கே
வாதுட னளவைக் கெட்டா வள்ளலா ரருளால் வாய்த்த
வேதமி லானு பூதி யளவைமற் றேது மன்றே. 19

பிரமாணசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 859.

# 29. வாதசங்கற்பம்.

### வினாவிளக்கம்.

அளவையி னியல்பு மந்த வளவையா லமல வீச
னுளபரி சுணர வொண்ணு வுண்மையு மருளி னற்போற்
றளர்விலா வாதத் துண்மைத் தன்மையுந் தெளியும் வண்ண
மளவிலா நாயி னேற்கு வள்ளலே யருள வேண்டும். 1

### சித்தாந்ததீபிகை.

மிக்கநற் பொருள்கள் விளம்பிடும் பொழுது விளம்பிய குற்றமு மொழியத், துக்கநிக் கிரகத் தானமென் றறிஞர் சொல்லுவ திருபதோ டொன்று, தொக்கவக் குற்ற மனைத்தையு மறிந்து துடைத்திடான் சொல்விடத் தொடங்கிற், றக்கமற் றவனே † மூடனு குவன்றன் றகுமிரு பத்தொன்றுங் கேளாய். 2

† மூடசா கதிகன் என்றும் பாடமுண்டு.

* துணிவினி லானி யந்தரம் விரோதஞ் சொல்லுஞ்சந் நியாசமா நான்கு, பிணியுமே துவினி னந்தரம் பிறழர்த் தாந்தர நிரர்த்தகம் பேசி, லணுவிலஞ் ஞாத வாச்சிய மநநு பாடண மறிவிலா வருத்த, மிணையிலப் பிராப்த காலம பார்த்த மெழில்கொளப் பிரதிஞையோ டினங்கேள். 3

* பாற்புன ருத்தி பரியநு யோச்சியோ பேடணம் பகரும் விட்சேபம், நீர்த்திடு நிரநு யோச்சியாநு யோக நிகழ்மதாநுஞ் ஞையோ டதிக, மார்த்திடுங் குறைய தன்றியு மவசித் தாந்த மென்றறிஞரா விழித்தங், கோர்த்திடு மிருபத் தொன்றினை யிவற்றினுருவமு முணர்த்துவன் கேளாய். 4

* தன்பொரு ணிற்கப் பிறர்பொருட் கிசைத முன்துணி வானியென் பதுதான், முன்சொனற் பொருளை யொழிந்தொரு பொருளை மொழிந்திட துணிவினந் தரமாந், தன்சொனற் பொருளை யழிவுறக் கொடுத்த முன்துணி விரோதமா மன்றித், தன் சொலுக் கழிவு வந்திடத் ததனை விடுதல்சந் நியாசமா வதுவே. 5

* சொல்லுமப் பொருளுக் கன்னிய வேது சொல்லுத லேது வந் தரமா, நல்லதற் பொருளுக் கன்னிய நூலை நவிலலர்த் தாந்தர மாகுஞ், சொல்லுறப் புகுந்த பொருளினுக் கிசையாப் பொருள் சொல னிரர்த்தக மாகுஞ், சொல்லுமற் றவிஞ்ஞா வாச்சியம் பொருளை விளங்கிடச் சொலாமையென் றறியே. 6

* அநநுபா டாணம் பிறன்பொரு ளழிய வறைந்திடு தற்கு மாட் டாமை, யிதமுறு மவிஞ்ஞா தார்த்தமா மெதிரி யிசைத் திடும் பொருளறி யாமை, யுதவிடா தப்போ துத்தரம் பிறழ வுரைத்தலப் பிராப்தகா லந்தான், முதியவர் மொழிவர் முன்பின லையு மொழியினை யபார்த்தக மென்றே. 7

* எதிரிதன் வினவுக் குத்தர மறியா விழுக்கதப் பிரதிபை யதுதான், முதன்மொழிந் ததனைப் பின்னையு முரைத்தன் முறைபிறழ் புநருக்தி யாகு, மெதிரிதன் றோல்வித் தலமறி யாமை யிசைப்பது நியோகக்குற் றந்தா, னெதிரிநல் லுரையும் புரையென விசைத்த னிரநுயோ கக்குறை யாமே. 8

* கதித்திடும் வினவுக் குத்தர மாய்ந்து கண்ணழித் திடுதல் விட்சேப, மதித்தொரு குற்றந் தனைச்சொல வுனக்கு மதுவுள தென்மதா நுஞ்ஞை, விதப்பட வுரைக்கும் வேண்டுரை யன்றி மிகலதி கங்குறை குறையா, மதிப்படு மவசித் தாந்தமா மெதிரி யுரைக்குவே றென்றினை யுரைத்தல். 9

* என்றநு டணங்க ளியாவையு வந்தங் கிரண்டிலே யடங் கிடு மவற்றி, லொன்றுதன் பொருளுக் காயசா தனங்க ளுரைக்க மாட் டாமையென் பதுவா, மன்றியொன் றுரைத்த வேதுசா தனங்க ளவையுரு வன்றியே யொழித, றுன்றுகுற் றங்கள் யாவையு மகலச் சொல்லுவ னின்னமுங் கேளாய். 10

* பிறந்தவன் சாமோ வென்றிடிற் சாமென் றுரைத்திடல் பெருந்துணி வுடைமை, யிறந்தவர் முத்தி யியைவரோ வென்று விரண்டுமுண் டெனவகுத் துரைத்தல், சிறந்த தேதென்று மியா வையி லென்ன லெதிர்வினாச் செயன்முயற் கோட்டி, னிறங் களேதென்று லுரைத்திடா தொழித னிலவிய மறைகணிச் சயமே. 11

* தர்க்கவா தத்தா லெல்லாஞ் சதுர்பெறத் தெரிவ துந்தான்
றர்க்கவா தத்தின் மிக்கோர் தலைவரென் றிடப்பட் டோராந்
துக்கக்குற் றங்க டேர்ந்த நூனெறி தர்க்க வாத
மிக்கான் மேன்மை வாதில் வென்றவற் கன்றி யுண்டோ. 12

(நிராகரணம்).

* செப்பிட வெற்றி வேண்டு மிராகத்தாற் றெளிவ துண்டோ
மைப்படு மிராக வாதிற் பலிப்பது மயக்க மேகாண்
பொய்ப்படு மிராகத் தர்க்கம் புகல்பத மெழுத்து மானஞ்
சொற்பத மேற்றத் தாழ்வே †சொல்லின்வேற் றுமைதான் சொல்லாய். 13

† தோல்விவெற் றிமைதான் என்றும் பாடமுண்டு.

* தாங்கலி லுன்றன் வாதஞ் சாற்றும்போ தங்கு வேண்டும்
பாங்குறு சடலை பாராப் பார்த்திபன் வாதி தான
மோங்குவிற் பன்ன ருகு மொருகரி யிருவர் சொல்லோ
ரீங்கிவை யனைத்துங் கொண்டா லிசைக்கும்வா திவணமேகாண்.

* வாத செற்ப விதண்டை வகுத்ததி
னோது வாத முரைத்ததர்க் காங்கத்தின்
மீது கத்தி மிகச்சொலும் வெற்றிதான்
சாத மோரிற் றலைபறி யல்லவோ. 15

* ஓது செற்பத்து வந்தங் குறுபயன்
காது தர்க்கக் கவலையின் வேகமாய்
வாத † மோதி மயக்கமுற் றுங்கவ
ரேத மேசொல் விழுக்குப் பிறக்குமே. 16

† நீதி என்றும் பாடமுண்டு.

* வேற தாக விதண்டையின் மிக்குள
† வூறு தேடி யொருவர்க் கொருவர்தா
மேறு மாறுகொண் டேமுட்டி யுத்தமாய்ப்
பேற தின்றிப் பிதற்றிக் கழிதலே. 17

வென்ற தாகிற் கிடைப்ப தகந்தையே
குன்று தோல்வியிற் கோளிழந் தோர்வசத்
தொன்ற தாகலி னுண்மை யுணர்ந்திடு
கின்ற ஞானிகள் கேட்கவங் கில்லையே. 18

வேண்டி ராகவா தத்தர்க்கம் வெல்சுகந்
தூண்டிற் பொன்கவர் மீன்சுகம் போலுமா
லாண்டும் வெற்றி யகந்தையிற் கேடதா
மீண்டு தோல்வி யிழுக்கினிற் கேடதே. 19

* ஆத லாலவ் விரோதபோ தத்தவ
ரோது தர்க்கம் பொருளென வோர்வராற்
சாது வாதனம் பண்ணித் தமிழ்ப்புகழ்
வீத ராகவா தத்தை விளம்புவாம். 20

* தம்மையே யுணர்ந்த வுண்மைத் தன்மையா மவர்கள் கூடி
யுண்மையாம் பொருள்பா ராட்டி யுவத்தலு முயர்ந்த ஞானச்
செம்மையா மாத்தர் வாய்மைத் திருமொழி யமுது மாந்தி
மெய்ம்மைகொண் டாட றுனும் வீதரா கத்தர் வாதம். 21

* பயனி லாமொழி பாராட்டு மாந்தரை
மயமி லாப்பத ரென்றுநன் மாதவ
ரயமி லாவீத ராகவா தத்தினாற்
பயன தாமின்பம் வீடெனப் பார்ப்பரே. 22

வாதசங்கற்பம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 881.

---

குறுந்திரட்டு.

கழியக் கற்றோர் கற்றவா றியாருங் கரியாகக்
குழுமித் தர்க்கங் கொற்றவன் முன்னர்க் கூறுங்கா
லொழியக் கூறு மவைபின் முன்னோ ரோதுற்று
ரெழுமிக் குற்றந் தெரிய வவற்றை யிசைக்கின்றேன். 228

எண்டான் மனங்கொண் டேயிதுவே யெல்லா விகற்பங் களுமிலதேற்
கொண்டார் கொண்ட கோள்களவை யெல்லா மிலவே கொண்டுகொண்டு
மண்டா நின்ற மனமாண்ட மாட்டார் வாத நூல்கற்றுப்
பண்டே யாமும் பேயின்கைப் பறையுங் கொடுத்துப் பார்ப்பாரால். 229

உற்ற வாதுசெய் தொருவரை யொருவர்தாம் வெல்லப்
பெற்ற போதுளங் களித்தலாற் பெருகிய மயலே
செற்ற மேயல சயமுறிற் செம்பொருள் கூடாக்
கற்ற வாதினாற் பயன்மனங் கலங்குதல் களித்தல். 230

## 30. சமயாதி தோகுத்துரை.

### வினாவிளக்கம்.

சமய வாதசங் கற்பமாஞ் சமுக்கினைச் சாற்றிய † சமுக்கெல்லா
மமைய வேசுரும் கத்தொகுத் தழகுற வமலர்க ளறைவண்ண
நிமல மாகிய குணமொடு கமையது நிறைதர நிகழ்மைந்தா
விமல வாதர வுடனறி வதுவிளங் கிடவிளம் புவன்மெய்யே. 1

† வகையெல்லா என்றும் பாடமுண்டு.

### திருமந்திரம்.

ஆறு சமய முதலாஞ் சமயங்க
ளூற தெனவு முணர்க வுணர்பவர்
வேற தறவுணர் வார்மெய்க் குருநந்தி
யாறி † யமைபவர்க் கண்ணிக்குந் தானே. 2

† யறிபவர்க் என்றும் பாடமுண்டு.

ஆறு சமயமுங் கண்டவர் கண்டில
ராறு சமயப் † பொருளு மவனலன்
றேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. 3

† பொருளும் பயனிலை என்றும் பாடமுண்டு.

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
வென்றன காணு மிருமுச் சமயமு
நன்றிது தீதிது வென்றுரை நீசர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே. 4

### அனந்தபோதம்.

அந்த ரறுவ ரானையினைத் தடவி யந்த வவ்வடிவை
யிந்த வடிவே யானையென விகலைப் புரியு மாறேபோற்
றந்த மறிவிற் றத்து வத்தைச் சார்ந்து சமய மாறுக்கி
வந்து வாது புரிந்தலறி மரிப்பர் வாதக் கற்பனையால். 5

### தத்துவார்த்தவலி.

வேரொடு தோலுங் கொம்பும் விழுமிய விலைபூக் காயென்
றூர்பவை வெவ்வே றுக வறிந்தவ ரறிந்த தொன்றே
யோர்தரு மரமா மற்ற தன்றென வியம்ப லன்றே
சோர்வற வுண்மை காணுத் துகளுறு சமய மெல்லாம். 6

அருவென்ப ருருவென்ப ரீசன் றன்னை யனேகமு மாமெ
ன்ப ரேக மென்பர், கருவென்ப ரெவ்வுயிருங் கடந்தா னென்பர்
கண்ணென்பர் கரியென்பர் கரணி யென்பர், தெருளென்ப ரைம்
பூதஞ் சேரா னென்பர் சிவனே சிவனட்ட மூர்த்தி யென்பர், பொ
ருண் முன்பு புகன்றவற்றைத் தாமுங் கேட்டுப் புகன்று புகன் றே
விடுவர் பொருள்கா ணாரே. 7

ஈச னியல்பை யுயிர்க்குரைப்ப ருயிரைக் கரணங் களுக்கிசைப்பர்
போக கரண முடற்குரைப்ப ருடலைப் பூதங் களிற்பிணிப்பர்
பாச பூத முடற்குமுடல் கரணங் களுக்கும் பகர்கரணந்
தேசத் துயிர்க்கு முயிரியல்பைச் சிவர்க்கு முரைப்பர் சிலர்தாமே.

உடம்புணர் வாகி யென்ற வுலோகித னுணர்வு மோரா
னுடம்புணர் வுள்ள தென்ற பவுத்தனு முயிருங் காணா
னுடம்புணர் வுயிரு முள்ள தென்றவர் பரத்தை யோரா
ருடம்புண ருயிர்ப ரந்தேர்ந் துணர்ந்தவ ருயர்ந்த மேலோர். 9

நன்குறவ பேதநனி கொண்டுதெளி யாதே
வன்குறைசெய் பேதமதி னுதரவு வைப்பார்
தன்குர லழைத்தபிர திக்தொனி யெதிர்கூ
வின்குர லெனப்பரியு மேழைத னினத்தார். 10

தர்க்கமற வெப்பொருளு மெங்குமொரு தானாய்
நிற்கநினை யாதய † னினைத்தவல மாகி
வர்க்கம துரித்தென வருந்துமவ ரங்கைச்
சர்க்கரை விழச்சருகு நக்கல்சது ராமோ. 11

† னினைத்தலவ மாமால் என்றும் பாடமுண்டு.

என்புற மெனச்சிறிது மில்லையென வொன்றே
தின்புற விழிப்புல னியக்கிய வுண்டா
லன்புறு மவர்க்கெதிர் தமக்கென வகத்தே
பொன்பொதி யிருக்கவுழல் பிச்சைபுகு வாரே. 12

## ஞானசித்தி.

தீர்த்த மர்ச்சனை யத்துவா மந்திரஞ் செடியுடற் றிதிசெப்பு
மார்த்த சாதிபே தத்துட னளவைநூ லலைதரு மிகுதர்க்கம்
பார்த்தி டார்மிகு குருபர னருளினிற் பரம்பர மதுகாண்பர்
போர்த்தி டாதவ ரவையவை பொருளென வுழலுவரு லகெல்லா.

சொரூபானந்தசித்தி.

* கனவிற் கற்பிதப் பொருள்போல் வாதக் கலக்கங்க
ளனவிற் கற்பிதப் பொருளை நவிலா ரினியச்சிற்
கனவத் துவிதத் தினையென் கண்ணுற் றவர்கண்ணுறுந்
சொனவந் தகமு மெய்யே மெய்யிற் றோன்றுதே. 14

கனவிற் கண்ட பொருணனவிற் காணும் பொருளைக் காட்டலா
ளிணையிற் சமய நெறிவேத நெறிக்கு நிமித்த மாகினையின்
வினவிற் சமய நெறிவிட்டு மேலாம் வேத நெறிநின்றோன்
பிணையச் சமயத் தவர்க்குறுகிற் பிராயச் சித்தஞ் செயவேண்டும்.

தண்ணரிய சமயிக டங்கள் பந்தியி
லுண்ணுத லவர்களோ டுறவு பண்ணுதல்
புண்ணிய மறிந்திடப் புகுதல் செய்திடிற்
பண்ணுக சாந்திரா யணம்ப கர்ந்தவா. 16

வேதஞ்சொன படியொழிய வேறுஞ்சில கலைகளினை
யோதுந்திற மருவிமறை யோதுஞ்சிவ னிருகமலப்
பாதந்தொழ நினைவிலர்கள் பாசண்டிக ளெனவறிக
தீதொன்றிய வவர்களொடு சேருங்கலர் களுமவர்கள். 17

சமயாதி தொகுத்துரை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 898.

துறுந்திரட்டு.

பொன்றுமுடல் புந்தியுயி ரென்றபுற மார்க்க
ரொன்றுபல வன்றுபய மன்றுமறை மார்க்க
ரன்றெனவு மாமெனவு மன்றிநிழல் கண்ட
குன்றுகுலை ஞாளியினர் கூடுகிலர் வீடே. 231

முத்திபே றில்லா தொன்றியே யென்று மொழிவரேன் மோகமா முளத்தாய்
சித்தமா மொன்றுக் கென்பரேல் வேண்டா முன்னமே சித்தமா தலினு
லத்தின்மா சகற்ற வெனிலனு தியதே லகன்றிடா தாதியேன் மீண்டுஞ்
சித்தமா மதனு லுபயகோ டிக்குஞ் சித்திவேண் டுவதிலைத் தெரியின். 232

ஒன்றென்பதும் பலவென்பது முருவென்பது மருவென்பது
நன்றென்பதுந் தீதென்பது நானென்பது நீயென்பது
மன்றென்பது மாமென்பது மாயாவையு மல்லா
வொன்றென்றென வகைசெய்திவ ருரையாடிடு மளவோ. 233

முறிசாகைய துறுதோறுணர் முகைவேர் பலமுற்று
மறிவார்மர மதிலோரவ மவமானதை யறிவா
ரறியாரலர் முதன்மாமர மறிவாரல ரவர்போ
லறியார்களு மலர்வாதிக ளறிவார்களு மலரால். 234

# 31. கேடுகண்டிரங்கல்.

தத்துவாரிதை.

அலகறு சமய மதினலை பவர்க ளளவறு கலையலை பவர்க, ணிலையுறு பொருளை நினைவறு மவர்க ணிலையறு பொருணினை பவர்க, ளலைதரும் விடய மதினழி பவர்க ளறிஞரை யகல்வுறு மவர்கள், கலகுறு துயரோ டழிவுனி யயலர் கரைதரு பரிசறை குவனுன். 1

தலையினைப் பறிப்பார் சடையினைப் பறிப்பார் தண்டுதோல் குண்டிகை சுமப்பார், நிலையினைத் துறப்பார் நியதியுற் றிளைப் பார் நித்தமோ ரூர்புகத் திரிவார், கலையினைத் துறப்பார் கலையி னைத் தரிப்பார் கல்லொடு குவட்டிடைத் துயில்வா, ரலையிலித் துயரா லிறைவனெட் டிடுமோ விவரினைத் திடுவதே யென்னே.

செந்துகில் புனைவார் சீவரந் தரிப்பார் திரிதண்டோ டொருத ண்டு பிடிப்பார், தந்தமுத் திரைகள் பலபல தரிப்பார் தவமெனத் தம்முடம் பொறுப்பார், முந்துகாய் கிழங்கோ டிலையயின் றிடு வார் மோனமென் பார்கத றிடுவா, ரிந்தவா குலத்தா லீசன்மே விடுமோ விவர்துய ருறுவதே னந்தோ. 3

ஞானசித்தி.

அறிவினை வடித்து வாயா லகத்தனு பூதி யின்றிச்
செறிதரக் கற்ற தெல்லாஞ் செப்புழ ணிமித்த மாகி
யிறைகழற் செறிதற் கின்றி யிருமையு மிழந்து வாளா
கிறிபடக் கலைகள் கற்றுங் கெடுவதே கெட்டே னந்தோ. 4

தத்துவங் கலையிற் கேட்டுந் தாமது பிறர்க்கு ரைத்து
மெய்த்தனு பூதி யின்கண் வெறுங்குரு டாகி மெய்யே
யுய்த்தவர் போன டித்தங் குளங்குலைந் தகம்பா ழாகி
வெத்தமே கழித்து நாளை விடுவதே கலைஞ ரந்தோ. 5

அகத்தினுட் டுயர்வர வயர்வு நீடிடச்
சகத்தினுக் கறிவுநா ணுது சாற்றியே
மிகத்தமைத் தெளிவுறார் மெய்ம்மை போனடித்
திகத்தினிற் றிரிவரீ தென்ன கேடுதான். 6

ஞானசூளாமணி.

சுத்தையாய்ப் பறையா யிருந்துள சுருதி துணிந்தநற் பரம் பொரு டன்னை, வித்தக மாகக் கேட்டுமப் பொருளை விரித்துரை செய்துமெய் யாக, வத்திறந் தமக்கே யனுபவ மாகும் பரிசதென் றுணர்கில ரையோ, சுத்துதல் பொருளாக் காகளம் போலக் கத றியே விடுவதே யென்னே. 7

சொரூபானந்தசித்தி.

ஆதலா லறியு மறிவெலாங் கைவிட் டறிவினுக் கறிவதாய் நின்ற, பேதமில் பிரம மொன்றுமே யறிவான் பேறுபே றின்ப மாம் பிறத்தல், சாதலற் றிருக்கு மதனையோர் வருத்த மின்றி யே சாரலா யிருக்க, வாதரித் தறியா ரற்பமே விரும்பி யனந்த துக் கத்திலே யமைவார். 8

வேதநூன் மிருதி புராணமத் துவித மெய்ம்மையே விளம்ப மெய்த் தர்க்கஞ், சாதியா நிற்கத் தத்துவ ஞானத் தவருமப் பொ ருளையே சார,வாதியாஞ் சிவனு நாயண னுநிங் கறைந்தது மபே தமா யிருக்க, வாதியா மொருவ ரிதையனு தரித்தன் மாயையி னுடையவல் லபமே. 9

கனகம தபேதம் வேறு கடகமகு டாதி போல
வணியவடி வால னேக மறிவினிலே யால பேத
மெனவுமுறை யாடு வாரு மிதயமிலர் ஞான கீன
ரெனையிகழ் வாரு மீச னெனநினைகு வானவ் வீசன். 10

பலவடிவும் வேறு பாடு பகரும்வெறு மூட ரான
புலையரொடு கீட மோடு புழுவினொடு வாசி யேது
சொலவிலுல காகும் வேறு துணிவிலுணர் வேயெ லாமெ
னிலகுமதி பேற தாகு மிறைவனடி பேண லாலே. 11

எண்ணற முழுமையு மீச னுண்மை
திண்ணிதி னறிபவன் சிவனெ னப்படுங்
கண்ணுவ கருமமொன் றில்லைக் காதலாற்
பண்ணுவ னெனினவன் பசுவெ னப்படும். 12

பேத மாகிவே றாகிய பொருள்கண்மேற் பேதைமை யதனாலே
காதன் மேவினர் காலபா சத்திலே கட்டுணக் கடவாரே
யாத லாலழி வின்றிய பொருளிலே யறிஞரா தரித்தல்லா
லேது மாதரித் திடாரவ் வப்பொரு ளொய்திலே யிருக்கின்றார். 13

பரமிக மாய்நிகழ்ந் ததுப ரம்பொரு
ளொருபொருள் பிறிதிலை யுளது போற்பல
கருதுமே லவன்கணிற் காண்ப தெங்கணு
மரணமே மரணமே மறிக்குஞ் சார்வதே. 14

போதவடி வாய கண்ட பூரணனுஞ் சிவனுக்கு
யாதுமுளங் கைக்கனியா மிவனருளின் படியொழிய
வேதமுடி விற்பொருடாம் வேண்டியவா விளம்பியிடும்
பாதகர்போ யேறுவொணாப் பாழ்ங்கிணற்றில் வீழ்வர்களால். 15

பொற்பொருள் புதைத்தபுவி யிற்புல னிலார்போய்
நிற்பினு மிடிப்பர்கனி நித்தமுல கத்தோர்
தற்பொருள் சமுத்திபினி னுற்றமது தானே
யற்பமறி கிற்றில ரயர்ச்சிவழி யைபோ. 16

பின்ன முறப்பிர மக்கை யறிந்தான்
றன்னையும் மெய்ப்பொரு டள்ளுமை தன்றி
மன்னு முடம்பு வசத்தொரு வாதிக்
கின்ன வுலோக மெனுமை யிழிக்குர். 17

மறையோ ராசர் முதலான வண்ணச் சிரம மற்றுமுள்ள
பிறிவா நிகழு கின்றதெலாம் பிரம மொன்றே மேபிறிதா
லறியா நிற்கு மறிவென்று மல்லற் பிறப்பை யடைவிக்கு
மிறைதா னென நிலையப்து மிரண்டுங் காணு திருந்தக்கால். 18

வேதமா கமபு ராண மிருதிகள் வேறு மார்க்க
ரோதுமா கமங்க டர்க்க மொன்றொடொன் றெவ்வா தாகு
மீதெலா மொக்கப் பண்ணா லாவதன் றிதைய துக்க
மாதலா லனைத்தும் விட்டிங் கனைத்துமாஞ் சிவத்தைப் பார்ப்பான்.

## போதாமிர்தம்.

எளிதினிற் கணத்திற் றன்னைக் கண்டபே ரின்ப மாயே
யொளிருநற் சிவமா யொப்பற் றிருக்கலா மிருக்க வுள்ளக்
களிமிகும் புலம யக்காங் காட்டபா சண்ட மார்க்கத்
தளமதுற் றிடுவ தேயிவ் வுலகெலா மென்னே யென்னே. 20

புரையற நிறைந்து நின்ற பூரண போத மாய
வுரையறு மின்ப முள்ளத் திருக்கவோர் வின்றி விட்டுக்
கரையறு கவலை யோவாக் காட்டபா சண்ட மார்க்க
மறைவிலாக் கடலில் வீழ்ந்து மடிவதே யகில மந்தோ. 21

* பிரத்தினைத் தேடியிப் பாரெலாந்திரிந்
திரைத்திளைத் திடுவரீ தென்ன கேடுதான்
கரத்திறு மலகம தென்னக் காட்டிடுங்
குருத்தனைத் தேடிடார் கொச்சை மாந்தரே. 22

* போந்த வாவி புகுந்திட றல்லப
மெய்ந்த மற்றவற் றுற்பின்னை யென்பயன்
றுந்த மைப்பெறத் தாம்விரை யாதந்தோ
வேய்ந்தி ருப்பர்க ளீதென்ன கேடரோ. 23

கருத்தினிற் கடிதின் மாளு மூனைநீர்க் குமிழ்போ லொக்க
வுரைத்திடு முணர்வ தன்றங் கத்தனைக் குண்டோ வென்றுற்
பெருத்தவா தாத்தாற் றம்மைப் பெற்றிடற் கெண்ணி மேன்மேல்
விரைத்தல தின்றி வாழ்வார் வெளிற்றினை விலக்க லாமோ. 24

பவத்துய ருணிப்பதை பதைக்கிலர்கள் பாசத்
துவக்கினை யறத்துணிவு செய்வதிலர் ஞானத்
தவத்தினெறி பற்றியுறு தாரகம தின்று
ரவக்கடலை யுற்றழிவ தேயடைய வையோ. 25

---

## துறுந்திரட்டு.

உண்டாகிய மெய்ப்பொரு ளுள்ள முறக்
கண்டார்கவ லைக்கலை கற்ற லுறார்
விண்டேயிகல் வாதினில் வீடு சொல்வார்
வெண்டேர் புனலென் றுவிரும் பினரால். 235

சயம்பெற நினைகுவ தன்றித் தர்க்கிறுற்
பயன்பிறி திலதெனு முண்மை பார்த்திடா
ரியம்புவ ரில்லினிற் குருவிபோ லிங்ஙன்
மயங்குதன் முன்னைவல் வினையின் வண்ணமே. 236

கழிபெருந் துன்பமாய்க் கருமஞ் செய்வழி
வழுவின்மா நிரயமாய் மறுபி றப்பிலாய்த்
தொழிறரும் பயனது சுருக்க மாயினும்
விழுவதே யதனின்மெய் யுணர்வை விட்டவர். 237

இன்ப மானவீ டின்மை யிடையுறி
னன்ப தந்தரு ஞான முயற்சியிற்
றன்ப மில்லை யெனமறை சொல்லினு
மன்பு செய்கில ரந்தோ வறிவிலார். 238

பேய்ப்பிண மிரண்டின் கூட்ட மனிதராம் பேர்க ளிட்டுப்
பேய்ப்பிணம் பிறந்த போது பேய்ப்பிண மெனும்பே ரிட்டார்
பேய்ப்பிணத் தோடிருந்தார் தம்மை †யும் பேயுங் காணும்
பேய்ப்பிணத் தோடிருந்தார் தம்மையும் பேயுங் காணார். 26

† . யப் பேயுங் என்றும் பாடமுண்டு.

அடுத்தவை யூத்தை யாக்கு முடம்பைநல் லறிவாற் றோலை
விடுத்துளே வேறு வேறா நரம்பினோ டிறைச்சி யென்பாற்
றொடுத்தவிம் மாலை தன்னைத் தூய்தன்மை நோக்கித் துன்ப
மெடுத்தவிக் காம பாச மெறிகில ரென்னே யென்னே. 27

யாமிளையோ மென்றிருப்பா ருறக்கத்திற் பழுதுணரார்
தாமுளையு நோயுற்றால் விருத்தரினுந் தளர்வுறுவா
ராமிளமை முதற்காமன் பொடியானு லமிழ்துருவச்
சோமனுநா டொறுமொழிந்தாற் பிறர்க்கிளமை தொலையாதோ.

இன்று சென்ற நாழிகைதா னெதிர்ந்து வாரா தினியென்று
† மின்று சென்று நாளையுயி ரிருக்கு மோவென் றிதற்கஞ்சா
ரென்று மனித்தம் பிணிமூப்புச் சாக்கா டென்னு மிவைகண்டு
மென்று மிருப்பார் போலிருக்கு மிவரென் செய்யக் கடவாரே. 29

† மின்று சென்ற தினமுயிர்கட் கில்லை யென்ன விதற்கஞ்சா என்றும் பாடமுண்டு.

தீவா யரவின் வாயிருந்த தேரை வாயிற் சிறுபறவை
யீவா யிருந்த நுண்டேனை விரும்பி நுகரும் வகைபோல
நோவா யுடம்பின் வாயிருந்த வுயிர்தா னுகருஞ் சிற்றின்ப
வீவா யுணர்ந்து விழையுடம்பை வெறுத்தார் பிறவி யறுத்தாரே.()

கோல காலமாய்க் கொடுவினை செறிபவக் குரைகட லெழுகின்ற
வால காலமா மடுதுயர்க் கஞ்சியே யனைத்தையுந் துறந்தற்று
மேல தாகிய பரம்பொருள் வினவியு மீண்டுபோ யதில்வீழும்
பால ராகிய பாதகர் கேடினிற் பதைக்குமெ னுளமந்தோ. 31

தோத்தறத் துறந்த தூயோர் துயரென வெவருங் கூறும்
பித்துறு விடயத் துற்றுப் பேதையர் போல வாவி
மத்துறத் திரியா நின்ற வரம்பிலாக் கேட்டுக் கென்றன்
புத்தியு மழியு மாற்றேன் புகல்வது மறிகி லேனே. 32

* தேவ தேவனுஞ் சிற்பர ஞானியை
மேவு வார்பெறு வார்பெற்று வைத்துவிட்
டாவ கானனீ ரென்றதின் மூழ்கிடப்
போவ தேசில புண்ணிய கினரே. 33

அன்னமுந் தேனும் பாலு மமுதுடன் குழைத்திட் டாலு
முன்னமே மலத்தைத் தின்ற சுணங்கன்மோ வாது போலத்
தன்னையே யுணர்ந்த ஞானி தன்னையே யருளி னாலும்
பின்னையு முணரார் மாந்தர் வினைசெய்த பெருமை யாலே. 34

கேகேண்டிரங்கல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 932.

## 32. சன்மார்க்கம்.

விருத்தம்.

ஓதிய சமய முற்று முரைத்தசங் கற்ப மாகிக்
கோதுறு மவரை நோக்கிக் கோதிலார் வெறுத்தி ரங்கு
நீதிய தருளி னற்போ னிமலவீ டதனைக் காட்டுந்
தீதில்சன் மார்க்கத் தன்மை தேவனே யருள வேண்டும். 1

* அறிபவன் குறையு ஞான மறிவிப்போன் குறையு மார்க்கத்
தறிவதன் குறையும் வையத் தருந்தவக் குறையு மன்றோ
வறிவறி விப்போன் ஞான மறிகின்றோன் றவமிந் நான்குங்
குறைவிலா நெறியு ளார்க்குக் கூடலாம் வீட தன்றே. 2

* ஒன்றொடொன் றொவ்வா வறிவுக ளெனினும் பொருடனி
னியல்புவே றுகா, தொன்றவப் பொருளி னியல்பினா லறியு மறி
வன்றோ வுண்மையா மறிவா, மின்றிய பொருளை யுளதென்று
முளதை யிலதென்று முணருணர் வொழித்து, மூன்றிகழ் குரு
வோ டளவைதன் றேர்ச்சி மூன்றினா லறிவது மார்க்கம். 3

*அறைந்தவெச் சமயக் கலையினு மெடுத்துக் காட்டலா யரு
மறை முடிவிற், சிறந்தநற் பொருளாய்ச் சிவனரி யயனாற் செப்
பிய வருத்தமு மாகித், துறந்துமற் றவிரோ தத்தையே துணி
ந்தோர் சொல்லிடும் பொருளுமா மொன்றை, நிறைந்தகைத் தல
த்தின் மணியெனக் காட்டு நீதிசன் மார்க்கத்தி னியல்பே. 4

மூலமாங் கலைக ளியாவையு மோதி முடிந்திடும் பொருளுமா யுணர்ந்தோர், சாலவே யாரும் தன்மையாய் வருத்த மென்பது தானொன்று மிலதாய்க், கோலமாங் குரவன் கூறுமோர் மொழி யால் விளங்கிடுங் கொள்கையா நெறியே, சீலமார்ந் துளமுந் தெளி தரும் புதல்வ திகழுசன் மார்க்கமென் றறியே. 5

சுட்டிய பொருள்க ளியாவையு மின்றித் துரிசற வெவையு மங் கதுவாய்க், கட்டொடு வீடு காரண கருமங் கழன்றொரு கலை களா லுணரப், பட்டிடும் பொருளு மின்றியே கணத்திற் பரமனா தருளினாற் பலிக்குந், தட்டிலா நெறியே ததுவ விரோத மாகிய தத்துவ நெறியே. 6

துவிதமத் துவிதஞ் சொல்லிய வுபயந் தோற்றிய வத்திநாத் தியெனும். விவிதவெப் பொருட்கும் வெறுக்கவேண் டாமல் விளம் பியவவற்றினுக் கவையாய்த், தவலறத் திகழுஞ் சற்சனற் சுகத் தைத் தனக்கனு போகமாய்க் காட்டும், பவிசுடைத் தாய வழி யெது வதுவே பழுதினற் பரமமா நெறியே. 7

*அரியவெட் டெட்டாங் கலைஞரு மறியா தவருமொத் தறி வுற வரிதாய்த், தெரிவுறத் தேர்ந்த தேசிகன் றிகழ்த்திற் றெளி தர வெவர்க்குமொத் தெளிதாய்க், கருவறப் பிறவிக் கடலினைக் கடிந்து கணத்தினிற் பரத்தினைக் காட்டற், குரியமற் றதுவே யம லபோ தகமென் றுணர்ந்தவ ருரைத்திடு நெறியே. 8

மழித்தன்ட முதலாம வரையினும் படாது மயக்கமற் றுல கினு முயர்ந்தோர், பழித்திடு முளத்து மாசினை யொழித்துப் பரமதத் துவத்தினை யுளத்தே, விழித்திடக் காட்டும் விமலமா நெறியே விளங்குசன் மார்க்கமே தனமென், றளித்திடு மறைக ளீறொடா கமங்க ளருந்தவர் துணிந்தது மதுவே. 9

அறைந்தசட் சமய முதலெல்லாந் தனக்கங் கறிந்திடும் விடய மாத் திரமாய், நிறைந்ததற் பொருளி னிலையவை யொன்று நினைக் கலாம் வகையது மன்றி, யறிந்தவர்க் கவர்க ணினைந்தமே வடிவா யனைத்தையு மொழிவிலா நெறியே, செறிந்தசிற் கனராற் றிகழ்த் திடப்பட்ட திருந்துமெய் யுணர்வெனு நெறியே. 10

* பேதமென் பதுவு மபேதமென் பதுவும் பிறிதுள மதங்களு
மவற்றி, னீதியென் பதுவு நிகழ்த்துதத் துவங்க ளவத்தைக்க
ணிரைத்தகோண் முழுது, மேதமொன் றறவே யெவற்றையு
† மிடங்கண் டிதுவிது வெனவுணர்ந் திடலா, யோதுமென் றுனு
முணர்ந்திடப் படாத வதுமுத்திக் குண்மையா நெறியே. 11

† மடங்க விதுவிது என்றும் பாடமுண்டு.

செய்வதே தவமாய்ச் செறிவது விடுவ தின்றியே சகலசங்
கற்பப், பொய்யதா மொழுக்கப் புலமைய தறவே போதமாய்
மெய்யொழுக் கதுவாய்க், கையினு மலகம் போலவே வீட்டைக்
காட்டவும் வல்லதே ததுவே, மெய்யதாம் வேத வேதன மல்லா
† தவையெலாம் வேதன மறியே. 12

† தவத்தியல் அல்லது தவகதி என்றும் பாடமுண்டு.

மெய்புணர் வொழியா ஞானமஞ் ஞானம் விமலபோ தக
மதா மற்று, முய்தரு நெறிநற் சிவகதி யுபாய முபதேச முயர்சிவ
ஞான, மையமி லவிரோ தம்பர மார்க்க மரியதத் துவநெறி பிர
மத், தெய்வநன் வித்தை சொரூபவிச் சையெனத் திகழுசன் மார்க்
கநற் பெயரே. 13

வேதனம் பரம வேதனம் விமல வேதனம் வேதவே தன
மற், றோதரு மான்ம வேதனஞ் சிவவே தனமுட னுண்மைவே
தனமா, மேதமில் பிரம வேதனம் ‡ வியாத்த வேதனஞ் சொரூ
பவே தனமென், றோதரு முண்மை †புணர்ந்திடு நெறிக்கங் குண
ர்ந்தவ ருரைத்தவப் பெயரே. 14

‡ வியர்த்த என்றும், † புணர்த்திடு என்றும் பாடமுண்டு.

உரைத்தநூன் முழுதுந் தமக்கென வுணர்ந்தங் குண்மையி
னன்மைகண் டுவப்பர், வரைத்திட வொன்றி லொதுங்கிடார்
முழுது மாதவின் மாறுகொண் டயரார், திரித்திறைப் பொழுதிற்
சிற்சுக மளிப்பர் தேசகா லாதியற் றிருப்ப, ரொருத்தரு மறியா
வொழிவிலா வுண்மை யுத்தம நெறியினர்க் கியல்பே. 15

சன்மார்க்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 947.

# 7. யோகப்பகுதி.

## 1. இயமம்.

### வினாவிளக்கம்.

தேர்விலாப் பேதை யாகித் திரிதரு மடிய னேற்குச்
சோர்விலாப் பரம மார்க்கந் துரிசற வருளி னற்போற்
பேர்விலாப் பரம முத்தி பெறுவதெட் டியோகா லென்ப
வோர்விலேற் கதனை யுந்தா னுணர்த்தியே யருளவேண்டும்.

வருத்தமா மியம மாதி மல்குசீர் நியமந் தான்பின்
னிருத்துமா தனமு மற்று மியக்குறு பிராணா யாமங்
கருத்தினற் பிரத்தியா காரங் கலந்ததா ரணைதி யானந்
திருத்தமாஞ் சமாதி யந்தந் திகழுமட் டாங்க யோகம். 2

### குறுந்திரட்டு.

இயம நியமா தனம்பிராணா யாமம் பிரத்தி யாகாரஞ்
சயமு றுதா ரணைதியானஞ் சமாதி யென்னுந் தத்துவத்தை
யயம தறவே யறிவறிவிற் கங்க மாக வறிவோர்க
ளியைய வுரைத்த யோகங்க ளிருநான் கடைவே யியம்புவாம். 239

கோரம் பெருகு கொலைபொய் களவின்மை
சாரும் பிரம சரியந் தயாச்செவ்வை
யோரும் பொறைநிலைமை யூண்சுருங்க றூய்மையென்
றீரைந் தியம மடைவே யியம்புவாம். 240

ஏமமுறுமியம மீரைந் திவைதம்மிற்
றூய்மை யருளூண் சுருங்கல் பொறைசெவ்வை
வாய்மை நிலையுடைமை யேழும் வளர்விப்ப
காமங் களவு கொலைமூன் றுங் கைவிடுவ. 241

மிடையப் பண்ணு தோருயிர்க்கு மெய்ஞ்ஞா னத்தா லுயிருள்ளத்
தடையத் தன்போற் காணுமதே யகிஞ்சை யதிலு மறிவுடையோ
ரடையத் தானே யாய்விளங்கு மாத்மா வனல்கா ருரயத்திற்
படையிற் படாதென் றறிகைவதை பண்ணாமையெனப் பகர்வர்களால்.

ஓதுவர்கண் மெய்ம்மையென வுள்ளபடி சொல்லல்
பூதவித மென்பாரு ளிற்புலன் மிகுத்தோ
ராதிமறை சொன்னபா மலதன்மை யாலே
யோதலடி வாமதுமெய் யென்பர்புரை யற்றோர். 243

ஏத்தருநல் லியமநிய மாதனந்தா மிலங்கியவா தாரமெழி னாடிசுத்தி, யார்த்தபிரா ணாயாம மாயுள்காண்ட லரியபிரத் தியா கார திகளோர் நான்கு, மோர்த்திடுமா தாரமுத லியோகமெட்டு முறுபலமீ ரெட்டுண்டா முபாயந் தானுஞ், சீர்த்தகரத் தாமலகம் போலுனக்குத் திறந்திறமா மொழிந்திடுவன் றெளிநீ மைந்தா. 3

அன்பருள் வாய்மை நிலையற்ப வூண்பொறை தூய்மையென் றேழையு மாக்கித், துன்புறு கோறல் களவொடு காமந் துரிசதா மூன்றையு நீக்கி, யின்புற விந்தச் சீலமோர் பத்து மெய்தியங் கழி வின்றி நிற்றன்,முன்புரை செய்த யோகமெட் டதனின் மொழிந் திடு மியமமென் பதுவே.

இயமம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 951.

குறுந்திரட்டு.

மாயை யால்வலி யால்வவ்வ லன்றியே
மேய விச்சையுங் கள்ளமாம் யானெனக்
காய மாதியைக் காணா தொழிதலத்
தேய மென்று மொழிவர் தெளிவுளோர். 244

தூசா ரகலல்குற் றூய்மொழியார் சேர்கனவும்
பேசாமை யென்பர் பிரமசா ரியபெரியோர்
தேசார் பிரமத்தைச் சேர்ந்து பிறழ்வின்றிப்
பேசாமை யேபிரம சாரமெனப் பேசுவரால். 245

நோயோ ருயிருற்று னொந்துயிரைக் கைவிட்டுத்
தாய்போற் பரிந்ததனைக் காத்த றயவாகுந்
தாயொடு தந்தைமக்க டாரந்தான் சத்துருவாந்
தீயோனையு மொக்கக் காணுமது செவ்வையாம். 246

ஆக்கை யிறவே யெறிந்தோ ரையுமிடும்பை
போக்கினவ ரென்றே பொறுத்தல் பொறையாகுந்
தூக்காக வீடளிக்குந் தாமரையன் றிப்பிறிது
நீக்காப் பவமென்னு நிச்சயமே யாநிலைமை. 247

போத வுண்டலு மற்பமே யுண்டலும் புரிந்துயோ கஞ்செயப் போகா
தாதலால் யோகந் தனக்கனு கூல மானவூ ணற்பவூ ணாகுஞ்
சீதநீர் மண்ணாற் சுத்தமாந் தேகஞ் சித்தம்வை ராக்கிய மண்ணாற்
போதநீ ரதனாற் சுத்தமா மென்பர் புறமகத் தூய்மையைப் புலவர். 248

## 2. நியமம்.

தானந் தயாவொடு சந்துட்டி பத்தி தற்பர தியானநற் பூசை
யூனந் தருமொழுக் கத்தினி ஞானை லுயர்செப மொள்ளியவிரத[த்
ஞானந் தருமுறை கேட்டதின் முயற லெனநவி லீரைந்து மெய்தி
தானங் கசைவற நின்றிடு மிதுவே சாற்றிய நியமயோ கதுதான்.

நியமம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 952.

---

குறுந்திரட்டு.

அருந்தலஞ் சந்தோட மாத்திகந் தானந்
திருந்து சிவபூசை சித்தாந்தக் கேள்வி
மருந்தா மதிநாணே மந்திரஞ் சேர்வை
நிரந்த விரத நியமங்கள் பத்தே. 249

தவநோன்பா லூண்சுருக்கித் தம்முடம்பை வாட்ட
லெவனும் பிறவியெனக் கெய்தியதெத் தாலே
சிவமான முத்தித் திறமேதென் றோர்தல்
பவமாறப் பார்ப்போர்கள் பண்ணுந் தவமே. 250

கூடியது கொண்டமைதல் சந்தோடங் கோகனக
னூடு முதலா நவில்கின்ற வெப்பதமும்
வீடுவ தாமுளத்தே மெய்காண் மகிழ்ச்சியைச்சந்
தோடமென மெய்ப்பொருள் பெற்றோர்கள் சொல்லுவரால். 251

அருமறை மிருதியை யேத்த லாத்திகந்
தருபய னினைவுறு தீத ருணமாந்
திரமுறு பத்தியாற் சிவநற் பூசையும்
பரவலு நினைதலும் பாரிற் பூசையே. 252

பிரமந்தா னுத்தெளியப் பேசுமறைக் கேள்வி
திரிவன்னத் தோர்கட்குஞ் சித்தாந்தக் கேள்வி
புரையில்புரா ணக்கேள்வி யென்பர்புல வோர்கள்
விரதராம் வேளாளர் மெல்லியலார் கேள்வி. 253

ஆசின் மறைநெறியி லாதரவு தான்பதியாத்
தேச வழக்கிற் சிறந்த மறைநெறியி
லாசிது வென்னுங் கருமத் தருவருத்துக்
கூசுத னாணமெனக் கூறப்படு மன்றே. 254

# 3. ஆதனம்.

### நித்தியானந்தசரிதை.

ஆதனம் பகருங் காலே யறைந்தனொண் ணூற்று றத்தி
னோதிய வருத்த மில்லா வுத்தமா தனங்க ளெட்டு
நீதியாஞ் சுவத்தி பத்ம நிகரில்கோ முகியே வீரந்
தீதிலாச் சயனஞ் சிங்கந் தெண்டபத் திரமு மாமே. 1

மடித்த † காலினி லிங்க மறைந்திடத்
தடித்த சானுக் கடன்கைப் பெருவிரற்
பிடித்துப் பின்னி யடிமே லிடுக்குறத்
துடிப்பி லாத சுவத்திக மாகுமால். 2

† காலி னகங்கண் என்றும் பாடமுண்டு.

பாங்கு படவிருந்த பத்மா தனம்பகரி
னோங்கி யிருந்தடியை யூருவிலே மாறுடி
வாங்கி மனமொன்றி வலக்கை யிடக்கைமேற்
றாங்கி விழிநாசி யினைநோக்குந் தகைமைத்தே. 3

சால வடியிரண்டுந் தம்மிலே மாறுடி
மூலந் திகழு மபானனை † முட்டுறச்
சீலந் திகழ்நாசி நோக்கிச்செங் கை ‡ விடுமேற்
கோலந் தரிற்கோ முகியா தனமாமே. 4

† மூட்டுற்று என்றும், ‡ மடிமேற் என்றும் பாடமுண்டு.

---

### குறுந்திரட்டு.

### நியமம்.

வாசிக முபாஞ்சு மானத மென்ன மந்திர செபந்திரி விதமாம்
வாசிகங் கேட்கச் சொல்லுத லுபாஞ்சு வாயித ழடித்தன்மாத் திரமா
மாசறு மனத்தான் மந்திரம் வழாமன் மதிப்பது மானத மாகு
மாசறு குணந்தா னென்றினுக் கொன்றங் காயிர மடங்குள தாகும்.

இருடிச்சந் தோதே வதையைக்கொண் டிதயத்தே
மருளிற்சார் வைதிகமா மந்திரஞ் சேர்வை
சரணற்றுஞ் சதருத் திரியா தியுமாகுந்
தெருமற் றிதிகாதா திகள்சேவிப் பதுமஃதே. 256

வேறாதே யர்தெனினு மென்மேல் விருப்ப
மறாதே யிதுவே யறம்பொரு ளின்ப
மிறாதான வீடு மெனக்குரவ னேவன்
மறாதே செயும்விரத மாவிரத மாகும். 257

நாவிய லாகம நன்னுன் மறைப்பொருளாம்
யாவையு மாமுனிவர்க் கின்புற் றிடவுரைத்துச்
சேவுய ரீசனார் தென்றிசை நோக்கியே
மேவி யிருப்பது வீரா தனமாமே. 5

கன்னத்தே வைத்து வலக்கையைத் தானீட்டி
யுன்னித்தே யெப்பொழுது மாயு முணர்வினாய்
மன்னுற்ற மாயவன்றன் வஞ்சத் துயிலாகும்
பன்னுற்ற நற்சயனப் பாங்குறு மாதனமே. 6

பைகொள் கழலின்மேற் பாதங்கண் மாறடிக்
கைக ளிரண்டுமக் காலின் மிசைநீட்டி
வெய்ய விழிநாசி யிரு † விரற் கிழ்நோக்கிச்
செய்யவா யங்காக்கிற் சிங்கா தனமாமே. 7

† விரன் மேனோக்கிச் என்றும் பாடமுண்டு.

---

குறுந்திரட்டு.

துயிலுஞ் சோத்திகங் கோமுகம் பங்கயம்
பயிலும் வீரசிங் காதனம் பத்திர
மயலின் முத்த மயூரஞ் சுகாதன
முயரு மாதன மொன்பதென் றோதினார். 258

மடிக்கச் சானு வுருக்களின் மத்தியத்
தடித்த லங்கண் மறைய வழுந்தவைத்
துடற்க ழுத்துத் தலையொத் திருப்பதைத்
துடக்கில் யோகிகள் சோத்திக மென்பரால் 259

மதிசெய் வலமுழந்தாண் மற்றைமுழந் தாண்மேல்
வதிய வொருமை யுறவைத்து மாறடிப்
பதிய வுறுஞ்சகளப் பக்கத்தை முட்டக்
குதிக ளிரண்டுமிது கோமுகியா மன்றே. 260

தடித்த வூரு விரண்டின்மேற் சாரவைத்
தடித்த லங்க ளிரண்டுந்தன் கையினாற்
பிடித்துக் காலிற் பெருவிரல் பின்புபோய்ப்
படுத்து வைத்தல் பதுமா சனமிதே. 261

திருந்திடப் பதம்வலப்
பெருந்தொடைக்கண் வைத்துநா
லருந்தவர்க் கறஞ்சொனான்
விரும்பிருப்பு வீரமே. 262

மண்டான் புறஞ்சேர வன்று ளவையிரண்டும்
விண்டா னுறும்வண்ணங் கைபின்னி மேனோக்கிக்
கண்டானக் காலிற் பெருவிரலைக் கரமுறிற்
றுண்டா னவர்சொல்லுந் தெண்டா தனமாமே. 8

### நித்தியானந்தப்பிரகாசம்.

கூட மடித்திடக்கால் கோல மறவளைத்
தாடுங்கான் மேலே வலக்கை யதுநீட்டி
வாடு மிடமருங்கு மற்றைக்கான் மேல்வைக்கப்
பாடு பெறுநற்சீர் பத்திரா சனமாமே. 9

ஆதனத்தா லாறி யசையா திருந்திடலால்
வேதனை செய்பிணிகண் மேவா தகன்றிடுமாற்
சாதன மாந்தியானஞ் சமாதிமுதன் முற்றினுக்கு
மாதலினா லாதனமோ குக்கொப்ப ததுதானே. 10

ஆதனம் முற்றிற்று.

ஆகச் செய்யுள் 962.

---

### குறுந்திரட்டு.

தூய்யப்பக் கத்தே குதியிரண்டுஞ் சென்றடையக்
கையிரண்டுந் தன்முழந் தாண்மே லுறநீட்டித்
துய்யவா யங்காந்து துண்டத் துனிமேலே
செய்ய விழிவைக்கச் சிங்கா சனமாமே. 263

பையக் கழலிரண்டின் பக்கம் பதங்களின்
செய்ய தலமிரண்டுஞ் சேரத் திடமாகக்
கைக ளிரண்டாலுங் காலிரண்டை யுங்கட்டிப்
பைய விருப்பது பத்திரா சனமாமே. 264

இடப்பக் கத்தல மிட்டங் கபானன்மே
லடர்த்து வாமத்தை வாமத் தயலதா
மடிதத லத்திட் டடர்த்துடல் செவ்வையா
முடக்கி லாவிரை முத்தா சனமிதே. 265

கரதலங்கள் காசினிமேல் வைத்துக் கவினுறு
பாதுனிக ணாபியின் பக்கத்தே சேர்த்துச்
சிரமிரு காலெடுத்துத் தெண்டம்போல் வானின்.
மருவுரு மாயின் மயூரா சனமாமே. 266

ஆத னம்பயி லற்கறி யாதவற்
கியாதொ ராதனத் தின்பமுந் தீரமுஞ்
சாத மாமது தன்னைப் பயிலுத
லேத மற்ற சுகாதன மென்பதே. 267

# 4. ஆதாரநாடி.

## (ஆதாரம்).

### தத்துவசித்தி.

நீங்கியே டணாதி யெல்லா நிமிர்ந்துட னெடும்ப ராக்கி
னோங்கிய புலன்கண் மீள வுணர்வினை யுள்ளே நோக்கி
‡ வாங்கிய மாரு தத்தை நாசியுச் சியின்க ணேற்றி
தூங்கொளி ஞானக் கண்ணா லடைவினா தாரம் பார்த்தான். 1

‡ வாங்கிமா ருதத்தை நாசி யுச்சிமேன் மலர்க்க ணேற்றி என்றும் பாடமுண்டு.

நாலரை விரலி னோங்கி நயந்துமூ வலையஞ் செய்யக்
கோலமாய் வெளியுட் கொண்ட குறியது குய்யா தார
மேலின்மூ விரல்வா னெட்டாம் விரலிரண் டரைக்க ணத்தைக்
கோலியே செய்ய வங்கி மண்டலந்திரி கோண மீதால். 2

அரைவிர லதற்கு மேலாம் வாரணத் தண்டா காரத்
தொருவிரல் வெண்மைத் தாகி யுயற்றிநா லரைவி ரற்றாய்ப்
புரையற வொளியி னாலே பூரணித் துள்ளே சிவன்
முரிவறச் சுழல நாளு நின்றது மூலா தாரம். 3

மண்டல மாக வித்தின் வயிற்றிலே யிரண்டு சுற்றிக்
குண்டலி கிடந்த தித்தைக் கோலியே கீழு மேலு
மெண்டிக மெழுபத் தீரா யிரமெனு நாடி யெல்லாங்
கண்டன மனைத்து முள்ளே கலந்துகாற் றியங்கு கின்ற. 4

---

### தூறுந்திரட்டு.

நீள்பவ னத்தைச் சேர நினைவோர் நெஞ் சத்திற்
கோளற நாடி சக்கர மறியக் கூறுங்கா
லாளுட னெண்ணூற் றறுவிர லாகு மதனாப்பண்
மூவொளி குய்யத் திருவிரன் மேலா முக்கோணம். 268

உரைப்பர் மூலா தாரமுந்திக் கொன்பது விரற்கு மேனால்
விரற்றனை நீண்ட கன்று வெண்மையாய்க் கோழி முட்டை
தனக்கு நேராத் துவக்கா திகடமைச் சூழுங் கந்த
மெனப்படு மதனி னாப்ப ணியம்புவர் நாடி யென்றே. 269

சுழுனை யென்னும் பெயர் நாடி சொன்ன சந்த நடுச்சூழ
வெழுபத் தீரா யிரநாடி யிவற்றி லேற்ற மீரேழு
மொழிவ ரவற்றின் முக்கியங்கண் மூன்று மூன்றி லொன்றதனை
வழுவில் யோகத் தலர்பிரம நாடியென்று மதிப்பர்களால். 270

எழுந்துநேர் மூலத் துச்சி யெய்தலு மிதயா தார
முழங்கிய முளரிச் செவ்வி மொட்டெனப் புடைப்பட் டாங்கே
கொழுந்தென வெழுந்து மீது குறுகலுங் கபாலா தாரந்
தழைந்தவா னதன்மே னாதா தாரமாய்ச் சாலு யர்ந்து. 5

அரணமா யாதா ரங்க ளகத்துளா னந்தச் சோதி
பரிணமித் துயர்ந்த பண்பா னின்றது சுழுனை பார்க்கின்
முரணிலாப் பிரம நாடி வைணவி முத்தி மார்க்கஞ்
சரணமாஞ் சூக்க மென்று சாற்றுவ ரிதனைச் சான்றோர். 6

### யோகசிகாமணி.

உணர்த்திய வாதா ரங்கட் குரைப்பர்பேர் மூலா தாரம்
வணக்கருஞ் சுவாதிட் டானம் வருமணி பூர கந்தா
னிணைப்பரும் விசுத்தி மீதங் கிலங்கனா கதமோ டாஞ்ஞை
தணப்பில்லேவ தாக மங்க டாமிக வுணர்ந்த நல்லோர். 7

---

### குறுந்திரட்டு.

ஈரெழு நாடி சுழுனைபிங் கலையோ டிடையலம் புடையத்தி சிங்வை
வாருணை பூடை யசுவினி புகழி வாணிவிச் வோதரை குகுகாந்
தாரிசங் கினியென் பனவதின் மூன்று தகுமிடை பிங்கலை சுழுனை
சூரிக ளந்த மூன்றின்முக் கியமாய்ச் சொல்லுமொன் றுவது சுழுனை. 271

வித்தக மாக வீணா தண்டுடன் சுழுனை கூடி
மத்தகத் தளவு நிற்கு மன்னுங்குண் டலிநா பிக்கீ
ழத்தவங் குலமிரண்டி னதனையா வரித்தெப் பாலு
முத்திசொல் பிரம ரந்த முகத்தைத்தன் முகத்தான் மூடும். 272

வணந்திகழ் சுழுனைக் கிடத்திலே யிடையும் வலத்துப்பிங் கலைநின்ற திடைதான், மணந்திகழ் நாசி வலமுடி வாகு மற்றைய திடமுடி வாகுங, குணந்திக ழிதற்கு முன்பினா லிரண்டிற் குகுவிலிங் காந்தமாம் வாணி, புணர்ந்திடு நாவி னெல்லைகாந் தாரி யத்திசிங் குவைநிலை புகல்வாம். 273

இடைப்பின்முன் னாகு மிவற்றிற்காந் தாரி யிடக்கணீ றுறுமத்தி சிங்வை,யிடப்பாதாங்குட்டத் தளவுறும் பூடை யசுவினி பிங்கலை பின்முன், னிடத்தயற் கண்ணி னளவுறும் பூவார்ந் தியங்குபா தாங்குட்ட மனாவா,நடுப்படக் குகுக்கு மத்திசிங் குவைக்கு நவில்வர்விச வோதரை நாடி. 274

வசிக்கவுறு நாடியி னவற்றினிடை யேயா
யசுவினி குகுக்களிடை வாருணைய தெங்கு
மிசைக்கவுறு பூடையெழில் வாணியி னிடைப்ப
யசுவினி வலச்செவியி னெல்லையது பற்றும். 275

அங்கியோ டருக்கன் சோம னுகுமண் டலங்கண் மூன்று
வங்குறை செய்வர் மூலம் விசுத்தியோ டாஞ்ஞை தன்னை
யிங்குய ராஞ்ஞை மேவிற் குண்டலி சிவம தென்பர்
பங்கமி லங்கி † தன்னிற் குண்டலி பவானி யன்றே. 8

† கீழிற் என்றும் பாடமுண்டு.

பாங்கன லமுத மென்னப் பரன்பரா சத்தி யென்ன
வீங்கிய குண்ட லிக்க ணெழுந்துறப் புணர்ந்த வின்ப
மாங்கதே பரமா னந்த வனுபவஞ் சிவன் முத்தி
யீங்கிது நாடி தூய்தா யியற்றுயோ கத்தா லெய்தும். 9

## துறுந்திரட்டு.

வாணிகாந் தாரி நடுவுசங் கினியாம் வலத்தயற் செவியள வதுதா
ளுணியாங் கந்த பாயுரு வீறு மலம்படை யாமிறை யாகத்
தாணுவா மூன்றிற் கரனரி யயன்காந் தாரிசங் கினிபய சுவினி
வாணி பூடாவிச் வோதரைக் காத பன்மதி பிரசாபதி விராட்டிசைதீ.

இடையினி லியங்கு மதியம்பிங் கலையி லிரவிதா னியங்கிடும் பிராண
னிடமுற விடையிற் பிங்கலை நின்று மியங்கும்போ துத்தர வயனந்
திடமுற விடையின் பிங்கலை யதனிற் செல்வது தென்றிசை யயன
மடைவர விரண்டின் சந்தியிற் பிராண னதுவமர் வாசியென் றறைவாம்.

யாதொரு பொழுது மூலா தாரத்திற் பிராண னெய்திற்
றுதியாம் விழுவ தஃதா மந்தமாம் விழுவ தந்த
வாதமுத் திதியி லுற்றான் மாதசங் கிரக மாமிப்
பீதமிச் சுவாசோ சுவாச முறுகையென் றுரைக்க லுற்றார். 278

பிராணன திடைபிங் கலைகளி னின்று
மராவென விவரா குண்டலி யடையின்
பராமதி யும்பக லோனு மொளிக்குங்
கிராணம தென்பர்கள் கேள்வியின் மிக்கோர். 279

தலையது சீபர் வதமிலா டங்கே தாரவா ரணசியே யாகுஞ், சிலைநிகர் புரும்பிராணன்மத் தியத்தைத் திகழ்தரு பூமியென் றுரைப்பர், மூலை நிலை யிதய முளரியே பிரயாகை மொழிந்ததே சங்களின் முன்னஞ், சொல வுறு காலங் களில்வழு வாமற் றேய்வுறிற் சுத்தனு மவன்றான். 280

(நாடி).

### மெய்ம்மொழி.

நாடிக ளனைத்தி னிற்கு நலந்திக ழூந்தி யாதிப்
பீடிடை யிடையி னோடு பிங்கலை யிடம்வ லம்போய்
மூடியக் கபால முற்றே முன்புபோ லிரண்டு மாறிக்
கூடிடுந் தத்த நாசி யென்றுகொள் குழுமி யன்றே. 10

ஆற்றிடுங் கபாலந் தன்னைச் சுழுனைகாந் தாரி தாழும்
பற்றிடும் வலக்கண் சென்று பரிந்துபோ † யிடக்க ணவை
யுற்றிடும் வலக்கன் னத்தை யோங்கலம் புடைதான் பின்பு
மற்றிடக் கன்னஞ் சென்று மன்னிடும் பூடா வன்றே. 11

† யிடக்கண் சிங்வை என்றும் பாடமுண்டு.

‡ குருப்புக ழிபோடி ரண்டுங் குதத்தினு மிலிங்கத் தான
வகத்தினு மிருக்கு மென்றே யறிந்துகொ ளவைதாம் பின்பு
முகத்தின்மேன் † மூக்கி லிந்த முதுகுதண் டிடையே நிற்குஞ்
சகத்தினச் சுவினி யென்றே சாற்றிடும் பத்து நாடி. 12

‡குகுதிசங்கினி யிரண்டுங்என்றும்†மூர்த்தினி யந்தஎன்றும் பாடமுண்டு.

### தத்துவசித்தி.

பார்த்தவிந் நாடி சாலப் பரப்பினுட் பண்பு யர்ந்து
சீர்த்தன பதினான் கென்று செப்பினன் றெய்வ ஞானி
போர்த்திவை யனைத்தி னிற்கும் பெயர்நிறஞ் செயல்பிரித்துச்
சாற்றுதுஞ் சமய நோக்கித் தனித்தனி சங்கை நீங்க. 13

மூலத்தி னிரண்டு பாலுங் குண்டலி முதலா நாசி
யேலச்சென் றிரவி வண்ணத் திடையும்பிங் கலையு மென்றுங்
காலத்தை யியக்கிக் காலாற் கடிமணங் கவரா நின்ற
சீலத்த விரண்டின் மண்ணின் செயலெனச் செப்ப லாமே. 14

இவ்வகை யிவற்றின் பின்போ யேய்ந்துகண் ணுருவங் கோலுஞ்
செவ்விகாந் தாரி யத்தி சிங்வைதீ மயங்கள் செய்ப
வீவ்விரண் டயல்போய்க் கன்னத் துழையலம் புடைக ளோசை
யவ்வவ பாலின் வண்ண மானவான் மயங்க ளாமே. 15

இடைக்கும்பிங் கலைக்கு முள்ளே யெழுந்துசுக் கிலையும் வாணி
கிடைத்தன நுதலை நாவைக் கிளர்த்திய வடைவே † யொன்று
விடற்கரு மிராகஞ் செய்ய மிக்கது சுவைசொற் செய்ய
வடுத்தன விரண்டும் பொன்மை யனிலகா ரியங்க ளாமால். 16

† போன்று என்றும் பாடமுண்டு.

எழுந்துமே லவற்றின் முன்ன ரின்னரே யெய்தி நாளை
யிழந்தன நசையின் விசுவோ தரையசு வினிக ளென்றும்
விழுங்குவ வன்ன நீர்கள் வினவின்வே றுகி நீலம்
வழங்கிய வப்பு வின்றன் மபமிவை யிரண்டு மாமால். 17

மேற்கள மேவி நின்று விரைந்துகீழ் முகமா யன்ன
நீர்க்கமை யிரத மெல்லா நேரெழ வாங்கி வாங்கித்
தூக்கறக் கபாலத் துள்ளே துகளிலா வமிர்தம் வைத்துத்
தாக்கரி தாகிப் பொன்போற் றயங்குசங் கினிய தாமால். 18

கோண்டடி விசுவோ தரைக்கீழ்க் குகுவது குய்ய முற்று
மண்டிய மலங்க ழிக்கும் வாயுவாம் வண்ணஞ் செய்தாற்
கண்டவிங் கிதுவி லிங்கங் கலந்துசுக் கிலையைப் பற்றி
மண்டுதா துவைவி யக்கு மதிசிறப் புகழி யாமாள். 19

சாதன மிதனை யுற்றுத் தவளவா றுணையூன் வாரிப்
பாதனம் பண்ணு நின்று பயத்துளி யடியைப் பற்றி
நீதியிற் குகுமுன் மூன்றை நீங்குத னொருங்க லென்னுந்
தீதறப் பிணித்த கார்கூர் சிவனி யென்ப தீதால். 20

இயங்கிய விவற்றை யெல்லா மிடையினே ரனேக வன்ன
மியங்கினிப் பிணித்த வீதே யியம்பிய நாபி வட்டம்
வயங்குளக் குய்யம் பற்றி மருவிமேற் கபால வான
மியைத்திவை யனைத்தின் பின்போ யெய்ந்தது வீணை தண்டு. 21

ஆதாரநாடி முற்றிற்று.
ஆகச்செய்யுள் 983.

---

## நாடிசுத்தி.

சாதன முற்று முற்றொரு தனத்திற் றலைகழுத் துடல்செவ்வே யிருத்
திச், சோதிசங் கிரமம் பத்துற மழுதத் துளியைத்தன் றுண்டத்து நுனி
முன், பாதலை விழியாற் பார்த்திடை யாலே பிராணனை யாகரு டித்தல்
வாதமிட் டுதர நிறைத்துப்பின் புடல மத்தியத் தழலினை மதித்து. 281

அங்கியின் மூலம் விந்துநா தங்கள் கூடிய தாகவே நினைவான்
பிங்கலை யாலே யனந்தர மொழுகப் பிராணவா யுவினைவிட் டிடுவா
னங்கத னாலே பின்னையும் பூரித் தந்தவா யுவினையப் படியே
வெங்கனன் மூல நினைந்திடை யாலே மெத்தென மெத்தென விடுவான்.

செய்யிலிப் படியே நாடிசுத் தியதாஞ் செனனமூண் டெரிமிகுஞ் சுடவே
நொய்யதா முடல நாதமுந் தோன்று நோக்கியிக் குறிகடோன் றளவுஞ்
செய்ய சித்திக்குக் காரண மாகச் செய்கவிப் படிகளை நாடி
துய்யவா றெல்விட் டிதனையாத் மாவைச் சுத்திபண் ணிடும்வகை துணிவான்.

## 5. நாடிசுத்தி.

### மெய்ம்மொழி.

ஊற்றமா முண்டி யின்றி யுசிதமாய்ப் பத்ம மத்திற்
சீற்றமற் றிருந்து கொண்டே சித்தமு மொருவ ழித்தாய்க்
கூற்றமாம் பாசந் தீர்த்த குருபரன் றாள்க ளுன்னி
† யேற்றுமத் தாலுந் தன்னி னக்கிர மிதனைக் கொள்க. 1

† யேற்றுக தாலுத் தன்னி னக்கிர மிதனை நாக்குள் என்றும் பாடமுண்டு.

சுந்தர வகாரம் விந்துச் சுவாலைக ளோடுங் கூடச்
சந்திர வின்பத் துள்ளே தன்வாம நாசி முன்பா
வந்தர மதிலே பாவித் தத்தையவ் வாயு வாலே
மந்தம தாக வாங்கி வைத்திடு நாபிக் குள்ளே. 2

கும்பித்த சுவாலை யெல்லாங் கொழுவியே நாடி தோறுந்
தம்பித்த மலம்பு றம்பே தள்ளும்பா வகத்தி னாலே
வம்பித்த பின்பு மாறி வலதிசை யாற்பு றத்தே
வெம்பிடா தெழுப்பி மெள்ள விடுவரே சகத்தி னாலே. 3

வன்னிமண் டலமும் வன்னி பீசமும் வலத்து நாசி
தன்னினக் கிரத்தின் முன்னே தன்னுடைச் சுவாலை யோடு
முன்னிய ருசி யாலே யுட்புக வாங்கி மெள்ள
முன்னியல் போல நாபி தன்னிலே மூள வைக்க. 4

மூண்டெழு சுவாலை யெல்லா முன்புபோ னாடி தோறுந்
தூண்டிய மலங்க டம்மைச் சுவாலையாற் புறத்தே நூக்கி
யீண்டுமிவ் விரேபந் தன்னை யிரேசித்து வாமத் தாலே
மீண்டுமீண் டிற்றி ருந்து விரும்பியே செய்க விங்ஙன். 5

இப்படி யிருந்து நாளு மேகசித் தத்த னாகித்
தப்பற நாலா மூன்றுஞ் சந்திபுக் கிருந்து செய்யச்
செப்புநா ளீரே ழாதந் திங்களொன் றிரண்டி னாத
லப்படி நாடி சுத்தி யாகுமென் றறிந்து கொண்ணீ. 6

சுத்தமா னதன்பி னாடி தோன்றிடுங் குறிகள் சொல்லின்
மத்தமாஞ் சரீர முன்பு மந்தமற் றறநொய் தாகு
முத்தமச் செயல்க டம்மே லூற்சாக முளதா வாங்கி
யித்தன்மை † யோடு நாத மெழும்பின்செய் பிராணா யாமம். 7

† யொடுமெழுந்த பின்செயப் பிராணா யாமம் என்றும் பாடமுண்டு.

நாடிசுத்தி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 990.

## 6. பிராணயாமம்.

### நித்தியானந்தசரிதை.

ஓங்குநற் பிராணா யாம முழுந்துகை வந்தாற் கல்லாற்
றூங்கரும் புலன்க ளைந்துந் தம்வச மாகா வத்தாற்
பாங்குறுஞ் சித்தி முத்தி பலித்திடா வதனா லந்தத்
தீங்கறு பிராணா யாமத் திறமது மறைகு வன்கேள். 1

நாடிக ளனைத்தும் பார்த்து நலங்கிளர் நாபிக் கீழிற்
பாடியி னுதியா நின்ற பதினாறு கலையி னோடுங்
கூடிய பிராணன் றன்னைக் கோதண்டத் துறவே நோக்கி
வீடிலி யிரேச பூர கும்பகம் விதியே செய்க. 2

பதினாறு கலையி னுள்ளும் பரிதியின் கலையோ ராறு
மதியினின் கலையோ ராறும் வன்னியின் கலையோர் நான்கு
மிதினல கலையோர் நான்கு மிருமுத லினுமீ ராக
மதிகலை குறிய வெய்யோன் வளர்கலை நெடிய வாகும். 3

---

### கூறுந்திரட்டு.

பிராணா யாம மென்பதுதான் பிராணன் வசமாக் குதலதுதா
னிரேசா காதி மூன்றவைதா மெழுத்து மூன்றி னுருவாகும்
பராவு மிவையோங் காரமெனப் படுமற் றதனாற் பகர்வுற்ற
பிராணா யாம மோங்கார மயமென் றறிஞர் பேசுவரால். 284

வள்ளிய காலிடையா லெண்ணிரு மாத்திரையுள் வாங்கி யிவற்றை நிறைத் தாங்கக ரத்தைநினைந், துள்ளி யுகாரமத னாலு மடங்குதரித் தோமெனு மந்திரமங் காமள வும்பகர்க,மெள்ள மகாரமுனா மெள்ளு மிரட்டியினால் விடுவது பிங்கலையான் மீண்டுமே நாடியினான், மெள்ள நிறுத்தமுதற் பரிசிடை யால்விடமுன் னினைவுற் றதிலோங்கா ரத்தைமொழிந்துகொடே.

தாரக மோகையதாச் சத்திசெய் தாரணையிற் சமைவுறு நாற்பதுகை யருமள விப்பரிசே, பூரக விரேசககும் பகமெனா முப்பரிசெப் பொழுதுமே முற்பவனா யாம மெனப்புகல்வர், சீரிய தாரகம்வியா கிருதி யுடன்காயத் திரியுரு மூன்றுசெபஞ் செய்வது தொழில்யாம, மூன்றது முப்பொழுதுந் துறந்தவர் மூப்பரிசே செய்ய வெனச்சுருதி செப்பிடு முத்தமமாய். 286

மறையவர்யா மம்போல மன்னர்க்கும் வணிகர்க்குந்
துறவினர்க்கு மப்பரிசே சூத்திரருந் தோகையருங்
குறைவில்பிரா ணயாமம் பண்ணுங்காற் கூறுவதிங்
கிறைசிவமந் திரமாத லெழிலரிமந் திரமாதல். 287

### மெய்ம்மொழி.

ஏற்றுக வாமத் தாலே பூரக மதற்கி ரட்டி
மாற்றுக வலத்தி னாலே யிரேசக மாகுஞ் சித்தத்
தாற்றியே யதற்கி ரட்டி யடக்குதல் கும்ப மாகும்
போற்றிய விவற்றி னுக்கு மாத்திரை புகல லுற்றும். 4

பத்தொடா றுமாத் திரை பகர்ந்தபூர கத்ததா
மித்தின்மே லிரட்டியா மிரேசகத்தின் மாத்திரை
யொத்தவி விவற்றினே டுலப்பினான்கு மாத்திரை
மெய்த்தக வடக்கினால் விளங்குகும் பகத்ததாம். 5

இந்தமாத் திரைதனக் களவினை யியம்பிடிற்
சிந்தனை துடிப்பதாந் துடியொர்நான்கு சென்றதேன்
முந்தையோர் நொடியதா நொடியோர்மாத் திரையதா
மந்தமாத் திரையதுவு மூன்றுவாயு வொன்றதாம். 6

வாயுவோ ரறுபது பிராணனாய் வளர்ந்திடுந்
தூயவப் பிராணனாறு கொண்டதோர் கடிகையாந்
தூயவக் கடிகையோ ரறுபது தொகுத்திரே
லேயுநாள தொன்றதாகு நாளின்வாயு வெண்ணுவாம். 7

### நித்தியானந்தசரிதை.

மொழிந்தநா ளொன்றின் மேவே மாயிரத் தறுநூ றாகும்
பொழிந்திடு முடலி லத்திற் புறம்பிரு நாசி யாலு
மிழிந்தநல் வாயு வேழா யிரத்திரு நூற தாகு
மொழிந்தநல் வாயு முன்னை யிடத்தினி லொடுங்கு மாலோ. 8

---

### குறுந்திரட்டு.

காயம் வேர்க்கை யதமமாங் கம்பனம்
வாயு தாரணத் தின்பயன் மத்திம
மோயு மாறிலுத் தானம துத்தம
மேயு மாறிப் பரிச தியற்றுவான். 288

காற்று மந்திரங் கூடல் சகற்பமா
மாற்றல் சேரது வில்ல தகற்பமாங்
காற்றை யிப்படி கைவரப் பண்ணினாற்
றேற்றமாய்ச் சித்த சாந்திசித் திக்குமால். 289

மெய்ம்மொழி.

பந்தநற் பிராணன் றன்னைப் பார்த்துநா சிக்கு முன்னே
சிந்தைசெய் ததனை வாங்கிச் சேர்த்துர நாபி பாத
மந்தம தாக வைத்தே யவ்வகை யூடு வாங்கி
வுந்தவம் மார்க்க மன்றி வலத்திறன் மெல்ல மாற. 9

இனமன்று பிராண னாதி யியக்குமாங் கமாக மத்தை
மனமன மெங்கே செல்லும் வாயுவு மங்கே யாகுங்
கனமன்று நெடுஞ்சு வாசங் கடுப்பிலே சென்று தூரத்
தனமன்னுந் தீபந் தன்னை யவித்தபின் செயித்தா யன்றே. 10

ஏய்ந்தநல் விருத யத்தே யிருந்திமுன் பிராணன் றன்னை
வாய்ந்தவிவ் வாயு வான வனைத்தையு மடைவாற் கூட்டி
வாய்ந்திடுங் கண்டந் தாலு மன்னிய வானுநை மூர்த்னி
பாய்ந்திவை யூடெழுப்பிப் பையவே மூர்த்தி னிக்கே. 11

மூர்த்தினி யதனின் வைத்து மியங்கிய வாயு தன்னை
யூர்த்துவ நாளத் தாலே யோங்கிட வெழுப்பி மெள்ளப்
பேர்த்தது வாங்கிக் கொண்டு பிராணனி னிடத்தே கூட்டிச்
சேர்த்திங்ஙன் வரவு போக்குச் செய்திடச் செயமா மன்றே. 12

உரவிய பிராணா யாம முற்றிருந் திங்ஙன் செய்தாற்
பாருடைக் காயம் வேண்டிற் பற்றலு மாகுஞ் சென்று
விரவிய தன்கா யத்தே யிருக்கலாம் வேண்டுங் கால
நிரவிய நின்ம னத்தே நினைத்தபின் விடலு மாகும். 13

பிராணனாற் பிறப்பி றப்பும் பிராணனாற் பெலம்வா னாளும்
பிராணனாற் புலன்பு சித்தல் பிராணனாற் கமாக மங்கள்
பிராணன்வா கனமாஞ் சேட்டை பிராணன்விட் டின்மை யாலே
பிராணனைத் மகம்பி ராணி பிராணன்விட் டாய்வ தென்னே. 14

எண்ணிலாச் சித்தர் வானோ ரிருடிகள் யோகத் துள்ளோர்
திண்ணிய கால வஞ்சந் திரிகால ஞான † மானுநை
யெண்ணிய சித்தி முத்தி யெய்தின ரவர்கண் முன்னே
திண்ணிய பிராணன் றன்னைச் செயித்தவ ரென்று கொண்ணீ. 15

† முத்தர் என்றும் பாடமுண்டு.

பிராணாயாமம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1005.

24407

# 7. ஆயுட்பரிட்சை.

## நித்தியானந்தசரிதை.

சாற்றிய யோக சித்தி தான்வரு மளவுஞ் செல்ல
வாற்றவங் காயும் வேண்டு மாதலா லதனை யிங்ங
னேற்றிய வகையே சோதித் தாயுவி னெல்லை கண்டு
போற்றுக யோக மென்றே புகன்றன மறைக ளென்றே. 1

மிக்கநல் யோகந் தன்னைச் செய்யுமா விரும்பி னீரேற்
றக்கவிவ் வுடலி னின்றுஞ் சாலிநீர் வழங்கி னாற்போ
னாக்கவப் பிராணன் றானு மினியுள்ள பிராணன் றானுஞ்
சக்கரத் தறிய வேண்டுஞ் சக்கரத் தன்மை கேண்மோ. 2

ஓங்குநல் லயனந் தன்னாண் மலாதிக ளொழித்துப் பின்னை
யாங்குநீர் தன்னை யாடி யடிசிலு மொருபோ தார்ந்து
தீங்கதாங் காம நீக்கிச் சிவனிரு தாளுஞ் சென்னி
தாங்கிய மனத்த னாகித் தாமரைத் தலத்திற் சார்க. 3

அன்றது வடதிசை யயன மாயிடி
னொன்றிய விடமலால் வலத்து நின்றெழூந்
தென்றிசை யயனமேற் றிகழ்செய் வாயுவு
நின்றதோர் வலமலா விடத்து நின்றெழும். 4

வாட்டமின் மண்டலம் வட்ட மைந்தினுட்
கூட்டிய பன்னிரு தாரை சூழ்தரக்
காட்டிய கடிகைநா டிங்க ளாண்டிவை
நாட்டிய வரையவை நாற்பத் தொன்பதால். 5

நாழிகை நாளொடு திங்க ளாண்டிவை
யாழியி னிடையிடை யிட்டு மாற்றினால்
வாழிய நாள்களும் வஞ்சக் கூற்றுவன்
சூழிய நாள்களுஞ் சொல்ல லாகுமால். 6

ஐந்து முதற்பத்துப் பதினைந்தோ டாறைந்தாய்
வந்த கடிகையின்கீழ் மன்னியிடு மாண்டுக
ளைந்துக்கு நூறென்ப தறுபதோ டாங்கிரண்டு
பின்புற்ற வைம்பதன்† பின் பேசினாலெட்டொன்றும். 7

† பின் னாலெட்டென் றறைகுவாம் என்றும் பாடமுண்டு.

இருபத்தெட் டிருபத்தைந் தீராறுண் டிவையெல்லாங்
கருதிய கடிகைக்குக் கணக்காக் கழிந்த தற்பின்
பெருகுநா ளொன்றிரண்டு மூன்றுநா லென்னும்போர்க்
கொருபதோ டெட்டாறோ டொருநாலாண் டொட்டிடுக. 8

நாளைந்து பத்துப் பதினைந்து நாட்டியதற்
காளந்தரு மூவாண் டிரண்டோடொன் றுகுமான்
மீளநா ணாலைந்தோ டையைந்து மாய்வினையிற்
சூழ்திங்க ளாறதன்பி னொன்றிடுமுத் திங்களே. 9

இருபத்தா றுதியா வெண்ணான்கு நாளீறு
வருதரு நாள்களுக்கு மதியிரண்டோ டொன்றுகு
மொருபத்தெட் டொருநான்கு மூன்றதற்பி னிரண்டாகு
மருகுநா ளதுவறிவா ரளப்பிலா யோகிகளே. 10

உண்ணாடி வட்டந் தன்னி னோங்குமுப் பத்து மூன்றில்
விண்ணாடு நாளன் றுறும் விளங்கிட வறிந்து கொள்க
பண்ணாடு மொழியி னாய்கேள் பகரொணா வாயுக் காணுங்
கண்ணாடி யனைய கால சக்கரக் கணக்கி தாலோ. 11

### சமயாசாரம்.

ஆண்டாறு திங்கண் மூன்றுநாள் பத்தே ழுஞ்சாமூன் றுன
வை யடைவே, நீண்டகா லுள்ளங் கைசெவி நெற்றி நிரைத்திவை
துடிப்பில வாகுங், காண்டிடார் புருவஞ் செவிமுழக் கம்பின் கண்
ணின்வட் டத்தொளி கரக்கு, மீண்டுநா விரத மாறுநா ழிகையே
லிறைமறு வெழுமதன் குறியே. 12

---

### குறுந்திரட்டு.

உத்தர வயன காலத்து வலத்தே யுயிர்ப்பதஞ் சாறேழெட் டொன்
பான், பத்துநா ழிகையே லாண்டுநூ றென்ப வறுபதோ டிரண்டொரைம்
பதுவு, முத்துமூன் றிருபத் தெட்டதாம் பகலிற் பாதியோர் பகலிராப்
பகலே, லத்தமோ ரிருபத் தைந்துபன் னிரண்டை யிரண்டென வறைந்
திடு வர்களால். 290

நாளி ரண்டுமுத லைந்துபத் தேழூன் றிருபதை யைந்துநா ளுறின்வா
ளுளுவ ரெட்டாறு நான்குமூன் றிரண்டொ ராண்டாறு திங்கண்முத் திங்க
ளிரு பத்தா றதுமுதன் முப்பத் துமூன் றா விளுளிரண் டொன்று
ளுமா தந்தான் றுணைறை தினத்தேழ் மூன்றிரண் டொன்றினில் மரிப்பர்.

ஞானசாரம்.

நிறைமதி யருக்கன் றன்னை வட்டமை நீரி னோக்கக்
குறைவது தென்பா லாகிற் குறித்திடுந் திங்க ளாறு
முறைமையான் மேல்பா லாயின் மொழிந்தநாண் மூன்று திங்க
ளறைகுவர் வடபா லாகி னுயிரு திங்க ளென்றே. 13

ஒன்றிய திசைக ளான்கி னுரைத்தவிம் மூன்று நீக்கி
நின்றவக் கீழ்பா கத்தை நெறிப்பட நினைந்து நோக்கக்
குன்றவே தோன்று மாயிற் குறித்திடு மாத மொன்று
மன்றியுட் குழியு மாயி னைந்தநாள் பதினைந் தாமே. 14

அங்கையின் விரற்க ணோக்க வக்கிரங் குறைந்து தோன்றிற்
பங்கமாம் பத்து நாளிற் புருவத்தைப் பார்க்குங் காலை
யங்கவை தோன்று வாகி னறைந்தநா ளொன்ப தாகு
மிங்குநா ளேழ தாகுஞ் செவிபுதைத் தோசை யின்றேல். 15

---

குறுந்திரட்டு.

வலத்தி லன்றி யிடத்துறில் வாயுவோர்
வலக்க ணெய்து மரும்பொருள் கேடுறு
நலத்தி லற்றலுற் றுருயிர் நாசமா
மூலக்கு நாண்மூன் புரைத்த பரிசிதே. 292

நாளைந்து செல்லிற் பகல்விழு வுக்கு நலமதா மாண்டிரா விழுவுக், காளமே லுலக மாண்டொரைம் மூன்றி லாவணிப் பிறப்பிறப் பிரண்டின், மாளமார் கழியா திக்கிரண் டொன்பான் வருடத்தின் மற்றவை யுதிக்கு, நாள்களுக் கெல்லா மாண்டுமூன் றுகு நானிலத் திருந்திடு நாளே.

செப்புவட் டகைநெய் யிருசுடர் நோக்கச் சேணிடை யுவாவினில் வெண்மை, துப்புறு பொன்மை கறுப்பது வடிவாய்த் தோன்றில்வா னுள் பிணி சோகஞ், செப்புவா மரணந் தென்றிசை முதலாக் குறைவுறிற் றிங்க ளா றொருமூன், றப்படி யிரண்டொன் றுயுவுட் குழியி லமைந்தநாட் பதி னைந்தென் றறைவார். 294

இருபதங் கைசெவி நெற்றியிற் றுடிப்ப தில்லையே லொன்றரைக் காலாண், டொருபது நாளாந் தன்கையின் விரலி னூசியும் புருவமும புதைத்தா, லிருசெவி யொலியுங் குவளைக்கண் ணொளியு மெழிற்குமிழ் நுனியுங்கை யெண்ணுந், தெரிவறிற் றின்பத் தொன்பதே ழைந்து மூன் றொன்றிற் சீவன்போய் விடுமே. 295

உற்ற தன்னிழ லோக்க வொளிக்கினுங்
துற்ற நாச்சுவை தோன்று தொழியினு
மற்ற நாளிவ னுமறிந திப்படி
குற்ற மற்றயோ சங்கள் குயிற்றுவான் 296

கண்ணினிற் குவளை தன்னி னொளிதனைக் காணுமெயி
னெண்ணுநா ளைந்தா மூக்கி னணிநுனி குறைந்து தோன்றிற்
றிண்ணிதா மூன்று நாளாஞ் சிறந்தன கரத்தி னிட்ட
வெண்ணது தோன்று தாயி னிறக்குநா ளதுவா மன்றே. 16

தன்னிழற் றன்னை நோக்கத் தனக்கது தோன்று தாயின்
மன்னிய வற்றை நாளே மரிப்பது திடம தாகுஞ்
சொன்னவிவ் வகைய தெல்லாந் துகளற நோக்கிக் கொண்டே
யுன்னரு மியோகஞ் செய்க வுயிர்நிலை யறிந்து தானே. 17

போதாமிர்தம்.

பானிலா வெயிலிற் சாயை பார்த்தகல் வான நோக்க
வான்வருஞ் சாயா ரூபம் வெளுப்பெனின் வாணாள் பொன்மை
தானெனிற் செல்வந் தக்க கறுப்புநோய் மிடியிவைக்கி
ஞனது சிரமற் றேங்கி னறுமதி யதனுட் சாவாம். 18

திருமந்திரம்.

தோணியொன் றுண்டு துறையின் விடுவது
வாணி மதித்துநின் றறைவர்கோ லூன்றுவர்
வாணிகஞ் செய்வர் வழியிடை யாற்றிடை
யாணி கலங்கி னதுவிதி யாமே. 19

ஆயுட்பரிட்சை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1024.

குருந்திரட்டு.

பிரத்தியாகாரம்.

உரத்தினால் விடயந் தோறு முகையுமைம் புலனை மீட்கை
பிரத்தியா கார மென்னப் பேசுவர் பிரமநிட்டர்
தரித்தவே தாதி தம்மிற் றானெனுங் கருத்தை மீட்டுப்
பரத்தையே தானாய்க் காணும் பாண்மையைப் பகர்வ ரன்றே. 297

போத மேயுண்மை யானவத் துவிதமாம் பொருடான்
பேத மாயையென் றறிவது பிரத்தியா காரம்
போத மாமது பூதியிற் பூதபௌ திகமாம்
பேத மியாவையும் விழுங்குதல் பிரத்தியா காரம். 298

# 8. பிரத்தியாகாராதி.

## மெய்ம்மொழி.

சினத்தெழும் பொறிகள் சென்று சேர்ந்துதந் தம்புலன்க
ளனைத்தையும் பற்றிக் கொண்டே யவாவினைப் பண்ணு வண்ண
நினைத்தெழு மவற்றை யெல்லா நிரோதிக்கை யாகு மத்தை
மனத்தினுட் பிரத்தியா கார மென்றுகொண் மதித்து நீயே. 1

## குறுந்திரட்டு.

### தாரணை.

இருக்குநெறி வீடதனை யெய்துநெறி யென்றே
தரிக்குமது வேதியர்க டாரணைய தென்ப
வொருக்கிமன னைப்புற முருதவகை தம்மிற்
பரிக்குமது யோகியர்க டாரணைய தென்பர். 299

வியனையுடல் வெளியினிற் பிராணனிற் காற்றை
வயிற்றெரியி லெரியை வார்புனலிற் புனலை
வயனில நிலநிலனை யுண்மதித் துறத்தரிப்பா
னயர்வல வெனுமந் திரமுச் சரித்தடைவே. 300

கோல முழந்தாள் குதநெஞ்சு கோணும் புருவ நடுவுதலை
ஞால முதலைம் பூதத்தின் கூறாய் நினைந்து நான்முகனை
மாலை வடிவா முருத்திரனை மகேசன் றன்னைச் சதாசிவனைச்
சாலும் பூதக் கூறுகளிற் றரிக்கு மதுதா ரணை யாகும். 301

வாக்கினிற் றீயை மனத்தினின் மதியை வலியினி லரியையிந் திர
னைப், போக்கிலிங் கத்திற் போதனை மூக்கிற் புவியினைச் செவியினிற்
றிசையை, நோக்கில்வெய் யவனை வருணனை நாவி லொண்செய்கா றுவக்
கில்விட் டுவினை, யாக்கைசே ரழகிற் புருடனிற் சச்சி தானந்தப் பிரமத்
தைத் தரிப்பான். 302

ஊனே யுடம்பு நானல்லே னுரைக்குங் கன்மேந் திரியமல்லேன்
ஞானேந் திரியங் களுமல்லே னாலுகரணங் களுமல்லேன்
வானே வாயு பதினாறு மல்லேன மாயை யல்லேனான்
றானே பிரம மெனநெஞ்சிற் றரிக்கு மதுதா ரணையாகும். 303

மனித்தனுமல் லேன்றெரியில் வானவனு மல்லேன்
சனித்தழி வுறுஞ்சகல பூதமுமல் லேனு
னுனித்தமறை யான்மன்னி நோக்கரிய நோக்காற்
றனிப்பர மெனத்தெரித றாரணைய தாகும். 304

ஆதாரஞ் சுவாதிட் டானமனவிட மணிபூ ரம்பின்
மீதாரு மநாக தந்தான் வெய்யவ னிடம்வி சுத்தி
சாதார வணமா மாஞ்ஞை சந்திர மண்டலத்து
மேதாவு மிவற்றுட் சித்த மிருத்தரு ரணையா மன்றே. 2

இலயமற் றிவற்றைக் கும்பித் திலங்குமுக் கோணத் துள்ளே
வலையமுற் றுறங்குஞ் சத்தி மயக்கற வெழுப்பி மேன்மேற்
கலைகளிற் சுவாலை † நின்ற கட்டவிழ்த் தமிழ்தே யுண்ணச்
சிலையமைப் புறச்சித் தந்தா னுக்குத றியான மாமே. 3

† யாக்கிக் என்றும் பாடமுண்டு.

ஓதிய தியானந் தன்னா லுற்றநற் பயனா யுள்ள
வேதமில் சமாதி சொல்லி னெய்திய வமிர்தந் தன்னன்
மீதுறு மின்பந் தானாய் மிகல்குறை வின்றி யுள்ள
நீதியாந் தராசி னொவொத் திருப்பதென் றறிக நீயே. 4

பிரத்தியாகாராதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1028.

---

குறுந்திரட்டு.

தாரணை.

பூத காரிய மானவெவ் வுடம்புமைம் பூதத்தாற் போக்கியைம் பூத, மேது வாகிய மாயையாற் போக்கியுண் டில்லையொன் றதுவேறென், றேது மாறருஞ் சேதன மாயையை யுண்மையா யுலப்பிலா வொன்றும்,போத மாகிய பரம்பொரு டன்னினிற் போக்கியப் பரத்தினைத் தரிப்பான். 305

தியானம்.

பொருளை தாய்நிகழ் விடத்திலப் பொருளுமெய் காண்பது புலத்தியான, மருளுறு மனனஞ் செய்யு மிடத்துமெய் மதிப்பது மனத்தியான, மருளி னுன்மன மிறந்திடத் துளதனை யறிவதாத் துமத்தியானந், தெருளதாகவெவ் விடத்தினுஞ் சிவமெனத் தெளிவது சிவத்தியானம். 306

சமாதி.

அச்சமா முடற்பி ராணனைம் புலன்க ளந்தநாற் கரணமஞ் ஞானத், துச்சமா முடல்கொண் டொழிந்திடுஞ் சீவன் றூலபூ தங்கள்குக் கங்க, ளச்சரா சரமு மீன்றமா மாயை யீசனென் பேதமொன் றின்றிச், சச்சிதா னந்த மாகிய பரனே தானெனச் சமைவது சமாதி. 307

எற்பட விளங்கும் விவேகவன் னியினா லெண்ணுமைம் பூதத்தை யழித்து,நிற்பன நடப்பன யாவுமற் றவற்றை நேர்மையா மவற்றினே ராக்கி, யற்பமாம் பூத மாயையி லழித்து மாயையாத் மாவிலே யழித்துத், தற்பரப் பொருளாந் தன்னிலே யுன்னைத் தானிறைந் திருப்பது சமாதி 308

# 9. ஆதாராதியோகம்.

## யோகானந்தசரிதை.

அணிவாய சமாதியந்த மாயவட் டாங்க யோகத்
தணிவாயவடைவே யாதா ராதியோ கென்னு மெட்டுந்
துணிவாய குரவனாலுந் துகளிலா மறைக ளாலும்
பணிவாக வறிய வேண்டு மவற்றையும் பகரக் கேளாய். 1

இப்படி யறிந்து சேரார்க் கியம்புமூ லத்தை யந்த
வொப்பிலா வெழுத்தை விந்து நாதமோ டுச்ச ரித்தே
யப்பாஞ் சோதி நோக்கி யமைவதா தார யோகந்
துப்பமை யறிவு மாக்குந் தோன்றுமீ தொருவா தோரின். 2

நுண்ணிதா யுயர்ந்த விந்த நோக்கரு மொளியை நோக்கி
வண்ணமோ ரிரண்டா மூல மந்திர மனத்தா லோர்ந்து
பண்ணுமீ தமிர்த யோகம் பயின்றிடி னியமத் தோடு
நண்ணுமோ தாக மோக நணுகுமோ பிணிக ளாமே. 3

சொன்னமந் திரத்தைக் கொண்டு சுக்கில வழியே யேறிப்
பன்னரு மமுதை வாங்கிப் பலாவனம் பண்ணி முன்போ
லின்னிய வொளியே நோக்கு மொருமையா னந்த யோக
மின்னெறி யிந்த யோக மிசைந்துற விருந்து ளோர்க்கே. 4

---

## குறுந்திரட்டு.

### சமாதி.

பொன்னிலே பூணும் புவியிலே கடமும் புணரியே தரங்கமும் போல, வெள்ளிலே தோன்றி யென்னிலே யழியு மெச்சரா சரங்களு மெனக்கு, முன்னிலேன் பின்னு மொன்றிலேன் யானே முடிவிலா முதலென மோனந்,தன்னிலே தன்னுற் றனையுணர் தலும்போய்த் தானிறைந் திருப்பது சமாதி. 309

பொறியுறு மனத்தை வாங்கிட நனவு பொன்றிடுங் கனவுதா னணையி
லிறவுறுஞ் சுழுத்தி யாகுதா னணைதா னிறந்திடுந் தியானத்தி லிருந்தங்
குறியறுஞ் சமாதி யத்திலே யழியுங் கோளுறுந் தியானமாந் துரிய
மறிவற விருந்த வதீதமாஞ் சமாதி யரும்பர முணர்ந்திட வழியும். 310

முன்னை யாமிய மாதிநா லுடன்மன மொழியினுற் செயுமியோக
முன்னுஞ்சிந்தையாற் செயலிரண் டைம்புல னொடுக்கரு னணையாகுந்
தன்னி னுற்செய விரண்டவை தியானமுஞ் சமாதியு மிவையெட்டு
நன்ன ராய்நிகழ் ஞானத்துக் கங்கமாய் நான்மறை முடிவோதும். 311

இன்னெறி யறிந்து நாசி யிருபுடங் கொண்டு காற்றைத்
துன்னிடக் கபாலத் தேற்றிச் சுழுனையா லிழித்து மூல
மன்னிய வொளியி னுள்ளே வாயுவை யறுக்கு மீது
பன்னகயோக மென்று பரிந்தனர் திருந்து நல்லோர். 5

விண்டலத் தனலை வாங்கி மேலெழ முன்போல் வீறை
தண்டினு லிழித்து வன்னிச் சக்கரத் தறுக்கு மீதே
கண்டவச் சிரயோ கந்தான் கலந்துசெய் பிரத்தியா காரங்
கொண்டவர் முன்னை யோகக் குணத்தவர் மரணத் தாகார். 6

ஆர்ந்தவா தார சாலத் தழிவிலாப் பதமெ மூந்து
நேர்ந்திவை யிரண்டு நின்ற விடத்திலே நிறுத்திச் சித்த
மோர்ந்தெழு மோங்கா ரத்தை யுச்சரித் தொளியை நோக்கிச்
சேர்ந்துறத் தியான சீலத் திருப்பது சித்த யோகம். 7

மூலமே தொடங்கி நாத முழங்குமா தார முட்டக்
கோலியே தடவிச் சித்தங் கொண்டிருந் தோறு மேறச்
சீலமா வுச்ச ரித்துத் திகழ்ந்தவோங் காரஞ் சிந்தை
ஞானவா னொளியை நோக்கி யிருப்பது ஞான யோகம். 8

எழுதலும் விரிதல் கூப்ப லென்றுள விகார மின்றி
யழிதலு மசைவு மின்றி யசிந்தமா யகண்ட மாகி
முழுமறை மயமாய் நின்ற மொய்கொள்சோ தியினை யுள்ளே
பழுதறச் சமாதி யோடே பார்ப்பது பரம யோகம். 9

### தத்துவசித்தி.

அரியவா தார மமுதமா னந்த மழகுறும் பன்னவச் சிரமா, முரியஞா னந்தா னெங்குநற் சித்த யோகமே பரமயோ கென்னப், பெரியயோ கங்க ளெட்டிவற் றுள்ளும் பிறழ்வன வனேகமுற் றவைதாந், தெரிவுறுஞ் சித்தர் செயல்கண்மற் றன்றே திகழணி மாதிமற் றெல்லாம். 10

### யோகசித்தி.

எட்டெனுஞ் சித்தி யெட்டதாஞ் செல்வ மியமாதி யோகத் தின்பலமாந், தட்டற மூன்று காலமு முணர்ந்து சகமழி வுறினுமூ னழியார், வட்டயோ கத்தி னுழந்துகை வந்தங் கழகுறு சித்தி பெற்றவரே, சிட்டமாஞ் சிவன் முத்தியை யடைந்து திகழ்சிவ மாகிநின் றவர்தாம். 11

ஆதாராதியோகம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1039.

## 10. அணிமாதியட்டசித்தி.

### மெய்ம்மொழி.

அட்டமா சித்தி யாவ தணுலகு மகிமாப் பிராத்தி
யிட்டமாம் பிராகா மித்துவ மீசத்துவம் வசித்துவ மின்றி
யெட்டொணு தெனவவு மாகுங் காமரூ பத்தோ டெட்டாந்
தட்டிலா வகைய வற்றைத் தனித்தனி யறைய லுற்றும். 1

சொன்னவவ் வனலா தாரத் துருவிவன் றுளைக்கே செல்ல
வன்னியை யெழுப்பிக் காலான் மனம்வைத் தோ ராண்டு நோக்கிற்
பொன்னினி னொளிய தாகிப் புகலுமவ் வணுவ தாய
வன்னதி னணிய ராவ ரணுமாவி னியல்பி தாலோ. 2

மண்டிய வனலை மேருத் துளைவழி வாயுத் தன்றற்
குண்டலி யதனு ளேற்றிக் கொண்டுற வாண்டு நோக்கிற்
றெண்டிரை நுரைகள் போலத் திகழ்ந்துமெத் தெனவு முண்டா
மெண்டிசை யோரு மெத்து மிலகுமா சித்தி யையா. 3

அத்தவவ் வனலை நாபி யிருதயத் தளவுஞ் செல்லக்
கந்தெனத் திரண்ட மேருத் துளைவழிக் கரந்தோ ராண்டி
னந்தரத் தளவு மோங்கி யணுவினுஞ் சிறிய ராயும்
வந்தோர் பெருமை யாகு மகிமாவி னியல்பி தாலோ. 4

இருதய மாதி யாகக் கண்டமே யெல்லை யாகச்
சிரைகளி னோடா வண்ணங் காற்றினை யொடுக்கித் தீயை
வரையினிற் றுளையே செல்ல மாற்றியை யாண்டு நோக்கி
னுரைசெய்முக் காலத் துள்ள துணருமிப் பிராத்தி யீதால். 5

---

### திருந்திரட்டு.

#### அணிமாதியிகழ்ச்சி.

ஒருப்பட் டெளவீ டுணருவ ருணர்வுக் குட்பர வேதஞ்சொல்
கருத்தைக் கருதா தணிமா திகளொண் செல்வங் காமுற்றே
வருத்தத் திருநால் யோகஞ் செய்வார் வாதித்த வீடெய்தக்
கருப்புக் கோல்கொண் டிருப்புச் சுவரைக் கல்லிக் கையிற்றார். 312

செயும்பொழு திடரே யேனுஞ் சிதையிலாழ் திரய மேனுஞ்
பயன்பெரி தேனு மெய்தும் பயன்பெரி தல்ல வேனுங்
கயம்படு வினையின் மாந்தர் கருத்துறு ஞான மார்க்கத்
தியம்பிட ரேது மில்லை யின்பவீ டெனினு மென்றார். 313

திறப்படக் கண்ட மாதி கண்டிகை யளவுஞ் செல்லத்
துறக்கவா றுண்டு மேருத் துளைவழி யனலை நோக்கிற்
புறத்தினின் மண்ணுன் மூடிப் புதைப்பினு மிருக்க லாகும்
பிறப்பினை யறுக்கும் பிராகா மியமிதன் வடிவி தாலோ. 6

கூபத்தி னனலை மேருத் துளைவழி வாயுத் தன்னாற்
றுபித்தே யூாண்டு நோக்கிற் றற்பர மாகித் தீய
பாவத்தை யெவர்க்கு நீக்கிப் பல்லுயி ரனைத்தி னுக்கு
மேகத்த னாகி நிற்கு மீசத்தின் றன்மை யீதால். 7

கோதண்டத் தனலை நாசி குறுகவெட் டாண்டு நோக்கின்
மூதண்டம் படைத்த வந்த முதல்வனு மாக லாகு
மீதண்டத் தவர்க டாமும் வெகுளிசெய் திடுவ ராகின்
மாதண்டஞ் செய்ய லாகும் வசித்துவ வலியீ தாலோ. 8

நாசியினைக் கோதண்ட நடுவே யேற்றிச் சிகையளவு †மாகிலா வண்ண நோக்கி, னீசனுமாய் வானவர்க்கெவ் வடிவுங் கொள்ளு மிதுகாம ரூபத்தி னியல்பு தானும், பேசியவம் முறைமையினிற் பிழையா வண்ணம் பெரியகருத் தொடுமுயலிற் பேற தாகு, மாசறுற் பிணிநரக மதுவந் தெய்து மட்டமா சித்திகளென் றறிக வையா. 9

† மெட்டாண்டு நோக்கி னந்த, வீசனுமாய் என்றும் பாடமுண்டு.

அணிமாதி யட்டமாசித்தி முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1048.

## 11. அட்டவைசுவரியம்.

மேற்றிகழ் செல்வ மெண்ணின் மேவுவான் கமனந் தூரந்
தோற்றரு கமனந் தூரக் காட்சிதூ ரத்திற் கேள்வி
யேற்றிய பதும சித்தி யெழுபா தாள சித்தி
போற்றருள் சாப மென்னப் புகல்வதெண் செல்வ மன்றே. 1

ஏற்றிய வியமத் தோடே யிலங்குமா தார யோகம்
போற்றுவா னெழுத்தை வாயு வெழுத்துடன் பொருந்து வித்து
மேற்றிக மொளியை மேரு வியோமத்தோ டியங்க வோரான்
டாற்றவே நோக்கி னாகா சத்திலே சரிக்க லாமால். 2

நேசமா நியமத் தோடே நிகழ்தரு மமுத யோக
மோசையா மெழுத்தை வாயு வனலொடங் குயர்வா னெட்டிப்
பேசுமா ருதவே கத்திற் பெருகவீ ராண்டு நோக்கி
னுசின்யாத் திரைக்குட் கோடி யோசனை செல்ல லாமால். 3

ஆதனம் பரம தாக வானந்த யோகந் தன்னை
யோதிய வனலெ ழுந்தா லொளிவிழி யுச்சி வைத்து
வேதம தறவே யெல்லா மிலங்குமூ வாண்டு நோக்கிற்
றீதிலெத் திசையி னுள்ள பொருள்களுந் தெரிக்க லாமால். 4

பழிப்பிலாப் பிராணா யாமத் தோடபன் னகயோ கத்தை
யிழிப்பிலா விந்து நாதச் செவியினு லொளிப் புலத்தைப்
பொழிப்பினு லாண்டு நோக்கிற் புகறிசை பத்தி னுள்ளு
மொழிப்பருந் தூரத் துள்ள வுரையெலாங் கேட்க லாமால். 5

மன்னுநற் பிரத்தியா காரத் தோடுவச் சிரயோ கத்தை
மின்னிய விந்து நாதம் விமலவா ருணையிற் கூட்டி
யுன்னவை யாண்டு நோக்கப் பதங்களு முயர்சங் கோடு
பன்னிய பதும மாதிப் பழுதிலா நிதியு மெய்தும். 6

தாரணை யதனி னோடே தாங்கிகழ் சித்த யோகம்
வாருணை யதனி னோடே † வருவதோர் குண்ட லிக்கே
காரண விழியி னாலே கருதியா ருண்டு நோக்கி
னாரணன் வராகம் போலே பாதாள நண்ண லாமால். 7

† மருவனேர் என்றும் பாடமுண்டு.

தெரிவருந் தியானத் தோடே செப்பிய ஞான யோகம்
விரவிய வோங்கா ரத்தை விந்துநா தத்தால் வீக்கி
மருவியே மூண்டு நோக்கின் வாய்த்திட லெவர்க்கு மெல்லாந்
திரவனுக் கிரகஞ் செய்யத் தேசுவந் தெய்து மன்றே. 8

பார்த்தநற் சமாதி யோடே பரமயோ கத்தை யுந்தா
னார்த்தநற் பிரண வத்தோ டசபையைக் கலசிக் கொண்டு
சேர்த்தவெட் டாண்டு நோக்கிற் றேவரே யெனினும் வேண்டி
னார்த்திடுஞ் சாபத் திட்டங் கழித்திட லாகு மன்றே. 9

உத்தம வியம மாதி யுண்மையை யுணர்ந்த யோகி
கைத்தலத் தொன்றை யீந்தாற் கடவுளர் கடவு ளாகுஞ்
சித்தமாஞ் சிவன்கைத் தாகுந் திசையிரு நான்குஞ் சூழ்ந்த
மெய்த்தகு புவன மூன்றுங் கொண்டதோர் மேன்மைத் தாமே.

அட்டவைசுவரியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1058.

24407

## 12. கன்மயோக நிராகரணம்.

வினுவிளக்கம்.

கன்னலே யமுதே தேனே கருணையால் வடிவஞ் சாத்திப்
பொன்னடி யளிக்க வந்த புனிதனே புகன்ற யோகம்
பன்னரும் பவத்தைத் தீராப் பலமுனு மாதி யாகி
யன்னயோ கத்தி னுண்மை யடியனேற் கருள வேண்டும்.1

ஞானசித்தி.

அளவிலாக் கால மெல்லாம் வருந்தினும் யோகந் தன்னுற்
றளர்விலா முத்தி வாரா தத்துவ ஞானத் தல்லா
லளவிலா வன்ப னேகே ளவையுரு வல்லா வாறு
முளமெய்ஞ்ஞா னத்திற் கங்க மாக்கிடு முண்மை யுந்தான். 2

திருமந்திரம்.

என்று மிரத்தாண் டியோக மிருப்பினுங்
கண்ணு ரமுதனைக் கண்டறி வாரிலை
யுண்ணுடி ஞானத் தொளிபெற நோக்கினுற்
கண்ணுடி போலக் கலந்துநின் ருனே. 3

சங்கற்பநிராகரணம்.

ஏகத் தனியிடங்க டேடி யியமாதி
யோகத்தை நாளு முழப்பரால் - யோகத்
தளப்பரிய தானு யனைத்தினையுங் காட்டும்
விளக்கிருக்கத் தீயொளியை வேட்டு. 4

வன்னியோ டிரவி யிந்து மத்தக நெஞ்சு மூலத்
துன்னியங் குறைவ ரென்னும் யோகிக ளுணர்வ சத்தான்
மன்னிய கருத்து மாறின் மாய்வர்கண் மலவு டம்பி
லுன்னியங் குறைவ ராகி னொளியிறந் திருளு மாமே. 5

ஞானசாரம்.

அணுமா வாதி சித்திகளை யோக மெட்டா லடைவரெனி
னுணர்வா மியோக ருலகத்தி னொருவ ருடம்போ டிருந்தாரோ
வணுமா மதித்த யோகிருந்து மவாவோ டுணர்வு மிறந்தா[ன்றே.
லுணர்வோர்க் குடர்பு மிகையென்று ருடம்போ டுறைத னரகே

அட்டமா சித்தி யாய வணுமாதி யதனை யோரிற்
கிட்டிய வணுவே யாகக் கிளர்ந்துள பெருமை யாகச்
சட்டெனப் பாவித் தப்போ துறுவதப் பொழுதே போமே
லெட்டுணை யுணர்வு மில்லா ரிதற்குழப் பவரே யன்றோ. 7

இரும்பினன் சுவரை யீங்கோர் சுள்ளியா லிடந்து புக்கு
விரும்பியோர் தவிட்டின் பிண்ட மேவுமத் தன்மை யன்றே
பெரும்பட ரியம மாதி பீடுற வுழந்தத் தாலே
வரும்பய னணு மாவாக வடைந்திடு மறிவு மையா. 8

வானினிற் கமன மாதி மன்னிய செல்வ மென்னின்
வானினிற் பறவை செல்வ முடைத்துமா தூர மேக
ருனெனிற் றாதர் பாய்மா மரக்கலஞ் சரிக்கு மேக
மூனமற் றட்ட செல்வ முழந்துபெற் றனவோ சொல்லாய்.

தூரத்தைக் காண்டல் கேட்ட றொடர்ந்தொரு காயங் கோடல்
பூரித்த செல்வ மென்னிற் புல்லிய வுறக்கந் தன்னிற் [டும்
றாரத்திற் கண்டுஞ் சென்றுந் தொடர்ந்துவே றுருவங் கொண்
பாரித்த கனவு முன்றன் பகர்ந்திடுஞ் செல்வ மேயோ. 10

## மெய்ஞ்ஞானவிளக்கம்.

கூரைகட றன்னை வற்றக் கோகுலில் கொண்டி றைத்து
விரைவொடு பயனங் கெய்தும் விரகரிற் றலைவ ரோதான்
கரையற வுழந்தி யோகு கைவந்தங் கட்ட செல்வம்
புரையற வெய்து கின்ற பொருளிலா தவர்க ளையா. 11

ஆகத்தை முறித்தொரு வாதனமா
மோகித்து விரற்கண் முடக்கிவிரித்
தாகட்ட முழப்பர்க ளத்துவித
போகத்தை விழப்பொதி புன்மையரே. 12

வாமத்தயல் மொண்டு வலத்தயல்விட்
டேமத்தை யுவந்திரு நாசிபுடம்
விமுட்டண மீது பிடிப்பர்விடா
ராமத்தர் பரத்தை யறிந்திலரே. 13

மேலே செலவா வினைவிட் டுடலைக்
காலா கியெரித் தகருத் தினராய்
மாலா வரபே தபரம் பொருளைக்
கோலார் சிலர்குப் பைகிளப் பர்களே. 14

நீறாமென வூனை நினைந்தவையே
மாறாவமிழ் தாலும் வளைந்தனராய்த்
தேறாது திகைப்பார்கள் சிற்பிரமப்
பேறான திலாத பிதற்றர்களே. 15

ஆதார மெனப்பல கொண்டவையின்
மீதேயொர் விளக்கு விளக்கினராய்ப்
பேதாதிகள் செய்வ ரபேதமெனா
மாதான மிலாத மயக்கர்களே. 16

தத்துவரத்நாவலி.

இயமாதி சமாதி யியற்றிகளா
லயமாவது பேத மறக்களையிற்
பயமேபய னல்லது பல்வகையும்
வியன்மேவிலென் மேதினி மேவிடிலென். 17

அட்டயோ கந்தான் வருத்ததாற் பரிய மறைந்திடிற் காமாதி முழுதும், விட்டிட லியம நியமத்தாற் செயித்து வேகமா யழிதரு முடலைப், பட்டவா தனத்தாற் செயித்தினி திருத்திப் பரந்துமா ருதத்தினுங் கடிதா, யிட்டெழு மனத்தை வசித்துளே புகுத்த லென்றறி பிராணாயா மந்தான். 18

விடயமா னவையைச் செயித்துளே மீட்டல் விளங்குநற் பிரத்தியா காரம், விடயவா தனையால் விகற்புறு மனத்தை விகற்பற நிறுத்தறா ரணையா, முடையதாந் தியான மொன்றும்வே றுணரா துள்ளதாந் தன்னையே நோக்க, லடைவதாஞ் சமாதி யகம்புற மறநற் பரமதா யொத்துநின் றிடலே. 19

யோகானந்தசரிதை.

ஆதலா லுரைத்த வட்டாங்க யோக மரியஞா னத்தினுக்கங்க, மோதிய விவற்றின் கருத்தையு முணரா தியோகமே பொருளது வென்று, பேதமாம் பரிசே யுழன்றுபே றதுவும் பிறழுணி மாதியே யென்ற, கோதிறா லவமாம் போகமு முணரிற் குலைந்திடும் பிறப்பையே தருமே. 20

சன்மயோகநிராகரணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1078.

# 8. தத்துவப்படலம்.

## 1. தத்துவவருக்கம்.

### வினாவிளக்கம்.

போற்றிரு நான்கு யோகும் பயன்களும் புரையா மாறு
மாற்றவை யறிவுக் கங்க மாக்கிடும் பரிசுங் கண்டேன்
சாற்றுவர் வெவ்வே றாகத் தத்துவம் பலவு நூலோ
ரேற்றிய வவற்றை யுந்தா னிறைவனே யருள வேண்டும். 1

தத்துவ மொன்றே யோரி னதத்துவ மல்லா தெல்லாம்
வித்தகர் பலவெவ் வேறு விளம்புதன் மாயா வேசப்
பித்துறு பேத நீங்கப் பிறழுதத் துவமென் றெண்ணித்
தத்துவத் தளவுஞ் சாற்றிக் கழிப்பர்மற் றவையுங் கேளாய். 2

ஈருடல் பஞ்ச கோச மிசைத்திடு நாடி வாயு
கூர்தருவிகாரம் பாவங் கோடியோ டூர்மி கொள்ளுங்
காரகங் காரணம் பாச மலங்குணஞ் சங்கங் குற்ற
மேருசார் பெந்தந் துக்க மேடணை யவத்தை யின்னும். 3

வேதனைப் பகுதிப தாதி மூன்றுகள்
பூதம தியல்புபூ தாங்கி சம்புறஞ்
சூதக வுண்ணிலை தூலசூக் கம்பர
மாதியு ளியல்போடை யைந்தெ னேழதும். 4

### தத்துவதீபிகை.

இறையரு ளிருபதோ டெட்டு மீசனா
லறைதரு மரியவா றாறு மன்றியே
துறைகெழு சுடருதொண் ணூற்றெ டாறது
மறைதரு பலவகை யறைந்த நீதியும். 5

எனவிவை யெழின்மறை யாக மங்கடாஞ்
சொனமிகு தத்துவ வகையெ லாந்தொகுத்
தனவிவை யுரைசெய்த வடைவி லேதனித்
தனியிவை மொழிசெயத் தலைவ நீயுணர். 6

தத்துவவருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1084.

## 2. ஈருடல்.

**சனற்குமாரம்.***

தூலவுட ரோருதிர நற்சதை நரம்பு
மேலெலும்பு மூளையென வாறுமிகு சூக்கஞ்
சாலவிட யங்களீ ரைந்தும்வளி யைந்து
மேலுமனம் புத்தியகஞ் சித்தமெனு மிவையாம். 1

**வாசுதேவசதகம்.**

சித்தன் றிக்கே சித்தென நிற்குஞ் செவியாதி
பத்தோன் பானும் பன்னிய வொன்றின் பரிணாம
மித்தன் மைத்தா லெய்தா முபாதி யிதுசூக்க
மெய்த்தன் ஞான மெய்திடி னல்லால் விடுமென்னார். 2

ஈருடல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1086.

## 3. பஞ்சகோசம்.

**மெய்ஞ்ஞானவிளக்கம்.**

தூலமா மன்ன கோசந் தூலத்திற் பிராண னாற்றால்
வாலிய பிராண கோச மன்னுறின் மனோம யந்தான்
சாலவே புத்தி யுற்றாற் றகுதிவிஞ் ஞான கோச
மேலவே விடய முண்போ திசைந்ததா னந்த கோசம். 1

**சித்தாந்ததீபிகை.**

* அன்னமய மாதிவரு கோசமிவை யைந்துந்
துன்னியெழு மீருடல தாகுமது தன்னி
னன்னமுறு தூலமொழி நாலுமறை சூக்க
மென்னுமிவை தன்னினுண ரென்வடிவு வேறே. 2

பஞ்சகோசம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1088.

---

**குறுந்திரட்டு ... ஈருடல்.**

உருவொன்றிய தோலுதிரஞ் சதையென்பு மூளை
சிரையென்றிவை தூலவுடம புசிறந்த ஞானக்
கருமஞ்செய் புலன்கண் மனாதிகள் கால்க
ளுருவின்றிய நேருடலா மறுமூன்று மொன்றும். 314

**பஞ்சகோசம்.**

அன்னமய கோசமிலே யாவதத னுள்ளே
மன்னரு பிராணனுறு மற்றவையு மிவ்வா
றுன்னலுறி லொன்றதனி லொன்றுமிலே யெல்லாம்
பின்னமறு மின்றபிர மத்தினிலே பேறும். 315

# 4. சதுர்த்தசநாடி.

## மூலசித்தி.

* இடையோடு பிங்கலைகாந் தாரியத்தி சிங்வை யிணையந்த
வலம் புடைபூடை யெழிற்குமிழ்கண் செவிகள், வடிவாரு நாவத
னின் வாணிதகு புகழி வருபாயு விலிங்கமதா மகிழ்பிரமஞ்
சுழூனை, அபுடையார்வி சுவோதரையும் பயசுவனியு மன்ன பானை
மதா கரிக்குழுவர் நீர்கழிக்கும் வருணை, புடையார்சுக் கிலைபுரு
வத் திடையதிகா ரகந்தான் பொருவருநா டிகளென்னப் புகல்
பதின்றன் கிவையே. 1

சதுர்த்தசநாடி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1089.

# 5. சதுர்த்தசவாயு.

## மெய்ஞ்ஞானவிளக்கம்.

மேனோக்கி யுயிர்த்திடுநற் பிராணனபா னன்றான் விரைந்து
மலங் கீழ்நோக்கித் தள்ளும்வியா னன்பி, னானேக்குங் கால்கை
முதற் சேட்டையுதா னன்று னுடல்வளர்த்திச் சமான னொத்தங்
குடனிறைவுண் டாக்குந், தானேக்கு முற்றாரண முதனாகன் கூர்
மன் சந்ததங்கண் ணிமைப்புவிக்க லும்மல்கிரி கரன்றான், மேனேக்
குங் கொட்டாவி முரிதேவ தத்த னிருந்துடலை வீங்குவித்தூத்
தனஞ்சயன்பின் போமே. 1

## குறுந்திரட்டு.

### சதுர்த்தசவாயு.

போவதா மேற்கீழ் பிராணனே டபானன் புரிந்துகால் கைசேட்டை
வியான. னேவுமா கத்தை வளர்த்திடு முதான னுடலினை நிறைத்திடுஞ்
சமானன், மேவிழிப் பிமையுங் கூர்மனு கன்கி ரிகரன்விக்குதறும்ம லோடு,
தேவதத் தன்றான் மூரிகொட் டாவி செய்துவீங் கிடுந்தனஞ் செயனே.

உந்தியின் கீழ்பான் மேலதாம் பிராண னுதரமட் டதற்குமேற் சமானன்
கந்தரத் தளவு மதற்குமேல் வியானன் கரும்புரு வத்தள வதன்மேன்
மைந்துற்ற வுதானன் தனஞ்சய னாகன் கிரிகரன் வலத்திலா மிடத்தை
மூந்துற்ற பிராணன் றேவதத் தன்றான் மூரிநீ ராயும மிடத்தே. 317

தனஞ்சயன் வலந் தேவதத் தனுமிடங் கிரிக
னனந்த ரம்வல † மாமையு மிடம்வல நாகம்
புனைந்து மத்திமப் பிராணனும் பொருந்திட விடமே
கனஞ்செய் தோதிய காற்றினு னிற்பதிக் காயம். 2

† மாயேயு என்றும் பாடமுண்டு.

தத்துவசித்தி.

உதான னின்றது புருவமே லோங்கமேல் வலித்திங்
கிதாதி கண்டகூ பத்துற வமைந்தது வியான
னிதாதி யந்தவு தரத்துற விசைந்தது சமான
னதாதி யுந்தியிற் பிராணனு மபானனு மதன்கீழ். 3

காவன்மற் றதுவாய் நின்றுறக் கத்திற் கருதுடல் பிணமெனு வண்ண, மாவதித் தசவா யுக்களு முடல மாதினை நடாத்துகா ரணமா, யேவன்மற் றின்றி யுள்ளன விவற்றை யொககவே தரித்துநின் றுணர்ந்து, காவலற் றுணர்வே யாகுமுன் றனக்குத் தகுமுடற் செயல்களொன் றிலையே. 4

மெய்ம்மொழி.

அறிதரு வயிரம் பன்முக் கியனந்த ரியாமி யோடு
நெறிதரு வேக நீடு சுவாதனும் வாயுத் தானும்
பொறிகளின் முகம்பி ருட்டம் பொருந்திய பாத கத்தஞ்
செறிதரு கரணங் கட்குச் சேட்டையாய் நிற்கு மன்றே. 5

சித்தாந்தசிகை.

* அந்தக் கரண மதன்சேட்டை வயிரம் பன்முக் கியன்பிரபஞ்ச
னிந்தத் தொழிலந் தரியாமி வாயு வீறப் பதினொன்கு
முந்தைப் பிராண னென்றதுமுன் கரணம் பதினொன் கினையியக்கு
மந்தத் தொழிலாற் பதினொன்கென் றறையப்பெயர்பெற் றதுவன்றே.

சதுர்த்தசவாயு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1095.

## குறுந்திரட்டு.

சடாதாரமும்மண்டலம்.

மூலஞ் சுவாதிட் டானந்தான் மணிபூ ரகம்மேல் விசுத்தியுடன்
மேலங் கனக தம்மாஞ்ஞை விளம்பு மிருமூன் றுதார
மாலோன் றனது மண்டலந்தா னுஞ்ஞை விசுத்தி யருக்கனதா
மூலா தார மனலென்ற மொழிவர் யோக முனிவர்களே. 318

## 6. சடுவிகாரம்.

மெய்ஞ்ஞானவிளக்கம்.

காமக் குரோத லோபமொடு கவலை மோகங் களிக்குமத
மேமத் தினையங் கழித்திடுமாற் சரிய மென்ன வேயினைவதாம்
போமக் குரம்பை தனிற்பூத விகார மாமென் றேயறிஞர்
தாமப் பகையை யழித்துணர்வார் தம்மைக் காண விரும்புவரால்.

சடுவிகாரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1096.

## 7. சட்பாவனை.

வாசுதேவசதகம்.

அல்லது பிறத்த லொன்று மதுவுள தாத லொன்று
மெல்லவே வளர்த லொன்று மிகப்பருத் திடுத லொன்றும்
புல்லிய தேய்த லொன்றும் பொன்றுத லொன்று மாகச்
சொல்லுபா வனைக ளாறு முனக்கிலை யுடலுக் குண்டே. 1

சட்பாவனை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1097.

## 8. சட்கோடி.

சதகம்.

* பற்றுதல் விடுதல் செய்யான் றன்றனைப் பிறவி னாலும்
பற்றுதல் விடுதல் செய்யப் படுபவ னல்ல னவன்
மற்றையோர் தம்மைப் பற்றான் விடான்மற் றொன் றின்மை யாலே
யுற்றவிக் கோடி யாறும் போக்கொடு வரவு மில்லான். 1

சட்கோடி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1098.

---

குறுந்திரட்டு.

அட்டாரகம்.

உன்னு காமமுங் கோபமும் லோபமு
மன்னு மோக மதமாற் சரியமுந்
தன்னை மேலெனுந் தம்பம் பொறாமையென்
றின்ன வாக்கிடு மெட்டுமின் னாதவாம்.

24407

## 9. சுரேர்மி.

மெய்ஞ்ஞானவிளக்கம்.

அன்னபா னங்கள் பிராணனை துடைமை யசோகமோ கங்களு மனமா, மன்னிடா திறப்பு மூப்புட லாகு மதித்திடிற் சுரோமிய தியல்பா, முன்னமே யறிவு வடிவமா தவிஞன் மொழிந்தவை தமக்கின்றி யுணரு, † ஞன்னதா யுள்ள தம்மையே கண்டு நடுக் கற விருப்பார்நல் லோரே.

† நன்னதா என்றும் பாடமுண்டு.

சுரோமி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1099.

## 10 காரகத்திரயம்.

பரமார்த்ததரிசனம்.

அறங்களு மறமுத லான யாவையுந்
திறந்திற முயல்வுறு மிடத்துக் காரக
மறைந்திடின் மனமுறை யுடல மாமவை
செறிந்திடுஞ் செயல்களுந் திகழக் கூறுவாம். 1

தெளிவி னெஞ்சைத் தெளியப் பிடித்தலுங்
களிசெ யும்முளத் தைக்களி மாற்றலுங்
குளிர்வி லாமை யுளர்த்திற் கொளாமையு
மெளிதின் மானத மாதவ மென்பமே. 2

துறுந்திரட்டு.

சட்பாவனை.

யோனியுற் பவித்தலுற் பவித்துண் டாகுதன்
மேனிதான் வளருதல் விளைதல் வற்றுத
லானியா குதலெனு மாறு பாவமு
மூனமா முடம்பிற்கவ் வுணர்விற் கில்லையே. 320

சுரோமி.

உறுபிரா ணனுக்குள வுணவும் பானமு
மறிவுறு மனமதன் மகிழ்வும் வாட்டமு
மிறுதலு மூத்தலு மியாக்கைக் கெய்துவ
வறிவினுக் கென்றுமிவ் வாறு மில்லையே. 321

தீர்ந்த யார்க்குஞ் செவிக்கினி தாயினை
வார்த்தை மாமருந் தேயெனை லாவதா
மோர்த்து மெய்ம்மொழி கூறுத லோதுதல்
வார்த்தை யாற்செய்யு மாதவ மாவதே. 3

தலைமை யந்தணர் தேவர் குரவர்பால்
மலைத லின்றி வழிபடு வாழ்க்கையுங்
கொலை துறத்தலுங் காமங் குறைத்தலுந்
தலைவ காயத் தவமெனப் பட்டதே. 4

ஞானசாரம்.

தானநல் லொழுக்கஞ் சிலநற் சார்வு தவமுநன் முயற்சி கா யத்தா, லானநல் வாய்மை பயனுரை யின்சொ லமைவுசொல் விளக்கம்வாய் வழுக்கின்,ஞானநற் றுணிவு துறவரு ளன்பு நடுக்க மொன் றின்மையுள் ளத்தா, லூனமில் குணமிம் மூன்றினுற் பெருக்கு முயர்ந்தவர் பிறவியூ டறுவார். 5

சிவஞானநிலயம்.

பிறர்பொருள் பிறர்தா ரந்தான் பிறர்க்கித மல்லா நீதி
கறைதரு கரும மேவிக் கலித்தெழு மவாவ தென்ன
வுறைதரு மிவைநான் காதி யுன்னுத லுளத்தி னுய
செறிதரு பாவ மென்றே திகழ்த்தின மறைக ளன்றே. 6

பயனிலா மொழிபா ராட்டல் பைசுனம் பொய்ம்மை கூற
னயமிலாக் கொடிய சொல்ல னின்றிவை முதலா யின்ப
மயமிலாச் சொல்ல தெல்லாம் வாக்கினு லாகி வந்த
வயமிலாப் பாவ மென்றே யறையவும் படும தன்றே. 7

உண்பன வல்லா துண்ட லுயிர்களுக் குறுகண் செய்தல்
பண்பட வலியி னலேப ரர்பொருள் பறித்த லன்றித்
திண்படு களவிற் சேர்த லிகழுநான் குள்ளிட் டெல்லாங்
கண்படு காயத் தாகுங் கருதரு பாவ மேகாண். 8

---

குறுந்திரட்டு.

முக்காரகம்.

ஏய வேயுயிர்க் கின்பமுந் துன்பமுந்
தீய நல்ல செயலுரை சிந்தைசெய்
காயம் வாய்மன மென்னமுக் காரகந்
தாய தாம்பிற விக்கென்று சாற்றினர். 322

### ஞானசாரம்.

கொலைகளவு கட்காமங் குற்ற † முயல் காயத்தான்
மலைகுறளை கடுஞ்சொற்பொய் பயனில்லுரை வாசகத்தா
லலைமயக்க மலாப் பற்றுச் சினமந்தக் கரணங்க
டலைமயக்க மிவைமூன்றுந் தவிர்ந்தவரே தலையாவர். 9

† முதல் என்றும் பாடமுண்டு.

அறவினைச் சார்வான் ஞான மார்ந்திடு ஞானத் தாலே
துறவினைப் பயக்கு மிந்தத் துறவினான் முத்தி தோன்றும்
பிறவியை யறுக்கு மன்றிப் பிறப்பினு ளின்பம் பேறு
மறவினை போலொ ருத்தர்ங் காத்தமாந் துணையு முண்டோ. 10

தீவினைச் சார்பாற் றீரா மயக்கமா மயக்கத் தாலே
வீவிலா வேட்கை யெய்தும் வேட்கையாற் பிறவி நோயா
மோய்விலாப் பிறப்பி னாலு முரோகத்திச் சுடுத லாலுந்
தீவினை போலொ ருத்தர்ச் சென்றடும் பகைமற் றுண்டோ. 11

### பரமார்த்ததரிசனம்.

ஓங்கிய வுலகினி லுயர்ந்த நன்மையுந்
தீங்கின வாம்வினை யாவுஞ் செய்தற்குச்
சாங்கிய நூலிலே யுரைத்த சாதன
மீங்கிவை யைந்தையு மெடுத்துக் கூறுவாம். 12

இருப்பிட மாமுடம் பியற்று மாருயிர்
கருத்தினை முதலிய கரணங் காற்றினால்
விருப்பொடு வருந்தொழி லிவற்றின் மேலரு
ளருத்தமாந் தெய்வமொன் றாக வைந்தரோ. 13

வாக்கினா லாதன்மெய்ம் மனத்தி னாதறம்
யாக்கையா லாதலிவ் வுலகி லியாவரும்
வீக்குவார் சிலையினாய் வினையி ரண்டினான்
ஆக்குநா ளிங்கிவை யைந்தும் வேண்டுமால். 14

இவ்வகை யேவரும் வினையி ரண்டையு
மெய்வகை யாகயா னன்றி வேறிலைச்
செய்வகை யானெனச் சிந்தை மேயினா
னுய்வகை யுணர்கிலா னுணர்வு மாய்ந்துளான். 15

ஞானசூளாமணி.

தருமஞ் செய்யப் பாவமறவின்று தருமமிகுதியால் [ஞங்
வருமவ் விளக்கி னிருளுறுமுண்டோன் பசியும்போல மறைந்துபி
கரும்ம் பயக்குஞ் சார்பாய காதன் மயக்கா திகளறுத்த
பெரிய வறிஞரிடையறுப்பர் பிறர்பாற் பிறையின் மறுப்போலாம்.

பாமார்த்ததரிசனம்.

இபாவ னொருவன் றன்னுடம்பை யானென் றிருக்கு மியல்
பொழிந்தான், யாவ னொருவன் றன்கரணா மியாதொன் றேனும்
விழைதலிலா,னுவ வனினிவ் வுலகத்தை யடையக் கொன்றா னாயி
னுமோர், பாவ மில்லை யவன்கொன்ற பழியு மில்லைப் பார்மன்னு.

காரகத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1116.

## 11. கரணத்திரயம்.

நித்தியானந்தசரிதை.

† அய்யமுஞ் சனைமு நிச்ச யித்தலும்
வெய்யவெங் கொடுமையும் விரத மேவலும்
பொய்யிதென் றிருத்தலும் பொருந்த நோக்கலு
மையல்கொண் டிருத்தலு மனத்தில் வந்தவாம். 1

† அய்யசிச் சயித்தலு மயர்வுண் டாகலும் என்றும் பாடமுண்டு.

அருடரு மியற்கையு மறிவு மவ்வறி
விருளற வுரைத்தலு மெவையு மாய்தலு
மருடரு பாவபுண் ணியத்தின் மாட்சியும்
பொருடரு முவகையும் புந்தி யாருமால். 2

பாகமு முறக்கமும் பண்பி லாமையு
மோகமுஞ் செய்வினை முடிவி லாமையுஞ்
சோகமுங் கிழ்மையும் பயமுஞ் சொற்பல
வாமையு முற்றுமாங் கார மாருமால். 3

கரணத்திரயம்முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1119.

## 12. பாசம்.

மெய்ம்மொழி.

மன்னிடு மலமுங் கன்ம மாயையா மலங்கண் மூன்றும்
பன்னுமப் பசுவைப் பாசம் பந்திக்கப் பண்ணுஞ் சத்தி
தன்னொடு பாச நான்காந் தற்பாச பரிணா மத்தா
லுன்னிடுந் தத்து வங்க ளொன்றுடன் பாச மைந்தே. 1

மூலசித்தி.

* வருத்திடும் பாச மைந்தோ வலியவா மலங்கண் மூன்றும்
பருத்திடு மவற்றின் மூல மானவப் பகுதி தானும்
விரித்திடும் பரிணா மந்தா னென்னவை வகைய தாகித்
தெரித்திடுந் தன்னை மூடிச் செடமெனச் செய்த தேதான். 2

மெய்ம்மொழி.

பிறப்பதும் பாசத் தாலே பிணிப்பதும் பாசத் தாலே
மறப்பதும் பாசத் தாலே மயக்கமும் பாசத் தாலே
யிறப்பதும் பாசத் தாலே யிளைப்பதும் பாசத் தாலே
துறப்பதும் பாசத் தாலே தொழிலெலாம் பாசத் தாலே. 3

பிணிகளும் பாசத் தாலே பேதைமை பாசத் தாலே
துணிவதும் பாசத் தாலே துன்பமும் பாசத் தாலே
யணிவதும் பாசத் தாலே யாக்கையும் பாசத் தாலே
பணிவதும் பாசத் தாலே பற்றெலாம் பாசத் தாலே. 4

பாசம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1123.

---

குறுந்திரட்டு

நாற்கரணம்.

ஐயந் துணித லபிமானஞ் சிந்தனைகள்
செய்யு மனம்புத்தி யாங்காரஞ் சித்தமென
மெய்யுணரி லகக்கரணம் வினையின்வே றுகுதலால்
வையகத்தி னாற்கரண மென்றே வழங்கியதால். 323

# 13. மலத்திரயம்.

## மெய்ம்மொழி.

வளைத்துற வான்மா வின்றன் வடிவினை மறைத்துக் கொண்டே, யிளைத்திடும் பிறப்பிற் கென்று மேதுவா மலமூன் றாகி, முளைத்திட வித்தை பண்ணு மூக்கொடு தவிடு மிப்போற், றிளைத்திடு மான்மாத் தன்னைச் சேர்ந்துமன் னாதி யன்றே. 1

சொன்னமும் மலங்க ளேது சொல்லிய வடைவி னாலே
மன்னுமா ணவமு மற்றை மாயைகா மியங்கள் பின்னும்
பன்னினஞ் ஞான மோகம் பரவசம் பண்ணு மூன்று
மின்னமு மிவைதாஞ் செய்யுங் காரண மியம்பக் கேண்மோ. 2

எறித்திடும் பொருண்மை லிச்சை யெனக்கெதி ரியாவ ரென்கை
வெறித்திடுங் கோபத் தோடு விகற்பகிச் சயமற் றாசை
செறித்திடும் பொறியுட் போகஞ் சிறந்தபே ருவகை போடு
குறித்திடுங் குணங்க ளெல்லாங் ‡ குறுகலா ணவம தன்றே. 3

‡ கூறிலா என்றும் பாடமுண்டு.

## குறுந்திரட்டு.

தாணுவா மறைக ளோதுந் தன்னைத்தா னியாவ ராலுங்
காணொணா வகைமெய்ஞ் ஞானக் கண்ணதை மறைக்கு மாய
வாணவ மாயை கன்ம மெனவருந் தருளிச் செய்தான்
பேணிட வொருவ ராலு மரியதா னுடைய பெம்மான். 324

பங்குற வகுத்த நீசன் பக்குவ மிலாரை நோக்கி *
யங்குரந் தவிடு மிப்போ லாமெனத் தூல சூக்க
மங்குற வருளிச் செய்தா னாணவஞ் சூக்க மாயை
பங்கமாந் தூல கன்ம மதன்பரி ணாம மாகும். 325

அல்லதா ணவமொன் றுண்டே லாத்மாவிற் கபின்னம் பின்ன
மில்லதொன் றுளது சித்துச் சடமென வியம்ப வேண்டு
மல்லவி லாத்மாத் தானே யாய்விடு மபின்ன மாகிற்
சொல்லலாம் பேத மென்னிற் சித்தாயோ சடமா யோதான். 326

சித்தாய பேத மென்னிற் சித்துரு வாத்மா வென்றே
வத்துவன் றாகிப் போகு மலஞ்சட மாகி வித்தைச்
சத்தசத் தினினு மவ்வா றாயிடு முபய கோடி
யித்தனை திறத்துஞ் சேரா தாதலா லிறுமா மாயை. 327

வெய்யசொல் வெறுப்புச் செய்தல் வியன்குரு மொழியி ழைத்தல்
செய்யசெய்ந் நன்றி கோற றீக்குண முடைய னாதல்
பொய்யுரை கொலைதா னேர்கை புகன்றுமுன் மாறு கூறன்
மையுறு குணங்க ளெல்லா மாயையா மலம தன்றே. 4

மயக்கமோ டறிவொன் றின்மை மைதுனங் களவு காண்டல்
பயத்துட னுபுத்தம் பண்ணல் பாவமாந் தொழிலை செய்தல்
செயப்படு தன்கு லத்திற் செய்வன செய்யா னாதல்
வியப்புடைக் காமி யத்தின் வியன்குண மிவையா மன்றே. 5

கன்மமு மனாதி யன்றே கலந்திரு வகைக ளாகுந்
தன்மமு மதன்ம முந்தான் சலித்திடை விடாதே நின்று
முன்வலி காலின் பின்னு முருகென வுயிர்கள் புத்தி
தன்வச மாக்கி நாளுந் தகைந்துடல் காட்டு மன்றே. 6

மாலதா மாயை யென்று மன்னியொன் றாகி நின்றே
மூலமாய்ச் சகத்திற் கென்று மோகமே யுயிர்க்குப் பண்ணுஞ்
சீலமாய்ப் பசுவி னுண்மைச் சேதன வடிவ மெல்லாங்
கோலமா மறைக்கும் பாசக் குணங்களின் றன்மை யீதால். 7

ஞானசாரம்.

மலங்குணஞ் சங்கங் குற்ற மேடணை வருந்து துக்கந்
துலங்குநோ யவத்தை பெத்தம் வேதனைத் தொகையாம் பத்துந்
தலங்கள்யா னெனது மூல சத்தியு மாகப் பாச
மிலங்கின்முப் பத்து மூன்ற வியம்பின னரனு மையன். 8

மலத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1131.

## 14. குணத்திரயம்.

மெய்ம்மொழி.

விளங்கிய சித்த தோதான் மேவிய வசித்த தோவக்
களங்கமாங் குணங்க ளென்னிற் கருதினன் மாவிற் கில்லை
விளங்கிய விளக்கத் தன்றி விளக்கிலை திரியு நெய்யாற்
களங்கமா மைபி றக்கக் காண்டல்போற் குணங்க ளன்றே. 1

பரமார்த்ததரிசனம்.

என்று முன்னங் குணமென் றியம்பிய
மூன்று மூலப் பிரகிருதி தன்னிலே
தோன்றி யுள்ளன தொல்லறி வைப்பற்றி
யூன்றி நிற்ப வவற்றை யுணர்த்துவாம். 2

சத்துவ மிராசதந் தாம தம்மென
வைத்து வந்த பெயரை யுடையன
வெத்து வந்துவ முந்தரு கிற்பன
மெத்து வந்தவற் றின்செயல் வேறுகேள். 3

பற்று மாசின்மை யாற்பளிங் கொப்பது
வுற்ற நல்லறி வானதுண் டாக்குவ
தெற்று மின்ப மலாற்றுன்ப மென்பது
சற்று மில்லது சத்துவ மாவதே. 4

ஓது † மாசை யிதிற்பிறந் துள்ளது
தாது கற்புரை யுண்ணிறஞ் சார்ந்தது
பேது செய்வினை யோடறி வைப்பினாற்
கேது வாய திராசத மென்பதே. 5

† ராக முருவ முடையது என்றும் பாடமுண்டு.

கூறிய நீல மபக்கமுங் கோதிலா
தெறிக டம்மை யிகழ்தலு நித்திரை
செறித லானது மற்றிவற் றுற்றிண்ணொன்
றறிவை மாய்க்கு மதுதம மாவதே. 6

சித்தாந்ததீபிகை.

* சத்து வத்தினிற் சத்துவ முதலாச் சாற்று மூன்றுமுண்
டவற்றினைப் பகரிற், சத்து வத்தினிற் சத்துவந் துறவு சாந்தி
முத்தியிற் சாலவுற் சாகஞ், சத்து வத்தினி லிராசதந் துறவு
‡ சாந்தி தான்றளர் வுறமுத்தி முயற,லத்தி றத்தினி றுமதமுயற்
சி யதனின் மந்தமாம் விருப்பமென் றறியே. 7

‡ சாந்தி தானத்திற் றளர்வில்லா முயறல், சத்து வத்தினிற் றுமதம் பற்றி என்றும் பாடமுண்டு.

திருந்திரட்டு.

அனைவனை பகுதியி லனைய ருக்குமக்
குணமுள வவற்றினைக் கூறிற் சாத்திக
முணர்வுண ராமைதா மதமி ரண்டினின்
புணர்வியா சதமெனப் புகலப் பட்டதே. 328

* இராச தத்தினி லிசைந்தவக் குணங்கண் மூன்று முண்ட
வற் றினையுமிங் கியம்பி, னிராச தத்தினி லிராசதங் கருமத் திராக
மோடிடை யறாமுயன் றிடுத, லிராச தத்தினிற் சாத்திக மெவர்
க்கு மிரக்க மோடற மிகவியற் றிடுத,லிராச தத்தினிற் றாமத மெ
வர்க்கு மிகழ்ச்சி பாவமுற் றிடத்தொழின் முயறல். 8

* தாம தத்தினிற் சாற்றிய குணங்கண் மூன்று முண்டவை
தம்மைநன் குரைக்கிற், றாம தத்தினிற் றாமத மயக்க மிகழ்ச்சி
பாவமா லச்சமோ டுறக்கந், தாம தத்தினி லிராசதந் தகாத செய
லுணாதன வுணல்களி வெகுளி, தாம தத்தினிற் சாத்திக மறைக்
குத் தான்வி ருத்தமாஞ் சடர்நெறிப் படர்வே. 9

### பரமார்த்ததரிசனம்.

வாழுஞ் சத்துவ மற்றைய விரண்டையு மறைத்துத்
தாழு மற்றைய விரண்டுமத் தமோகுணந் தழைப்பின்
வீழுஞ் சத்துவ தமங்களவ் விராதம் விளைவி
னூழின் மற்றிவை யிரண்டுந்தாழ்ந் தொன்றுமிக் குளவாம். 10

ஒத்துநல் லறிவு மிக்க தியாதொரு போதப் போது
சத்துவந் தழைத்த தாகுந் தாங்கரும் வினைக ளேகொண்
டுய்த்துவந் தாசை கூர லோபம்வந் துற்ற போது
மத்திம குணமே சால வளர்ந்ததென் றறிநீ மன்னு. 11

தக்கது தகாதென் றொன்றைத் தானறி யாத போது
மெக்கரு மங்கண் மாட்டு மிகழ்ச்சியோ டிருக்கும் போது
மொக்கமெய்ம் மயக்கத் தோடு முறக்கம்வந் துற்ற போது
மிக்கது தமமே யென்று விசயநீ யறிய வேண்டும். 12

சாத்துவிகர் தேவரையே சரண்புகுவர் தாமதர்கள்
காத்தல்புரி வனபேயும் பூதமுமாக் கடைப்பிடிப்ப
ரேத்தரிய குணமிவற்றி லிராசதமாங் குணமுடையோ
ராத்தரென வியக்கரையு மரக்கரையு மடைகுவரால். 13

தீத்தவழும் வடிவேலோய் செப்பியவிம் மூன்றானுஞ்
சாத்துலக மகிழ்வெய்தச் செய்கின்ற வருந்தவத்தி
லார்த்துவரும் பயன்வேண்டா தாகின்ற வருந்தவந்தான்
சாத்துவிக தவமென்று சாற்றுவர்க டக்கோரே. 14

வசையிறவு முடையரென மானுடர்கொண் டாடுகைக்கு
நசையினொடு பொருள்பெறவுஞ் செய்கின்ற நற்றவத்தை
விசயவுனக் குறைசெய்தேன் மிகப்பெரியோர் செப்பிடினு
மிசையவறி மற்றிதனை யிராசதமாந் தவமென்றே. 15

பேதைமையை மிகவுடைத்தாய்த் தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கு
மேதகுமுறு பெருந்துயருங் கேடுமே யிபற்றுவதா
யாதவனும் பனியுமுழந் தாற்றுகின்ற வருந்தவந்தான்
முதலரு நெடுமுடியாய் தாமதமாந் தவமாமே. 16

முன்செய்கா ரியப்பொருட்டு மின்றியே முடித்திதனும்
பின்பொருநற் பொருள்விளையு மென்பதுவும் பேணாதே
நன்குடைய காலத்தே நல்லிடத்தே நல்லவர்க்குத்
தன்பொருளைக் கொடுக்குமது சாத்துவிக தானமே. 17

கோண்டுசெயத் தருங்கரும மெனுங்குறிப்போன் றின்றியே
பண்டுசிலர் செய்ததற்காப பரிவோடு பண்ணினவு
முண்டிதனுன் மேல்விளைவென் றுணர்வோடிச் செய்வனவு
மெண்டிசையு நிறைபுகழா யிராசதமாந் தானமே. 18

வாயாத தொருபொருளை வழங்காத காலத்தே
யேயாத நிலத்திடையே யிழிந்தகுலத் தவர்களுக்கே
யாயாத வறிவினொடு மப்பிரியத் தொடுங்கொடுத்தல்
சாயாத பெருந்திறலோய் தாமதமாந் தானமே. 19

துன்ப மாய்விடம் போன்று தொடக்கத்தி
லின்ப மாகி விளைவிட மியாவாக்கு
மன்ப வாரமு தேபென லாவதா
மென்ப சாத்து விகந்தரு மின்பமே. 20

பொருத்த மாய்ப்புல னோடு பொறியிலே
யருத்த மாயெழுந் தாரமு தென்னலாய்
விருத்த மாய்முடி வில்விட மாகியே
யிருத்த லாகு மிராசத வின்பமே. 21

தொடரு றக்க மயக்கொடு சோம்பினுற்
படவு தித்ததாய்ப் பண்ணும் பொழுதினுங்
கடன்வி ளைந்து முடிந்தகா லத்தினு
மிடர்வி ளைப்பது தாமத வின்பமே. 22

நன்றாய் ஞானத் திரளாகி நாநா விதமாய் விரிந்தெங்கும்
பொன்றா நின்ற பூதங்க ளோடும் பொன்றாப் பொருளாகி
யொன்றாய் நிற்ப தொன்றினையப் படியே யுணரு முணர்வதனை
யன்றா மென்னார் சாத்துவிக ஞான மெனவே யமைப்பாரால். 23

ஊனப் படுமிவ் வுடமேறு முள்ள பொருளை யுணராதே
யீனப் படக்காண் கின்றதிரா சதமா ஞான மதுவன்றி
ஞானத் திரளாய் நின்றதைபோ ருடம்பி னிடையு நாட்டிடையோர்
தானத் திடையு மடங்கக்காண் பதுதா மதமா ஞானமே. 24

தக்கசத் துவமே நிகழ்ந்தபோ திறந்தோர் தெய்வயோ னிகளிலே சார்வார், மக்களிற் பிறப்பா ரிராசத குணமே வளர்ந்த போ துடம்பினைத் துறந்தோர், மிக்கெழுந் தமமே விளைந்தபோ திறந்தோர் விலங்குச்சா திகளிலே வீழ்வார், றொக்கமற் றிவற்றின் பலன்களுந் தெரிய வுரைக்கின்றே னிவற்றையு முணர்வாய். 25

சத்துவ மாந்தர் பரகதி யடைவர் தமத்துளோ ரதோகதி சார்வார், மத்திம குணத்தா ராயினார் நடுவின் மானுடப் பிறவியாய் வாழ்வார், ரித்திற மாய வுருவமே விகாரி யானவி காரியென் றிவற்றை, மெய்த்திற னாக வறிந்தவ னறிந்த பொழுதிலே வீட் டின்ப மடைந்தான். 26

குணத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1157.

## 15. சங்கத்திரயம்.

சித்தாந்ததீபிகை.

* சாற்றிய சங்க மூன்றின் றன்மையை யறியக் கூறி
னாற்றிய வந்தச் சங்கம் புறச்சங்க மான்ம சங்கந்
தோற்றுதெய் வத்தி யானம் பதுமைகொண் டாடல் சோர்வாற்
போற்றகந் தெய்வ மாகக் கருதுதல் புகலு மூன்றே. 1

* அறைந்தவிப் பரிசே யன்றி யழுக்குடை விடயந் தோறுஞ்
சிறந்தமுச் சங்க மாமா றித்திற மென்று கொண்ணீ
மறந்துமோர் சங்க முண்டேன் மயக்கமாம் பவத்திற் பட்டுக்
கறங்குபோற் சுழல்வ ரென்றே கலைவலோ ரறைவ ரன்றே. 2

சங்கத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1159.

## 16. குற்றத்திரயம்.

### தத்துவதீபிகை.

* சொல்லிய குற்ற மூன்றுந் துகளறத் தெரியக் கூறி
னெல்லையி லிராகந் துவேட மவிச்சையென் பனவே யாத
மல்லது வெகுளி காம மயக்கமென் பதுவும் பேரா
மல்கிய குற்றத் தாலே வாய்த்திடும் பிறவி யெல்லாம். 1

* முக்குற்ற நீக்கின்முடி யாப்பவம் வேரோ டும்பே
மக்குற்ற நீக்குமவ ரீசனு மாவ ரென்றே
யெக்குற்ற மும்விளைவ திங்கிவை தம்மி னென்றே
தக்குற்ற மாமறைக ளாயிரங் கோடி சாற்றும். 2

### ஞானசூளாமணி.

* காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோயென்று நற்றவர்க்குக்
கேமம் பெருக விறைவன் ஞுவன்வாக்காந்
தோமின் றியபடா மறைசொல் விடுமன்றே. 3

### பரமார்த்ததரிசனம்.

காதலி ஞகிய காம முலோபங்
கோதுற வேசுடு நீநிகர் கோப
மாதலி ஞலிவை மூன்று மகன்றார்
வேதனை தீர்பெரு வீடு விளைந்தார். 4

குற்றத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1163.

## 17. பிணித்திரயம்.

### நித்தியானந்தசரிதை.

பாடுத னிலையி லாமை பலபல பிதற்ற லாசை
யோடுத றயாவின் றுத லுளந்தெளி வின்மை கோப
நாடுத லச்ச மின்மை நாரியர்ப் பழிச்ச லாய்த்தங்
கூடிடுங் காலை யஞ்சல் வாதத்தின் குணம தாமால். 1

அறிவுட னடக்க மாண்மை யழகுசொல் வண்மை தூய்மை
செறிதரு நன்மை சீர்மை திகழ்தரு வனப்பு மேன்மை
நெறிதிகழ் வாக்குத் தன்னி னிகழ்ந்தமெத் தனவு மற்றும்
பிறிதிலா ஞான மாய்தல் பித்தத்தின் குணம தாமால் 2

சுளிவது வின்மை யீகை துளக்கமி றிருவுண் டாத
லொளிபுக ழுவகை யூக்க முறுவலி யுடைமை மற்றுந்
தெளிவது வுடைய ருதல் சிலேட்டுமத்தின் குணம தென்று
கிளிமொழி யனையாய் கேடின் மறைபல கிளக்கு மன்றே. 3

பிணித்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள். 1166.

## 18. பந்தத்திரயம்.

சித்தாந்ததீபிகை.

* பெந்த மூன்றுள பேசிற் பகுதியும்
வந்த தெக்கணு வத்தம்வை காரிகந்
தந்த வவ்வியத் தம்முதன் மூன்றினுன்
முந்து மிச்சாதி யாமுடற் பெந்தனம். 1

* ஏதமி றெக்கணு வத்த மென்பது
வோது சோதிட்டோ மாதியிற் பெந்தனஞ்
சாத வைகா ரிகந்தனைச் சாற்றிடிற்
‡ பேத பந்தவெஞ் ஞாதியிற் பெந்தனம். 2

‡ பேத பஞ்சயக வியாதியிற் என்றும் பாடமுண்டு.

பந்தத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1168.

* குறுந்திரட்டு.

முப்பிணி.

கானம் விரும்ப னிலையின்மை காமக் குரோத லோபங்கண்
ஞான மின்மை தயாவின்மை நல்ல குலநா ரியர்ப்பழித்தன்
மான மின்மை பலபிதற்றன் மாயின் றூதல் வாளமரிற்
கூனி யோட லின்னவைதாம் வாத குணமாய்க் கூறுவரால். 329

அறிவ டக்க மாண்மைநெறி யழகு நீர்மை சொல்வண்மை
பிறிதின் ஞானத் தாதரவு பித்த குணமாம் பிறழாமை
பொறைநல் லுவகை புகழீகை பொருந்து மூக்கம் பொறைமதுகை
குறிநற் கருணை சினமின்மை சுபத்தி குணமாய்க் கூறுவரால். 330

# 19. துக்கத்திரயம்.

## ஞானாமிர்தம்.

ஆதி தைவிக மாதி பௌதிக
மாதி யாத்தியான் மிகமென வோதிய
துக்க மூன்றினு ளாத்தி யான்மிக
மெய்யின் மனத்தி னையமி லிரண்டே
வளியிற் பித்தின் விளியா வினையி
னூனுகு தொழுனோயி னுதகக் கொட்டின்
வெப்பிற் சூலையின் மக்களின் விலங்கி
னலகையிற் கள்வரிற் பறவையி னிருதரின்
மைந்தர் மகளிர் மணந்திடை தணப்பிற்
பேரறம் வளர்ப்பிற் பெருந்திரு நுகர்விற்
சீரிய யாக்கை மாதுயர் மாசு

## குறுந்திரட்டு.

ஏத மூன்றினைக் கிளத்திடி லாத்தியான் மிகமோ
டாதி பௌதிக மாதிதை விகமெனு மவற்றி
லோது மாத்தியான் மிகமெனுந் துயருளத் தினிலு
மேத மாமுடம் பினுமிரு பரிசினு லியையும். 331

காய வேதனை காற்றினாற் பித்தினாற் கபத்தா
னோயொ ரெல்லையி னவற்றினா னோன்பினா னுகர்வாற்
யாயு மாவினான் மனிதராற் பறவையாற் பாம்பாற்
பேயி னணிசி சரினாற் பேதையாற் பரிவால். 332

மனத்தின் வேதனை மானமா மணிகலன் மறப்பார்
சினத்தி னவ்வர வான்மட மாதரிற் சேயிற்
றனத்தி லாகிய விழவினிற் றமின்மிகுத் தவர்பா
லணத்த மாகிய பொருமையா லன்னவை பிறவால். 333

ஆதி பௌதிகத் தால்வரும் வேதனை யறையின்
மோது மாருத முழங்கிடி முறுகிய வேனிற்
சீத மாமழை செழும்பனி செறியிருள் கழியப்
போது மின்புகை பொங்கெரி யாதியாம் பொருளால். 334

பிரச வார்குழ லியாவர்க்குஞ் சிறையுறல் பிறத்தல்
வரைவில் பேதைமை யுறனரை திரையுறன் மரித்த
னிரய மேலெழ லெனவரு நினைப்பருந் துயராம்
புரையி லாதவ ராதிதை விகமெனப் புகன்றார். 335

33

மனத்தூறு துயர நினைப்பருஞ் சோக
மறிவுரு வாக்க மடையுநர்ப் பொருமை
யான மாக்கலம் பூணுது மறுத்த
விச்சையி னிசைத விருஞ்சின மிகுத்த
வினையவை முதல நினைவருந் திறத்த
வாதி பௌதிகஞ் சீத மாமழை
யுருப்பவிர் வேனி லூட்டுவரு கடுங்கா
லிருள்கிழி மின்னுப் பெருவிற லசனி
மன்னுயிர்க் குறுகண் டுன்னியா றருந்த
லாதி யாய விவருந் திறத்த
வாதி தைவிகம் பேதையர் வயினக்
கருக்குழி யழுங்கல் பிறப்பிறும் பூது
திரைவருந் தீமை வரைவில் பேதைமை
மடங்க லாருயிர் தொடங்கினன் வௌவல்
யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து
வீழ்ந்தன ரெழாஅ வான்கழி துன்ப
மினைய பாலைய துயரினை - வினைநகர்க்
கருங்கைக் கயமைக் களிறுகைத் திருட்புலப்
பெரும்படை விரிந்து சூழத் திருந்தா
நாற்கதிப் பவனி யுலாஅ
யார்த்தவிழ் திறம்பிற போற்றுமதி புரிந்தே. 1

(இ-ள்.) ஆதி-மூன்றினுள் (எ-து) முற்பாட்டிற் சொல்லப்பட்ட துக்கத்திரயங்களில், ஆத்தியான்மிகம் - இரண்டே (எ-து) ஆத்தியான்மிகமாவது சந்தேகமறத்தேகத்தைப் பற்றிவரும் விதனமும் மனதைப்பற்றி வரும் விதனமுமாக விரண்டு விதமாயிருக்கும் அவையிருக்கும்படி சொல்லில், வளியின் - வாதத்தால், பித்தின்-பித்தத்தால், விளியாவிளையின் - கெடாத சிலேட்டுமத்தால்,

ஊனுகுதொழுனையின்-சரீரத்தில் மாமிசத்தையழுகிவிழப்பண்ணுங் குட்டவியாதியால், உதகக்கோட்டின்-நீரிழிவால்,வெப்பின் - வெதுப்பால்,

சூலையின் - சூலைவியாதியால், மக்களின்-சத்துருக்களான மனிதரால்,

விலங்கின்-விலங்குச்சாதியால், அலகையின் - பசாசுக்களால்,

கள்வரின் - களவுகாண்பவரால், பறவையின் - கொசுகு ஈ முதலாக வுள்ள பறவைகளால், நிருதரின் - அரக்கரால்,மைந்தர்மகளிர் மணந்திடைதணப்பின் - விதியால் ஸ்ரீ புமான்கள்கூடி யிடையேபிரிதலால், பேரறம்

வளர்ப்பின் - குருலிங்கசங்கமமாதி தேவதாகாரிய பரிபாலனம் நடசென்று
றிவற்றால், பெருந்திருநுகர்வின் - சம்பத்தின் மிகுதியால் அடாதனசெய்
தனுபவித்தலாலுண்டான, சீரியயாக்கைமாதுயர் - இவைபதினொன்றுஞ் சீரி
தாகிய சரீரத்தைப்பற்றி வரு மிக்க விதனமாம்,

மாசுமனத்துறுதுயரம் - இனிமாசுடைத்தாகிய மனத்தைப்பற்றிவருந்
துக்கமாவன, நினைப்பருஞ் சோகம் - பெண்டுகள் மைந்தர் பிரிதலாலும்
திரவிய முதலாகக்கூடினவை பிரிதலாலு மாற்றாமையால்வரும் நினைத்தற்
கரியசோகமாகிய துக்கம், அறிவுருவாக்கமடையுநர்ப் பொறாமை-அறிவுடை
யோரை வடிவுடையோரைச் சம்பத்துடையோரைக் கண்டுங்கேட்டு மழுக்
காறுற்றமனத்தால் வரும் விதனம், மானமாக்கலம்பூணாது மறுத்தல்-மான
மாகிய பேரணிகலத்திற் கானிவந்தபோ துண்டான விதனம், இச்சையி
னிசைதல்-பஞ்சேந்திரியங்களுக்குப் போகமாகிய பதார்த்தங்களில் வைத்த
விச்சையால் வரும் விதனம், இருஞ்சின மிகுத்தல் - பெரிய சின மிகுதி
யால்வரும் விதனம், இனையவை முதலநினைவருந்திறத்த - இவை யைந்து
(இந்திரியங்களுக்குப் போகமாகிய பதார்த்தங்கள்) முதலாக நினைத்தற்கரிய
வேறுபாடுள்ள பலவுமாம்,

ஆதிபௌதிகம்—ஆதிபௌதிகஞ் சொல்லின், சீதமாமழை—குளி
ரால் வருந் துக்கம் மிகுதியாகிய மழையால் வரும் துக்கம், உருப்பவிர்
வேனில் - உட்டிணமாகிய கோடையால் வருந் துக்கம்,

உட்குவருகடுங்கால் - பயத்தைப்பண்ணு மிக்ககாற்றால் வருந் துக்கம்,

இருள் கிழிமின்னு - இருளைக்கெடுக்கு மின்னால் வருந் துக்கம்,

பெருவிறலசனி - மிக்க வலியுடைய விடியால் வருந் துக்கம்,

மன்னுயிர்க்குறுகண்டுன்னியாறருந்தல் - ஓதக்கடல்சூழுலகில் பிரா
ணிகளொவ்வொன்றைக்கட்டிவைத்து மொவ்வொன்றைக்கொன்று மொவ்
வொன்றைவாதைப் படுத்தியும்வைத் தவற்றா லவ்வணமே நுகர்கை,
ஆதியாய வீவருந்திறத்த - இவை யேழுமுதலாகவுள்ள கெடுத்தற்கரிய
வேறு பாட்டையுடைய விதனமாம்,

ஆதி தைவிகம்—ஆதிதைவிக மிருக்கும்படிசொல்லில், பேதையர்
வயினக்கருக்குழியமுங்கல் - மாதாவின் வயிற்றி லந்தக் கருப்பாசயத்தி
லிருக்குங்கருப்பவேதனை, பிறப்பிறும்பூது-பிறக்குங்கால் வரும் ஆச்சரிய
மாகிய வேதனை, திரை வருந்தீமை - உடம்பு திரையுறு மூப்பால் வரும்
விதனம், வரைவில் பேதைமை-அளவில்லாத வஞ்ஞானத்தால் வருஞ் சங்
கற்ப வேதனை,

மடங்கலாருயிர் தொடங்கினன்வௌவல் - யமபகவானாரியவுயிரைக்
கொண்டு போம்பொழுது வரும் மரண வேதனை, யாவரும் விழையாக்
கோள்வாய் நிரயத்து வீழ்த்தன ரெழாஅ வான்கழிதுன்பம் - யாவராலும்

விரும்பப்படாத கோட்பாட்டையுடைத்தாகிய நரகத்திலே யழுந்தி யேறுதற்கரிதாகிய மிக்க துக்கமாகிய வாறும் பிறவுமாம்,

இனையமாலைய - இந்தத் துக்கத்திரயங்களை மாலையாகப் பூண்டு கொண்டு, துயரிடைவினைநகர் - இவ்விதனங்களுக்கிலக்காகிப் பூருவ கன்மமலம் புசிக்குஞ் சரீரமாகிய நகரியிலே,

கருங்கைக் கயமைக் களிறுகைத்து - பெரியகையையுடைத்தாய குணவீனமான யானையிலே யேறிக்கொண்டு செலுத்தி, இரும்புலப் பெரும்படை விரிந்து சூழ - பரந்த விந்திரிய மாகிய பெரிய சந்திரம் மிகவுஞ் சூழ,

இருந்தா நாற்கதிப்பவனியுலாஅ யார்த்தவிழ் திறம் பிற போற்றுமதி புரிந்தே-ஒருகாலமுந் திருத்திவாராத வுற்பீச மண்டசஞ் சராயுசஞ் சுவேதசமென்று சொல்லப்பட்ட நாற்கதியிலே பவனியாகிச் செல்லுகிற தேகாதிதேகாந்தமாகிய வேறுபாடிருக்கும்படி சொல்வன் அவற்றை விரும்பிக் கேட்பாயாக (எ-று).

இது மூவகைத்துக்கமாவன தேதேன்னத் துக்கத்திரயலட்சணஞ் சொல்லியது.

துக்கத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1169.

## 20. எடணைத்திரயம்.

தத்துவராத்திரைகரம்.

* செறியு மேடணை மூன்றையுஞ் செப்பிடி
னறையு மெப்பொரு ளும்மத்த வேடணை
பொறியுஞ் சுற்ற மெலாம்புத்தி ரேடணை
முறைசங் கற்ப மெலாமுல கேடணை. 1

ஏடணைத் திறத்திற் பட்டார் யாவரிப் பிறப்புத் தீர்வா
ரோடுமக் கடலி னுள்ளே கிடந்தழுந் துலகந் தானு
நீடுமக் கடலை நேரே நிமலனை நாக்கிய மென்னுங்
கீடைப் புணையி னல்லாற் பிறகிடப் படுவ தோதான். 2

சித்தாந்ததீபிகை.

அவாவெனு மேடணை யனவி லல்லினைத்
தவாவற விழுங்கியே சனன மாய்த்திடும்
பவாசனி விரத்தியின் பரம தேசினுக்
குவாமதி பருதியு மொப்பின் றுகுமால். 3

ஏடணைத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1172.

## 21. அவத்தாத்திரயம்.

தத்துவசரிதை.

* சாக்கிரங் கனவொடு தகுசு ழுத்தியென்
றாக்கிய வவத்தைமூன் றும வற்றினுட்
போக்கற வுயிரெலாம் புக்க ழுந்துமா
னீக்குவர் நிமலபோ தத்து நின்றுளார். 1

மூலசித்தி.

* முப்புர மென்ப வவத்தை மூன்றையு
மப்புர மூன்றுமட்டவர் தகில லோகமு
மெய்ப்பட விழுங்குமா லவற்றை வென்றுளா
னப்பர மீசனென் றறைய வேண்டுமோ. 2

நித்தியபோதம்.

* முவ்வகை யாய்வரு மூல பாசமா
மவ்வகை யவையெலா மடைய மாய்ந்தறும்
பொய்வகை யவத்தைமூன் றினையும் போக்கவே
மைவகை மணியெனத் தனையுங் காணுமால். 3

அவத்தாத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1175.

## 22. வேதனைத்திரயம்.

மூலசித்தி.

* ஏற்றுவே தனைகண் மூன்று மிகழ்ச்சியோ டின்பத் துன்பஞ்
சாற்றுமே தனைபா மென்னச் சமைந்தவிம் மூன்றி லின்பந்
தோற்றுமோர் துயரின் சாந்தஞ் சுகமென மருள லாலே
மேற்றிக ழின்ப மாகா வேதனை யாகு மன்றே. 1

சித்தாந்ததீபிகை.

* அகந்தையு மமதையு மாகு மூலமாய்த்
திகழ்ந்துள பகுதியுஞ் செப்பு முப்பது
மிகழ்ந்துள பாசமும் பத்து மூன்றென
மகிழ்ந்துள மறைபொடா கமம றைந்ததால். 2

வேதனைத்திரயம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1177.

## 23. பூதவியற்பஞ்சவிம்சதி.

தத்துவதீபிகை

* செவியாதி சத்த மாதி திகழும்வான் வளிதீ நீர்மண்
புவியாதி யடைவே வாக்கா திகள்புகல் வசன மாதி
யவியாத மனாதி யந்தம் பகுதியைந் தவனை மோரிற்
புவியாதி யியல்பை யைந்தும் புமானுருப் போத மேகாண். 1

பூதவியற்பஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1178.

## 24. புறநிலைப்பஞ்சவிம்சதி.

வீட்டுநெறி.

என்பொடு நரம்பு நிறைச்சி மயிரெனப்
பொன்படு பூமி பொருந்திய கூறே. 1
மூத்திரஞ் சுக்கில மூளை யொடுநிணம்
சேர்த்தெழு சோரியு நீரின் கூறே. 2

பசியே சோம்பு நித்திரை மறவி
வசிதரு மைதுன மங்கியின் வகையே. 3
ஓங்க லோட † லுரைத்த லிருத்தல்
வாங்க லென்றிவை வாயுவின் கூறே. 4

† விரைத்த னடத்தல் என்றும் பாடமுண்டு.

குரோத முலோப மிலச்சை பயமொடு
நிரோதமின் மோக நீள்விசும் பாமே. 5

### தத்துவதீபிகை.

* மண்ணதனி னென்பொடுதோ னரம்பி றைச்சி மயிரென வைந் தப்பதனி னுவர்நீர் மூளை, பண்ணியசுக் கிலஞ்சோரி நிண மைந் தங்கி பசிதாக நித்திரைமை துனம றப்பா, நண்ணியகாற் றுரைபோங்க னடத்த னிற்ற லிருத்தலென வைந்தாம் வானிற், கண்ணுறுபயங் கதமிலச்சை புலோப மாசை கருதுடம்பிற் புறநிலையா மைமையந் தன்றே. 6

புறநிலைப்பஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1184.

## 25. உண்ணிலைப்பஞ்சவிம்சதி.

### சித்தாந்ததீபிகை.

* செவியாதி வாக்காதி தானம் பத்திற் றிகழ்சத்த வசன முதல் விடயம் பத்தும், பவமாமத் தானத்தி னுணர்ந்து பண்ணும் பகர்ஞான கருமவிந் திரியம் பத்துந், துவமாகச் சிந்தித்தாய்ந் தேதுணிந்து துரிசறவே செய்யுமன முதலா நான்கு, மவையாளு மவனுடனுள் ளவையுந் தன்றி யறைதூல சூக்கபர மைமையந் துவந் தேகள். 1

உண்ணிலைப்பஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1185.

## 26. தூலபஞ்சவிம்சதி.

நித்தியானந்ததீபிகை

* திகழ்த்தியவை யைந்திலெழு மும்மை யாகுந் திறம்
விடய காரணதா னத்தால் வேறாய்,மிகுத்தசெவி வாக்காதி தானம்
பத்து மிளிர்வதன முதல வத்தைத் தான மைந்தும், வகுத்தமண்
ணின் கூறதுவா நரப்பெ லும்பு மயிர்தசைதோ லெனவைந்து மப்
பின் கூறு, நிகழ்த்துதிர சுக்கிலமற் றுவர்நீர் மூளை நிணமெனுமை
யைந்துந்தா னேசீர தூலம். 1

தூலபஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1186.

## 27. சூக்கபரபஞ்சவிம்சதி.

சித்தாந்ததீபிகை

* சத்தாதி வசனாதி விடயம் பத்துந் தகுமங்கி வாயுவொ
டா காய மூன்றி, லாய்த்தாய கூறதுவா மொருமூ வைந்து முறைத்
தவிவை யையைந்து முணரிற் சூக்கம், வைத்தாய ஞானவிந் திரிய
மைந்தும் வருகருமேந் திரிய மைந்தும் வாயுப் பத்துஞ், சித்தாகு
மெனநிகழுங் கரணந் தேர்வான் றிகழ்பரவை யைந்தெனத்
தெளிக வையா. 1

சூக்கபரபஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1187.

## 28. மறையியற்பஞ்சவிம்சதி.

சனற்குமாரம்

* ஆகா சாதி பூதங்க ளைந்தும் பஞ்சேந் திரியமும்
போகாப் பத்து விடயமும் போத கரண நான்குடனு
மேகா திபத்தி மன்றானு மிருபத் தஞ்சாந் தனிநினையச்
சாகா லங்க ளில்லாதான் றானே யீச னென்பானே. 1

மறையியற்பஞ்சவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1188.

## 29. அட்டவிம்சதி.

திருவாய்மொழி.

மங்க வொட்டுன் மாமாயைத் திருமா லிருஞ்சோ லைமேய
நங்கள் கோனை யானேநீ யாகி யென்னை யளித்தானே
பொங்கைம் புலனும் பொறியைந்துங் கருமேந் திரிய மைம்பூத
மிங்கிவ் † வுயிரே பிரகிருதி மானாங் கார மனங்களே. 1

† வுயிரேய் என்றும் பாடமுண்டு.

ஞானசித்தி.

பூத மைந்தும் புலனைந்தும் பொறிக ளைந்தும் பிறிகருமே
பேத மைந்து நாற்கரண முடையான் பஞ்ச விம்சகனே. 2
இவனு மிவன்றா னுடைப்பகுதி தனையு முடையான் பரமனை
யவனு முவனும் பகுதியுந்தா னாகி நிற்கும் வியோமமே. 3
இதனை யுடையா னீசனே யின்றி யமையா திரண்டுமே
யதனை நீயென் றறிமெய்யென் † றறிந்த வேத முரைக்குமே. 4

† அந்த என்றும் பாடமுண்டு.

பகுதி புருடன் பரப்பிரம மீச னைய வறிவுருவே
விகுதி யிருபத் தொடொன்றாய் விரிந்த யோனி யளவிலவே. 5
அறுநான்கும் வடிவுடைய பகுதியுரு வகிலமுமே
வெறுநான்கும் வடிவுடைய புருடனுரு வெறுமறிவே. 6

அட்டவிம்சதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1194.

## 30. சடுத்திரி (முப்பத்தாறுதத்துவம்).

மெய்ஞ்ஞானவிளக்கம்.

செவியாதி வாக்காதி யோரைந்துஞ் செவ்விடய மோரைந்து
மனாதி யைந்துந், தவிராத பிராணாதி வாயு வைந்துஞ் சாக்கிரமே
முதலைந்தா மவத்தை தாமுங், குவியாது மலராது கூடி நின்றே
கூட்டாவற் றவைபுணர்ந்தா ரென்று மாகப், பவியாத வறியாத
பரம மானோர் பகர்ந்தனர்தா மாறாறின் பரிசி தென்றே. 1

குறுந்திரட்டு.

அட்டவிம்சதி.

நண்ணும் பகுதி முடிவான நான்கா றதுவும் புருடனுமே
யுண்ணும் பொறிமே லிவன்மாலா யுள்ள கரணத் துடனெங்கப்
பண்ணுங் கால பரமத்துவும் பரம வியோம மும்பரமா
வெண்ணு மியோமா தீதமுமா யிருபத் தெட்டென் றியப்புவரால். 336

### தத்துவதீபிகை.

* ஆறாறு தத்துவமா மவற்றைக் கூறி னசுத்தமொடு மிச்சிர முஞ் சுத்த மென்னக்,கூறுகிப் புவிமுதலாப் புருட னீறாக் குறித்த விரு பத்தைந்து மசுத்த மாகும், வேறாகக் கலைநியதி கால மாயை வித்தையிரா கம்மிவைமிச் சிரம மாகும், பேறாய விச்சை சிவன் சத்தி யீசன் பெருகுசதா சிவஞ்சுத்த மெனவைந் தாமே. 2

### மெய்ம்மொழி.

செப்பிடுந் தத்து வங்கள் சிவன்முத லவனி யந்த
முப்பதோ டாறு நாம மொழிந்தவில் வடைவி னுமேல
யொப்புடை யுதயம் பேத முருபகா ரியங்க ளெல்லா
மிப்படி யிருக்கு மென்றே யெடுத்தினி தியம்ப லுற்றாம். 3

எரியது சேர்வித் தாங்கே யிருஞ்சிவஞ் சேர்ந்த தெல்லாந்
திரியவும் பிறவா தாகுஞ் செகமெலாஞ் சென்ற டங்கி
விரியுமவ் விடம்வே றாக வேண்டிடு மதுமா மாயை
தெரிவுறு நல்லோ ரத்தைச் சிவத்தின்றத் துவம தென்பார்.

முந்தித்தான் சிவதத் வத்தின் முழுதுல குற்ப விக்கச்
சந்தித்த தியாது செப்பிற் சத்தித்த் துவம தாகு
முந்தித்தான் ஞான சத்தி யொக்கவே கிரியா சத்தி
சந்தித்த விடத்திற் செய்த சதாசிவ தத்து வங்காண். 5

அற்பமா ஞான சத்தி † யதின்மிக்க கிரியை தன்னி
னுற்பவச் செயலே யீச தத்துவ மெனவு ரைப்ப
ரற்பமாக் கிரியா சத்தி யதற்குமேன் மிக்க ஞானத்
துற்பவ மாகும் வித்யா தத்துவ முரைக்கி னன்றே. 6

† யதிமிக்க என்றும் பாடமுண்டு.

சித்திரித் துலகம் பண்ணச் சிவாதித் துவத்து தித்த
வித்திறத் திச்சை யாதி சத்திக ளேற்றத் தாழ்வை
வித்தரித் துரைத்த வற்றின் வியாபார பேத மான
சுத்தவிவ் வைந்துஞ் சொல்லிற் றோற்றமுற் பிற்பா டின்றே.

சுத்தமா மாயை தன்பாற் றோற்றிய பேதஞ் சொன்னோ
மத்தமா மாயை தன்பான் மற்றுள தத்து வங்கே
ளத்தனே யிரண்டோ மாயை யன்றுகா ணவத்தா பேத
மெத்தன்மை தர்ப்ப ணத்தி னிருபுறம் போலு மன்றே. 8

ஏகந்தா னறிதற் கொண்ணா தெங்குமுன் டனித்த மன்று
போகங்கள் பிறப்பிக் கின்ற புவனகா ரணம தாகு
மாகந்தோ யுயிர்கட் கெல்லா மவ்வவர் வினைக்குத் தக்க
மோகங்கள் பிறக்கப் பண்ணு மோகினி யென்னு மாயை. 9

மூலத்தி னின்றுங் கால மூன்றுமே யுருவ மாகி
யேலத்தான் கால சத்தி யாவையு மாகத் தோன்றிக்
காலத்தின் வசத்தி னாலே கலித்தவிவ் வகில மென்றே
சீலத்தி னாலே யத்தைச் செப்புவர் கால மென்றே. 10

கனந்தரு மாயை‡ யென்றுங் காலதத் துவத்தின் பின்னே
யனந்தரந் தோன்றி யாதொன் றகிலமு நியமஞ் செய்தங்
கினந்தொறு நியம மேதன் வடிவமா யிருக்கு மென்று
மனந்திகழ் நல்லோ ரத்தை மதித்தனர் நியதி யென்றே. 11

‡ யென்னும் என்றும் பாடமுண்டு.

படர்ந்துள மாயை யின்றும் பகர்ந்தவந் நியதிப் பின்பா
யடைந்துள மலத்தி னாலே யறிவிலாப் புமானுக் கத்தைக்
கடந்ததோ ரிடத்தை நீக்கிக் கத்திரு சத்தி காட்டி
யுடன்றிகழ் வாக்கு மித்தை யுரைத்தனர் கலைய தென்றே.

பின்கலை பிறந்த தேனும் பேசிய நியதி கால
முன்கலை யாம்பு மாற்கே மொழிந்திடின் வினியோ கத்தி
னன்கலை யறிவி னாலே நாலில மந்த மாகத்
தன்செயல் யாவுஞ் செய்யுஞ் சகலதத் துவங்க ளென்றே. •

தூண்டிய வறிவி னாலே தொழில்விட யங்க ளான்மா
காண்டகு நிமித்த மாகக் கலைபது பெற்ற வித்தை
யீண்டிய மலத்தை நீக்கி யாவையுந் தரிசிப் பிக்க
வேண்டுநற் கரண மாகும் வித்தையென் றறிக வின்றே. 14

தெரிந்தவிவ் விடயம் மேலே சேதனன் றனக்கு நேயம்
பரிந்துமுன் பண்ணு மித்தைப் பகர்ந்தன ரிராக மென்றே
விரிந்தவவ் விடயஞ் செய்யில் விதரா கரையுங் கண்டோம்
புரிந்திடும் புத்தி யாமேற் புறம்பதி னுள்ளா மன்றே. 15

## ஞானசூரியன்.

* அறைதரு முப்பத் தாறி னசுத்தமா மிருபத் தைந்து
நெறிதரத் தெரிய முன்னே நிகழ்த்தினே னின்ற வற்றிற்
செறிதருஞ் சுத்த மைந்துந் திகழுமிச் சிரம மாறு
மறிவுறத் தொகுத்த தத்திற் கானுமா றருளி டாயே. 16

* சுத்தமாம் பரமா பாவகால் வியோமஞ் சொல்லிய சிவமதா
மதனி, னுய்த்தெழுந் துருத்தல் சத்தியா முருத்த வுணர்வுண
ருதல்சதா சிவமா, மத்தகு முணர்வ தீதமென்றீச னகமெனு
மிடமதே விச்சை, மெய்த்தகு முணர்வின் விளம்புமைந் திவை
தா மிச்சிர மத்தையுங் கேளாய். 17

* † இதமகம் பிறந்த விடத்தினவ் வியத்த மிருண்முதற்
பகுதியா மாயை, யதினெழுஞ் சலன மாமெழுங் கால மதிலமீ
தெழுமதா நியதி, ‡ விதமுறு மதனை யாய்விடங் கலையாம் விரித்
தவை யுணர்தல்விச் சையதா, முதிசெய்த விடயத் தன்பதா
மிராக § முண்டிடும் பரிசமேற் சுத்தம். 18

† இதமக மிறந்த என்றும், ‡ விதமுற வதனை யென்றும்,
§ மூண்டிடும் என்றும் பாடமுண்டு.

சடுத்திரி முற்றிற்று.

ஆகசெய்யுள் 1212.

## 31. நோன்வெற்றுரவ நந்தனம்.

மெய்ஞ்ஞானசரிதை.

* பூத மைந்து முடலிரண்டுங் கோச மைந்தும் பூதாங்கிர மைந்
மையந்தும் பாவ மாறும், வாத மைந்தோ மைந்தும்வரு கரணம் பன
னென் கலைவிடயம் பதினொன்கு மலங்கண் மூன்று, மேதம் வந்த
குணமூன்று மியல்பி லாத வேடணைக ளவைமூன்று மவத்தை
யைந்தும், பேதம் வந்த வினைவுணர்ந்தோ ரென்று மாகப் பேசிடு
வர் பெரியோர் தொண்ணூற் றாறென்றே. 1

சிவஞானநிலயம்.

பூதங்க ளோரைந்தும் பொருளிருபத் தைந்தும் புலனைந்
தும் பொறியைந்துங் கன்மிகமோ ரைந்து, மேதஞ்சேர் கோச
மைந்து மவத்தை யைந்து மினநாடி யீரைந்தும் வாயுப் பத்துங்,
கேர்தண்டக் கரணங்க ளான்குமல மூன்றுங் குணமூன்றுங் ‡ கண
மூன்று மேடணைகண் மூன்றும், பேதங்கொ ளுடம்பிரண்டும்
வினையிரண்டும் பேர்க்குணருந் தானுமெனப் பிறழ்தொண்ணூற்
றாறென்றே. 2

‡ பிணி என்றும் பாடமுண்டு.

### சமயாசாரம்.

எறித்திடுந் தூல சூக்கும பரமா விசைந்தமுப் பஞ்சவிஞ் சதியு,மறைத்திடு மலமுக் குணந்துயர் பந்த மல்குமே டணையென் மூ வைந்துஞ், செறித்திடு மிராகங் கலைகால நியதி திகழ்விச்சை யென்றுள வைந்து,நெறிப்படு மிந்தக் கேத்திரத் தனுமா நிகழ்த் தினர் தொண்ணூற் றறென்றே. 3

### தேவாரம்.

† போக்கமே மிக்கு நின்று புழுவிடை முடைகொள் யாக்கை
தொக்குநின் றைவர் தொண்ணூற் றறுவருந் துக்கஞ் செய்ய
மிக்குநின் றவர்கள் செய்யும் வேதனைக் கலந்து போனேன்
செக்கரே திகழு மேனித் திருக்கொண்டீச் சரத்து ளானே. 4

† போக்கமாய் நின்ற பொல்லாப் என்றும் பாடமுண்டு.

### திருமந்திரம்

முப்பது முப்பது முப்பத் தறுவருந்
செப்ப மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிலுடைக் கோயிற் சிதைந்தபின்
ஒப்ப வனைவரு மோட்டெடுத் தாரே. 5

தொண்ணூற்றாறுதத்துவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1217.

## 32. பல்வகைத்தத்துவம்.

### தத்துவதீபிகை.

இன்ன மோதுவா ராறதெட் டொன்று மிசைத்த வைம்பதோ டொன்றத னியல்பு,மன்னு மெட்டதெட் டிரண்டதின் மரபு மதித்த நூற்றொரு பத்திரு வகையுஞ், சொன்ன தொன்றுசொற் சதமொடை யாறுந் தொகுத்த நூற்றுமுப் பத்தோர்தத் துவமு, மென்ன வேயிவை முதற்பல மொழிவ ரிசைத்த பல்வகைத் திவற்றையு மறிவாய். 1

* காரி யத்தினிற் பொறிபுலன் விடயங் கரண பூதநான் காறதின் பரிசு,மேரி யற்படு ‡ காரணத் தவிச்சை யியற்கை யைந்தொழி லிடமதைந் ததுவுஞ், சாரு நற்பரஞ் சத்தியைந் துறுபேர் தாணு மைந்தெனச் சமைந்தவை யைந்து, மாரி யற்பட வாறதெட் டொன்று மறிவர் மற்றவ ரறிஞரென் பவரே. 2

‡ காரண பூத வியற்கை புர்சொழி என்றும் பாடமுண்டு.

### திருச்சந்தவிருத்தம்.

ஐந்து மைந்து மைந்து மாகி யல்ல வற்று ளாயுமா
யைந்து மூன்று மொன்று மாகி நின்ற வாதி தேவனே
யைந்து மைந்து மைந்து மாகி யம்பரத் தணைந்து நின்
றைந்து மைந்து மாய நின்னை யாவர் காண வல்லரே. 3

### தேவாரம்.

பிரியாத குணமுயிர்கட் கருள்செய் தான்காண் பிரிவுடைய
குணம்பேசிற் பத்தே தானொன்றாய், விரியாத குணமொருகா
லெண்கே யென்பர் விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்,
தெரிவாய † தொழிலைந்துஞ் சமிதை யைந்துங் கதியைந்தும்
பூதமைந்துஞ் செய்பிரானு, மெரியாத தாமரைமே லியங்கி னாரு
மிடைமருதூர் மேவிய வீசனாரே. 4

† குணமைந்துஞ் என்றும் பாடமுண்டு.

### தத்துவதீபிகை.

* ஆறு மார்க்கமு மளவையா றெடுகோ ளாறு மாறுமைம்
பாசமைங் கரண, மேறு மேதுவந் தியல்வினை யிரண்டு மெறிக்த
முக்குண மெழுபிறப் பதுவும், பாறு மாறுகா மாதியோ ரெட்டும்
பண்ணு சத்தசத் திருமைநுண் பூத, மாறெ டாகிய வறுபதுந்
தெரிந்தங் கறிய வல்லவ ரறிஞரென் பவரே. 5

### திருச்சந்தவிருத்தம்.

ஆறு மாறு மாறு மாயோ ரைந்து மைந்து மைந்துமா
யேறுசீ ரிரண்டு மூன்று மேழு மாறு மெட்டுமாய்
வேறு வேறு ஞான மாகி மெய்யி னோடு பொய்யுமா
யூறொ டோசை யாய வைந்து மாய வாய மாயனே. 6

### தேவாரம்.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும் பூதலங்க
ளவையெட்டும் பொழில்களெட்டுங், கலையெட்டுங் காப்பெட்டுங்
காட்சியெட்டுங் கழற்சே வடியடைந்தார் களைகணெட்டு, நகையெ
ட்டு நாளெட்டு நன்மையெட்டு நலஞ்செறிந்தார் மனத்தகத்து மல
ர்களெட்டுந், திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னேபின்னே திரு
வாரூர் கோயிலாக் கொண்டநாளே. 7

### தத்துவதீபிகை.

* சிவமுதலைந் திராகாதி யைந்துஞ் சேருந் திகழ்நிவிர்த்தி
முதலைந்து மூர்த்த மூன்று, மவமுறுமுப் பிணிதுயரஞ் சங்கங்
குற்ற மாகியபா சங்களுநற் சுடர்தான் மூன்றுந், துவமுறமுற்
சாற்றியிடுந் தொண்ணூற் றாறுந் தொகுத்துரைத்த நூற்றிருபத்
தொன்ப துங்கா, ணவமுதற வாய்ந்த வற்றைக் கடந்த வுண்மை
யறிந்தவர்க ளமலனோ டுறுக வையா. 8

திருச்சந்தவிருத்தம்.

மூன்று முப்ப தாறி னோடொ ரைந்து மைந்து மைந்துமாய்
மூன்று மூர்த்தி யாகி நின்று மூன்று மூன்று மூன்றுமாய்த்
தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமா
யென்றெ னாவி யுட்கலந்த தென்கொ லோவெம் மீசனே. 9

சமயாசாரம்

* பொறியைந்தும் புலனைந்தும் பொருள்க ளைந்தும் பூதங்க ளைந்தும்வாக் காதி யைந்து,மறி வைந்துந் தொழிலைந்து மலத்தை யைந்து மாதார மைந்துங்காற் றைந்து மாண்மாக், குறியைந்து மருவுருவை யைந்து மொன்றிற் கோளைந்துங் கோச மைந்தும் பாச முமைந்து, நெறியைந்து மறதியைந்து நேசாதி யாறு நிமல பத மைந்துமிவை நிலையாற் றோ ரறிஞர். 10

பல்வகைத்தத்துவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1227.

## 33. தத்துவத்துணிவு.

விநாயகம்.

ஓதுதத் துவமெலா முரைத்த வண்ணமே
சிதயத் தெளிந்தனன் றிகழ்த்து மற்றவை
கோதெனக் கழிவுறும் பரிசுங் கோதிலா
நீதிறத் துவத்துநிச் சயமுஞ் செப்புவாய். 1

தத்துவநிலை.

சுத்தமே தாங்கத் துள்ளுந் துகளறு சிவாக மத்து
மித்தகைத் திசைத்த விந்தத் தத்துவ வேற தெல்லா
முய்த்தனன் மயக்கத் தாரோ பிதமெலா மொழியத் தெள்ளி
மெய்த்துற வுண்மை காண்டல் வேறொரு பொருளன் றுமால். 2

தத்துவாத்திறவலி.

இந்திய மிருபதோ டிரண்டி ரண்டெனத்
தந்திர மோதுவர் சமைந்தி லாதவ
ரிந்திய மாயையி னிறைந்த போதினில்
வந்தது பலவென மறுவி காரமே. 3

### யோகசித்தி.

* கோடி தத்துவ மெண்ணினுங் கோதிலா
நீடு சிற்பர நின்றது மற்றவை
யோட சித்தசத் தாய்விடு முண்மையாற்
பீடு றப்பல பேசல்பித் தல்லவோ. 4

### நித்தியபோதம்.

* கண்ணினிற் றிமிர காசக கறையினு விலக்கு மிந்து
வெண்ணிடைப் பலவ தான வியல்பென வெல்லையின் றோடக்
கண்ணினிற் கடவு ளேக மாயினும் பலவ தாகக்
கண்ணிடத் தருமே ஞான ‡ நயனம திலாமை யாலே. 5

‡ நலமது விலாமை யென்றும் பாடமுண்டு.

### மூலசிந்தி.

* தத்துவம் பலவெனச சாற்று வாரவர்
பித்தர்க ளெனுமிடம் பேச வேண்டுமோ
வத்துவின் வடிவல தின்றி நின்றபி
னெத்தனை † யிதுவல தென்னும் வண்ணமே. 6

† யிதுவென வெண்ணும் என்றும் பாடமுண்டு.

### போதாமிர்தம்.

* பன்னுவர் பலபல தத்து வங்களை
மன்னிய பரமுண ராக மாந்தர்கள்
மன்னிலை தனைபுணர் கின்ற போதினி
னன்னிய மிதுவென வறைய லாமதோ. 7

* கோலுமத் திரைநுரை குமிழி கொள்ளைதான்
வேலையிற் பிறிதென விளம்ப லானதோ
சாலுதத் துவம்பல சாற்று மாயினு
மூலநற் பரமதே முடிவி லுள்ளதே. 8

### சிவப்பிரகாசதரிசனம்.

* ஒன்ற தென்றிட லாவது மொன்றுமு
நின்ற தத்துவ நின்மல போகமே
பின்ற தொன்றுள தென்கை பெரும்பெறு
யென்று வேத மியம்பிய தல்லவோ. 9

### தத்துவதீபிகை.

ஆதலான் மைந்த வறைந்தத் துவங்களறிவிலா மையினுள வதுபோற், பேதமாய்த் தோன்றும் பெருமயல் கழியப் பேசினத் தனைபிறி தில்லை, வாதிலா ஞான மயமதா யொழியா மதுரசிற் கனசுகக் கடலா, யொப்புமோ ரவத்தை களுமிலா வுண்மை யிலங்கு தத் துவமென வறிக. 10

தத்துவத்துணிவு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1237.

# 9. அவத்தைப்பவணை.

## 1. தாதுகதாவத்தை.

விஞவிளக்கம்.

சகலத்த் தாவமெனச் சாற்றிய நிசனை
யகமுறத் தெளிவிலா தமையி லென்பது
திகரிறத் தவத்தினிச் சயமுங் கேட்டனன்
புகலுமற் றவத்தையின் பரிசும் பூரணா. 1

தத்துவசித்தி.

சத்தக்கு விகார மென்றுஞ் சம்பவித் திடாது நிற்கப்
புத்தித்த மென்ன முன்னே புகன்றன விகற்ப மெல்லா
மொத்துற்ற கடற்ற ரங்க வோதம்போல் விரிவொ டுக்கம்
பெத்தித்த பகுதி யின்றன் குணங்கள்காண் பேசி னன்றே.

மனுதி யைந்திறு வரணமுறு நட்டமாம் வடிவா
லினுத சித்துமா யிருந்தன வின்கிலை யிரண்டு
நனுமு ணுங்ய நான்கிம்ஞ டொன்றெனு மிவற்றை
விஞவு ருவகை விளம்புவாம் விதிமுறை விரித்தே. 3

அஞ்செ னப்படுங் கரணம தான்மசன் னிதியால்
விஞ்ச சைதன வத்தென விளங்கிடு மிதுமு
னைஞ்சு மூன்றுமா யமைந்ததா துக்களைப் பற்றித்
துஞ்சி டாவகை நின்றபோ துணர்ச்சியாஞ் சொல்லின்.

* உறக்க மாயிநங் குருதிதோ லொழிக்ககா லீதே
யிறைச்சி சூழ்நிண மிறந்திடிற் சுழுத்தியா மென்க
துறக்கி னென்புமச் சைகளினைத் துரியமாஞ் சோர்வான்
மறக்கின் மற்றுள விரண்டையு மருவுமா லதீதம். 5

தாதுகதாவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1242.

### குறுந்திரட்டு.

சுத்ததா மான்ம சன்னிதி யதனிற் சைதன்யம் போலவே சரிக்குஞ்
சித்தமா திகளா மட்டதா துக்கள் செறிவுறு பொழுதது நனவா [த்தி
மித்திலே சொரிதோல் விடிற்கன வாகு மிறைச்சிசேர் நிணம்விடிற் சுழு
யத்திமச் சைகளை விடிலது துரிய மடையலே விடும்பொழு ததீதம். 1

# 2. குணவத்தை.

மெய்ம்மொழி.

போதமும் போதா போதம் போதமில் லாமை மூன்றும்
பேதமு மபேத மாய பிரகிரு தியின்கு ணங்காண்
போதமாஞ் சத்து வந்தா னிராசதம் போதா போதஞ்
சாதமே யபோதஞ் சொல்லிற் றாமத மாகு மன்றே. 1

திரிந்திடுந் திரிகு ணத்தாற் றிரிவித மாம வத்தை
விரிந்தநான் கென்பர் மீண்டுஞ் சொப்பனந் தனைமி குத்துத்
தெரிந்தசாக் கிரமு மத்தைச் சேர்ந்தசொப் பனமு மத்தில்
விரிந்தநற் சுழுத்தி யென்று மேவிடுந் துரிய மன்றே. 2

விடமதுக் கடங்கிப் போதம் விரிந்திடு மமுதுக் காங்கே
சடமுடை யுறக்க மாய தாமதத் தறிவ டங்கிச்
சடமதிற் சத்து வந்தான் சனித்தபி னெழுந்தி ருக்கு
மிடமுடைக் கனவி ரண்டு மிராசதத் துதிக்கு மன்றே. 3

ஒன்றொடொன் றொன்று மாறி யுறுகுணம் போல வத்தை
சென்றொடொன் றொன்று மாறித் திரிந்திடு மென்று கொண்ணீ
யென்றுமொன் றொன்றோ டொன்றின் யாதுமிக் கதுவ தென்று
நின்றவுட் குணமு ணர்ந்தா னீங்குநித் திரைய தன்றே. 4

மத்தவவ் வியத்திற் றோன்று மாயநித் திரையா யுள்ள
சத்திதான் புத்தி யாதி சமத்தமு மடர்த்த போழ்தே
யொத்தநற் சைத னன்றா னெடுங்கிறு னென்னத் தோன்று
மத்தன்மை யன்றி மற்றோ ரவத்தைக ளவனுக் குண்டோ. 5

குணவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1247.

குறுந்திரட்டு.

சத்துவ முணர்ச்சியாந் தமஞ்சு ழுத்தியா
மத்திமக் குணமதாம் வாத னைக்கனு
முத்திறக் குணங்களான் மூன்ற வத்தையு
நித்தலுஞ் சக்கர நெறியின மேவுமால். 1

## 3. அவத்தாந்தராவத்தை.

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

ஒன்றினு லாக விம்மூன் றுரைத்தவிப் பரிசே தென்னிற்
சென்றசொப் பனமி குத்துச் சுழுத்தியாய்த் தெரித்த மூன்றி
னின்றொரு பொருணற் காட்சி யாபாச நினைவ யர்த்த
லென்றுநா லொன்றி னாகி யிசைந்தன வென்று கொண்ணீ. 1

ஏற்றியசாக் கிரமாதி மூன்று மொன்றி னனவாதி நான்கவத்
தை யிசைத்தல் கூறிற்,சாற்றலுறு ஞாதமொடு நினைவஞ் ஞாதந்
தனைமூன்றங் குறுஞான மெனநான் காகும்,போற்றியவிக் கனநன
விப் பரிசே கொள்க பொருந்திபநற் † சுழுத்தியுருப் பசையொ
டுக்க, மாற்றியமுத் தசையுறுஞா னந்தா னென்ன வறைந்தனரித்
திறம்வகுத்தங் கறிஞ ரையா. 2

† சுழுத்தியுறுப் பசைவோ டேக்க என்றும் பாடமுண்டு.

ஆதலின்முத் தசையினினு முளதா யொன்று யவிநாசி யாய
மல மதுவாய் நின்ற, போதமதெத் தசையினிலும் பொருந்த
நோக்கிப் புரையறுதல் போந்தபொருள் புரைய தென்ன, வோதிய
முத் தசையினிலு மவத்தை யாகி யொடுங்கி டத்தும் விரிந்திடத்து
மொருமைத் தாகிப், பேதமினற் றுரியமெனும் பிரமந் தன்னைப்
பெற்றவத்தை யெய்துமறியார் பெருமை யோரே. 3

அவத்தாந்தராவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1250.

### துறுந்திரட்டு.

நனவொடு கனவு சுழுத்தியே துரிய நான்கெனச் சொலப்படு மவத்தை
சொனவவை யொன்றி லவத்தைநான் கெல்லாப் புலன்களும் வழங்கரு
னனவா, நனவதப் பரிசை நினைவது கனவா மறப்பது நனவினிற் சுழுத்தி
யினமறத் தானுய்ப் பிறிதில்லை நினையா திருப்பது நனவினிற் றுரியம். 1

கனவினை நனவு போலவே காண்டல் கனவினி னனவதாங் கனவிற்
கனவது கண்டு மறத்தலா னதையும் பிறிதையுங் கண்டிடா திருத்தல்
கனவினிற் சுழுத்தி மூன்றவத் தையையுங் காண்பதோர் கரியுள தென்ன
வனுமதித் திடுதல் கனவினிற் றுரிய மாகுமென் றறைந்தன ரறிஞர். 2

# 4. ஆதாரகரணகதாவத்தை.

## மெய்ம்மொழி.

இந்துத்தா னத்தங் குற்றுச் சாக்கிர மியாவுஞ் செய்கை
மந்தித்துக் கண்டந் தன்னின் மதித்தல்சொப் பனஞ்சு ழுத்தி
கந்துற்ற விருத யத்திற் கனவுகண் டறியா தானை
யந்தித்தா தாரம் புக்கங் கறிவற றுரிய மன்றே. 1

## மூலசித்தி.

மூன்று விதமாஞ் சாக்கி ரத்தே ஞானந் தருமம பானமே
† தோன்றுங் கண்ணிற் கழுத்ததனி னாபி தனிலிங் கொத்தனுமே.

† தோன்றுங்கழுத் திருதய நாபி தனிலிங் கத்திலுமே என்றும் பாடமுண்டு.

இருபத் தைந்து தத்துவமும் வாயுப் பத்துஞ் சாக்கிரமே
யொருபத் துடைய விடயமும் வாயு மனாதி கனவாமே. 3

இரும்பு நெருப்பு ணங்கியாபி னின்ற படிபோற் கனவாகுந்
தரும்பல் வாயு வளவுமனந் தன்னை விடாமை சுழுத்தியே. 4

வாயுச் சுழுனை தனினடங்கி மனமங் கொழிந்த துரியமே
யாயு மிடங்கோ ரொழியாதே யடங்க வடக்க லதீதமே. 5

## குறுந்திரட்டு.

### அவத்தாந்தராவத்தை.

சுழுத்தியி னனவு பிறிதையுந் தனையுந் தோன்றிடா திருந்துள விடமாஞ்
சுழுத்தியிற் கனவு தோன்றிடா திருந்த விருளது தோன்றிய விடமாஞ்
சுழுத்தியிற் சுழுத்தி தோன்றிய வறிவா லவ்விரு டுஞ்சிய விடமாஞ்
சுழுத்தியிற் றுரிய மவ்வறி விறந்த துளக்கமில் சொல்லரும் பாழாம். 3

துரியத்தி னனவு துலகெலா முணர்ந்த துளக்கமில் லேகமா முணர்வாங், துரியத்திற் கனவு இதமொழிந் தகத்தே தோன்றிய தன்னைநோக் குதலாங், துரியத்திற் சுழுத்தி யிதமக மியாவுந் தோன்றிடாச் சொல்லரும் பாழாங், துரியத்திற் றுரியஞ் சொல்லரும் பாழ்போய்ச் சொரூபமா யாவையுந் தோன்றல். 4

## ஞானாமிர்தம்.

கால்கொடுத் திருகை மூட்டி வாழிய
வெந்நிற் றண்டென் விடங்கத் தின்னியற்
பழுக்கழி நிரைத்துச் சிரைந்கயி றசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
யைம்புலச் சாளரத் தரும்பெறன் மாடத்
தும்பர் மணிக்குடச் சென்னிப் பொங்கிய
கூந்தற் பதாகை நான்குநிலை தழீஇய
வாங்கினி தமர்திற னறையி னூன்ற
சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம்
பிருகுடி நாப்பண் ணொருபெருங் கந்தர
மருமத் தாதி வலஞ்சுழி யுந்தி
பொருநாள் கங்குலி யும்பர் வான்முறை
செவிமெய் கண்வாய் மூக்கெனப் பெயரிய
வாயின் மிலேச்சர் சாரணர் தூதர்
சூத மாகதர் புரோகித ரென்ற
மேதகு புத்தீந் தியமுந் தீதறு
வாக்கொடு பதங்கை பாயு றுபத்தமென்
னிவுளி மறவரும் யானை வீரருந்
திகிரி தூண்டிய தறுக ணாளரும்
வன்கண் மள்ளருந் தந்திரத் தலைவரு
மென்கரு மேந்தியத் திறனு மெஞ்சிய
வோசை பரிச முருவ மிரதங்
கந்த முரைநடை கொடைபோக் கின்பமென்
விடயப் பல்பரி சனமு மிடையாப்
பிராணா பான வுதான வியான
சமான நாக கூர்ம கிருகர
தேவ தத்த தனஞ்சய னென்ற
விரைந் துறுதிச் சுற்றமு நீதி
சிந்தித் தாய்ந்து துணிந்து செயப்படு
மந்தக் கரண வமைச்சருந் தந்த
முறைபுரி வழாது துறைதோ றீண்டிச்
சாதுரங் கத்து நீதி யாகிப்

பேறத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுவ வீசி விரும்புவ விரும்பி
மாசில் காட்சி மன்ன னீங்கிப்
பல்பரி வாரமும் விள்ளாச் சுற்றமுந்
தந்திரம் புணர்ந்த மந்திர மாக்களும்
பலர்புக லறியா வவைபுகு மரங்கி
னிலைந்தாய்ந்து துணிந்துசெயன் மணந்தினி துணர்ந்து
நனவெனக் கனவி னன்னடை வழாஅ
துரைத்தனன் சொப்பனத் தகத்தினி திறந்து
மந்திரத் தலைவனும் வன்கடும் பதிபனு
மந்திர பூமி மருங்கு போகிச்
சிந்தை மாத்திரங் கனவலி னனவிற்
றந்துறை சுழுத்தி யின்றே மந்திரத்
தலைவற் றணந்து விலைவரம் பில்லாச்
சிங்கஞ் சுமந்த வைம்பே ரமளிப்
பள்ளி மண்டபத் தானுந் தணந்து
திகிரி யுருண்ட பெருவனப் பெய்ப்ப
வுறுதிச் சுற்றத் தெறிவளி யெடுப்ப
வேற்று மிழிவு சிற்ற மாற்ற
விழிச்சல் பழிச்ச வின்பத் துன்ப
மொழித்தனன் றுரியத் தழித்தினி தகைதத்
தொருவகை யெங்கணு மாகி யிருளிரி
சுடர்த்தொழிற் சாக்கிரத் தாங்க ணோங்கி
னிடைத்தகை தெரிதனிற் றெரியு மாறே.

(இ-ள) கால்—அறையின் (எ-து) இரண்டுகாலையும் நாட்டி யிரண்டு கையையும் வைத்து முதுகிலே வாழப்பட்ட வீணைதண்டென்னு முகட்டிலே யினிய வியல்பாகிய பழுவெலும்புகளென்னுங் கழியைச் சுவராக நிரைத்து நரம்பென்னுங் கயிற்றினாற் கட்டப்பட்டு இந்தக் கழிச்சுவரிலே மாங்கிசமென்னு மண்ணாலேமேவி மயிரையுடைத்தாகிய தோலாலே வேயப்பட்டு இந்திரியமைந்தாகிய சாளரங்களையுடைய விந்தப்பெறுதற்கரிய மாடத்தின்மேலே பூரணப்பொற்குடமாகிய தலையையும்பெற்று மிக்கிருக்கப்படாநின்ற கூந்தற்கொடியையும் நான்கு நிலையையும் பொருந்திய அவ்விடத்தினிதாக இந்தத் தேகத்துக்கரசனாகிய ஆன்மா வர்த்திக்கு முறைமையைச் சொல்லின்,

ஆன்ற—உம்பர் (எ-து) புருவமத்தியிலே நின்றபோதுவிசாலமுடைத்தாகிய சாக்கிராவத்தையென்றும் ஒப்பில்லாத பெரியகழுத்தடியிலேநின்றபோது சொப்பனவத்தையென்றும் நெஞ்சடியிலே நின்றபோது சுழுத்தியவத்தையென்றும் வலமாகச் சுழித்திருக்கின்ற நாபித்தானத்திற்கு மேலே நாலங்குலம் கீழே நாலங்குலம் ஆக வெட்டங்குலத்து நின்றபோது துரியாவத்தையென்றும் சொல்லப்படும்.

வரன்முறை—புத்தீந்திரியமும் (எ-து) சாக்கிராவத்தை தொடங்கிவரு முறைமையாவது செவியிலே நின்று போகங்கொள்ளும் வாயின்மிலேச்சராகிய அநாரியமெய்காப்பாரும் மெய்யிலே நின்று போகங்கொள்ளுஞ் சாரணராகிய ஒற்றருங் கண்ணிலேநின்று போகங்கொள்ளுந் தூதுபோவாரும் வாயிலேநின்று போகங்கொள்ளும் சூதமாகதராகிய எத்தாளரும் மூக்கிலேநின்று போகங்கொள்ளும் புரோகிதருமென்று சொல்லப்பட்ட மேம்பாடு தமக்கிருக்கப்படாநின்ற ஞானேந்திரியவர்க்கமும்,

தீதறு—திறனும் (எ-து) குற்றமற்ற வாக்கிலேநின்று போகங்கொள்ளுங் குதிரைச்சேவகரும் காலிலேநின்று போகங்கொள்ளும் யானைமேல் யுத்தவீரரும் கையிலே நின்று போகங்கொள்ளுந் தேர்செலுத்தும் பயமிலராகிய தேர்மேல் யுத்தவீரரும் பாயுருவிலேநின்று போகங்கொள்ளும் வன்கண்ணரான காலாட்களும் உபத்தத்திலேநின்று போகங்கொள்ளுஞ் சேனாதிபதியரும் என்று சொல்லப்பட்ட கன்மேந்திரியவர்க்கமும்,

எஞ்சிய—பரிசனமும் (எ-து) இவ்விந்திரியங்களுடனே கூடிய சத்த பரிச ரூப ரச கந்த வசன கமன தான விசர்க்கானந்தம் என்று சொல்லப்பட்ட விடயமாகிய பல பரிவாரத்தாரும்,

இடையா—சுற்றமும் (எ-து) இதயத்தில் இந்திரநீலநிறத்தையுடைய இடை பிங்கலை சுழுமுனையிற் போக்குவரவுசெய்யுங் கெடாதபிராணவாயுவும் குதத்தில் இந்திரகோப நிறத்தையுடைத்தாகி மலசலங்களைப் பிரிக்கும் அபானவாயுவும் நாபித்தானத்திலே மின்னொளியின் நிறத்தையுடைத்தாகி அக்கரங்களைப் பிரிக்கும் உதானவாயுவும் உடல் முழுவதும் வியாபித்து நின்று பாலனிறத்தையுடைத்தாகித் தேகத்தைச் சுழித்தல் முதலிய தொழில்களைச் செய்யும் வியானவாயுவும் கண்டத்திற் காயாமலர் நிறத்தையுடைத்தாகி யன்னசாரத்தை நாடிதோறுஞ் செலுத்துஞ் சமானவாயுவும் இளஞாயிற்றினிறத்தையுடைத்தாகி நகைமுதலிய தொழில்களைப் புறம்பே செய்விக்கு நாகவாயுவும் குருந்தமலர் நிறத்தையுடைத்தாகிக் கண்ணையிமைப்பிக்குங் கூர்மவாயுவும் மஞ்சணிறத்தையுடைத்தாகித் தும்மலை யுண்டுபண்ணுவிக்குங் கிருகரவாயுவும் பளிங்குநிறத்தையுடைத்தாகிக் கொட்டாவியைச் செய்விக்குந் தேவதத்தவாயுவும் நீலாஞ்சன நிறத்தையுடைத்தாகித் தேகத்தை வீங்கவெடிக்கச் செய்யுந் தனஞ்சயவாயுவும் என்று சொல்லப்பட்ட தசவாயுக்களாகிய உறுதிச்சுற்றமும்,

நீதி—அமைச்சரும் (எ-து) முறைமையிலே ஒன்றைச் சித்தஞ்சிந்தித்துப் புத்திவிசாரித்து அகங்காரந் துணிந்து மனம் அத்தைச்செய்வித்து வருகிற அந்தக்கரண சதுஷ்டயமான மந்திரிகளும்,

தந்தம்—மன்னன் (எ-து) தந்த முறைமைகளிலே வழுவாதே துறைதோறுங்கூடிச் சதுரங்கத்து அசேதனமான கருவிகளைச் சேதனமாகக் கூறினாற்போலப் பெரிய அத்தாணி மண்டபமாகிய அந்தப் புருவமத்தியிலே சிறப்பாகக் குற்றமற்ற காட்சியையுடைய ஆன்மாவாகிய மன்னவன் பொருந்தி ஞானேந்திரியங்களால் அறிவனவற்றை யறிந்து கன்மேந்திரியங்களாலே செய்வனவற்றைச் செய்து,

நீங்கி—உரைத்தனன் (எ-து) இந்தச் சாக்கிராவத்தையிலே இந்திரியம்பத்தையும் நீங்கித் தன்மாத்திரைகள் வசனாதிகளாகிய பரிவாரங்கள் பத்தும் நீங்காத வாயுக்கள் பத்தாகிய சுற்றத்தாரும் விடயத்திற் கூடும் அந்தக்கரண சதுட்டயங்களாகிய மந்திரிகளும் மற்றைத் தத்துவங்களாகிய பலரும் புகுவதன்றி இங்ஙனஞ்சொன்ன இருபத்து நான்கு தத்துவங்களாகிய விவர்களை புகப்பட்ட கண்டத்தான மாகிய வாங்கிலே சித்தஞ்சிந்தித்துப் புத்தியாராய்ந்து அகங்காரந்துணிந்துமனம் அத்தைச்செய்வித்து இத்தனையுங்கூடி யினிதாக அறிந்து நனவென்றுமயங்கிச் சொப்பனவத்தையிற் கண்டவாறு இந்தச் சாக்கிராவத்தையி லொன்றுந் தப்பாமற் சொன்னான்,

சொப்பனத்து—இன்றே (எ-து) சொப்பனத்தானத்தில் இருபத்திரண்டுகருவிகளைநிறுத்தித் தான்இனிதாக நீங்கி மந்திரத்தலைவனாகிய சித்தமும் உறுதிச் சுற்றத்தானாகிய பிராணவாயுவும் சுழுத்தியவத்தைத்தானமாகிய இதயத்திடத்திலே புகுந்து சிந்தித்தலுடைய சித்தமாத்திரமாய் மயங்குதலாலே சுழுத்தியவத்தையிற்கண்டபடி சாக்கிராவத்தையிற் சொல்லுந் தன்மையில்லை,

மந்திரம்—துரியத்து (எ-து) சுழுத்தியவத்தையிலே மந்திரத்தலைவனாகிய சித்தத்தை யொழித்துப் பெரும்விலை யளவிடுதற்கரிதாய சிங்காசனத்து மயிர்ச்சேணம் செம்பஞ்சுமெத்தை வெண்படாந்தூவி பயிர்ப்பின்மயிற் பீலி மீப்பாய் என்று சொல்லும் பஞ்சசயனமாகிய படுக்கையிற் பள்ளி மண்டபத்தே பள்ளிகொள்ளுகிற காலத்தும் அரசனுடைய சக்கரஞ்சென்ற பெரிய அழகுபோல உறுதிச்சுற்றமான தசவாயுக்களில் விளங்குகின்ற பிராணவாயு வியங்க உயர்ச்சியுடையேனென்றும் தாழ்வுபட்டேனென்றும் கோபமுடையே னென்றும் பொறையுடையே னென்றும் என்னை வைதார் வாழ்த்தினார் என்றும் சுகதுக்கமுடையேனென்றும் அறியுமிவையொழிந்து நாபித்தானத்திலே துரியாவத்தையிலே நின்றான்,

அழித்து—ஆகி (எ-து) துரியத்தானத்தில் பிராணவாயு நிற்க அந்தவவத்தையையொழித்து மூலத்தி லினிதான அதோமுக துரியாதீதத்திலே ஒருபடித்தாகிய ஆணவமல மறைப்பச் சர்வ வியாபியாகி யிருப்பன்,

இருள்—தெரியுமாறே (எ-து) ஆன்மா அவத்ஸதைப்படு நான்கிடத்தும் பெரியமலமாகிய இருளைக்கெடுக்குங் கருவிகளாகிய விளக்கின் ஹொழிற்றகைமையைச் சாக்கிரமாகிய வவ்விடத்தில் அறிகை நின்னையறியும்வழி—(அ-று) 6

ஆதாரகரணகதாவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1256.

## 5. கரணகதாவத்தை.

சனற்குமாரம்.

* ஓசையே பரிச முருவமே யிரதங் கந்தமே பொருளிய வைந்தும், வாசகந் தானங் கமனமே விசர்க்க மானந்த மென்றிவை யைந்தும், பேசிடின் மனமே புத்தியாங் காரஞ் சித்தமே பதினொன் குங் கூட, வாசில்சாக் கிரத்தென் றறைந்திடு மவத்தை யாவது மானந்த மறியில். 1

* மனமுதற் கரண நான்குமாய்ப் பத்து விடயமு மடங்குதல் கனவா, மனமுத லொன்கு கரணமு மடங்கி மன்னிய வுயிரதே சுழுத்தி, † கனவினை மூன்று மாய்நின்றே ‡ வேறாய்க் காணுயிர்ப் பறு மது துரிய, மினமுல கின்றி யானென தின்றி யிருந்துணர் வற்றிட மதீதம். 2

† தனவினை என்றும் ‡ வேருய்த் தானுயிர்ப் என்றும் பாட முண்டு.

கரணகதாவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1258.

குறுந்திரட்டு.

ஆதாரகரணகதாவத்தை.

புருவமத் தியத்தே புலன்கர ணங்கள் பொருந்திய பொழுதுசாக் கிரமாங், கருவியிற் றுக்கம் போகிமற் றவைதாங் களத்தினின் றிடுதலைக் கனவா, மிருதயத் தெல்லா மிறந்திடச் சித்த மொன்றிட நின்றது சுழுத்தி, யொருவிமற் றதுநா பியினிறைல் விரலி னும்பராய் நிற்பது துரியம் 1

# 6. சங்க்ஷேபாவத்தை.

## நூலசித்தி.

புருடன் பகுதி விடயமுணல் சாக்கிரம தாவதே
புருடன் விடய முண்பானாய்ப் பாவிப்பதுவே கனவாமே. 1

பகுதி பிராண னுடனிற்கை சுழுத்தி யாவதே
பகுதி பிராணன் றனிலடங்கத் தன்னையறிகை துரியமே. 2

துரியாதீத நிரஞ்சனமே சொல்லும் பேத மில்லதுவே
துரியாதீதஞ் சாக்கிரத்தே தெரிய வருதன் ஞானமே. 3

என்றா கமங்க ளெடுத்துரைத்த வியற்கையென்ன வெழின்மறைக
ணன்றா யிடவித் திறமுரைத்த நயமுமுணர நவிற்றிடுவாம். 4

## போதரத்தினாகரம்.

* மருவுறு கரண மெல்லா மருவிட விடய மேலே
பெருமதி சரிக்கு மத்தைப் பேசிடு நனவதென்ன
வொருவிய விடயந் தன்னை யுய்த்தவா தனையான் முன்போற்
கருதுவா தனையே வேதங் கனவென வறையு மன்றே. 5

* மன்னிய விடயந் தானும் வாதனை தானு மாண்ட
வின்னியல் சுழுத்தி யென்றங் கெழின்மறை யறையு மன்றி
யுன்னிய வவத்தை மூன்று மொதுக்கற வுணர்த லாலே
யன்னிலை யான்மா விற்கங் கவையில வென்ற தன்றே. 6

* அன்ன மூன்றுமான் மாவினிற் கற்பித
மென்னு மூட மிறந்திட மாமறை
பன்னு நற்பர மான்ம பதத்தினுக்
குன்னு பேர்துரி யம்மென வோதுமால். 7

* பன்னி டிற்பர மான்ம பதத்தினுக்
கன்ன வத்துரி யப்பெய ராம்பது
முன்னி டிற்பொய் யுரைத்தமூன் றும்பொய்யாய்
மன்னு பொய்க்களிற் றின்வர வொத்ததால். 8

* ஆன நான்கு மிறந்தது வேபர
ஞான ரூபம தென்றது நான்மறை
யான வாறர னாகம நீதியு
ஞான நான்கி னதீதம தென்றதே. 9

* நனவொன்றாய்க் கனவதனி னன்கனவு சுழுத்தியென நாடி ரண்டா, புனநின்றூங் கரணமிலா திடந்துரிய மொளிர்வதுமே லதீத மென்றைந், தெனநின்று கமங்களினி லிசைத்ததனை யாரணங்கள் கனவொன் றாக்கிச், சொனவைந்தா மதுநான்கிற் றொகுத்தலினு கமமறையின் றுணிபொன் றேயாம். 10

சங்க்ஷேபாவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1268.

## 7. அநுபவாவத்தை.

### சமயாசாரம்.

உரைத்திடு மவத்தை யைந்து மோங்கனு போக மாகத்
தெரித்திடு நனவிற் கண்டு திகழுமே லவைக ளொன்றாற்
சரத்துறு மனிய தென்னக் கருத்துறு பொருள்கண் டானுந்
திருத்துயிர் பரம தான திகழ்விட மதுவுங் கேளாய். 1

புலம்புலப் படும்புலத்தா னனவினிற் புத்திக் காதற்
றலம்புலப் படும்பகர்ந்த கனவினிற் பயந்த வான்மாத்
தலம்புலப் படுஞ்சுழுத்தித் தன்மையி னருஞ்சி வத்தி
னலம்புலப் படுமவத்தை நனவினி னதீத மாமே. 2

### போதாமிர்தம்.

* பொறிபுலன் கரண நனவொடு கனவிற் பொலிந்தவை வெளிப்படு மன்றிச், செறிவுறுஞ் சிவன் றெரிந்திடு நனவிற் றிகழ்சுழுத் தியில்வெளிப் படுமா, லறிவரும் பரம னனவினி னதீதத் தழுகுற வெளிப்படு மெனலா, நெறிதரும் குரவன் வெளிப்படு மந்த நேயமா மிடம்விளம் பரிதே. 3

அநுபவாவத்தை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1271.

# 10. வாக்கியப்படலம்.

## 1. வாக்கியவருக்கம்.

விருத்தவிளக்கம்.

சுருதியே யாதாக மங்கள் சொல்லிய முறைமை யாலே
தெரிதர வவத்தை யெல்லாந் திகழ்த்திய செய்ப தேவே
விரிதரு வேதத் தூர்ச்சி விளங்குவாக் கியங்க டம்மி
னுரைதரு பொருளை யுந்தா னுணர்த்தியே யருள வேண்டும். 1

சுருதி யந்தமா வாக்கிய மவாந்தரஞ் சுடருமோங் காரந்தான்
கருதி யாரண மோதிடு மசபைநற் கடவுளஞ் செழுத்தோடு
திருதி யாகுமட் டாக்கர முதன்மறை செப்பும்வாக் கியமெல்லாஞ்
சாத மாயிட வொருபரம் பொருளையே சாற்றுகின் றனவையா. 2

ஆதி நாயக வருமறை நாயக வமலநா யகவைந்தாம்
பூத நாயக புவனநா யகவுண்மை புகன்றவாக் கியமெல்லா [வாத
மோது மோர்பொரு ளாம்பரி செங்ஙன மொன்றொடொன் றொவ்
பேத மாயுல கோதிடு மேகமாம் பெருநல முறையாமே. 3

நீண்டவாக் கியப்பொருளா நிமல † னென்ற நிகரிறிரு வஞ்
செழுத்தின் பொருளா மென்று, மாண்டதிரு வெட்டெழுத்தி
னருத்த மென்று மசபையொடோங் காரமதன் பயனு மென்றும்,
வேண்டியவா விதங்கள்பல மொழிந்து மாந்தர் வெவ்வேறு பிணங்
கிடுவ ரவற்றிற் கெல்லா, மாண்டகையே பிணக்கிறந்த பொரு
ளொன் றுமா றையமற வடியேனுக் கருள வேண்டும். 4

† னென்று என்றும் பாடமுண்டு.

---

குறுந்திரட்டு.

அதுநீ யாயினை யென்றவாக் கியப்பொரு ளறையி
லதுவென் றோதிய பதம்பரம் பரனையே காட்டு
மதினீ யெனும்பத மயலறுஞ் சீவனைக் காட்டு
மதிலா னுயெனும் பதமயிக் கத்தினைக் காட்டும். 1

நிமல மாம்பர மதுவெ னும்பொரு ணீயெ னும்பொருள் சீவனே
யமல மான விரண்ட யிக்கிய மசிப தப்பொரு ளாவதே. 2

அருமை யாகிய பிரம முன்னிலை யாகு மாருயிர் பின்னிலை
யிருமை யாய விரண்ட யிக்கிய மெய்து மாறெவ னென்னவே. 3

## போதரத்தினாகரம்.

ஓங்கிய சுருதியா மலைக ளுச்சியி
னோங்கெழும் வாக்கிய மாம ருந்தாக
டெங்குறு பேதமாஞ் † சிறைகெட் டேகமா
மாங்குறு சராசர மாக்கு மல்லவோ. 5

† சேண்கெட் என்றும் பாடமுண்டு.

வாக்கியவருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1276.

## துறுந்திரட்டு.

உபாதி யால்வரு பேத மேயிவர் பேத மொன்றறு வுயிரினின்
கபாதி யாமுடல் போலி றைக்குள கார ணாதிகள் சாயமே. 4
ஈசன் முற்றறி வான்வி யாபி யெவைக்கு மேது வியம்புமா
காச கன்னிரு பாதி பாவனை கார ணாதிக ளாவதே. 5
ஆக மூன்றிக ழேழு னானென றுவம்ப தத்தி லசுத்தமே
சோக மின்றிய சான்று நானென றுவம்ப தப்பொருள் சுத்தமே. 6
அகில காரண மாதி நானென றற்ப தத்தி லசுத்தமே
சகல காரண சான்று நானென றற்ப தப்பொருள் சுத்தமே. 7
செறிந்த காரண காரி யங்கள் சிதைந்து மேலுறு சித்ததா
யறிந்த வாதனை தானு மற்றதவ் வசிப தப்பொரு ளாவதே. 8
அசுத்த மாகிய திருப தத்திலு முக்கி யப்பொரு ளாவதே
விசுத்த மான திலக்கி யப்பொரு ளென்று சொல்லுவர் விமலரே. 9
பூரண்ட சீவ பரங்க டம்முடன் முக்கி யப்பொரு ளாவதே
யிரண்டில் வேறறு சிற்சொ ரூப மிலக்கி யப்பொரு ளாவதே. 10
ஊக்கி யப்பர சீவர் தங்க ளுடம்பி ரண்டு மிலக்கணை
வாக்கி யப்படி நீக்கி னாலொரு வத்து வேபர வத்துவே. 11

# 2. மாவாக்கியம்.

### போதரத்தினாகரம்.

யாங்குறு பரமமாம் பொருளை யேமறை
யோங்கிய வாக்கிய முழுது மோதலி
னுங்கவை தனித்தனி யறைய முன்னநல்
லோங்குமா வாக்கியத் துண்மை கூறுவாம். 1

### சொரூபானந்தசித்தி.

திரமா மருத்தத்தி னுண்மைந்த ராலுந் தீராதி வற்றின் றியா
கத்தி னாலே, யுரமான வேதாந்த மாவாக்கி யத்தா லுற்பன்ன
மாம்விச்சை யானிச்ச யத்தாற், பரமான வஞ்ஞான வந்தத்தி
லேயப் பரஞான வுபதேச மொன்றாலு மேயிப், புரமா முடம்
புக்கு ளேயந்த முத்திப் பொருள்கண்டு வீடெய்து வாரிப்
புவிக்கே. 2

### நாராயணமனனம்.

ஆதித் திருநான் மறையின்க ணதுநீ யாகின் றாயென்று
போதிக் கின்ற வாக்கியங்க டம்மிற் றோன்றும் பொருளதனா
லோதற் கரிய பரனையுமிங் குயிரா முணர்வொன் றையுமோர்ந்து
பேதிப் பில்லா வகையெழுந்த வறிவு வீடு பெறுமால். 3

---

## குறுந்திரட்டு.

### இலக்கணாவாக்கியம்.

ஓரில் விட்டதும் விட்டி டாதது முபய மும்மென வுணர்வுளோர்
தேரி லக்கணை திரிவி தத்தி லிசைப்பர் மற்ற தியம்புவாம். 1

மஞ்சு கூப்பிட லென்றல் போலவும் வடப கீரதி யுள்ளதே
விஞ்சு கோடம தென்றல் போலவும் விட்ட லக்கணை யாவதே. 2

சிவலை நின்றது வெள்ளை போயின தென்று செப்புதல் போலவே
கவலை யின்றி விடாத லக்கணை யென்று நீகொள் கருத்திலே. 3

மேவும் விட்டு விடாத லக்கணை மெய்ம்மை யாதெனி லந்தவித்
தேவ தத்த னெனும்பொ ருட்படி சிந்தை செய்திடு தீரவே. 4

விட்ட லக்கணை தனையும் விட்டு விடாத லக்கணை தனையுநீ
விட்டு விட்டு விடாத லக்கணை யால்விளங்கு விளங்கவே. 5

போது மேவிய தேசம் விட்டொரு புருட னைக்கொளு மாறுபோ
லோது மீருடல் கண்டு விட்டத னுண்மை காண வுரைத்திடே. 6

உருவா முயிரே துயர்பரமென் றுரைக்கப்பட்ட வவர்தாமார்
வெருவா வறிவா விருவர்க்கும் வேறி லாமை யாகுவதென்
னருவா மதுநீ யாகின்றா யென்றா தரத்தா லறைகின்ற [ரால். 4
திருநான் மறையின் செயலேது தெளிய வெனக்குச் செப்புதி

ஓது கின்றே னிவ்விடத்தி லுயிர்தா னுன்னிற் பிறிதுண்டோ
நீதி னீயே யென்னுமிது தெளிவாய் தெளியி னீயாவா
யாத னாரெனவென்னை வினவு நீயா மொருவனவ
னாதி யாய பரமென்றே யறிதி யைய மில்லைகாண். 5

பொய்யாச் சொல்வலீர் புகல்பொரு ளோது வினவலியான்
மெய்யா முடலிது கோதென விடவேண் டுவதாயி
னெய்யா † வினிநா னாரென வெழுமே தமதொழியக்
கையார் தருநெல் லிக்கனி யெனவென் னுயிர்காட்டீர். 6

† விவனீ யானாரென என்றும் பாடமுண்டு.

மனனா திகள்புல னாதிக ளுடனாய் மகிழ்போழ்துங்
கனவா னதுநிலை யும்மிவை கழிபோ தினுமதிமி
னினமா யினவுள வாகையு மிலவா கையு மியல்பா
னனவா யறிய விகாரியை நானா மெனநயவாய். 7

அறிவானை யறிகின்ற பொருள்களை யடையாளக்
குறியாகச் சான்றாமா றொருவகையாற் கூறினோம்
பிறிவாகி நிகழ்பேதப் பிணக்கின்றிப் பேணுநர்க்கு
நெறியாகித் தானேயாய் நின்றபடி நிகழ்த்துவமியாம். 8

எல்லாந்தா னறிந்துபர மியாவுக்கு மிறையாகிப்
புல்லாதே யொன்றோடும் பூரணந்தான் புனிதமெனக்
கல்லாதார்க் குணர்வரிய கலைவேத நிலையோது
நல்லானை நவநீத சோரனென நன்கறிவாய். 9

ஆனந்தந் தானென்று மகிலசக மித்தனையுந்
தானந்த மில்லாத்தன் காரியமென் றுன்றனக்கு
மானந்தா னேயென்று மறையின்முடி வறையுமது
கோனந்தன் மகனாகிக் குலவுமவ னெனக்குறியாய். 10

அதுவென்று நீயென்று மறைந்தவரும் பதமிரண்டு
மிதுவொன்றாய் வுறப்பட்ட திப்போதிங் கினியிதனா
லெதுவந்த பயனென்னி னிரண்டாலுந் திரண்டபொருள்
பொதுவின்றி யொன்றாகை பொருண்முடிவு புகலுங்கால். 11

அஞ்ஞானநிவிர்த்தி.

அவனென்னும் பதத்தினையா ராய்ந்திடத்தி னகிலமெலாம் படைத்தளிக்கு மறிவா னர்த, மிவனென்னும் பதத்தினையு மிசைத்துபார்க்கி னீருலகிற் பிறந்திறக்கு மிவனே யாகு, னவனேநீ யாகியெனு மசிபதந்தா னகண்டசுக போதத்தை யவர்க்குக் காட்டு, மிவனவனென் றிரண்டுபொரு ளுண்டாயொன் றிருந்த படி யெங்ஙனே வியம்பு வாயே. 12

பதப்பொருளை நினைப்பிக்கும் பதங்களெல்லாம் பறியாத மாயையினைப் பறிக்க மாட்டா, பதப்பரிசு வாக்கியத்தின் பொருளைப் பார்த்துப் பாகத்தை விட்டுப்பா கத்தைச்சேர்க்கு, மிதாப பொருடான் வாக்கியத்தா னன்னித் தோற்றி மெய்ஞ்ஞரு மாயையினை விரையப் போக்கி,புதித்தபொரு ளொன்றென்றே யுணர்ந்து விட்டா லொருவர்க்கும் விரோத மொன்றே டில்லைகாணே. 13

சொரூபானந்தசித்தி.

அதுவென் றுரைசெய் பொருளா யதினு நீயென் றுரைசெய் பொருளா யிதினு, மதிபண் ணிடவே றதுவா கிடுமவ் வறிவா திகள்கா ரணமன் றியிலே,யெதுவொன் றுமிலா தெனவை யா வையுமா யிவையன் றிடுகே வலசித் தினையே, யதுநீ யெனும் வாய் மொழியா மதனு லறியும்படிசொன் னதிவ்வா ரணமே.

தத்துவ மென்ற வார்த்தை யிரண்டிற்கும் பொருள தாகிச்
சித்துமெய் யாகி நின்ற திகழ்பர மொன்றுந் தன்மை
தற்பரந் தன்னி னுலே சித்திக்கு மென்ப தேயிங்
கப்படி வாக்கி யத்தி னருத்தமே யாகு மன்றே. 15

மாவாக்கியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1291.

## 3. அவாந்தர வாக்கியம்.

சித்தாந்ததீபிகை.

ஓதுமா வாக்கி யத்திற் குதவியா யொருமை கூறும்
நீதிலா வவாந்த ரங்கள் செப்பிடும் பரிசு தன்னை
நீதியா லுணர்ந்த வுற்றே னிமலமா முளத்து மைந்தா
காதலா லதனை யுந்தான் கருத்துறக் கேட்டி டாயே. 1

* நேதி நேதிசெய் நிமலவாக் கியத்திற னிகழ்சக லமுநீத்துப், பேத மாண்டபி னின்றது வெதுவது பிரமமென் றிடுதற்குப், போத கஞ்செய்த விரகுமா வாக்கியப் புணையது பொருளுக்கு, நேதி யாமுரை யுதவியென் றுபநிட நிகழ்த்துத றவிராதே. 2

போதாமிர்தம்.

* சத்தியஞா னச்சுகமே பிரம மென்னச் சாற்றியிடும் வாக்கியத்தின் சதிரி ஞலே, சத்தியமும் பிரமத்தி னசத்தைப் போக்கிச் சலியாத ஞான பதஞ் சடத்தைப் போக்கி, யத்திஞா வனந்த பதஞ் சிறுமை தன்னை யாதரத்தோ டகற்றியபி னதிலா னந்த, மித்திறுள துன்பமெடுக் கப்ப ரந்தா † னேசுகசிற் சத்தாக விருக்குங் காணே. 3

† னேகசுக சிற்சத்தா என்றும் பாடமுண்டு.

* உண்மையினைப் பிறியினுணர் வுணர்வுமன்று வுணர்வுதனைப் பிறியி னுண்மை யுண்மை யன்று, திண்மையிற லனந்தத்தை யிவைசே ராதேற் சிறியனவாய்ச் சித்தாகா சத்து மாகா, வுண்மையிற லிவைசுகத்தோ டொன்று காதே லுண்மையுணர் வனந்தங்க ளொன்று மாகா, திண்மையிற் பிரமத்தோ டிவையுஞ் சேர்ந்தாற் றெளிந்தபிர மந்தானு மிவையு மொன்றும். 4

* இதம தனைத்துநற் பிரமநிச் சயமென வெழுந்தவாக் கியத்தாலே விதம துற்றிடு பூதபௌ திகச்சரா சரவித மனைத்தும்போய்ப் பதம துற்றமா வாக்கியத் தெழுதரு பழுதறு பொருடன்னைத் திதம துற்றிடத் திகழ்த்தலாற் செழுமறை செப்புகின் றதுவையா.

* நீய தாயினை யென்றமா வாக்கிய நிகழ்த்திய படியாலே போய மாயையும் புரணபூ ரணச்சுக போதமா கியவந்த நேய மோடகம் பிரமமா யினனென நிகழ்தரு பதிபத்தி யாய வாக்கிய மகண்டவாக் கியப்பொரு ளுதித்தமைத் ததுவையா.

* அந்த வித்தநற் றோவதத் தன்னெனு மமலவாக் கியத்தாலே யுந்து தேசகா லாதிகள் கழிந்துள வொருவனே யானுற்போன் முந்து வாக்கியத் திருபத முக்கியங் கழித்திலக் கியமாய வந்த மாதியி லமலமாம் பிரமமென் றறைந்தகா ரணமெல்லாம். 7

அவாந்தரவாக்கியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1298.

## 4. பிரணவம்.

விருவிளக்கம்.

சுருதி யந்தமா வாக்கிய மதுதுணி பொருளையே நடாகின்ற, பெருக வாந்தர வாக்கிய மவையெலாம் பேசிய வகைதானுந், திரம தொன்றிட வருளிய வகையெனத் திகழுமோங் காரத்தின், வரம தொன்றிய பரிசையு மழகுற மதியிலேற் கருளெந்தாய். 1

போதாரத்திறுகரம்.

தனக்குமுன் பின்னு முள்ளும் புறமதுஞ் சாற்ற லின்றி
யனைத்துமாம் பிரம மீசன் பரமவி நாசி யென்ன
வுனப்படும் பொருளோங் காரத் துட்பொரு ளென்றோங் காரந்
தனைத்திகழ் பிரம முத்தித் தாரக மென்னும் வேதம். 2

தாரக மாவ தீசன் சகலயோ னிகளுள் ளுந்து
மாரமே திதமா யத்து விதமதாய் வியாப மாகித்
தீதற விளங்கு கின்ற சிவமெனத் தெளிந்த தீர
ரோர்திகழ் முனிவ ரல்லா தவரெலா மிதர ரன்றே. 3

சமாதி.

ஓதிய வோங்கா ரான்மா வாகியின் றொளிரு மீச
னுதியா மகார முன்னு மக்கர மூன்று மாகி
வேதங்கண் மூன்று மிந்த வருணமூன் றுயவி ரிந்த
காதமே நான்காம் வேத மாமென நவிலுந் தானே. 4

தறுந்திரட்டு.

ஆதி யகார முகார மகார
மேதக வோமென வேதம தோது
மூதறி வோர்சக மூவித மாகு
மாதலி லோமய மாமென வுற்றார். 1

ஞால மமைத்தவ ஞரண வீசன்
கால மவத்தைக ணற்குணம் வேதஞ்
சாலுல குற்ற சமத்தமு மோமெனு
மூல வெழுத்தொரு மூன்றி னடங்கும். 2

அகாரமுக ரத்தி லுகாரமக ரத்தின் மகாரமுத ளுத மதனி
லகமுறவொ டேக்கி யதுதனை யவிச்சை யதிலற வொடுக்கி யதன்மே
லகமெனவு தித்த புருடனி லொடுக்கி யவனையழி வற்ற பிரமசிற்
சுகவடிவெ னத்த ஞணமனு யவத்தி லறிபொழுது சுத்த சொரூபம்.

பிரமனே யகார மாகும் பேசுங்கா லரியு கார
மரனதா மகார நாதங் காரண மாகு மன்றிப்
புராணமாம் வன்ன மூன்றும் பொருள்குணை மூலக வத்தை
திரியுதாத் தாதி கால மூன்றுமூன் றாய்த்தெ ரிந்தே. 5

இப்படி விரிந்த டங்கும் வருணமூன் றவற்றி னெல்லா
மொப்பிலா வகாரந் தன்னை யுகாரத்தி னொடுக்கிப் பின்னுஞ்
செப்பிய வுகாரந் தன்னை மகாரத்தே செறியச் சேர்த்துத்
தப்பறு மகாரந் தன்னை நாதத்தே யொடுக்கித் தானும். 6

உரைத்திடு நாதந் தன்னை மாயான்மா வாக வுன்னித்
தெரித்திடு மாயான் மாவைச் சிவான்மா வாகத் தேர்ந்து
புரைப்பற வொன்றாய் நின்ற பொருளிலாப் பிரமந் தானே
யிருந்ததே லோங்கா ரத்தி னியம்புமுட் பொருளா தையா. 7

சொருபானந்தசித்தி.

தாரம் விற்கணை தானி லக்குள தத்து வந்தவ றாதவா
ரூர்கு றித்தெப வல்ல ரப்பொரு ளிற்கு ளிப்பவ ரம்புபோற்
பேரி லக்கையும் வில்லி யப்படி பேசு நற்கணை யெங்கனுங்
கூர்மு கத்ததி லக்கி லம்புகு ளிக்கை யையுறல் கூடுமே. 8

அரணி யோடுத்த ராரணி யுமிரு மமலவோங் காரமு மாக்கிக், காணிய தியான மாமத னத்தாற் காணொணு வொளியினைக் காண்பான், புராணநல் லொளியிற் பூதபௌ திகங்கள் பொருக்குயிர் புலன்கண்மற் றெல்லா, மாறுபுத் தோவை யாகியே கிடக்கு மதனையே யறிகுவ னறிஞன். 9

தீம ரந்தொறு மடைந்தழி வுறுது தெரிவரு
காமை நின்றரணி யால்வடிவு காணு மதுபோ
லாமு டம்பினழி வின்றிமறை கின்ற வமல
மேனுமெ னும்பொரு ளுணர்ந்திட வுடம்பில் வெளியாம். 10

பிரணவம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1318.

## 5. அசபை.

விருவிளக்கம்.

ஓதிய வோங்கா ரத்தி னுண்மையாம் பொருளின் றன்மை
பேதம தில்லா வாறு பேதையேற் கருளி னற்போ
லாதியா மறைக ளோது மசபையாம் வாக்கி யத்தி
னீதியாம் பொருண்மை தானு நிமலனே யருள வேண்டும். 1

மூலசித்தி.

* அஞ்ச மென்றெழும் வாக்கிய † மெவருளு மொளிருமப் பரமத்தின், றன்சு தந்தரத் தெழுதலி னசபைநற் சயம்புவென் றிடலாகும், தஞ்ச மின்றிமூ வேழதா யிரத்தறு நூறுகாற் ‡ சுவய மேவ, வஞ்ச மின்றிநின் றெழுதரு மதுதனை யுணரவீ டெனும் வேதம். 2

† மெய்யரு ளொளிரு என்றும் பாடமுண்டு.
‡ சுவாத, மெஞ்ச மின்றிநின் என்றும் பாடமுண்டு.

தத்துவசாரம்.

* அசபை தன்னினின் றெழுதரு முழுவது நிலைபெறு மதி ன்மாளு, மிசைபு மவ்வியல் பதுகொடு வுணர்வலி யோகரு முயல் கின்று, நசைவி லாதுட னிலைபெற வென்பது வசபையினினை வன்று, நிசம தாமுயிர் பரத்தினே கத்துவ நிகழ்த்துத னினைவையா.

பூரணப்பிரகாசம்

* அகம தென்றிடு முறையினி னுடன்முத லனுகிய தடை யின்றி, மிருப ரம்பர மாயிடு மிருபர மதுவக மெனுமத்தாற், றகவ தொன்றிய பரவுடன் மிடைதரு தகைவற வுளமெய்யா, மிகப ரந்திக ழிதமக மறவெறு மெலையறு சிவமாமால். 4

* ஆத லாலகம் பிரமமா வதுவென வசபைநன் மொழியாலே
யேத மின்றிமா வாக்கிய மவாந்தர மிலகிய ப்ரணவத்தாற்
பேத மொன்றற வுரைசெய்த பரிசெனப் பெரியவா தாத்தோடே
போது கின்றது வுவமைப தறமிகு மொளிர்புப நிடந்தானே. 5

அசபை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1313.

# 6. ஸ்ரீ பஞ்சாக்கரம்.

விருத்த விளக்கம்.

சுருதி யீறுக மெனிந்துரை செய்தவத் தூயவாக் கியமெல்லாங், கருது கின்றவப் பொருளதொன் றும்வகை கருணையா லளித்தாற் போன், மருவு கின்றவச் சுருதியீ றுகம மதித்தவஞ் செழுத்தா கும், பொருவில் வாக்கியம் புகன்றிடும் பரிசையும் புலையனேற் கருளெந்தாய். 1

ஆனந்தபோதம்.

* அஞ்செழுத்தி னரும்பொருளை யறியக் கூறி னாக்கைமனம் பிராணாதி யனைத்தின் வேறாய்த், துஞ்சலற வவற்றையுணர் நானே யந்தச் சொல்லிறந்த சுகச்சிவமாய் முடிந்தே னென்கை, யெஞ்ச லிலா மறையனந்த கோடி யாலு மிசைத்திடுதற் கரும்பொருளஞ் செழுத்தா லிங்ஙன், வஞ்சமற வுணர்த்தியநன் மொழியி னுண்மை மதித்தவர்தம் பெருமையினை மதிக்க லாமோ. 2

* அகமென்ற வரும்பதத்தின் பொருடா னாக்கை யிந்திரிய மனம்புத்தி யுயிராங் காரந், தகவொன்று திரளன்றி யுணர்ந்து வேறாந் தன்மையுடைச் சிவனேயே சாற்று மற்றை, யிகநின்ற சிவமெனுநற் பதமும் பஞ்சத் தொழில்செய்தோர் தொழிலில்லா விமல யீசன், றொகவந்து சிவாயவெனும் பதமி ரண்டின் சொன்ன வுபா திகள்கழிந்தாற் சுகசிற் சத்தே. 3

* இப்பரிசு சிவசிவ ரென்னும் வண்ண மிரண்டெனவங் கிடைக்கிடந்த வுபாதி நீக்கி, மெய்ப்பரிசு கரையிறந்து விளங்கா நின்ற விமலசதா சிவத்தையே மெய்ம்மை காட்டு, மொப்பரிய வஞ்செழுத்தை யிவண மெய்யே யுணர்ந்தவரொண் சிவமானு ருணரா தேயுஞ், செப்புறுவோ ரவர்களுமித் திருநா மத்தின் தேச தனாற் றீயபவஞ் செறுவர் காணே. 4

* ஐந்தெனத்தான் மாபூத மைந்தா மூர்த்த மைந்தொழி லைம் புலனவத்தை யலது மெல்லா, மைந்தெனத்தான் புரிந்திடுமவ் வகையி னானு மமருலகம் வினைகால மான்மா வீச, னைந்தெனத் தான் றழைத்தன்பர்க் கருளி னாலே யங்கையினு மலகமெனத் தன்னைக் காண, வைந்தெழுத்தா லுணர்த்தினனு முய்யும் வண்ண மரிபிரமற் களப்பரிய வரனு மையன். 5

ஸ்ரீ பஞ்சாக்கரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1318.

24407

# 7. ஸ்ரீ அட்டாக்கரம்

வினாவிளக்கம்.

அரிய வஞ்செழுத் தாற்பர சிவர்த மயிக்கிய மறைந்தாற்போற், பெரிய மாமறை யீரொடா கமங்களாற் பெருகவுந் துதிசெய் தற், குரிய வெட்டெழுத் தோதிய முடிவையு முரைத்தருள் செய வேண்டுங், கரிய வல்வினை நெடுவரை யிடிதரக் கடைக்கண்வைத் தெனக்கெந்தாய். 1

தத்துவார்த்தினாவலி.

* நாரங்கட் கயனமாய் நடுவீ றாகி நவையின்றிப் பெருநல மாய் ஞானா னந்தத், தோர்வின்றிப் பெருகுமமத் துவமா கின்ற வுபாதிகழித் துரையுணர்வற் றுணர்வொன் றேயாய்ச், சோர்வின் றிச் சுடர்தருநல் வியாத்தி யாலே துகளிலா விண்டுபதந் துரிசிலன் பர், நேரொன்றக் கரதலமா மணியே யென்ன நிகழ்த்திடு மெட்டெழுத்தி னிலைமை தானே. 2

* நாரவென வெழும்பதத்தின் பொருளை நாடி னாரமுத லாஞ் சிவான்ம பதத்தைக் காட்டு, மேர்வுபெறு மயனாப வெனும்பதந்தா னியாதினுக்கு முதலாய விறையைக் காட்டும், பேரதுறு நமவென்ற விரண்டு பாதி பெருகுமமத் துவங்கழிபே ரின்பங் காட்டுஞ், சீரதுறு திருவட்டாக் கரமிவ் வண்ணஞ் சிற் சுகசத் தினையுபதே சித்த தாமே. 3

இப்பரிசா யகிலசரா சரமா யோங்கி யெழுநளினத் தொரு மூலக் கிழங்கே யாகிச், செப்பரிய சிற்சுகநற் சோதி தன்னைத் திக ழ்த்தியநற் றிருவட்டாக் கரத்தி னுண்மை, மெய்ப்படவே யுணர் ந்தவரா ரவரே யன்றோ விண்டுவெனும் விமலபத மாகின் றார்தா, மொப்பரிய வதன்பெருமை யுரைக்க முன்னை யொண்மறைக ளுண ராமற் றுணர்வா ரியாரே. 4

இசைத்த வாக்கிய மிவையெலா மிரண்டற வியம்பிய வகை யேபோற், றுசக்க ருந்தன மாகுகா யத்திரி முதலொரு மவைமற் றுங், தசைத்த மந்திர தந்திர முழுவதுஞ் சாற்றுவ திவனென் றே, திசைக்க ணெங்கணுங் கட்டிய கொடியினைச் செழுமறை யவை தாமே. 5

ஸ்ரீ அட்டாக்கரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1323.

# 8. வாக்கியநிருப்பியம்.

## வினாவிளக்கம்.

ஏதுமொன் றல்லா வென்னை யெழிற்றிரு வுளத்த டைத்துக்
காதலா லுருவாய் வந்த காரண கருணை மூர்த்தி
யோதுவாக் கியங்கள் கோடி யாலுமுன் னுண்மை மேனி
யீதெனக் காண வொண்ணா திருப்பதெ னிசைத்தி டாயே. 1

## சொரூபானந்தசித்தி.

வேத வேதாந்த வேதனமெனுநீ திக்குரி மேதையின் மிக்க
காத லாமுனக் கன்றிமற் றப்பொருள் காணலாம் வகையுண்டோ
வோதும் வாக்கிய வுரையள வெதுவொளிர் பானவ வெதுவென்று
மீது தாக்கறு†மொளியெனக் காட்டிட வியலுமோவிவைகம்மால்.

† மொழியெனக் என்றும் பாடமுண்டு.

* உண்மை யாகிய மொழிகளி னுயிர்பாத் தியல்பினை யுறநாடித்
திண்மை யாலது பலித்திடும் பரிசுபின் றேடுதற் குடலாகுங்
கண்மை யாலது காதல மணியெனக் காட்டுகா ரணமன்றி
வண்மை யாமொழி யெவ்வள வளவவை மதிதர வறைவன்கேள்.

* அறியா மையினை யழிவித்துக் கொண்டே யிந்த வாக்கியந்
தான், பிறியா தொன்று மறிவினையுண் டாக்கா தென்றும் பேசுங்
கால், செறிவா யுண்மை யுருவாகுஞ் சித்தி னொளியைத் தவிர்த்
துண்டா, மறியா மையதொன் றெனவில்லை யாகு முண்மை யறி
யுங்கால். 4

* நோக்கு மிடத்து வாக்கி யத்தா னுண்ணி தாய பரத்தொளியை
நீக்கி நிற்கு மறியாமை யென்ப தில்லை யாதலினு
லாக்க மில்லா வறிவின்மை யழிப்ப தென்றுங் கூடாது
தாக்க தின்றி யொன்றுத றன்னுற் கூடுந் தன்மையதே. 5

## தத்துவார்த்திறுவலி.

அதுநீ யாயினை யென்ற வாக்கிய
விதியா லேபொருள் வீட தாகுமோ
வெதுநா னாயின னென்ற போதினின்
முதியோன் வாயினின் மோன மாயிற்றே. 6

நானா னென்னு நாம வாசக
மூனா காதொழி யாது ணர்ந்திடி
னானா னேன்முன் னாய தில்லையோ
மானா தீத மபத்துவ மாயதோ. 7

இதுவன் றன்றென வென்னு மாமொழி
சதிரொன் றன்று சமைந்த பார்வையி
னெதுமுன் கண்டது வென்க ரந்தது
பொதுவொன் றுண்டுகொல் போத மன்றியே. 8

எல்லா மென்றெழு மென்னை யுங்கெட
வல்லா ராரவர் வாதி லாதவ
ரெல்லா மென்பது மென்கெட் டோபல
வில்லா தாதலி னேக மாயதே. 9

வாக்கியநிரூப்பியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1332.

## 9. சீவபரவேறு.

### வினாவிளக்கம்.

காண்டவாக் கியங்க ளானு மிதுவெனக் கருதொணாதா
யீண்டிய பரமன் சீவ னிருவர்தம் பேத மென்ற
மாண்டவப் பொருளை யின்னம் வகைப்பட வடிய னேனுக்
காண்டகை யறியும் வண்ண மழகுற வருள வேண்டும். 1

### பேரொளிவிளக்கம்.

கடலுலகின் செயலொருவன் காணா நிற்குங் காணுங்க ணிருண்டொருவன் காணானாகு, முடலுதவும் வினைப்பயனை யொருவன் வேண்டு மொருவனவை வேண்டுமெவற் குதவா நிற்கும், விடலரிய விருவினைக்கே யொருவன் மேவு மேவாமை யாலொருவன் மேலா மானா, னடலையுறா முயிரனைத்து நடத்துகின்ற நாதன் கா ணென்றதனை நாட்டினானே. 2

இருப ருந்துள வுடன்பிறந் துடன்வளர்ந் திசைவுகூர் வனவந்த, விருப ருந்துமா யொருபெருந் திருமர மியைந்தன வொருபோதே, யொருப ருந்தந்த வோங்கிய திருமரத் துறுபய னுவந்துண்ணா, மொருப ருந்தொன்று முண்டல்செல் லாதத னொளியுநல் லொளியாமே. 3

## சொரூபானந்தசித்தி.

* இந்த வுடம்புறை சிவ பரங்க ளெனப்படு மன்னமிரண்
டந்த விரண்டினு மொன்று விளைப்பய னங்கு நுகர்ந்திடுமாங்
தொந்த மறும்பர மொன்று புணாது சொலப்படு பேதமில்வான்
வந்த கடத்தி னகப்படு பேத மெனப்படு மாகையினால். 4

* ஏயபே ருலகில் விளைப்பய னுகர்ந்திங் கிதயமே மருவு வா ரிருவர், சாயைபோ தபமா கின்றனர் சீவர் சங்கர ரென்றிடத் தகுவர், போயுமா றறவே யுண்பவன் சீவ னூட்டுவான் சிவனிவர் தமக்கிங், காயமே நந்தா னுபாதியால வந்த தல்லது வபேதமே யாகும். 5

## ஞானாமிர்தம்.

காரியங் காசினி யாதி யேரிய
லீசன் கத்தா விவற்கிது போக
மாதல் செல்லா தகன்றுயர் கருமந்
தாமே நுகர்தல் செல்லா தாறு
தென்னை செய்த தென்னி னன்றே
கொன்னே செய்பான் றன்னே ரில்லோன்
பாரி சேட மதனிற் பரனுக்
கேரியல் பரன்பசு வென்றறி யினிதே.

(இ-ள்.) காரியம்—ஆதி (எ-து) பிருதிவி முதலாக நாதமீறாகத் தேகாதிப் பிரபஞ்சஞ் செயலாயிருந்தன,

ஏரியல்—செல்லாது (எ-து) அழகிய வியல்பையுடைய பரமசிவன் கர்த்தாவாதலால் இவனுக்கிவை போகமாகப் பொருந்தமாட்டா,

அகன்று—செல்லாது (எ-து) விரிந்துயர்ந்த காரியமாயிருக்கிற தத்துவங்கள் சடமாதலின் தாமே தமக்குப் போகமாகமாட்டா,

ஆறு—என்னின் (எ-து) அமையாது இந்தத் தத்துவங்களைச் செய்யவேண்டுவானே னென்பாயாகில்,

அன்றே—இல்லோன் (எ-து) ஐயோ இந்த நெடும் பிழையை என்றும் விருதாவிலே செய்யான் றனக்குவமையில்லாத பரமசிவன்,

பாரிசேடம்—பரனுக்கு (எ-து) மூவரிருந்த விடத்திலே ஒரு பொருளைச் சிலர் இது யார் பொருளென வினவினால் நாங்களிருவரு மறியோம் என்று சொன்னால் ஒழிந்தவன் அறிந்தானென் தன்மையாகிய பாரிசேட அநுமானத்தால் இச்செயல்கள் பசு பாச பதி யென்னும் மூன்றனுள்வைத்துப் பதிக்குஞ் சடமாகிய பிரபஞ்சத்திற்கு மியையாமையாற் பசுவாகிய ஆன்மாவிற்காகவேண்டும்,

எரியல்—இனிதே (எ-து) இவ்விடத்தி லழகிய வியல்பையுடைய பரனென்றது ஆன்மாவையென் றினிதாக வறிவாயாக (எ-று). 6

மூலசித்தி.

* அலகிலறி வலதின்மை யறிந்தகமென் பானீச
னுலகமுழு தறியாதோ ருடனென் பான்சீவன். 7

மெய்ம்மொழி.

சுத்தநற் சிவனுஞ் சிவன் சுபாவமெ தனாதா னொத்து
மொத்ததன் மாயா பேதந் துயரநீங் கிதுயிர்க்குத்
தெத்தஞ்செய் சத்தி காட்டத் திக்கில்லைக் குண்டத் தீக்குண்
டத்தன்மை யான்மாத் தானு மமலநற் சிவமு மன்றே. 8

சீவபரவேறு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1340.

---

## 2. சீவவிலக்கணம்.

ஞானவிநோதம்

* காணங்கள் சேட்டைசெயக் கராளியாய்க் கனாநனவி
னாரணங்கொள் சுழுத்திதனி னறிவின்றி மறந்தான்போன்
மாணந்தான் பிறப்பின்றி மனாதி † குறைவின்றித்
திரணந்தான் றீனயொழியாத் திகழறிவு சிவன்றான். 1

† குணமின்றி என்றும் பாடமுண்டு.

போதாமிர்தம்.

நித்தன் கேவல னிரவய னிர்க்குண னவிகாரி
சுத்தன் வியாபக னருண்மயன் றொழிலிலன் மிகுநாதன்
ஏத்த அசலையன் சைதன னுத்தம னமலத்தொன்றும்
பெத்தனத் தான்மா பிரபுவ னேபாபசுப் பதியன்றே. 2

தொகுந்திரட்டு.

சீவபரவேறு.

கடந்தனைநே ருடம்புபுலன் கரணங்கான் முதற்பகுதி
யுடம்பெனவே யுடையவன்ற னுயிரெனவோ தப்படுவா
னடங்கவறிந் ததிலமுத லாக்கியளித் தழித்தெல்லா
விடங்களினு மொழிவறவே நிறைந்திறையா மவனீசன். 364

---

சட்டெனத் தெளிந்தான் சர்ப்ப மிரச்சுவிற் காணு தாற்போற்
கட்டின பாசம் விட்டாற் கண்டிலன் பெத்தம் பின்பு
சிட்டநற் சுபாவ மேயாஞ் சிவன்முத் தன்றே கந்தை
விட்டபின் பரம முத்தன் வியோமம்போற் கடநா சத்தில். 3

மூடிமுன் னிருந்த தீப மூடிய கும்பம் போனு
னீடிய வொளியா யெங்கு நிகழ்ந்ததங் கான்மாத் தானு
மூடிமுன் மறைந்தி ருந்த மும்மலம் விட்ட போது
நீடுதற் சொரூப மேயாய் நிகழ்ந்துதான் விளங்கு மன்றே. 4

பெத்தித்த சாம நீலம் பெத்தம்விட் டாற்ப ளிங்கு
சுத்தத்தன் னுருவ மாய சோதியாய் விளங்கு மாபோற்
பெத்தித்த புரியட் டத்தின் பெத்தத்தை விட்ட போது
சுத்தத்த னான்மாத் தானுஞ் † சோதியாய் விளங்கு மன்றே. 5

† சுபாவமாய் என்றும் பாடமுண்டு.

சத்தெனும் பிரதா னத்தைச் சார்ந்தக னிச்சை கொண்டு
புத்திமுன் சேட்டித் தத்தாற் போகங்கள் புசிக்கு மாகேள்
சத்தத்தின் சன்னி திக்கே தற்சொரு பத்தையா நின்ற
புத்திதன் சேட்டை யெல்லாம் புருடனங் குதாசீ னன்காண். 6

சேறிதரு கதிரோன் முன்கண் சேட்டையாங் கான்மா வின்முன், னறிதரு புத்தி சேட்டை யத்தினாற் சேட்டை பெற்ற, வெறிதரு மாங்கா ரத்தின் விகாரத்தான் மனஞ்சேட் டித்துப், பொறிகண்மேற் புறக்கண் செல்லப் பொறிகள்சேட் டித்த வன்றே. 7

சத்தமுன் விடயந் தன்னைச் சமத்தவிந் திரியம் பற்ற
மெத்தென மனமும் வாங்கி விகாரத்திற் கூட வைக்கு
மத்தகு மவைய னைத்து மாங்கார மங்கிக் கொண்டு
புத்தியி னிடத்தே சேர்க்கும் புத்திநிச் சயிக்கு மன்றே. 8

இப்படிப் புத்தி தன்னி னேய்ந்தவில் விடய மெல்லாந்
தப்பிலாச் சைதன் னான்மாச் சன்னிதி யால்வி ளங்கு
மெப்படி விகார மின்றி யிரவிபூ தலத்தி னுள்ள
வப்படி பொருள்க ளெல்லா மறிவிக்கு மங்ங னையா. 9

பொறிகளால் விடய மெல்லாம் புசிக்கவை புத்தி தன்னிற்
செறிவுறப் பிரகா சிக்குஞ் சேதனன் சன்னி திக்கே
யறிவுறு மபிக்கிய ஞான மனைத்துமென் செயல் தென்கை
வெறியுறு பிறவிக் கெல்லாம் வித்ததா மந்த ஞானம். 10

ஓப்பொடு பசியுந் தாக முற்சாகஞ் சுகதுக் கங்க
டார்ப்பரி யங்கள் போகந் தன்மமு மதன்மந் தானு
நீப்பரி தாய புத்தி நிகழ்குண மாகு மந்தை
யாத்மாவின் குணமே யென்ப ரபிக்கியபா வகத்தி னாலே. 11

* இசைத்தவப் புத்தி தன்னின் விருத்திய திரண்ட தாகு
மொசித்தக மொன்று காணு மொன்றித மென்று சொல்லு
மிசைத்தவை யிரண்டுங் கண்டு தானவி காரி யேயாய்
நசித்தலும் பிறப்பு மில்லா நாயக னான்மா வன்றே. 12

மெய்ம்மொழி.

அத்தலத் துணரா துள்ள மறப்பனே ஞானி யென்பார்
பத்துநா றுயிரம்பே ரசேதனம் பகரக் கேளாய்
தத்துவ ஞானி யென்பார் தற்சொரு பத்தை நாளும்
புத்தியின் மேலே காணும் புண்ணிய ரெண்ணி னன்றே. 13

சேர்ந்தவவ் வுருவம் போலாய்த் தெளிதரு பளிங்க தென்ன
வார்ந்தநோய் நிரைகள் மூப்பு மருந்தாய சரீரத்துங் கொண்டு
சார்ந்தவச் சரீரத் தாலே சரீரிபோற் றோன்று கின்று
நேர்ந்திடி னொன்று மில்லா வுண்மைச்சை தன்த னன்றே. 14

சீவவிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1354.

குறுந்திரட்டு.

சீவவிலக்கணம்.

சேறிநசமா யையிலு ளநீர்தோறுந் தோன்றுந் தினகர னென்னவே சீவன், பிறிந்துசீ வனெனப் பெயர்பெறு மவன்று னுண்மையிற் பிரம மேயன்றே, யுறைந்தநீர் சலிக்க வுதயனன் சலித்த லொக்குமே யவன் சலிப் புண்மை, யறிந்தபோ தந்த மாயைபோய்ச் சலியா வயலாற் பிரம மே யாமால். 365

## 3. பரவிலக்கணம்.

ஞானாமிர்தம்.

படியடி படாங்காக் கடிகமழ் தாமரைக்
கட்கான் கடவுளோ டத்துறை யாளனு
மென்றோ ரியல்பின னிறையென விரங்கும்
விண்ணோ ரண்ணலை வினவின் மண்முதன்
முப்பது முதலா முவிரண் டோவா
வொப்பி றத்துவ மொருவிய திப்பிய
னொழிவற நிறைந்த வொருவன் புரைதீர்
வண்ண மில்லி யபலன் கன்முதற்
புலனெறி புணரா னிணையிலி யானொன்
மதத்தின் வாராப் பிறப்பிலி தனகெனு
நாம மில்லா ஞான னாமயன்
கால காலன் கணக்கிலி கடையு
முதலு நடுவு முனிந்தோன் மேலோ
னுருவ மில்லி யசோப னமோக
னபய னபங்க னகம்ப னசஞ்சல
னித்தன் முத்தன் சுத்தன் சுதந்தரன்
பெத்தமும் வீடு மகன்றோன் சித்தியோ
டின்பமுந் துன்பமு மிகந்தோன் யாவும்
புலமின் றுணர்ந்த புனிதன் கலரெனத்
தனித்தலு மளித்தலுந் தடிந்தோன் றற்பரன்
றுரியமுங் கடந்த தூயோன் பெருமைக
கண்ட மறுத்தர வணுவண் டத்துட
னின்று நுணங்கிய தண்டாச் சித்தி
யுரைதரு புணரிக் கரைக்கறை யம்பிக்
காட்சி முதலிய வளவையு மளவறச்
சேட்பட வகன்றனன் சிவனெனச்
சூழ்ச்சியி னிறைந்தோர் துணிந்தனர் கொடிதே.

(இ-ள்.) படியடி—வினவின் (எ-து) பூமியிலடங்காத பாதத்தினையும் நறுநாற்றமுடைய தாமரைப்பூவை யொத்த காணுங்கண்ணினையுமுடைய விஷ்ணுவும் அத்தாமரைப்பூவினிடத்திருக்கும் பிரமனும் அறிதற்கரிய இயல்புடையான் பதியென்று சாத்திரங்களிற் சொல்லப்பட்ட தேவர்களுக்குக் கர்த்தாவாகிய பரமேசுவரனை யாராயில்,

மண் முதல்—சீர்த்தி (எ-து) நித்தியமாய் உவமையில்லாத பிருதிவி தத்துவ முதலாக வுள்ள முப்பத்தாறிற்கும் அப்பாலாயிருக்கும் அதிசய முடையோன், சருவவியாபகமாய் நிறைந்த ஏகன், குற்றமற்ற பொன்மை நீலாதி வன்னங்களில் ஒருநிறமு மில்லாதோன், நிர்மலனாயிருப்போன், கண்முதலாகிய விந்திரியங்களோடு கூடியிராதவன், தனக் குவமையில்லாதோன், யானென்னு மகங்காரத்தாலே வருவது சன்மமாதலால் அவ்வகங்காரமில்லாமையாற் சனன மில்லாதோன், தனக்கெனவொரு பெயரில்லாதோன், சர்வகர்த்தாவாயிருப்போன், நோயில்லாதோன், திரிகாலங்களுக்குங் காலமாயிருப்போன், அளவுபடாதோன், முதனடுமுடிவில்லாதோன், மகானாயிருப்போன், கலக்கமில்லாதோன், கோபமில்லாதோன், மோகமில்லாதோன், பயமில்லாதோன், கண்டிக்கப்படாதோன், நடுக்கமில்லாதோன், சலனமில்லாதோன், ஒருபடித்தாயிருப்போன், அநாதியே மலத்தி னீங்கினோன், தோடமில்லாதோன், ஒருவ ரேவலுந் தான்பிறர்க்கேவல்செய்தலு மில்லாதோன், பெத்தமு முத்தியு மில்லாதோன், சிந்தனையில்லாமையாற் சுகதுக்க மில்லாதோன், புத்தீந்திரியங்களின்றியே சர்வபதார்த்தங்களையு மறியுஞ் சுத்தமுடையோன், வினை நுகர் கால நோக்காது தீயோரென்று நிக்கிரகித்தலும் நல்லோரென்று அநுக்கிரகித்தலு மில்லாதோன், தானே பரவத்துவா யுள்ளோன், துரியாவத்தைக்கு மப்பாலாயிருக்குந் தூயோன், அனந்தங்கோடி யண்டங்களெல்லாந் தன்பெருமைக்கு அணுவாகவும் தன்னுண்மைக்குப் பரமாணுக்க ளண்டமாகவும் அவற்றுடனின்று செலுத்திய அளவிறந்த கீர்த்தியையுடையோன்,

உரைதரு—நெடிதே (எ-து) புகழப்பட்ட சாத்திரமாகிய கடலின் கரையையணைதற்குச் சொல்லுகிற பிரத்தியட்ச முதலாகவுள்ள சட்பிரமாணமாகிய மரக்கலங்களுக்கும் அளவுபடாமற் றூரமாக வகன்றிருப்போன் பரமசிவனென்று விசாரஞானமிக்கோர் மிகவும் அறுதியிட்டனர் (எ-று),

ஞானாமிர்தம்.

நார மேய நல்லுயி ரனைத்து
நார மன்றே நாரமின் றின்றே
நாரச் செய்தியு மன்றே நார
மாருயிர்க் கல்ல துயிரதற் குதவும்
பேருப காரமு மின்றே யாயினு
மாருயிர்க் குபய மறன்மற் றுள்ளா
தாருயிர்க் குபய மற்றும் பேரிசை
வான்மண் டீநீர் வளியுக நிறைதந்
தானு தப்புறம் படர்ந்துந் தானவை
யுறைவிட னூங்கினி தளித்து மிடையிற்

றொனே யாகி யேனைய விளக்கி
யிருவே றிசையா தொருவழிச் சிவணி
யின்றி யமையாச் சிறப்பிற் றாகி
யென்றுந் தானவை யொன்றா வாறும்
பதங்கன் பல்கதிர் பரப்பி விசும்பினி
தியங்குங் காலை யெழூந்தினி தியற்றும்
மன்னுயிர்த் தொடக்க மார்த்தாண் டற்கன்
றன்னோ தானு மருவிலை யமரிப்
பாய னீங்கிப் பஃறொழில் புரிகென்
றேவுதிறம் படாஅ னோனு மேனிய
வாதப னிடத்தன் றருந்தொழில் புரியு
நீதி யில்லை நீணிலத் தோர்க்கே
யின்னுங் கேண்மதி யினமலர் துதைந்த
தாதுபடு கொழுநிழல் பாதவ மன்றே
மாதர் வண்டொடு சுரும்பிமிர் நறுநிழல்
பாதவம் படைத்தது மன்றே பாதவ
மின்றே னிழல்கண் டதுமிலமே
யொன்றே மற்று முண்டுபல் பொறித்த
கருந்தாது கொட்குந் திருஞ்சிலை யிரும்பா
வருந்தினை மறுகுமன் னொன்றே னையாநின்
றிருந்தலைக் கறங்கற் கிதணிடத் தல்லது
பொருந்தா தென்ன விரிந்தொளி கான்று
மாதிர மனைத்தும் பீரேம் புடவியு
மளவிறைத் தளவா வண்டமும் பலவெனக்
கொட்புறு காலமு மெப்பே ருயிரு
முறுவரை யெய்தி யொன்றொடும் புணரா
தினைய காக்குங் கலைகண் ணாகிக்
கலைகள் யானெனும் விலைவற வொரீஇப்
பன்னிய வெவற்றுந் தன்னதோர் குறையின்
றன்னோ னின்ற வகாரணற் காரண
மென்னதென் றிசைக்குவம் யாமே யன்றோ
வுரைபுணர் வொடுங்கின ருணர்வின்
விரையுறு கடியின் விரகி யோனே.

(இ-ள்.) ஈரமேய—உயிர்க்கபயம் (எ-து) சலத்தில் வர்த்திக்கும் பல வர்க்கத்து நல்ல பிராணிகளுஞ் சலந்தானல்ல சலத்தையின்றியமையா சலத்

தின் காரியமுமல்ல சலந்தான் நிறைந்த பிராணிகளுக்கு இரக்ஷையாமல்லது பிராணிகடாம் சலத்திற்குச் செய்யும்பெரிய உபகாரமுமில்லையாயினும் நிறைந்த பிராணிகளை யிரக்ஷியாநின்றேன் நானென்று இச்சலந்தானினையா திருந்தும் இந்த நிறைந்தபிராணிகளுக்கு இரக்ஷையாயிருக்கும்,

மற்றும்—ஒன்றுவாறும் (எ-து) பெரிய கீர்த்தியையுடைய ஆகாயமானது பிருதிவி யப்புத் தேயு வாயுவாகிய நான்கினும் வியாபித்தும் அமையாது அப்பாலுமுடைத்தாய்த் தான் அந்தப் பூதங்களுக்கு மிகவுமினிதாக இருக்கத்தக்க விடங்கொடுத்தும் நடுவுந்தானாய் அப்பூதங்களை யுருத்தெரித்துத் தான்வேறுபாடற ஒருபடித்தாகக்கூடித் தன்னை யின்றியமையாத அழகையுடைத்தாய் ஒருநாளும் தானவற்றின்றும் கூடியிராது,

பதங்கன்—நீணிலத்தோர்க்கே (எ-து) ஆதித்தன் றன்னுடைய கிரணங்கள் பலவற்றையும் விரித்துக்கொண்டு ஆகாயத்திலே யினிதாக இயங்கும்பொழுது எழுந்திருந்து நன்காகத் தொழில்புரியும் நிலைபெற்ற வான்மாக்களின்றொடக்கு ஆதித்தனுக்கின்று அந்த ஆதித்தனுந் தான்பெறுதற்கரிய விலையையுடைத்தாகிய சயனதநினின்று மெழுந்திருந்து பலதொழில்களைச் செயயுங்களென்று ஏவு முறைமையைச் செய்யானுயினும இச்செயலுக்குக் காரணமாகப் பொருந்திய ஆதித்தனிடத்தல்லது செயற்கரிய தொழில்களைச் செய்யுமுறைமை மிக்க விப்பூமியிலுள்ளார்க் கில்லை,

இன்னுங் கேண்மதி (எ-து) இன்னமுங் கேட்பாயாக,

இணமலர்—இலமே (எ-து) செறிந்ததாதோடே கொத்துக்கொத்தான பூக்களையுடைய அழகிய விருக்கத்தினிழல் விருக்கந்தானன்று காவலிக்கப்பட்ட பெண்டும் வண்டும் சந்திக்கும் அழகிய நிழல் விருக்கத்தாற் படைக்கப்பட்டது மன்றேபாயினும் விருக்கமில்லையாயின் நிழல்காண்பது மில்லை,

ஒன்றோ—பெரிதே (எ-து) இன்னமும் திட்டாந்தம் ஒன்றேயோ மற்றும் பலவுள,

கருந்தாது—பொருந்தாது (எ-து) இருப்புத்தாளைச் சுழற்றும் பெரிய காந்தக்கல் இரும்பை வருந்திச் சுழற்றவேண்டுமென்னுங் கருத்தில்லையாயினும் ஐயமறப் பெரிய விரும்பு சுழலுதற்கு இதனிடத்தல்லது பொருந்தாது,

என்ன (எ-து) இவ்வைந்து திட்டாந்தமும் போல,

விரிந்தொளி—விரவியோனே (எ-து) சர்வவியாபியாய்ச் சுயம்பிரகாசமுடையனாகித் திக்குகள் பத்திலும உலகம் பதினொன்கினும் அளவுசெய்தளத்தற்கரிய வண்டங்களிலும் வருகாலஞ் செல்கால நிகழ்காலமென்று சுழன்றுவருங் காலங்களிலுஞ் சருவான்மாக்களும் போகம் புசித்தற்குத் தானின்றியமையாத வுரிய பொருளாய் நின்று இவற்றினொன்றினுந் தான் பற்றற்று இத்தன்மையாகிய வுயிர்களை இரக்ஷித்தற்குத் தான்

இரக்ஷகனுமாய் இரக்ஷகன் யானென்னு மகங்காரமறவொழிந்து இப்படிச் சொல்லப்பட்ட பொருளெவற்றினிடத்தும் தானொரு குறைவின்றியே நான்மறையை முழுதுணர்ந்து ஐம்புலன்களைச் செற்று மோனிகளாயினோ ருணர்விலே பூவிற் கந்தம்போலக் கூடி நின்ற அத்தன்மையனான பரம சிவன் அகாரனாற் காரணனாய் நின்ற வியல்பை ஐயோ நாமென்னென்று சொல்வோம் (எ-று). 2

மெய்ம்மொழி.

நிராமய நிர்க்குணாத்த னின்மல நித்த சுத்தன்
பராபரன் சூக்கு மத்தன் பாவக மொன்று மில்லாப்
புராதனன் போதா னந்தன் புகலுமவ் வளவைக் கெட்டா
விராமய மாபா நந்த மென்றுகொள் சிவமதன்றே. 3

தத்துவ மனைத்துஞ் சாரான் சைதனன் சாக்கன் சுத்தன்
மத்தமா மலாதி பாச மபக்குவன் வடிவொன் றில்லா
னித்தனு † யேக னாகி நிரவய னாய னாதி
முத்தனாய் முத்தி நல்கு முழுமுதல் சிவமதன்றே. 4

† யபேத னாகி நிரவய னாத னாகி என்றும் பாடமுண்டு.

திருத்திரட்டு.

உள்ளுரு மோர்புற மதுவொரு தனக்குள தன்றி
யொள்ளொளி தாமணி யொளிமலர் மணமுறை பொருட்டா
னொன்று மெண்ணெயு மியாக்கையு மாவியு மெனவே
நன்று மேலுறுந் தழுவுற நின்றன னாதன். 366

ஒன்றுதத் தனக்கொரு முதலி லாதவன்
கண்முதற் புலன்களாற் காண வில்லவன்
விண்முதன் முதலின்றி விளைத்த வித்தகன்
பெண்மக னலியெனப் பேச வில்லவன். 367

மூன்றுமாய்ப் பின்னு மாகி முதன்முடி விலாத தாகிப்
பின்னமா யபின்ன மாகிப் பேச்சுமாய்ப் பொருளு மாகி
ஞான்றுமாய் ஞான ரூப ஞாதுரு வுருவு மாகி
யுன்றுமா றறிய வொன்றை யுரைக்குமா றெவண மந்தோ. 368

பொய்வண்ண மாகியவைம் பூதமல்லன் பொங்கொளிசேர் மதியல்ல னிரவியல்ல, னைவண்ணங் களுமல்ல னுருவுமல்ல னருவல்ல னித்தனையு மல்லனல்ல, னுய்வண்ண மடைந்தவர்க ளருளினால யுணர்வென்னும் விழிதிறந்து நோக்கியொன்றா, யிவ்வண்ண மெனவியம்ப வரியவீசற் கிதுவண்ண மென்றெங்ங னியம்புமாறே. 369

எல்லாந்த னுள்ள தாகித் தானெல்லாத் துள்ளு மாகிச்
சொல்லாத பொருளு மாகித் தொல்லையா யெல்லை யின்றி
யல்லாதோர் வடிவொன் றின்றி யானந்த வடிவே யாகிக்
கல்லாத காட்சி யாகிக் கலந்துதா னின்ற தன்றே. 5

அன்றியொன் றிலாமை யாலே யகிலமுந் தானே யாகு
மென்றுதா னியம்ப லாகி யீறிலா வின்ப மாகி
யொன்றுடன் பற்று மின்றி யொழிவற நிறைந்து மேலாய்
நின்றது பரம தென்றே நிகழ்த்தின மறைக ளன்றே. 6

பெண்ணாணலி யாமொன் றில்லான் பெத்தமு முத்தி யில்லான்
வண்ணமும் வடிவொன் றில்லான் வரவொடு போக்கு மில்லான்
றிண்ணிய பொருளாய் மேலாய்ச் சேமமா யரிதாய்க் காண
வெண்ணிலா வானாய்த் தூய்தா யிருப்பது சிவம தன்றே. 7

பொறிகள்போய்ப் புறக்க ணெங்கும் புலன்கண்மேற் பொரு
ந்து கின்ற, வறிவற நோக்கிக் கொண்டே யகமுக மாயி னார்க்கும்,
பொறிபுலன் கரண மெல்லாம் புறம்புற மொழிந்து மேலாய்ச்,
செறிவுறு மின்ப வெள்ளஞ் சிவமெனப் படும தன்றே. 8

### பரமார்த்ததரிசனம்.

ஆதி யந்த மிலதழி யாது நின்ற பெருமைய
தோதி யுண்ட நிலையெனு மூன மின்றி யொளிர்வது
நீதி யிங்க ணகிலமு மாகி யெங்கு நிறைதலி
னேத ருங்கை தலைசெவி கால்க ளெங்கு முடையது. 9

காணும் புலன்க ளனைத்தி னிற்குங் கண்ணாய்நின்று காட்டுவது
பேணும் புலன்க டனக்கொன்று மில்லா தியன்ற பெற்றியது
பூணும் பற்றுத் தனக்கின்றி யெல்லாந் தானே பொறுப்பதது
யாணுந் துணைக ளின்றியவை மன்னி யனுப விப்பதது. 10

பூத மைந்தி னகத்தி னோடு புறத்தி னும்பொலி கின்றதிங்
கேத மின்றி நடப்ப நிற்பன வாயி ருப்பத தின்னதென்
றோத ரும்படி நுண்ணி தாகிய தொன்ற தாகி யிருந்துமெய்ப்
பேதம் வந்தது போல நின்று பிறங்க வும்படி கின்றதே. 11

அருவ மாயதி தூர மாய தணித்து மாய தனைத்துமா
யுருவம் யாவு மளித்து மீள வொழிக்கு நாளி லொழிப்பது
பொருவி லாவொளி கட்கு முள்ளொளி யாகி யேபொலி கின்றதிங்
கிருமை விடிய ஞான மோடதன் ஞேய மாகி யிசைந்தது. 12

சிவப்பிரகாசதரிசனம்.

* யாதொன் றின்றிக் கண்காணு செவிதான் கேளா மனமறியா
தியாதொன் றின்றிச் சுவைநாவு மறியா கந்த மூக்கறியா
தியாதொன் றுண்டா வவையவைதா னறியு மதுவே சிவமென்றிட்
டோது மறையி னாகமங்க ளொப்பி லுண்மைப் பொருளிதுவே.

பரவிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1367.

## 4. சீவபரவேறின்மை.

சமாதி.

சீவனும் பரனும் வேறே யென்றிரேற் றெரியக் கேணீ
சீவனைப் பரத்தின் வேறாத் தெரிந்துகா ரியம தாகு
மேவிய காரி யந்தா னசித்தாகி விளியு மென்போற்
பாவிய கடம்போ லாகி நாசமும் பயமு முண்டாம். 1

சொரூபானந்தசித்தி.

* தற்பர னுருவஞ் சித்தே தற்பர னிடையேயக்
கற்பித சீவன் றானும தானக் காலந்தச்
சிற்பொரு ளொன்றே வேறெனின் மற்றது சித்தாமோ
வற்பமும் வேறு காது சிதாகா ரத்தாலே. 2

* பன்னு சடாகா ரப்புணர் வாலே பரசீவர்
பின்ன ரெனிற்போ தத்தொரு பேதம் பிறவாதே
மன்னு சடத்தே பேதம தத்தான் மானத்தாற்
சொன்ன வபேதப் பொருள்கலர் கண்ணிற் றோன்றுதே. 3

* பாவபுண் ணியங்க ளிரண்டையு முதறிப் † பற்றுவி டொன் றொடு மின்றி, யாவையுந் தானும் வேறிலா தவனாய்ப் பெய்துமற் றிப்பொரு ளறிந்தான், சிவனும் பரனுஞ் சின்மய மாகு மாதலா லொப்பெனச் செப்பன், மேவி யொன்றாகி விடுதலே யன்றி வே றுவே றாகுமோ வீடு. 4

† பற்றுத லொன்றொடு என்றும் பாடமுண்டு.

* உடம்புடன் புணர்ப்பாற் சிவனுக் கிறையோ டொப்புள தெ ன்னினொப் பில்லைக், கடந்திகழ் வானின் வானம்வே றாகக் கருதி யொப் புரைப்பரோ வொப்பா, யிடுந்திறங் கன்மத் தாலெனிற் கன்ம மிறக்குமே விச்சையா லென்னிற், றிடம்பட முன்பே யுள் ளதே ஞானந் திகழ்த்துவ தில்லது திகழ்த்தா. 5

* எப்படி யாலும் பண்டுமிப் பொழுது மெப்பொழு துஞ்சிவ சிவர்க், கொப்புள தாகு முருவமொன் றுன வுண்மையால் வேறுமாறு தொன்றே, யப்படி யுள்ள சிவன் பிறர்போல வவிச்சையா னிகழு மவ் வவிச்சை, மெய்ப்பர விச்சை யானசித் தொன்றாய் விடுத லொப் படைதல்வே றன்றே. 6

சமாதி.

இப்பரந் தன்னிற் பேத மிசைந்திடா தெய்வ மென்னிற்
செப்பரு மாயை யாலே திகைத்திடல் பேத மாகு
மப்பொரு டானே யென்று மளவிலத் துவித மாகு
மொப்பரு முலகம் பந்த மில்லையென் றுணர வேண்டும். 7

ஆதலா லாகா யத்திற் கடாகாயம் வேறா றற்போற்
பேதமி லான்மாச் சிவன் பரனெனப் பிராந்தி யாலே
யோதிட நின்ற தன்றி யுணர்விடைப் பேத மின்று
நீதியி னின்ற சிவ னிலைமைய திவண மன்றே. 8

சொரூபானந்தசித்தி.

* இந்தப் புரங்க ளொருமூன்று மிவன்ற னிடையே யிறப்பதுநீர்த்
தொந்தப் புருட னொருநாளு நசியா னுத லாற்சொல்லு
முந்தப் பரம னேயிவன்று னறியா மையினா லப்பானைப்
பந்தப் படுமோர் சிவனெனப் பார்ப்பார் பலத்தே பதைக்கின்றார்,

* பெரிபதா யெவர்க்கு முள்ளதா யுயிராய் நிறைந்துள பிரம † சக்கரதந்தே, திரிதரா நிற்குஞ் சிவனிப் பரிசே திரிதரு மிவனை யுந் திரிக்கும், பரமனு யுள்ள வவனையு மனனம் பண்ணியிப் படியி லே பார்ப்பா, னொருவனே சனன மரணமற் றென்று முள்ளதாய் நிகழ்ந்திட வரியான். 10

† கோ சத்தே என்றும் பாடமுண்டு.

* அறிவனு மறியா தானு மாய்நிகழ் பரசி வர்க்கு
மறையினல் வடிவாற் றர்க்க வழியினு லனுப வத்தாற்
பிறிவிலே மாயை போக வேதுவாம் பிரமந் தானிங்
கறைதரு மெல்லாந் தானு யகர்த்துரு வாகி நிற்கும். 11

* நாச முற்றுவிடு மாயை சிவனசி யானி ரண்டினினு நாதனு, மீச னிற்குமிறை யைத்தி யானபர ஞக வந்தவியல் பானுமே, யோச கத்தினிலே யானு மேகமெனு முண்மை யானுமுயிர் † முடி விலாத், தேசினிற் றிகழு மிங்ஙனே பிறிது செய்த மாயைசிதை வாகுமால். 12

† முடிவினிற், றேசெனத்திகழு என்றும் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

பசுபதி சைத னத்தாற் பகர்ந்திடு மொப்பு மாகா
பசுவவன் பெத்த னுகும் பதியவ னமல னென்றும்
பசுவவன் பாசந் தீர்க்கை பதிதொழி லாகுந் தீர்த்தாற்
பசுபதி பேதஞ் சொல்லிற் பரவைசேர் நதிக ளன்றே. 13

சீவபரவேறின்மை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1380.

# 12. மாயாப்படலம்.

## 1. மாயாநிரூப்பியம்.

விருத்தவிளக்கம்.

உயிர்பரந்தமி னபேதமா முண்மையு முரைத்தவப் பாசீவர்
மயல்செ றிந்திடு மாயையாற் பேதமாய் வந்தவா றதுதானு
நயம தோன்றிட வருளிய வகையென நாதனே யம்மாயை
யியல்பி னுண்மையுந் தெளிதர வேழையேற் கிசைத்தருள் செய
வேண்டும். 1

சிவப்பிரகாசதரிசனம்.

மாயை யென்பது தனதுகோ ளதுவலான் மதித்திடிற் பிறிது
ண்டோ, வாய பொன்னின்வே றாகிய வணியென வானதே யம்
மாயை, யோய்வ தின்றியே யொளிதரு பரமன தொளியினை
மறைத்துண்டா, மாயை யென்பதொன் றிலையிலை யுளதெனி னஃ
தவன் வினோதங்காண். 2

சொரூபானந்தசித்தி.

* அடையவும் பிரமமே யெனவ றிந்துளோ
னடைவதங் கதனையே யாகு மன்றியே
யிடையினோர் மாயையுண் டென்ன வெண்ணுமேற்
கடையதே யாமவன் கற்ற கல்வியே. 3

* மாயையென் றொன்றுண் டாக மதிப்பது மனன மல்ல
வாயினு மகண்ட ஞான வங்கமா மந்த ஞானங்
காயம்வே றுகு மென்கை காரண மாக வித்தைத்
தூயநான் மறைக ளோதுந் துவந்துவந் தீர்க்கை சுட்டி. 4

* யாதொரு படியாற் றோன்று மியல்பினாற் சகத்திற் குண்மை
யோதிய துபநி டந்தா னொரோவிடத் துண்மை யாகப்
பேதமா முலகு தோன்றிற் பிறப்பதற் கேது வாகு
மீதெலா மில்லை யென்ன லின்பத்திற் கேது வாகும். 5

* ஆகை யாலகி லத்தையே மாயையென் றுகமெய் யாய்வந்த, மோக மாற்றுதற் பொருட்டொரோ விடத்திலே மொழிந்தது முதுவேதம், பாக மாகிய சித்தரைக் குறித்துமெய்ப் பரம்பொரு ளாகின்ற, வேக மேநிகழ் கின்றதெல் லாமென வியம்பிய திதயத்தால். 6

போதாமிர்தம்.

ஏக மேயென தருந்தவப் பயனதா மின்பமே யெனதாவிப்
பாக னேமறை பரமனை யுணர்வுறு தவர்களைக் குறித்தோது
மோக மாயையின் வடிவொடு வகையது முறைவிருந் திடுமோது
மேகு மாறது மின்பநற் பிரமமா மியல்பையு மிசையெந்தாய். 7

* மாயை யுண்மையாந் தனை † நினை யாததன் மறவியே பிறிதில்லை
யாய தன்வடி வறையினஞ் ஞானமா மளவிலா விருளாகு
மேய தன்வகை பூதபௌ திகமுதல் விளம்பிடு மெவையுந்தா
னேய வேயது விருப்பதெத் திறமெனி னதனையு மிசைப்பன்கேள்.

† யுணராததன் என்றும் பாடமுண்டு.

* அறிவின்மா யைதா னதிலிருந் திடுமெனி னறிகிலே னெனலில்லை, யுறைவனுன் மாவி னென்றிடி னுணர்வுணா ராமையும் விபரீபுண்டோ, செறியுமான் மாவி னென்றிடிற் றெளிந்தேன் றெளிந்தில னெனலாகு, மறிவதாசிர யமும் விடயமு மலதிலா மையினிறந் தறிவேயாம். 9

போதாத்துகரம்.

* சொன்ன மாயைசத் தசத்துட னுபயந்துன் னிருபதையா நிருவாச்சியை, யென்ன வைந்துசன் னிவிர்த்திய தசத்தசன் னிவிர்த்திசத் தறுவாகுஞ், சொன்ன வற்றினி னிவிர்த்திய துப யம்பொய்த் துன்னிரு பதையேகிப், பின்ன தாமநிர் வாச்சியம் பொய்வெறும் பிர்மமா வதுதீர்வே. 10

* விரித்த மாயையின் மேவுமை வகையது மொன்றிலொன் றதுநூலன், திரித்த பார்வையிற் றிகழ்பவை மிகமிக நுண்ணிதா மவைதம்மைக், காத்தி னெல்லிபோற் கண்டனு பூதியிற் கழித்திடிற் கண்ணேயா, யிருந்த லாமல துரையினுற் கழியுமோ வெலையிலாப் பெருமாயை. 11

சொரூபானந்தசித்தி.

* மெய்மை நாடின்மெய்ப் பரமலா லவிச்சையும் விச்சையும் வேறேயோ, வைய மானது மற்றொரு பொருள்களு மில்லையிம் மனனஞ்செய், துய்ய யோகிமுன் னெப்படி யெப்படி தோன்று மின் றதுதோற்றஞ், செய்பு † மியாவையுஞ் சிவன்வடி வாகவே திகழ்ந்திடுந் திடமாக. 12

† மாயையுஞ் என்றும் பாடமுண்டு.

மாயாநிரூப்பியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1392.

## 2. பிரபஞ்சநிரூப்பியம்.

விநாவிளக்கம்.

மாயையின் வகையெலா மறைந்த வாறுபோன்
மேயப்பிர பஞ்சமாய் விளைந்த வாறது
மாயுமப் பரிசது மாய வுண்மையே
யாயநற் பரிசது மருள்செ யண்ணலே. 1

சொரூபானந்தசித்தி.

* சின்மாத் திரமா யுள்ளவெறுஞ் சிவனே திகழ்வா னியாதுக்கு முன்மாத் திரமும் வேறில்லை முற்று மவனே மொழிவுற்ற நன்மாத் திரமா யான்மாவென் றுரைக்கு நாமத் தினையுடையான் றன்மாத் திரமே யாகியவத் தன்மை யான சங்க ரன்றன். 2

தத்துவசித்தி.

சோதி யேவிளை யெனும்பெரிய தூவெ ளியிலே
யாதி பிசமய லாயுள தவிஞ்சை யதிலே
யோது மாயையெனு மங்குர முயர்ந்து பணையும்
பூத மாயின பொருந்துவதன் மீது பொதுவே. 3

நித்த மென்னநிகழ் கின்றபணை யைந்தி னெடுவா
னத்த டம்பணை நயந்தநெறி சிந்தை யதுவா
யத்தின் முன்வசன மாயொலிகள் கன்ன மடைவே
யொத்து யர்ந்தவிவை யொன்றநினை யொன்று தவியே. 4

ஓதும் வாதபனை சித்தமென வந்துணர் விறை
லாது தானகர முற்றலுரி தந்தடைவினை
தீத ரும்பனை யகங்கரண சேடமதுவி
டாதி பாயுவுரு வங்கணடை வந்தவமைவால். 5

நீரெ னும்பனை நிரம்பியது புந்தி யதிலே
நேரி யங்கல்பத நின்ற ‡ சுவை தானு நிகழ்வும்
பாரெ னும்பனை பயந்துமன னென்று சுகமுந்
சாரு முன்பகர் மனங்கட்கு நாசி தருமால், 6

‡ சுதை என்றும் பாடமுண்டு.

கார ணத்தினொடு காரிய நிகழ்த்து மிவைநே
ரார ணத்தின்மொழி யஞ்சுவகை யஞ்சு மிவையாற்
றார ணிப்படு சராசர மனைத்து மிவைதன்
பூர ணிப்பயல் பொருந்துமுறை பொய்ம்மை யுளதால். 7

பார்த்தன முலகமும் பரிசு பண்பினுற்
பேர்த்திவை யழிவகை பேசி னேசையிற்
சோத்திரம் வாயிடை யொலிகள் சொன்னவாய்
வார்த்தையில் வசன மு நினைவின் மாயுமே. 8

வானெழு முறையிவை மாய்ந்த வண்ணமே
தானனி லெரிபுன றரையி னுயவு
மூனமா முள்ளன வுன்னல் சித்தமு
மானகங் கரணமே புந்தி மானதம். 9

### துறுந்திரட்டு.

போதக் கண்ணிற் பூதம் பொய்யே மெய்யேயாம்
பேதக் கடகுட் டியமா நிகழ்விற் பேதந்தா
னேதப் படுசத் திகைவெள் ளியின்மெய் புணர்காலஞ்
சேதப் படுமெக் கனவிற் பெரிதுந் திரமுண்டோ. 370

ஆதலி னுலினைங் கரண மாகமுன்
னோதிய தூலமா முடம்ப ழிந்துதன்
சாதன வுடம்பிலே சமைந்த தாதலாற்
றீதற விதுமிறும் வகையுந் தேர்துமால். 10

ஐபமாங் குறிமன மழியும் புத்தியிற்
செய்புநிச் சயக்குறி சிறந்த வீதுபோய்
மெய்யகங் காரமாய் வீயு மீதுதான்
மையறு துணிவுடன் மாய்ந்து சித்தமாம். 11

பணித்தளி யாமிது பயக்குஞ் சிந்தையாய்க்
கணிகலக் கணையிது கரக்கு மாயையி
லணியுள திலதுமா மீத விஞ்சையி
லுணர்வது பெறுதவி துணர வில்லையாம். 12

காரண மதினெழுங் காரி யங்கடாஞ்
சேரும்வந் தந்நெறி தேய்ந்து தேய்ந்தபின்
பூரண மாகியே புறம்பு முள்ளுமோர்
வாரண மரிதென மலருஞ் சோதியே. 13

கதிரொளி பிறிதிலாக் கண்ணி னுள்ளொளி
யதிர்வெயி லிருளுறக் காணு மஃதுபோ
லுதவிவந் தவிஞ்சைமீ தோங்கு ஞானமே
யிதுபொரு ளிதுவசத் தென்று காணுமால். 14

சொன்னவிஞ் ஞானமே துடைத்த விஞ்சையை
யுன்னரு மொளியிலே யொன்று மொன்றவே
முன்னுல கெனுமொழி முடிந்து மெய்ப்பொரு
ளன்னிய மழிந்துபோ யகண்ட மாகுமால். 15

## சிவப்பிரகாரதரிசனம்.

கேள்வியு டனனமு †முதலி யற்றினாற்
கூறிய ஞானமென் றிங்குச் சொன்னது
வாழ்தரு மனமதி னுப தல்லவோ
மாழ்துமோ வையமிங் கதனின் மாதவா. 16

† முதலி யற்றினோ என்றும் பாடமுண்டு.

தான்மன விஞ்சையாய்த் தழித்த பின்சகங்
கானல்போ லென்னினுங் காண நின்றதே
தானுறு பிரவிமுன் றமழு நின்றதோ
வானவா றழிதர வருள்செ யங்கணு. 17

மேதையின் மிகுதரு விமல மைந்தநீ
யோதிய பரிசெலா மொள்ளி ஆன்றனக்
கேதம தறவுல கென்ப தின்றிமெய்ப்
போதமே யாம்வணம் புகலக் கேட்டியால். 18

* அனலொழி தரவணி யொடித்துத் தட்டினுஞ்
சொனவணி முறியெனத் தோன்று மாறுபோன்
மனனிலா விஞ்சையால் வைய மாளுமோ
வனலழி வெனவனு பவத்தின் மாளுமால். 19

* பன்னிய வனுபவம் பகரின் மாயையின்
றன்னிய ஐவகை தம்மிற் றாலமா
முன்னிய விசுவனை முதல தைவகை
மன்னவே † கண்டழிந் திடுதன் மாதவா. 20

† கண்டழித் என்றும் பாடமுண்டு.

* அகிலனை முதல தாக வறைந்தமுப் பாவந் தானுந்
தருகரி யெனுமப் பாவஞ் சகலமுந் தானெனன் பாவ
மகமுற வைந்துங் கண்டங் கவைகழிந் திடவே யையந்
திகழ்தரு பேரு மின்றிச் சிற்பரம் பிரம மேயாம். 21

பிரபஞ்சநிருப்பியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1413.

24407

# 13. ஞானப்பகுதி.

## 1. ஞானப்பிராதான்யம்.

### போதாமிர்தம்.

இப்படி பேத மில்லாப் பொருளதா மிறைவன் றன்னை
யெப்பொரு ளதனு முள்ளத் திலங்கிடக் காண்ப தென்னிற்
செப்பிடு ஞானத் தல்லாற் றிகழ்ந்திடா தென்று மென்ப
தொப்பமை யில்லா நல்லோர் யாவரு முரைப்பர் கேளாய். 1

* பிரமனை முதலாத் தம்பமீ றாகப் பெருகிய பொருள்கள் யாவையினும், திரமதா யொத்துத் திகழுமெய்ப் பொருளைத் தேவருந் தெரிக்குமா றறியார், வாமதா மந்தப் பொருளினை வருத்த மின்றியே காணலா ஞானக், கருதரும் விழியா லன்றியே வேறொன் றாற் கற்பகோ டியினுங்காண் பரிதால். 2

### மூலசித்தி.

அங்கியிற் பரனை மந்திர மதனாற் கண்டதாக் கொள்வரந் தணர்கள், பங்கமில் யோகப் பார்வையா லுடலிற் பாவனை செய்வர் யோகிகடா, மங்கறி விலாத வவரொலா முண்மை யாகவே பதுமையிற் காண்ப, ரெங்குமாய் நின்ற பரனைப் படியே யிலங்கிடக் காண்பர்ஞா னத்தால். 3

### ஞானசித்தி.

* வாக்கினொன் மனத்தான் மதிக்கொணாப் பொருளை மதிவகுப் புக்களால் வருந்தி, நோக்குமா முபல்வர் முயலுகின் றலென் னேக்கிட லாகுமா றுண்டோ, தாக்கிலா தெங்கு மியாவையுந் தானாய்த் தானவை யொன்றலாப் பொருளை, நீக்கிலா ஞான விழியினு லங்கைக் கனியெனக் காணலா நேரே. 4

### திருக்கடைக்காப்பு.

ஊனத் திருணீங் கிடவேண்டின்
ஞானப் பொருள்கொண் டடிபேணுந்
தேனைத் தினியா ‡ னபருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 5

‡ னபர்சோலை, வானைத் தவர்பயி என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

ஊனினு ளுயிரை வாட்டி யுணர்வினார்க் கெளியு ராகி
வானினுள் வான வர்க்கு மறியலா காத வஞ்சர்
நானெனிற் றானே யென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சிற்
றேனுமின் னமுது மானார் திருச்செம்பொன் பள்ளி யாரே. 6

உடம்பெனு மனைய கத்து ளுள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் † யட்டி மதியெனுந் திரிம யக்கி
யிடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலிணை காண லாமே. 7

† யூட்டி யுயிரெனுங் என்றும் பாடமுண்டு.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்க டொழக்கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே. 8

### திருவாய்மொழி.

நாகத் தணையானை நாடோறு ஞானத்தா
லாகத் தணைப்பார்க் கருள்செய்யு மம்மானை
மாகத் திளமதியஞ் சேருஞ் சடையானைப்
பாகத்து வைத்தான்றன் பாதம் பணிந்தேனே. 9

சக்க ரத்தண் ணலே யென்று தாழ்ந்துகண் ணீர்ததும்பப்
பக்க நோக்கி நின்ற லர்ந்தேன் பாவியேன் காண்கின்றிலேன்
மிக்க ஞான மூர்த்தி யாய வேதவி ளக்கினையென்
றக்க ஞானக் கண்க ளாலே கண்டு தழுவுவனே. 10

ஞானப்பிராதான்யம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1423.

## 2. ஞானவிலக்கணம்.

### வினாவிளக்கம்.

கருதரு மீசன் றன்னைக் காண்டருங் கண்ணா தென்றே
யுரைதரு ஞானந் தன்னின் பிரதானநன் குரைத்தாற் போலப்
பொருவரு ஞான மென்னும் பொருளத னிலக்க ணத்தை
விரிதர வடிய னேற்கு விளம்பியே யருள வேண்டும். 1

### சமயசாரம்.

அறிவென்ப தியாதோ வென்னி னறிகின்றோன் றனையுந் தன்கட்
பிறவியும் பிறப்புஞ் சாவும் பிறப்பறு நிலையும் பேணு
நெறியினாற் பாசம் வீடும் வீட்டினி னிலையு மெய்ம்மை
யறிவதா மறிவிவ் வாறு மறியாமை யதுவா மென்றான். 2

தனதறி வறிவி லாமை † தானறி வெங்ங னென்றா
னனவையுங் கனவை யுந்தா னனவிலோ ருதல்போன் ஞானங்
கனவுதா னனவு மற்றக் கனவையுங் காணு தாற்போன்
மனமறி வறிவி லாமை மதியாமை மயக்க மென்றான். 3

† தானன்றி யெங்ங என்றும் பாடமுண்டு.

### பரமார்த்ததரிசனம்.

மன்னவுட லியாவையினு மன்னியறி வாய்நின்
றுன்னுமுயி ரானிவை யிரண்டினையு மோர்காற்
றன்மையினி னியாதறியு மற்றதனை ஞான
மென்னவுணர் வாயிஃ தெனக்குமிசை வாமால். 4

### சொரூபானந்தசித்தி.

* ஈசன்சக மோடுள சீவனதா மியாவும்பர ரூபம தென்று
கொடே, நேசம்மத னுளுள தாகியதன் னிறையும்மறி வானதி
யாததுதான், மாசொன்ற திலாத பரம்பொருளும் மபலொன்றறி
யாத வபேதமது, மேதம்மொழி வேதன மாவதுவு மென்றம்மல
ரோனு மியம்பினனால். 5

* இத்தன்மை யொழிந்துள தாமறிவே றியாதொன்றறி
யாமையை யெய்தியதே, மெய்த்தன்மை யதாயறி போததினும்
வேறாயறி கின்ற விடந்தனிலு, மத்தன்மையில் வேறு படாத
திலோ ரையம்மிலை யாசற நின்றதுதான், சித்தொன்றி யறிந்திடு
மவ்வறிவே சேர்தற்கரி தாயிடு மெங்கணுமே. 6

* செகரூப மாய வதின்வே றிலாது விளையாடு தெய்வ மதுதான்
சுகரூப மாய தனையே பகுத்து விளையாடி யுண்ட லஃதனை
யகமாயை யின்றி யறிகின்ற போத முளதாகி நிற்கு மதுவே
தகநாளு மோது மறிவாவ தென்று சதுரான னன்சொ றருமால்.

*சிவனை யுள்ளான் பிறிதில்லை யென்று திரமா யறிவதுவே
பவமே யொழிக்கும் பரமார்த்தம் பகருநெறிதா னதுவாகு
மவமே யிதனை யொழிந்துளதா மவைதா மிதனை யடைதற்குத்
தவமே முதலாஞ் சரியைகளைச் சாற்று கின்ற தன்மையவே. 8

சிவப்பிரகாசம்.

* அவ்வண்ண முரைத்த ஞான மமலமாய் நுண்ணி தாகி
மெய்வண்ண விகார மின்றி வேறொன்றோ டணைத லின்றி
மைவண்ண விருத்தி யின்றி வளரொளி யாயே நிற்கு
மிவ்வண்ண மல்லா தெல்லா மிருளுடை யறிவா மன்றே. 9

சிவஞானச்சிறப்பு

உளத்தொளிர் ஞானந் தோன்று முயர்குண மியாதோ வென்றால்
விளக்கொளி விரிப்ப † விய விருட்பொருள் விளங்கு மங்க
முளத்திரி நெய்யு நான்கு மொருகாலத் துளவா ஞற்போற்
றுளக்கிலா ஞானந் தோன்றிற் றோன்றுநாற் குணமுண் டென்றான்.

† வீயு மிருட்பொருள் என்றும் பாடமுண்டு.

ஞானவிலக்கணம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1433.

## 3. ஞானமான்மியம்.

வினாவிளக்கம்.

ஏற்றிய ஞானந் தன்னி னிலக்கண மிசைத்தாற் போல
வாற்றவே சரியை யாதி களும்வரப் பயனு மற்றைச்
சாற்றிய ஞானந் தன்னின் றலைமையும் பெருமை தானு
மாற்றறி யேனை யாண்ட வள்ளலே யருள வேண்டும். 1

சுப்பிரபோதம்.

* சரியையுங் கிரியை யோகஞ் சாற்றிய ஞான மென்ன
விரிதரு பாத நான்கும் விளம்பிய முறைமை கேளா
யுரைதரு மூன்று ஞான முதித்திடற் கேது வென்றும்
† புரையறு ஞானத் தாலே பொருந்தும்வீ டென்றுங் காணே. 2

† புரையற என்றும் பாடமுண்டு.

ஒன்றினுக் கொன்று மேலா மோங்குஞா னத்தால் வீடு
மன்றிமற் றுள்ள மூன்று மாசைவிட் டன்பாற் செய்யி
னின்றஞா னந்தான் வந்து நேர்படற் கேது வாகு
மன்றெனி னவற்றி னாய பயன்களு மறையக் கேளாய். 3

தேசுண்டத் தவிந்தி யான்ந் தியாகமே யோக மற்று
மாசுண்டத் துரைத்த மூன்றி னடங்கிடு மவற்றி னுப
பேசுநற் பலஞ்சா லோகஞ் சாமீபம் பிறச்சா ரூப
நேசுறத் தகுவ தல்லா னிகழுசா யுச்சிய மாகா. 4

சுத்தஞா னத்தா லெய்துந் துகளில்சா யுச்சிய முத்தி
யத்தன்மை யப்பினப்புப் பாலிற்பா னெய்யி னெய்போன்
மெய்த்தன்மை யுயிர்ப ரத்தின் வேறின்றி யொன்றே யாகு
மத்தன்மை ஞானந் தன்னின் பெருமையை யளக்க லாமோ. 5

## மெய்ம்மொழி.

அஞ்ஞான சித்தத் தாருக் காவாக னாதி பூசை
மெய்ஞ்ஞான முதித்தத் தாலே விட்டைக்காண் குதற்பொ ருட்டா
லஞ்ஞான மில்லா தாருக் † கான்மாவா மிலிங்கந் தோன்று
மெய்ஞ்ஞானந் தானே தானும் வீடுந்தா னேதா னாகும். 6

‡ கான்மாவி லிங்கம் என்றும் பாடமுண்டு.

வருந்திய சரியை தீர்த்த மந்திரஞ் செபங்கள் பூசை
பொருந்திய தியான யோகம் போதத்திற் கேது வாகும்
திருந்திய ஞான முற்றுற் சிற்சொரூ பத்தை நோக்கி
யிருந்திடு மிவைபின் பாரா னின்பனு மியோகி யன்றே. 7

## சமாதி.

சுருதியின் முடிவா லிங்ஙன் றுணிதலே ஞானம் வேறு
கருதிய ஞான மெல்லா மஞ்ஞான மாகுங் கண்டாய்
தெரியவிஞ் ஞானந் தன்னின் பெருமையைச் செப்ப லென்னே
யரிதினி யென்று லுன்ற னனுபவத் தாலே யாகும். 8

## சிவப்பிரகாசதரிசனம்.

* ஞானமுற் கருமந் தானு நவில்வுறிற் புலியு மாடு
மானநற் கருடன் பாம்பு மங்கியும் பஞ்சும் வெய்ய
பானுமற் றிருளு மென்னப் பழுதறச் சிதையுங் கன்ம
ஞானநற் பெருமை யின்ன நவின்மறைத் திறனி னோராய். 9

* கரும ஞான மிரண்டவ் விரண்டினுங்
கருமம் வேதத்தின் காலி னுழக்குறு
மொருமை நான்மறை யோங்கு சிரத்திலே
யிருமை ஞான மிருக்கவுங் கண்டதே. 10

* கரும மேமுயல் வோரைக் கலைமறை
யிருமை யேவ விராப்பகல் கொண்டது
பெருமை ஞானியைப் பீடுடை வேதமே
சிரம தாற்றுதி செய்திடும் வேறுங்கேள். 11

### சொரூபானந்தசித்தி.

* இலங்கிரவி யிந்துவன லாதகைமி னெல்லா
நலம்பெற விளங்குவது ஞானவொளி கொண்டே
புலம்படு மனத்தையும் விளக்குபர போதந்
துலங்குவது தன்னுடைய சோதியத னாலே. 12

* ஓரொளி விளங்குகில தாதைபுல வாத
சீரொளியில் வேறுசில தேவர்திகழ் வாரோ
பார்வெளியு மெய்ப்பொருள் களுந்திசைகள் பத்தும்
பேரொளி பெறத்திகழ் பரப்பிரம மேயாம். 13

* மிக்க நற்பிரம ஞான முற்றபொழு தேவெறும் பிரம மாய் மனத், துக்க மற்றிடுவர் தொல்லை வல்வினை துவக்கு மாறுமிலர் துஞ்சிடார், பொக்க மற்றொருவ னிச்ச கத்திலனு போக மாவ றியு மாயின்மே, லக்கு லத்தினி லொருத்த நப்பிரம வித்த ராவ திலராணையே. 14

* † வாக்கொடு மனத்துக் கெட்டொணாப் பொருளை மற்றுள புலன்களொன் றாலே, நோக்குமா றெங்ஙன் கருமமொன் றானு நண்ணிய பொருளை ‡ நண்ணாரே, தாக்கிலா வந்தக் கரணமதுடையார் தத்துவ ஞானநல் விழியாற், போக்கிலா தெங்கு மாகிய பொருளைப் புரையறக் காண்பரெப் பொழுதும். 15

† வாக்கினு லுரைக்கு மாறிலாப் பொருளை என்றும் ‡ நண்ணுதே என்றும் பாடமுண்டு.

### ஞானசாரம்.

வாக்கொடு மனங்கா யத்தால் வருத்தம துறவே வேண்டாம்
போக்கொடு வரவ தில்லைப் பொய்யொடு மெய்ய தில்லை
யாக்கமு மழிவு மில்லை யையமற் றின்ப மாய
நீக்கிலா ஞானந் தன்னி னிகர்பிறி தேதுமுண்டோ. 16

யாகமுந் தருமந் தானஞ் செபந்தப மிறைநற் பூசை
யோகமுந் துறவுந் தீர்த்த மொழுக்கமெக் கலையு மோத
லாகிய முழுதுங் கற்ப மழகுறச் செய்வ தெல்லா
மேகமாத் திரைஞா னத்தை யெய்துதற் கிறையும் போதா. 17

ஞானமான்மியம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1150

## 4. கருமநிந்தையும் ஞானப்பெருமையும்.

### வினாவிளக்கம்,

ஞானத்தி னளவி லாநற் பெருமைய திருக்கு மாறு
மூனத்த கருமத் தால்வீ டொன்றிடா வாறுஞ் சொன்னோ
மீனத்த கருமந் தன்னி னிழிவுறு பரிச தின்னந்
தேனொத்த மொழியின் மைந்தா திகழ்த்திட வதனை யுங்கேள். 1

### ஞானாமிர்தம்.

கழிபெருந் துன்பங் களைல வழிவழி
யோவா முயற்சித் தாவா நோன்பி
னவர்க்கே மிக்க தகைப்பரும் பலமெனிற்
கற்றுங் குநர்க்கே கழிகவின் றுதைந்த
வெற்படு மணிதாங் குநரிற் பொற்பொடு
வருபலம் வரூஉம் பொருவிரி வன்சிலை
தாங்குநர் மிகவுந் தளர்த லோம்பிய
வுயிருட னுடைத லடைப கடிபடு
பலமோ பகரி னலமோ வின்றே
யோதிர மணைந்த தீதக றிருமணி
தாங்குங் காலு மோங்கிய லணியா
யுளமலி யுவகை யகமீக் கூர்ந்தன்
றரும்பொருள் பயக்குங் காலைத் திருந்திய
கோடி யெல்லை கூடா தாடிய
லந்த ரங்கம் புறவங் கத்தின்
மைந்தமல் பெய்தும் வெந்திற னிருப
ரகத்துறை பலரே புறத்துறை பலரிற்
போக மேவுத ருவார் காண்டிகு
மற்றே வாடவ ரிவையர் தம்மின்
மிக்க வந்தரங் கத்தவர் பெற்ற
வின்பமு முரையில ததனை
லந்த ரங்கமன் மைந்தமல் பறியே.

(இ-ள்.) கழிபெரும்—பலமெனில் (எ-து) அளவிறந்த பெரிதாகிய துக்கஞ் செறிய மேன்மேலு மொழியாத சரியை கிரியை யோகங்கள் வாயிலாகக் கெடாத தபசையுடையோர்க்கே மிகவுந் தடுத்தற்கரிய பலனாகிய மோட்சஞ் சித்திப்பதென்னில்,

கற்றுங்குநர்க்கு—வருஉம் (எ-து) அம்மிக்கல்லைச் சுமந்தோர்க்கு மிகவும் அழகுபெற்ற ஒளியுடைய மாணிக்கத்தைக் கைக்கொண் டோரிடத்து அழகிதாகவரும் பிரயோசனம் உண்டாகவேண்டும்,

பொருவிரி—இன்றே (எ-து) உவமையில்லாத வலிய அம்மிக்கல்லைச் சுமந்தோர் மிகவும் இளைப்படைதலோ டமையாது காக்கப்பட்ட உயிர் உடல் விட்டு நீங்குதலுங் கூடுவர் அழகிய பிரயோசனஞ் சொல்லில் நன்மையில்லையாம்,

மோதிரம்—கூடாது (எ-து) மோதிரத்திலழுத்திய குற்றமற்ற அழகிய மாணிக்கந் தரிக்கும்போதும் ஓங்கிய வியல்பாகிய அழகையுடைத்தா யுள்ளத்தி லுண்டாகிய பிரியம் புறம்பும் விளங்காநிற்கும் அதுதான் பெறுதற்கரிய பலந்தருமிடத்துத் திருத்தியுடைத்தாகிய விலை யித்தனை கோடி யுண்டென்று நிச்சயிக்க முடியாது (அதுபோல),

ஆடியல்—எய்தும் (எ-து) புறக்கரணத்தாலே சரியையாதி நெறியிலே நின்றவர்களினும் வெற்றியுடைத்தாயிருக்கப்படாநின்ற உட்கரணத்தாலே பசு பாச பதிகளி னுண்மையுணர்ந்து சிவத்தைக் கரணங்களிறந்து நின்ற வறிவினால் வழிபடு ஞானவான்கள் பெறுவதான வலியதாகிய சித்தி யளவுபடுவதல்லக்காண்,

வெந்திறல்—காண்டிரும் (எ-து) மற்றும் வெவ்விய வலியுடைத்தாயிருக்கப்படாநின்ற அரச ரிருக்குமிடத்து உறையு மந்திரிகள் புறப்பட்டோடு சாமந்தரி லநுபோக மேவுதற்கு அளவில்லையென்று காண்பாயாக (இதுபோலவும்),

அற்றோ (எ-து) அத்தன்மைத்தேயோ,

ஆடவர்—அறியே (எ-து) மிகவும் அந்தரங்கரா யிருக்கப்படாநின்ற நாயகனு நாயகியுந் தம்மிற் புணர்ச்சியில் விளைந்த வின்பமுஞ் சொல்லிறந்ததாதலால் அதுபோல ஞானிகள் அந்தரங்கத்தின் கண்ணே விளைந்த அநுபோகமும் மேலான வலியுடைத்தாகிய மோட்சசித்தி யென்று அறிவாயாக (எ-று). 2

## சிவப்பிரகாசதரிசனம்.

முப்பதி ரடிய தாய முரண்டுர வதனைப் பாய்ந்தாற்
றப்பிலெட் டினையே யேனுந் தான்குழி விழு மாபோற்
கற்பித்த கருமந் தப்பிற் கடுநர குறுமாம் வாய்க்கிற்
செப்புறச் சுவர்க்கஞ் சென்று † திரிவது திண்ண மேகாண். 3

† தீர்வது என்றும் பாடமுண்டு.

ஏற்றிய ஞானம் வாய்க்கி னிவ்வுடம் புடனே முத்த
னூற்றவங் கதுதான் றப்பி னரியநற் கரும மெல்லா
மேற்பட வுணர்ந்தோ ரெய்துங் கதியின்மேற் பதமு மெய்தி
யாற்றவிங் கொருபி றப்ப தடைந்துவீ டெய்து மன்றே. 4

மறைமுறை கருமம் வாய்த்தால் வானகத் தேகும் போதங்
குறைதரு மின்ப துன்ப வினையினு லுயிர்ப்பை விட்டு
நெறிமலர்க் கந்தங் கொண்டு நீங்குகா லதுபோல் வான்போய்ச்
செறியுமப் போக முண்டு திரிவரத் திறமுங் கேளாய். 5

அஞ்ஞானநிவிர்த்தி.

வானகத்தின் வாழ்வதெலா மாண்ட வாறே வருணனுடன் வந்துமழை யோடும் போந்து, போனகத்துக் குரியநெல்லு முதல வாகிப் புவியிடத்தே வந்ததனைப் புருடன் றுய்க்க, வூனகத்தே யுதிரசுக் கிலமு மாகி யோகத்தான் மாதருத ரத்தே யெய்தி, யூனமற வுற்பவிக்கு மிதுகாண் கன்ம மொப்பறவே வாய்க்குமெனி னுறுவ தையா. 6

சொரூபானந்தசித்தி.

* பண்ணிய தொழிற்றரும் பயன்க ளியாவையு
மண்ணிடை நுகர்ந்திட மாளு மாறுபோற்
புண்ணிய வினைதரும் போக மியாவையும்
விண்ணிடை யிருந்தனு பவித்து மீளுமால். 7

* மெய்யினை யுணர்ந்தவர் வினைக ளியாவையுஞ்
செய்யினுஞ் செய்தில ராவர் தேவர்கா
டெய்யநல் வினைகளே தொகுத்து மற்றையார்
வெய்யகன் மத்தராய் விளம்ப வேண்டுமே. 8

* அக்கர மாகி மெய்ம்மையாய் உள்ள வப்பொரு ளறிந்தபோ தல்லா, லெக்கரு மங்க ளானும்வீ டில்லை யாகமா திகளியற் றுங்காற், றக்கர மாகி யனித்தமாய்ப் பேறுஞ் சுருக்கமா யிருக்கமற் றிவற்றைத், திக்கறி யாதே முயல்பவர் முத்தி செறிந்திடார் மரணமே செறிவார். 9

* கருமதற் பரராய் நாங்களே யெல்லாங் கற்றவ ரென்றிருக் கின்ற, பெருமித முடையார் மூடரே பிறவா நெறியையும் பெறு கிலார் பிறவிக், குருடர்கைப் பற்றிப் போகிய குருடர் குழியிலே கூடவிழ் வதுபோன், மருவிய வினையுந் தாங்களுங் கூட மாய்வதே யன்றிமற் றிலையே. 10

* தோலையுநல் வினைப்பயன் றொலைந்த போதிலே
தலையது கீழுற விழுகை தப்புமோ
நிலையுறு முத்திநேர் படுத னெஞ்சிலே
யலைவறு ஞானமுண் டாகி னல்லவோ. 11

சிவப்பிரகாசதரிசனம்.

* ஆதலால் விரதந் தானநற் றவமோ டியாகமாச் சிரமஞ் சன் னியாத,மோதருந் தீர்த்த முற்றநற் கரும மியோகமே முதல் வரு மெவையும், பேதமா மவற்றாற் பேறதுஞ் சுவர்க்கம் பேசி னத் துருவமே நிலையாங், கோதிலா ஞான மொன்றுமே மகத்தா ய்க் குலவுசாந் திகரமா வதுதான். 12

கதித்தநற் றவமோ டியாகமற் றெவையுங் கட்டசா லக்கடுந் துயராய், விதித்தவப் பயனு மற்பமா யழிவாம் மெய்ம்மையா லனைத்தையும் விட்டுத், துதித்திடுஞ் சிவயோ கொன்றுமே பர மாய்ச் சொல்லும் † வீ டக்கரமாகி, மதிப்பரு மகத்தர் மதனையே யுணர்ந்து மதித்திடார் மதிஞர்மற் றவையே. 13

† வீட் டாகரமாகி என்றும் பாடமுண்டு.

* முத்தியின் விருப்பத் தாலு முதல்வனற் பாதத் துற்ற
பத்தியி னாலு மற்றப் பரனையே பாவிக் கின்ற
நித்தமாந் தியானத் தாலு நிரந்தர யோகத் தாலுஞ்
சித்தியா மிதுசித் திக்கும் வினையினாற் சித்தி யாதால். 14

கருமநிந்தையும் ஞானப்பெருமையும் முற்றும்.

ஆகச்செய்யுள் 1464.

## 5. ஞானார்ச்சனை.

விநாவிளக்கம்.

அக்கிரி யைகளான் முத்தி யடைந்திட வொண்ணு வாறு
தக்கிட வடிய னேற்குச் சாற்றியே யருளி னும்போ
னிர்க்கிரியை ஞான மேய நிமலமா மீசற் கென்று
மிக்கவர்ச் சனையா மாறும் வினையனேற் கருள வேண்டும். 1

ஞானசித்தி.

செப்புநீர்க் கிரியை ஞானந் தெளிந்திடு மதுவே யீசற்
கொப்பிலர்ச் சனைய தென்றே யுணர்ந்தநல் லோர்க ளெல்லாஞ்
செப்புவ ரதன்ற னுண்மைத் திறமது திகழும் வண்ண
மொப்பமை விலாத மைந்தா வுவகையோ டுரைக்கக் கேண்மோ. ()

சொரூபானந்தசித்தி.

* எப்படி ‡ பூத நாநா வுருவமா யிலங்குந் தன்னு
லப்படி யறிவே யாக வநுபவித் திடுத லேயாஞ்
செப்பிட வரிதா யுள்ள திகழொளி யாகுந் தன்னை
மெய்ப்பட வேறொன் றின்றி † விழைந்திடும் பூசை தானே.

‡ புத்தி நாநா வுருவமா யிலங்குந் தன்னு, ஏப்படி என்றும்
† விளைந்திடும் என்றும் பாடமுண்டு.

* † எப்பொருட் கண்ணு மன்னி யிலங்கிடு மறிவா மீச
னப்படி விளங்கு கின்ற தறிதலே யவன்ற னக்கு
மெய்ப்படு பூசை வேறோர் செயலினு லன்று மெய்யே
யிப்படி ஞானந் தன்னு லிறைஞ்சிடப் படுவா னீசன். 4

† எப்பொருள் களுந்தா னுகி என்றும் பாடமுண்டு.

* ஆன தாகாத் தெய்வமதே யடையும் விடய மிந்தியமாய்த்
தானு மாகித் தனைத்தன்னுற் றானே நாகருந் தன்மையது
வூன மாகு ஞாதாதி யொழிந்தே யுள்ள வறிவதனுற்
றானே யாகக் கண்டிடுதல் சத்தா யுள்ள பூசையதே. 5

ஞானசித்தி.

* சடவுடல் வடிவ தாகித் தனையுண ராதான் மெய்யே
யடியொடு முடிவி லீசற் கனுசித மதுசெய் பாவி
திடமுறு முணர்வ தாகத் தெளிந்திட லதுவே யென்று
மொடிவறு மின்ப வீசற் கொப்பினற் பூசை தானே. 6

போதாமிர்தம்.

* ஓது பேதம் பேய்த்தேரென் றுணர்த லதுவொண் புனலாகுங்
காத லின்ப மிடர்களவென் றிடலே கருது புகையொளிதான்
வாதங் கழிய மறித்துணர்தன் மலர்பூ ணுடை மகிழ்சார்த
மேத மின்றி யிருந்திடுத லிறைவற் கெலேயில் பூசையதே. 7

போதரத்னுகரம்.

* ஊனன்றுழல் புலனன்றுணர் மனமன்றுணர் மதியர்
மானன்றுயி ரெனும்வாயுவு மன்றுமக மன்றுந்
தானென்றிய திரளன்றென நலைவறக்கெழு மலரா
மூனென்றுமி லுணர்வொன்றிட லொளிமொரண்மல ருறவே.

தத்துவதீபிகை.

* சகமென்றுரை தரநின்றதொர் பொருளொன்றுமி லறிவே
மிகநின்றொளிர் தரநின்றமை விழியெங்கணு மருவா
வகமங்குட னிதமொன்றற வறிகின்றிடு மதுவே
தகவொன்றிய விறையின்புறு தகுபூசனை தானே. 9

மூலசித்தி.

* சிற்ப ரந்தனைச் செடமுறு†பொருள்களாற் றிகழ்தர வருச்சித்த
லற்பு தம்மதன் றந்தகாக் கடுப்பதென் றறைந்தன கலையெல்லாந்
தற்ப ரந்தனைத் தெளிதர வுணர்தலே சாற்றுபூ சனையென்றென்
றொப்பி லாரண கோடிகோ டிகளுண்மை யோதுத லொழியாதே.

† பொறிகளாற் என்றும் பாடமுண்டு.

ஞானர்ச்சனை முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1474.

## 6. ஞானசாரம்.

விநாவிளக்கம்.

நிர்க்கிரி யைப்பரம் பொருளினை யுணர்தலந் நிமலநா யகனுக்குத்
தக்க வர்ச்சனை யாவதென் றழகுறச் சாற்றிய வதுபோலத்
துக்க முற்றிடு கிரியைக ளொன்றறச் சுத்தமாய்ச் சுபமாகு
மிக்க ஞானவா சாரமும் வினையினேற் கருளவேண் டிடுமெந்தாய்.

சிவப்பிரகாசதரிசனம்.

ஓங்கிய ஞானத் தன்றி யொப்பிலாப் † பரத்தை நாளுந்
தீங்கறக் காணொணமை திகழ்த்துமா ரணங்க ளெல்லா
மாங்கவை யனைத்துங் கேட்டு மளவிலாக் கிரியை மூளும்
பூங்கிலா மூடர்க் கொப்புப் பகரின்மற் றவரே பின்னும். 2

† பதத்தை என்றும் பாடமுண்டு.

2404

நிருமலப்பிரகாசம்.

* சித்ததே சிவன்றிரு மேனி யென்பது
மெய்த்தவே தாகமம் விளம்பக் கேட்டுநற்
சித்தினைச் சடத்திலே வைத்து நம்புமப்
பித்தரைப் பிறப்பிலே பிரமந் தள்ளுமால். 3

* அருவமா யகண்டமாம் பிரம மென்பது
சுருதியின் முடிவெலாந் தொகுத்துச் சொல்லவு
முருவமாஞ் சடத்திலே யுண்மை வைத்துழல்
பிரமரைப் பிரமம்வெம் பிறப்பில் வீழ்த்துமால். 4

அனுபவசித்தி.

* தெளிவி லார்க்குநீர் தீர்த்தமண் ணேமுத
லளவில் கற்பனை தெய்வமா மப்படி
யுளவ குப்பெலா முண்மையென் றோதுமெய்
தெளிப வர்க்கவை செப்பவும் பட்டவோ. 5

போதரத்னகரம்.

ஆதலாற் கிரியை யெல்லா மறைந்தது மறிவி லார்க்கே
யோதரு மமல ஞான வுத்தமர்க் கொன்றும் வேண்டாம்
வேதமும் விளம்பும் வேத நாயக னருளின் கொம்புக்
கோதிய பரிசு மிவ்வா றெனவுண ருணர்வின் மிக்கோய். 6

சேபந்தி யானமுந் திகழுமர்ச் சனைகளாஞ் செயல்களு மவை வேண்டாந், தவங்க ளாகுதி தருமறை காரியஞ் சாதன மவைவேண்டா, முவந்து தானநல் லிடங்களிற் றரிசன முறுநிய திகள்வேண்டா, நிவந்த தீர்த்தமும் பிதிரர்கா ரியங்களு நிமலரா சரியாரால். 7

பாவ புண்ணிய மவைதரு பலன்களும் பழுதற வவர்க்கில்லை
யோவ லின்றிய வுலகினிற் கிரியைக ளொன்றுமங் கவைவேண்டா
தாவ லின்றிய சகலகன் மங்களும் விடுவரிச் சகத்தோரான்
மேவு கின்றவெள கிகவொழுக் கங்களும் விமலரா சரியாரால். 8

விவித மாமணு மாதியும் வியோமசா ராதிக ளவைதாமுந்
தவவில்பா தாளா திகளொடி ரசாய னங்குளி கைகடாமு
மவமெ லாமற வங்கையிற் பலிக்கவே காணினு மவைதம்மைப்
பவம தாக்கிடும் படுதுய ரெனவுனிப் பரமரா சரியாரால். 9

ஆபி சாரவுச் சாடனா கருடண தம்பமோ கனவசியந்
தோப காதிபூ தச்சுரங் கோள்களா வேசமு முதலாய
கோப மார்தரு குத்திரக் கருமமாங் கொள்கைக ளவைசெய்யா
ராகு காட்டபா டாணர்சம் பாவனை யமலரா சரியாரால். 10

பிணங்கி டங்களும் பேருல கோர்செய்பேய்க் கோட்டிகளவைதாமு, மிணங்கு † கோள்களா மிராகுகே தாதிக ளிருந்திடுமிடந்தானுங், குணங்கொள் சாத்திரக் கோட்டியுங் குபாடித சுபாடித வுரைதானு, மிணங்கி டார்களை ‡ காந்தமெய்ஞ் ஞானிகளெழில்கொளா சாரந்தான். 11

† கோலகா லங்களா மிராசிக என்றும், ‡ சாந்த என்றும் பாடமுண்டு.

சரத ஞானவா சாரநற் சமதமா திகண்மயித் திரியாதி
நிரத மாதிமெய்ஞ் ஞானசந் தோடநின் மலவமிழ் தினைமாந்தி[ன்றி
விரத மொன்றுமங் கின்றிய விரதமாய் வேட்கையொன் றொடுமி
வரத மொன்றிய வருள்பொழிந் திடவிருந் திடுவதே மற்றில்லை.

## ஞானசாரம்.

சாத்திக ராசத தாமத குணமா மூன்றினி லொன்றுதன் னியல்பா, மார்த்தவக் குணத்தின் முக்குணம் வருமா லவற்றினை யப்போதப் போது, பார்த்தவக் குணங்கண் மாற்றிநற் குணத்தே பதம்பதஞ் சிந்தையைத் திருத்திச், சாத்துவி கத்தே சாத்திக மாத றத்துவ ஞானவா சாரம். 13

உடுப்பது சில முணவுவிட் டமுத முவப்பது ஞானமா மடந்தை, கொடுப்பது மருளைக் கொள்வது மறத்தை யிருப்பது மருந்தவக் குகையாம், விடுப்பது குற்றந் தொடுப்பது சாந்தம் வெல்வது தம்மைமெய்க் குரவோ, னடித்தல மலரே புனைவதும் பிறப்பை யறுப்பவர்க் கருந்தொழி லிவையே. 14

மருளுறு மெவையு நாறி மயக்கறத் தெளிந்து ளோர்க்கு
மருளறத் துறக்க லாகா தயலொரு பொருளு மில்லாத்
தெருளுறு முறைமை யானுஞ் சிவமெவ ருளமு மன்னு
மருளினை யறித லானு மவர்தொழி லருள றந்தான். 15

## சமயாசாரம்.

பொன்முதற் பொருண்மண் ணோடுபோற் காண்டல் புத்திரர் மித்திரர் பூமி, யன்னிய யோனி யிடமெனக் காண்ட லரிவையர் திறமத்தி ரம்பாற், பன்னிய மாலை யாமெனக் காண்ட † லூண்பன மருந்தெனப் பருக, றன்னுட லரவின் றோலினைக் காண்ட றத்துவர் சரிதையின் பரிசே. 16

† லுணவுபூண் மருந்தெனப் பரித்த என்றும் பாடமுண்டு.

புத்திரர் மனையா ளாதிப் புறச்சுற்றப் பற்று நீக்கி
யித்திரண் மலவு டம்பா மிடைச்சுற்றப் பற்றும் விட்டே
யொத்துயிர் விடாத பாசக் காணவுட் சுற்ற மாய்த்துத்
தத்துவ மாயிருத்த றத்துவர் சரிதை யையா. 17

## பரமார்த்ததரிசனம்.

அறிவினிற் றன்னு ளின்புற் றனைத்தவா வினையு நீக்கி
வெறிதரு வெகுளி காம மயக்கநீத் தின்ப துன்பம்
வறிதெழு பொழுதில் வாட்ட மகிழ்ச்சியென் றிவையு மாய்த்துப்
பொறிதரு புகழுந் தீங்கும் போற்றல்போற் றுமை போக்கி. 18

ஆமைதன் னுறுப்போ ரைந்துந் தன்னுளே யடக்கு மாபோற்
றீமைசெய் புலன்க ளைந்துந் தன்னுளே செறியச் சேர்த்தி
வாய்மையு ணிகழு மின்னே வழுத்தவும் படுகின் றுனற்
றாய்மைசெய் தெவையு நாளுஞ் சொல்லுவ தவன்றன் சொல்லாம்.

பாடும் பனுவல் பலவோதி யவற்று லறியும் பயனுணர்ந்து
நீடும் புலன்க ளவைவென்று நிலையிற் கலக்கற் கரியானு [னேயிங்
யோடும் பொன்னு மொருபொருள்போ லொக்கப் பார்க்கு மவ
காடும் பெரிய மாயக்கூத் தாடா ததுகண் டமர்ந்திருப்பான். 20

உலகமுந் தானும் வேறிலா மையினுற் றுறொரு பொருட்கு
மஞ் சாதே, யலகிலா வுயிர்கட் கினியனு தலினு லவைகளுந் தன்
னையஞ் சாதே, புலவரா னவர்கள் புகழவே நிகழ்வான் பொறு
மையு மயக்கமுங் களிப்பு, மிலகிடா நெஞ்சத் தியோகியென்
பவன்கா ணியாரினு மெனக்குவே றினியான். 21

ஒன்றினு மாசை யின்றியிந் தியங்க டம்வழி யொழுகிடா
தொருக்கி, நன்றியி னோடு தீங்கினி னைத்து நல்வினை தீவினை
துறந்து, பொன்றினு மோவுற் றழுதல்செய் யாதே பூரித்தல்
வாடுத லின்றி, யென்றுமுன் பிழந்த பொருட்கிரங் காதே வரும்
பொருட் கிச்சைசெய் யாதே. 22

இகழ்பவர் நட்டா ரென்ப தின்றியே யின்ப துன்பந்
திகழவ மான மானஞ் சீதமோ டழலின் றீமை
புகழ்பழி யிவற்று ளொத்துப் பொருந்திவா ழிடமொன் றின்றி
நிகழ்தரு மியோகி கண்டாய் மற்றெனக் குரிய நேரான். 23

ஞானசாரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் : 1497.

# 7. ஞானயோகம்.

வினாவிளக்கம்.

இயாவுமா யிலங்கு மீசன் றன்னையிப் படியே காணு
மோவிலாப் பூசை ஞான யோகினு லுறலா மென்று
மேவரு மறைக ளெல்லாம் விளம்பிய விமல யோகந்
தாவற வடிய னேற்குத் தலைவனே யருளி டாயே. 1

மெய்ம்மொழி.

தாக்கிலா ஞான யோகத் தன்மைதா னியாதோ வென்னிற்
சாக்கிரங் கனாச்சு ழுத்தி துரியந்தான் றுரியா தீதஞ்
சாக்கிர மதனிற் கண்டு சதுர்த்தச கரண மியாவுஞ்
சாக்கிரத் ததீத மாத றற்பர மாவ தென்றான். 2

புறக்கண்மேல் விடயத் தோடிப் பொறிகள்செய் கின்ற தெல்லா
மறக்கதித் திரைதா னெங்ஙன் வருமதின் மனத்தை மெள்ள
வுறக்கமு முணர்ச்சி யின்றி வைக்கவுன் னுருவத் தின்ப
மறக்கினு மறக்கொட் டாதே வந்திது செய்யு மன்றே. 3

அண்டமெண் டிக்கெங் கண்ணு மடங்கச்சூ னியமா தாகக்
கண்டுகொண் டுருக்கக் கண்ட கருத்தையு மறவே விட்டா
லண்டமெண் டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக்
கண்டுகொண் டிருக்கும் வண்ணங் கணத்தின்வந் துதிக்கு மன்றே.

---

குறுந்திரட்டு.

ஒருகா லிருகான் முக்கான்மற் றுள்ள கால முள்ளத்தை
வருகா தலினு லியோகத்தே வைப்பார் மகேச னெனப்படுவா
ரரிதா மிதனை மாயோக மபாவ யோக மெனவறிஞ
ரிருபா லாக வியம்புவரவ் விரண்டு மிருக்கும் படிகேண்மோ. 371

தானினையு மாறரிய தத்துவமி யாதொன்
றூனிகழ்வ தாகும தபாவமெனு மியோகம்
வானியல தாகியொரு வத்துவு மிலாதாஞ்
சூனியம தாகவறி கின்றனர்க ளோர். 372

மயலிலா யாதிலொரு மலமிலா தானசுக வடிவதா மாசி லொளியா
மயலிலா வேகவெனை யயலெனு தேகமென வறிகைமா யோக மதுவா [லா
முயலுமா முசையென முடிவிலா நூல்கள்பல மொழியும்யோ காட லிய
மியலுமு தாமரிய விதனி லோர் சோடசியு மிசையுமு தாத மியல்பால். 373

### சொரூபானந்தசித்தி.

* யோகமன மொன்றியறி வாமுணர்வி லானுங்
காகமுறு மைம்புல வயங்கள்வய மாகா
பாகனை யறிந்தபரி போலமன னத்தே
யாகுமதி யாளனை யறிந்துவய மாமால். 5

### பரமார்த்ததரிசனம்.

தலையா மிந்த யோகத்தைத் தலைநின் றொழுகுந் தன்மைதே
ஞலையா வாசை யறமாற்றி யொன்றுந் தனக்கென் றொழுகாதே
மலையார் முழைஞ்சே முதலாக யோகங்களுக்கு வகுத்து ரைத்த
நிலையா வையினு மொன்றி னில்வந் தியாது நலியா விடத்ததிலே.

ஒக்கும் வகையாற் குசைபரப்பி யதன்மே லுழையின் றோல்படுத்துத், தக்க துகிலை யதன்மேலே விரித்துத் தானங் கதிலிருந்து, மிக்க மனனை யறவொருக்கி வேறு செய்யும் வினைக ளுடன், றொக்க புலன்க ளவையடக்கி யுணர்வு தூய்தா வதன் பொருட்டால். 7

தலையுங் கழுத்து முடம்புமிவை செவ்வே தளரா தேயிருக்கு
நிலையி லிருந்து கண்களைத்தன் மூக்கி னுதிமே லேநிறுத்தி
யலையும் கடல்போற் காமமுமெய்ப் பயமுந் தன்னை விட்டகல
வுலையு மனமுள் ளடங்கவெனை யுணர்ந்தே யிருக்கு மதுயோகம்.

எண்டிகழு மியோகத்தை யிப்பரிசே யெப்பொழுதுங்
கொண்டுபயில் வார்கடைக்கா லென்னையே கூடுவரா
லுண்டியினின் மிகுவாருண் டறப்பார்மிக் குறங்கிடுவார்
கண்டுயிலை யறத்துறப்பா ரவர்க்கிதுகை வாராதால். 9

துயிலு முணவுஞ் செய்தொழிலு மிகாமே குறைந்து தோன் றாமே, பயிலு மவனே யோகத்தைத் தன்பாற் படுக்கும் பான் மையா, னயிலும் பொறிவிட் டவ்வறிவு தன்பா லடங்கு மப் பொழுது, குயிலு மியோகந் தலைநின்றா னென்றுங் கவலைக் கூற லாம். 10

இப்பரிசு பயில்கின்ற யோகிகா லிலாவிடத்து
மெய்ப்பரிசு நடுங்காத விளக்குப்போல் விளங்குமா
லெப்பொழுதாங் கவனுணர்வி லுண்மையிலே சென்றிசையு
மப்பொழுது பரமானந் தத்தினையு மடையுமால். 11

யாதொன் றிந்தப் புலனறியா வளவி லின்ப மாயிருக்கும்,யாதொன் றினைச்சென் றடைந்தோர்கள் பின்னை யதனி னிரண்டாகார், யாதொன் றினைப்பெற் றவரிதனின் மிக்க தொப்ப துண்டென்னார், யாதொன் றிந்த வறிவுக்கே யறிவாய் நிற்கு மதினின்றோர். 12

போக மாய்த்துப் புலன்களைப் போக்கறுத்
தாக மாமெய் யறிவிடை யேயந்த
வேக மாய மனத்தினை மெல்லவே
யேக மாக விருத்திக லாதுநீ. 13

வாங்கி யைம்பொறி நின்ற மனத்தினை
நீங்கி டாவகை நின்னு ளிருத்தியே
தீங்கி யாவையுஞ் சிந்தைசெய் யாமையாம்
பாங்கி யாததுவே பயில் வாயரோ. 14

இழியா திந்த யோகத்தை யென்றுந் தலைநின் றவனென்று
மழியா வின்பத் தினையின்பந் தாலே யடைப்பு மதுநிற்க
வொழியா வெல்லா வுயிர்களுந்தன் னுள்ளே காணு மவற்றுள்ளே
கழியா தெங்குந் தானின்ற பரிசுந் தெரியக் காணுமால். 15

எல்லா வுயிரு மொன்றாகப் பார்ப்ப தியோக மெனவுரைத்தாய்
மல்லார் தோளா யிதற்குநிலை காணேன் மனமா கின்றவிது
நில்லா வியற்கைத் தாய்ப்புலனைக் கலக்கு மதனை நிலைநிறுத்த
லொல்லா தெனவுங் காற்றடக்கற் றெருக்கு மெனவு முணர்கின்
றேன்.] 16

இவ்வகை விசயன் கூற மாயவ னியம்பு கின்ற
னைவகைப் புலனு நெஞ்சு மடக்குகை யரிதா னாலு
முப்வகை யோக மியாவு முபபற்சியி னாலு மொவ்வா
வைவகைப் புலன்செ யின்ப மனைத்தையும் வெறுத்த லாலும். 17

வெய்ய நெஞ்ச மடங்கிடும் வேறிதற்
கைய மில்லையென் றேயறி யாதலாற்
பைய வேகர ணம்பதி னொன்கையுங்
கைக டந்தவ ரியோகமுங் கைகண்டார். 18

எல்லாத் தவமு மியற்றினின் றோனினு
மெல்லாக் கலைகளுங் கற்றுணர்ந் தோனினுஞ்
செல்லாக் கரும மெலாஞ்செய் தவனினு
நல்லான் வலியோகி நீயிது நண்ணுவாய். 19

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

* அங்கி யைந்தினு ளருந்தவ மொருகான்மே னின்று
பங்க மில்பதி னாயிரத் தாண்டுசெய் வதுவுந்
துங்க ஞானயோ கத்துணர் மாத்திரை யதனி
னங்கோ ராயிரங் கூற்றொன்று தனக்குநே ரலவால். 20

* வாச பேயநூ றுயிர மசுவமே தந்தான்
பேசி னாயிரங் குறைவறப் பேணியே செயினு
மாசி லாதமெய்ஞ் ஞானயோ குறுமோர்மாத் திரையி
னாசி லாப்பதி னாறினொன் றுக்குமொவ் வாதே. 21

ஞானயோகம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1518.

## 8. ஞானயோக நழுவினர்கதி.

### பரமார்த்ததரிசனம்.

என்று கூற விசய னியம்புவா
னின்று யோகத்தி லேநெடு நாளெலாம்
பொன்றுங் காலத் தயர்ந்துயிர் போயினாற்
சென்று நற்கதி யேயன்று சேருமோ. 1

யோக மேவ வினைக ளொருவினான்
மோக மேவலின் யோக முடிந்தில
னேக மேயிரு பாலும் விடாநிற்க
மேக மேயென வீய்ந்து கழியுமோ. 2

ஐய விதுவென் மனத்தினின் மற்றிந்த
வைய மறுக்கவல் லாரில்லை நீயன்றி
யுய்ய விதனை யுரையென்ன யோகத்தின்
மெய்ப னிதனை விரிய வுரைக்கின்றான். 3

யோக முடியா திடையே யிறந்தவன்
யாக வினைபல செய்தாங் கிசைந்திடுஞ்
சோக மினுடெய்தித் துன்பந் தொடராதே
போக நுகர்ந்துபல் காலங்கள் போயபின். 4

---

### குறுந்திரட்டு.

எட்டனை வினைக்குறைய தெய்தினா ரென்னுஞ்
சிட்டமறை யோகமுடி யாதுசிதை வுற்றா
விட்டபடை கற்படைய தாயிவ்வுடல் விட்டு
விட்ட குறை யோகடையும் வீடுபுகு மென்று. 374

சிறந்த வரசர் திருக்குலத் தாத
லறந்தரு மியோகிக டங்குலத் தாதல்
பிறந்து பெறுவதெல் லாமெய்திப் பின்னு
மறந்த வியோக மகிழ்வுட னெய்தும். 5

சதகம்.

இயம்புஞா தாதி மூன்று மிறந்துள பிரமந் தானாய்
முயன்றுணர் கின்ற ஞானங் கைவரின் முத்தி யெய்து
மயர்ந்தது பிழைக்கு மேனு மயனுல காண்டு மீண்டு
முயர்ந்திடப் பிறந்து ஞான முறும்பினைக் குரவன் றன்னால். 6

ஞானயோக நழுவினர்கதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1524.

# 9. ஞானவலி.

சமாதி.

தப்பினுந் தப்பா வண்ணஞ் சகலயா காதி கன்ம
மொப்பற வுழந்தோ ரெய்து முயர்கதி யடைந்து பின்னு
மிப்புவி தனின்வந் தெல்லாம் பெற்றுயர் வீடும் பேறு
மப்பெரு ஞானந் தன்னி னழகுறு வலியி னங்கேள். 1

ஏற்றிய தீப மெண்ணிற் சிறியதே யெனினு மெங்குந்
தோற்றரு மிருளை யெல்லாந் துவக்கறப் போக்குமாபோற்
போற்றரு ஞான மற்ப மாயினும் பொருந்த நோக்கிற்
பாற்றிடும் பெரிய பாவப் பற்றினை யெல்லாந் தானே. 2

சொரூபானந்தசித்தி.

* விழுமி தாமப மேதங்கள் பண்ணினும்
பழிமி கும்பஞ்ச பாதகம் பண்ணினு
மொழிவு றுமலோன் றேயென் றுணருவா
னழுவி னுனந்த நன்மையுந் தீமையும். 3

குறுந்திரட்டு.

ஞானயோக நழுவினர்கதி.

படியிலா ஞான யோகத்தைப் பயில்வோன் பயின்றவப் பரமயோ கந்தான், முடிவுபோ காதே யிடையிலே யிறந்தான் மொழிந்தநற் பதமெலாந் துய்த்துப், படியிலே யுயரப் பிறந்தெலாம் பெற்றுப் பரமயோ கத்தவர் சார்வுற், றொடிவிலா யோகான் முத்திகண் டிந்த வுடம்பொடே யுடம்பொழிந் திருக்கும். 375

### சமாதி.

பெருநெருப் புலர்த்த வீர மென்றுபா ராது பேணி
யெரியின்மே லிட்ட தெல்லாஞ் சுடுமதன் னியல்பு போல
விரியுநற் சுபாசு பங்க ளென்னுமிவ் வியற்கை யெல்லாந்
† தெரியினன் ஞான வன்னி சுடுமது திண்ண மேகாண். 4

† தெரிவினின் என்றும் பாடமுண்டு.

### மெய்ம்மொழி.

அளையாரு மனேக நாக மார்த்தெடுத் தணிந்தே றிட்டு
மிளையாமந் திரப லத்தா லெங்ஙனே விளையாட் டங்ஙன்
றளையாருஞ் செவிதொக் காதித் துகளாமிந் திரியங்கள் கொண்டு
விளையாடு மியோகி தன்னை விடயங்கள் செய்வ தென்னே. 5

மன்னுநன் மருந்தி னோடு மந்திர பலத்தா னஞ்சைத்
தின்னினுஞ் செரிக்கு மாங்கே தீவினை யனந்த கோடி
பன்னுநற் பரம யோகி பண்ணினு நசிக்குங் கேளாய்
மின்னுமாத் திரைத னக்குள் விமலபா வகத்தி னாலே. 6

செஞ்சுடர்த் தீயுட்புக்குச் சிலர்கண்மந் திரமருந்தாற்
பஞ்சிழை யதற்குஞ் சேதப் படாதுபோந் தேறுமாபோ
னெஞ்சக முழுதுமின்ப நிறைந்தமெய்ஞ் ஞானயோகி
வஞ்சமா மாயக்கூட்ட மயக்கினு மயக்குறானே. 7

### ஞானமிர்தம்.

கறையணற் கட்செவிப் பகுவாய்ப் பாந்தட்
கடுவொடுங் கெயிற்றின் வடுவுறக் கிழித்துங்
கிழியாப் பண்பிற் றன்றே யுறையுடன்
மதியொடு புணர்ந்த மறையி னோர்க்கே
செழும்பெரும் பொய்கைக் கொழுந்துவிடு பூயரிய
முட்டாட் டாமரைக் கொழுமட லகவிலை
யப்புன றொத்தாத் துப்புமெய்ப்படு
மந்திர மருந்தின் மைந்தின் வெந்திறற்
காரிகை தொடினும் பேரிட ரின்றே
கரைபாய்ந்து கலித்த பெருநீ ருவரித்
தோன்றி வாழ்தொழில வாயினு மயிலை
தீஞ்சுவை யுப்பிற் சிவணா தாங்கு
ஞானமாக் கழல் யடினுற வீக்குநர்
விடய வேலைத் தடையின்று படியினுந்

தீதொடு படியுந ரல்லர்
மாதுயர் கழியுநர் நீதியானே.

(இ-ள்.) கறை—மறையினோர்க்கே (எ-து)—அறிவோடேகூடிய மந்திரத்தாலு மௌடதத்தாலும் பரிகாரமுடையோர்க்குக் கண்ணாற் காணுந்தூரங் கேட்கவற்றான செவியையும் அணரி (மேல்வா)யிலே கறையையும் பெரிய வாயையுமுடைய பாம்பு நஞ்சடங்கப்படாநின்ற பல்லாலே வடுவுறக்கடித்தாலும் தீண்டாதவியல்பான இத்தன்மைபோலவும்,

செழும்பெரும்—துப்பும் (எ - து)—அழகையும் பெருமையையுமுடைய பொய்கையி லுயரக் கொழுந்துவிட்டு முள்ளைத்தாளிலே யுடைத்தான தாமரையிற் செழுமையாயகன்ற மடலிலேயி லந்த நீர் தேங்காத பொலிவு போலவும்,

மெய்ப்படு—இன்றே( எ - து)—உண்மையாகிய மந்திரசத்தியாலும் ஔடதசத்தியாலும் வெவ்விய வலியையுடைய நஞ்சை யுண்ணினும் பெரிய துக்கமில்லாதவாறு போலவும்,

கரை—ஆங்கு (எ-து) கரையைப் பொருது சத்திக்கப்படாநின்ற பெருநீராகிய லவண சமுத்திரத்திலே சனித் ததிலே வளருந் தொழிலையுடைய வாயினும் மீன்கணம் இனியரசத்தையுடைய உப்போடுகூடியிராதவாறு போலவும்,

ஞானமாக்கழல்—நீதியானே (எ-து) ஞானமாகிய மகத்தாகிய வீரக்கழலை யழகுண்டாகக் கட்டினோர் தடுக்கவொண்ணாமற் போகசமுத்திரத்திலே முழுகினும் அது தமக்குக் குற்றமாகிய பந்தமாகத் தொடக்குறுவா ரல்லர் முறைமையாலே மகத்தாகிய கிதநிய நோயைப் புசித்துக் கழித்தலையுடையோராம் இத்துணையே (எ-று). 8

ஞானாமிர்தம்.

பதிபசு பாச மதியோர் வரத
வுலையா வென்பதைத் தலைநனி நிற்இ
யுடையா தாயி னொருபெரும் பாச
மடையா விடெனக் கடைநனி கழறிற்
றன்னுரை மலைவு முன்பின் மலைவு
மன்னவை யருளோ யாமெனிற் பன்னிய
வுடையா வூண்டர வடையா பொடிபட
மாமலை யன்ன மரங்கெறு கடுங்கன
முமரை யன்ன தனித்தகை தாங்கினு
மந்திர மாக்கட் கதுவு மியாதே
செம்பிது செய[illegible] ன்றுறக் களங்கமி

தென்றுறை கூடா வெழில்வளர் சிருணஞ்
சித்துநீர் செறிந்த தொத்து மிக்க
விடங்கெழு பெருவலி யுளங்கொண் மந்திரத்
தடங்கிய தன்மையு மற்றே குடங்கர்க்
கலங்குநீ ரில்ல நலங்கிளர் விழுக்கா
பூளைந்த மாறெனை விணகிறந் தகன்ற
பாசப் பெருவலி தடுத்தனர்
மாசின் ஞான மன்பெருந் தகையே.

(இ-ள்.) பதி பசு—அருளோயாம் (எ - து) ஞானவான்களுக்குச் சிரேட்டமாயுள்ள ஞானாசிரியனே பதியும் பசுவும் பாசமு நித்தியமென்று முன்பே மிகவு மருளிச்செய்து வைத்துப் பின்பேயும் உவமையில்லாத மகத்தாகிய பாசச்சேதமில்லாத விடத்து முத்தி சித்தியாதென் றருளிச் செய்தால் அருளையுடையோனே எவ்வண்ணம் நின்வசனங்கள் சுவவசன விருத்தமும் சாத்திரத்திற்குப் பூருவாபர விருத்தமும் வருவனவாயிருந்தன வென்று விண்ணப்பஞ் செய்ய,

எனில்—அடையா (எ-து) என்றுயாகில் இங்ஙனஞ் சொல்லப்பட்ட பொருள் மூன்றும் நித்தியமாயிருப்பினும் ஞானவான்களைப் பாசம் வாதிக்க மாட்டாது என்போலவென்னில்,

பொடிபட—யாதே (எ-து) பெரிய பருவதம்போலத் திரண்டமரத் தைப் பொடியாகச் சுடுங் கடிய நெருப்பைத் தாமரைப்பூவி னிதழ் போன்ற மெல்லிய கையிலே தரித்தாலும் மாந்திரிகருக்குக் கேடாகிய விதனம் யாதாயினு முண்டோ மந்திரவாதிகளை அக்கினி வாதியாமை யல்லது மற்றுள்ள விதன நீங்காமையாற் பாசம் வாதியாமை யல்லது சுத்தாவ தில்லையோ வென்று வினவில்,

செம்பிது—ஒத்தும் (எ-து) இதுசெம்பென்றும் இதனுடன் கூடிய புறத்து விளங்கும் புல்லியகளிம்பு இதுவென்றும் பிரித்துச் சொல்லுதற் கரிய அழகுமிகுந்த செம்பிலே இரதஞ் செறிந்தாற் பொன்னனவாறுபோ லச் சுத்தனுவனென் றருளிச்செய்யச் செம்பிலே குளிகையிட் டுருக்கிலல் லது சுத்தமாகாதபடியால் வியாபகமான ஆன்மாவிற்கு ஏகதேசமான தேகத்திற் பாசச்சேதஞ் செய்தவா றெவ்வண்ணமென்ன,

மிக்க—அற்றே (எ-து) உள்ளத்திலே மந்திரத்தைத் தியானிக்கத் தேகமுற்றும் வியாபித்த மிககநஞ்சி னுண்டான பெரியசத்தி பாதாதிகேச மளவுங் கலவாமற் றடைப்புண்டவாறுபோலவும் என்றருளிச்செய்ய நித் திய நோய்கள் சரீரியானவனுக்குடையன வாதலால் இவை தோற்றின காலங்களில் ஞானத்தையே குறித்துக்கொண்டிருக்க ஒண்ணாமையால் மந்திரந் தியானியாத பொழுது நஞ்சு வாதிக்குமாறு போல ஞானமும் இவனுக்குச் சித்தியாக மாட்டாதோ வெனின்,

குடங்கர்—பெருந்தகையே (எ-து) குடத்திலெடுத்த மண்ணீரானது தேற்றின்மரத்துண்டாகிய அழகுவிளங்கிய சிறந்தவிதையிட்டுத் தேற்றின பின்பு மறித்துங்கலங்கிறைற்றேற்றுமற் றெளியுமாறு போல ஞானிகளுங் குற்றமற்ற ஞானவனலாலே உவமை யில்லாத மகத்தாகியபாசத்தினுடைய பெரிய சத்தியைச் சேதம்பண்ணினபின் பிராரத்த கன்மம் புசித்தற் கேது வாகிய நித்திய நோய்கள் நலியினும் தெளிவுக்காட்சி யுடையராயிருப்பர் பெருந்தன்மை யுடையோனே (எ-று). 9

போதரத்னகரம்.

* ஏறிய கோடி மாமறை யோரை யீறுசெய் பாவ மாமத னோடு
கூறிய நூற தாயிர கோடி கோவதை யாகும் பாதக மோடு
வேறுள தாகும் பாதக கோடி மேவினு மேவு மோர்கணப் போதி
னீறது வாகு நீடிய ஞான நீள்வலி யால தாமறி வார்கள். 10

ஞானவலி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1534.

## 10. பிராரத்தவிவேகம்.

வினாவிளக்கம்.

ஓங்கிய ஞானந் தன்னி னொப்பிலா வலியி னாலே
யாங்கிரு வினையாம் பாச மடங்கலுங் கெடுமேல் ஞானிக்
கீங்கிவ்வூன் சேட்டை தானே னிதற்கிலே சங்கண் முன்போற்
பாங்குற வுண்டா வானேன் பரமனே பகர வேண்டும்.

ஞானாமிர்தம்.

பழவினை பபந்த பழுதின் றயின்று
வருவினை தருஉம் வாயி லறிவென்
கபாடச் செந்தாட் கடவ விடாது
அடைவ தாயி னொழியாப் பாசத்
தொல்லை வல்வினைத் துகடபு காட்சி
செல்லா துறவற் கெல்லை யாதெனிற்
படைப்புப் பூண்ட வொருவர்க் கவையே
துடைப்புப் பூணு வினைப்பல திறத்த
மண்ணை நல்லான் வயிறுதர வந்த
வெண்ணெ யொண்பால் புண்ணியக் குழம்பு
மலையச் சந்தின் கலைநவி லின்றுணி
நறுநெய் வெண்டயிர் நலங்கே ழொண்படி
மைந்தம னறுவிரைச் சந்தி னின்சே
றுகா வூறு போல வாங்குப்

போகா தம்ம புராதன மாகந்
தொடாநனி நிவந்த கொடிநெடுங் காரெயில்
வைவேன் முதல மண்ணிரும் பாதற்
கைய மில்லாச் செய்தி யேய்ப்ப
வுள்ளத் துள்ளிய வுருகறற்
குள்ளத் துள்ள றள்ளுமதி விரைந்தே.

(இ-ள்.) பழவினை—உடைவது (எ-து) பூர்வ கன்மபலத்திற் பக்குவப்பட்டவை குற்றமறப் புசித்தறவேண்டும் சுயங்கன்மம் வரும்வழிக்குப் பரிகாரம் சிவஞானமென்னுங் கதவை அழகிய தாழாலே யடைக்க அவைதைய மற ஒழியும் (என்று ஆசாரிய னருளிச்செய்ய),

ஆயின் (எ-து) அங்ஙனமாயின்,

ஒழியா—யாதெனின் (எ-து) விடாதபாசமாய்ப் பக்குவப்படாதே கிடந்த பழைமையாகிய வல்வினைகளும் குற்றமற்ற ஞானத்தினாலேநீங்காத கன்மமாம் எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதமான தாபரசங்கம யோனிகளிலே சனித்தற்கு நிச்சயமுண்டாதலாலே இவை நான் புசித்தற மெல்லையாது இதற்குப் பரிகாரமில்லையோ வென்று நீ வினவில்,

படைப்பு—திறத்த (எ-து) பூர்வகன்மபலம் புசித்தறவேண்டுமென்ற இதற்கு இளைக்கவேண்டுவதின்று உலகத்திற் செய்தார்செய்த கன்மம் அவர்தம்மால் அழிக்கப்படுவதாயிருக்க ஒருவரா லாக்கப்பட்ட பொருள்கள் அவரால் அழிக்க முடியாதனவா யெத்துணைவர்க்கமுள,

மண்ணை—புராதனம் (எ-து) பிராரத்தகன்மம் புசித்தொழிவது எங்ஙனமென்னில் அதற்குத் திட்டாந்தம்: அழகையுங் குணத்தையுமுடைய பசுவினிடத் துண்டாகிவந்த நறுநெய் வெண்ணெயாகாதவாறு போலவும் வெண்மையையுடைய தயிர் நல்ல பாலாகாதவாறு போலவும் அழகிய ஒளியையுடைய நல்ல திருநீறு சாணிக்குழம்பாகாதவாறு போலவும் அழகு நிறைந்த நறுநாற்றத்தையுடைய இனிய சந்தனக்குழம்பு சாத்திரத்திற் சொல்லப்பட்ட பொதியமலையி லுண்டான நறுங்குறடாகாதவாறு போலவும் இச்சரீரத்திற் பிராரத்த மாகிவந்த பூர்வகன்மம் நிச்சயமாகப் புசித்தல்லா மற் றீராது,

மாகம்—விரைந்தே (எ-து) பக்குவப்படாதேகிடந்து கன்மச்சேத வுபாயத்தாலே நீங்குங் கன்மத்திற்குத் திட்டாந்தம் சுவர்க்கத்தைக் கிட்ட மிக உயர்ந்த கொடியசையுஞ் சிறந்த மதில் முதலாக வுள்ளன மண்ணுதற்கும் கூர்மையுடைய வேல்முதலாகவுள்ளன இரும்பாதற்கும் ஐயமில்லாத செய்தியையொப்ப முற்பவங்களிலும் இப்பவத்திற் சற்குரு கடாட்சிப்பதற்கு முன்பும் யானெனதென அகங்கரித்துக்கொண்டு சித்தத்திலே பந்தித்துக் கிடந்த கன்மம் நீங்குதற்குத் தன்னாற் பிறர்க்கும் பிறராற்றனக்கும் செயலில்லாத இதனை அஞ்ஞானத்தாலே செயலுண்டென்று மனத்தால் அகங்கரித்தார்ச்சித்த இத்தனையேயென் றுபதேசத்தாலே யறிந்து விரைந்து கன்மச்சேதம் பண்ணிக்கொள் (எ-று). 2

மெய்ம்மொழி.

அந்தித்த பாச மற்று லாக்கையும் வறுத்த வித்தே
பந்திக்க வுடற்கி லேசம் பண்டுபோ † லுண்டா மாறு
பொந்தித்த வாத னைக்காண் பெருங்காய மாண்டும் பாண்டங்
கந்தித்த ஞச மில்லா வாறெனக் கருதிக் காணே. 3

† லுண்டா வானேன் என்றும் பாடமுண்டு.

பற்றிமுன் மறைத்த பாசப் படனமாம் பார்வை யெல்லா
மற்றமைக் களவு தன்னைக் காண்கையாம் புமானைக் கண்டுஞ்
செற்றதென் னென்னின் முன்னை வினைச்சித்தக் கிலேசங் கேளாய்
சுற்றுகை குலாலன் விட்டுஞ் சுழலுஞ்சக் கரம்போ லன்றே. 4

அஞ்ஞானநிவிர்த்தி.

உடலெடுத்த விருவினைக ளெல்லாங் கூடி யுணராமை போன பினு மொத்து நின்றே, யிடர்ப்பலமு மின்பலமுங் கொடுக்க விங்ஙனிடையாதே நின்றனகா ணென்போ லென்னிற், கடைதுடிக்க விடுங்கணைதான் ‡ கழித்தி லக்கைக் கடுமைகெடப் போய்க்கதறி விழுமா போலப், படியெடுத்த போகத்தைப் பார்த்தி ருந்தே பதனதத யுடலைவிடப் பரனுங் காணே. 5

‡ கழித்தலங்கைக் என்றும் பாடமுண்டு.

பிராரத்தவிவேகம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1539.

திருந்திரட்டு.

அறிவாலே யறியாமை யழிகை யாலே யணற்றுதிசெய் வினையாலே வினைபோ மாறு, லிறவாம லிவ்வாக்கை முன்பு போலே யிடரின்ப நுசருவதிங் கென்று னென்னி, லுறவாகக் காரணத்தை மீண்டொன் றுதே காரியமா யொழிவனவு மீண்டு மொன்றிப், பிறவாதே நிற்பனவு முளவி யாக்கை பிறந்தபடி யேபிரியும் பின்பு கூடா. 376

காரியமா வதன்முன்னு மானபோது மழிபொழுதுங் காரணரூபமதாம் பித்தி, கூரியவே னிற்பதுவுங் குழம்பு மானுற் கோமலமா காசந்தின் குறடு மாகா,சீரியநெய் தயிர்வெண்ணெய் பாலு மாகா தெளியறிவாற் சிதையுமறி யாமை யாகா, காரியமா முடலெடுத்த கருமங் துய்த்துக் கழிவதலா லறிவதனாற் கழிந்தி டாதே. 377

கேட்டுமறி யாமைகெட லின்றியது போலப்
பட்டவுடல் பாவக னணைந்தபட மேலுங்
கிட்டமண தேகல மியற்றியகு லாலன்
விட்டும்விசை யத்திகிரி வீடுதகை வுண்டோ. 378

# 14. ஏதுசாதனப்படலம்.

## 1. முத்திக்கேது.

வினாவிளக்கம்.

அரியதா மிகவும் பாசத் தடவினைத் துகள தாக்கும்
பெரியமா வலிய தாகிப் பிறப்பிருட் கிரவி தானாய்
விரியுமா ஞான வின்ப வேதக முத்தி சித்திக்
குரியகா ரணமே தெந்தா யுணர்விலேற் கருள வேண்டும். 1

மெய்ம்மொழி.

முத்திசித் திக்கு மேது மொழிவர்கள் சிலர்வெவ் வேறே
சித்தமற் றலா மென்றுந் தீவினை சிதைந்தா லென்று
மொத்தநல் யோகா லென்று முபாயஞா னத்தா லென்று
மித்திற மனைத்தா லாகா விறைதிரு வருளா லாமே. 2

திருத்தமா முத்தி யின்பஞ் செறிதருங் கருத்தற் றலேற்
கருத்தறு தடலிருக்கக் கருத்தறி னிருளே மூடுந்
திருத்தமா மின்ப முத்தி தேசிக னருளா லன்றிக்
கருத்தினாற் கூடா தாகு மென்றுகொள் கருத்தி னீயே. 3

பற்றின வினைகள் விட்டாற் பரமமா முத்தி யென்னி
னுற்றுட லிருத்த லாலே†யுணவொடுதொழில்களுண்டாம்
பற்றிடும் வினைய வற்றாற் பற்றுமல் விலக்கி னானு
முற்றவுண் மலமி ருக்க வொன்றுறா முத்தி யன்றே. 4

† யுணர்வொடு என்றும் பாடமுண்டு.

எஞ்ஞான மந்தி ரங்க ளியோகங்க ளுபாய மெல்லா
மெய்ஞ்ஞான வீட்டைக் காணும் வேதகஞ் செய்ய மாட்டா
செஞ்ஞானக் கடைக்கண் வைத்த தேசிகன் சித்த மத்தி
னஞ்ஞானம் பறித்த போதே யமலவீ டதுவுந் தோன்றும்.

ஆர்த்தது பிறவி யென்று மஞ்ஞான பாச மத்தைக்
கூர்த்தமெய்ஞ் ஞான வாளைக் கொண்டுசே திக்க வேண்டு
மேத்திய ஞான வாளை யெய்தவ னருட்க ளாலே
பார்த்தபினில்லாப் பெத்தம்பருதிமுன் னிருள்போ லன்றே.

விடத்தினன் மூர்ச்சித் தானை விடம்வல்லான் பார்க்கத் தீரு
மடர்த்தலா ரெல்லாம் பார்த்து மதுதீரா வாறு போல
விடத்தினை யுடைய ஞான விறைவனார் பார்க்கி னல்லாற்
சடத்துவ மாயை யார்செய் சழக்குடைப் பிறப்ப றுமே. 7

சொரூபானந்தசித்தி.

சுருதியு மிருதியுஞ் சொன்ன வாறுநின்
றிருமையு மனித்தமென் றேதும் விட்டுநற்
குருவினை வழிபடிற் கோதி லாவவ
னருளிடு மழிவற நின்ற வப்பொருள். 8

எண்ணிலாக் கல்வி யானு மிலங்கிய கேள்வி யானுந்
திண்ணிதா மதியி னானுந் தெளியவா ராது தீர
நண்ணிய ஞானி தானே நயந்தருள் செய்யின் ஞானக்
கண்ணினாற் காண லாகுங் கரத்தின மலகம் போலே. 9

ஞானசாரம்.

பருவிடங் கடியுண் டானே பாவிப்பான் கருடன் றன்னைப்
பெருகிய பித்தன் றானே பிழிந்துமா மருந்து கொள்வா
னிருமையு மறியா மூடர்க் கியலுமோ விறையிற் கூடக்
குருபரன் கூட்டிற் கூடுங் கூடாதேற் கூடா தென்றான். 10

கட்டுண்ட கள்வன் றானே கட்டினை விட்டுக் கொள்வான்
விட்டவ்வே தனையைத் தீர்த்து விதிப்பவர் வேறே வேண்டு
மட்டமா சித்தி யோகா லறிவினா லறிய லாமோ
தட்டறப் பாசந் தீர்க்கத் தற்பரங் குருவே வேண்டும். 11

மெய்ம்மொழி.

விட்டுவிட் டொன்றை யொன்று விரைமலர் தேடி வண்டு
மட்டுமட் டுண்டு தான்பின் மகிழ்தல்போற் குருக்க டம்மை
விட்டுவிட் டாய்ந்து தேடி யியன்குரு வடைவா னந்த
மட்டுமட் டுண்டு தான்றன் வடிவுகாண் பளவு மன்றே. 12

திருமந்திரம்.

உருவின்றி யேநின் றுருவம் புணர்க்குங்
கருவின்றி யேநின்று தான்கரு வாகு
மருவின்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவின்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே. 13

சிவவாக்கியம்.

இருப்பு நெஞ்ச வஞ்சகத் திசைந்து நின்ற விசனைப்
பொருப்பினும் புனலினும் புரண்டு தேடு மூடர்காள்
கருப்பு குந்த காலமே கலந்து நின்ற வண்ணலைக்
குருப்பி ரானோ டன்றி மற்றுக் கூட லாவ தில்லையே. 14

முத்திக்கேது முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1553.

## 2. முத்திசாதனம்.

விநாவிளக்கம்.

முத்திசித் திக்கு மேது முழுமுத லிறைவ னன்றி
யெத்திறத் தாலும் வேறொன் றில்லையென் றருளி னாற்போற்
சத்திய முத்தி தன்னின் சாதன முரைப்பர் நல்லோ
ரத்தனே யவற்றின் றன்மை யடியனேற் கருள வேண்டும். 1

சமயாசாரம்.

நோயதின் முதலுந் தீர்ப்போன் மருந்துநோ யுற்றோ னென்ற
வாயுமை வகையு முண்டா யரும்பிணி யகன்ற வாபோன்
மாயுமுற் பவம தற்கு மலமுத லறிஞன் ஞானந்
தூய்மையுற் றோனென் றைந்து மறியத்தன் றுயரந் தீரும். 2

சொரூபானந்தசித்தி.

மாச தில்லாப் பரனாகி யிருக்கத் தனது மாயையினா
லீச னென்ப தறியாது யிறந்தான் பிறந்தான் போலிருக்கும்
பாசம் விடுமா நினைவுறுவான் பாரம் பரியத் தாற்பன்னு
மாசின் மறையா லாசைபெலா மறலாற் சாந்தி யாதியினால். 3

போதரத்நாகரம்.

* தேசிகன் பதாற் சேவையின் வலியுந் திகழ்பதத் தளவிலா வன்பு, மாசினன் முத்தி யதின்விருப் பதுவு மமலவா பணத்தினின் விருப்பு, நேசுறற் குரிய வுடலினி லுவர்ப்பு நிகழ்விடயங்களின் வெறுப்பு, மீசனைப் பொருளு மென்னுமற் றுணிவு மிவையெழின் முத்திசா தனமே. 4

## போதாமிர்தம்.

* திகழுநற் குரவன் றிருவுளம் பார்த்துச் செய்யுமே வற்சி றப் பதுவு, மகிழுநற் குரவன் மருவுநற் பதியே மன்னிநீங் காதவா தனையும், புகழுடைத் தமரும் பொன்முதற் பொருளும் பொருந் துமோ வெனமதித் திடலுங், தகவுடைச் சமைவுஞ் சாந்தியு † மிவைநற் சாதன மென்பர்தக் கோரே. 5

† முத்தி என்றும் பாடமுண்டு.

* முடிகவித் துலகா டிருவிகழ்ந் திறைவன் மொய்கழல் சூடு நற் றிருவும், படிதனக் கேவல் செய்பத மிகழ்ந்து பரமனுக் கேவ ல்செய் பதமு, மடையுநற் சுவைக ளனைத்தையு மிகழ்ந்தங் காரியன் சேடமா ருதலு, மிடையறத் திகழு முத்திசா தனமென் றிசைத் திடு மெலையிலா ரணமே. 6

## மூலசித்தி.

* தூரிசினற் பாரம் பரியமா முறையிற் றுகளற வழுவிலாத் துணிவும், பரிவுறக் குரவன் பாதமே நோக்கிப் பழுதறப் புகழு பண் பதுவு, மரியநற் குரவ னருளறம் பொருளோ டின்பம்வீ டென்னுமாண் மையதுங், தெரிவுறத் திகழு முத்திசா தனமாச் செப்புவர் தெய்வஞா னிகளே. 7

முத்திசாதனம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1560.

# 15. குருவியற்பவணை.

## 1. ஆசாரியரிலக்கணம்.

வினாவிளக்கம்.

முத்திநற் சாத னத்தை மொழிந்தருள் செய்தாற் போல
வத்தனே முத்திக் கேது வாகிய வமல நாதன்
மெய்த்தகு மிலக்க ணத்தை விளம்பியே யருள வேண்டுஞ்
சித்தனே சிவப்பிர காசத் திருவரு ளுடைய வெந்தாய். 1

ஞானாமிர்தம்.

அருளு மறிவு மிருடீர் பொறையும்
வாய்மையுந் தவமுந் தான மாட்சியு
மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தலு
மொழுக்கமும் விழுப்பமு மழுக்கா றின்மையுங்
கண்காண் முதலிய பொறியும் பண்பார்
பூணுந் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றந் தன்ன வாற்றலெங் குரிசில்
குணப்பொற் குன்றம் வணக்க வாரா
வைம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக்
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ளேந்தின னுறீஇத்
தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி
பரமா னந்தத் திருமா முனிவன்
வளமலி சேவடி வழுத்தி
யுளமலி யுவகை யுற்றனம் பெரிதே.

(இ-ள்.) அருளும்—குரிசில் (எ-து) சர்வப் பிராணிகளுடைய இதாகிதங்களுந் தனக்கு வந்தாலொத்திருக்குங் கிருபையும் கல்வியினலாய பொருள் நீதிகளை யறியுஞானமும் சகித்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தவிடத்துக் குற்றமற்ற பொறையுடைமையும் பிறர்க்குத் தீங்கறச்சொல்லு மெய்வசனமும் இராகத் துவேஷ நிராகரணத்தினாலே பிராணிகட்கு வருத்தஞ்செய்யாமையாகிய தவமும் பக்குவான்மாக்களுக்கு உபகரிக்கு ஞானக்

24427

கொடையும் நித்தியமாகிய வான்மாக்கட்குப் போகமோக்ஷங்கள் தன்னினு மிக வுண்டாகவேண்டுமென்னுந் திருவுளமும் சமயாசாரம் வர்த்தித்தலும் சீர்மையுடைமையும் மனச்சழக்கில்லாமையு மாகிய தசகுணங்களையும் கண் முதலிய ஞானேந்திரியங்களும் கால் முதலிய கன்மேந்திரியங்களும் மக்கட் பண்பென்னுஞ் சிவகாருணியத்தினு லுண்டான பாசவைராக்கியமும் குருபத்தியும் ஞானசமாதியுமே ஆபரணமும் ஆடையும் வண்டுகளாலே தொனியுடைத்தாகிய மாலையும் புண்ணியமானது இவையிற்றை அவய வமு மலங்காரமுமாகக்கொண்டு பூதமான திருமேனிபோன்ற நிலைமை யையுடைய வெங்கர்த்தா,

குணப்பொற்குன்றம் (எ-து) பெருமையாலும் சுத்தியாலும் பிறழா நிலைமையாலும் குணத்துக்கு மகாமேருவினை யொப்போன்,

வணக்க—சிகாமணி (எ-து) அந்தக்கரணங்களென்னும் பாகரால் வண க்குதற்கரிய பஞ்சேந்திரியங்களாகிய மதயானையின் வெவ்விய தொழிலான ஆசையொழியக் கருணையாகிய வீணையை விருப்பொடுவீக்கி மேற்கொண்டு சாந்தமென்னுங் கூரிய தோட்டியைக் கைக்கொண் டுறுத்தித் தன்வச மாக்கிக்கொண்ட சைவத்திற்குச் சிகாமணியாயினோன்,

பர—முனிவன் (எ-து) பரமானந்தமாகிய திருவினையுடைய மகா முனிவன்,

வளமலி—பெரிதே (எ-து) அழகுடைத்தான திருப்பாதங்களைத்தோ த்திரம்பண்ணி யாம் புத்தி பூர்வகமான பிரியம் பெற்றேம். (எ-று).

தத்துவசித்தி.

அருண்மாமகள் புல்லி யமர்ந்துறை மேனி யானைத்
திருவாபர ணந்திகழ் கோவண வாடை யானை
யொருவாவமை வாற்றலி னானை யுணர்ந்த யோகப்
பருகாவமிழ் தேயமிழ் தாகிய பண்பி னானை. 3

மண்ணாடு மகன்றுயர் மாதிர மேழு மொன்றும்
விண்ணாடும் விளங்க விளங்கிய தேசி னானைக்
கண்ணாரெழி னன்குகை காதல்செய் தானை ஞானப்
பண்ணார்முனி யைத்திசை யாடை பரித்து ளானை. 4

செய்யாவழ கேதிக ழுந்திரு மேனி யானைப்
பொய்யாமுறை யாடிய † போக மெனச்செ விக்கே
மெய்யாக விளம்புவ போன்மிளிர் கண்ணி னானைப்
பையூர்பவ பாசு நறுக்கிய பார்வை யானை. 5

† போத என்றும் பாடமுண்டு.

ஊனென்று நகைத்திற மொன்று முணர்ந்தி லானைத்
தீனஞ்செய் யிராக மயக்கொடு சேர்வி லானை
மோனந்தன மென்று மகிழ்ந்த மனத்தி னானைத்
தானென்றிவ் வனைத்துயி ரும்பரி தன்மை யானை. 6

மெய்ஞ் ஞான வருந்திரு மங்கை தங்கு
முளரித்தவி சென்ன மலர்ந்த முகத்தி னானைக்
களவற்றுள நான்மறை நூல்கலை யங்க மாறும்
‡ வளர்வுற்ற வளம்பதி யொத்துள வாய்மை யானை. 7

‡ வளமுற்ற என்றும் பாடமுண்டு.

## சொரூபானந்தசித்தி.

* உறுவது தனின்வேறு வுளதல வதுநேரே
பெறவருள் பெரியோனே பெருகிய குருவாவா
னெறியுட னுளநாவா னிலைபெற வழிபாடே
செறிபவ னருளாலே சிவகதி யடைவானால். 8

* உண்டுபோற் றோன்று முலகெலா முண்மை யன்றெனவுணர்த்தியெப் பொருளுங், கண்டசான் றதனைக் † காட்சியின் வேறுபடுத்தியே காட்டியக் கரியைப், பண்டைவே தாந்த வாக்கியஞ் சொன்ன படியிலே பரமனோ டொன்றாய், விண்டிடா வண்ண முணர்த்துவான் றன்னை வியன்குரு வென்னவே வேண்டும். 9

† காட்சிய தறவே கண்டிடக் கரியெனக் காட்டும் என்றும் பாடமுண்டு.

* காட்சியை யெல்லாங் கண்ணதாக் கரைத்துக் கண்ணொழிந் தொருபொரு ளில்லா, மாட்சியை யளிக்க வல்லவன் குருவா மாரிபோன் மாறவேண் டாதே, மீட்சியில் பதத்தைக் கருணையா லளிக்கும் வித்தகக் குரவனை யெவருந், தாட்சிசெய் தேத்தற் குரியதத் துவமாஞ் சங்கர னென்றிடத் தகுவான். 10

## மெய்மொழிச்சரிதை.

பிறிந்திடக் கடைந்த வெண்ணெய் பின்புமோ ரதனிற் கூடிச்
செறிந்திடா வாறு போலத் தேகமுந் தேகி தானும்
பிறிந்திடப் பார்த்த பின்பு பெயர்த்ததி னிற்பி னுங்கேள்
செறிந்திடா வாறு செய்யுந் தேசிகன் றேசி கன்றான். 11

அடங்குதிக் கடைந்த பின்பக் காட்டமா கரித்தல் போல
நுடங்கிமுன் கிடந்த சீவ னுண்மைதீர்ந் தெழுந்தி ருந்து
கடங்கொளுங் காயந் தன்னிற் கலந்துபற் றறுக்கும் வண்ணந்
திடங்கொளக் கடைக்கண் வைக்குந் தேசிகன் றேசி கன்றான். 12

பற்றிமுன் பெழுந்த செந்தீப் பரந்தகா னகம்போற் பாசச்
செற்றையை ஞானத் தீயாற் றெத்தஞ்செய் தின்ப முத்தி
முற்றவர் துடற்க ணின்று முளைத்திடக் கடைக்க ணோக்கிச்
செற்றவன் றுயரந் தன்னைத் தேசிகன் றேசி கன்றான். 13

விடத்தினுன் மூர்ச்சித் தானை விடம்வல்லான் பார்த்த போதே
யடர்த்திடும் விடத்தை நீக்கி யாங்கவ னெழுப்பி னாற்போற்
சடத்துவ வுடம்பு தானென் சழக்கறப் பார்த்த போதே
திடத்துணர் வாகச் செய்யுந் தேசிகன் றேசி கன்றான். 14

பொருவிலா வுலகை மூடிப் பொலிந்துள விருளை யெல்லா
மிரவிதா னீக்கி யெங்கும் விளக்கிய வியல்பே யென்ன
வுருவிலா மாயை யென்னு மோங்கிருள் கழித்தப் போதே
திரமதா மறிவைக் காட்டுந் தேசிகன் றேசி கன்றான். 15

மெய்ஞ்ஞானவிளக்கம்.

* உடறன துருவமென் றுணர்ந்து வந்தவன்
றிடவறி வெனதுரு வென்று செப்பிட
வடியிணை மலர்கடந் தக்க ணத்தருள்
கடனது வுடையவன் கருணை நன்குரு. 16

* கரையறு பிறவிவன் கடலு ளோவிழுந்
† தயர்வுறு துயருழந் தவரை யோவெனு
விரைவொடு வினைகெட நோக்கி வேதகக்
கரையினை யருள்பவன் கருணை நன்குரு. 17

† துரையறு என்றும் பாடமுண்டு.

* ஆய்வொடு கலைகண்மற் றறிவி லாதருங்
காயம துருவெனக் கருதி டாவகை
யோய்வுறு முணர்வுளத் தொளிர வேயரு
ளுபக னவனைநற் குரவ னுவறி. 18

மெய்ம்மொழி.

முற்றின துரித்துங் காச முப்பிணி யுடம்ப றிந்து
மற்றவை தமக்குத் தக்க மருந்தினாற் றீர்ப்பான் போலப்
பற்றின பிறவிப் பாசப் பக்குவ மறிந்த வற்றை
யற்றிட வருட்க ணோக்கு மவன்பர குருவா மன்றே. 19

ஆசாரியரிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1579.

## 2. ஆசாரியர்மான்மியம்

விறைவிளக்கம்.

ஓதரு முத்தி யங்கைக் கனியென வுணரக் காட்டும்
வேதக விறைவ னார்தம் விழுமிய பெருமை-யின்னங்
காதல்செய் யடிய னேற்குக் கருணையான் மொழிய வேண்டு
மாதர முடைநல் லன்ப ரகமுறை யமல வெந்தாய். 1

சொரூபானந்தசித்தி.

திவகர னெழில்வேறே சிலவொளி திகழ்வாமோ
வவமுறு மிருள்போகா தவனெதிர் நிலையாமோ
சிவதின கரனாலே செறிபவ விருணோரா
வவனொளி தனின்மான னமரர்களறி வோமோ. 2

புரணநல் லறிவாகப் புகல்வுறு பரமீசன்
சரணினை தனுமாரா தனையுறு தனுமல்லான்
மரணம தறவேறோர் வழிசொல விலையானு
லரணம துறநங்கட் கடையவு மவனன்றோ. 3

* மருவிவரு மாய விடயமய லாலிம் மனிதர்மா னாதி யிட ரூ, வெருவுபவ வேலை விழுவரழி யாத விமலசிவ ஞான விழி பெறு,மொருபிரம ஞான மொழியவொரு காலிவ் வுததிகரையேற வொணுமதோ, தெருள்செய்சிவ ஞானம் வருவதிறை தாள்கள் செறியவரு சேவை வலியினால். 4

* மேவு பாவம்வெல் லாதுமெய்ஞ் ஞானியை வென்றிடு மிவனெல்லாப், யாவ மானது மாதலால் வேதனம் பண்ணவல் லவ னுன, தேவ தேவனுந் தேசிகன் றனக்குமுன் செய்பொரு ளுட லாவி, யிதுதேகட னிறைவவெம் பிரானென வேத்திமெய் யித யத்தால். 5

* மாய † வைம்புலத் தெழாவகை தீர்த்ததன் வாய்மையான் மயிர்க்காலாற், பாய வின்னமு திருசெவித் துளைவழி பாய்ச்சி னன் பதுமத்தா, டாயுந் தந்தையுஞ் ‡ சுற்றமு மற்றுநற் றனமு மென் றடைவானன், காய முள்ளளவும்புகழ்ந் தேத்துவான் கற்றதோர்-கலையாலே. 6

† வன்புலத் என்றும் பாடமுண்டு.

‡ சுற்றமும் பற்றுநற் என்றும் பாடமுண்டு.

* ஞான மாகிய விழியினாற் குருபர னயர்ந்நோக் கிடவுண்டா, மானு பூதியா தொன்றது வேசிவ னவதப் படியுள்ள, மேனி தான்வினை யொத்தவப் பொழுதிலே வெளிப்படும் வெளிகாண, லான தேசிகன் றன்னையப் பரம்பொரு ளென்னவா தரஞ்செய் வான். 7

* தேசிகன்றன் றிருமேனி சிந்தை செய்யச் சிவனைச்சிந் தித் தானுஞ் செம்பொற் றளிற், பூசனைசெய் திடவெங்கு மாகி நின்ற பூரணனை யினிதாகப் பூசித் தானு, நாசமிலாச் சிவநாம நவின்று ளுண்ட நாயகன்றன் றிருநாம நவின்ற னாகி, லீசனையே யிகழ்ந்தானுங் கண்ணிற் காண வெழுந்தருளுந் திருக்கோல மிகழ்ந் தா னாகில். 8

எறிக திர்க்குநிக ராகின் மின்மினி யிறைக்கு நேரரியு மெட்டிதா, னறுவி ரைக்கொளகில் சந்தொ டொக்குமெனி னுனு மப்பரம னொடுநே,ரறிவி னுக்கறிவி லாமை † நேரருளு தேசி கற்கொருவர் நேரெனிற், செறிய வுற்றவறி யாமை யின்செய லிருந்த வா றெனது செப்புவேன். 9

† நேரகில நாய கற்கொருவர் என்றும் பாடமுண்டு.

சிவஞானசரிதை.

* அழியாத பெருமையதா யறிவாகி யளவிறந்த
வொழியாத பரம்பொருளு முயர்குரவ னருள்செய்ய
விழியாகி வந்துதித்து விளங்குதலா லினிக்குரவன்
கழியாத பெருமையைநாங் கட்டுரைப்ப தெவனோதான். 10

* ஓதரிய குருபரனு ருரைத்தலுமக் கணமொளிரு
மேதமற வுரைசெய்யா விடத்தொளிக்கு மருள்குறித்தே
யாதிசிவன் றேசிகனு ருளேவ † லிவனென்ற
நீதியினு லிறைபெருமை நிகழ்த்திடலா மளவன்றே. 11

† லிவனென்ற என்றும் பாடமுண்டு.

* கழல்வைத்த விடத்தினினுங் கடைக்கண்பார்த் திடத்தினினு
மொழிவுற்ற விடத்தினினு முழுதொழியாப் பரம்பிரமம்
விழியுற்று நிகழுதலால் வேதகநற் றேசிகனு
ரழிவற்ற பெருமைசிவ மல்லதுவே றறிவாரார். 12

ஞானசித்தி.

* பான்பெரிய னென்பாரப் பரன்றன்னையறி விக்கும்
வூான்பெரிய னென்னுமிது மண்ணோரறி யாரால்
பான்சிந்தை மேவுவது பாவிகா ளிந்த
வரன்றுணைஞ் சென்னியின்மேல் வைத்தக்கா லன்றோ. 13

### ஞானசாரம்.

எண்காலிற் றலையின்றி யெழுகாலிற் றலைவைத்திட் டியோனி வாய்தற், பெண்காலிற் றலைவணங்கப் பிறந்திறக்கும் பெருவாழி பெருக நின்றீர், விண்காலுங் குருபரன்றன் வியன்காலிற் றலை வைக்க மேற்கா லோடும்,பெண்காலிற் பிறப்பொழிந்து தன்காலிற் பிறர்வணங்கும் பெருமை யாமே. 14

### அஞ்ஞானநிவிர்த்தி.

பொய்வகை யாகிய வைவகைக் கோசமும் போத மூதிப்பளவு
மெய்வகை யாகி விளங்கிடு மத்தனை வீரன் † மிதித்திடுமே
லுய்வகை யாமொரு கால மெனுத னடித்தலை யுய்த்திடுமேற்
கைவகை யாகி யிருந்திடு முத்தி கரத்தினெ லிக்கனிபோல். 15

† மதித்திடுமே என்றும் பாடமுண்டு.

### திருவாசகம்.

அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி. 16

வைத்தநிதி பெண்டீர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி. 17

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பி. 18

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பி. 19

கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
யருவாய் மறையயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி. 20

திருவாய்மொழி.

துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்ற வண்ண நிற்கவே, துயரின் மலியு மனிதப் பிறவியிற் றோன்றிக்கண் காணவந்து, துயரங்கள் செய்துதன் றெய்வ நிலையுலகிற் புகவுய்க்கு மம்மான், றுயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்ற யானோர் துன்பமிலனே. 21

திருக்களிற்றுப்படியார்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு. 22

ஆசாரியர்மான்மியம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1601.

## 3. அனுசாரியரிலக்கணம்.

வினாவிளக்கம்.

ஓங்கிய குருப ரன்ற னொளிதிகழ் பெருமை யெல்லா
மீங்கருள் செய்த வண்ண மிப்பரி சன்றி மற்றை
யாங்கனு சாரி யன்ற னிலக்கண மதனை யுந்தான்
றீங்கற வடிய னேற்குத் திகழ்த்தியே யருள வேண்டும். 1

மெய்ம்மொழி.

வேதிய ராதி நான்காம் வெவ்வேறு மனுலோ மந்தாற்
சாதிதான் சொல்லி னிற்கச் † சடகன்மா வாகி னுங்கேள்
கோதிலா ஞான மில்லோன் குருவலன் பாச பெத்தஞ்
சேதியா வீட்டைக் காட்டுந் தெளிவில னாகி லன்றே. 2

† சட்கன்மா என்றும் பாடமுண்டு.

சித்தாந்ததீபிகை.

சாதி மேலுறு தகைமைய னாகிலேன் சாத்திர வித்தாயென்
னோது மாரண முதல்வனி முழுதையு முறவுடை யவனாயென்
போத மாமனு பூதியி னிலையுறு புரிவறி யானென்னி
னாதி மாமறை யோதிடு மவனனு சாரிய னெனநின்றே. 3

## தத்துவசரிதை.

வேத மாகம மிருபுகழ் மிருதியும் வேறுள கலைமுற்று
மோதி மாசற வுலகினி லுரைசெயு மொளியுடை யவரேனு
மேதும் வேறொரு பொருளற விலங்கிய விரைகழ லனுபூதி
சாத மே†யுள ரலரெனி னவரசற் குருவெனத் தகுமையா. 4

† யுணர் கிலரெனி என்றும் பாடமுண்டு.

## தத்துவவிளக்கம்.

மிக்க கோடியா ரணங்களு மிதுவென விளம்பரும் பொருடன்னை
யக்க ணத்தொரு மொழியினி னருள்பவ னருட்குரு வவனன்றித்
துக்க மிக்கிட வலையலை மொழிபல சொல்லியே விடுமந்தப்
பக்க ரைப்பகட் டவனறு சாரியப் பாவியென் றறியையா. 5

## மெய்ஞ்ஞானநிலயம்.

கூட வேடமுங் கூடவா சாரமுங் கூடஞா னமுங்கொண்டு
மூட ராகிய வவரவ ரறிவுற மொழிவர்கண் மொழிந்தாலென்
றேடு சிந்தையுஞ் சிதைவுறு திச்சகத் திகழ்வுமங் கழியாத
பாட வாயரா மவரறு சாரியப் பளகரென் றறியையா. 6

## போதாமிர்தம்.

* வெகுளி தங்கிய வுளத்தினர் விகாரமே வினோதா மொழிநாவர்
முகுளி தம்பொழி முகத்தினர் மோகபோ தத்தின்மூழ் கிடுமூட
ரகள மொன்றிய வறிவினி னனுபவ மறுபவ ரறமோத
னிகள பெந்தன மெனவவ ரவர்தமை நீங்குக நெறிசேர்வார். 7

## மெய்ம்மொழி.

ஞானமில் குருவைச் சேர்ந்தான் ஞானமுண் டாவ தெங்ஙன்
போனகந் தனக்கொன் றில்லான் புகுந்தவர்க் கீவ தெத்தை
யீனமின் ஞான வான்ற னிணையடி பணியி னல்லா
லூனமின் முத்தி யுண்டோ வொழியுமோ பிறப்ப வர்க்கே. 8

---

## குறுந்திரட்டு.

தாலமு மணலிற் குசையினிற் குளமுஞ் சசத்தினிற் கொம்பினுற் றனுவும், பாலுமா னேற்றி னுமையின் மயிராற் படமுங்கண் படையினிற் புணர்வார், சூலுநீ ரெழுத்து மூமைசொல் வழியுஞ் சுடருமின் மினியினி னெருப்பும், போலுமே போத மின்றிய குருவாற் புதல்வர்தாம் போதகப் படுதல். 379

கனவின்மை துனத்திற் கற்பங் † கடகசோ தியினெ ருப்பு
மினமுயற் கொம்பின் வில்லு மெழின்மணற் றயில மாமை
தனின்மயிர்ப் படாமு மாமேற் றமையுணர் ஞான மில்லா
வினவரிற் ‡ செறிந்து ஞான மெய்திடற் கேது முண்டோ. 9

† கற்சோதி யினினெ ருப்பு என்றும், ‡ றெரிந்து முத்தி யெய் திடற் கேத முண்டோ என்றும் பாடமுண்டு.

உரத்தின்கட் பிறவித் துன்ப மொழித்துமே லின்ப மாய
பரத்தின்க ணின்றார் தாம்போற் பாவித்து ணிமித்த மாக
மாத்தின்கண் போல்வார் சென்று மற்றவர் மாசொ ழித்த
லிரத்தந்தோ யாடை தன்னை யிரத்தத்தாற் கழுவ லன்றே. 10

பற்றின பிறவித் துன்பப் பற்றறுத் தின்ப வீட்டி
னுற்றவர் பிறவித் துன்ப மொழிப்பவர் மற்ற லாதார்
கற்றுள கிளிபோற் சொல்லிக் காட்டுதல் பிறர்க்கு முத்தி
குற்றமுள் கொத்தைக் கண்ணன் கொத்தைக்கு வழிகாட்டன்றே.

ஆர்த்தன பிறவித் துன்ப மறுத்தறி வுலகின் மிக்க
மூத்தவர் போன டித்து மூடமா மதிஞ ரெல்லாந்
தீர்த்திடார் தங்குற் றத்தைச் சிலர்குற்றந் தீர்க்குந் தன்மை
பேர்த்தடி யிடமாட் டாதான் பிறர்க்கூன்று கோலா மாங்கே. 12

வெற்பதா மேரு வாமோ வேறுள மலைக ளெல்லா
மப்பெலாங் கங்கை யாமோ வல்லாத நதிக ளெல்லாஞ்
செப்பின்மா தேவ னாமோ தேவெலாஞ் சிவன் முத்தி
தப்பற வளிக்க மாட்டா தவர்கள்சற் குருவா காரே. 13

அனுசாரியரிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1614.

# 16. பக்குவரியற்பவணை.

## 1. பக்குவரிலக்கணம்.

ஆதலா லறிவின் மிக்கங் கனுபவா னந்தத் தோங்குங்
கோதிலா வமுத ஞானங் குரவனால் வருமேன் முத்தி
நாதனே நாதன் பாத நணுகுவோர் தங்கட் குண்டாங்
நீதிலாப் பக்குவத்தின் றிறமுநீ திகழ்த்த வேண்டும். 1

சொரூபானந்தசித்தி.

* மிக்க சித்தராய் வன்னவாச் சிரமங்கள் விட்டுமே லாய்நின்ற
புக்கு வர்க்கிது பகரலா மல்லது பகர்ந்திடப் படாதென்றுந்
தக்க நற்குர வன்றனைச் சிவனெனத் தானினைந் திடுவாருட்[யாக.
புக்கு நிற்குமிங் குரைத்தமெய்ப் பரம்பொருள் புரணமாய் வெளி

மெய்ம்மொழி.

இன்பமிப் பிறப்பு மற்றி லென்று வந்த போதமே
துன்ப மென்று நின்று சொல்லு மாறு†போத மார்செய்தா
ரின்ப மாய விசனே விடர்க்கண் மன்னு தானையோ
துன்ப மாக்கு கன்மமோ சொல்ல வேண்டும் வல்லவா. 3

† பேத என்றும் பாடமுண்டு.

தன்மனங்கொ டாயுமேற் றவிர்ந்துபோ மனாதியே
கன்மமோ கொடுத்திடாது கட்டுதற்கே யேதுவாங்
தன்மமன்ற நீசனேற் † றயாக்கொடாஞ் சிலர்க்கியல்
கன்மமன்று தானுமன்று கத்தாவன்று பக்குவம். 4

† றயாக்கேடாஞ்சி லர்க்கியற் என்றும் பாடமுண்டு.

துன்ப மிக்கே யெங்கணுஞ் சுழல்வர் பாவ மிக்கிடி
னின்ப மிக்குன் மத்தரா யிருப்பர் புண்ணி யஞ்செய்தார்
துன்ப மின்ப நாடொறுந் தொடர்ந்த முக்கு மதலா
லின்ப மான முத்திநோக்க வில்லை யான்ம போதமே. 5

தட்டி விட்ட பொன்க லுக்க டாயிரண்டு மொத்தபின்
திட்டமாந் தராசு நாச் செவ்வி தான வாறுபோல்
விட்டு நாள்க ளூற்று வந்த வினையிரண்டு மொத்தபின்
கெட்டிடும் வினைகள் சேட்டை கேடில் போத மேற்கொளும். 6

இடுக்க ணுற்ற விப்பிறப்பை யாவெணு ழிப்ப தென்றெணு
† மடுக்க லுற்ற சர்ப்பவாயின் மண்டுகம்ம தென்னவே
நடுக்க முற்று நாதனேநீ நல்கி டென்ற போதுவந்
தடுக்கு மீசர் தம்மரு ளளிக்க நல்ல பக்குவம். 7

† மடுக்க ணுற்ற என்றும் பாடமுண்டு.

அருணெறிவிளக்கம்.

மெய்த்தவப் போது வந்து விளங்கிட வுதித்து மெய்போ
லத்திக ழுகில மெல்லாஞ் சடமனித் தமெனக் கண்டு
சுத்தசை தனமா மீசன் றுலங்கவி நாசி யென்னும்
வத்துநல் விவேகம் வந்து வாய்த்திடா நிற்கு மன்றே. 8

சித்தாந்ததீபிகை.

துன்பொடு பயமி லச்சை சோகமே மோகங் கோபந்
தன்படு தன்ம பாவஞ் சமத்தமென் செயல தென்கை
யின்புறு புத்தி தன்ம மென்றெழல் விவேக ரூப
மன்பொடு மென்ன தென்னு மறிவவி வேக மன்றே. 9

இகபர லோகந் தம்மி னிசைந்துள வின்ப மெல்லா
மகமுறப் பார்க்கி னற்ப சுகமவை யனந்த துக்க
மிகபர மனித்த மென்றே யீருல கினையும் வேண்டாத்
தகவுள விராகஞ் சேருஞ் சாதன மின்னங் கேளாய். 10

சாற்றிடிற் சாந்தி தாந்தி யுபரதி திதீட்சை சாரும்
போற்றுநற் சமாதி யைந்தாப் புகல்வது † சமத மாதி
யாற்றுநற் றாந்தி யாவ தைம்புல னடக்கஞ் சாந்தி
சாற்றுமுட் காண நான்குந் தன்வசத் தடக்க லாமே. 11

† தனிற்ச மாதி என்றும் பாடமுண்டு.

போதாந்தநிலயம்.

உறுபிணி வாதைக் குண்ணு மருந்தென வுண்டி தானும்
பெறுவதி னமைந்து பேசும் பொருள்பிறி தொன்றும் வேண்டா
துறுமுட றனையும் பேணு வுபரதி யுளத்துண் டாகிச்
செறிதருந் திதீட்சை சேருந் திகழ்த்திட வதனை யுங்கேள். 12

---

குறுந்திரட்டு.

காயமன வற்றதுயர் கண்டவ னுளஞ்செந்
தீயினடு வுற்றவ னுளஞ்சின வராவின்
வாயினுறு தேரையுளம் வாளுழுவை மூட்டித்
தாயவ னுளத்தினனி தப்பும்வகை தேடும். 380

ஞளிரழு னன்மை தீமை கொடுமொழி யின்சொன் மண்பொ
னளிதரு மன்பர் கூடா ராக்கமோ டழிதன் மற்றும்
வளமறு தொந்த முற்றுன் மகிழ்ச்சிவா டுதலொன் றின்றி
யுளமது வொத்த லோங்குந் திதீட்சையி னுண்மை யையா. 13

போதரத்னகரம்.

சாற்றிய சமாதி சாருந் தன்மைதா னெங்ங னென்னிற்
போற்றிய வியம மாதி யெட்டையும் பொருந்த நோக்கிச்
சாற்றிய சமைவா லாறிச் சமாதிதா னுத லாகத்
தேற்றிய சமத மாதித் திறங்களும் வந்து பின்னும். 14

உரைத்திடு மெவையும் பார்க்கி னுறுமன விகார மாகும்
வரைத்திடு முழுதுந் துன்ப மாதலான் முழுது நீத்து
நிரைத்துறு சுருதி கூறு நிரதிசய வின்ப வீடு
கருத்துறக் காட்ட வல்ல கடவுளைத் தேடு மெங்கும். 15

மெய்ம்மொழி.

நற்றவங்கண் முற்றி நல்ல ஞான மேய விச்சையா
லுற்றவிச் சகத்தி னின்ப முற்க ரித்த சோறெனப்
பற்ற தற்ற சித்தராய்ப் பராபரங்கு ருக்க ளன்றி
மற்றொர் தெய்வ முண்டெனு மனத்தர் பக்கு வத்தரே. 16

சமயாசாரம்.

நன்மதி யொருகாற் கேட்ட தறிந்து†மே னுடிக் கொள்ளும்
புன்மதி பலகாற் கேட்டும் பொருள்விளங் காது போமாற்
சொன்மதி நடுவு நின்றார் சொன்னவை யறிந்து சோரார்
பன்மதி முன்பு செய்த பாவபுண் ணியத்தின் பாலாம். 17

† மெய் நாடிக் கொள்ளும் என்றும் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

ஆசி லாவ ருக்கர்தங் கதிர்கள் சென்று பற்றியு
மூசுவண் டறைந்தி டாவன் மொட்ட லர்ந்தி டாமையான்
மாசில்பக் குவத்த ரன்றி வந்து நின்ற மைந்தர்பாற்
றேசிகன் சிறந்து செய்யு மாட்சி சென்று மங்ஙனே. 18

சலத்தின்மிக் கெழுந்து நின்ற தாம ரையின் வன்முகை
யலர்த்தி னுங்க ரத்தினு †லழகு கந்த மின்மையான்
மலத்தின் மிக்க பக்குவ மனத்தி னார்க டங்களைப்
பெலத்தின் மிக்க தேசிகன் பெலங்கள் செய்து மங்ஙனே 19

† அதிக என்றும் பாடமுண்டு.

### தத்துவரத்னாவலி.

அடிவைத்தன னாரிய னன்பினொடு
மிடிகெட்டிலர் சிற்சிலர் மெய்ந்நெறியிற்
படரப்பெழு பங்கய வாவிதொறுங்
கடிமொட்டல ராமை கதிர்க்குறையோ. 20

பக்குவரிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1634.

## 2. அபக்குவரிலக்கணம்

### தத்துவப்பிரகாசம்.

ஆதலா லபக்கு வர்க்கிங் கறிவினை யருளி னத்தா
னீதியா மிருமைக் குங்கே டாய்விடு மெனநி னைந்தே
சோதியா வவரைக் கண்டு துளக்கற விடுவ ரென்று
மாதியா மறிவி னோரத் திறமது மொழிகு வன்கேள். 1

அபக்குவர்க் கறிவை யீந்தா லறத்தினச் சமதுங் கெட்டுச்
சுபக்கதிக் குடலு மின்றித் துயரமா நிரயம் வீழ்ந்து
நிபத்துவ மாகு மத்தா னிமலநற் குரவன் றானு
மபக்குவர் தம்மை யாளா தகலவிட் டருளு மன்றே. 2

### போதாமிர்தம்.

* சித்த பாகம்வந் துறுதகீ மனத்தரைத் தேசிகன் கைக்கொள்ளி
னத்தி னாலவன் செய்தபா தகமெலா மருளிறை தனக்கேயாஞ்
சுத்த ஞானமாம் வலியினான் மறுமைசே ராவணந் துடைத்தானு
மித்த ராதலத் திகழுமா சதுதனை யெத்தினாற் றீர்ப்பானோ. 3

### போதரத்னாகரம்.

உவலை யாகிய வுலகரு மொருபொரு ளொருவர்பால் வைக்குங்காற், றவலி லாவகை காத்திடுஞ் சத்திமற் றறிந்தலாற் றாம் வையார், பவமெலாமறுக் கும்பரம் பொருளினைப் பக்குவ மிலார் கைக்கே, யவமெ லாமிகக் கொடுப்பரோ கொடுத்திடு மவர்கள் பித்தர்களன்றே. 4

### ஞானசித்தி.

* குலத்தி னானுறு பொருளினா லுறவினாற் கோதறும் வலிதன்னாற்
றலத்தி னீவதோ தத்துவ ஞானநற் சத்துவர் தமக்கல்லா
னலத்தி னான்மிகு † குருபர னன்பனை யாய்ந்துநான் மூவாண்டு
சலித்தி டாநிலை யுடையபக் குவர்க்கலாற் றத்துவ மருளாரே. 5

† குருபரன் குறைகுண காடினான் மூவாண்டு என்றும் பாடமுண்டு.

### சிவப்பிரகாசதரிசனம்.

ஆம பாகமங் கழகுறப் பிறவா வறிவி லாதருண் பவர்தமைக் கண்டு, தாமு மாரவுண் டதுதனாற் பிணியாய்ச் சால வேயுழைத் திடுவரங் கதுபோற், ஞேமி லாதபக் குவர்க்கருள் வதனைத் தூரிச தாமபக் குவருமார் வுற்றா, லேம மாயிடா தவர்விருப் புநிலா விருமை யுங்கெடு மிவர்க்கரு ளிடினே. 6

### சித்தாந்ததீபிகை.

* ஓர்வி னெஞ்சினர்க் கறிவருள் குரவ னொளிம ழுங்குமென் றிடுமள வதுவோ, சோர மங்குறு மவனுள மதனாற் றன்னு மூரொடு நாடுமங் கழியும், பார்பு ரந்திடு மாசனுங் கெடுமப் பாவி தன்குலம் பகரவேண் டிடுமோ, வாரு நன்குடை யருளின ரவர்க் கிங் கருளி டாரனைத் துங்கெடு மென்றே. 7

### அருணெறிவிளக்கம்.

காக மன்னநன் னடையுறப் புகுந்து கருது மன்னநன் னடையும்வா ராம, லேகு காகவன் னடையதா மியல்பு மிழந்த வாறென வெழில்கொள்பக் குவர்க்கே, யாகு ஞானமங் கபக்குவ ரறியப் புக்க தன்றிமுற் கன்மமு மிழந்து, போகி யேயரு நாகமும் புகலாற் போத மங்கவர்க் கருளுதல் பிழையே. 8

### பரமார்த்ததரிசனம்.

புண்ணிய வுலகத்தே பொருண்முடி வெனவைப்பார்
மண்ணியல் பிறவிக்கே வரும்வழி நெறிநிற்பார்
பண்ணிய வினைகட்கே பயனினை பவர்தம்பா
னுண்ணிய பொருள்செப்பார் நுணுகிய வறிவுற்றார். 9

மற்றுனக்குச் சொல்லியவிம் மறைப்பொருண்மா தவமிலர்க்குங்
குற்றமறுத் தறிவருளுங் குருவழிபா டிலாதவர்க்குஞ்
செற்றமனச் சழக்கினர்க்கு மெனநினையாத் திறத்தினர்க்கு
மற்றமறத் தெரிந்துரைக்கை யடாதென்றே யறிகண்டாய். 10

மெய்ம்மொழி.

பன்னாளும் பண்ணிப் போந்த பாதகச் சித்தந் தார்க்குச்
சொன்னாலும் பொல்லா தாகுந் தூரமா யிரிது காண
நன்ஞான மனத்தி னார்க்கு நன்றாகி யொன்றாய்த் தோன்றுந்
தன்னாலே தன்னைக் காணுந் தற்பரா வமுத மன்றே. 11

தோன்றி.

சேணுற்ற பெருமைச் செம்மைச் சித்தரைத் தெரிந்து மெய்ம்மை
மாணிக்க மதனை யந்த மாதவர்க் களிப்ப தல்லாற்
கோணுற்ற மனத்த ராய குறளருக் குரைத்தன் மெய்ம்மை
மாணிக்க மதனை யந்த மத்தர்கைக் கொடுத்த வண்மை. 12

மெய்ம்மொழி.

சினத்திருங் கடலை மூழ்ந்து செகங்கொண்டுட் டிரைகள் போலு
மனத்தினுட் சஞ்ச லத்தை மாற்றிடா தறிவை யீந்தாற்
சினத்தெழு வெதிரி பீருச் செய்வதென் னையு தத்தான்
மனத்தினுட் சுத்தி யின்றேல் † வருஞ்சல ஞான மெங்கே. 13

† வருஞ்சஞ் சலன மாஙகே என்றும் பாடமுண்டு.

அத்தத்துட் பிடித்து வைத்தே யசுத்தத்தைப் புறங்கை நீராற்
சுத்தத்தைப் பண்ணு மாங்கே துற்றுள்ளு மலமி ருக்குஞ்
சித்தத்தா லியோகஞ் செய்தாற் சிறந்தவை பலிக்க மாட்டா
பெத்தத்தை யறுத்தே †யோக மீகைதான் பிழைய தையா. 14

† போத என்றும் பாடமுண்டு

ஞானாமிர்தம்.

நஞ்சே பாம்புண் டநீர் மாதோ
வஞ்செஞ் சேதா வுண்ணற லமிழ்தே
விஞ்சை வேந்தர் ஞானம் வீடே
வஞ்சர் ஞானம் வடுவொடு படுமே.

(இ-ள்.) நஞ்சே—மாதோ (எ-து) சுவையுடைத்தாகிய நீரைப் பாம்பு புசித்தால் நஞ்சாமாறு போலவும்,

அஞ்செம்—அமிழ்தே (எ-து) அந்த நீரை அழகிய குணத்தையுடைய பசுப்புசித்தால் அமிழ்தத்தையொத்த பாலாமாறு போலவும்,

விஞ்சை—வீடே (எ-து) பக்குவராகிய ஞானவேந்தர் பெற்ற வுபதேசம் மோட்சவேதுவாய் முடியும்,

வஞ்சர்—படுமே (எ-து) அபக்குவராகிய கபடர் பெற்றவுபதேசம் பிறரையுந் தங்களையுங் கெடுத்தற்குக் குற்றமான வேதுவாய் முடியும்(எ-று).

திருமந்திரம்.

† கற்பாய கற்பங்க ணீக்காமே கற்பித்தா
றற்பாகங் குன்றுமவ் வூர்க்குந் தளர்ச்சியா
நற்பா லரசுக்கு நாட்டுக்குங் கேடாகு
முற்பாலே நந்தி மொழிந்துவைத் தானே. 16

† கற்பாய குற்றங்க ணீங்காமற் கற்பித்தா
றற்போதங் குன்றுந் தனக்கே பகையாகு
நற்பா லரசுக்கு நாட்டிற்குங் கேடென்றே
முற்பாலே நந்தி முயன்றுரைத் தானே.

என்றும் பாடமுண்டு.

அபக்குவரிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1650.

## 3. அதிகாரியிலக்கணம்.

விருவிளக்கம்.

அருள் தேவடி வாகிவந் தருபா னகண்டசிற் பரந்தன்னைத், தெருள தார்திகழ் பக்குவர்க் களித்தபக் குவர்தமை விடுமாறும், பொருள லாவெனக் குரைசெய்த வகையெனப் புனிதநின் கழல் சேரு,மிருளி லாவதி காரிதன் னியல்பையு மேழையேற் கருளெந் தாய். 1

தத்துவசித்தி.

முன்செய்த பவங்க ளனேக முயன்று பெற்ற
நன்செய்வினை யால்வரு † நாலதி கார சித்தி
யுன்செய்தொரு வர்க்குத வித்தவத் துண்மை காண்பா
னென்செய்வ தெனப்பரி வுற்றன னின்ன செய்தான். 2

† நல்லதி கார சத்தி என்றும் பாடமுண்டு.

தானுக மீனர்ந்து சமைந்துழ லுஞ்ச முக்க
ருணுடு புல்லன்க ளுறுதிக ளோடு மென்று
மானுத விகாரமு ளுய குணங்க ளோடு
நானுவித †மாநவைசை விட்டன னுக நல்லோன். 3

† மாதவை என்றும் பாடமுண்டு.

நித்தாதி குணங்க ளிகழ்ந்த பரத்தி னேயம்
வைத்தாதர வானுயர் வண்குர வோனை நாடி
மத்தாடிய வைம்புல னின்வழி மாறி மாயாச்
சித்தேயுள தென்று திரிந்தனன் றேச மெங்கும். 4

‡ பன்னாளக லாத வரும்பவ பாச நீங்கு
நன்னாள்வர நன்மை சிறந்ததோர் மாந கர்க்கே
முன்னாண்முயல் பாக்கிய முந்துற வந்து கண்டான்
றன்னாதனை ஞானமு யர்ந்த தயாவி னானை. 5

‡ அன்னாளக என்றும் பாடமுண்டு.

† கண்டானழ வீடிய கானமு ழன்று வந்தோர்
தண்டாமரை மேவு தடம்புனன் மீத ரென்ன
வண்டாமரை போல மலர்ந்தபொற் றாளி ணைக்கே
விண்டேன்வினை யாயின யாவையு மென்று வீழ்ந்தான். 6

† கண்டாரழ வீடிய கான முழன்று லர்ந்தோர் என்றும் பாடமுண்டு.

வீழ்ந்தான்மு னெழுந்து வணங்கி மகிழ்ந்து மேன்மேல்
வாழ்ந்தான்மன முந்த வலம்பல † வந்து தாழ்ந்தா
னோர்ந்தானுய ரன்பி னரும்ப வுரோம மங்கந்
தாழ்ந்தானி துரைத்தன னஞ்சலி மௌலி தங்க. 7

† வந்து வந்தே, யாழ்ந்தானுய என்றும் பாடமுண்டு.

மெய்ம்மொழி.

பொங்குதண் கடல்சூழ் கின்ற புவியக மெங்கும் புக்கேன்
சங்கையைத் தீர்க்க வல்லார் தம்மைநான் கண்ட தில்லைத்
துங்கமாங் கருணை யோய்நின் றுணைமலர்ப் பாதங் காண்பா
னிங்குவந் தடைந்தே னைய வென்குறை தீர்க்க வேண்டும். 8

தத்துவசித்தி.

எந்தாய்கரை யின்றி யிரும்பய † நீடி யெங்குஞ்
சிந்தாகுல மோடு பவக்கடல் வீழ்ந்து § சிந்தை
நொந்தேனமு தம்மொழி நின்றிரு நோக்கு நோக்கி
வந்தேறவு நின்கரு ணைக்கை வழங்க வேண்டும். 9

† னீட்டி யென்றுஞ் என்றும், § சிந்தி என்றும் பாடமுண்டு.

பரமந்தமின் ஞான மெனப்பல சாஸ்த்ர பாடும்
பிரமந்தனை யிதென வெம்பெரு மான ளிக்கும்
தரம்வந்தவர் தன்மை † யெனக்குள தாகி னென்றன்
சிரம்வந்த தவப்பய னேயருள் செய்தி யென்றான். 10

† யெனக் கருளாகி யென்றன் என்றும் பாடமுண்டு.

என்றாதர வாலி தியம்பி யிறைஞ்சி யன்போ
‡ டொன்றாவறி வாலணி யாரர விந்த கோசத்
தொன்றாமென வங்கைக ளுச்சியி னொன்ற வேற
நின்றானை மகிழ்ந்துல கெங்கு நிறைந்து நின்றான். 11

‡ டன்றாவறி என்றும் பாடமுண்டு.

மாசின்றி யமைந்து தெளிந்து மயக்கி லாத
வாசஞ்செய் தவாறு மனோகர மைந்த நீமுன்
பேசும்பர மியாமுரை செய்வது பின்ன ரின்னே
நேசஞ்செயு நீயெவ னென்று நிகழ்த்து கென்றான். 12

தேனார்சுவை யேதரு வார்த்தை செவிக்கொ ளாமுன்
னானோென வுன்னினு ஞயக நன்மை யாலே
யூனாதி பிராணனை யுட்பட வுள்ள தெல்லாந்
தானேபரி வோடு தனித்தனி பார்த்த மைந்தன் 13

---

குறுந்திரட்டு.

புதல்வர்சரிதை.

போர்யிகல் விளைமை புகுதலூப் பின்றி யிருக்கவெம் புலியொடு காடி
சியமேல் கொள்ளச் செம்புபொன் ஞகத் தேவர்கள் சொன்னவா செய்யத்
தோயமே னடக்கத் தீயிலே குளிக்கத் தோன்றிடா திருக்கவே றொருவர்
காயமே பாய வானமே போகக் காணினும் விவேகிகைக் கொள்ளான். 381

இச்சக மநித்தமென வெண்ணியிது போலே
யச்சகமு மென்பதை யறிந்தடைய விட்டு
ளச்சம தறுக்கவல வாரிய னடிக்கே
பிச்சுறுவர் வீடது பெறக்கருத லுற்றோர். 382

கண்முதற் புலன்க ளியாவையு மொடுக்கிக் காணவா குலமுறக் கடிந்து, குண்மைகாண் விருப்பொ டுயிர்க்கெலாம் பரிவுற் றுற்றசிற் றின்பத்தை யுவர்த்து, வண்மையா முணவு வந்தவா கண்டு வாட்டமு மகிழ்ச்சியு மின்றித், தண்மையா முடம்பு தான்றன தென்னுத் தன்மையன் றத்துவ முணர்வான். 383

கனமாகி யிருண்டுயர் காயமுன் னாக மற்று
மனமாதி களைந்து வழங்குபி ராண னெல்லா
மெனதாகி யிருந்தன விங்கிவை தம்மின் வேறா
யினனுனென ஞான † மிசைத்தல னீது ரைத்தான். 14

† மிசைந்தவ என்றும் பாடமுண்டு.

பூணுமுறை யாய்புக ழின்புக ழேத வத்தோ
ரேணுமுனி வாவெனை யான்மிக வெங்கு நாடிக்
காணாது கலங்கினன் கண்டினி தென்னை யானு
‡ நாணுவகை நல்குதி யென்றனி நாத வென்றான். 15

‡ நானுமென என்றும் பாடமுண்டு.

உத்த மத்தினதி காரியுப தேச முறவே
கைத்த லத்தினல ராகவுல கங்க ருதுமான்
மத்தி மத்தவனு மாலிகழ் மாசுண மதே
யொத்து ணர்ச்சியி னுலோகமுள தாக வுணரான். 16

அதம மாயவதி காரியெதிர் கான லதுபோ
லுதவு மாயினு முலோகமுள தாக வுணரான்
பொதுமை யேயுலக நேருளது போனி கழினு
மதியி னுலுமவை காணுகிலர் மாயை நிகழ்வால். 17

அதிகாரியிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1667.

## 4. சீடாசாரம்.

விளுவிளக்கம்.

அமல மாமதி காரித னியல்பினை யருளிய வகைபோல
னிமல பாவமோ டிறைகழ லுறுமவர் நெறியுறு மாசார
முமல மாகிய விருளினி னழிவுறு மூடனே னையுமாண்ட
விமல னேயடி யேனறி வுறும்வகை விளம்பியே யிடவேண்டும். 1

மூலசித்தி.

செய்ய தேசிகன் றிருவடி யகினுறு சீடரா சாரந்தா
னுய்யு மாறது தனையுனக் குரைசெய வுள்த்தினை யொருக்கிக்கேள்
பொய்யி லாவகை யுளமுறை செயலவை பொருந்துமன்பதனோடே
செப்பு மேவலென் றறியதன் றிறமினந் திகழ்த்துவன் றெளிமை
[ந்தா. 2

### சோதுபானந்தசித்தி.

* நேச நெஞ்சினுற் றனக்கறு † நினைவல வாயினு நெறியென்றே
தேசி கன்றிரு வுள்ளமே செய்குவான் செனித்திடுங்குலத்திற்கு
மாச தாகினு மாச்சிர மத்திலே வழுவினு முலகெல்லா
மேசி விடினு மறம்புகழ் தனம்பிற விழப்பினு மிடரேனும். 3

† நெறியல என்றும் பாடமுண்டு.

### போதாத்துகாம்.

தேசி கன்றிரு வுளக்கருத் தறிந்துநற் றிருவுள மகிழ்செய்யப்
பேசு வாசகம் பேசிடா மையதெனப் பேசிய பெரியோன்ற
ஞசி லாதபொற் கழல்களி னறையுமை யைந்தையு மொருக்கிப்பின்
னேச மேயவை யவமதாய் நெக்குநெக் குருகியே பணிசெய்வான்.

என்ற னக்கிது வாய்த்தவா றறிகிலே னெம்பிரான் கழற்கேவ
றன்ற னக்குநா னுரிது தருவதோ தமியனேற் கென்றென்று
சென்று றப்பெரு மார்வமு மச்சமுஞ் செறிதர வடிமைக்க
ணின்றி யற்றிய தேவலி னியல்பென நிகழ்மறை சொலுமைந்தா.

### போதாமிர்தம்.

இப்பரி சிறைகழற் கெலையி லேவலைத்
தப்பற முயல்பவர் தமது நாயக
னொப்பருஞ் சன்னிதி யொழியுஞ் சீலமு
மப்பான் றிறத்துறு மாறுங் கேட்டியால். 6

வெஞ்சொலுங் கடுஞ்சொலும் விரைந்த சொல்லதும்
வஞ்சமும் பழுதுடன் மாறு கூறலும்
பஞ்சிடு முலகியல் பயனில் வாசகந்
தஞ்சநா யகன்றன்முன் றவிர வேண்டுமால். 7

* அருளறமங் கறைந்திடுத லறமலா துரைத்த லறைபொழுதி
னிடையுரைத்த லகங்கரிப்பங் குரைத்தல், பொருளறிவு தானு
ரைத்தல் பொருளல்லா துரைத்தல் புன்கோட்டி கொண்டுரைத்
தல் பொடிவளவுங் குரைத்த, லிருளுறுமச் செவிச்சொல்ல லேவ
[illegible] விடமறியா திறையருளிச் செயவுரைத்தல் வினவ,
[illegible] குருகீர்த்தி யல்லதுயா டிடுத தேசிகன்றன்
[illegible] றீரவிடு மிவையே. 8

### போதசித்தி.

* ஆதனஞ் சயனம் வாகன மிதியடி யத்திரங் குடையொடா பரண, மீதுவண் டயிலங் குளியொடு பூச்சந் தனமுதன் மேவியங் கிடுத, லோதுபல் லுரிஞ்ச லொண்பதம் விளக்க லுரைத்தவெற் றிலைதின லிவைதா, மாதிரன் குரவ னரியசன் னிதியி னடியவ ரற விடுந் தொழிலே. 9

### மெய்ந்நெறிவிளக்கம்.

* இறைவன்முன் பசங்கித மாகவந் திடுத லிட்டவே டத்தினோ டணைதல், கறையுறுஞ் சாயை யிறைவன்மேற் படுதல் கட வுளி னிழறன்மேற் படுத, லுறைதரு தலத்தின் மேலிருந் திடுத லுளமுக முகுளமா யிருத்த, லறைதரு மமல னரியசன் னிதியி னடியவ ரறவிடுந் தொழிலே. 10

### ஞானசித்தி.

* போற்றுகை தவிர்த லுதன் பொருளினைப் புசித்த லீத
லாற்றுத லேடந் தன்னைச் சொன்னவை மறுத்தல் பொய்கள்
சாற்றுதல் குலமுங் கல்வி தனத்தபி மானம் பண்ணன்
மாற்றுதல் கொடுத்த றன்னை மற்றிவை குருவோ டாகா. 11

### தத்துவசரிதை.

* நீரி டத்தினு நிலவிரு ளிடத்தினு நெறிகளிற் பயமுறு மிடத் துஞ், சீருடைக் குரவன் முன்புசேவிப்பான் றிகழ்ந்தமற் றுளநெறி யவற்றிற், பேரருட் குரவன் பின்புசே விப்பான் பிறிதொரு சிந்தையற் றிறைவ, னார்திருக் கழலிற் சாயைபோன் முன்பி னுய்விடா ரன்பினுத் தமரே. 12

### மூலசித்தி.

* தன்னு ளத்தெழு நீங்குதன் னாயகன்
முன்னு ரைத்தினி மேன்முனை யாவணஞ்
சொன்ன வப்பரி சேகட வேண்டலா
லன்ன வப்பதி விட்டகல் வானலன். 13

---

### குறுந்திரட்டு.

நிறம்பெற நீரா டாமுன்னீ ராட னின்றிட விருத்தலுன் கிடத்த, லுறங்குமுன் னுறங்க லுண்ணுமுன் னுண்ட லுரையெனு வுரையாம லுரைத்த, லறம்புழி யெவர்க்குங் கூறுத லருளா தனுசெய்த லருளிய பணியை, மறந்தன னென்றல் குருவலாற் றெய்வ மதித்தல்செய் பவன்மக னல்லன். 384

சமயாசாரம்.

தனமாக் காய முயிர்மூன்றுந் தலைவர்க் கீந்திங் கிவைகெடினு
மனவாக் காய கன்மத்தால் வணக்கங் கெடாத மனத்தினராய்
நினைவாற் காயத் தட்டாங்கம் பஞ்சாங் கனேர் சிட்டாங்க
மெனநால் வணக்கஞ் சிராங்கமுட னிறையாற் பிறவி யறுவோர்க்
[கே.14

மூலசித்தி.

சென்றபோ திறைவன் றிருவடித் தலத்தே சிறந்தபஞ் சாங் கவட் டாங்க, மொன்றவே வணங்கி யொப்பிலா னருளை யுள மது நிறையவே பருகிப், பின்றுமப் பரிசே விடைகொளும் பொழு தும் வணங்குக பெரியவன் முகப்பே, நின்றுநெக் குருகித் தன் றன்வா யாரத் துதிப்பது நீதியன் பருக்கே. 15

மெய்ந்நெறிவிளக்கம்.

சூரவுணர் திறத்து மொழிவன வெல்லாங் குருதர மாகவே வோதிடுக, தெரியுமா றரிய ஞானசோ சத்தைத் தேர்ந்திடி னெடுத் தவிழ்த் திறைமுன், னரியவா தனத்து வைத்திறை யருட்டாள் வணங்கியங் கதன்பயன் கேட்டாங், குரியசோ சத்தைக் கட்டிநா யகன்று ளொப்பற வணங்குத லொழுக்கே. 16

தத்துவபோதம்.

* எப்படி கீழா மவர்களே யெனினு மிறையுளத் தடைத்த வர் தம்மை, யப்பரம் பரம னென்றுளத் துணர்க வயன்முதன் மூவரே யெனினு, மெய்ப்பட விறைவன் றிருவுள மிலதேன் மீண்டுபா ராதுகை விடுக, செப்பிடி விறைவன் றிருவரு ணிறை ந்த சீடரா சாரமிங் கிதுவே. 17

அருணெறிவிளக்கம்.

எப்படி சில மிலங்குநற் சுவாமிக் கப்படி பகுதியென் பதுதா, னொப்பமை யில்லா வுணர்ந்தவ ருணரா வுலகரு முணர்வதிப் பொருடா, னப்படி யிறைவன் றிருவுள மேதங் கதுக்கவ யவ மென வொழுகல், செப்பிடு மறைக டிகழுமன் பருக்குத் திருந் துமா சாரமென் பதுவே. 18

சிவப்பிரகாசதரிசனம்.

* இப்பரி சிறைவன் றிருவுளம் பிழையா திலங்கிய வேவலின் வழியா, லெப்பரி சுள்ள சித்திகள் வலிக ளியைந்திடா நிற்குமங் கவர்பா, லப்பரி செல்லாச் சித்தியும் வந்தா லகந்தையும் வியப் புமே வாமே, தப்பற வெனையா டம்பிரா னேவற் றன்மையென் றருளினைப் †பரிவான். 19

† பணிவான் என்றும் பாடமுண்டு.

### சமயாசாரம்.

பெருந்தவ மில்லான் றன்னைப் பேணிய மடந்தை யுள்ளத்
திருந்தவை முடிந்த தென்று விக்டபரந் தெரிந்த ஞானப்
பெருந்தவக் குருவைத் தெய்வ மென்றுமெய் பேண வல்லார்க்
கரும்பொரு ளியாது மில்லை யிருமையு மகலி டத்தே. 20

### போதரத்னாகரம்.

* கோல்லுநஞ் சமுத மாகுங் கொடியதீக் குளிருங் கட்டிக்
கல்லுடன் கடலிட் டாலுங் கல்லதே மிதவை யாகுஞ்
சொல்லிடப் பொழியுங் கொண்ட றுய்யநற் குருமா னுக்கு
நல்லவக் குருமான் சால நானிலத் தரிய னன்றே. 21

* பரம்பரனே குருமானே பழுதறவா ரரியரெனி
னரும்பரம னெங்குமுள னெனுமதனா லரியனலன்
வரங்குருமா னின்னவிடத் துளனென்ன மறைமுடிவுந்
தெரிந்திடுமா றறிந்திலதாற் றிகழ்குருமா னவனரியன். 22

அவனே யரியா னவனே பெரியா
னவனே வலியா னவனே யறிவா
னவனே வல்சரா சரமே விடுமா
லவனா ரெனின்மா குருமா னவனே. 23

### போதாமிர்தம்.

ஏதுவெதி ரேதுவரி தேதுவலி தேதுபெரி
தேதறிய வரியகலை யேதடைய வரியபத
மேதவனின் மிகுதியுள தேதவனொ டுவமையுள
தோதுகுரு மானிலைமை யோதரிது வோதரிது. 24

### மெய்ம்மொழி.

உற்றுமுன் னரசற் சேர்த லொலிகடல் வங்க மோடன்
மற்றுமந் திரவா தந்தான் மகாபலங் கொடுத்தல் கோறல்
குற்றமுங் குணமு மங்ஙன் குருபாதம் வணங்க லின்ப
முற்றிடும் வழுவி னென்று முழுநா காக்கு மன்றே. 25

சாற்றிய பரிசிற் றவறுத லேலவன் மறுத்தலாம் பிழையது † சாலி, ஞற்றவங் கதனைத் தீர்த்திடற் குபாய மாய்ந்திடத் தொன் றினு வில்லைச், சேற்றினைச் சேற்றாற் கழுவலா யிடுமோ தெளிந்த நீர் கொண்டலா லதுபோ, லாற்றிய விறைவ னருளதா நீரா லப் பிழைச் சேறுநீக் கிடுவான். 26

† சாற்றி என்றும் பாடமுண்டு.

வேற்றுள குற்ற மியாவையுந் தீர்க்கும் விமலமா மிறையரு ளொன்று, லாற்றவங் குற்ற மிழையையீக் குவது மவனரு ளன்றி வே றுண்டோ, போற்றியங் கவன்றன் பொன்னடி பொருந்திப் புனிதன்பா தோதக மாடி, யாற்றவங் கமல னருளினை †முழுந்தி னக்கணந் திருமப் பிழையே. 27

† முழுக்கி என்றும் பாடமுண்டு.

போதசாரம்.

அறைந்தவப் பரிசின் பிழையினை நீக்கா தவனெறி நிரயம் வீழ்ந் தழியும், பிறந்திடிற் பிரம †வரக்கனும் பெரும்பாம் பாமெ னப் பெருமறை பேசுஞ், செறிந்தவப் பிழைதீர் வளவுமங் கவன் றன் றெரிசனம் பரிசனந் ‡ தருமோ, மறந்துமற் றனுகார் மாத வத் தடியா ரனுகின்வன் பாதக மன்றே. 28

† காதகனும் என்றும், ‡ தருமோ என்றும் பாடமுண்டு.

பெருவினைச் சமய மிழந்துநித் தியமாம் பிரமமே யென்றி டப் பெறினுந், திருவினைச் செலுத்து மட்டமா சித்தித் திறம்பல வுழந்தவ ரேனுங், கருவினைத் துடைத்தற் கிதுநெறி யெனவே கையினிற் கனியெனக் காட்டுங், குருவினைச் சிவமாக் கொண்ட தே முத்தி கண்டதாக் குலமறை கூறும். 29

சொரூபானந்தசித்தி.

* தேசி கன்றிரு வுள்ளமுண் டாகவச் சிவன்றிகழ்ந் திடுகின்று
னீச னிங்கருள் செய்யவந் திருக்கின்ற விடமிவன் றிருமேனி
மாச தொன்றிவ னளவிலே செயினெரி வாய்நர கினிற்பூத
நாச மெவ்வள வவ்வள வுஞ்செல நண்ணுநன் னெறிநண்ணுன்.

சிவானந்தநிலயம்.

சூரவ னேகுறி யேதுமி லாச்சிவ
னுரிய சத்தியே யொப்பிலா வம்பிகை
கருது மைந்தரே கந்தர்வி நாயகர்
பெரிய சுற்றமும் பேணுமப் பத்தரே. 31

மெய்ம்மொழி.

சற்குரு பாசி வந்தா லுயினும் வாசி சாற்றிற்
சற்குரு சிவன்கோ பித்தாற் சமிப்பிக்குஞ் சிவனு மெலன்றுஞ்
சற்குரு கோபந் தன்னைச் சமிப்பிக்க வொண்ணு தத்தாற்
சற்குரு நாதன் பாதந் தப்பிடான் முத்த னன்றே. 32

சொரூபானந்தசித்தி.

* அருவெனு மமலன்று னருளில னெனினுஞ்சார்
குருபர னருளுண்டே யெனினொரு குறையுண்டோ
திருவடி தரவந்தார் திருவுள மிலரென்று
லொருவரு மிலர்கண்டீ ருறுதுயர் களைகின்றார். 33

* இந்த விடும்பை யுடம்புறு மேது
தந்தை யெனப்புகழ் கின்றிலர் தக்கோ
ரந்த மிலாத வகண்டமு நம்முட்
டந்தவர் தந்தை யெனச்சமை வுற்றார். 34

மெய்ம்மொழி.

சிந்திநீ யுனக்கு நாளுஞ் சீர்குரு தந்தை தாயும்
வந்திநீ சேட்டன் றன்னை மன்னுநற் குருபா தம்போ
லுந்தியி னுயிரே போல வொக்கக்காண் கனிட்டன் றன்னைச்
சந்தியாச் சிவனே டொக்கத் தற்பத்தர் தம்மை யுங்காண். 35

குருபாதம் பூசி நாளுங் குரு † நாமஞ் செபியெப் போதுங்
குருபாதந் தியானம் பண்ணிக் குருகீர்த்தி தோத்தி ரஞ்செய்
குருபாத நினைக்கத் தீருங் குருதோட மல்லாத் தோடங்
குருபாதந் தன்மே லுண்டோ குருவின்பேர் சிவனு மன்றே. 36

† பாதஞ் என்றும் பாடமுண்டு.

சொரூபானந்தசித்தி.

* வருபிறப் பறவே வேண்டினுன் மறையீ றென்னுமம் புய த்தினை மலர்த்தற், கிரவியாய் நெஞ்சிற் கியைந்தநற் குருவை யாதொரு வழியினு லிறைஞ்சி, யருள்சுரந் திடுதற் காவதே செய்வா னருமறை முடிவெலா மறையும், பொருளொரே ராக வுமக்கெனக் கீசன் புகன்றவப் படியிலே புகன்றேன். 37

சீடாசாரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1704.

## 5. சம்பிரதாயவிலக்கணம்.

வினாவிளக்கம்.

அன்புமிக் கார்வந் தன்னா லரியநற் குரவன் பாதத்
தின்பமுற் றேவல் செய்தே யிணையடி பிழையா மைந்தர்க்
கன்புமிக் கருளா ளுத ளுட்கொள்சோ பான நீதி
யென்பொனாற் றிரளே தேனே யேழையேற் கருள வேண்டும். 1

சிவப்பிரகாசதரிசனம்.

இறைவனும் வழிபா டுற்ற வெல்லையிலா வன்பன் றன்னை
யறையுநற் பரீக்கை யெல்லா மமைவுறக் கண்ட பின்னைக்
குறைவறத் தனைக்கொ டுக்கக் குறித்தடி யாரை நோக்க
விறைவனே வாழி வாழி யிவனையாண் டருளு கென்றார். 2

* அலைகட லேழு மன்பிற் கணுவென மிகுத்துக் கண்க
ளொலையிலா வாரு யோட வெழின்மயிர்ப் புளகம் வந்தங்
குலைவிலா துருக வுள்ள முறைதழுத் திறைஞ்சி நின்ற
நிலையனு மைந்தற் கீச னெயமுற் றிவணஞ் செய்தான். 3

* திருவடி விளக்கு நீராற் சேனைமஞ் சனமு மாட்டிப்
பரிவொடே யமுது செய்த பரிகல சேட நல்கிப்
பொருவில்சீர்க் கருணை யாலே புரையிலா வன்பன் றன்னை
வெருவுதீப் பிறவி மாள வேதகஞ் செய்ய லுற்றான். 4

சோதபானந்தசித்தி.

சித்திர மமைத்த பித்திகோ டிகளாற் சீர்பெற விளங்கிமா ணிக்க,வுத்திரம் வயிரப் போதிகை பவள வொளிமணித் தூணிரை பொதிந்து, நித்திலத் தாம மெங்கணுந் தூக்கி நித்தில விதானமே யெங்கும், வித்தரித் தோங்கி வியனெடுங் கொடிகள் விண்ணள வெறிந்துமீண் டுளதாய். 5

தத்துவசரிதை.

வேதப்பொற் றேரு மாகமக் களிறு மிருதியாம் புரவியு நெருங்கி,யோதுநற் புராண மோங்கிதி காச முபநிடச் சேனைகாப் புடைத்தாய், மாதவர்க் கெளிதா யல்லவர்க் கரிதாய் வரம்பிலாப் பத்தியா யிரக்கான், மீதுமிக் கோங்கி யுண்மையாய் நிகழ்ந்து விளங்கிய முத்திமண் டபத்தே. 6

### சொரூபானந்தசித்தி.

கற்பக தருவு மகாதோ ரணமுங் கவின்பெற வமைத்துள
தாகி, யற்புத மான வரிமுகத் துறுகா லாதனத் தம்பஞ்சி யணை
மேற், சொற்பத வடிவாந் தோகையோ டெல்லாப் பொருளுமாய்
விளங்கிய தோன்ற, லுற்பவ மறுப்பா னுகவீற் றிருந்தா னும்ப
ருங் கோயிலுட் புகுந்தார். 7

ஆரமணி குண்டலமொ டாழிகட கங்கே
யூரமபி டேகமுத லொப்பனைக ளுஞ்செய்
தாரமகி ழுபிபணி நீரொடள வுங்கர்ப்
பூரமது கொண்டுதிரு மேனிநனி பூசி. 8

அருள தாகிய வளவிலா வழகுடை வரியவா பரணத்தைக்
கருணை மேனியிற் கவின்பெற வணிந்துவெண் கலிங்கமு மதுசாத்
திருவி னுயகி திகழுமார் பினிற்றிரு மாலையும் பலசாத்தி [தித்
வெருள தார்பவ மறுக்கவீ ரக்கழ லணிந்தடி யார்போற்ற. 9

### சொரூபானந்தசித்தி.

தமத்தை யப்புறங் கடந்துநின் றறிவுறு† சான்றதாய்த் தானெல்லா
மமைத்தொ ருத்தரா லமைத்திடப் படாதுள வமூலனு யிருப்பானை
யிமைத்தி டப்படா விழியினு லிமையவ ரியாவருங் கண்டிந்தச்
சுமைக்கி லைத்தன மென்பவர் போலவன் றுணையடி களின்வீழ்ந்
† சான்றதாய் மதனெல்லா என்றும் பாடமுண்டு. [தார். 10

கஞ்ச நற்கழல் பணிந்தெழுந் தமலனைக் கண்டுகண் களிகூர்ந்து
மஞ்செ னச்சொரி தாமயிர்ப் புளகிதம் வரமகிழ்ச் சியினேடு
நெஞ்ச †நெக்குக நிமலரா யயர்வெலா நீங்கநீண் முடிமேலே
யஞ்ச லித்தகை யினர்களா யானந்த வாரியிற் படிந்தாடி. 11
† நெக்குற நிமலரா யவாவெலா என்றும் பாடமுண்டு.

அழுத்த மிக்கதி பத்தி யாலவ சத்த ராயுள வண்டர்தங்
குழுப்பு விக்கண்வி ழுந்து மீளவெ ழுந்து தங்கள் குரற்களுந்
தழுத்த ழுத்தெம துற்ப வங்க டவிர்க்கை யேதக வென்றுதாம்[ல்.
வழுத்த லுற்றனர் வல்ல வாமறை சொன்ன வாறுதம் வாய்மையா

பரம ஞானமாம் பாற்கடல் பண்ணிய பரமனே யடிபோற்றி
கரத லாமல கத்தினேர் பரவொளி காட்டிடுங் கழல்போற்றி
யொருப ராபர மின்றிநீ யொருவனு மாகிய வொளிபோற்றி
பிரம நாரண சங்கர போற்றியெம் பெருமநின் பதம் போற்றி. 13

அடைய நீயறிந் தொருவரா லுன்னையிங் கறிவரி யாய்போற்றி
தொடைய தாமுல கனைத்தையுந் தரித்தொரு துவக்கறு சுடர்
போற்றி, முடிவு மாதியுங் கண்டுநீ முதன்முடி வின்றிய முதல்
போற்றி, வடிவி யாவையு முடையையா யுனக்கொரு வடிவிலா
தாய்போற்றி. 14

அகில மாயகி லத்தினுக் கதிபனா யகிலமென் றொன்றின்றி
நிகழு ஞானமா நிமலனே போற்றிநீ நினைந்திடு மிடமெல்லா
முகம தாயொரு முகமுனக் கின்றியே யிருக்குநான் முகபோற்றி
திகழு முன்னொளி யாற்றிகழ்ந் திலங்கிய சின்மய வொளிபோற்றி.

வேத மோதிய விமலனே போற்றிவே தாந்தமெய்ப் பொருள்
போற்றி, காது மாபிற விக்கடல் கடத்துநின் கழலிணைப் புணை
போற்றி, சாத லான்றும் பிறப்புமற் றிருந்துள சயம்புவே கழல்
போற்றி, யேது மாயினும் போற்றியோ ரளவிலா வின்பமே கழல்
போற்றி. 16

தோத்தி ரஞ்செயப் படுபவ னாகியத் தோத்திரந் தானாகி
யேத்தி நிற்பவ னாகியே யிருந்துள விறைவநின் கழல்போற்றி
காத்தி ரந்தனை யெடாவகை மெய்யினைக் காணவே நினைவார்க்கு
நேத் திரங்கொடுத் தருளியங் கவர்துயர் நீக்குநின் மலபோற்றி. ()

### பரமானந்தசித்தி.

என்றுநின் றடியார் போற்றி யின்னமு மிமையோர் தேட
வின்றுகண் டன்பர் வாழ விங்கெழுந் தருளுங் கோவே
யுன்றனன் கருணை யாலுன் னடியனைப் பார்த்தி டென்றார்
சென்றுநல் லன்ப னீசன் றிருவடி யதனின் வீழ்ந்தான். 18

### அனந்தபோதம்.

வடிவற வொன்று மறிவிலேன் மனவிரு ளின்று களைகெனா
வடியிணை வந்து பணிதலா லழகின் மலிந்த கருணையான்
செடிபடு கின்ற வுடலொடே சிவகதி கண்டு தெளிகெனா [னான்.
முடிமிசை யங்கை யருளினான் மொகுமொகு வென்ற மொழியி

### சங்கற்பநிராகரணம்.

ஊனமாம் பொய்யொழிய வுண்மையே நோக்கியதன்
ஞானமாந் தெய்வ நயனத்தான்—மேனின்ற
வானாதி பூத மயக்காற்ற மற்றவனைத்
தானாக நோக்கினான் றான். 20

அநுபவசூரியன்.

* சேங்க ரத்தினைத் திகழ்தர மலர்கொடு சிறுவனுச் சியின் வைத்துப், பங்க யத்திருக் கண்களா லிறைமகன் பாசம்வெந் திட நோக்கி, யங்கை யேற்றவ னுடல்பொரு ளுயிரவை யுதகமாத் தான்கொண்டு, சங்கை யற்றொழி வறநிறை திருவடி தலையின் வைத் தருள்செய்தான். 21

மருவியே யனாதி காலம் வந்தமா மாயை தன்னைக்
கருவொடே வெந்து வீழக் காதலாற் றிருக்கண் வைத்துத்
தெரிவுறு தமா ரின்னந் தேடிடுஞ் செய்ய பாதங்
குரவனு ரன்பன் சென்னி குடிகொள வளித்தா ரன்றே. 22

தத்துவசித்தி.

தம்பி ரானடி யான்ம யங்கிய தன்மை கண்டு சமைந்துமுன்
னும்பர் பானுத வாத தாளவ னுச்சி வைத்தனன் வைத்தலும்
வம்பு நேரவை கொண்டெ ழுந்து மலர்க்க ணுச்சி முகத்தினு
நம்பு மார்பினு மொத்தி யன்பு நயந்தி ருந்து திருந்தவே. 23

ஞானசாரம்.

ஆண்டவா றதனை நோக்கி நயனம தருவி சோர
மீண்டுமிப் பிறப்பி லீசா விப்படி யாளப் பெற்றால்
வேண்டிடும் பிறப்பே யன்றி வேண்டிடே னென்று மென்றங்
காண்டகை யடிகள் சூட்டு மருணலம் புகழ்த லுற்றான். 24

தேவாரம்.

நினைந்துருகு மடியாரை நைய வைத்தார் நில்லாமே தீவினைக ணீங்க வைத்தார், சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார் செழுமதியின் றளிர்வைத்தார் சிறந்து வானோ, ரினந் † துருமி மணிமகுடத் தேறத் துற்ற வினமலர்கள் போதவிழ்ந்து மது வாய்ப் பில்கி, நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 25

† துருவி என்றும் பாடமுண்டு.

உற்றுலவு பிணியுலகத் ‡ தெழுமை வைத்தா ருயிர்வைத்தா ருயிர்செல்லுங் கதிகள் வைத்தார், மற்றமரர் கணம்வைத்தா ரம ரர் காணு மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார், செற்ற மலி யார்வமொடு காம லோபஞ் சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார், நற்றவர்சேர் திருவடியென் றலைமேல் வைத்தார் நல்லூ ரெம் பெருமானார் நல்ல வாறே. 26

‡ தெழும்ப என்றும், தேழும் என்றும் பாடமுண்டு.

## திருவாசகம்.

தேவ தேவன்மெய்ச் சேவகன் றென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலு மறியொ ணாமுத லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்பரன்றி யறியொ ணாமலர்ச் சோதியான்
றூய மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னிச் சுடருமே. 27

அட்ட மூர்த்தி யழக னின்னமு தாய வானந்த வெள்ளத்தான், சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன் றென்பெ ருந்துறைச் சேவகன், மட்டு வார்குழன் மங்கை யாளையோர் பாகம் வைத்த வழகன்றன், வட்ட மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னி மலருமே. 28

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்துபார்ப் பானெனச், சித்தர் சூழச் சிவபிரான் றில்லை மூதூர் நடஞ்செய்வா,னெத்த னாகிவந் தில்புகுந்தெமை யாளுங் கொண்டெம் பணிகொள்வான், வைத்த மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னிமலருமே. 29

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி டாவகை நல்கினான், வேய தோளுமை பங்க னெங்க டிருப்பெ ருந்துறை மேவினான், காயத் துள்ளமு தூற வூறநீ கண்டு கொள்ளென்று காட்டிய, சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே. 30

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன் பேரருடந் தருளினா, னறவை யென்றடி யார்க டங்க ளருட்கு ழாம்புக விட்டுநல், லுறவு செய்தெனை யுய்யக் கொண்டபி ரான்ற னுண்மைப் பெருக்கமாந், திறமை காட்டிய சேவ டிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே. 31

வம்ப னாய்த்திரி வேனை வாவென்று வல்வினைப்பகை மாய்த்திடு, மும்ப ரானல கூடறுத்தப் புறத்த னாய்நின்ற வெம்பிரா, னன்ப ரானவர்க் கருளி மெய்யடி யார்கட் கின்பந் தழைத்திடுஞ், செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கணஞ் சென்னி மன்னித் திகழுமே. 32

## திருவாய்மொழி.

ஆள்கின்று னாழியா னாற் குறையுடையோ
மீள்கின்ற தில்லைப் பிறவித் துயர்கடிந்தோம்
வாள்கெண்டை யொண்கண் மடப்பின்னை தன்கேள்வன்
றாள்கண்டு கொண்டேன் றலைமேற் புனைந்தேனே. 33

சம்பிரதாயவிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1737.

# 6. சீர்பாதத்துதி.

## வினாவிளக்கம்.

எந்தையே யெந்தை பெம்மா னீசனே நீச னேனை
வந்துய்ய வாண்டு கொண்ட வள்ளலே மதுர வாரி
யெந்தலை மிசையின் மன்னு மெழின்மிகு கழல்க டம்மைப்
புந்திரா வாரப் பாடிப் புகழுவ னியலும் வண்ணம். 1

## போதாமிர்தம்.

* ஆதி மாமறைக் கரிய தாகியே யமல வன்பர்கட் கெளிய வார் கழ, லோதும் வாதிகட் கிருளு மாயெனக் கொளியு மாயுளத் தொளிரும் வார்கழல், பூத பௌதிகப் பேதம் வாரியுண் புராண பூரணப் போத வார்கழ, லேது மோர்விலா வெனது சென்னியே யிடம தாயிருந் தருளும் வார்கழல். 2

## அருணெறிவிளக்கம்.

கரையோடுரை யின்றிய வொண்கழல் கருதாரு ளகன்றுய ருங்கழ, லுருவோடரு வின்றி யிடுங்கழ லுவமாதித மாகிய வொண் கழல், வெருள்வார் பவம் வீசி யிடுங்கழல் வினையேன்வெளி கண்டு கொளுங்கழ, லருளேபொழி யுங்கழ லென்சிர மதுகோயில் கொளுங்குரா வன்கழல். 3

## ஞானசித்தி.

திருவுருவாய் வந்தருளைப் பொழியும் பாதந் திசைமுகன்மா லறிவரிய செய்ய பாதங், கருவுறுமுற் பவங்கடியுங் கமலபாதங் கரையறுசிற் சுகமதுவாய்க் கமழும் பாத, முரையுணர்வைக் கழிய மிகுத் துணரும் பாத முலகுயிர்தற் பரமாகி யொழிவில் பாதந், தெருள்புரிநற் றேசிகனூர் செய்ய பாதந் தீவினையென் சென்னி யினிற் றிகழும் பாதம். 4

## சிவப்பிரகாசதரிசனம்.

* உம்பர்மா முனிவர் தேடி யுணர்வரி தாய பாத
மிம்பரா ரின்று காறுங் கண்டிடா வெல்லையில் பாதந்
தம்பிரான் சிவப்பிர காசன் றாமரை செய்ய பாதம்
வம்பனேன் சென்னி மன்னு மாமலர்க் கமல பாதம். 5

## போதாந்தநிலயம்.

அரிய சேவடி பெரிய சேவடி யமல மார்தரு கமல சேவடி
யுரிய சேவடி யொழிவில் சேவடி யுவமை தானற வொளிரு சே
கரிய மாலய னமரர் தேடிடு கடவுள் சேவடி கனக சேவடி [வடி
தெரியு மாறறு மெனது மேனுறை திகழு மாமலர்க் கமல சேவடி.

### போதரத்னாகரம்.

* மாசற்றவர் தேடுந் திருவடி வாதற்றவர் கூடுந் திருவடி
தேசுற்றவர் காணுந் திருவடி சேர்வுற்றவ ராருந் திருவடி
யாசற்றவர் பாடுந் திருவடி யார்வுற்றவர் வாழுந் திருவடி
கூசற்றெனை யாளுந் திருவடி கூறற்கரு மீசன் றிருவடி. 7

### ஞானவினோதன்கலம்பகம்.

உண்டுமில் லையும தாகி யுருவொடங் கருவு மாகிப்
பண்டொடின் றுடைய வாகிப் பலவொடொன் றாகித் தானே
கொண்டகொண் டளவ தாகிக் குறிக்கொணாத் திறத்த தாகி
யண்டனென் சொரூபா னந்த னடியிணை யலர்ந்த வாறே.

### திருவந்தாதி.

ஒழியாது நிற்பன வெங்கணு மொன்றை யுலப்பிலூழி
யழியாது நிற்பன வாளாகு மன்பி லவர்க்கமுதம்
பொழியாது நிற்பன பொய்யன்றி யென்றுமென் புன்றலையைக்
கழியாது நிற்பன தத்துவ நாதன் கழலிணையே. 9

இணையாது மில்லன யானே துதிப்பினு மெவ்விடத்தும்
பணையாது நிற்பன பற்றொன்றி லாதன மற்றும்வெறும்
பிணையா தெனுங்கண்ணி கூறுகந் தானென் பிணிகெடுக்குந்
துணையாது மில்லன்ற னுள்ளத்துள் வைத்த துணையடியே. 10

### தேவாரம்.

உரைமாலை யெல்லா முடையவடி யுரையா லுணரப் படாத
வடி, வரைமாதை வாடாமே வைக்கும்மடி வானவர்க டாம்வணங்கி
வாழ்த்தும்மடி, யரைமாத் திரையி னடங்கும்மடி யகல மளக்கிற்பா
ரில்லாவடி, கரைமாங் கலிக்கெடில நாடன்னடி கமழ்வீ ரட்டானக்
கபாலியடி. 11

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி யடியவர்கட் காரமுத
மானவடி, பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி பற்றற்றார் பற்றும்
பவளவடி, மணியடி பொன்னடி மாண்பாமடி மருந்தாய்ப் பிணி
தீர்க்க வல்லவடி, தணிபாடு தண்கெடில நாடன்னடி தகைசால்வீ
ரட்டத் தலைவன்னடி. 12

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப் பிறையணிந் தாடு மையாற னடித்தலமே. 13

இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொரு ளுடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருடரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே. 14

எழுவா யிறுவா யிலாதன வெங்கள் பிணிதவிர்த்து
வழுவா மருந்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாற னடித்தலமே. 15

உற்று ரிலாதார்க் குறுதுணை யாவன வோதிநன்னூல்
கற்றூர் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கு
மற்றூர்க் கரும்பொருள் காண்கவை யாற னடித்தலமே. 16

வானைக் கடந்தண்டந் தப்பால் மிக்கபன மந்திரப்பா
ரூனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன வுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
வானை யுரித்தன காண்கவை யாற னடித்தலமே. 17

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகலக்கிக்
கழலா வினைகள் கழற்றுவ † தாலவ னங்கடந்த
வழலா ரொளியன காண்கவை யாற னடித்தலமே. 18

† காலவ என்றும் பாடமுண்டு.

கருடக் தனிப்பாகன் காண்டற் கரியன காதல்செய்யிற்
குருடர்க்கு முன்னே குடிகொண் டிருப்பன கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்வி தன் செங்கம லக்கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான் மலரடியே. 19

### திருக்கடைக்காப்பு.

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன விறலின்க ணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன வலஞ்சுழி யிடமாக
விருந்த‡நாதன தெழின்மறை யேத்திய விணையடித் தலந்தானே.

‡ நாயக னிமையவ ரேத்திய என்றும் பாடமுண்டு.

### திருவந்தாதி.

கடுவாம் பவநோய்க்குங் காமுகர்க்கு நஞ்சா
மடுவே தனிநீ ரமுதா—நடுவாகி
ஞாலமாய் ஞானமாய் ஞான நிதமாகிக்
காலமாய் நின்றான் கழல். 21

சீர்பாதத்தாழிசை.

இரத முடையன விளையன முதியன
விமையி னிருள்கெட வருள்வதோர்,
வாத முடையன மகிழ்வு தருவன
மருவில் சிவபர னடிகளே. 22

காண வினியன கருத வரியன கருணை பொழிவன கசிவோடே
பேணு மடியவர் பிறவி செறுவன பெரிய சிவபர னடிகளே. 23

தேட வரியன தெளிவு தருவன சிறுமை செறுவன திருகிடா
வோடு மனமற வுணர்வு பொழிவன வொழிவில் சிவபர னடிகளே.

திருமந்திரம்.

* மந்திர மாவது மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவது
மெந்தை பிரான்ற னிணையடி தானே. 25

சீர்பாதத்துதி முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1762.

## 7. ஊனுயிர்வேறுபாடு.

விஞவிளக்கம்.

* நின்றிருக் கடைக்கண் பட்டா னின்மல ராகா தாரா
ரென்றனைப் பொருளா வந்திங் கிணையடி யளித்த கோவே
யுன்றிருக் கருணை யாலே யூனுயிர் வேறு செய்த
லென்றுநற் புலவோர் கூறு மிகநெறி யியம்பிடாயே. 1

பரமார்த்ததரிசனம்.

* உடம்பென வுரைப்பதுயி ருண்பவைக ளெல்லா
மிடம்பட விளைப்பதெதிர் காணலுறு மீதாற்
றிடம்படவு மற்றிது தெரிந்துணரு மெய்யைக்
கடம்படு முயிர்ப்பொரு ளெனப்பகர்வர் கற்றோர். 2

---

துறுந்திரட்டு.

ஊனுயிர்வேறுபாடு.

ஈனம துறலியல் பான யாக்கையைத்
தானல தொன்றினைத் தானென் னக்கொளு
மானிடர் மனதினின் மைய நீர்வகை
யூனுயிர் வேறதாம் வகையு ணர்த்துவாம். 885

ஞானமிர்தம்.

* உழிதர லிசையைந்த பழித ராகத்
தழியா வறிவன் கழியா னொழியாச்
சேதன மன்மையிற் கடம்போ லாகலி
னெய்யா தியற்றிய னெவனவன் பொய்யாப்
புற்கல னென்ப வொற்கமில் சேதன
மறிவு வறித சேதன மென்ன
நெறியறி புலவ ரறிவறி வகையே.

(இ-ள்.) உழிதரல்—கழியான் (எ-து) போக்குவர வுடைத்தா யிருக்கப்படா நின்ற பழிக்கப்பட்ட தேகத்திலே நித்யனாயிருக்கின்ற ஒரான்மா உளன், இது பிரதிஞ்ஞை;

ஒழியா—அன்மையில் (எ-து) அதற்கேது வென்னெனில் தேகங் கெடாத சைதந்நிய மல்லாமையால், இஃது ஏது;

கடம்போல் (எ-து) என்போலவென்னில் கடம்போல,இது திட்டாந்தம்;

ஆகலின் (எ-து) ஆதலாற் கடமுமொருவன் கொடுபோகிற்போம் அல்லாவிடில் இருக்கும் அதுபோலத் தேகமும் தானே போக்குவரவு பண்ணமாட்டா தாதலின், இது உபநயம்;

எய்யா—என்ப (எ-து) ஒழியாதே இத்தேகத்தைப் போக்குவரவு பண்ணுகிறான் யாவனொருவன் அவனழிவில்லாத தேகியென்று கொள்க, இது நிகமனம்; இவ்வைந்நும் அந்நுவய வியதிரேகி யநுமானமாம்;

ஒற்கம்—வகையே (எ-து) ஒதுக்கமில்லாத சைதன்னியமாவது அறிவென்றும் இந்த அறிவில்லாதது அசேதனமென்றும் முத்திக்கு வழியறியு ஞானவான்கள் ஆன்மதரிசனம் பண்ணுமியல்பு (எ-று). 3

* பொன்னினு மணியினுங் குயிற்றி மின்னுகு
மங்கத மகுடங் கடிப்பிணை யென்ற
பாரமென் றறியா தாரமென் றணியு
மம்மர் மாந்தரின் மயங்கா தம்ம
பூட்சிய தலைநீ கேட்டி மோட்ட
தபனற் றந்த குவைநெற் கொண்ட
முல்லை முகையன மெல்லென் மூர
லங்கை தாங்கா தாற்றுபு மிசைவுழி
யங்கத் தியாவு மழியா திங்குயிர்
விட்ட தென்று சட்டகம் புகழாக்
கட்டி லேற்றிக் கைதொழூஉப் பரவி

யிட்டிடை மகளி ரொருக்கச் சட்டென
வழல்வாய்ப் பல்பிணை மருந்தி மத்து
முருட்டணைப் பாயலிற் குரூஉப்புகை மிளிரப்
பாவகற் றழீஇக் கொண்மே மேவள
மிந்தனத் தியற்கை யாக்கை யென்றினி
விழித்தனை காணிஃ தொழிப்பரும் பெரும்பொறை
யெரிவிருந் தாய வீங்கு நீண்ட
வரிதரு கண்ணியர் மதனனென் றுங்கும்
வேற்றுமை யுளதேற் சாற்றுக மாற்றிரி
யாடிப் பாவையோ டலர்கிழற் பாவை
கைகான் மெய்பிறி தெவையும் பைப்பயத்
தூக்கிற் றூங்கி மேக்குயர் புயர்தல்
பொறியொடு சிவண லென்ன
வறிவொடு செறியு நெறிவரு முடலே.

(இ-ள்.) பொன்னினும்—கேட்டி (எ-து) பொன்னினாலும் நவரத்தி னங்களினாலுஞ் செய்யப்பட்டு மின்னைக்கெடுக்கும் ஒளியையுடைய வாகு வலய முதலாகவுள்ள கையணிகலமும் முடிமுதலாகவுள்ள தலையணிகல மும் மகரக்குழை முதலாகவுள்ள காதணிகலமும் இத்தன்மைத்தாகிய அணி கலங்களைச் சுமையென்று புத்திபண்ணாதே ஆபரணமென்றணிந்து மயக்க முறு மூலகரைப்போலப் பித்தேறாதே நிச்சயமாக உடம்பு நீயல்லையான படி கேட்பாயாக,

மோட்ட—மிசைவுழி(எ-து)திரட்சியாகிய நெல்லினுண்டாகிய மிக்க நெருப்பாலாக்கப்பட்ட முல்லைமொட்டுப்போன்ற மெல்லிய சோறும் அழ கிய கைக்குப் பொறாதே யாற்றியுண்ணும் பக்குவத்திலே,

அங்கத்து—விழித்தனைகாண் (எ-து) அவயவங்களில் ஒன்றுங் குறை பாடின்றி யிருக்கவே இப்பொழுது உயிர் போயிற்றென்று சவத்தைப் புகழ்ச்சியில்லாத பாடையிலிட்டு நுண்ணிய இடையையுடைய மாதர் மார் பினுந் தலையினு மறைந்து கொண்டு கையாலே தொழுது துதித்துக் கூப்பிட அதனை விரையக்கொண்டுபோய் நெருப்பை வாயாகக்கொண்டு பலபிணங்களையும் புசிக்கிற சுடலையிலே முருட்டு விறகுகளை யணையுஞ் சய னமுமாக வடுக்கி அதிற் கிடத்த ஒளியையும் புகையையுமுடைய அவ்வக் கினியுடனே பரிசித்துக்கொண்டு விகற்பமறவேகும் விறகின்றன்மை இந் தச் சரீரமென்று இனி ஞானதிட்டியை விழித்துப்பாராய்,

இஃது—சாற்றுக (எ-து) இந்த ஒழித்தற்கரிய சரீரமாகிய பெருஞ் சுமையை அக்கினிக்கு விருந்தாகிய இப்பொழுதும் காதளவுநீண்ட செவ் வரி கருவரிபரந்த கண்ணையுடைய மாதர்களெல்லாம் காமதேவனென்ற அப்பொழுதும் வேறுபாடுண்டாயிற் சொல்லுக,

மாற்றிரி—உடலே (எ - து) இனி உவமையில்லாத கண்ணாடியிற் றோன்றும் பாவையுடனே ஆதித்தகிரண முதலாயுள்ள ஒளியிற்றோன்றும் விரிந்த நிழற்பாவை கைகளையுங் கால்களையுஞ் சரீரத்தின் மற்றுள்ள அவயவங்களையும் மெத்தென மெத்தெனக் கீழே தாக்கிற் றாங்கலும் மேலே யெடுக்கி லுயர்தலும் போலவும் கயிற்றுப் பொறியில் இயக்குவான் செயலிலே யந்திரம் வருமாறுபோலவும் ஆன்மாவாகிய அறிவன்செயலாயிருக்கும் கன்மம் புசித்தற்கு நெறியாகிய சரீரமும் (எ-று). 4

* தமனியந் தரளந் தானை யானை
மருமம் பாணி வதன நோக்கம்
பதமுத றமவென விசைத்தோ ரயமற
வொருபுடை யன்மை நோக்கி யொருபுடை
தாமென மயங்கி யேமுற் றோர்மற்
றறுசுவை யமைந்த வைவகை யுண்டி
மூவகை முற்றி யதனி னிருவகை
தாவா வுறுப்பிற் றங்கி மேவா
விழித்தகு மலமா வொழித்தன ரொன்றன்
றிம்மல நீமற் றம்மல நீயே
லாக மாதி மற்றன்று போக
வறிவோர்க் கறிவ வன்னிய மென்ப
தறிவோ யறிதி யங்கம் பிறிதுமற்
றிருகா லாழி கொளுமிடை வீணை
தண்டென் னாரின் விண்டு வன்ன
மருமத் தட்டின் மயிர்த்தோற் கிடுகிற்
சேகரக் கூவிரத் திகிரி யூர்வோன்
கொய்யுளை கொடிஞ்சி குஞ்சர
மையுக வூருநர் செய்தியின் மதியே.

(இ-ள்.) தமனியம்—ஏமுற்றோர் (எ-து) பொன்னும் முத்தும் படையும் யானையும் முதலாகவுள்ள நாலுவிதபதார்த்தங்களும் மார்புங் கையும் முகமுங் கண்ணுங் காலு முதலாக வுள்ளனவும் ஆகிய இரண்டுவர்க்கமுந் தம்முடையவென்று சொல்லினோர் ஐயமறப் பொன் முதலாகவுள்ள ஒரு பக்கத்தைத் தம்முடையனவென்று பார்த்தும் மார்புமுதலாகவுள்ள ஒரு பக்கத்தைத் தாமென்றும் மயங்கிப் பித்தேறினோர்,

மற்று—ஆதி (எ-து) கைத்தல் கார்த்தல் புளித்தல் உவர்த்தல் துவர்த்தல் தித்தித்தல் என்று சொல்லப்பட்ட அறுவகை யிரதமும் அமைந்த கடித்துப் பருகி விழுங்கி நக்கிச் சுவைத்துக்கொள்வதாய ஐவகை யுணவாகப் புசித்தவிவை மூன்றுகூறாகி இவையிற்றிற் சாரமான இருகூறும் ஒழி

யாதே சரீரத்திலிருந்து வர்த்திக்க ஒருகூறும் நோக்கவொண்ணாததாய்ப் பழிக்கத்தக்க மலமாகக் கழித்தோர் ஆதலால் இந்தக்கழித்தமலம் நீயல்லாமை யறிந்தாயே இந்த ஒரு கூறுயமலம் நீயாகில் இறு கூறுகிய சரீர மலமும் நிச்சயமாக நீயாகிறுய்,

மற்றன்றுபோக (எ-து) அல்லக்காண் போகடு,

அறிவோர்க்கு—அறிது (எ-து) அறியக்கடவோர்க்கு அறியப்படும் பொருள்கள் அந்நியமென்னுமிது புத்திமானே நீயறிவை கண்டாயே,

அங்கம் பிறிது (எ-து) ஆதலால் நீ யறியப்பட்ட தேகமும் அந்நியமாம்,

மற்றிருகால்—மதியே (எ-து) மற்றுஞ் சரீரமிருக்கும்படி இரண்டு காலாகிய வுருளையும் பூழுவெலும்பு இடையே செறிந்த வீணுதண்டென்னும் அச்சுமரத்தையும் மலைபோன்ற மார்பென்னுந் தட்டையும் மயிரையுடைத்தாகிய தோலென்னுங் கிடுகையும் சிரமென்னுந் தலையலங்காரத்தையும் உடைத்தாயிருக்கின்ற சரீரமென்னுந் தேரையூர்வோனுகிய ஆன்மாவானவன் குதிரை தேர் யானை யென்று சொல்லப்பட்டவற்றைக் குற்றமறச் செலுத்துவோர் தன்மையனென்று மதித்துக்கொள்வாயாக (எ-று). 5

* எற்புக் குப்பையைப் புட்குலத் துணவை
நரப்புக் கருவியைத் திரைப்பெருஞ் சேக்கையைப்
புன்புல வாரியைத் துன்புக் குறையுளை
யிருட் போர்வையை வேரின் விளைவைத்
தசைப்பெருந் திரளையை நசைக்கின் செவிலியை
மூளைச் சேற்றை முழுமலக் குழுவை
ஞாளிக் கிரையைப் பூளைப் பொதியை
வெண்ணிணப் பெருமையைப் புண்ணின் பொற்பைக்
கொடுமைக் கோதையை யடுசினத் தமலையை
மாசின் றேசை வழும்பின் வைப்பைத்
தோலின் வேலியைத் துகளின் றுப்பை
யெரிப்பெருங் கொள்ளையை நரிக்கா ரயினியைப்
பெருநோ யறையைக் கருநரைக் கமத்தைக்
குறும்பிக் கொண்டலை யிறும்பற் குறைவைப்
புழுப்பா சறையை யழுக்கார் திருவைப்
பஞ்ச விந்தியப் பாகர்க் காகா
வஞ்சா மதகரி யடவியை வஞ்ச
வரவா ரளையை நரைவா யருவியை
வாத வழுவைத் தீதுக வணைத்த
வெளிலைப் பித்தின் விளிவருங் குறும்பைக்

குறைவிரி யிருமற் றிரைவிரி புரையைக்
காமச் சுமையைக் கவலைக் கெல்லையை
நாமத் தரணைத் தீமைத் திறலை
யழுக் காறணையும் விழுப்பெருந் தெருவை
யேமாப் பிரலை விலங்கலைத் தீமை
யிருஞ்சுறவு கலித்த திருந்திரும் பௌவத்தை
மறத்தின் மன்னை வழுக்கின் புக்கிலை
யிறப்பின் கேதன மிதனை மறப்பிற்
கொண்டனை யானெனக் கொளலொழித் தொண்டிறன்
மாயா வினையு தாய தேயாத்
தனுகரண புவன போக
மெனும்வகை யறிநனி துனியினி துகவே.

(இ-ள்) எற்புக்குப்பையை—இறப்பின்கேதனமிதனை (எ-து) எலும்புக் கூட்டத்தை, பறவை வர்க்கத்துப் போசனத்தை, நரம்பென்னுங் கருவியாலே கட்டப்பட்டவதனை, திரைதலுக்குப் பெரிய சயனத்தை, புல்லிதாகிய புலாற்கடலை, துக்கத்திற்குக் குடியிருப்பை, ஈரலை உள்ளே பொதிந்த போர்வையை, வேர்வைக்கு விளைநிலத்தை, மாங்கிசக் கூட்டத்தை, ஆசையையினிதாக வளர்க்குஞ் செவிலித்தாயை, மூளைக் குழம்பை, சருவமலங்களின்குழாத்தை,நாய்க்குணவை,பூளைப் பஞ்சுபோல நிலையில்லாதவற்றாலே கட்டிய பொதியை,வெள்ளை நிணத்தின் மிருதியை,புண்ணின் மிருதியை,கொடுமைகளாலே தொடுத்த மாலையை,கொல்லுகிற சினத்தின் செறிவை,இராகத்துவேஷங்களை வெளிப்படுத்தும் ஒளியானவதனை, வழும்புக்கூரை, தோலை வேலியாகவுடையவதனை, குற்றத்திற்கு வலியானதனை, அக்கினியாலே மிகவுங் கொள்ளை கொள்ளப்படுவதனை, நரிகள் திருத்திவரப் புசிக்குமுணவை,பிறப்பிற்குக் காரணமாயிருப்பதோராறையை,பெரிய நரையாகிய மேகத்தை, குறும்பியாகச் சொரியும் வருடத்தை, உதிரக்கடவபற்களுக் கிருப்பிடத்தை,கிருமிகள் புகவிட்டிருக்கும் படைவீட்டை, பொல்லாங்காலே யமைத்த செல்வத்தை, அந்தக்கரணமென்னும் பாகரால் வணக்குதற்கரிய பஞ்சேந்திரியமாகிய அச்சமில்லாத மதயானை யுறையுமடவியை, வஞ்சகமாகிய சர்ப்பமுறையும் பொந்தை, நுரையென்பது ஒன்பது வாயிலாலே அருவிபோலச் சொரிகின்றவதனை, வாதமாகிய யானையைக் குற்றமறக்கட்டிய கம்பத்தை, பித்தமிருக்குங் கெடுதற்கரிய அரணிருக்கையை,ஓசைமிக்கிருக்கின்ற சிலேட்டுமக் கடலுக்கு மிகுந்த இடமாகியவிதனை, தூர்த்த குணத்தாலே பிறர்பலர் அலர் தூற்றப்படுவதனை, தூக்கத்திற் களவாயவதனை, அச்சத்திற் கிருப்பிடத்தை, தீமைக்கு வலிபெற்றவதனை, பிறர் செல்வ முதலியவற்றூற் பொறுமை சேருந் துன்பத்தையுடைய பெரிய வீதியை, இறுமாப்பாகிய மான்வாழு மலையை, மனத்தோடமாகிய பெரிய சுறவு சத்திக்கப்பட்ட திருந்திய பெரிய சமுத்

திரத்தை, மறத்திற்கு நிலையானவதனை, அவஞாயம் புகுந்திருக்குஞ் சுதே சத்தை, சாகைக்குக் கொடிகட்டி யிருக்கின்றதாகிய இத்தனை குற்ற முடையவதனை,

மறப்பில்—யானென (எ-து) அஞ்ஞானத்தாலே நானென்றுகொண்டாய்,

கொளலொழித்து (எ-து) ஞானத்தாலே நானல்லவென்று கொண்டு,

ஒண்டிறல்—இனிதுகவே (எ-து) அழகிய வலியையுடைய மாயா காரியமான ஒழியாத தனுகரணபுவனபோகமென்னும் வகைகளில் ஒன்றாகிய தனுவின்வேறுபாட்டை அறிவாய் உன்னை மிகவுங்கூடிய தோடமானது இனிதாகக் கெட்டற (எ-று). 6

வாசுதேவசதகம்.

* தேயுமுட லுட்போலப் புறம்பு மாகிற் றெண்டுகொண்டு நாய்காகங் கடிய வேண்டு, நீயுமெனை தென்றிருத்தி சிலநா ளித்தை நெற்றியினி லடியிட்டுத் தின்று நின்ற, நாயுமெனை தென்றயலோர் நாயைக் காயு நடுவுரைத்தே ஞதலா னம்பி யிந்த, மாயுமுட லிதனைநா னென்று கொண்டு மதிக்கைபிழை மதியுடையை யாத லாலே. 7

போதரத்நுகரம்.

* என்றபி னயன மோரா னன்றுகா ணெவ்வி டத்து
நின்றுரு விளக்குந் தீபம் † போலநன் னயன மைந்தா
வன்றியு நின்ற நான்கு மறிவிலிற் றியங்க ளுந்தா
மொன்றுமுன் னுருவ மாகா துணர்ந்திட விழிபோ லன்றே. 8

† போலுநின் றுணரு என்றும் பாடமுண்டு.

* ஆயுநன் மனமே யாத லறிந்திடும் புத்தி யாத
லேயுமுன் னுருவோ வல்ல விவையுனுற் காண்ட லானு
மோயுமுட் கரண மாக வுரைத்திடப் படுத லானு
மாயுமற் றவையுந் தீபம் போலெனை மதித்தி டாயே. 9

* ஒடுங்கலும் விரிவு மின்றி யுடலினுக் குறுதி யாய
திடம்படு பிராண னோநா † னுவது செப்ப தன்று
மடம்படு பிராண வாயு வுயிர்ப்புயி ராகு மாறெ
னடங்கிய சுழுத்தி தன்னி னறிவில தன்றி யுங்கேள். 10

† னுமுயிர் என்றும் பாடமுண்டு.

போதாமிர்தம்.

* மேவ மைச்சர்க ளுடனிலா வியவுயர் வேந்தனைத் தெரியானே, தாவு யிர்ப்புயிர் சாக்கிர கனவினிற் சரித்தலாற் றகவோது, மோவின் மற்றுணர் வாரதென் றுணர்ந்திட வுனக்கொணு தொழிந்தாலும், பாவு யிர்ப்புணர் விலாமைநற் சுழுத்தியிற் பாருயிர்ப் புயிரன்றே. 11

ஞானசிகாமணி.

உறுதி யாமுயிர்ப் புணர்வின்மை கரண மொன்று மங்கிலா தொடுங்கலா லுயிர்ப்பே, யறுதி யாமுயிர்ப் பொருளெனி னதுதா னங்கு லாவிட வவையடங் கிடுமோ, செறிவ தாநகர் வலஞ்செய் போ தரசன் சேனை நீங்கிடா தெனிற்கர ணங்கட்,கிறைய தாமியல் பிராணனுக் கிசையா விதுவு மங்குயிர்க் கரணமென் றறியே. 12

---

குறுந்திரட்டு.

எனதாடை பொன்பூ மகன்றையல் பாய்மா
விபங்கண் முகங்கால்கை மெய்யென்ன வென்றுந்
தனதா யுரைப்பான் வருத்திந்த வூனைத்
தானென் றயர்த்துஞ் சொலத்தக்க தன்றே. 386

கடக்குஞ் சரம்பண்ணி யுண்ணின் றொருத்தன்
கைபாத கன்னங்கண் மெய்போ லியக்குங்
கிடக்குந் நடத்தா விடத்திவ் வுடம்புங்
கிடக்கும் மொருத்த னடத்தா விடத்தே. 387

நிலமாகும் வர்க்கென்ற னெகிழ்கின்ற நீரா
நெருப்பா மிதிற்சுட்ட வெல்லாமு மனிலஞ்
சலமான புரையான வானிந்த வுடலஞ்
சடமான வைம்பூத வுருவங்க டாமே. 388

ஒருகூறு மலமாகு மொருகூ றுடம்பா
மொருகூறு மனமாகு முண்டற்ற வன்ன
மிருகூறு நீயாகி லொருகூறு நீயா
மிழிக்கும் மலஞ்சோ ரிடப்பட்ட துடலே. 389

அழலுண்பொருள் களிலுண்பவை முக்கூறதின் முதற்கூ
றணியென்பு நடுக்கூறது மச்சைக்கணி யாகு
மெழில்கொண்ட கடைக்கூறது வாக்காயெழு மென்றே
யியலுன்மறை யந்தங்க ளிசைக்கின்றன தாமே. 390

உண்ணும்புனன் முக்கூறதின் முதற்கூறுவர்நீரா
முதிரந்நடு விற்கூறு கடைக்கூறு பிராண
னெண்ணுமிதி லிருகூறவை நீயாயிடி னன்றோ
விறுகின்ற பிராணன்னது நீயாகுவை யிசையே. 391

* உயிர்ப்புயிர்க் கரண மாயிடி னவைபோ லுயிர்ப்பொடுங் காததென் வினையா,லயிற்பின்முற் பயனைக் கனாநன வயின்றங் கவற்றுள வருத்தமா றிடுதற், குயிர்ப்பது முயிர்ப்பக் காரணமு மொடுங்க வுயிர்சுழுத் தியினுறங் கிடுமா, லுயிர்ப்பது சடமா முணர்வுநல் லுயிரா முனக்குரு வன்றெனக் கருதே. 13

* ஒடுங்கிடக் கரண மொடுங்கிடும் பொழுதி னுயிர்ப்பினை நிறுத்தவேண் டியதென், றொடர்ந்தமுற் கருமப் பயனுகர் வளவுந் தொக்குடற் காவலா நிறுத்தி, யுடம்பினைப் பரித்த வருத்தமா றிடுதற் குயிருறங் கிடுமுறக் கத்தி, லிடம்பட வுயிர்ப்பு மிகுவதெ னேக †நாடியங் கியங்கலாற் காணே. 14

† நாடியா லியங்கலாற் என்றும் பாடமுண்டு.

ஞானதிலகம்.

* கண்டிடு மபிமா ஞன்மக மாய கரணமாங் காரமற் றதனு, லெண்டரு மனமும் புத்தியும் போல விதுவுன துருவமன் றிதனு, லுண்டுமற் றெல்லாத் துயருமுற் பவத்துக் குற்றகா ரணமுமா மென்றே, மண்டுமற் றிதனின் வகையினை மதிஞர் மதித்தவா றின்னமுங் கேளாய். 15

மெய்ம்மொழி.

* உயர்ந்துளே னுலகி ஞனென் றெப்பெனக் காரோ வென்றும்
பயந்துநோக் ககங்கா ரம்போற் பாசமற் றொன்று மில்லை
யியம்பிய வகங்கா ரந்தா னென்றுண்டவ் வளவுஞ் செல்லச்
சயம்புமெய்ஞ் ஞானஞ் சாரா வென்றுகொள் சாற்றி னன்றே.

போதரத்னகரம்.

* சாற்றிய தன்மை யெல்லாங் கூடிய சங்கா தந்தா
னேற்றுயி ராமோ வென்னி னிதமெனச் சங்கா தத்தை
வேற்றுமை யாங்க டம்போற் கண்டுவே றுகி நின்று
போற்றலா லுயிர்வே றென்றே பொருந்திடு போத மிக்கோய்.

சதகம்.

* காணலாந் திரளி தெல்லாங் கடம்போ லும் பிறிதொன் றில்லைக்
காணலாங் கடம்போ லாமா றெங்ஙனே கலந்து நிற்பப்
பூணலாங் கலன்க ளாடை பூமாலை சாந்தம் போலக்
காணலா நின்னின் வேறாக் கனைந்திவை காட்ட லார்காண். 18

பரமார்த்ததரிசனம்.

* அன்னவகை யாலுருவ ழிந்துவரு மாங்கே
யென்னுருவ மாமறி விறந்துபிற வாதாற்
பின்னதறி வானுட லழிந்துபிறி போதுந்
தன்னதென வேதுமொர் சலிப்பதறி யானல், 19

* இல்லாமையி னியல்கேளெழு கழுதாழியி னிடையே
யல்லாதெழு புனல்போலறி யுறவேயழி குவதா
யெல்லாவகை யினுமாய்வதிவ் வுருவேயுணர் வதுதான்
கொல்லாதழி கொலையானது குறுகாதத னெறிகேள். 20

## சொரூபானந்தசித்தி.

* உடம்போ தானன் றுடம்பிதென வுணரப் படுத லாலுடம்பிற், றிடஞ்சேர் பிராணு தியுமன்று செடமாய்க் காணுஞ் செய்தியினுற், கடம்போ லியாவ னிவையனைத்துங் காண்பா னவனே கத்தாவாய், நடஞ்சே ருடம்பி னுண்ணின்று நடத்து கின்ற நானுவான். 21

* வினவுற்ற கேள்விக்குக் கேட்பா ளுகி மேவியகாட் சியின்விழித்துக் காண்பா ளுகி, மனனத்தின் மந்தாவாய் ஞானந் தன்னின் மதித்திடுஞா தாவாகி மன்னு கின்றான், ஏசானவத்தற் பரனுகு மவனின் வேறுந் தோற்றமெலா மெய்யாகுந் தோற்ற மன்று, நினையிற்றற் பரனேயிங் கெல்லா மென்று நினைவதுவே நினைவான நினைவு நேரே. 22

## பரமார்த்ததரிசனம்.

ஆற்று மிவ்வுடம் பிற்பர மைம்புலன்
மாற்று மைம்புவ னிற்பர மாமனம்
போற்றும் புத்தி யதிற்பரம் புத்தியிற்
றேற்று கின்றது காண்பது தொல்பரம். 23

## சொரூபானந்தசித்தி.

* இந்தி யங்களிற் பொருள்களே பரமன மிவற்றினும் பரமித்திற், புந்தி நற்பர மிதினுமான் பரமெலாம் பொன்றிய தெரியாமை, யந்த மானினும் பரமமவ் வியத்தமா மதிற்பரம் புருடன்று, னிந்த மெய்ப்பரம் புருடனிற் பரம்பிறி தில்லையே யிவனேயாம். 24

* போன்றவுட லைத்துணிசெய் போதுமிறை பொன்றான்
கொன்றிடுத லுங்கொலையு முந்தொழிலு மில்லான்
நின்றுபெரு மைச்சிறுமை யிற்பெருகி நுட்பா
யென்றுமித யக்குகையி லேயிலகு கின்றான். 25

பாமார்த்ததரிசனம்.

உருப்பான்மை மற்றதனுக் கொருநாளு மின்மையாற்
செருப்பால்வெம் படைக்கலங்கள் சேதிக்க மாட்டாவா
நெருப்பால்வெந் தழியாது நீராலனைக் கொழுகாது
மருத்தாலுஞ் சலியாது மற்றதன்றன் வகைகேளாய். 26

எல்லாப் பொருட்கும் பழையதனை யெங்குந் தானு யிருப்பதனை
நில்லாத் தன்மை யில்லதனை நித்தியத் துவத்தை நிலைபேற்றை
யல்லாப் புலன்கள் பதினுன்கு மறியா வறிவை யறியாதே
யில்லாப் பொருள்போ லழியுமென விரங்கு கின்ற தென்கொண்
[டோ. 27

உண்பன யாவையு முண்கின் றுனுமெய்க்
கண்கொடெப் பொருளையுங் காண்கின் றுனுமென்
னண்பவெப் பொருட்குமொத் திருக்கு நாதனு
மெண்செய்திவ் வுடம்பிலே நின்ற வீசனே. 28

சொரூபானந்தசித்தி.

* அந்தப் பரமே யெப்பொருட்கு மாலம் பனமா வதுவத
னைச், சிந்தைக் கேறத் தெளிவுற்முன் செனியான் மரியா ளொரு
திசையில்,வந்துற் றிலனோர் வடிவுமில னதனல் வரவு போக்காகு,
மிந்தத் தொழில்க ளொன்றுமில னெங்குந் தானு யிருக்கின்றுன்.

* நின்றுமுட ரேறுமுட லின்றிநிகழ் வானுய்ப்
பொன்றுமத னேடுமொரு பொன்றுதனு முருனு
யென்றுநிலை யாயுலக மெங்குமொரு தானு
மொன்றையறி வானிடர்க ளொன்றிலுமு லானுல். 30

பாமார்த்ததரிசனம்.

இப்படி யுயிரையு மியாக்கை தன்னையு
மெய்ப்பட வறிந்தவன் வேட்ட வேறுகர்ந்
தொப்புர வன்றியே யொழுகி வாழினும்
பொய்ப்படு பிறவியின் மறித்தும் போகலான். 31

ஊனுயிர்வேறுபாடு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1793.

கலைக்கட்டளை முற்றிற்று.

# அநுபவக்கட்டளை.

## 17. உபதேசப்பவணை.

### 1. உயிருண்மைதரிசனம்.

வினாவிளக்கம்.

* அழியுமூ னதனை யென்வடி வெனவு மைம்பெரும் பூதமா முலகைக், கழிவிலா வுண்மைப் பொருளதே யெனவுங் கண்டு கண் ணிழந்துழல் வேனுக்,கழிவிலா வுண்மைப் பொருளுயி ரொழிந்த தருஞ்சட மென்னவே பகுத்து, மொழிதருங் கருணை மேகமே புலையேன் மொழியும்விண் ணப்பமுங் கேளே. 1

அநுபூதிவிளக்கம்.

* ஊனின்வே றாகி நின்றே யுயிரெனப் படுவ தாகித்
தானலா தேது மில்லாத் தன்மையா மறிவு தன்னை
யானெனு லுறவே காண வனுபவத் தென்னைக் காட்டி
யூனிலா வின்ப முத்தி யுத்தமா தந்தி டாயே. 2

* நனவொடு கனவுநற் சுழுத்தி யென்றுள
வினவலி லவத்தைமூன் றினையு மெய்ம்மையே
நனவினி னன்குணர்ந் தவைக ழிந்திட
வுனவரு முணர்வுமங் குணர லாகுமால். 3

* நனவது செலவொடு கலவி நன்கழிப்
பெனவொரு மூவித மிதனிற் செல்லறுன்
பனவிது விதுவெனய் பார்த்த லாங்கலப்
பனவது வதுவென வாகித் தோன்றலே. 4

* தினையென வுணர்ந்ததிற் கலந்த போதுமற்
றெனவொரு பிறழ்விலைச் செல்ல லெங்ஙனே
சொனவொரு பொருளதுற் றுணர்கண் மற்றதிற்
பினையெழு கண்டக்கணேக் கதனிற் போதல்போல். 5

* இதுவிது வென்ப்பாரந் தெழுந்து செல்லலா
லதுவதா யலதழி வழிவ தாகுமா
லிதுநன விதுவற விவண மீண்டிருந்
தெதுவுனக் கிருந்தவா றியம்பு மைந்தநீ. 6

* பொறிபுலன் விடயமா னனவு போயிட
நெறியுற மீண்டிருந் திடத்து நின்மலா
பொறிபுலன் விடயமங் கொழிந்து புந்திதா
னெறியுறு பந்தனை யாகி நீடுமால். 7

* பொறிபுலன் † விடயமாய்ப் புரிந்த புந்திதா
னறிவுற விடயமற் றிடத்தும் வாதனை
நெறியுறு விகற்பமாய் நிகழும் பந்தனை
கறையுறு கனவெனக் கண்டு கொள்கநீ. 8

† விடயமாய் விரிந்த என்றும் பாடமுண்டு.

* மனனதின் விகாரமாய் மன்னு பந்தனை
† தனையுறும் வணமிருந் திருந்தவா சொலாய்
நினைவது மிறந்துபி னிகழ்வ தொன்றுமற்
றினனிலா வின்மையா யிருந்த தெந்தையே. 9

† சொனவண என்றும் பாடமுண்டு.

* விடயமா னனவதும் விடய வாதனை
யுடையதாங் கனவது மொன்று மின்றியே
செடிவிலா விருளெனத் தெரிவ தொன்றுமற்
றடைவிலா வின்மையா யிருந்த தண்ணலே. 10

* கனநன விரண்டிலாக் கருத பாவமாஞ்
சொனதெரி யாமைநற் சுழுத்தி யென்றுணர்
மனமுதன் மற்றதின் விரிந்த டங்கலா
வினனிலா மாயையென் றிடவும் பட்டதால். 11

* கனநன விரண்டினிற் கருது பல்லுயிர்
வினவரு பேதம்வெவ் வேற தாயிடுஞ்
சொனவருஞ் சுழுத்திவந் தொருமைத் தாலிது
பனுமுதற் பகுதியாம் பவநற் பீசமே. 12

போதரத்னுகாம்.

* எந்தையே யிந்த மூலப் பகுதிபோ யென்னைக் காணத்
தந்திடா யமரர் காணுத் தாளிணை தந்த கோவே
யந்தனே னறிவொன் றில்லே னுதனேன் றனையு மாள
வந்தவொண் கருணை வெள்ள வள்ளலே மதுர வாரி. 13

* ஏதுமங் கிலாமை யாகி யிருளதாய்த் தெரியா தென்னு
மீதுணர் பொருளே துண்டோ வில்லையோ † விவண நீபார்
னாதனே யபாவ மூலப் பகுதியின் றுணரும் போத
மேதம தறவே யுண்டுண் டென்னையா ளுடைய கோவே. 14

† விசைய என்றும் பாடமுண்டு.

* சாற்றிய வபாவ மூலப் பகுதியின் றுணரும் போத
மாற்றவங் குளதேன் மூலப் பகுதிவிட் டதனை நீபா
ரேற்றிய போத மேயா யிறைவனே யீரொன் றின்றித்
தோற்றியே யறிவாய் நின்று துளக்கற விளங்கு மன்றே. 15

* இலங்கிய வறிவே யாகி யிருந்ததே னீமுன் கண்டு
மலங்கிய மயலா மூலப் பகுதியை † மதித்து நீபா
ரிலங்கிய வறிவாய்ப் பார்த்த விடமெலா மிருத்த லன்றிக்
கலங்கிய பகுதி காணேன் கரந்தவா றறிகி லேனே. 16

† மறித்து என்றும் பாடமுண்டு.

* ஏற்றிய தீபத் திட்டங் கிருளினைத் தேட லுற்றாற்
றோற்றரு மொளியா யெங்குந் துகளிரு டோன்றா தாற்போ
லாற்றிய வறிவா யெங்கு மறியாமை தோன்றா வண்ண
மாற்றிய விந்த விச்சை வளமிது விருந்த வாறென். 17

* மையலோ ரிடத்து மின்றி மன்னியே நிகழும் போத
மையவிவ் வுடம்பின் மட்டோ வல்லவோ வதனை நீபார்
பொய்யதா முடலிற் றூக்கொன் றின்றியே புறம்பு முள்ளு
மையம தறவே யெங்கு மாகியே நின்ற தெந்தாய். 18

* பின்பொடு முன்பு பக்கம் பெருகிய நடுவு கீழ்மே
லென்பன வறிவுக் குண்டோ வில்லையோ விசைய நீபா
ரின்பம துருவா யெங்கு முகமதா யொழிவற் றோங்கு
நன்குறு மறிவிற் காணே னவில்வுறு மவைமற் றெந்தாய். 19

* ஆதலா லெவையுந் தானே யறிந்தெங்கு மாகி யுள்ளா
யோதிய வெவையுந் தோற்றி யொழிவதுந் தன்னி னாகி
நீதியா லெவற்றிற் குந்தா னீசனாய் நிகழும் போத
மேதம தறவெ னக்கு வடிவதா யிருந்த தெந்தாய். 20

மெய்ம்மொழி.

* பண்டுநா னெனதென் றெண்ணப் பண்ணிய மாயாக் கூட்டங்
கண்டிலே னென்னே யுன்றன் கண்வலி யிருந்த வாறெ
னண்டனே யண்டர் கோவே யளவில்பே ரறிவு தானே
யெண்டிசை கீழு மேலு மெங்கணு நிறைந்த தன்றே. 21

* பகைத்தெனை மிகையே பன்னாட் பண்ணிய தொண்ணூற் றாறுந்
†திகைத்தன மாயை யார்செய் திறியுந்தெண் பட்ட தன்றே
நகைத்துநீ பார்த்த போதே நாதனே துன்ப நீங்கி
வகைப்பில்பே ரின்ப ஞானேன் மற்றுநா னுரைப்ப தென்னே. 22

† திகைத்தெனை என்றும் பாடமுண்டு.

* முப்பொறி பகைக ளாறு முக்குணங் குற்ற மற்று
மெய்ப்பொறி புலன்க ளெல்லா மிரிந்தன வென்னை விட்டே
கப்புறு கருத்துந் தீர்ந்தேன் கல்வியு மமைந்த தின்றே
யொப்பறும் வகையி னின்பத் துணர்வைநான் கண்ட போதே.23

* விரையுமா பூதம் விட்டு வேட்கைநோய் வெகுளி யும்போய்த்
திரையிலா நீர்போ லென்றன் சித்தசஞ் சலமுந் தீர்ந்தேன்
கரையிலாக் கருணை வெள்ளக் கடைக்கணீ வைத்த போதே
யுரையிலா வுணர்வ தானே னுரைப்பதெ னினிமற் றெந்தாய்.

* பொறிபுலன் கரணம் பூதம் புணர்ச்சிசெய் தளவில் காலம்
பிறியுமா வுருத்த மாயப் பேதைமை யெல்லாந் தீர்த்துச்
செறியுமா றரிய வின்பச் சீவனன் முத்தி தந்தா
யறிவுமா யெவையு மாய்நின் றறிவுறு மண்ண லேநீ. 25

* ஆதனுய்க் காணு துன்னை யளவிலாக் கால மெல்லாம்
பேதனுய்ப் பிறந்து வந்த பேதைமை யென்னே யென்னே
நாதனே ஞான மூர்த்தி நாதாந்தத் தலைவா வின்றுன்
பாதமா மறிவின் றன்மை பகருமா றறிகி லேனே. 26

* வஞ்சகம் பண்ணி மாயை வருத்தபஃ றுன்பந் தீயிற்
பஞ்சிழை யென்னப் பொன்றிப் பாறின பவங்க டாமு
நெஞ்சக நிறையத் தந்தாய் நிகரில்போ தானந் தத்தை
யுஞ்சன னடியே னுஞ்சே னுன்னருள் பெற்றின் றன்றே. 27

போதரத்னகரம்.

* அறிவது வடிவ தாகி யகமொடு புறமுந் தானு
யுறுமுடல் கரண †மாகி யுலகினுக் கொழிவில் சான்று
யிறைவனே யிருந்த தென்ன விறைவனு மவனே நோக்கி
யறைவுறு துரிய மென்ப திதுவென ‡ வறிந்து கொண்ணீ. 28

† மாதி என்றும், ‡ வருளிச் செய்தான் என்றும் பாடமுண்டு.

உயிருண்மைதரிசனம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1821.

## 2. துரியமான்மியம்.

### மூலசித்தி.

* தோற்றிநின் றணரா நின்ற துரியநல் லுணர்வாஞ் சோதி
மேற்றிகழ் பொருளொன் றில்லா மெய்ம்மையாம் வேத னத்தி
னேற்றிய பெருமை தன்னை யியம்பொணா தறிஞ ரெல்லாஞ்
சாற்றிய வகையே நானுந் தகுதா வறைகு வன்கேள். 1

### சொரூபானந்தசித்தி.

* சத்தப் பரிச வுருவிரதங் கந்தா திசைமந் தனமுதலா
வெத்தைக் கொண்டிங் கறிகின்றா னிதனை யொழிய வேதுளதா
மத்தற் பரத்தைக் கண்டிருந்த வவத்தை மூன்றுங் காணுமை
சித்தித் திருக்கு மவனலமுந் தீங்கு மின்றித் திகழ்கின்றான். 2

* அரிய மாமறை வாக்கினா லுங்களுக்†கடையவு மறைந்தே
னுன், றெரியு மாகின்மற் றவன்றெரி யாமையைக் கடந்துபோ
ய்ச் சிந்தைக்குப், பிரிய மாகிய பரப்பிர மத்தையே பெற்றுமேற்
பிறவாமைக், குரிய னுகுமென் றுரைத்தன னுணர்வினு லுலகெ
லாம் படைத்திட்டான். 3

† கறியவு என்றும் பாடமுண்டு.

* ஊனிலொரு பற்றுமுள னன்றியுட னிற்கு
நானெனவி ளம்புதனை நற்சிவம தாகத்
தானறியு மாகிலொரு வன்றனுரு வாகு
ஞானபரி பூரண நலந்தனை யடைந்தான். 4

### அநுபூதிவிளக்கம்.

* சாற்றிய பிறவித் துன்பந் தந்திடு மவத்தை மூன்று
மாற்றவங் கவைதா மாறி யழிந்திட வழிவொன் றின்றித்
தோற்றிய வவற்றின் சான்றாய்த் துளக்கறு துரிய போதம்
போற்றிமெய் கண்டோர் தங்கள் பெருமைநாம் புகல்வ தென்னே.

* அருந்துயர்க் கிடமா யந்த காரமே மூடி யொன்றுந்
தெரிந்திடற் கின்றி நின்றே திகழுமா யைக்கு மேலாய்
விரிந்தநற் போத மாகி விளங்கிடுந் துரிய மெய்யே
தெரிந்திடக் கண்ட போதே திகழுநன் முத்தி யன்றே. 6

போதார்த்ருகாம்.

* மனத்தினி னெடுக்கம்விரி வாய்வரு மவத்தை
யனைத்தையு மறிந்தறிவ தேவடிவு தானு
யினத்தையற நின்றதுரி யத்தினை யுணர்ந்தோ
ரனைத்தையு மறிந்தவர்க ளென்பதல துண்டோ. 7

* அவத்தையொரு மூன்றையு மறிந்தகரி யாயே
யிவத்தையு மொழித்தொளிரு மின்பவறி வாகித்
துவக்கற விளங்குதுரி யத்தினை யுணர்ந்தோர்
தவத்தலைவ ரென்றுமறை தானறையு மன்றே. 8

மெய்ம்மொழி.

* பொன்னைத்தான் கண்ட வன்போற் புழுதியை†யரித்தெங் கண்
மன்னித்தா னுடன்ம யக்கு மாயைதத் துவங்க ளாய்ந்தே [ணு
யுன்னத்தா னரிய ‡ விந்த வுருவசை தனமா யுள்ள
தன்னைத்தான் கண்ட வர்க்குத் தானென்றார் பிறப்புத் தானுர். 9

† யறிந்து என்றும், ‡ வின்ப என்றும் பாடமுண்டு.

திருமந்திரம்.

* அறிகின்றி லாதன வையைந்தே முன்னு
மறிகின்ற வென்னை யறியாதி ருந்தே
னறிகின்ற நீயென் றருள்செய்தா னந்தி
யறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. 10

* தன்னை யறியிற் றனக்கொரு கேடில்லைத்
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
றன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. 11

* என்னை யறிந்திலே னித்தனை காலமு
மென்னை யறிந்தபி னேது மறிந்திலே
னென்னை யறியு மறிவை யறிந்தபி
னென்னையிட் டென்னை யுசாவுகின் றேனே. 12

* எல்லா மறிவ தறிவு தனையிட்டே
யெல்லா மறிந்து மிலாபமங் கொன்றிலை
யெல்லா மறியு மறிவை யுணர்ந்திட
வெல்லா மறியு மிறையவ னாமே. 13

துரியமான்மியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1334.

# 3. துரியதூடணம்.

### வினாவிளக்கம்.

* உயிருயிர்த் தூய்மை தன்னை யுணர்ந்ததன் பெருமை யாலே
மயலறப் பரமி தென்றே வாழுமத் திடத்தைக் கண்டு
துயரிதற் குளது காணத் துரியதூ டணத்தை யெல்லாஞ்
செயிரறுத் துயரு மைந்தா செப்புவன் றிகழக் கேளாய். 1

### அநுபூதிவிளக்கம்.

* மூன்ற வத்தை கொள்பவன்றான் முழுதுணர்வங் கறியானா
லேன்ற வத்தை யுள்புக்கங் கிறந்துபிறந் தேயிடுமாற்
சான்ற வத்தைத் துரியமதுந் தற்பரமன் றாதலினா
லான்ற வத்தைப் பொருளெனினு மாகியிடும் பிறப்பிறப்பே.

* துரியமா முணர்வதுதான் றனையுணர்போ துணர்வேயாம்
விரியவே யுலகுணரின் வீடாத சான்றதுவாம்
புரியவே பரமதனிற் போயுணர்வுஞ் செறிதருமித்
துரியமே பெரியதுரி தங்களெலாந் தோற்றிடுமால். 3

### போதரத்னாகரம்.

* கரணங்க ளுடன்வந்து கரணியென நின்றமையாற்
கரணங்கள் கழிந்திடத்துங் கழியாது வாதனையா
லரணங்கொ ளறிவென்றன் வடிவென்றங் ககமிருதிப்
புரணங்கொ டுரியமது பொருளென்றல் புரையன்றே. 4

### நித்தியானந்ததரிசனம்.

* ஏதுக்கு முள்ளா மென்று மேதுமின் றறியு மென்று
மேதுக்கு மிறைய தாகி யெங்குமா யிருக்கு மென்று
மேதுக்குந் தோற்ற மற்ற விறுதிதன் கண்ண தென்று
மோதுற்ற விகிர்த பாவ முணர்வுறிற் றுரியத் துண்டோ. 5

* சுத்தமாஞ் சிவ னுண்மை துகண்மன முதலை விட்டு
நித்தமாய்ச் சான்றாம் போத மெனமறை நிகழ்த்த லானுங்
கத்திரு பாவ முற்றுங் கருத்தினிற் காண்ட லானு
மித்திறத் துரிசு நீங்கி யிருப்பது பரமென் றோராய். 6

### அநுபவதீபிகை.

* செப்பருஞ் சிவாக மத்துஞ் சிவனருள் செய்த நீதி
யொப்பரும் பசுவி னுண்மை வடிவமொண் டுரிய மென்று
மப்படி பசுவி னுண்மை யகமுறக் கண்டக் கானு
மெய்ப்படு சிவத்தோ டொன்று விடிற்பவ மேவு மன்றே. 7

திருமந்திரம்.

* காய்ந்த விரும்பு கனலை யகன்றாலும்
வாய்ந்த வனலெனும் வாதனை நின்றாற்போ
லேய்ந்த கரண மிறந்த துரியத்துந்
தோய்ந்த கரணத் துரிசக லாதே. 8

* தன்னிலை யோரா துடலைமுன் றானென்றான்
றன்னிலை கண்டான் றுரியந் தனைக்கண்டா
னுன்னு துரியமு மீசனோ டொன்றாக்காற்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. 9

துரியதூடணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1843.

## 4. அதீததரிசனம்.

வினாவிளக்கம்.

* அண்டனே யமரர் செல்லா மயரவந் தென்னை யாண்ட
கண்டனே துரியத் துள்ள துகளெலாங் கண்டு கொண்டே
னெண்டிக ழிதற்கு மேலா மெலையிலாப் பதத்தை நாயேன்
கண்டுகொண் டிடவெ னங்கைக் கனியெனக் காட்டி டாயே.

திருமந்திரம்.

துரிய மிருப்பது சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினொன்கு நஞ்சுண்டு செத்தன
பரிய † பிறவியும் பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே. 2

† புரவியும் என்றும் பாடமுண்டு.

சொரூபானந்தசித்தி.

புகலரின் றிடுபிரம புரமெனும் பதியதனிற்
றகரபுண் டரிகமெனு மகமிலங் கியதகர
ககனமுண் டதுமறைகள் கருதநின் றிடுபிரம
மிகவிரும் புவர்பிறவி விடவிரைந் துளவிமலர். 3

அளவிலம் பரமெவள வறிசிதம் பரமவள
வுளதுவிண் புவியனில மொளிபதங் கனுமெதி
துளிதரும் புயன்மின்முதல் சொலவரும் பொருள்களினி
விளைவவென் றிவையிதய வெளியடங் கிடுமடைய. 4

உடம்புட னிருந்தே யுடம்பிலா வுண்மை யுணர்ந்தவ னுளத்தொரு காலும்,விடம்படு காம வெகுளிமே வாது விளம்பிடும் பொருளெலாம் விளக்கு, மிடம்படு மிதயா காசமற் றிதுவே யிறப்பொடு பிறப்பில தென்றுந், திடம்படு பிரம மாவது மான்மா வாவதுந் தேகிகட் கெல்லாம். * 5

ஒலிமுத லுரைப்பன வொன்று மின்றியே
யெலையில தாகியெப் பொருட்கு மேலதாய்ச்
சலனம தின்றிய வதனைத் தம்முளே
நிலைபெற வறிந்தவர் மரண நீங்குவார். 6

ஞாநாநந்தசித்தி.

* அப்பரி சறிவரும் பொருளை யங்கையி
னொப்பரு மணியென வுணரக் காட்டிடக்
கப்புறு கருத்தெலாந் தீரக் கண்டுகொ
ளொப்பமை வொன்றிலா வுணர்வி னுத்தமா. 7

போதரத்னகாம்.

* பிறிவக மென்று நின்ற பிறிவற வறிவா னற்போ
லறிவக மென்று நின்றங் கறிவுறு மிருதி வீட்டி
னெறியுற விருந்து பார்த்து நிகழ்ந்தவா செப்பு கென்று
னறிவுற வொருவ ராலு மரியதா னுடைய வம்மான். 8

* இருந்தவா றியம்ப வென்னு லேதுமொன் றரிதி யாவுங்
கரந்துபோ யிறந்து காண்டல் காட்சிமற் றென்று மின்றி
நிரந்தவா னெனவி கார நீத்தசீர்ப் பெரிய பாழா
யிருந்தவா றென்ற றுனு மியம்பிடற் கரிதெ னெந்தாய். 9

அநுபவசாரம்.

* அறிவறி யாமை யென்னு மிரண்டையு மொழித்துத் தன்னிற்
பிறிவறி யாது நின்ற பேச்சறு நிலையே யாகி
யிறுகலா வியம்பற் கங்கொன் றின்றியே யிருந்த தென்னும்
பிறிதுரை தானும் பேசு மிடத்தலாற் பிறிதங் குண்டோ. 10

அநுபூதிவிளக்கம்.

* சுழுத்தியாம் புலனுணர் வடங்குந் தன்மைய
தொழித்துணர் துரியமா முணர்வுந் தானறக்
கழித்தறி வுடனறி யாமை தானுமப்
பழிப்பிலாப் பதத்தையென் பகரும் வுண்மையே. 11

* தானறி வகமெனுந் தன்மை யுங்கழன்
றேனைய பொருளவை யேது மின்றியே
தானின் வணமெனச் சாற்றொ ணாவிது
வூனமி லதீதமென் றுணரு மைந்தனே. 12

## வியோமமான்மியம்.

### நித்தியானந்ததரிசனம்.

துரியா தீதஞ் சாக்கிர மதனிற் றுரிசற்று
லெரிவாய் மீதி னெய்திய பஞ்சி னியல்பேயா
மறியார் பூவி னம்மது வுண்டிங் கயர்வற்ற
பெரியா ரன்றோ பிறவியி லென்றும் பிறவாதார். 13

* நனவிடைத் துரியா தீதம் புரிந்தநற் றலைவ ரன்றோ
வினையிடைப் பிறவி தன்னை வேரொடுங் களைந்து போக்கி
மனவினைக் கெட்டா வின்ப வான்பரா வமிழ்தா கின்ற
தனைமிகப் பருகி யுய்யுந் தத்துவ வித்தா கின்றார். 14

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

* ஊனமா முடலுந் தானு மொக்கவே யிருக்க மேலாந்
தானதா முயிருந் தானே சாவாது செத்தி ருக்கு
மோனமாந் துரியா தீத மதுவினை முழுந்தி யார்ந்த
ஞானநா யகனே யீச னெனமறை நவிலு மன்றே. 15

### சிவஞானநிலயம்.

* சாக்கிரத்தே யதீதத்தை யுணர்ந்தவர்மற் றவரே சகலசங்க முடனிருந்துஞ் சங்கமிலா ரவர்தம், பாக்கியத்தைப் பகர்வதுவென் பண்டையுட லுடனே பாரதனிற் றிருந்தும் பாரொடு † விண் ணவரா, னைக்கியத்தை யறிவரிய வறிவுமுணர் வுடனே றவலவுறு பொருளெவையு நொடிவரையி னிறந்தோர், வாக்கியத்தா விதுவெனவு மரியபரம் பரமா மன்னியபா வனையுணர்ந்த மாதவரா தலினே. 16

† விண் ணவராய், நோக்கி என்றும் பாடமுண்டு.

வியோமமான்மியம் முற்றிற்று.

அதீததரிசனம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1859.

# 5. வியோமதூடணம்.

## சுவானுபவசித்தி.

* நண்ணரும் பெருமை யோனே நாதனு மதீதந் தன்னை
யெண்ணிடு மவத்தை யோடைந் தெனப்பட வெண்ணு வானேன்
கண்ணிய மனத்தி னுய்மேகள் கனநன வொடுக்கம் போன்மற்
றெண்ணிய விரண்டும் போத விகற்பமா விசைத்த லாற்காண். 1

## ஞானசித்தி.

* அரும்பவ நாச யோகா மவத்தையைந் தினுமே தெந்தாய்
திரிந்திடு மவத்தை யைந்துஞ் செப்பிடிற் பவயோ கங்காண்
டெரிந்ததெவ் வகையா லென்னிற் சிறுவனே திகழப் பார்நீ
புரிந்துயிர் துரியா தீதம் போய்ப்பிறந் திடுத றன்னை. 2

## போதரத்நாகரம்.

* துரியா தீதஞ் சிவமென்னிற் சொல்லு மதீதத் துணர்வில்லைப்
பிரியா நிலையைப் பெயர்ந்திடுமப் போதே பிறழுந் துரியமுமாந்
திரியா வுலகென் றுணரவுறிற் றிருந்து சான்று சாக்கியமாந்
துரியா தீத மிவனென்றாற் றுரிசில் சிவமா யிடுமோதான். 3

* சொல்லு மதீதத் துணர்வில்லைச் சுவரெறி பந்த தெனப் பெயரு, மில்லை யொருமைத் தாமியல்பத் தாலே யிதுவும் பாவ னையா,நல்ல பாந்தா னொருமைத்தே னன்கி லதீதஞ் சிவமாமோ, † வல்ல ததீதந் தனின்முடிவோர்க் காகும் பவத்திற் களவுண்டோ.

† வல்ல லதீதத் தினின்முடிவோர்க் என்றும் பாடமுண்டு.

## நித்யானந்ததரிசனம்.

* சீவாற் கரணந் தேகேந்தி யாதி திகழ்ந்தடங் கிடமதாய் விடயப், பாவமற் றபாவ காரிய வுபாதி பகர்வருஞ் சுழுத்தியே போல, வீவினற் பரத்தின் விகிர்தபா வங்கள் விரிந்தடங் கேதுமற் றதுவாந், தாவினற் பரமா பாவமா மதீதந் தனைமறை பரவுட லெனுமால். 5

## ஞானசாரம்.

* நனவொடு கனவே நன்கெழு மொடுக்க ஞானமாந் துரிய மற் றதீத, மௌனவிவை யைந்து மவத்தையாய் மாறி யழிதலா லிவைபொரு ளன்று, னினைவருஞ் சிவந்தா னவத்தையோர் காலு மின்றியே யொருமையாய் நிகழுந், தனதியல் பரன்ற னுகம மெல் லாந் தாமெழில் பெறவறை வுழுமால். 6

சிவானந்தநிலயம்.

* துரியா தீத மாயோனி துகடீ ரிறுகன் மாமாயை
யிரியா வானம் பரவுடன்மற் றெழிலார் சத்தி யெல்லையில்பாழ்
திரியா வறிவாஞ் சிற்கனநற் †செகவத் தீசஞ் சீவனிடைப்
பிரியா விடையீ டெனவிதற்குப் பேசும் பரியா யப்பெயரே.
‡ செகவித் தீசன் என்றும் பாடமுண்டு.

ஆதலா லதீத வனுபவத் துற்றங் கறுதிடம் வந்தமா முனிவ, ரோதிய வதீதம் பொருளலா மையினை யுலகறிந் துய்வதன் பொருட்டாற்,காதலா லிறைவன் கழல்களை நோக்கிக் கனிந்தெழு மன்பினு லரற்று, மேதமின் மொழிக ளளவிலே யவற்றி னெழிலையு மிசைவுறப் பாராய். 8

திருவாசகம்.

* அரசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி, யிரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன், கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற், பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. 9

மாவடு வகிரன்ன கண்ணி பங்காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ள
மாகெடு வேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. 10

திருவாய்மொழி.

* குறுக மிகவுணர் வத்தொடு நோக்கி யெல்லாம்விட்
டிறுக லிறப்பென்னு ஞானிக்கு மப்பய னில்லையேற்
சிறுக நினைவதோர் பாசமுண் டாம்பின்னும் வீடில்லை
மறுகலி லீசனைப் பற்றி விடாவிடில் வீடஃதே. 11

திருமந்திரம்.

* துரிய மடங்கிய சொல்லறும் பாழை
யரிய பரம்பர மென்பர்க ளாத
ரறிய பரம்பர மன்ற துதிக்கு
மருநில மென்பதை யாரறி வாரே.

வியோமதூடணம் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 1871.

# 6. பரவிலக்கணம்.

## போதாந்தநாம்.

அறைகுவ ரவத்தை மூன்று மெவருமற் றவையுங் காணார்
செறிவுறு துரியங் காண்டல் செப்பவுங் கூட வில்லை
நெறிமையா லவையு மன்றி யதீதமு நிகழக் காட்டி
யிறைவனீ செய்த தெல்லா மேழையேன் றாம தன்றே. 1

* போறியுறு கரண மெல்லாம் †போனிடஞ் சுழுத்தி போத
நெறியுறு துரிய மந்த நிகழ்வுமங் கிறந்த நேர்மை
யறைவுறு மதீதந் தானு மருத்தமன் றுகின் மேலாங்
குறியுறு பொருளின் றன்மை குரவனே கூறி டாயே. 2

† போனடஞ் என்றும் பாடமுண்டு.

## சொரூபானந்தசித்தி.

ஆகமங்கள் பலவுமுறை யாடு கின்ற திவனையனு
போக மொன்றி னறியுமறி வாகி நின்ற புனிதனிவ
னேக னந்த வனுபவம தேயி வன்றன் வடிவுதனை
யோக மொன்ற வருள்பவனு மோது கின்ற பரமசிவன். 3

நானு மந்த வரியமரர் ஞால மொன்று நரர்விவித
யோனி யிந்த முழுதுமத னூடெ ழுந்த சிறுதிவலை
தானெ ழிந்து சிறிதில்சிவ சாக ரந்த னிகாரியை
யூன மொன்று மெனைமொழிவ ரோர்வொ ழிந்த வுணர்விலிகள்.

அருள தாவுரு வொன்றியே நின்றுள வகிலநா யகனென்னும்
பொருள தேபர மாம்பத மியாவரும் புகலிட மதுவாகும் [பா
கருணை மேவிய சிவனெழிற் றுருத்திரன் கண்ணனுன் முகனென்
றிருள தாகுமே பரம்பத மெனும்படி யெங்ஙனே யிமையோரே.

## நித்தியானந்தசரிதை.

* அறிகின்ற வறிவு தன்னை யளக்கின்ற புலனென் றஞ்சிச்
செறிகின்ற கார ணத்திற் றெளிகின்ற போத மொன்றிக்
குறிகளைக் கடந்து நின்ற குறைவிலா வமுதந் தன்னைப்
பெறுதவஞ் செய்தார்க் கன்றிப் பேசிட லாவ தொன்றே. 6

---

## திருந்திரட்டு.

பிறியப் படுமிவ் வவத்தை யெல்லாம் பிறகிட் டெவைக்கு முன்னாகி
யறியப் படுவ தொன்றின்றி யறிவாந் தன்னைத் தானறிந்து
குறியுற் றிதுவென் றிடவதனைக் கடந்து குறையா நிறைவாகி
நெறியுற் றெல்லாந் தானாகி நிகழும் பரம னாநிமலன். 392

### மெய்ஞ்ஞானவிளக்கம்.

* வேதமோ டாக மங்கள் விரிஞ்சன்மா லாதி யெல்லா
மீதென வுணர்தற் கெட்டா வெலையிலா வானந் தத்தை
யேதுதான் மொழிவ † தின்றத் திலக்கண மெனக்குன் றன்மேற்
காதலான் மொழிய லுற்றே னதனைநீ கருது மைந்தா. 7

† தத்தி னிலக்கண என்றும் பாடமுண்டு.

### தோன்றி.

* கூறியன்று நெறியன்று குணமன்று குணியன்று
பிறிதொன்று மதுவன்று பெரிதன்று சிறிதன்று
புறமன்ற தகமன்று புதிதன்று பழைதன்று
வறிவென்று மறிகின்ற பொருளன்ற தறிவொன்று. 8

* படியொன்று மதுவின்றி யடைகின்ற பதமின்றி
யடியின்றி முடியின்றி யருகின்றி நடுவின்றி
வடிவொன்று மதுவின்றி மனமின்றி யுரையின்றி
யுடனென்று மதுவின்றி யுணர்கின்ற பொருளொன்று. 9

### அனந்தபோதம்.

துரியங்கொள் வடிவன்று துரியம்பின் விடநின்ற
பிறிவன்று பெயர்வன்று பெயர்வற்ற விடமன்ற
தரியன்ற தயனன்ற தரனென்ற வவனன்று
செறிவன்ற தகல்வன்று சிவமன்றி யுளதன்று. 10

### தோன்றி.

* போக்கற்றது வரவற்றது புரையற்றது வரையற்றது
வாக்கற்றது மனமற்றது வடிவற்றது படியற்றது
நோக்கற்றது நுணுகப்படு பொருண்மற்றொரு பொருளின்
றுக்கற்றது தனையற்றது வெதுமெய்ப்பொரு ளதுதற்பரம். 11

* ஒன்றெனி னொன்றாய்ப் பலவெனிற் பலவா யுளதெனி னுளதென லாகி, நன்றெனி னன்றாய்த் தீதெனிற் றீதாய் ஞானமு ஞேயமு மெனலா, யன்றெனி னன்றா யாமெனி னுமா யதுவிது வுதுவெனு மதுவாய்ப்,பின்றொரு பொருளிற் பிறிதென லரிதாய்ப் பிறிதற்ற பெருமையே பெருமை. 12

### சதகம்.

* நித்த நிர்க்குண நிரஞ்சன மனந்த நிரவ யம்பரம் † பரநிரூபஞ், சுத்த மேகமா னந்தநற் சோதி சாந்தஞ் சூக்கும மக்கர மதர்க்கம், புத்தம் புராணமெய்ப் பொதுவிநீர் பொருளெம் புலன்கடாமறி யாப்போத ரூப, மித்தனைத் திறமும் வேதத்தில் விளம்பும் விமல மாகிய பிரமமிங் கிதுவே. 13

† நிரூப மரூபஞ் என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

* நின்ற வொன்றை யுணர்ந்தேனுக் கதனுண்மை யது விதுவென், றென்று மொருவர்க் குணரலாகா வுணர்ந்து மேலுங் காண்பரிது, சென்று சென்று பரம்பரமா யாது மின்றித் தேய்ந்தற்று, நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ‡ ஞாலங் கடந்ததே.

‡ ஞானங் என்றும் பாடமுண்டு.

நன்றாய் † ஞாலங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த், தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழூலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து, சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றிக் களைந்தே பசையற்றா, லன்றே யப்போ தேயவ்வீ டதுவே வீடு வீடாமே. 15

† ஞானங் என்றும் பாடமுண்டு.

பரவிலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1886.

## 7. பரவபேட்சை.

விஷவிளக்கம்.

* கைம்மாறொன் றின்றி யென்னைக் கண்டிருந் தருளி யாண்ட
வம்மானே முதலீ றில்லா வகண்டசிற் பரமா முன்றன்
செம்மார்பா தத்தைக் கண்டு திளைத்திட வடிய னேனுக்
கெம்மானே யருளி யென்ற னிருளினை யறுத்தி டாயே. 1

திருவாசகம்.

மானேர் நோக்கி மணவாளா மன்னே நின்சீர் † மறைப்பித்திவ்
வூனே புகவென் றனைநூக்கி யுழலப் பண்ணு வித்திட்டா
யானு லடியே னறியாமை யறிந்து நீயே யருள்செய்து
கோனே ‡ கூவிக் கொள்ளுநா ளென்றென் றுன்னைக் கூறுவதே.

† மறப்பித்து என்றும், ‡ யருளுங் காலந்தான் கொடியேற்கென்றோ கூடுவதே என்றும் பாடமுண்டு.

* கடலே யனைய வானந்தங் கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண, விடரே பெருக்கி யேசற்றிங் கிருத்த லழகோ வடிநாயே, னுடையாய் நீயே யருளுதியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரா ரருளா லிருணீங்கச் சோதி யினித்தான் றுணியாயே. 3

## திருவாய்மொழி.

நோக்கி நோக்கி யுன்னைக் காண்பான் † யானென தாவியுள்ளே
நாக்கு நீள்வன ஞான மில்லை நாடொறு மென்னுடைய
வாக்கை யுள்ளு மாவி யுள்ளு மல்லாப் புறத்தினுள்ளு
நீக்க மின்றி யெங்கு நின்றாய் நின்னை யறிந்தறிந்தே. 4

† யானெனும் போதங்கொண்டே என்றும் பாடமுண்டு.

---

## குறுந்திரட்டு.

ஓவிலா தொருமைத் தானு முன்றிருப் பாதந் தன்னைப்
பாவியேன் கண்டு வாரிப் பருகுநா ளென்றோ வென்றோ
வாவியே யமுதே தேனே யத்தனே யடிய னேற்குத்
தாவில்சீ ரருளா லுன்னைச் சம்புவே காட்டி டாயே. 393

அளவிலாப் பரமா னந்த மாகுநற் பாதத் தேனை
யுளமெலா நிறையத் தேக்கி யுய்ந்துநான் வாழ்வ தென்றோ
தளர்விலா மறைக டேடத் தரணியி லுருவாய் வந்து
பளகனேன் றன்னை யாண்ட பரமகா ருணிய மூர்த்தி. 394

நீக்கொரு பொருளு மில்லா நிமலவா னந்தத் தேனைத்
தேக்கியென் னுள்ள மாரத் திளைத்துநான் வாழ்வ தென்றோ
வாக்கமு மழிவு மில்லா வடியவர் களியா நின்றா
ரேக்கறு கின்ற நாயே னென்செய்கே னியம்பி டாயே. 395

வாக்கொடு மனமி றந்த மதுரநற் கனியே யென்றன்
பாக்கிய பரிணா மத்தின் பழுதறு பயனே யுன்ற
னீக்கமி லடியா ரெல்லா நின்னரு டிளைத்து வாழ
வேக்கற வைத்த கால மெனக்கினி முடியா தோதான். 396

மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினாற்
பாவி யேற்கு முண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே. 397

ஆறவே பெற்றார் நின்னன்ப ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு பெயரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவில்லா மாளா வின்ப மாகடலே. 398

ஞானமிர்தம்.

திருவின் செல்வி யொருதனிக் கொழுந
புலமை சான்ற கலைமகள் கணவ
வீரிய மடந்தை பேரிசைக் கிழவ
தவத்தின் றலைவ தருமத் துறைவ
வருளோ னருளோ னென்ப நீயே
யருளோ னவதை யெவனோ தெரியக்
கண்ணிற் காணு ராயினுங் கனவி
னண்ணுங் காலை நல்லுயிர் செருக்கும்
பேயே யாயினும் பிரியி னின்பம்
வாயா தென்று மதியோ ரறைப
டீஇ நானுநின் னன்றி யாரு
மறிய வாரா பெரும வென்னை
யன்ன தாய தொன்முது பிறவி
யறைபோக் கொழியக் குலமுழுதும் வ
ஞான வொள்வாள் பூமுக மழுங்கக்
கொன்றுசினந் தணியாத் தண்டாச் சீற்றத்து
மறவனை யல்லையோ மற்றே யிறைவ
வெவன்பல மொழிகுவம் யாமே வனச
நீர்நிலை நின்றுநின் றுணலம் பெற்ற
தாளோய் தாளி னீழலம் யாமென்
றிரந்துகுறை யுறினும் பிறந்தை யெந்திற
மறந்து நோக்கா தெவன்புக லெமக்கென
வொழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை
யொருவன் பாத மல்லதை
பிறிது முண்டோ பெரும்புக னமக்கே.

(இ-ள்.) திருவின்—எவனே (எ - து) சர்வஞ்ஞத்துவமான செல்வத்தையுடையனாகையால் மோக்ஷலக்ஷ்மியாகிய செல்விக்கு ஒப்பற்ற நாயகனே யென்றும், கலைஞானமாகிய அபரஞான மூற்று மூணர்தலால் அறிவுடைமையாகிய உயர்ந்தகலைமகளுக்கு நாயகனே யென்றும், பஞ்சேந்திரிய நிக்கிரகம் பண்ணினபடியினால் வீரமாகிய மாதுக்குப் பெரிய கீர்த்தியையுடைய நாயகனே யென்றும், சர்வசங்க நிவிர்த்தியுடைமையாற் றவமாகிய செல்விக்கு நாயகனே யென்றும், சனன மரண சாகரத்தி லழுந்துவோரை யெடுத்துக் கரைசேர்க்குமுறைமையாற் றருமத்திற் கிடமாயுள்ளவனே யென்றும்,

கிருபையையுடையை கிருபையையுடையை யென்றுஞ் சொல்லாகிற்பர்கள் கின்னை நீ கிருபையை யுடையையான தெய்வண்ணம்,

தெரிய—அறைப (எ-து) கண்ணுற் றெரியக்காணவேண்டு மென்னினும் புலப்படாததாய்க் கேட்டபடியே கனவிலே காணுமிடத்தும் நல்லவுயிரைப்போக்கும் பேயேயானாலுங் கூடிப்பிரிந்தாற் றுன்பத்தைக் கொடுக்குமென்று அறிவுடையார் சொல்லியிருப்பவும்,

மரீஇ—பிறவி (எ-து) என்னை அநாதிதொட்டு அவ்வொருபடித்தாய வேறுபாடற இந்நாள்வரையு மருவி கின்னையொழிய யாவர்க்கு மறிதற்கரிதாகிய பிறவியை மகான்மாவே,

அறைபோக்கு—வளை இ (எ-து) உற்பீசம் அண்டசஞ் சராயுசஞ் சுவேதசம் என்னு நான்குவ[illegible]கத்தின் றோற்றத்தையும் ஒதுக்கமற வளைத்துக்கொண்டு,

ஞான—மற்றே (எ-து) ஞானமாகிய அழகியவாள் பொலிவு பொருந்திய மூகங்குளிக்கச் சங்கரித்து மற்றும் பாசச்சேதம்பண்ணப் பக்குவரானரைத் தேடிக் கோபந் தணியாதே யிருக்கும் அளவில்லாத மாற்சரியத்தையுடைய மறவனல்லையோ,

இறைவ—யாமே (எ-து) கர்த்தாவே நாங்களுன்னைப் பலவாகச் சொல்லுவம் அஃதெவ்வண்ணம்,

வனச—எமக்கென (எ-து) தாமரையானது நீரில் ஒற்றைக்காலினாலே நிலையாக நின்று தவத்தைப்பண்ணி நின்னுடைய சீர்பாதத்தினழகைப்பெற்ற அச்சீர்பாதத்தையுடையோனே நாங்கள் நின்சீர்பாத வாசிரயராயிருந்தோம் எங்களுக்குச் சனனம் வேண்டுமென்று நின்னை வேண்டிக்கொள்கினும் அச்சனனம் மறந்தும் எங்களிடத்து நோக்காததாய்முடிந்தது இனி எமக்குப் புகலிடம் யாதென்று விண்ணப்பஞ் செய்ய,

ஒழிவற—நமக்கே (எ-து) சந்திரபூடண திருச்சடா பாரத்தையுடையனாகிய சடசித்துக்களெல்லாம் பரிபூரணமாய் நிறைந்த ஏகனாகிய கர்த்தாவினுடைய சீர்பாதமல்லது மற்றுனக்கும் எமக்கும் பெரிய புகலிடமுண்டோவென்று ஆசாரியர் அருளினார் (எ-று). 5

பரவபேட்சை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1891.

## 8. பரதரிசனம்.

விஞவிளக்கம்.

* உம்பனே பரன்ற னுண்மை யொளிதரு நிலைமை தன்னை
வம்பனேன் கண்டு வாழ மலர்க்கையா மலக மென்ன
நம்பனே காட்டி டென்னு நலமிகு மன்பற் கண்ண
லம்பர நிலைமை தன்னை யழகுறக் காட்ட லுற்றான். 1

போதாத்தகாம்.

* அறிவறி யாமை யென்னு மிருமையு மற[redacted] டங்கி
யிறுகலாம் பரமா பாவ விருளையுங் கழன்று மிக்குச்
செறிவுறு மறிவ தாநற் பரத்தினைத் திகழும் வண்ண
மிறையொரு மொழிய ளித்தா னெறித்தது சிவம தேயாய். 2

* சொல்லிய வியோம மாய துகளிலாப் பரமா பாவ
வெல்லையுங் கழன்று மிக்கங் கெலையிலாப் பெருங்க ளுகித்
தொல்லைநற் பரம தாநற் சோதியைப் பாரா யென்று
மெல்லவே யுரைத்தா னீசன் மிளிர்ந்தது சிவம தேயாய். 3

மெய்ம்மொழி.

* இரண்டென விடைக்கி டந்த விருண்மாயக் கரைய ழிந்து
புரண்டதே யின்ப மெங்கும் புறவெள்ளப் பட்டின் றன்றே
முரண்டுவெண் டறைதார் மார்பா முத்தனே முத்தி யெல்லாந்
திரண்டதோ ருருவே யின்றுன் றிருக்கடைக் கண்பட் டன்றே.

நித்தியானந்ததரிசனம்.

* சீவனுந் துரியம் போதந் திகழுநற் பரமும் போதந்
தேவனே யிரண்டு முண்மை தெரிந்திடத் திருந்த வண்ண
மேவவூ னதற்குப் போத மெங்ஙனே யிருந்த நேர்மை
சிவபோ தத்துக் கின்பந் தெரிவரும் பரமு மஃதே. 5

போதாத்தகாம்.

* ஆக்கமு மழிவு மில்லா வரியநற் பரத்தை யங்கை
நீக்கிலா மணியே யென்ன நிகழ்த்தினை முன்னி கழ்ந்த
போக்கரு மவத்தை யொன்றும் புங்கவா காணே னுன்றன்
வாக்கெனும் வேத கத்தின் வல்லப மிருந்த வாறென். 6

* பரந்தவப் பரிசு காட்டிப் பரப்பறத் † திரித்தல் காட்டித்
திரிந்திடத் தனுப வங்கள் கண்டோஞ் செப்பக் காட்டிப்
புரிந்தவத் தன்மை யெல்லாம் பொய்யென விழுங்கித் தானு
மிருந்தவித் தகத்தை நாயே னியம்புமா றறிகி லேனே. 7

† தரித்தல் என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

* வாரிக்கொண் டுன்னை விழுங்குவன் காணிலென்
றார்வுற்ற வென்னை யொழியவென் னின்முன்னம்
பாரித்துத் தானென்னை முற்றப் பருகினன்
காரொக்குங் காட்கரை யப்பன் கடியனே. 8

அதிக்கிருதாமிர்தம்.

* ஊன்றி யுயிர்த்திடம் புருட னுரு
மூன்று முணர்ந்திடம் போத மாகுந்
தோன்றிய போதநா னென்ற கண்ணுஞ்
சொருக விருந்திடந் தொல்வி யோமம். 9

* தொல்லை வியோமமே யாகி யொன்றுந்
தோன்று திருந்த விருப்பைக் காண
வெல்லை கடந்த வியோமா தீத
மிறையா மிறைவ னருளி னாலே. 10

* இறைவ னருளால் வியோமா தீத
மிறையா யிலங்க விருக்கு மாகி
னிறைவு குறைவு நிகழ்வு நீக்க
நின்மித மில்லா நிலையாங் காணே. 11

பரதரிசனம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1902.

## 9. விசுவக்கிராசம் (உலகழித்தல்).

வினாவிளக்கம்.

* நற்சி வத்தையே கண்டுள மகிழ்தரு ஞானகன் முடிமன்னு
முற்ச கத்தெனுந் தோற்றமென் செய்தது மொழிகுவா யெனவீச
னச்ச முற்றுளங் குலைகுலைந் தஞ்சலித் தங்கணு விண்ணப்ப [ய்.
மிச்ச கத்தெனி லிலையித மெனினுமவ் வேறறித் தமை யுள தெந்தா

போதாமிர்தம்.

* ஆதி மூலமே யடியவர்க் கமுதமே யகமித மறநின்ற
போத ரூபமே பொய்யருட் பொய்யதாய் மெய்யருள் வெளிநிற்பா
யோதி னுய்முனஞ் சகமனு பவத்தினி னொழியுமென் பதுவென்ற
னூத னேயதன் றிறமறி வுறும்வகை நல்குநா னுயும்வண்ணம். 2

சொரூபானந்தசித்தி.

*ஓத லுற்றபர னுல னைத்துமுள தாவதப் பரம னென்றிரு
லாத லுற்றில னுதி முற்றுமுவ னுலெறிப் பதநி ரேகமா
வேத னத்தவ ரனைத்து மத்துவித மாய்வி ழிப்பர்விவி தத்திலே
போத மற்றவர் விழிப்பர் மற்றவர்கள் பேத மற்றவர்கள் புல்லி
[யோர்.

* இதுசகந் தானெனமு னிகழ்தலுண் டேவிவித மெவர்களுங்
காணு மறிவே, யதுபரந் தானெனுமு னுபவந் தானடையி
னதுபவந் திரு மறிவா, முதியசந் தோகவுப நிடதநின் றோது
பொருண் முழுதுமிங் கீசன் மொழியா, லதிசயந் தானமா ரனை
வருங் கூடவழ குறவறைந் தேன ருளினுல். 4

* வீடிலா வினைகள் கலைகண்மூ வைந்தும் விடயவிந் தியவதி பதிக
ளூடுசே தனனுஞ் சிவன்மற் றனைத்து நாதனு ராலய நண்ணிப்
பாடுபே றுருவ மொன்றுமற் றந்தப் பரமனே யாய்விடும் பார்மே
லோடுமாறெல்லா முததிபுக்கொன்று யுருவுபேரொழியுமா போல.

* செறிவா யெங்குந் திகழ்ந்துள்ள சிவனு னென்னுந் திகழ்வுற்று
னெறியா னிகழு நிகழ்வெல்லா நிமல மாயே நிகழ்ச்சிதரு
மறிவா யறியா வுமையுமாகி யறிவிப் பவனு யறிவானுய்ப்
பிறிவா யுளதா யிலதாகிப் பிரம மொன்று மேபிறழும். 6

போதரத்னுகரம்.

* ஓதரு மவத்தை யோடங் குதயவத் தமன மில்லா
வேதமில் பரமே யாகி யெறித்தது விதமாம் வைய
மோதரும் வியோமத் தோடு தூரியநன் கிறந்தாற் போலத்
தீதறப் பரமே யாகத் திருமா றருள்செய் வாயே. 7

* தேசையது பெத்த முத்தஞ் சித்தமூன் றடைவே செப்பின்
வசையுறு காயந் தானுய் வைய்மெய் யாகும் பெத்த
மசைவறு மறிவு தானு யகிலம்வே றுகு முத்தந்
தேசைமுடி வுலகுந் தானுந் தேசிக னருளி னையா. 8

* என்சிர மிருந்து செய்த விருந்தவப் பயனே யென்றன்
கண்செய்பாக் கியமே முன்னீ கதித்தவத் தசைகண் மூன்றின்
முன்றசை யிரண்டுஞ் சால மொழிந்தவா றொக்குங் கண்டேன்
பின்றசை முடிவு காணும் பெருநல மருளி டாயே. 9

* சத்தாதி கந்த மீறுச் சமைந்துள விதம தெல்லா
மெய்த்தாய வதீத மேநற் றதீதமாய் விளங்கி யோங்கி
யுய்த்தாய வுலக முண்டங் கொளிதரு பரமே யாகும்
வித்தாரங் காட்ட மைந்தன் வியந்துள மகிழ்ந்து வீழ்ந்தான். 10

* வியந்துள மகிழ்ந்து மேன்மேன் மெய்ம்மயிர்ப் புளக மெய்தி
நயந்துகண் மல்கக் கைநாண் மலர்தலை மிசைய வாகப்
பயந்துநா னுவி தத்துப் பிரபஞ்சமு மிறந்து போய்மற்
றியைந்தபே ரதுவுங் காணா திருந்தவா றியம்ப லுற்றான். 11

* ஞானஞே யமுஞா துருவறி வுறு முழுது
மான பேரரு ளுருவுகொண் டெனதுள முறையும்
ஞான நாயக னலமிகு திருவுரு வதுவே
யான வாவிது வதிசய மதிசய மிகவே. 12

* ஒலிக ளாயெழு முலகெனும் வித்திகண் முழுது
மலகி லாவரு ளுருவுகொண் டெனதுள முறையு
நலவெ னுயக னுருவல துலகம தெனவே
யிலகு பேரது மிலையிலை யதிசய மிதுவே. 13

* பரிச மாயெழும் வித்திசெய் பகருல கெவையு
மரைசெ னுருயி ரறிவுறு மெனதுள முறையும்
புரிச னார்புக ழுருவல துலகம தெனவே
வரைசெய் பேரது மிலையிலை யிதுவென வளமே. 14

* உருவ மாயெழும் வித்திசெ யுலகெவை முழுது
மரிய வாரரு ளுருவுகொண் டெனதுள முறையு
முரிய தேசிக னுருவல துலகம தெனவே
யுரைசெய் பேரது மிலையிலை யதிசய முறவே. 15

* இரத மாயெழும் வித்திசெ யுலகெவை முழுதும்
வரத மார்திரு வுருவுகொ டெனதுள மருவுங்
குரவ னார்குரை கழலல துலகம தெனவே
யுரைசெய் பேரது மிலையிலை யிதுவதி சயமே. 16

* மணம தாயெழும் வித்திசெய் மருவல கெனவையும்
வணமி லாதொரு வடிவுகொ டெனதுள மருவுங்
குணமி லாதொரு குணகிரி யுருவல தலகென்
றணவு போது மிலையிலை யதிசய மிதுவே. 17

* இதமு மீள்வுறு மனிதமெ னிருமையு மறவே
யுதவு நாயக † னுருவினை யுனியுனி வியவா
வெதுசெய் தாயென வறைவது மறிகிலே னிறைவா
பதம தாகிய பதுமவல் லபமெது பகர்வேன். 18

† னருளினை என்றும் பாடமுண்டு.

* உதயவத் தமன மின்றி யொளிருநற் சொரூப மாய
நிதியினைக் கண்ட போதே நின்மலா † விதுநா ளெல்லை
யிதுவெனக் கண்டு வந்த யாவுமெங் கொளித்த தந்தோ
சதுமறைக் கெட்டா வுன்றன் சரணவல் லபமி தென்னே. 19

† விதுநா ளல்ல என்றும் பாடமுண்டு.

* உணர்ந்திலாத் தசையி னெந்தா யுளதுல கெனமுன் கண்டே[ன்
னுணர்ந்திடத் துணர்வாய் நின்றே யுலகுசாக் கியமாய்க் கண்டே
புணர்ந்தவச் சகமுந் தானுய்ப் புரையற நிறைந்திப் போதுன்
னிணைந்தமெய்க் கழலே யாகி யிலங்குமா லென்னே யென்னே. 20

விசுவக்கிராசம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1922.

## 10. உபசாந்தம்.

### சுவானுபவசித்தி.

* † இதமகி தந்தா னின்றி யிதமெனி னதீத மாயே
பொதுவறப் புரியா நின்ற பொருவிலாப் பரத்தைக் கண்டு
விதிர்விதிர்த் தங்க மெல்லாம் வியந்துவாழ் ‡ மகனுக் கைய
னதுதனிற் கிறிகை யின்றீர் வருட்சமை வளிக்க லுற்றான். 1

† இதமனி என்றும், ‡ மகனை நோக்கி, யதிசயக் குரவனுர்த
மருட்சமை வளிக்க லுற்றார் என்றும் பாடமுண்டு.

* பிறிவா மூலப் பகுதிபுமான் பரமம் பெருகும் வியோமமெனச்
செறிவா மிருப்பத் தேழினையுஞ் சேர விழுங்கித் திகழ்சிவமா
யெறியா வுலகுந் தானேயா யெழில்கொள் செயலு மிறந்தவரு
ணிறைவாஞ் சமைவை யளித்திடுவா [illegible]யின் வித்தி நிகழ்த்திடு
[வாம். 2

* செவியாதி சத்தாதி யோரீ ரைந்துந் திகழ்ந்தவாக் காதிவச
னாதி பத்துங், குவியாத மனமுதனு லெனகா லாறுங் குறித்த
புரு டனுமவனை வியோமந் தன்னிற், றவிராது பிரிப்பதுகூட்
டுவதா குந்தற் பரசெயலாங் காலபாத் தொடுவியோம, நவைதீர்
மற் றவைகழறன் ஞால முண்ட னவிலெவையு மிறந்திடுநற்
சமைவென் றூரே. 3

* அறந்திகழ் மனத்தி னானே யறுநாலும் வெறுநா லென்னச்
சிறந்திடு மிருபத் தெட்டுந் தீர்ந்தநற் சமைவ தாகி
நிறந்திக ழுலகுந் தானாய் நிகழ்தரு புரணந் தானு
மிறந்தநற் பரத்தைக் கண்டு கொள்கென விறைய ளித்தான். 4

* செப்பரு முலகுந் தானாய்த் திகழ்தர நிகழு கின்ற
வப்பெரும் பதமுந் தூல நனவென வரிய தானுந்
தற்பரா னந்த வெள்ளச் சமைவதா நிறைவைத் தானே
யிப்பரி சிறைவன் மோன மொழியினா லியம்பி னானே. 5

* காச்சினை யிறந்த பொன்போற் கருதுல கழித்துத் தானு
மாச்சறு பார்வை யென்னு மதனையு மறநி றைந்து
பேச்சினை யிறந்த வின்பப் பேருப தேசந் தன்னை
வாச்சிட விறைவன் மோன மொழியினால் வழங்கி னானே.

---

## குறுந்திரட்டு.

அறுநா லதுவும் வெறுநாலு மாகு நாலேழ்ப் பதமதுவுங்
குறையாப் போதப் புகனிறையாக் குறியி லின்பத் திருக்குரவ
னிறைவாய் நின்ற படிநின்ற கழற்கே வியோமா தீதமதாஞ்
செறிவா யிதமு மதீதமதாஞ் செயலுந் தீரத் திளைத்திருந். 399

இவ்வண்ண மருளி மேலோன் றியம்புத லிலாமை யாலே
செவ்வண்ண வான மேனிக் கருணையே திகழ்ந்து தோன்றக்
கைவண்ண வனலும் வேணிக் கங்கையுந் தரித்த காமர்
மைவண்ண கண்டத் தோனு மவுனமே காட்டி னானே. 400

வான மாதி மயக்கற வாய்மன
மான கோசரி யாம லகண்டமாய்த்
தானி றைந்தொளி ருஞ்சதிர் காட்டினான்
மோன மாமொழி யான்முனி புங்கவன். 401

### தத்துவாமிர்தம்.

* ஊனி றந்துயி ரிறந்துள மிறந்துணர்வதாந்
¶ தானி றந்துகரு பாவமுழு தும்பரமொடே
வானி றந்துமிக வொன்றிவய முண்டபுரணைக்
தானி றந்தபர மம்பத மிருந்தபடியே. 7

¶ தானிறந் துலகுயிர் முழுவதும் என்றும் பாடமுண்டு.

† புறங்க ளன்றுளம தன்றுபுக லுங்கனமதா
யுறங்க ணன்றுணர்வு மன்றுணர் விறந்தவிடமா
நிறங்க ளன்றுநிகழ் வேதிதமும் வேத்தியமெலா
மிறந்தி ருந்தபர மம்பதமி ருந்தபடியே. 8

† புறங்க ளன்றகமு மன்றுபய மன்று புகலுங் கனமதா என்றும் பாடமுண்டு.

எலையி லாவிதம் பிரபஞ்சமோ டனிதமும் விழுங்கிச்
சொலிதை யாய்மிகு சுடர்தரு புரணமு மிறந்த
வலைவி லாவுத தியதெனு மமலநற் சமைவைத்
தலைவ நானிவ ணம்மெனச் சாற்றுவ தறியேன். 9

## சொரூபாபேட்சை.

### போதரத்நாகரம்.

* என்றுவிண் ணப்பஞ் செய்தங் கிருகையுந் தலைமே லேற்றி
நின்றவன் பனுக்கு நாத னிகழ்த்திடு நிமல மைந்தா
ஒன்றுகா ரியமு மற்றைக் கருதுகா ரணமு மன்றித்
துன்றுவா தனையுந் தீர்ந்தாற் சுத்தநற் சொரூப மாமே. 10

ஆதலா லறைந்த மூன்றின் வகையெலாந் தீர்த்தல் சுட்டி
யோதும்வே தாந்த வாக்யத் தொளிர்தரு பதங்கண் மூன்று
லாதியா கமமு மட்ட விஞ்சதி யிறந்து தோன்றுஞ்
சோதியாஞ் சுத்த ரூப மதுகுருச் சொரூப மன்றே. 11

### தத்துவாமிர்தம்.

* அருளு நாயக னாருயிர் வெளிப்படு மொருபாழ்
பொருள தாம்பரன் பொருவற வெளிப்படு மொருபாழ்
தெருள தாகிய குருபரன் றிகழுநற் சமைவா
மிருளி லாதசூழ் கீழ்மே லு மெலையிலிப் பெரும்பாழ். 12

### போதரத்னாகரம்.

* என்றலாற் றரும பாவ மிறந்தநீர் வாணம் போலத்
துன்றுகா ரணபா வந்தான் றுடைத்தநீர் வாணம் போல
நின்றவா தனையுந் தீரிச் சமைவெளுநீர் வாணந் தானு
மன்றியே நிகழு மென்னை யாண்டவ னரிய கோலம். 13

### போதசித்தி.

* ஒன்றொடொன் றொன்று பாழா யொன்றின்மும் மூன்ற தென்
கன்றிய மாயா பேதங் கண்டனு பவத்திற் றீர்ந்தாற் [னக்
றுன்றிய சுயம்பிர காசத் தொலைவிலா னந்த மாகி
யென்றுமோர் படிய தாகி யிருந்திட லாகு மன்றே. 14

ஆர்த்தலாச் சாதி விட்சே பையும்வாச் சியையு மென்னச்
சீர்த்தமா மாயை யின்றன் செறிதரு விதம தெல்லா
மோர்த்தனு பவத்திற் கண்டங் கூசிவே றொடுங்க லைந்து
தீர்த்தவன் சிவப்பிர காசா னந்தமாய்த் திகழு மன்றே. 15

### சுயம்பிரகாசதரிசனம்.

எட்டுருப் பாகித் தன்னி னெழுந்திடு மூல மாயை
துட்டறச் சுயம்பிர காசச் சோதியா னந்த மாகுங்
கட்டற விவணந் தீர்ந்த கண்ணலாற் கண்ணி தென்னப்
பட்டிட லுண்டோ மாயப் படணமாம் படர்ச்சி தீர்க்க. 16

### அனந்தானந்தநிலயம்.

ஓடி டத்தினு மொழிந்தபந் தனையினு மொடுங்கிடத் தினும் போத, நாடி டத்தினு நல்வியோ மத்தினு ஞானமா யுல்குண் டங், காடி டத்தினு மருஞ்சமை விடத்தினு மதுவது வதுவா முன், †கூடு நற்கழல் வல்லப நினைதொறுங் குலைகுலை குலைந் தேனே. 17

† கூடி டத்தினும் என்றும் பாடமுண்டு.

### நித்தியானந்ததரிசனம்.

* உன்றனுக் குவமை நீயா முத்தமா வுன்ற னுண்மை
நின்றவப் பரம சுக்க மேனுதா னீச னாகு
மென்றனைத் தேடி யாண்ட வியல்புதா னேதி யாவு
மொன்றுமற் றுன்வி னோத மோருமா றறிகி லேனே. 18

*உன்னு மெல்லையு மொளிமறை யாகம முதற்கலை யவையெல்லாம்
பன்னு மெல்லையுங் கடந்தி தூரநற் பழுதறு சமைவாய
தன்னை யுங்கடந் தொளிர்வது குருபரன் றருநிலை மையதென்ற
நன்ன லந்திகழ் வல்லப நினைந்துள நடுநடுங் கிடுமெந்தாய். 19

* ஓவிலா தொருமைத் தாகு முன்றிருப் பாதத் தேனைப்
பாவியேன் கண்டு வாரிப் பருகுநா ளென்றோ வென்றோ
வாவியே யமுதே தேனே யத்தனே யடிய னேற்குத்
தாவில்சீ ரருளா லுன்னைச் சயம்புவே காட்டி டாயே. 20

தத்துவசரிதை

* அளவிலாப் பரமா னந்த மாகுநற் பாதத் தேனை
யுளமெலா நிறையத் தேக்கி யுய்ந்துநான் வாழ்வ தென்றோ
தளர்விலா மறைக டேடத் தரணியி லுருவாய் வந்து
பளகனேன் றன்னை யாண்ட பரமகா ருணிய மூர்த்தி. 21

தத்துவசூளாமணி.

* நீக்கொரு பொருளு மில்லா நிமலவா னந்தத் தேனைத்
தேக்கியென் னுள்ள மாரத் திளைத்துநான் வாழ்வ தென்றோ
வாக்கமு மழிவு மில்லா வடியவர் களியா நின்று
ரேக்கறு கின்றே னாயேன் செய்வதெ னியம்பி டாயே. 22

* வாக்கொடு மனமி றந்த மதுரநற் கனியே யென்றன்
பாக்கிய பரிணா மத்தின் பழுதறு பயனே யுன்ற
னீக்கமி லடியா ரெல்லா நின்னருண் முழுந்தி வாழ
வேக்கற வைத்த கால மெனக்கினி முடியா தோதான். 23

திருவாசகம்.

* மேவு முன்ற னடியாருள் விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள் பங்கா வுன்றன் கருணையினாற்
பாவி யேற்கு முண்டாமோ பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென் றியாது மின்றி யறுதலே. 24

தாரா வருளொன் றின்றியே தந்தா யென்றுன் றமரெல்லா
மாரா நின்றா ரடியேனு மயலார் போல வயர்வேனோ
சீரா ரருளாற் சிந்தனையைத் திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. 25

மெய்ஞ்ஞானவிளக்கம்.

எந்தை போற்றியென் னெம்பிரான் போற்றியென் பிறவிவே ரறுக்கின்ற, தந்தை போற்றியென் றம்பிரான் போற்றிநற் சராசர வுலகிற்கு, முந்தை போற்றியுன் னுண்மையா கிலேதனை மூடனேற் கருள்போற்றி, சிந்தை போற்றியென் சிவப்பிர காசநற் றேசிகேந் திரபோற்றி. 26

சொரூபாபேட்சை முற்றிற்று.

## சொரூபஸ்திதி.

மெய்ம்மொழி.

எண்டிசைப் பொருட்கு மேலா மின்பவீ டெங்ங னென்னிற்
கண்டுசர்க் கரைநெய் பாலுங் கனிகளுஞ் சுவையென் னென்று
ளுண்டுபா ரெனக்கொ டுத்தாங் குரைப்பதன் றுன்பா னீயே
கண்டனு பவிப்ப தேகாண் காட்டுவோ மஞ்ச வேண்டாம். 27

ஞானமிர்தம்.

வாழிய பெரும வாழி வாழிய
வன்மீ ஞணைத் தொன்முது கடவுள்
வலம்படு கொற்றந் தொலைச்சி மீளா
தடங்கருஞ் சீற்றத் திடங்கெடக் கடக்கு
மடம்படு ஞான வாழி யுடம்பெறி
வளிவரை நில்லா தென்னு மாத்திரந்
தெளிவரத் தெருட்டினை செல்வ வளியேன்
றற்பொரு விறந்த மெய்ப்பாந் தெரியா
தெய்த்தன ளுயி ரிருவினை யின்னு
மெய்த்தன வல்லவோ முனிவ மொய்த்திடை
யெய்துவ வெனைப்பல வன்றே யித்திறன்
யானிற் கிளத்தல் சாலு மானின்
குளம்புறு குழிவாழ் கலங்கற் சின்னீர்
மகரா லயத்தின் மயக்கறத் தெளித்தலிற்
கவரா தென்று கண்பனி தூங்க
மெய்ம்மயிர் புடைத்துத் தன்முதல் கலங்கி
யிழுந்த நெஞ்சமோ டிறைவன் பாத

மோதினன் வீழ வவனை நோக்கித்
தானும் யாது மாகா திவ்வென
வொண்ணு நீதிய னீதியாத் தனுது
தெய்வ நாட்டந் தைவரு மளவைக்
குவிவா யமையாக் குடநிறை தீநீர்
பருவாய் வானைப் பார்ப்பினே டலைதோ
தினகர னொளிசேர் சிலைகா றீயிற்
றுரியமு மிறந்த றாயோன் றாய்மை
யருளினு னருள்பெற் றெழுந்தோற்
கிளிசேர் தீஞ்சொ லியம்பின னினிதே.

(இ-ள்) வாழிய—வாழி (எ-து) வாழ்வாயாக மகான்மாவே வாழ்வாயாக வாழ்வாயாக வலிய மகரக்கொடியையும் வெற்றியையும் பழமையையுமுடைய காமதேவன் இச்சைபண்ணுவிக்கும் வலிய வெற்றியைக்கொடுத்து வொழியாதே அடங்குதற் கரிதாகிய மாற்சரியத்தை நின்னிடத்துச் சிறிது மில்லாதபடி செயிக்கும் அறியாமை நீங்கிய ஞானத்தையுடையோனே வாழ்வாயாக,

உடம்பெறி—செல்வ (எ-து) சரீரமானது அடிக்கிற காற்றினளவும் நிலையாதென்னும் அந்த வேறுபாட்டை யெனக்குத் தெளியும்படி யறிவித்தருளினுய் ஞானச்செல்வனே,

அளியேன்—முளிவ (எ-து) நின்னலே அநுக்கிரகம்பெற்ற அடியேன் தனக்குவமையில்லாத சத்திய ஞானனந்த சொரூபமான பதியுண்மையையறியாதே தேகம் விட்டேனுகில் இன்னமும் பாவபுண்ணியங்கள் என்னைப் பந்திப்பனவல்லவோ அவாவறுத்தோனே,

மொய்த்திடை—அன்றே (எ-து) கன்மங்கள் பந்தித்தவிடத்தே எனக்குக் கூடுவன எண்ணிறந்த பலவாகிய ஜனன மல்லவோ,

இத்திறன்—சாலும் (எ-து) நின்னுடைய திருமுன்பே அடியேன் இந்த வேறுபாடுகளை விண்ணப்பஞ் செய்த தெத்தை யொக்கு மென்னில்,

மானின்—கவராது (எ-து) மானின் குளம்படி யழுத்தின குழியிலே நின்ற அற்பமான கலங்கனீரைக் கொண்டு சமுத்திரத்தி லடங்கிய நீரை உவர்ப்பு நுரை முதலாகிய தோடமறவேண்டுமென்று தெளித்தலை யொக்கும்,

என்று—விழ (எ-து) என்று கூறிக் கண்ணீர் வாரச் சரீரத் துண்டாகிய உரோமம் புளகமாகித் தானென்னு முதல் கலங்கிக் கரைந்த நெஞ்சத்தோடே ஆசாரியன் சீர்பாதங்களிலே தோத்திரம் பண்ணி வீழ,

அவனை—அளவை (எ-து) இப்படிப்பரிபாகத்துடனே விழுந்தசீடனை நோக்கி ஆசாரியனுங் கிருபையாலே தன்வசமழிந்து இன்னபடி யிருப்ப

னென்று சொல்லுதற்கரிய நீதியையுடைய பரமசிவனுடைய சிவத்துவத்தைப் பாவித்துத் தனது தெய்வீகத் திருநயனத்தாலே அநுக்கிரகித் தருளுமளவில்,

குவிவாய்—தீநீர் (எ-று) குவிந்த வாயில்லாத குடத்தில் நிறைந்த இனியநீர் போலவும்,

பகுவாய்—பார்ப்பினோடு (எ-று) பெரிய வாயினையுடைய வாளைமீனாகிய தாய் பார்க்கக் குஞ்சு வளர்ந்தாற் போலவும்,

அஃதோ (எ-து) இந்த வதிசயமாத்திரமேயோ,

தினகரன்—தீயில் (எ-து) ஆதித்தன் சந்நிதியிலே சார்ந்த சூரிய காந்தக்கல் தீக்கான்றாற்போலவும்,

துரியமும்—அருளினன் (எ-று) துரியாவத்தைக்கும் அப்பாலாகிய நின்மலனுடைய பதித்துவத்தைத் திருவுள்ளம்பற்றினன்,

அருள் பெற்று—இனிதே (எ-து) இங்ஙனம் அநுக்கிரகத்தைப் பெற்றெழுந்த சீடனுக்கு இளியென்னு மிசையை யொத்த இனிய வசனங்களாலே அப்பதியுண்மையை யறிதலைத் திருவாய்மலர்ந்தருளிச் செய்தனன்.

சொரூபஸ்திதி முற்றிற்று.

## சொரூபதரிசனம்.

### தத்துவாமிர்தம்.

* மைந்த முன்புக விருவகைப் பாழியல் பெனலாய்
வந்த வெல்லைகண் முடிந்தவிம் மதிப்பரும் பாழைச்
சந்த மொன்றற விழுங்கிய சயம்பிர காச
மிந்த கண்டிடென் றிறைமோன மொழியினி லளித்தான்.

சொல்லு மெல்லைகண் முடிந்துதுரி சொன்று மிலதா
யெல்லை யின்றிய வகண்டபர வின்ப மிதென
வல்லவன் புதல்வன் வாழவொரு மோன மொழியா
லொல்லை கண்டுதிளை யாயென வுகந்த ருளினன். 30

### சமாதி.

* இவ்வண்ண மருளி மேலொன் றியம்புவ திலாமை யாலே
செவ்வண்ண வான மேனிக் கருணையே திகழ்ந்து தோன்றக்
கைவண்ண வனலும் வேணிக் கங்கையுந் தரித்த காமர்
மைவண்ணக் கண்டத் தோனு மவுனமே வழங்கி னானே. 31

தத்துவசித்தி.

* வான மாதி மயக்கற வாய்மன
னான கோசரி யாம லகண்டமாய்த்
தானி றைந்தொளி ருஞ்சதிர் காட்டினன்
மோன மாமொழி யான்முனி புங்கவன். 32

தத்துவாமிர்தம்.

* காரணத்தினை விழுங்கிவய முண்டபூரணக் கண்ணுமற்றிவண மென்றுகரு தற்கரியவச், சிரணச்சமை விறந்துதிகழ் †நற்சமைவ தாய்த் தெளிவதாகுபிர காசவொளி யுண்மையதளித், தோரணத்திக மூலப்பில்சுக சாகரமதா மியல்பளித்தினி யியம்புத விறந்தமுடி வைக், காரணத்தர்வெளி காட்டின ரிருந்தடியனும் கண்டுகொண் டுற விருந்தன னிருந்தபடியே. 33

† நற்சுயமதாச் சிவமதாயபிர என்றும் பாடமுண்டு.

* நனவு றுங்கன வொடுங்குத விறந்துணர்வதாய் நாடி மேலுறு பரங்கம திறந்தறிவிறந், தனவ ருஞ்சகமு முண்டது மிறந்துவமை யுண் டொப்பி லாதொளி ருலப்பில்சுக சாகரமளித், தினம றும் பரம வின்பவெளி நல்கியினிமேல் வினவ றும்படி முடிந்தநில மிங் கிதுவெனு, வனைய வங்கண வியம்புத விறந்தபுதல்வ னா வங்கு ணர நன்கினி திருந்தருளினன். 34

சொரூபதரிசனம் முற்றிற்று.

உபசாந்தம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1956.

## 11. சுவானுபூதி.

வினாவிளக்கம்.

* கண்டு கொண்டனன் முடிந்தபத நின்கருணையான்
மொண்டு கொண்டுமுடி யாதமிகு பேரமுதமே
மண்டி யுண்டுகளி யாமதுர வாரியெனைநீ
தொண்டு கொண்டவியல் சொல்லும்விர கேதறிகிலேன். 1

### தத்துவாமிர்தம்.

* அண்ட முன்றிகழ் பதங்களு மவத்தை களுமா
யெண்ட ரும்படி யிசைந்திட விசைந்தி டவினே
கண்டு கொண்டிடவு நீசெய்த விநோத மதெலாம்
விண்டொ ழிந்திடவு நீசெய்விர கேதறிகிலேன். 2

* சோல்லி றந்தவப ரோட்சமுத் திரையினி லிருந்து
நல்ல தன்முடி வினைநடித் தேயிறை காட்டச்
சொல்லி றந்தநற் சுயம்பிர காசவா னந்த
மல்கி யேயுள நிறைந்தெதிர்த் துக்கவுட விடுமால். 3

* பூர ணஞ்சுடர் வடிவதாய்ப் பொருவில்சிற் பிரகாச
மேர ணந்திக ழொளியின்ப † வொழிவினிற் றெளிவாய்ச்
சீர ணந்திகழ் சிவப்பிர காசநற் றெளிவி
னேர ணந்தனை யியம்புமா றெதுமறி கிலனுன். 4

† வொளியினிற் என்றும் பாடமுண்டு.

* பூர ணந்திக ழமுதமாய்ப் பொருவில்சிற் பிரகாச
மேர ணந்திகழ் சுவையின்பஞ் சுவையினிற் பயனுய்ச்
சீர ணந்திகழ் சிவப்பிர காசவா ரமிழ்துண்
டார்வ தின்றியப் பூர்த்தியெப் பரிசறை குவனுன். 5

* முப்ப தங்களின் மொழிந்துற முடிந்த பொருளா
மிப்ப ரம்பத மிருந்தபடி யென்ற றையுமா
றப்ப வொன்றும்விர கின்றிய தகோவ திசய
முய்த்தி ருந்துவிட லன்றியினி யொன்று மறியேன். 6

முடிந்த தின்றுமுழு துந்திகழு மோன மதிலே
படிந்த ரும்பொரு ளிருந்தது விருந்த படியே
விடிந்த தெங்கும்வெளி யாகியது மாய விரவு
முடிந்த திங்கிறைவ வென்பல மொழிந்தி டுகுவேன். 7

### அனுபவசாரம்.

* சேப்பொணு தென்னு லத்தைச் சிரசாதி பாத மந்தங்
கப்பெலாம் விட்டு ரோமங் கம்பித்து விதிர்வி திர்த்துள்
ளப்படி யளிசீ தத்தா யங்கங்க ளனைத்து நெக்கே
யொப்பில்பே ரின்ப மாமுன் ஞெண்கழ லிருந்த வாறே. 8

* பரந்தித மகம தாகும் படாறுத் தருளி மீளத்
திருந்திக சகத்து தித்த துடனெலாச் செயலுங் † தீர்ந்தே
னிருந்தவெவ் வுயிருந் தானு யிருந்துள பானந் தன்னைக்
கரந்துள நிறைந்தி ருந்த கள்வனு னறிகி லேனே. 9

† தீர்த்தே, யிருந்தபின் னுலகுந் தானு யிருந்துள புரணந் தன்னைக் என்றும் பாடமுண்டு.

* பண்டுநா னெனமெதன் றெண்ணப் பண்ணிய மாயம் போல
வண்டனே மீளென் றென்னை யாட்டிய தெல்லா மென்னே
தொண்டனே னுய்ந்தே னுய்ந்தேன் றுளக்கற நிறைந்த பாத
மொண்டுநான் பருகி மேன்மேன் மொழியுமா றறிகி லேனே.

நித்தியானந்ததரிசனம்.

* கள்ளத்தே னளவாய் வந்த கள்வனே கமலத் தோனும்
வெள்ளத்தே துயிலு மாலும் விரும்புமற் றெவரு நிற்க
வுள்ளத்தே புகுந்தென் றன்னை யுண்டுநீ யிருந்த வண்ணம்
விள்ளத்தான் விரகு காணேன் விளம்புமா விளம்பி டாயே. 11

மூலசித்தி.

* என்றுமெக் காலு மெங்கும் யாருளு மிறைவ நீயே
துன்றிமற் றொன்று மின்றி யிருந்தவா றிருக்க விங்ஙன்
பின்றுமற் றுளவாப் பேணி யிதமகப் பேய தேறிச்
சென்றிடச் செய்த தெய்வ விச்சையென் செப்பி டாயே.

தத்துவநிலயம்.

* உம்பர்தா முணரு மாறெ ணொளிமறை யுரைக்கு மாறெ
னிம்பர்தா மென்னே யுன்னை யியற்றியாற் காணு மாறெ
னெம்பிரா னிங்ஙனேவந் திப்பரி சிருக்கி னல்லாற்
றம்பிரா ணட்டுந் தன்மை தவிர்ப்பவ ரெவர்மற் றந்தோ. 13

மெய்ம்மொழி.

* எத்தனை யெண்ணி லூழி பிறந்திறந் தேது மோரா
மத்தனு மென்னை யோர்கான் மாத்திரை யினின்வே தித்துச்
சுத்தமா மின்ப †ரூபத் தூரமின் றதூர மாக்கி
வித்தகா நீதான் செய்த விச்சைய திருந்த வாறென். 14

† ரூபந் என்றும் பாடமுண்டு.

---

துறுந்திரட்டு.

நனவென வுலகந் தன்னி னடக்குமவ் விடய மெல்லாங்
கனவெனக் கழிந்த துன்றன் கருணைநான் கண்ட போதே
மனவினைக் கெட்டா வின்ப வடிவதே வடிவ தானல்
வினவிடப் படுவ துண்டோ வேறுமற் றளவை கொண்டே. 402

### அநுபவசித்தி.

ஊனெங்கே யுயிரெங்கே யுணர்வெங்கேதா னுயர்வெங்கே யிழிவெங்கே யூர்பே ரெங்கே, நானெங்கே யெனதெங்கே நாநா வெங்கே நலந்தீங்கா மவையெங்கே நாச மெங்கே, வானெங்கே வளிதீநீர் மண்ணதெங்கே மாசெங்கே தேசெங்கே வராதே வந்து, தானிங்கே யளித்தமலர்த் தாளேயாகிச் சூழமைந்திருந்த தல்லதுமற் றறியோ மொன்றும். 15

### திருவாசகம்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, யாக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. 16

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதிள்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்.

### திருவாய்மொழி.

உளரு மில்லை யல்லரா யுளரா யில்லை யாகியே
யுளரெம் மொருவ ரவர்வந்தென் னுள்ளத் துள்ளே யுறைகின்றார்
வளரும் பிறையுந் தேய்பிறையும் போல வசைவு மாக்கமுமாய்
வளருஞ் சுடரு மிருளும்போற் றெருளு மருளு மாய்த்தோமே.

சிக்கெ னச்சிறி தோரிட மும்புறப் படாத தன்னுளே யுலகுகளொக்க வேவிழுங் கிப்புகுந் தான்பு குந்த தற்பின் [கும்
மிக்க ஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் துளக்கற் றமுதமாயெங்
பக்க நோக்கறி யானென் பைந்தா மரைக்கண்ணனே. 19

சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும் பாழேயோ
சூழ்ந்ததனிற் பெரியபரா னன்மலர்ச் சோதியேயோ
சூழ்ந்ததனிற் பெரியசுடர்ஞான வின்பமேயோ
சூழ்ந்ததனிற் பெரியவென் னவாவறச் சூழ்ந்தாயே; 20

## திருவாசகம்.

* அன்னையு மாயமும் கேண்மின்களோவெனதாருயிராய சிவபெருமா, னென்னதியானென்னுமிவ்விரண்டு மென்னுளாறுயிருந் தேகவர்ந்தான், முன்னையுறவும் பிறவுங்காணேன் மூவுலகும்பரந் தெங்குந் தானு, யின்னதளவென்றியம்ப வொண்ணு வின்பவெள்ளத்தெனை யிட்டனனே. 21

வானுநிலனு மடையக் கேண்மோ வள்ளல் பெருந்துறை மேய பெம்மான், ருனுந்தன்றையனு † மாகி யென்றன் சதுரை யழித்துமா றந்த போதே,யூனு முயிரு முணர்வு மொன்று யுரோமமெல் லாஞ்சிலிர்ப் பித்தென்னை,யானு மெனையறி யாத வண்ணமின்பவெள் ளத்தெனை யிட்டனனே. 22

† மென்னை யாண்டென் என்றும் பாடமுண்டு.

## அநீக்கிர்தாமிர்தம்.

நாலு மறையிறு நாடரி தாகிய ஞானவா னந்தமேயாகி நலமிக்க, கோல மிருக்கும் படியே குரவ னிருக்கும் படியே. 23

கழிவற வெல்லாமா யேதுந்தா மன்றிக் கரையில்லா வின்பமாகிய தம்பிரா,னெழிலி ருக்கும் படியே யிறைவ ரென்னே யிருக்கும் படியே. 24

அளவி லாரண மயன்முன் னுகிய வவர்கள் வாடிட வென்னுள்ள மேவிய, வளமிருக் கும்படியே யென்னை மாளவுருக் கும்படியே. 25

வானவ ரின்னங் கனவிலுங் கூட மதிக்கு மாறறி யாவள மாய தானி ருக்கும் படியே தம்பி ரானிருக் கும்படியே. 26

† ஆர ணத்தாலு மோர்வரி தாய வமல மாகிய வளவிலா வின்ப, ‡ மோர விருக்கும் படியே யொப்பி லானிருக் கும்படியே.

† ஆவ ணத்தாலு என்றும், ‡ மோவிருக் கும்படியே என்றும் பாடமுண்டு.

உவமை யொன்றொடு மிடவரி தாகி யொழிவ தின்றியே யுளமெ லாநிறைந், திவரிருக் கும்படியே யிவ ரென்னையுருக் கும்படியே. 28

சுவானுபூதி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 1984.

## 12. கிருதகிருத்திய விலக்கணம்.

### வினாவிளக்கம்.

* தன்னனு பூதி யாலே தான்வியந் துருகா நின்ற
வன்னநற் கிருத கிருத்திய னரியநல் விறையை நோக்கி
யின்னது செய்தா னென்ன வியம்பொணு தந்தோ வந்த
நன்னலங் காண்ப தல்லா ளுவிறு னவில லாமோ. 1

### தத்துவசித்தி.

* என்னை யும்மென தாக விசைந்தபேர்
தன்னை யும்மறி யாத சழக்கனே
னுன்னை யேயனை யாயுன † தாளடைந்
தென்னை யுண்மை யுணர்ந்தன னின்றுநான். 2

† தன்பரு, ளென்னை யாண்டது வென்னைகொ லீசனே என்றும் பாடமுண்டு.

* முன்பி றப்ப திறப்பதை யேமுயன்
றென்பி றைச்சியி னிட்டெனை விட்டுளேன்
வன்பி றப்பை யறுத்தது வள்ளலே
யென்பெ றப்பய னென்றனி நாயகா. 3

### மெய்ம்மொழி.

* எல்லாருங் காணப் பொல்லா விரும்பைப்பொன் னுக்கி யத்தைப்
பல்லாருந் தொழுந்தே வாகப் பண்ணிவைத் தாங்க ளுதிப்
பொல்லாவென் பிறவித் துன்பம் போக்கியாண் டின்பந் தந்தாய்
சொல்லாய்கை மாறென் செய்கேன் † றேற்றிய வுனது முன்னே.

† றேற்றியா வுளது முன்னே என்றும் பாடமுண்டு.

### ஞானசூரியன்.

* என்றுரை செய்து மேன்மே லெழுதரு முவகை வெள்ளந்
துன்றிட வுததி யேழ்போற் றுளக்கமி லன்பான் மிக்கு
நின்றிறை யருளே நோக்கி நெக்குநெக் குருகி நேசத்
தொன்றிய வுளந்த ழுத்தங் குறைந்தன னின்ன செய்தான். 5

### பரமார்த்ததரிசனம்.

தொழும்புகழு மெய்ம்மயிர் துளக்குமுயிர் சோரு
மெழும்புவன மேழுமவ னன்றியெதிர் காணுன்
விழுங்கவுறு வானென விரும்பிமெய்ம் மயங்கா
வழும்பரியு மென்செய்தன னென்றறிய லாமோ. 6

மண்ணுற வணங்குமயிர் குச்செனங்கிரைக்குங்
கண்ணுமன முங்கரைய நின்றுகை முகிழ்த்தே
வெண்ணுமுல கங்களையு மியாவரையு மேனாட்
பண்ணுமவன் முன்புசில நின்றுபகர் வுற்றான். 7

தத்துவசித்தி.

* ஆதி யேதிகழ் நீதி யேயள வற்ற சிற்பர மாகிநீள்
சோதி யேமிகு போத மேயெழு சொற்றொ டைக்கதி தூரமே
நீத னேனுடை நாத னேநிகழ் நித்த சுத்த விமுத்தமே
வேத நூல்கிளர் மேதை யேவினை வற்ற சிற்பர யோகமே. 8

* அய்ய னேயென தன்னை யேயறி வாகி யேயறி வித்துளாய்
பொய்ய னேனுடை மெய்ய னேபொது வெங்கு நின்ற புராணனே
செய்ய தாமரை யன்ன தன்மை திகழ்ந்த பாத யுகங்கண்முன்
கைய னேன்வினை கொய்ய நல்கிய கார ணாகரு ணாகரா. 9

பரமார்த்ததரிசனம்.

* உண்டாக வுலகனைத்து மீன்றாய் நீயே † யுவரானு முன்னுண்மை யுணர்ந்து கூறிக், கொண்டாடப் படுவாய்நீ மெய்ம்மை நல்கிக் குருவாகிக் குற்றங்க டீர்க்கின் றாய்நீ, ‡ யெண்டாவு மறையனைத்து முன்னின் மிக்கா ரில்லையென நின்றேது வெடுத்துக் காட்டக், கண்டாலு நின்பெருமை காண மாட்டாக் கண்ணிலா தவர்வேறு காண்ப துண்டோ. 10

† யுண்மையா யெவரானு முணர்ந்து என்றும், ‡ யென்றாலும் என்றும் பாடமுண்டு.

* ஏயும் பரிசிவ் வுலகெல்லா மென்றும் பிறப்பித் திடுகின்ற
தாயும் பிதாவு மாவாய்நீ தாய்தாய் தந்தை தந்தையுநீ
யாயும் படியை யல்லாத வையா வுன்னை யடியேனென்
மாயும் பிறவித் துயர்தீர நூறா யிரக்கால் வணங்கினேன். 11

என்பே ரிடும்பை கெடும்வண்ண மின்னந் தொழுதே னெந்தாயுன், முன்பே தொழுதே னுன்னுடைய பின்பே முறையால் வணங்கினே, னன்பே யடியே னாருயிரே யகலா விந்தப் பெரும் பிறவி, வன்பே கெடவுன் றனையெங்கு மறித்து மறித்தும் வணங்கினேன். 12

தத்துவாமிர்தம்.

* தொழுதெ ழும்பணியு நின்றுபுக ழுஞ்சு ழல்வுறுஞ் சொல் லும் வாய்குழறு மெல்லையற வன்பு பெருகு, மழுகுங் குழையு மென்புருக நன்பு ளகம்வந் தாகம் விண்டுவிதிர் கொண்டயரு நின் று தெளியு, மழல தொன்றுமெழு குஞ்சிலை யெனும்ப டிகரைந் தமரர் கண்டிட வருந்துபர மின்று வெளிகண், பழுத றும்படி யுகந்திட விருந்த வருளின் பரிசு கண்டலமும் வந்திருகை குஞ்சி குவியா. 13

மெய்ம்மொழி.

* உணங்கிடா தனைத்து நீயாய் நின்றுமொன் றல்லாய் போற்றி
யிணங்கிடுஞ் சகத்தா மிந்த வியந்திரத் தலைவா போற்றி
பிணங்கிடுஞ் சமய தர்க்கப் பிணக்கறுத் தாண்டாய் போற்றி [றி.
வணங்குமென் பவநோய் † தீர்த்த வயித்தியப் பெருமான் போற்

† தீர்க்கும் வைதிகப் என்றும் பாடமுண்டு.

பரமார்த்ததரிசனம்.

அணித்தகைய சோதியம லாவுனரு ளாலே
கணித்தலரி தாயபிற விக்கடல் கடந்தேன்
பிணித்தபெரு மாயைமயல் கெட்டதுபி ரானே
பணித்தபணி யல்லது செயப்படுவ துண்டோ. 15

வாசுதேவசதகம்.

* இல்லையென் றுலகை நக்குக் கனவொக்கு மென்று விட்டே
னல்லவுன் னருளு வாயாற் பிறவிமாக் கடல்க டந்தேன்
சொல்லெலா நித்த சுத்த முத்தரு பத்த னானே
னெல்லைதீ ரடிமை செய்யு மிதுவலா லல்ல தில்லை. 16

தத்துவசித்தி.

* என்று பன்னி விழுந்து மண்ணி லெழுந்த னேக விதங்களால்
வென்று கண்ணுக வம்பு மாரி விரைந்து ரோம மரும்பமுன்
சென்று நின்ற பவங்க ளோடொரு சேர்வி லாவகை செய்ததா
ளொன்ற வந்து விழுந்து கூர்மை யொடுங்க வன்பி னுறங்கினன்.

கிருதகிருத்திய விலக்கணம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2001.

# 18. அநுபூதிப் பகுதி.

## 1. அருட்டிறம்வினவல்.

### வினவிளக்கம்.

* பத்த ராவியே பரம காரணு பாவி யேனையுன் பழைய வன் பரோ, டெத்தி யாளவந் தருளு கோலமே யெலையி லாதநற் கருணை வாரியே, சித்தி யாதநோர் சித்தி யாகுமெய்த் திகழு நல்லருட் கழல துற்றிடு, நித்தர் பாலுமுன் னருளி ரண்டதோ நிமல நாயகா வருள வேண்டுமே. 1

* சென்னி மீதுநற் கழல்கள் வைத்தலுந் திரிவு செய்துபோ தகம தாமருட், டன்னி னேதுமோர் குறைவி லாமையுஞ் ஞால வொத்துமெட் டனையு † மொக்கிலா,வன்னி ·மீதுசேர் மெழுக தாகுவார் வலிய கல்லிரும் பனைய ராகுவா, ரென்ன மாயமீ தெனவு ணுயினே னறிகி லேனெனக் கருளு நாயகா. 2

† மொக்கிலார் என்றும் பாடமுண்டு.

அருளு ரைக்கின்மற் றகில வர்க்கமுற் றடைவ தொக்குமிக் கிடவ டித்துமெய்த், திரளு கற்கனிச் செறியு ளத்தினிற் றிகழு கிற்பர்சிற் சிலரொ னற்றவா, மருளு மத்தரெர்த் தழுதுநெக்குநெக் குருகி வர்க்கமற் றிடுவ ரத்திறத், தருளை யெத்தினிற் றெருளு கிற்பதப் பொருளை மற்றெனக் கருள்செய் முற்றவே. 3

* கனவினு மமரர் கண்டுங் கேட்டுமற் றறியா வின்ப
நனவினின் வினவி வந்து நயந்துரு காமை கேளாய்
மனவினை யிறந்த வின்ப வார்கழ லுளத்து மன்னி
நனிமிகச் சுவைதா ராமை யென்றுகொண் ஞான வேந்தே. 4

* உண்ணுநெஞ் சுருகா தென்ப துலகினி னெவரு மாய்ந்த
வெண்ணுரு மொழிய தன்றோ வென்றபி னீசன் பொற்றாள்
கண்ணுவி யொடும னந்தான் கனிதரச் சுவைதா ராதே
லண்ணுவங் கவரு ளந்தா னதிசயித் துருகு மாறென். 5

* அழிவுறு முடலின் வந்தங் கழிந்திடுஞ் சிற்றின் பங்கட்
குழிதர வுருகு கின்று னுலப்பிலாப் பேரின் பத்தைக்
கழிவற முகந்து கொண்டாற் கரையிறந் துருகுந் தன்மைக்
கழலெதிர் மெழுகு மொப்பன் றையமி லறிஞர் கோவே. 6

மெய்ஞ்ஞானவிளக்கம்.

* தூமமது வெங்குளது வங்கனல தாமா
றேமமுற வேயிறைவ னுளுமவர் பாலுந்
தாமமைவி லாதுருகு தன்மைய ருளஞ்சேத
யாமிறைவ னாரிய தாளுமென வோரே. 7

உரைத்தநன வாதிக ளுலப்பிலவை முற்றும்
வரைப்பில்கழன் மற்றுமுறை செய்தவுரை தன்னைத்
தரித்தழுகி தாகவித மாகமொழி வுற்றுற்
கருத்ததனின் மெய்க்கழல் கனிந்த † திற மாமே. 8

† நிற மாமே என்றும் பாடமுண்டு.

மூலசித்தி.

* திரித்தபின் வைத்த வைத்த பதமதே திடமாய் முற்று
மரித்துநற் சமைவாய் நின்ற வருட்கழ லமுதை மாந்தித்
தரித்திடா துருகி னையுந் தன்மைய ருளத்தா னீசன்
பிரித்தவா றடைவு பேணிப் பேசிலென் பேசாக் காலென். 9

அறிவினுக் கதிப னுய வருந்தவத் தரசர் கோவே
முறிவதற் றிலங்கி வற்று முற்றுத லில்லா வின்பஞ்
செறிவுறக் கண்டா ருள்ளாந் தீமெழு காகா தோமற்
றிறைகழற் சுவைதா ராமைக் கிசைந்தவே தூக்க ளுங்கேள். 10

* பொருத்தமாம் பொறிபு லன்கள் பொருந்திடுஞ் சிற்றின் பத்தி
னருத்திதான் செல்ல லுண்டே யாயிடி னிறைவ னுர்பாற்
கருத்ததும் பொலியா தாகு மதுகழற் சுவைதா ராமை
விருத்தமா † மன்ப தொன்றின் மேலவா விரண்டின் மேவா. 11

† மனம தொன்றின் மேலவா விரண்டின் மேவா என்றும் பாடமுண்டு.

* உரைமன மொன்றி யன்பா யொண்கழல் கூடா தாருட்
குரைகழ லிருந்தாற் போன்மற் றல்லது குடிகொ ளாதால்
விரைவொடுங் கூடுங் காலே விமலனு ரருளின் செவ்வி
கரையற முழுநோக் கன்றேற் கரத்தினு லலர்த்தும் பூவாம். 12

பாதநல் கிடுவா னீசன் பார்த்தவப் பொழுதே நெஞ்சிற்
கோதிலா வின்பங் கூறை பொதிந்தமா ணிக்கம் போலாய்த்
தீதற மொழிவ முன்னந் திகழ்ந்திடு முழுநோக் கன்றேற்
போதக மெல்லாஞ் † செய்தேன் போதகத் தினினுங் கேளாய்.

† செய்தேன் என்றும் பாடமுண்டு.

24407

* வருத்தமாங் காண மெல்லா மாளவவ் வியத்தந் தன்னி
லிருத்திஞ லாறி யின்ப மெழில்கொள விருந்து தீர்ந்தாற்
புரிப்பதாங் துரிய மன்றேற் புரிந்தபோ தக்க ஞவாங்
திருத்திலும் பின்னை யெல்லாந் திகழ்ந்தது சுவைதா ராதால். 14

* சொல்லுநற் றுரிய முற்றுற் றுகளறு † மறிவின் மீண்டே
யெல்லைய திறந்த போதங் கிருப்பினு மிருந்த போதுட்
சொல்லிய வறிவி னேதுங் கருத்துருத் தெழாமற் றீர்ந்தா
லல்லது துரியா தீதம் ‡ புரிப்பினு மதுபோய்க் கீழாம். 15

† மறிவில் வீண்டே என்றும், ‡ புரியினு மதுபோற் என்றும் பாடமுண்டு.

* புரிந்தவத் துரியா தீதம் புகன்றிடிற் சுழுத்தி தானுய்த்
திரிந்ததி னெழுமப் † போதே திகழும்போ தக்க ஞவா
யிருந்திடு மாத லாலே யினைந்தவப் பதங்க டோறுந்
திருந்துநற் கழரு னின்று திகழ்ந்துநற் சுவைதா ராதால் 16

† போதந் என்றும் பாடமுண்டு.

* ஓதிய பரிசின் மேலு முள்ளன வளவ தன்று
மேதுமோ ராத னைத்துங் கெட்டிட விரையா நிற்ப
ராதலா லிறைவ ஞன தாகவென் றருளி னத்தா
லோதிய பரிசுண் டாகு மொண்கழல் சுவைதா ராதால். 17

புரிந்தருண் முழுநோக் காகிப் புரையறத் தோய்தல் வாய்ப்புற்
றிருந்தநேர் பட்டா ருள்ளத் திறைவஞர் செய்ய பாத
மிருந்தவ ரென்பு தானு மெழில்கொள வுருக்கு மன்றேற்
றிருந்திடச் செப்ப லாயுஞ் செய்வதெ னுள்ளங் கல்லாம். 18

* ஒப்பிலாப் பாதத் தேனுண் டொளியழன் மெழுகாய் நின்ற
தப்பிலா வன்பர் தம்மைச் சதுமறைக் கரிய பாத
மொப்பற வுருக்கு மாறு முருக்கிடா வேதுத் தானு
மிப்படி யென்ன மைந்த னிறைதிருக் கழலின் வீழ்ந்தான். 19

திருவந்தாதி.

எனக்கேயும் வண்ண மெழிறிக ழுந்திரு மேனிசாத்தி
மனக்கேத நீத்த மறையவ னேமறை தேடரிய
வுனக்கே தகுமுன்னை யோவாது வாழ்த்தி யுருகியுன்ற
டனக்கே பணிந்து தமியே னுவப்பத் தருவதுவே. 20

அருட்டிறம் விஞவல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2021.

## 2. அனுபூதியுரைத்தற்கருமை.

வினாவிளக்கம்.

தற்பரா னந்தந் தாமாய்ச் சமைந்தவவ் வனுபூ திக்கண்
சிற்பர னருளின் றன்மைத் திறமது வினாவி னாற்போ
லற்பமு மானு பூதி யறையொணா வருமை யுந்தான்
செப்புவ ரறிஞ ரந்தத் திறமது மொழிகு வன்கேள். 1

நித்தியானந்ததரிசனம்.

மோகித்த காமத் தின்கண் முயற்சியிற் சுகமுந் தண்ணீர்
தாகித்த தாகந் தானுந் தாகித்தா னறிவ தல்லா
லேகத்த பொருள தாகி யிடைவிடா தமுத † மூறும்
போகத்தை நுகர்வ தல்லாற் போதத்தாற் புகல லாமோ. 2

† மூன்றும் என்றும் பாடமுண்டு.

ஞானமிர்தம்.

யாணர்க் கோங்கின் குவிமுகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய முலையு மாணிறக்
கயன்மலைப் பன்ன கண்ணும் புயலெனப்
பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
வாகத் தரும்பிய சுணங்கும் பாகொத்
தின்றீங் கிளவியு நிதம்பமு மொன்றிக்
கண்ணு மனமுங் கவற்றப் பண்வர
விரங்குமணி மேகலை யிரியச் சுரும்பொடு
வண்டினம் வாய்விட் டார்ப்பத் தண்டா
நாணு நிறையு நடப்பப் பூவொடு
கோதை பரியத் தாதுகு பொங்கணைக்
கலவி விளைந்த காமத் தேற
லுண்டோ ருணரி னல்லதை யவருங்
கொண்டுரை கூடா மாறுந் தெண்டிரை
யமிழ்துபடு தீஞ்சொ லமிழ்பெரும் புலனும்
பனுவற் செவ்வி படிந்துண்டு நிமிர்ந்த
வொருபெரும் புலனு மொருங்கினி திழந்து
மெய்யுரை பெறாஉஞ் செவ்வி யாளன்
கனத்திற னல்லதை வினைத்திறம் பிறிதோ
பொறைப்பெருங் கவசம் புக்குச் செறுப்பருஞ்

செயபீர் கனைகழல் கட்டி மயலொடு
காம நீத்த கயந்தலை கடிதூர்ந்
தச்ச மின்மையிற் றுணையின் றுங்கு
மெய்ப்படு பேருணர் விசய மள்ளர்
பூமுக ஞானப் புகர்வா ளேந்தி
யைம்புல னடக்கி யறுபகை யோட்டி
யிருவினை வீட்டி யொருவழிக் கொளீஇய
வுள்ளமோ டுணர்வுசூ ழொடுக்கி
யுள்ளுந ருணர்வ துணர்வின் பாலே.

(இ-ள்.) யாணர்—கூடாமாறும் (எ-து) வளப்பமுடைத்தாகிய கோங்கின் குவிந்த மொட்டையிகழ்ந்து ஆபரணங்களை யகத்திடப்பட்ட தனங்களும் மானுக்கத்தைக் கெடுத்துப் பிறழ்ச்சிக்குக் கயலையொத்த கண்களும் நீலமேகத்தி னிறத்தை யொத்துப் பின்னுதல் விட நெறித்த அளகமும் பொன்னிறத்தையொத்து மார்பிலே பரந்த சுணங்கும் பாகு போல இனிதாய அழகிய வசனமும் அல்குலுமா மிவை யித்தனையும் பொருந்திக் கண்ணுமனமும் மயக்கத்தைச் செய்யப் பண்ணுக்குப்பொருந்தச்சத்திக்கப் படாநின்ற ஒளியுடைத்தாகிய மேகலாபரணமுநீங்கப் பெடையும் வண்டும் வாய்விட்டாரவாரம்பண்ண வளவில்லாத நாணமடமச்சம்பயிர்ப்பும் அறிவு நிறையோர்ப்புக்கடைப்பிடியு நீங்க ஆபரணங்களு மாலையுந் தம்மிற் பின்னிக் கலங்கப் புட்பங்களின் றாதுக ளுதிரப்பட்ட மகத்தாகிய சயனத்திற் போகத்திலுண்டாகிய காமவிரதம் புசித்தோரறியுமதல்லது அவர்தம்மாலும் இன்னபடி யிருந்ததென்று சொல்லவொண்ணாதவாறு போலவும்,

தெண்டிரை—பிறிதோ (எ-து) பாற்கடலி லுண்டாகிய வமுதுபோன்ற இனியவசனத்தைச் சொல்லும் வாக்காகிய பெரிய புலனும் அழகிய சாத்திரங்களிலே மூழ்கி அவையிற்றைப் புசித்துத் தலைமைபெறுஞ் சோத்திரமாகிய ஒப்பற்ற பெரியபுலனும் இவையிரண்டு மொக்கவே அழகிதாக விழுந்து பரிசத்தாலே யறிவிக்க அறியு மூமன்கண்ட கனப்போலவுமல்லது வசனிக்கவொண்ணாத சிவானந்தபோகம் இன்னபடியிருந்ததென்று சொல்லும் வேறுபாட்டையுடையதோ,

பொறை—உணர்வின்பாலே (எ-து) உண்மை ஞானத்தையுடைய வலிய வீரரான விசாரவான்கள் பொறுத்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தாற் சகிக்கும் பொறுமையாகிய பெரியகவசத்தை யிட்டு எதிரியாற் சயித்தற்கரிதாகிய தன்னாற்பிறர்க்கும் பிறராற்றனக்கும் ஒருசெயலுமில்லை யென்னுஞ் சத்திக்கப்படாநின்ற வீரக்கழலை வீக்கிக் காம வெகுளி மயக்கங்களை யொழித்தலென்னும் யானையைக் கடிதாக மேற்கொண்டு சர்வ

சங்க நிவிர்த்திவந்து நிர்ப்பயமானமையாற் றுணைவேண்டாமை யென்னும் படைத்துணையையும் உடையரான அவ்விடத்துக் கூர்மையையும் புகரையு முடைத்தாகிய ஞானமென்னும் வாளை யெடுத்துக்கொண்டு பஞ்சேந்திரியங்களைத் தம்வசமாக்கிக் காமாதி பகையாறையு மோட்டிப் புண்ணிய பாவங்களைச் சயித்துப் பரமசிவனே பரதத்துவ மென்னு மொருநெறிப்பட்ட அறிவொன்றே யல்லாமல் அல்லாத வுணர்வுகளைக்கெடுத்து அறிவோர் அறிவின்பாலா யறிந் தநுபவிக்கத் தக்கதாம் (எ-று). 3

### தத்துவரத்நாவலி.

சேப்பமா யகண்டமாய்த் திகழுஞ் சோதியைக்
கப்பிலே தெரிவுறக் காட்டொ ணாதது
வப்பிலே மூழ்கிநின் றங்கை யான்முகந்
திப்படி புனலென வியம்ப லாகுமோ. 4

### போதரத்நாகரம்.

* ஊனிறந் துயிரி றந்தங் குளமிறந் துணர்வி றந்து
தானுயர் பரமி றந்து தருமன முதலி றந்து
வான்முதன் முழுதி றந்து வளரொளி யாகி நின்ற
தானிறந் திருந்த வின்பந் தனையுரை செய்ய லாமோ. 5

### மூலசித்தி.

* பார்த்திட மெங்குந் தானாய்ப் பார்ப்பிறந் துளநி றைந்தங்
கோர்ப்பொடோ ராமை யின்றி யுதயவத் தமன மின்றி
யேத்துமா மறைக்கு மெட்டா வின்பவெள் ளத்தை மாந்தி
யார்த்துவாழ்ந் திருப்ப தல்லா லறைந்திட லாவ தொன்றே. 6

### போதாமிர்தம்.

* ஐம்புலன் களுக்கு முன்னா யருவுரு வறநி றைந்தே
யும்பரு மறையு மோர்தற் களவிறந் தொழிவ தின்றி
யென்பினை யுருக்கு கின்ற வெலையிலா வின்ப வெள்ள
மன்புற நுகர்வ தல்லா லறைந்திட விரகு முண்டோ. 7

### அநுபவசாரம்.

* வானநா டவரு மாலு மயனுமிந் திரனு மற்று
மேனைய வெவரு மேத்து மிறைவனு ரரிய தன்மை
யானவா றெல்லாம் பேசி யமலமா மின்பந் தன்னின்
மோனமா யிருந்த தல்லான் முடிந்ததோ மொழிய வையா. 8

சொரூபானந்தசித்தி.

* ஒழிவிலாப் பரம யோகிய ரனுபவ முள்ளவா றுரைத்திட வெனக்கோர், வழிபெறே னெடுமான் மகேசன்மா முனிவர் வானவ ருரைத்திட மாட்டார், விழிமிகுஞ் சிவனால் விஞ்சையாஞ் சிவை யால் விளம்பவும் படாதது விளம்பு, மொழியெலாம் வந்து மோன பா வத்தே முடியுமந் நிலமதே முடிவு. 9

* அப்படி யிருந்த யோகி யநுபவத் தன்மை தானு
மெப்படி யென்று காணு னீசன்மா னுனுங் காணேன்
செப்பிட வறியா வேதா கமங்களுஞ் சிவனார் மேனி
யெப்படி † யிருந்த தென்னி னப்படி யிருந்த தென்னே. 10

† யென்னின் மற்றப் படியிலே யிருந்த தென்னும். என்றும் பாடமுண்டு.

தத்துவதேசிகம்.

* ஞான ஞேயஞா தருவெ னுமமு
மீன மாகியே யெலையி லின்பமே
யான தானதா மானு பூதிதான்
மோன மேயலான் மொழிப லாவதோ. 11

அனுபூதியுரைத்தற்கருமை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2032.

## 3. அனுபூதிநிலைமை.

வினுவிளக்கம்.

அமல மாமனு பூதியிவ் வணமென லரிதெனு முறைமையேபோ
னிமல மாமனு பூதியி னிலைமையி னிகழ்தரு பரிசெல்லா
மமல வேறற வெறிதரு முனிவர்கண் மொழிவர்க ளவைதம்மை
விமல மாயிட விரிதர வறைகுவன் மிகுநல முடையோய்கேள். 1

நித்தியாநந்ததரிசனம்.

* ஊனுமா யுயிரு மாகி யுருவுமா யருவு மாகி
வானுமாய் மறையு மாகி மதியுமாய் மதிக டோறுந்
தேனுமா யமுத மாகித் திகழுநற் சொரூப மேயா
யேனைய முழுது முண்ட விறைவனென் னுளத்து ளானே.

ஞானசூளாமணி.

* அறைதரு மறைக ளானு மாகம விதங்க ளானுஞ்
செறிதரு மிருதி யானுந் திகழ்புரா ணங்க ளானு
மிறவிலா வறிஞ ரானு மெழுதியங் கறுத்து மேலாய்
முறிவறு மின்ப வெள்ள முழுதுமென் னுளத்தி னுள்ளே. 3

போதாத்ருகரம்.

* தானலா தேது மின்றித் தன்மையீ தென்ன வொண்ணு
ஞானமாய் ஞான ஞேய ஞாதுரு விறந்த நன்கா
யூனெலா முருகு மன்பில் வெளிப்படு மொழிவி லின்ப
மானவொண் பரம ஞானை யகத்துளே யிருத்தி னேனே. 4

தத்துவசரிதை.

* இனிமறை யறைவ தெங்ங னிமையவ ருணர்வ தெங்ங
னனிமிகு † முனிவ ரிம்பர் நணுகிட முயல்வ தெங்ங
னினைவரு மொழிவி லின்ப நிமலனை முழுது மாய
புனிதனை யெனது ளன்பிற் பொதிந்துகொண் டுந்தித் தேனே. 5

† மும்ப என்றும் பாடமுண்டு.

தத்துவதேசிகம்.

* பிண்ட கோசமே பேணி யானெனக்
கொண்ட கோளறக் கூறி யானெனைக்
கண்ட † கோவெனக் காட்டி முற்றுமிங்
குண்ட கோலமெ னுளத்தி னுள்ளதே. 6

† தோவெனக் என்றும் பாடமுண்டு.

தேவாரம்.

ஏய வன்கா ணெவ்வுயிர்க்கு மியல்பா னுன்கா ணின்பன்காண் டுன்பங்க ளில்லா தான்காண், டாய வன்கா ணுலகுக்கோர் தன்னொப் பில்லாத் தத்துவன்கா ணுத்தமன்காண் டானே யெங்கு, மாய வன்கா ணண்டத்துக் கப்பா லான்கா ணகங்குழைந்து மெய் வருந்தி யழுவார் தங்கள், வாய வன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. 7

திருமந்திரம்.

வள்ளற் றலைவனை வானவர் நாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர் கொலோவென்ற
னுள்ளத்தி னுள்ளே யொளித்துவைத் தேனே. 8

### தேவாரம்.

நாடி நான்முக னாரண னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. 9

முன்னை ஞான முதற்றனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
யென்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
றன்னை ஞானத் தளையி டு வைப் னே. 10

### திருவாசகம்.

உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த யோகமே யூத்தையேன் றனக்கு, வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே, செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே, யெம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே. 11

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே பெருந்திற லருந்தவர்க் கரசே, பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே, தெருளிடத் தடியார் சிந்தையிற் புகுந்த செல்வமே சிவபெருமானே, யிருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே. 12

அறைவையேன் மனமே கோயிலாக் கொண்டாண் டளவிலா வானந்த மருளிப், பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா பெரியவெம் பொருளே, திறவிலே கண்ட காட்சியே யடியேன் செல்வமே சிவபெருமானே, யிறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே. 13

புன்புலால் யாக்கை புரைபுரை † கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென், னென்பெலா முருக்கி யெளியனை யாண்ட வீசனே மாசிலா மணியே, துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந் தொடக்கெலா மறுத்தநற் சோதி, யின்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந் தருளுவ தினியே. 14

† கலந்து என்றும் பாடமுண்டு.

### திருவாய்மொழி.

கடிவார்தண் ணந்துழாய்க் கண்ணன்விண் ணவர்பெருமான்
படிவான மிறந்த பரமன்பவித் திரன்சீர்
செடியார் நோய்கள்கெடப் படிந்துகுடைந் தாடி
யடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே. 15

உய்ந்து போந்தென் னுலப்பி லாதவெந் தீவினை களைநாசஞ்
செய்துன தந்தமி ‡ லடிமை யடைந்தேன் விடுவேனோ
வைந்து பைந்தலை யாடர வணைமேவிப் பாற்கடல் யோகநித்திரை
சிந்தை செய்தவெந்தா யுன்னைச் சிந்தை செய்துசெய்தே. 16

‡ லடியை என்றும் பாடமுண்டு.

நடராசர் திருவந்தாதி.

வேதி யனேபிள்ளை வெண்மதி யென்ன விளங்குநெற்றிப்
பூதி யனே † தொண்டு போற்றுவ தன்றிப் புகலவொண்ணு
நீதி யனேயுன்னை நீயென் றிராவென்னை நெஞ்சுருக்குஞ்
சோதி யனேயுன்னைச் சோர விடேனினித் துஞ்சினுமே. 17

† கொண்டு என்றும் பாடமுண்டு.

துஞ்சிடந் தன்னிற் றுளங்குங் கனவினிற் ‡ றானனவி
னஞ்சிடந் தன்னி னவைசே ரறிவி னறிவிறந்து
விஞ்சிடந் தன்னின் விளங்குங் குரவனை வீற்றிருப்ப
நெஞ்சிடந் தன்னின் வைத்தே னினியேது நினைவில்லையே. 18

‡ றானவைத், தஞ்சிடந் என்றும் பாடமுண்டு.

திருவாசகம்.

அறையோ வறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனு ¶ மாலு மறியா—விறையோன்
பெருந்துறையின் மேய பெருமான் பிரியா
திருந்துறையு மென்னெஞ்சத் தின்று. 19

¶ மாலுமால் கொள்ளு - மிறையோன் என்றும் பாடமுண்டு.

தத்துவவிளக்கம்.

முறையோ தரியேன் முழுதுலகு மோடி
† யறைகோ வயன்மாற் கறைகோ—மறையோடு
தங்க ளுளத்தொளித்த தத்துவனூர் தாமேவர்
தெங்க ளுளத்திருந்தா ரின்று. 20

† யறையோ வயன்மாற் கறையோ என்றும் பாடமுண்டு.

அம்மை திருவந்தாதி.

வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
றானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தா
னென்னெஞ்சத் தானென்பன் யான். 21

அனுபூதிநிலைமை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2053.

## 4. அனுபூதிவியப்பு.

விருவிளக்கம்.

அரியநல் லானு பூதி நிலைமையா† தறைந்த நல்லோர்
விரியுநல் லானு பூதி யமுதினை வியக்கு மாறு
முறைசெய்வ னுவகை யோடு மொப்பிலா வன்பி னோங்கிக்
கருதரு ஞான வேந்தே களித்திடு கண்டு ‡ கண்டே. 1

† தறிந்த என்றும், ‡ கொண்டே என்றும பாடமுண்டு.

போதாத்னுகரம்.

* மூல மாமறை நான்கு ¶ மறிந்தில முன்ன மாகிய மூவ ருணர்ந்திலர், கோனு மாகர் கனவிலுங் கண்டிலர் கூறு மாறினி யென்னைகொ லிம்பரை, யால மார்பவ மேமிழு வேனுய வழிவி லாவறி வாயழ கார்தருஞ், சில மாரனு பூதி வியப்புற றெளிவி லேனுக் கெவ்வாறிது வாய்த்ததே. 2

¶ மறைந்தில என்றும் பாடமுண்டு.

போதாமிர்தம்.

* ஊனுகிப் பொறிபுலனுய் மனமு மாகி யுறுமகமாய் மதியாயொண் சித்த மாகித், † தானுரும் விடயமுமாய் நுகர்ச்சி யாகித் தகநுகரு பவனுகிச் சான்று மாகி, மேனுடுங் காரணபா வங்களாகி விரித்தொடுக்கும் பரமாகி வியோம மாகி, யானுத விழியது வா யகிலந் தானு யளவிறந்தெ னுளநிறைந்திட் டிருந்த வாறே. 3

‡ தானுகும் என்றும் பாடமுண்டு.

அதிக்கிருதாமிர்தம்.

* நனவாகிக் கனவாகி ஞால மாகி நாநாவாம் பொருளவையாய் நலந்தீங் காகி, வினையாகிப் பயனுகி விளைவு மாகி விளைந்தவெலா மடங்குமுதற் பகுதி யாகி, யுனவாகும் பகுதியினின் வேறதாகி ‡ யுணர்வாகி யுறுவிகற்ப முழுது மாகி, வினவாத வியனுப்மிக் குலகா யன்றி விளங்கியெனு ணிறைந்திருந்த வியப்பிதென்னே. 4

† யுறுவிகற்ப முழுதுமா யல்ல வாகி என்றும் பாடமுண்டு.

சிவப்பிரகாசதரிசனம்.

* அல்லொடு பகலு மின்றி யகமுட னிதமு மின்றிச்
செல்வது திரிவ தின்றித் திசையொடு கால மின்றிச்
சொல்லொடு பொருளு மின்றித் துரிசற முழுது மாயே
யெல்லைய திறந்தெ னுள்ளத் திறைவனு ரிருந்த வாறே. 5

## பெருந்திரட்டு.

### தத்துவதேசிகம்.

* கூறியா வகண்ட வொளியே குருவாகி வந்து மறையா
னெறியா விபம்பு குறையா நிறைவாகி யெங்கு நிகழ்வா
யறிவாய் நிறைந்த வறிவா யானவா வனந்த சுகமாய்ப்
பிறிவான தின்றி யினனே பெருமா னிருந்த படியே. 6

### தேவாரம்.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி யியமான னாயெறியுங் காற்று
மாகி, யருநிலைய திங்களாய் ஞாயி றாகி யாகாச மாயட்ட மூர்த்தி
யாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந்
தம்முருவுந் தாமே யாகி, நெருநலையா யின்றாகி நாளை யாகி நிமிர்
புன் சடையடிக ணின்ற வாறே. 7

தீயாகி நீராகித் திண்மை யாகித் திசையாகி யத்திசைக்கோர்
தெய்வ மாகித், தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித் தாரகையு
ஞாயிறுந்தண் மதியு மாகிக், காயாகிப் பழமாகிப் பழத்து ணின்ற
விரதங்க ளுகர்வானுந் தானே யாகி, நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே. 8

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய் நினைப்பார்கண் மனத்
துக்கோர் வித்து மானாய், மன்னானாய் மன்னவர்க்கோ ரமுது
மானாய் மறைநான்கு மானாயா றங்க மானாய், பொன்னானாய் மணி
யானாய் போக மானாய் பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை,
யென்னானா யென்னானா யென்னி னல்லா லேழையேன் ‡ னென்னே
நா னேத்து மாறே. 9

‡ னென்சொல்லி யேத்து கேனே. என்றும் பாடமுண்டு.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்
தெள்ளியே னாகி நின்று தேடினே னாடிக் கண்டே [கித்
னுள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட் டேனே. 10

தேள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோ
ருள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேகாடி யென்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளைந்ததே. 11

### திருவாசகம்.

உன்னற் கரியசி ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னு
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலா
ரென்ன வதிசய மன்னே யென்னும். 12

எனைநானென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை யுறையும்
பனவானெனைச் செய்தபடி றறியேன்பரஞ் சுடரே. 13

வினைக்கேடரு முளரோபிறர் சொல்லீர்விய னுலகி
னெனைத்தான்புகுந் தாண்டானென தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையினுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்திடை யானே. 14

எச்சம்மறி வேனானெனக் கிருக்கின்றதை யறியே
னச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் றிருப்பெருந்துறை யுறைவா
னிச்சம்மென நெஞ்சின்மன்னி யானாகிநின் றனனே. 15

### திருவாய்மொழி.

புகழுநல் லொருவ னென்கோ பொருவில்சீர்ப் பூமி யென்கோ
திகழுதண் பரவை யென்கோ தீயென்கோ வாயு வென்கோ
நிகழுமா காச மென்கோ நீள்சுட ரிரண்டு மென்கோ
விகழ்விலிவ் வனைத்து மென்கோ கண்ணனைக் கூவு மாறே. 16

அச்சுத னமல னென்கோ வடியவர் வினைகெ டுக்கு
நச்சுமா † மருந்தே யென்கோ நலங்கட லமுத மென்கோ
வச்சுவைக் கட்டி யென்கோ வறுசுவை யடிசி லென்கோ
நெய்ச்சுவைத் தேற லென்கோ கனியென்கோ பாலென் கேனோ.

† மருந்த மென்கோ என்றும் பாடமுண்டு.

### திருவந்தாதி.

உள்ள முருகி நயன முததியென
வெள்ளம் விளைபவரு ளன்றியே—கள்ள
மிருந்தவா மேவு மெனையாளி யென்னு
ளிருந்தவா வென்செய்த வா. 18

### திருவாசகம்.

கோற்றேனெனக் கென்கோகுரை கடல்வாயமு தென்கோ
வாற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை யுறையு
நீற்றார்தரு திருமேனிநின் மலனேயுனை யானே. 19

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே யெழுகின்ற சோதி
யே யிமையோர், சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே, நிரந்தவா காச நீர்நிலந் திகா
லாயவை யல்லையா யாங்கே, கரந்ததோ ருருவே களித்தன னுன்
னைக் கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 20

இரும்புதரு மனத்தேனை †யீர்த்தீர்த்தெ னென்புருகக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைக
ளொருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெலாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே. 21

† யீர்ந்தீர்ந்தெ என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

திருப்பொன் னகரான் றிருமா லிருஞ்சோலைப்
பொருப்பே யுறைகின்ற பிரா னின்றுவந்
திருப்பே னென்றுவந் தென்னெஞ்சுநிறை யப்புகுந்தான்
விருப்பே பெற்றமுத முண்டு களித்தேனே. 22

திருவந்தாதி.

புதியே னையுமுன் பழவடி யாரிற் புனைந்துகொண்ட
கதியே யெனது வறுமையெல் லாங்கெடக் கண்டுகொண்ட
நிதியே யுனையன்றி வேறறி யாவென்ற ‡னெஞ்சுருக்கும்
பதியே யதிசய நீயெனை யாக்கும் படுத்துவமே. 23

‡ னெஞ்சிருக்கும் என்றும் பாடமுண்டு.

நக்கீரர் திருநூற்றந்தாதி.

உணருங்கா லொன்றை யுருத்தெரியக் காட்டாய்
புணருங்கா லாரமுதே போன்றி—யிணரிற்
கனியவாஞ் சோலைக் கயிலாய மேயா
யினியவாங் காணி னியல்பு. 24

உரையும் பொருளு முடலு முயிரும்
விரையு மலரும்போல் விம்மிப்—புரையின்றிச்
சென்றவா றெங்குந் திருக்கயிலை யெம்பெருமா
னின்றவா றெங்கு நிறைந்து. 25

திருவாசகம்.

பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதா
மத்தமே யாக்கும்வந் தென் † மனத்தே—யத்தன்
பெருந்துறையா னாட்கொண்டு பேரருளா னேக்கு
மருந் ‡ துருவாப் பேரின்பம் வந்து. 26

† மனத்தை என்றும், ‡ திறவாப் என்றும் பாடமுண்டு.

அனுபூதிவியப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2019.

## 5. அனுபூதியாராமை.

### வினாவிளக்கம்.

அறிஞர் தாமனு பூதியின் வியந்துரை செய்தவப் பரிசேபோ
லிறவி லாவனு பூதியின் சுவையினு லெழின்மிகு மாராமை
யுறைவ தாகிய வுளமிகு களியொடு முரைசெய்வ ரதுதன்னை
யறைவ †ஞனெனக் கதிசய மிகமிக வழகுற வறிகையயா. 1

† ஞனென வதிசய, அல்லது ஞனென ததிசய என்றும் பாடமுண்டு.

### அனுபவசாரம்.

* போக்கொடு வரவ தின்றிப் புரணபூ ரணம தாகி
யாக்கமு மழிவு மின்றி யகமித மறநி றைந்து
நீக்கமி லறிவா னந்த நிகரிலா வெள்ள முள்ளந்
தேக்கியு மாரா மேன்மேற் றித்தியா நிற்கு மன்றே. 2

### சோருபானந்ததரிசனம்.

* ஒளியினுக் கொளிய தாகி யுவமையற் றொழிவ தின்றி
யளியினுக் களிய தாகி யமலமுற் றளவி றந்து
தெளிதரத் திகழு மின்பத் தேறலைப் பருகி மேன்மேற்
களியதுற் றிடினு மாராக் காதன்மீ தூரு மந்தோ. 3

### நித்யானந்ததரிசனம்.

* திரையொடு கரையி றந்து திகழுநற் சொரூப மாய
வுரையறு மின்ப வெள்ளத் தொடிவற முழுந்தி யார்ந்து
வரையறத் திளைத்து மாரேன் மகிழும்போ தைக்கப் போதும்
புரையறப் புதிதா யின்பம் பொற்புமிக் கிடுமி தென்னே. 4

### அருணெறிவிளக்கம்.

* முடிவொடு முதலு மின்றி முழுதுமாய் மூல மாகி
யொடிவறு மின்ப வெள்ளத் தொப்பிலா வமுத மாய
கடலினுட் டிளைத்தும் வாரிப் பருகியுங் களித்து மாரா
தொடிவிலா தாமேன் மேலு மோங்கிடா நிற்கு மன்றே. 5

### தத்துவசரிதை.

* முழுதருண் மதுர வாரி மோனமா மொழியி னூலே
யெழுதரு மின்ப வெள்ளத் தெல்லையிலா வமுதந் தன்னைக்
கழிவற முகந்து கொண்டு களித்திடா நின்று மாரே
னொழிவறு மார்வ மேன்மே லோங்கியே தழைக்கு மன்றே. 6

போதரத்னகரம்.

* ஒப்பின்மெய்ஞ் ஞான வின்பப் பிரமமா முத்தி யென்னுஞ்
செப்பரு மமுத மாய தெளிவினுட் டிளேத்து மூழ்கி
யெப்பொழு தினுமெக் காலு மிடையரு முகந்து கொண்டு
மப்பொழு தைக்கப் போது மாராம வினிய வாறே. 7

போதசித்தி.

* அந்தமோ டாதி யில்லா வமலநற் சிவம தாய
நந்தலி லுணர்வ தாகு நலமிகு மமுதை மாந்திப்
புந்தியூன் மயிர்க்கா லெங்கும் பொழிந்துதேக் கிடநின் றூறு
மென்றனக் காரா தார்வ மெலேயற மிருக்கு மன்றே. 8

சுவானுபவசித்தி.

* கலேக ளுக்கதி தூர மதாய்மிகு கறைய றத்தெளி வாயெனு
ண் மேவிய,நிலேத னேத்தெளி யார்மன மேவிரு ணிறைவி னேப்பரி
பூரண மாகிய, மலேயி னேச்சத் தோதித மாகிய மதுவை மற்றய
ராநினே யாதொளிர், புலமை யுற்றுமி தார்வில தாமிது புதுமை நற்
சுவைப் போதைக்குப் போதுமே. 9

திருவாய்மொழி.

†எப்பொழுதுந் தானுய் மாகதக் குன்றமொக்கு
மப்பொழுதைத் தாமரைப்பூக் கண்பாதங் கைகமல
மெப்பொழுது நாடிங்க ளாண்டூழி யூழிதொறு
மப்பொழுதைக் கப்பொழுதென் னுரா வமுதமே. 10

† எப்பொருளுந் என்றும் பாடமுண்டு.

தேவாரம்.

பனேக்கை மும்மத வேழ முரித்தவ
னினேப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவ
னனேத்தும் வேடமா மம்பலக் கூத்தனேத்
தினேத்த னேப்பொழு தும்மறந் துய்வனே. 11

தத்துவதேசிகம்.

* விளித்த மூன்றவத் தைக்குமே லாமுணர்
வொளித்த மெய்யுணர் வாக்கி யுலப்பிலா
தளித்த வானந்த வாரித்தி ளேத்துளங்
களித்து மார்கின்ற தில்லேயெங் காதலே. 12

அனுபூதியாரான்மை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2091.

# 19. அருட்டிறப்பவண.

## அருட்டிறம்வியப்பு.

### வினுவிளக்கம்.

ஐயமி லறிவா னந்தத் தனுபவா ரமுதந் தன்னைக்
கையிலா மலக மென்னக் காட்டிய கருணை யாளன்
செய்யவா ரருளே நோக்கித் திகழ்ந்துளம் வியந்து நல்லோர்
நையுமா றதனை யுந்தா னவிலுவ னினிது கேண்மோ. 1

### அனுபவசாரம்.

* ஆதனு மெனையு மாள வவனியின் வருவ தேவந்
தேதமி லன்ப ரோடே யியைந்தெனை யாள்வ தேநற்
காதலான் மறைக டேடுங் கழலெனக் களிப்ப தேதா
னேதகா வொருவன் செய்த வொப்பிலா வருளி தென்னே. 2

### சிவானந்தநிலயம்.

* மூவருந் தேடு மூல முழுமுத லுருவ தாகிப்
பாவியேன் றன்னை யாளப் பாரின்மா னிடனு மாகி
யோவிலா வுணர்வின் பத்தை யொருமொழி யதனி னல்கி
யாவதே சிகனார் செய்த வருணல மிருந்த வாறே. 3

### சுவானுபவசித்தி.

* ஆரண மளவில் கோடி யங்கமா றுடுபு ராண
மேரண மிருதி நூல்க ளிசைத்தின முடிந்த தில்லைப்
பூரண னுரைய தொன்றுற் புகன்றங்கைக் கனிய தாக்கு
மாரண னருளின் றன்மை யதிசய மதிச யந்தான். 4

* ஆதிவான் முதலாங் கால மன்றுதொட் டளவி லாத
வேதமி லூழி யூழி வந்தவென் பவபா சத்தைச்
சாதமோர் கணத்தின் வேவத் தன்கடைக் கண்கள் வீவத்த
வாதியா ரருளின் றன்மை யதிசய மதிச யந்தான். 5

* ஆறிநெறி குணம தில்லாக் கோதிலா னந்த மாய
வறிவினை யளவ தில்லா வரியவா ரமுதந் தன்னை
வெறுமொரு மொழியா னல்கும் விமலனா ரருளை நம்மா
லறைதர விரகு முண்டோ வதிசய மதிச யந்தான். 6

### சுவானுபவாமிர்தம்.

* வானந்தரு காறீபுனன் மண்ணுமுல கம்மே
லூனென்றிய வுயிரைம்புலன் மனமோடுள வெவையுந்
தானன்றிய பொருளாய்முழு தாய்நின்றமை யருளுந்
தேனென்றிய மொழியென்றிரு வருளின்றிற மென்னே. 7

* மறைநூல்பயில் வருசாதன மவைநான்குடை யவரோ
டுறைபாதக மலதேதுமி லறியாதவ ரொடுதா
னிறைவாகிய தறவேயெழி லறிவாகவு நிலையே
யறியாவருள் செயுமாதவ னருள்வல்லப மறியேன். 8

### போதரத்னகாம்.

* அன்பாலுயர் தாயாயறி வருள்காதலி னயனு
மின்பான்மனை விசைவான்மக வெழிலாலிரு நிதியாய்
வன்பேதுமி றுணையான்மன மகிழ்தோழனு மாயே
யென்பான்முழு தானனருளென்னேயிது வென்னே. 9

* அறியேனருள் குறியேனற மதியேனமை வுறவே
சிறியேன்மிக வறியேன்சிறி யார்தம்மின மல்லாற்
செறியேன்மயல் கண்டுந்திரு வுள்ளஞ்செய்தெ னுளமே
யறிவாகிய நிறைவேசெய்த வமலன்றிரு வருளே. 10

### தத்துவதேசிகம்.

* விண்ணின் மீதுறை யமரரும் விரும்பவும் வெருவினர் மறைநான்கு, மெண்ணு நீதியன் றன்றெனவேழையேற் கெளிதில் வந் திறையெந்தை, வண்ண மீதெனக் காட்டவு முருகிடா மன மிரும் பினும்வன்பாங், கண்ணி னீர்சொரி கின்றது மில்லைநா னென்செயக் கடவேனே 11

### தேவாரம்.

அத்தாவுன் னடியேனை யன்பா லார்த்தா யருளேக்கித் தீர்த் தநீ ராட்டிக் கொண்டாய், யெத்தனையு மரியநீ யெளியை யானா யெனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய், பித்தனேன் பேதைமேம்பேய னாயேன் பிழைத்தனக ளெத்தனையும் பொறு த்தா யன்றே, யித்தனையு மெம்பர்மோ வைய வையோ வெம்பெரு மான் றிருக்கருணை யிருந்த வாறே. 12

### திருவாசகம்.

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட † தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தருமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே. 13

† தன்மையென் என்றும் பாடமுண்டு.

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார, வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத், தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித் தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. 14

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான் கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா, னாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே, காட்டா தன வெல்லாங் காட்டிப் பின்னுங் கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை, மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா னெம் பெருமான் செய்திட்ட விச்சை தானே. 15

விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின் மிருகாத லடியார்த மடிய னாக்கி, யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி யக நெகவே புகுந்தாண்டா னன்பு கூர, வச்சனாண் பெண்ணலியா காச மாகி யாரழலா யந்தமா யப்பா னின்ற, செச்சைமா மலர் †புரையு மேனி யெங்கள் சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே. 16

† புனையு என்றும் பாடமுண்டு.

வான நாடரு மறியொ ணாதநீ மறைக ளீறுமுன் றொடரொ ணாதநீ, யேனை நாடருந் தெரிவொ ணாதநீ யென்னை யின்னிதா வாண்டு கொண்டவா, வூனை நாடக மாடு வித்தவா வுருகி நானுனைப் பருக வைத்தவா, ஞான நாடக மாடு வித்தவா நைய வையகத் துடைய விச்சையே. 17

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னு
மறம்பாவ மென்றிரண் டச்சந்தவிர்த்தென்னை யாண்டுகொண்டா
மறந்தேயுந் தன்கழலுன் மறவாவண்ண நல்கியவத் [ன்
‡ திறம்பாடல் பாடிநாங் தெள்ளேணங் கொட்டாமோ. 18

‡ திறம்பாடிப் என்றும் பாடமுண்டு.

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் வனைத்தோளி யோடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித் தாட்கொண்ட வாநயந்து
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 19

அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
யுருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெலாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 20

அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 21

கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினு
மற்றறியேன் பிறர்தெய்வம் வாக்கியலா வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேயுன் பொன்னருளே. 22

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. 23

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே. 24

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வணங்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே. 25

பட்டினத்தார் பாடல்.

ஒளிவந்த வாபொய் மனத்திரு ணீங்கவென் னுள்ளவெள்ளந்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாதவொரு
களிவந்த வாவன்பு கைவந்த வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல வாணர்தம் மின்னருளே. 26

திருவாய்மொழி.

ஆறுடையானென் றன்னேகொண் டுகந்து வந்து
தானேயின் னருள்செய் தென்னை முற்றவுந் தானானான்
மீனாயாமையுமாய் நரசிங் கமுமாய்க் குறளாய்க்
கானாரேனமுமாய்க் கற்கியா மின்னங் கார்வண்ணனே. 27

அறிகிலேன் றன்னு ளனைத்துலகு நிற்க
நெறிமையாற் றானு மவற்றுணிற் கும்பிரான்
வெறிகமழ் சோலைத்தென் காட்கரை யென்னப்பன்
சிறியவென் னாருயி ருண்ட திருவருளே. 28

திருவாசகம்.

யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கெ னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 29

திருவந்தாதி.

ஆளும் படியே யலமாக்கு மென்னெஞ்ச
மீளும் படியே வினையெல்லா—மாள
வுருக்கும் படியே யுடையா னருடா
னிருக்கும் படியே யெனக்கு. 30

அருட் டிறம்வியப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2121.

## 2. அருணினைந்தழிதல்.

வினாவிளக்கம்.

ஓதுநான் மறையு மோங்கு மும்பருங் கண்டி லாத
பாதனா ரருளை நோக்கிப் பழுதிலா வறிஞ ரெல்லாங்
காதலா லழிந்த ழிந்து கருத்தொடு கண்ணீர் சோர
வோதரும் பரிசை மைந்தா † வுவகையோ டுரைசெய் வன்மேகள்.

† வுவமையோ என்றும் பாடமுண்டு.

தொகுதிரட்டு.

அருட்டிறம்வியப்பு.

துளவன் மாலுறக் கண்டு கண்டுமெய்த் தொண்டர் வாழ்துணைக் கழலி ருந்தவா, களவென் மாவினைக் கருவ றுத்திடுங் கருணை வாழ்திருக் கண்ணி ருந்தவா, வுளவொ னாதைதொன் றுபதி டங்கனின் றோதா மொன்றுதா னுருவ மாகியென், னுளவ தாகவந் திங்கி ருந்தவா வருளி ருந்தவா வருளி ருந்தவா. 403

ஆனந்தாமிர்தம்.

* உடம்பதா யழியு மென்னை யுன்றிரு மேனி யாக்க
வுடம்பதாய் வந்த வுன்ற னொப்பிலா வருளை நோக்கி
யுடம்பெலா முள்ள மாகி யுடைந்துநைந் துருகி டாதே
யுடம்புள முழுதுங் கல்லொத் திருப்பதே யுடைய கோவே.

மூலசித்தி.

* ஏதுமொன் றல்லா வென்னைப் பொருளென விமைய வர்க்கு
மீதென வரிய வின்ப மெளிதின்மா ணிடனாய் வந்து
காதலா லருள வுந்தான் கருத்தொடு கண்ணீர் சோர
வோதரு முததி யேபோ லுலறிடே னலறி டேனே. 3

போதாமிர்தம்.

* அன்பது நின்க ழற்கொன் றயர்ந்துமில் லாத வென்னை
நன்குறு மன்ப ரோடே ஞானவா னந்த மாக
வின்புற வாண்ட தன்மைக் கென்பெலா முருகிக் கண்கள்
வன்பெரும் வாரி யாகா மதியிலேன் வலிய வாறே. 4

சிவாநந்தநிலயம்.

* உழிதரு மியல்பிற்று முறுபவ வுததிக்கே
கழிதரு மெனைமிக்கார் கருணையின் வடிவுற்றே
பொழிவறு முணர்விற்று னொருமொழி யினிலுய்த்தா
னழிவறு † மறிவைத்தா னறிவில னயர்வுற்றே. 5

† மருளைத்தா என்றும் பாடமுண்டு.

* இருவினை தனின்மிக்கே யெரிநிகர் பிறவிக்கே
வரவொடு செலவுற்றே மடிதரு மெனைமிக்கார்
திருவடி சென்னிவைத்தே சிவமென நிகழ்வித்தா
னருணல நினைவற்றே யழிகுவ னவலத்தே. 6

* அளவறு சமயத்தே யறிவினை யறிதற்கே
சளமுறு தவமுற்றே தவறிடு மெனைமெய்ப்பாற்
றெளிதரு கழல்வைத்தே சிவமென நிகழ்வித்தான்
வளமிகு மருளைத்தா னினைகிலன் மயலுற்றே. 7

சுவானுபவசித்தி.

* வாசாம கோசரமா மீச னென்று மறைகளெலா மலறியிட மனித னாகிக், கூசாம லெம்புலனு மார வந்தென் குடிமுழுது மாட்கொண்டு குறியி லின்பம், பேசாது பேசியென துருவ மாக்கிப் பெருங்கருணைத் திறங்காட்டிப் பிழைக ணீக்கி, நேசாரு மன்னையினு மினிய னாகு நிமலனரு டனைநினையே னீச னேனே. 8

## தேவாரம்.

எம்பிரா னென்ற தேகொண் டென்னுளே புகுந்து நின்றிங்
கெம்பிரா னட்ட வாடி யென்னுளே யுழிதர் வேனை
யெம்பிரா னென்னைப் பின்னைத் தன்னுளே காக்கு மென்று
லெம்பிரா னென்னி னல்லா லென்செய்கே னேழை யேனே. 9

வஞ்சகப் புலைய னேனை வழியறத் தொண்டிற் பூட்டி
யஞ்சலென் றாண்டு கொண்டா யதுவுநின் பெருமை யன்றே
நெஞ்சகங் கனிய மாட்டே னின்னையுள் வைக்க மாட்டே
னஞ்சிடங் கொண்ட கண்டா வென்னென்ன நன்மை தானே. 10

## திருவாசகம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க், குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா, வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங் கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. 11

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று போதுநான் வினைக்கேடே னென்பாய் போல, வினையனு னென்றுன்னை யறிவித் தென்னை யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை, யனையனான் பாடேனின் றாடே னந்தோ வலறிடே னுலறிடே னாவி சோரே னுன்னை, முனைவனே முறையோநா னான வாறு முடிவறியேன் முதலந்த மாயி னானே. 12

பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப், பூசித்தான் திருநீறே நிறையப் பூசிப் போற்றியெம் பெருமானே யென்று பின்றா, நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை யாண்டானே யவாவெள்ளக் கள்வனேனை, மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ வென்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. 13

கட்ட றுத்தென்னை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரோ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டி னோடிரண் டும்மறி யேனையே. 14

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே. 15

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே யுண்டி யாயண்ட வாண ரும்பிறரும், வற்றி யாருநின் மலரடி காணு மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப், பற்றி னாய்பதை யேன்மனமிக வுருகே ன் பரிகி லேன்பரி யாவுட றன்னைச், செற்றி லேனின்னந் திரிதரு கின்றேன் றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 16

அன்ப ராகிமற் றருந்தவ முயல்வா ரயனு மாலுமற் றழலுறு மெழுகா, மன்ப ராய்நினை வாரெனைப் பலரு நிற்க விங்கெனை யெ த்தினுட் காண்டாய், வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை மர க்க ணென்செவி யிரும்பினும் வலிது, தென்ப ராய்த்துறை யாய் சிய லோகா திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 17

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானென தெனுமாயக், கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய வரும் பொரு ளடியேனை,யடித்த டித்துவக் காரமுன் தீற்றிய வற்புத மறி யேனே. 18

மாடுஞ் சுற்றமு மற்றுள போகமு மங்கையர் தம்மோடுங்
கூடி யங்குள குணங்களா லேறுண்டு குலாவியே திரிவேனை
வீடுந் தந்தென் றன் வெந்தொழில் வீட்டிட மென்மலர்க் கழல்கா
ட்டி, யாடு வித்தென தகம்புகுந் தாண்டதோ ரற்புத மறியேனே.

திருவாய்மொழி.

வைகலும் வெண்ணெய்
கைகலந் துண்டான்
பொய்கல வாதென்
மெய்கலந் தானே. 20

அதிக்கிருதாமிர்தம்.

போதோன்முதற் றேவர் புலம்பிடப் பூரணன்புவி வந்தெ னை யாளவுஞ்,சாதாரண மாகி யிருப்பதே தமியேனுரு காம விருப் பதே. 21

ஒத்தேயொழி யாவுணர் வானவ னுருவாயிங்ங னேயருள் செய்யவும், பித்தாயல ருமவிருப்பதே பேயேனழி யாம விருப் பதே. 22

மேலங்கொடு கீழிலி யாகிய விமலன்புவி வந்தெனை யாளவு
மோலென்றல ருமவிருப்பதே யுள்ளங்கல தாகி யிருப்பதே. 23

அருணிலைந்தழிதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2144.

# 3. அருளிரந்துரைத்தல்.

வினாவிளக்கம்.

¶ அருவுரு வாகி யந்த மறநிறை யமல வின்ப
வுருவினை யுடைய நம்ப னொளிமிகு மருளை வேண்டி
யருவிசெய் நயனம் வந்தங் கழகுற வுருகி நின்று
மருவிய வறிஞர் கூறும் வகையது மொழிகு வன்கேள். 1

¶ அறிவுரு என்றும் பாடமுண்டு.

பட்டணத்தார் பாடல்.

† அறிவின் றொழுக்கமும் பிறிதுபடு பொய்யுங்
கடும்பிணித் தொகையு மிடும்பை யீட்டமு
மினையன பலசரக் கேற்றி வினையெனுந்
தொன்மீ காம னுய்ப்ப வந்நிலைக்
கருவெனு நெடுநக ரொருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீ னலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கட லுறப்புகுந் தலைக்குந்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்ப மென்னு நெடுங்கல் வீழ்ந்து
நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
வுணர்வெனு நெடும்பாய் கீறிப் புணரு
‡ மாயப் பெயர்பெறுங் காயச் சிதைக்கலங்
கலங்குபு கவிழா முன்ன மலங்கன்
மதியுட னணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயி லுடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை யல்பல வாணநின்
னருளெனு நற்றுர் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே. 2

அருளு வாழி யருளு வாழி
புரிசடைக் கடவு ளருளு வாழி
தோன்றுழித் தோன்றுழி நிலைதபக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்க ளியாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே யிளமை நீக்க

† அறிவி லொழுக்கமும் என்றும், ‡ மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங் என்றும் பாடமுண்டு

மதனினுங் கடிதே மூப்பின் றொடர்ச்சி
யதனினுங் கடிதே கதுமெனெ †வாணாள்
பருகிப் பருகி யுடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்று நல்காக் கூற்ற
மினைய தன்மைய திதுவே யிதனை
¶ யெனதெனக் கருதி யிதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே யவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
யொன்றினும் படாதன சிலவே யென்றிவை
கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவுங்
கணக்கில்கோடித் தொகுதி யவைதா
மொன்றொன் றுணர்வுழி வருமோ வனைத்து
மொன்று வுணர்வுழி வருமோ வென்றென்று
தெளிவுழித் தேறல் செய்யே மளிய
மனத்தின் செய்கைமற் றிதுவே நீயே
யரியை சாலவெம் பெரும தெரிவுறி
னுண்டாய்த் தோன்றுவ யாவையு நீயே
கண்டனை யவைநினைக் காணு வவைதா
நின்வயின் § மறைந்தோ யல்லை யுளையாய்
மன்னினை நீயே வாழி மன்னியுஞ்
சிறுமையிற் கரந்தோ யல்லை பெருமையிற்
பெரியோய் பெயர்த்து நீயே பெருகியுஞ்
சேணிடை நின்றோ யல்லை தேர்வோர்க்குத்
தம்மினு மணியை நீயே நண்ணியு
மிடையொன்றின் மறைந்தோ யல்லை யிடையிட்டு
நின்னை மறைப்பது மில்லை மறைப்பினு-மதுவு
நீயே யாகி நின்றதோர் நிலையே-யஃதான்று
நினைப்பருங் காட்சி நின்னிலை யதுவே
நினைப்புறுங் காட்சியு மென்னிலை யிதுவே
யினிநனி யிரப்பதொன் றுடையன் மனமருண்டு
புன்மையி னினைந்து புலன்வழிப் படரினு
நின்வயி னினைந்தே னுருகத னின்வயி
னினைக்குமா நினைக்கப் பெறுத லனைத்தொன்று

† மரணம், வாணாள் பருகி யுடம்பைவறி தாக்கி என்றும், ¶ யா
னெனக் என்றும், § மறைத்தோ என்றும் பாடமுண்டு.

நீயே யருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென வெறிவிசும்பு வறிதாக
விம்ப ருய்ய வம்பலம் பொலிதரத்
திருவளர் தில்லை மூதூ
ரருநடங் குயிற்று மாதிவா னவனே. 3

ஒன்றினே டொன்று சென்றுமுகி றடவி
யாடுகொடி நடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
வோவநூற் செம்மைப் பூவியல் வீதிக்
குயிலென மொழியு † மயிலியற் சாயன்
மான்மான விழிக்கு ‡ மானூர் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த வெந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்ற
லாரணந் தொடராப் பூரண புராண
நாரண னறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி யாதித் தனிப்பொரு
ளேக நாயக யோக நாயக
யானென் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியிற்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழித்
தோற்றும் பொழுதத் தீற்றுத் துன்பத்
தியாயுறு துயரமு மியானுறு துயரமு
மிறக்கும் பொழுதி னறப்பெருந் துன்பமு
நீயல தறிகுந ரியாரே யதனால்
யானினிப் பிறத்த லாற்றே னலைதான்
றற்பவந் துடைத்த னிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியு மில்லையந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலு மாண்டொன்றிற் படரா
வுள்ளமொன் றுடைமை வேண்டுமஃ தன்றி
யைம்புல னேவ லாணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையு
மிதுவென துள்ள மாதலி னிதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙன முன்னங்
கற்புணை யாகக் கடனீர் நீந்தின

† மயிலிய லாய்த்து என்றும், ‡ மானுச் என்றும் பாடமுண்டு.

MAHAMAHOPADHYAYA DR. U. V. S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

றெற்பிற ருளரோ விறைவ கற்பங்
கடக்கயான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைக்கயான் பெறவும் வேண்டு நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டு நஞ்சுபொதி
யுறையெயிற் றரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே.

அடிசார்ந் தவர்க்கு முடியா வின்ப
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வ
மூலமு நடுவு முடிவு மிகந்து
கால மூன்றையுங் கடந்த கடவு
ளூனக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுட
ரெறுப்புத் துளையி னிருசெவிக் கெட்டா
வுறுப்பின் றெழுதரு முள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேற
றுண்டத் துளையிற் பண்டைவழி யன்றி
யறிவு நாறு நறிய நாற்ற
$ மினைய தன்மையி னெய்தா தெவற்றையுந்
தானே யாகி நின்ற தற்பர
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றந்
தோற்றம் பிறிதிற் றோற்றுச் சுடர்முனை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினு
மிருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியு மிருதியுந் தொடர்ந்துநின் றலம்வர
மருதிடங் கொண்ட மருதமா ணிக்க
வுமையாள் கொழுந வொருமூன் றாகிய
விமையா நாட்டத் தென்றனி நாயக
வடியே னுறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி நினையாக் கன்மனக் கயவரொடு
நெடுநாட் பழகிய கொடுவினை யீர்ப்பக்
கருப்பா சயமெனு மிருட்சிறை யறையுட்
குடரின் சங்கிலி பூண்டுதொடர்ப் பட்டுக்
கூட்டுச் சிறைப்புழுவி னீட்டுமலத் தழுந்தி
யுடனே வருந்தி நெடுநாட் கிடந்து

$ மேனைய என்றும் பாடமுண்டு.

பல்பிணிப் பெயர்பெற் றல்லற் படுத்துந்
தண்ட லாளர் மிண்டிவந் தலைப்ப
வுதர நெருப்பிற் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டுங்
கிடத்த னிற்ற னடத்தல் செல்லா
திடங்குறை வாய்தலின் முடங்கின னிருந்துழிப்
பாவப் பகுதியி லிட்டுக் காவற்
கொடியோ ரைவரை யேவி நெடிய
வாசைத் தளையி லென்னையு முடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியார்ப் பிழைத்தும் பிறர்பொருள் வவ்வியும்
† பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியு
மைவருங் கடுப்ப வவாவது கூட்டி
யீட்டின கொண்டு மீட்டு வந்துழி
யிட்டுழி யிடாது பட்டுழிப் படாஅ
தின்னு திடுக்க ணெய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பன் வீடு காணா
னின்னை யடைந்த வடியா ரடியார்க்
கென்னையு மடிமை ‡ யாகக் கொண்டே
யிட்டபச் சிலைகொண் டொட்டி யறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமற்
காத்தருள் செய்ய வேண்டுந்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோயே. 5

† பரியா துழன்றும் என்றும், யாக்கி முன்னை என்றும் பாடமுண்டு.

போதாமிர்தம்.

* அறம்பொரு ளின்பம் வேண்டே னருங்கலைக் கல்வி வேண்டே
னிறந்திக ழிளமை வீர நிலைவலி முழுதும் வேண்டே
னிறந்தவீ டதுவும் வேண்டே னிறைவனே யென்று முன்றன்
சிறந்தபே ரருளை வேண்டிச் செறிவுற வருந்து வேனே. 6

சுவானுபவசித்தி.

* பிறக்கவிப் பிறப்புப் போகப் பிணிபசி மூப்ப தாகத்
துறக்கமற் றெவையு மின்றித் துவந்துவ முடிய நிற்க
விறக்கமற் றிருக்க வென்று மெய்தலெய் தாமை வேண்டேன்
‡ சிறக்கநற் குரவ வுன்றன் றிருவரு ளிரக்கின் றேனே. 7

‡ சிறக்கு என்றும் பாடமுண்டு.

### போதரத்நாகரம்.

* இரப்பதோர் பொருளு மில்லை யிடருட னின்ப மெல்லா
முரக்கமா முடற்க மைந்த யூழ்முறை வந்து போமாற்
புரக்கும்வீ டதுவும் வேண்டேன் புனிதனு ரருளே வேண்டி
யிரப்பனெக் காலு மென்று மெங்குமெவ் வகையி னுந்தான். 8

### சிவானந்தநிலயம்.

* விரும்புவ ரறம்பொருள் வீடி யாவையு
மரும்பிடு மிறையரு ளல்ல தில்லையாற்
றிரும்பவை யருள்பெறுத் ¶ திண்ணற் கன்பர்கள்
விரும்புவ ரருளேமேன் மேலும் வேண்டியே. 9

¶ தெண்ணற் அல்லது தென்னற் என்றும் பாடமுண்டு.

### தத்துவதேசிகம்.

* பொருளின்ப மறம்புகழ் கல்வியுடன்
† வெருளின்றிய வீடும் விரும்பலனுன்
மருளொன்றிய வென்னை வணக்கியநின்
னருளொன்றையும் வேண்டுவ னத்தனையே. 10

† வெருளொன்றிய வல்லல் என்றும் பாடமுண்டு.

### திருவாசகம்.

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே. 11

வழங்கு கின்றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்கு கின்றேன் விக்கினேன் வினையேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்கு கின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே. 12

கோள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. 13

### திருவாய்மொழி.

† மறிக்கிவல் வலைப்படுத்திக் குமைத்திட்டுக் கொன்றுண்ப
ரறப்பொருளை யறிந்தோரா ரிதுவென்ன வுலகியற்கை
வெறித்துளப முடியானே வினையேனை யுனக்கடிமை
யறக்கொண்டா யினியென்னா ரமுதேகூஉ யருளாயே. 14

† மறக்கவல் வினைப்படுத்துக் என்றும் பாடமுண்டு.

நக்கீரர் திருநூற்றந்தாதி.

வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமாநின் பாதார விந்தஞ்—சிரமார
வேத்திடும்போ தாகவந் தென்மனத்தே யெப்போதும்
வைத்திடுநீ வேண்டேனான் மற்று. 15

அருளிரந்துரைத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2159.

## 4. அருள்விருப்பதனா லச்சம்.

வினாவிளக்கம்.

அருளினை யிரந்தி ரந்தங் கமலன தடியில் வீழ்ந்து
தெருளுறு மன்ப தென்னுஞ் செறிகடற் றிளைக்கு மன்ப
ரிருளறு மருள்வி ருப்பா லெழில்பெற வஞ்சி யஞ்சி
யுருகிமெய் விதிர்வி திர்த்தங் குரைதரு பரிசை யுங்கேள். 1

ஞானசூளாமணி.

* தஞ்சமா முன்றன் றனியருண் மறந்து சழக்குடைப் புலன்
வழி யொழுகும்,வஞ்சனேன் மடவார் மயக்கமே மருவு மதியிலே
னுனதருட் காரென்,றஞ்சினே னடியே னங்கணா வமலா வயர்வறி
வுடனள விறந்தென், னெஞ்சமா ரமுதே நீசனே னாயே னின்
னருண் மருவுமா நினையே. 2

* உம்பரா ரிறையு மோங்குமா லயனு முயர்ந்துள வெவருமின்
றளவும், வம்பதார் மலர்தூய் வழிபட முயன்று மருவுமா றின்
றியே வருந்தச், செம்பொனே தெளிவே தேசிகா சிறியேன் றிரு
வருள் பெறுவதற் காரென், றம்பொனே யடியே னஞ்சினே
னழகா ரருளினை மருவுமா றருளே. 3

நித்யானந்ததரிசனம்.

* மறையெலா மறைந்துங் கலையெலா நவின்று மதிஞரா யறு
வகைச் சமயத், திறைவரா மெவரு மிருந்தவ முயன்று மிறையரு
ளறிவுறா ரென்றாற், குறைவிலா நிறைவே யெனதுளத் தமுதே
குறியிலே னுனதருட் காரென், றறையுமா றறியே னஞ்சினே
னாயே னஞ்சிடா வருளைநீ யருளே. 4

### அருணெறிவிளக்கம்.

* அன்பிலே † னின்றவற் கன்புறு மவரோ டணைவிலே னற
நெறி யணுகே, னின்பமே நினைந்து துன்பமே மருவி யிவ்வயிற்
றினைவளர்த் திடற்காத், தின்பமே கருதித் திரிவதே பொருளாஞ்
சிதடனேன் றிருவருட் காரென், றம்பொனே யடியே னஞ்
சினே னறியே னின்னரு ளிசையலா நெறியே. 5

† நின்றவர்க் என்றும் பாடமுண்டு.

### போதாமிர்தம்.

* அன்பர்பா லணைந்து மறிவினைக் கேட்டு மறைந்துநல் லரு
ளதே முழுதா, மின்பமென் றுணர்ந்து மிகத்துள போக மிறு
தியா நஞ்சதென் றிசைந்தும், வன்பதார் மூடர் தொழில்களே
மருவி வயிறது வளர்த்தலே † பொருளாந், துன்பனே னினியா
ருன்றனு ரருட்குச் சொரூபமென் செய்யுமா சொல்லே. 6

† தொழிலாய்த் என்றும் பாடமுண்டு.

### சுவானுபவசித்தி.

* தூவ றச்சத் தோதித மாகிய சச்சி னற்சுக மாய்மறை யீறவை
யோவ றத்துதி யாவுமி தென்றிறை யோரு தற்கிய லாவண நீடிய
தேவு நற்சிவ மாமெனுண் மேவிய சீர ருட்கடி யேனள வேதென
வார்வ மற்றய ராமிக வஞ்சின னா ருட்கனி யேயருள் செய்திடே.

### திருவாசகம்.

விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தா
யிச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தா
ரச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா வென்னான் செய்கேன் பேசாயே. 8

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லாற் பற்றுநான் மற்றி
லேன் கண்டாய், செஞ்சவே யாண்டாய் சிவபுரத் தரசே திருப்
பெருந் துறையுறை சிவனே,யஞ்சினே னாயே † னாண்டநீ யளித்த
வருளினை மருளினான் மறந்த,வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்
டாய் வருகவென் றருள்புரி யாயே. 9

† னாண்டுநீ என்றும் பாடமுண்டு.

---

### குறுந்திரட்டு.

ஓராயிர மாமறை யுச்சியினா
னாராயண னான்முக னாடரியா
யாராலு மளப்பரு நின்னருளுக்
கார்தானடி யன்னென வஞ்சுவனே. 404

திருவாய்மொழி.

ஆயேயிவ் வுலகத்து நிற்பனவுந் திரிவனவு
நீயேமற் றொருபொருளு மின்றியே நின்றமையா
னோயேமூப் பிறப்பிறப்புப் பிணியேயென் றிவையொழியக்
கூயேகொ ளடியேனைக் கொடுவுலகங் காட்டேலே. 10

மாயஞ்செய் யேலென்னை நின்றிரு மார்வத்து மாலை நங்கை
வாசஞ்செய் பூங்குழ லாடிரு வாணைநின் னாணை கண்டாய்
நேசஞ்செய் துன்னோ டென்னை யுயிர்வே றின்றியொன் றாகவே
கூசஞ்செய் யாதுகொண் டாய்கூவிக் கொள்ளாய் வந்தந்தோ. 11

திருமொழி.

(திருச்சந்தவிருத்தம்).

அடக்கரும் புலன்களைந் தடக்கியாசை † யாமகத்
தொடக்கருத்து வந்துநின் றொழிற்கணின்ற ‡ தொண்டனேன்
விடக்கருதி மெய்செயாது மிக்கொராசை யாக்கினுங்
கடற்கிடந்த நின்னலாலொர் கண்ணிலேனெம் மண்ணலே. 12

† யாமவை என்றும், ‡ வென்னைநீ என்றும் பாடமுண்டு.

அருள்விருப்பதனலச்சம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2171.

## 5. பவநடந்திளைத்துப்பரமனுக்கிசைத்தல்.

வினாவிளக்கம்.

அருள்விருப் பதனு லச்ச முரைத்தவா றதுபோ லன்ப
ரிருளுறு பவந டத்துக் கிளைத்தெழி லிறையை நோக்கித்
தளர்வுறு நெஞ்சி னோடே தாமுரை தழுத மூத்துக்
† களவற மிகுநல் லன்பர் கழறுவ ரதனை யுங்கேள். 1

† களவறு மிகுநல் லன்பாற் என்றும் பாடமுண்டு.

அருணெறிவிளக்கம்.

* அருந்து யர்ப்பெரு குருவமாம் பவநட மளவிலா வூழியூழி
பொருந்தி டப்புகுந் தாடியே போக்கொடு வரவதாய்ப்புலையேனன்
வருந்து மித்துய ராற்றிடேன் முறைமுறை வந்தநா ளமையாதோ
பரிந்து னன்பருக் கருளிடும் பரமனே பார்த்தமைத் தருளாயே. 2

### ஞானசூளாமணி.

* என்று நீயுளை யன்றதே முதலெதி ரின்றள வதுவாக [நடமாட
வொன்றொ டொன்றொவ்வாக் ‡ கோலமே கொண்டுநா னுற்பவ
வின்று கண்டிடப் புகுவபோ லிருப்பதே னிளைத்தழிந் தனனீசா
நின்றி டென்றினி யாயினுங் கையமைத் தருளநீ நினையாயே. 3

‡ கோப்பெலாங் என்றும் பாடமுண்டு.

### அனுபவசாரம்.

* நானா விதம்பயின் மாயப் பெருநட மாடியழிந்
தானா யுழலு முணர்விலி யேனைத் திரித்தறிவாந்
தானாக வின்னருள் செய்தவ னேதலை வாதளர்ந்தே
னானாவி தன்னை யொழியா யினியெனக் குள்ளவனே. 4

### திருவெண்பா வந்தாதி.

† நடமாடி னாலனந்த நாளாக நல்லாய்
கடனா வதுதவிர்க்கை கண்டா—புடனாகி
விள்ளா வருட்சொரூபா மேதினியில் யாவர்களுங்
கொள்ளாத கோலமெலாங் கொண்டு. 5

† நடனாடி நானனந்த என்றும் பாடமுண்டு:

### தத்துவமாலை.

தாங்கா யெனைவந்து தம்பிரா னேதளர்ந்தே
னீங்காவிவ் வாழ்க்கையினி னின்றலர்ந்தே—னாங்காரப்
‡ பேயோடு மிவ்வுடலிற் பித்தாகு மாயக்கூத்
தோயாதோ நாயேற் குரை. 6

‡ பேயாடு என்றும் பாடமுண்டு.

கழலும் வகையறியேன் கார்மலமே மூடி
யுழலுமதே யானே னுடையாய்-சுழலுபவக்
கூத்தாட றீரக் கொடியேனை யன்பருடன்
காத்தாள்வ தேகாண் கடன். 7

பவநடந்திளைத்துப்பரமனுக்கிசைத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2178.

### குறுந்திரட்டு.

ஒத்தொவ் வாததொப் பேசள வில்லைநான் கொண்டன வூழியூழி
கத்த மாகவென் னுளத்திருந் தெத்தனை கரணநா டகஞ்செய்தாய்
நித்த மாடிய கூத்துமென் னாதனே நினைந்திலே னடியோடே
† யத்த நானினை தரும்பரி சில்கூத் தமையுமென் பதுகாணே. 405

† யத்த நாயக நீதரும் பரிசுகூத் என்றும் பாடமுண்டு.

## 6. அருட்டிறநோக்கிப் பிறவிவிரும்பல்.

### வினாவிளக்கம்.

பவநட.மதனின் வையம் பதைத்தலா லதனை யஞ்சி
நவமுறு முயிர்க ளுய்ய நாதன்முன் னுரைசெய் தாற்போ
லுவகையோ டிறைவ னொப்பி னருட்டிற நோக்கி யன்பர்
தவலறு பிறவி வேண்டிச் சாற்றுவ ரதனை யுங்கேள். 1

### போதாமிர்தம்.

* வானவ ராலு மூல மறைகளீ றவைதம் மாலுந்
தானிது வென்ன வொண்ணாத் தம்பிரா னுடலஞ் சாத்தி
யானநல் லன்பர் தங்கட் கருளிடும் விரகு காண
மானிடப் பிறவி மேன்மேல் வாய்க்கநங் கட்கு மன்றோ. 2

* மூலமா மூவ ரோடு முயன்றமா முனிவர் தேவர்
கோலுமா வூழி யூழி தவஞ்செய்துங் குறுக வொண்ணா
மேலதாம் பொருளை யன்பர்க் கிறையருள் விரகு காண
மேலுமேல் பிறவி மேவ விரும்பவே வேண்டு மன்றே. 3

* சாதியந் தணர்க ளாகத் தகவில்சண் டாள ராகப்
பாதக மூட ராகப் பழுதறுந் துறவ ராகப்
பாதம்வந் தடையி னந்தக் கணத்திலே பரம மாக்கு
நாதனா ரருள்கண் டேத்த நமக்கினம் பிறவி வேண்டும். 4

### ஞானசித்தி.

* அருளுரு வாகி வந்த வமலனா ரரிய கோல
மருவுமைம் புலன்க ளாரக் கண்டுவாழ்ந் திடவே பெற்றா
லுரியவீ டென்னா நின்ற வொப்பிலா வின்பந் தானு
மருவுமா நினையா ரிந்தப் பிறவிபோல் வளமின் றென்றே. 5

### போதாத்ருகரம்.

* தன்னையே யருள வந்த தம்பிரா னரிய கோல
மன்னுமைம் புலனு மாரக் கண்டுவாழ்ந் திடலா மாகி
னன்னிய மேது மில்லா வமலவீட் டின்பந் தானு
முன்னிட விரும்பா ரிந்தப் பிறப்பினுக் கொவ்வா தென்றே. 6

* விழியினா லன்ப ராகி விழுங்குவித் தகனார் கோலங்
கழிவற முகந்து கொண்டு களித்துவாழ்ந் திடலா மாகி
னழிவிலா முத்தி யின்ப மயர்த்தும்வேண் டிடுவ ரோதா
ணிழிவிலிப் பிறப்பு வாய்ப்புக் கேதுமொவ் வாத தென்றே. 7

### சுவானுபவாமிர்தம்.

* கருக்கெடப் பாச மெல்லாங் கருணையா லுருவாய் வந்து
திருக்கடைக் கண்கள் வைத்த செல்வனார் திருவோ லக்கம்
விருப்புற மேவி வாழ வினையுமேன் முத்தி யின்பஞ்
சிரிப்புடைத் தன்றோ சீசீ திகழுமிப் பிறவிக் கெங்கே. 8

* சகமுயிர் பரமி றந்த சச்சிதா னந்தந் தன்னை
யகமுற விருத்திக் காட்டு மமலனார் திருவோ லக்க
மகிழ்தர மருவி வாழ வாய்க்குமேன் முத்தி யின்ப
நகுதரப் படுவ தன்றோ நாடிலிப் பிறவிக் கெங்கே. 9

* போக்கொடு வரவி றந்த பூரண போத மேநா
மாக்கியாண் டருளு மாரா வமுதனார் திருவோ லக்க
நீக்கற மருவி வாழ நிலவுமேன் முத்தி யின்ப
மேக்கற வுடைத்தே யிந்தப் பிறப்பினுக் கெங்கே யெங்கே. 10

### தத்துவதேசிகம்.

* மாசற்றுள வன்பருள் வாழ்வுவிடா
நீசற்குரு குற்றிட நெஞ்சிருகண்
வீசப்புனல் பித்தென மேதினியோ
ரேசப்பெறி லிப்பவ மேயின்றே. 11

### தேவாரம்.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறு
மினித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றான்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 12

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
யென்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
வின்னம் பாலிக்கு மோவிப் பிறவியே. 13

### அன்பா.

முன்னம் பிறந்த பிறவியை மாற்றிநின் மொய்கழற்கே
யின்னன்பை வைத்தெனக் கெல்லா நிறையத் தருபவனே
யுன்னன்பர் கூட்டமு முன்னையுங் காணப் பெறினடியே
னின்னம் பிறப்பன் பிறவியெங் கேனு மிரந்துகொண்டே. 14

திருவாய்மொழி.

வழிபட் டோட வருள்பெற்று மாயன் கோல மலரடிக்கீழ்ச்
சுழிபட் டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத் தின்புற் றிருந்தாலு
மிழிபட் டோடு முடலதனிற் பிறந்து நின்சீர் யான்கற்று
மொழிபட் டோடுங் கவியமுத நுகர்ச்சி யுறுமோ முழுதுமே. 15

அருட்டிறநோக்கிப் பிறவிவிரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2193.

## 7. அருள்வியந்தாற்றுமை.

வினாவிளக்கம்.

* முழுதுடல் விதிர்வி திர்த்து முகிழ்த்திட வுரோம மெங்கு
மழுதகண் ணருவி யாக வலைகட லெனவு மார்த்துப்
பொழிதரு கருணை யீசன் பொன்னருள் வியந்து நல்லோ
ரழிதரா வுருகி யாற்று தறைதரு பரிசை யுங்கேள். 1

சுவானுபவசித்தி.

* இதமக மிறந்தி யாவு மாகிய விணையி லின்ப
மதுவென துருவ மாக வங்கையா மலக மாக்கிப்
† பொதுவறு மன்ப ரோடே புனைந்தெனை யாண்டு கொண்ட
வதிசய மதனை யாற்றே றனங்கெனக் குருகு மாலோ. 2

† பொதுவுறு என்றும் பாடமுண்டு.

* மூர்த்திகண் மூவர் தேவர் முப்பத்து மும்மைக் கோடி
யேத்திடு முனிவ ரிம்ப ரெய்துமா றரியான் வந்து
வார்த்தை யொன் றாலே தன்னை மதியிலேற் கருளி யாண்ட
வார்த்தமா மருளுக் காற்றே னாவிநீ ராகு மாலோ. 3

போதாமிர்தம்.

* பொறிபுலன் கரண மாயை புரையறு முயிரின் மூல
‡ மறைபவை யனைத்தின் மேலா யகிலமும் விழுங்கி யோங்குஞ்
செறிதரு பூரண மாண்டு திகழுமா ரமுதை நாயேற்
கறிவுற வருள்வ தேதா னாற்றுமா றறிகி லேனே. 4

‡ மறையவை என்றும் பாடமுண்டு.

போதரத்னாகரம்.

* தன்பெருந் தன்மை யேது தமியனேன் சிறுமை யேது
வும்பரு மறையுங் காணா துணங்கியோ விடுமா றேது
வன்பரோ டறிவி லேனை யாள்வதே யாற்ற கில்லே [கேனே. 5
னென்பொனா ருளின் றன்மைக் கென்செய்கே னென்செய்

* பாரொடு விண்ணுந் தேடப் பாவியே னளவாய் வந்து
காரண காரி யங்கள் கழன்றலை யறநி றைந்த
பூரண மளிக்கப் பொல்லாப் புலையனேன் றகுவ னோதா
னாரண னருளுக் கந்தோ வாற்றிடே னாற்றி டேனே. 6

தத்துவமாலை.

ஆற்ற வொருவழியுங் காணே னகிலபவத்
தேற்றுவரு மெல்லையிலா வென்வழக்கை—மாற்றவெறு
மொன்றா லழித்தவிர குன்றுதொறு முள்ளுடைந்து
நின்றா ரழன்மெழுகாய் நெக்கு. 7

வெண்பாவந்தாதி.

உண்டோ விலதோ வுருவோ வருவோவென்
றெண்டானு மற்றிமையோ ரேமாப்பக்—கண்டே
னடியே னெனவென்னை யாண்டானே யாற்றேன்
முடியேன் † றரியேன் முறை. 8

† முறையோ என்றும் பாடமுண்டு.

தத்துவதேசிகம்.

* தன்னையனை யான்றனது தன்மைநினை யாதே
யென்னையனை யேன்சிறுமை யேதினையு மெண்ணா
வன்னையென வந்தெனையு மாண்டவரு ளாற்றே
னென்னையினி யான்செயும தேதுமறி யேனே. 9

* ‡ தேற்ற மறுமென் னுளமுந் தெளியத்
தோற்ற முழுதுஞ் சொரூப மெனவோர்
மாற்றந் தரும்வல் லபமுள் ளுதொறு
மாற்றும் படியொன் றறிகின் றிலனே. 10

‡ தோற்றம் முறுமென் என்றும் பாடமுண்டு.

அருள்வியந்தாற்றாமை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2203.

# 20. இறையியற்பவணா.

## 1. இறையியலுரைத்தல்.

வினாவிளக்கம்.

* அளவி லாதநல் லருள்வகை தனையுனி யழனுறு மெழுகேபோ
லுளமெ லாமிக வுருகிடு பவர்க்கிறை யுறுமியல் புகளெல்லாங்
களவி லாவகை கரதல மணியென நிகழ்தரு மதனாலே
வளமெ லாமிக மகிழ்தர வறைகுவர் மதிநல முடையோய்கேள். 1

போதாமிர்தம்.

* அணுவினை மேரு வாக்கி மேருவை யணுவ தாக்கி
யணுகுநஞ் சமுத மாக்கி யமுதைநஞ் சதுவு மாக்கி
நணுகரு மமரர் வாட நாயினே யெனை யாண்ட
வினையிலி யிறைவ னார்தம் மெழின்மிகு மியல்பு தானே. 2

உடுவினை மதிய மாக்கி யுலங்கினைக் கருட னாக்கிக்
கடைநரி பரிய தாக்கிக் காஞ்சிரை கரும்ப தாக்கி
யுடலிடை முத்தி யின்ப மூமனைற் குணரக் காட்டு
மிடனுடைக் குரவ னார்தம் மெழின்மிகு மியல்பு தானே. 3

மூலசித்தி.

* உயிரினுக் குயிர தாகு முடலினுக் † குணர்வ தாகு
மயலினுக் கறிவ தாகும் வல்லிருட் கிரவி யாகுங்
கயவருக் கிருள தாகுங் காதலர்க் கருளுங் கண்ணு
முயவெனக் கருளு நாத னேங்கிய விருக்கு மாறே. 4

† குணவ என்றும் பாடமுண்டு.

* வயமுயக் கருணை யீசன் மாசிலா வானின் வந்து
புயலெனப் பொழியு † மூணும் பொருள்களாய் விளையும் பொற்பி
னயில்வுறச் சுவைய தாகு யறுத்திடு மனலா யாக்கைக்
குயிரெனத் திகழு நாத னேங்கிய விருக்கு மாறே. 5

† முண்மைப் என்றும் பாடமுண்டு.

---

குறுந்திரட்டு.

பூவியன் மாருதம் பொங்கு தீப்புன
லாவியு மாக்கையு மனந்த மாத்தனி
லோவியங் கண்டுகண் டுவக்கு மும்பரான்
மேவியல் பொருவரால் விளம்ப லாவதோ. 406

### சுவாநுபவசித்தி.

* கருதரும் வினைக ளாய்ச்செய் கருத்ததாய்க் கருத்துட் டங்கி
விரிதரு மூழ தாகி விளைந்திட ரின்ப மாகி
யெரிநிகர் பிறவி யாகி யிப்பவந் தீர்க்கு ஞான
முறைதரு பவனு மீச னோங்கிய விருக்கு மாறே. 6

### போதாமிர்தம்.

* சகமெனு மோவி யத்தைத் தானெனும் படத்திற் றுணு
மிகுதரு தூரி யத்தால் விளங்கிட வெழுதித் தானே
மகிழ்தரக் கண்டின் புற்று மாசிலா வறிவாய் நின்றே
யிகமொடு பரமு மாகு மிறைவன தியல்பு தானே. 7

* அலகிலெக் கலையு மாகி யறையுநற் பொருளு மாகி
யுலைவில்சித் தாந்த பேதத் தொன்றொடொன் றெவ்வா வண்ண
மலைவுறப் பிணங்கி யென்று மலைவறு மன்ப ருள்ளத்
தெலையில்சிற் சுகம தாகு மிறைவன தியல்பு தானே. 8

### சிவாநந்தநிலயம்.

* எட்டு மூர்த்தியா யேழிரண் டுலகா யெலையின் மேருவா யெழு
கட லதுவாய், முட்டு மாமதிட் சக்கர கிரியாய் மூவர் தேவர்முப
பத்துமூ வருமாய்க், கட்டு வீடதாய்க் காயமாய்ப் புலனாய்க் கரண
நான்குமாய்க் கண்டிடுங் கரியா, யிட்ட மாமடி யவருளத் தறிவா
யின்ப மாமிறை யிருந்திடு மியல்பே. 9

* குற்றமாய்க் குணமாய்க் குறைவொடு நிறைவாய்க் குருகுமாய்
வயிரமாய்க் கோளாய், முற்றுநாள் பக்கந் திங்களாண் டூழி மூன்று
கா லங்களாய் † முகுட்டு, ணுற்றநா தமதா யொன்றதாய் மூன்று
யொன்றொடைம் பானொடெக் கலையா,யற்றவான் பொருளா யகண்
டமா யன்பர்க் கமுதமா மமலன தியல்பே. 10

† முகிழ்த்து என்றும் பாடமுண்டு.

### ஞானவினோதன் கலம்பகம்.

அருணுறு மெம்பெருமா னுக மழியாப்
பொருணுறு மென்னுள்வரு போதக்—திருவாயென்
வாணுளே நாறும் வருசொருபா னந்தன்மலர்த்
தாணுறு மென்புன் றலை. 11

### பட்டணத்தார்பாடல்.

இருநில மடந்தை யியல்பினி லுடுத்த
பொருகடன் மேகலை முகமெனப் பொலிந்த
வொற்றி மாநக ருடையோ யுருவின்
பெற்றி யொன்றாற் பெற்றா ரியாரே
† மின்னியன் மீமிசைப் பிறங்குநின் சடையே
மன்னிய வண்டநின் சென்னியின் வடிவே
பாவகன் பருதி பணிமதி தன்னொடு
மூவகைச் சுடருநின் னுதனேர் நாட்டந்
தண்ணொளி யாரந் தாரகைக் கணமே
விண்ணவர் முதலா வேறா ரிடமாக்
கொண்டுறை விசும்பே கோலநின் னாக
மெண்டிசை திண்டோ ளிருங்கட லுடையே
யணியுடை யல்கு லவனிமண் டிலமே
மணிமுடிப் பாந்தணின் றாளிணை வழக்கே
யொழியா தோடிய மாருத முயிர்ப்பே
வழுவா வோசை முழுதுநின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
வூனமின் ஞானத் ‡ தொருநின் னுணர்வே
நெருங்கிய வுலகி னீர்மையு னிற்றலுஞ்
சுருங்கலும் விரிதலுந் தோற்றநின் றொழிலே
யமைத்தலு மளித்தலு மாங்கதன் பெயர்ச்சியு
மிமைத்தலும் விழித்தலு மாகுநின் னியல்பே
யென்றிவை முதலா வியல்புடை வடிவி
னொன்றிய துப்புரு விருவகை யாகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி
யத்திறத் தைம்பொறி யறுவகைச் சமயமோ
டேழுல காகி யெண்வகை மூர்த்தியோ
டூழியோ டூழி யெண்ணிறந் தோங்கி
யெவ்வகை யளவினிற் கூடிநின்
றவ்வகைப் பொருணீ யாகிய விடத்தே. 12

† மின்னிய மின்னின் பிறக்கநின் என்றும், ‡ தொகுதிநின் என்றும் பாடமுண்டு.

இடத்துறை மாதரோ டொருடம் பென்று
நடத்தினை நள்ளிருணவிற் றினை யென்றும்
புலியத ளென்பொடு புனைந்தோ யென்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோ யென்றுந்
திருவமர் மாலொடு திசைமுக னென்று
மருவமு முருவமு மானா யென்று
முளனே யென்று மிலனே யென்றுந்
தளரா னென்றுந் தளர்வோ னென்று
மாதி ‡ யென்றுஞ் சோதி யென்றும்
போதியிற் பொலிந்த புராண னென்று
மின்னவை முதலாத் தாமறி யளவையுண்
மன்னிய நூலிற் பன்மையு மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
யணங்கிய வவ்வவர்க் கவ்வவை யாகி
யடையப் பற்றிய பளிங்கே போலு
மொற்றி மாநக ருடையோ யுருவே. 13

‡ யென்று மசோகின னென்றும் என்றும் பாடமுண்டு.

தூமதி சடைமிசைச் சூடுத றாய்நெறி
யாமதி யானென வமைத்த வாறே
யறனுரு வாகிய வானே றேறுத
லிறையவ னியானென வியற்று மாறே
யதுவவ னவளென நின்றமை யார்க்கும்
பொதுவிலை யானென வுணர்த்திய பொருளே
முக்கண னென்பது முத்தீ வேள்வியிற்
றொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதன் மற்றத
னாத னானென நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதன்
மூவரு மியானென மொழிந்த வாறே
யெண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகி
னுண்மை யானென வுணர்த்திய வாறே
நிலநீர் தீவளி யகல்வா னென்று
முலவாத் † தொல்படை யுடையோ யென்றும்
பொருளுநற் பூதப் படையோ யென்றுந்

† தொல்புக ழுடையோ என்றும் பாடமுண்டு.

தெருளநின் றுலகிற் றெருட்டு மாறே
யீங்கிவை முதலா வண்ணமும் வடிவமு
மோங்குநின் பெருமை யுணர்த்தவு முணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையிற் சுழலு மாந்தர்க்
காதி யாகிய வறுதொழி லாள
ரோத லோவா வொற்றி யூர
சிறுவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படு மளவே. 14

ஞானவிநோதன் கலம்பகம்.

மலர்மிசை மடந்தை யொருமண வாள
பலர்புகழ் தக்க கலைமகள் கணவ
கவுரி கேள்வ பார்மகட் கிறைவ
மோனநன் மொழிய ஞானவி நோத
வறிவரு மறிவ † வெறுமருள் வடிவ
¶ பேதங் கெடுக்கும் போத வல்லப
கேதங் கெடுக்கும் பாதபங் கயத்த
வெனக்கென வந்த மனத்தனித் துணைவ
வொருவரு மறியாச் சொரூபா னந்த
பெரும ‡ நின்செயல் பெரியோய் கேட்டரு
ளொருரு புனையி னும்ப ருலகத்
$ தாருரு வுகளு மருவுரு வாமே
யிந்நிலத் தடியிட விறைவ விந்நில
மந்நிலத் தேற வடியிட் டறுமே
பண்டை வடிவொழிந்துன் பங்கய மலர்க்கண்
கண்டவர்க் குடம்பு கண்ணுறு கும்மே
செய்ய பாதஞ் சிரமிசை யேற
வெய்ய பாசம் விட்டே றும்மே
யன்னிய மான தறுமொரு மொழியினின்
முன்னிய சமய மொழிப்பிணக் கறுமே. 15

† நெறியரு ணிமல என்றும், ¶ போதங் கொடுக்கும் பூத வல்லப என்றும், ‡ நின்புகழ் என்றும், $ தாருறு புகழு மறிவுரு வாமே என்றும் பாடமுண்டு.

தேவாரம்.

கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையுந்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரையி லாளரே. 16

தொழுது தூய்மலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றுரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையு
மெழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே. 17

பட்ட நெற்றியர் பான்மதிக் கண்ணியர்
நட்ட மாடுவர் நள்ளிரு ளேமமுஞ்
சிட்ட னூர்தென் பராய்த்துறைச் செல்வனு
ரிட்ட ராயிருப் பாரை யறிவரே. 18

முன்பெ லாஞ்சில மோழைமை பேசுவ
ரென்பெ லாம்பல பூண்டங் குழிதர்வர்
தென்ப ராய்த்துறை மேவிய செல்வனு
ரன்ப ராயிருப் பாரை யறிவரே. 19

திருவாய்மொழி.

செய்ய தாமரைக் கண்ண னுயுல கேழு முண்ட வவன்கண்டீர்
வையம் வானம் மனிசர் தெய்வம் மற்று மற்று முற்றுமாய்ச்[னும்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப் பட்டி வைபடைத் தான்பின்
மொய்கொள் சோதியோ டாயி னனொரு மூவ ராகிய மூர்த்தியே.

இறையியலுரைத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2223.

## 2. இறையோடு துணிதல்.

விஞவிளக்கம்.

இறையியல் பதனை யெல்லா மெழில்பெற நோக்கி மேன்மே
லறைதரு மூவகை வெள்ளத் தன்புமீ தூர நின்று
செறிதரு கருணை யீசன் றிறத்தினிற் றுணிந்தங் கன்பா
லுறைதரு பரிசை யுந்தா னறைகுவ னறிக மைந்தா. 1

போதாமிர்தம்.

* அன்னை யத்தனே டையனு மனுச னுகிக் காதலி யன்புறு மைந்த, ரின்னு யிர்ப்பெருந் தோழன்மற் றேவ லிசைந்து செய் பவ ரின்னுமற் றுள்ளோர், பொன்னு மிக்குள போகமும் புகழும் பொருந்து கல்வியும் போதமும் வீடுந், தன்னி ணைக்கழல் வைத்தெனை யாண்ட தம்பி ரானெனத் தான்றுணிந் தனமே. 2

* ஐம்புலன்களுங் கண்டினி தார வருளின் மானிட னாகிவந் தென்னைத்,தன்பெருங்கருணைத்திறங் காட்டித் தாவில் சீரடி யாருட னண்ட, வெம்பிரானெனக் குடம்புமென் கரண மியாவு மாவியு மெனதுதோள் வலியு, மின்ப மாருயி ரும்முயிர்க் குயிரு மென்ப தேதமொன் றறத்துணிந் தனமே. 3

போதரத்னாகரம்.

· * அண்டமெண்டிசை யாவையுந் தானே யாய வைந்தொழி லேவருந் தானே,யெண்ட ரும்முல கத்திரு வகையா மியல்ச ராசர மெவைகளுந் தானே, யண்டர் தந்தொலை யாநிதி தானே யழிவி லாச்சுக சாகரந் தானே, தொண்ட ரோடுய வந்தெனை யாண்ட சொரூப வாரமு தென்பதென் றுணிவே. 4

மெய்ந்நெறிவிளக்கம்.

* ஓங்குபர மயனென்பர் நெடுமாலென்ப ருருத்திரனுஞ் சிவ னென்பர் சத்தி யென்ப, ராங்கருகன் புத்தனென மொழியா நிற்ப ரருவாகுஞ் சிவம்பிரமங் கால மென்பர்,நாங்களிவை யனைத்துமாய் நின்ற சோதி ஞாலமதின் மானிடனாய் வந்தாட் கொண்டு, தேங் கமழ்செந் தாமரைத்தாள் சென்னி சூட்டுஞ் செழுங்குருவென் றறிந்தோமற் றறியோ மொன்றும். 5

* ஒன்றென்பர் பலவென்ப ருபய மென்ப ருருவென்ப ரரு வென்ப ரியோக மென்ப, ரன்றென்பர் சூனியமே யென்ப ரன்றி யறிவென்ப ரறிவிறந்த பொருளொன் றென்ப, ரொன்றொன்றை யொவ்வாம லோதா நிற்ப ருலகரிவை யனைத்துமாய் நின்ற சோதி, யின்றெம்மை யாளமா னிடனாய் வந்த † விறையொன்றே யறிந் தோமற் றறியோ மொன்றும். 6

† விறையென்றே என்றும் பாடமுண்டு.

* ஆரணமெய்ப் பொருளுரைத்த தறிந்தோமென்ப ராகமங்க ளவையென்ப ரங்க மென்ப,ரோரணமா மிருதிபுரா ணங்கண் மற்று மியல்புடைநூல் பலவுலக ரியம்பா நிற்பர், காரணமா†யிவையனைத் துங் கண்ட சோதி கருணையினன் மானிடனாய் வந்தாட் கொண்ட, பூரணனொ ரொருமொழியாற் பொருணு மாய்நம் ‡ புரையறுமென் றறிந்தோமற் றறியோ மொன்றும். 7

† மிவையனைத்துங் என்றும் ‡ புரையறவே யறிந்தோமற் என் றும் பாடமுண்டு.

60

* மேவரும்வீ டதுசுவர்க்கம் பிரம லோகம் விளங்கியபொன் னெயில்வட்ட மூலோகா லோகங், தாவருநற் சிவபுரம்வை குந்த மற்றுந் தகவுலகர் பலபலவுஞ் சாற்று நிற்ப, ராவவிவை யனைத்து மா யன்றி நின்றே யருளதனுன் மானிடனுய் வந்தாட் கொண்ட, தேவனடித் தாமரையே சிதையா வீடாத் தெளிதரவே யறிந்தோர் மற் றறியோ மொன்றும். 8

* வன்னநா லாச்சிரமஞ் சமய மாறு வகுத்தவற்றி னுசாரங் குறிகண் மற்றும், பின்னமா யிடவுலகர் மொழிவ ரென்றும் பெருகாத குறைபாத பெரிய சோதி, மன்னவே கருணையினுன் மனிதனுய்வந் தாண்ட ‡ வன்றன் மலரடிக ளடையா ளந்தான்,சொன்ன வா சாரமவ னடியா ரேவற் றொழிலெனவே யறிந்தோமற் றறியோ மொன்றும். 9

‡ வன்ற னடிமையெமக் கடையா என்றும் பாடமுண்டு.

* ஆகாய கமனுதி விபவமென்ப ரணுமாதி நிதியடைத லென்பர் † சாலப், போகாத கருமமெலாம் புணர்க்குஞ் சத்தி மானுகை செல்வமெனப் புகலா நிற்பர், பாகாய வுணர்வின்பன் பாரில் ‡ வந்தாள் பரமகரு ணுகரன்றன் பதத்தே னுண்டு, சோகாதி கெடுஞ் செல்வ மல்லாச் செல்வந் துரிசெனவே யறிந்தோமற் றறியோ மொன்றும். 10

† செய்யப் என்றும் ‡ வந்தான் என்றும் பாடமுண்டு.

* அல்லென்பர் பகலென்ப ¶ ரண்ட மென்ப ரயர்வென்ப ரறிவென்பர் மான மேயஞ், சொல்லென்பர் பொருளென்பர் தொலையா வையத் தவர்நின்று துவந்துவமாச் சொல்லா நிற்பர், கல்லொன்று மென்மனத்தைக் கனிசெய் தாண்ட கடவுண்மலர்க் கழலென்னுங் கருணை வெள்ளத், தில்லொன்றி யிருந்திடுவ தல்லான் மற்றோ ரிதமகமுண் டிலதென்ப தறியோ மொன்றும். 11

¶ ரண்டரண்ட மயர்வென்ப என்றும் பாடமுண்டு.

தத்துவதேசிகம்.

* ஈசனெடு மால்பிரம னென்பர்சிலர் தெய்வ
மாசிலரு கன்சுகத னென்பர்சிலர் மற்றும்
பேசுவர்க டேவதை பிறப்பினை யறுக்குந்
தேசிகனை யல்லதொரு தெய்வமறி யோமே. 12

இறையோடுதுணிதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2235.

## 3. இறைவலிநோக்கிமகிழ்தல்.

விஞவிளக்கம்.

இறையொடு துணிவு வந்தங் கெலேயிலா வன்பி ஞலே
யிறைவலி யதனை நோக்கி மகிழ்ந்தன்ப ரிசையா நின்ற
குறைவறு பரிசை யுந்தான் கூறிடக் குணத்தின் மிக்க
வறிவுடை யமல மைந்தா வழகுற வறைகு வன்கேள். 1

போதரத்னகரம்.

* பார்வையா லுலகை யெல்லாம் படைத்திடும் பரம னார்வந்
தோர்விலே னுளம்பு குந்தா ரொருகண மதுவு நீங்கார்
சார்வதாம் வினையென் செய்யுந் தகவிலாக் கலியென் செய்யுங்
கூருநாள் கோளென் செய்யுங் குலேந்தவை யுடைந்து போமால். 2

* அந்தமோ டாதி யில்லா வாதிமா மூல மாய
வெந்தைவந் துள்பு குந்தா னெனதுள மிறையு நீங்கான்
றொந்தமாங் குணங்க ளோடு தொடர்பிணி சோக மோக
மந்தகன் பாச மூழ்கோ ளக்கணத் தழிந்த தன்றே. 3

போதாமிர்தம்.

* ஞானவா னந்த மான நாதன்வந் துள்பு குந்து
தேனுமின் னமுது மாயென் சிந்தையுட் டிகழ்ந்தி ருந்தான்
போனது பிறவி யெல்லாம் புலேயனேன் குலங்கள் கோடி
யீனமின் முத்தி யுற்று ரிறைவலி யிருந்த வாறே. 4

சுவானுபவசித்தி.

* ஆவவென் றம்பி ரான்ற னழகுறு வலியின் றன்மை [ன்
†மேவுதன் கடைக்க ‡ணென்மேற் பட்டதோ வில்லே யோதா
பாவியே னுடனுய் வந்த பவமெலாம் பொடிபட் டென்ற
ஞேவிலாக் கோடி கோடி குலங்களு முய்ந்த தன்றே. 5

† மேவுநன் என்றும், ‡ ணென்மேல் வைத்ததோ என்றும் பாடமுண்டு.

---

துறுந்திரட்டு.

நதிதங்கிய சடிலன்றிசை முகனுரண னறி
நிதியன்பொடு வந்தென்றனி நெஞ்சங்குடி கொண்டென்
றுதியுங்கொள லுற்றுனுறு துயரென்செயும் வலிதாம்
விதியென்செயு நமனென்செயு வினையென்செயு மினியே.

ஞானசூளாமணி.

* உழிதரு பந்த பாச முலைவில்பா தகங்கள் கோடி
குழுமிய வுடன்ம லங்கள் குணம்பொறி கரண மாயை
யெழுதரு † மவத்தை யேயு மிடர்ப்பவ மிமைப்பின் வெந்து
கழிதர விழித்தா னென்றன் கருத்துளான் காணு மெம்மான்.

† மவித்தை என்றும் பாடமுண்டு.

பூரணப்பிரகாசம்.

* உனவரு மிறைவந்தெ னுளமது குடிகொண்டா
னெனதுறு பவம்வெந்தி னிடிதரல் பொருளன்றான்
† முனமுறு குலமூவேழ் களுமவர் குலமூவே
ழனையவர் குலமூவேழ் பவமுழு தழிவன்றே. 7

† முனமெழு என்றும் பாடமுண்டு.

பட்டணத்தார்பாடல்.

ஆளெனப் புகுந்திங் கவர்தமை யடைந்தில மத்தநின்
றாளி னேவ றலையி னியற்றி
வழிவழி வந்த மரபின் மொழிவது
னைந்தெழுத் தவையென் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடோறும் பழகிக்
கனவினு நவிற்றுங் காதலேம் வினைகெடக்
கேட்பது நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி யல்லாப் புன்னெறி படர்ந்த
மதியி னெஞ்சத்தை வரைந்து நிதியென
வருத்திசெய் திடுவ துருத்திர சாதனங்
காலையு மாலையுங் கால்பெயர்த் திடுவதுன்
னாலயம் வலம்வரு தற்கே சால்பினிற்
கைகொடு குயிற்றுவ தைய நின்னது
கோயிற் பல்பணி குறித்தே யோயா
துருகி நினைந்தருவி சோரக் கண்ணிற்
காண்பதெவ் வுலகினுங் காண்பன வெல்லா
நீயே யாகி நின்றதோர் நிலையே—நாயேன்
றலைகொடு சாய்வதுன் சரண்வழி யல்லா
லலைகடல் பிறழினு மடாதே யதனாற்
பொய்த்தவ வேடர் † கைத்தவப் படித்தற்கு

† கைத்தகப் என்றும் பாடமுண்டு.

வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி ‡ சமைத்தாங் கமைவயின்
மானிட மாக்களை வலியப் புகுத்து
மாறு விரதத் தகப்படுத் தாழ்த்து
வளைவுண வெனக்கும் வருமோ கரைதரு
நுரையுந் திரையு $ நொய்ப்புறு கொட்பும்
வரையில் சிகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
யெண்ணில வாகி யிருங்கட லடங்குந்
தன்மை போலச் சராசர மனைத்து
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கநீ
யொன்றினுந் தோன்று யொன்றினு மடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நவிலுபுக் கடங்கிச்
செம்பொற் றில்லை மூதூ
ரம்பலத் தாடு மும்பர்நா யகனே. 8

‡ சமைத்துக் கமையின் என்றும், $ நொப்புறு என்றும் பாடமுண்டு.

தேவாரம்.

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் † தொண்டர்தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுக்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 9

† தொடர்புதா அல்லது தோடந்தா என்றும் பாடமுண்டு.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையுந்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் றண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழ்கிலென் வேலைநஞ்சுண்
டொருவ னொன்றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே. 10

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தா னினிநமக்கிங்
கடையா வவல மருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல்வர் வாழ்பா திரிப்புலியூ
ருடையா னடியா ரடியடி யோங்கட் கரியதுண்டே. 11

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ நரகத்தி னிடர்ப் படோ நடலை யில்லோ, மேமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லைத், தாமார்க்குங் குடி யல்லாத் தன்மை யான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க் கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 12

அகலிடமே யிடமாக வூர்க டோறு மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம், புகலிடமா மம்பலங்கள் பூமிதேவி யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே, யிகலுடைய விடையுடையா னென்று கொண்டா † னியாமார்க்குங் குடியல்லோ மிடர்க டீர்ந் தோங், துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ் சொற் கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. 13

‡ னினியேதுங் குறைவிலோ என்றும் பாடமுண்டு.

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ மிருநிலத்தி னெமக்கெதிரா வாரு மில்லைச், சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ் சிவபெருமான் சேவடியே சேரப் பெற்றோ, மொன்றி னாற் குறைவுடையோ மல்லோ மன்றே யுறுபிணியார் செறலொ ழிந்திட் டோடிப் போனார், பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப் புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. 14

திருவாய்மொழி.

சரண மாகிய நான்மறை நூல்களுஞ் சாராதே
மாணந் தோற்றம் வான்பிணி மூப்பென் றிவைமாய்த்தோங்
கரணப் பல்படை பற்றற வோடுங் கனலாழி
யாணத் திண்படை யேந்திய வீசர்க் காளாயே. 15

திருவந்தாதி.

அழித்தது நானெனை யையைந்து தத்துவ மாயவெறுங்
கழித்தது கண்ணாகி யுள்ளே புகுந்தென் கருத்தழிய
விழித்தது தத்துவ வேதியன் வேடம் வியனுலகம்
பழித்தது மேத்திய துங்கொண் டெனக்கோர் பயனில்லையே.

கனியுங் கதலியுந் தேனொடு பால்கன் னலுங்கலந்து
நனியங் கலம்வரு நாயேற் களிப்பவ னனறியா
தனியங் கலப்பினு மங்கே † விழிப்பவ னாண்டு கொண்டா
னினியங் கருநர கோடின்ப வானு மெனக்கில்லையே. 17

† யழிப்பவ என்றும் பாடமுண்டு.

இறைவலிநோக்கிமகிழ்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2252.

## 4. இறைகுறியுரைத்தல்.

விருவிளக்கம்.

* இறைவலி யதனை நோக்கி யென்பெலா முருகி நின்று
குறைவறு முவகை வெள்ளங் குறியற மிகவு மோங்கி
யறைவுற விரக தின்றி யகமகி ழரிய வன்ப
ரிறைகுறி யுரைக்கு மாறு மியம்புவ னியல்பொ டுங்கேள். 1

போதாமிர்தம்.

* கனவினு மிமையோர்கண் டிடவரி யவரேதா
னினைவுரை † செயலின்றாய் நிகழ்தரு பவரேதான்
முனைவரு முலகேழாய் முடிவறு பவரேதா
னனையவ ரெனையாளன் பினரென வறிகண்டாய். 2

† செயலன்றாய் என்றும் பாடமுண்டு.

* அடியொடு முடியின்று மழகுடை யவரேதா
னிடையொரு பொருளின்று யிலகிடு மவரேதான்
வடிவொடு குணமின்றாய் மகிழ்வுசெய் பவரேதா
னொடிவற வெனையாளன் புடையவ ரவர்தாமே. 3

போதரத்னகரம்.

* அண்டமெண் டிசையு மாவரே யாகா வமலரே யன்பர்தங் கண்ணுள்,மொண்டுகொண் டயிலுங் கருணைமா முகிலே மூவர்தே டரியமா முதலே, கண்டுநின் றுணருங் கண்ணரே கருணைக் கடலரே கவலையாம் பவநோய்க், குண்டிடுங் கடுவா·மொருவரே யெனை யா ளுடையவ ருடையநற் குறியே· 4

சுவர்னுபவசித்தி.

* அரியயன் றேட வரியரா யிருப்ப ரடியவர்க் கெளியரா யிருப்ப, ருரியமூ வுலகு முழு துமா யிருப்ப ரொன்றது மன்றியே யிருப்ப, ரரியநான் மறையின் † முடிவிலே யிருப்ப ராருயிர்க் குயிருமா யிருப்பர், தெரிவிலா வெனையே தேடிவந் தாள்வர் திகழ்தரு குறிக ளே கேட்கே. 5

† பொருளதா என்றும் பாடமுண்டு.

* அலைவெலா மறவே யகமுக மாகு மன்பரு ளறிவதா யிருப்ப, ருலைவிலா மயலா லுலகமா முகத்தர்க் கொன்றிய பூதமா யிருப் பர்,கலைகளா லலையுஞ் சமயவா திகடங் கருத்தினுட் கவலையா யிரு ப்பர், நிலையிலா வெனையே தேடிவந் தாளு நிமலனார் நிகழ்குறி யிவையே. 6

அருணெறிவிளக்கம்.

* உருவிலா மையிலே யுடைமையு மிலரே யொருபொரு ளுந் தமை யொழியத், தெரிவிலா மையிலே திகழ்வும்வே றிலரே திக ழ்ந்தவை தெரிந்துநின் றவையு, மருவிலா மையிலே மாசது மிலரே மறவியு நினைவது மிலரே, புரிவிலா மறையி † றையு மே யவரெம் புகழ்மிகு புனிதரா யகரே. 7

† றையுமெய் யவரே என்றும் பாடமுண்டு.

* செய்ததே தவமால் விரதமு மிலரே சேர்ந்தவர்க் கருள்வது தெளிவே, பெய்வதே கருணைத் திருமுக முழுதும் பிறப்பற வெறிக்குமே கிரண, மெய்வதே யிதமோ டகமற விழிதா னிணை யடி சொரியுமே யின்ப, நைவதே யடியார் நாணிழந் தழிந்தே நம் முடை நாயக ரவரே. 8

அறிவதே சுரப்ப தளவது மிலரே யகிலபூ தங்களுக் கெல் லா, முறுவதே செய்வ தொழிப்பதே † யல்லா லொழுக்கமும் பழிப்பவை முழுதுஞ், செறுவதே யடியார் தீவினை யகலச் சிவப் பிர காசரே நாம, முறிவதே யில்லா வின்பரே யாகின் முனிக ளெம் மடிகளா மவரே. 9

† யெல்லா வொழுக்கமும் என்றும் பாடமுண்டு.

* பொறையதே மலையும் புணியமே கொடியும் பொய்யிலா நல் லொழுக் காறே, பறையதே நாதம் பகடுபோ தகநற் படையது பரிவதா மன்பே, குறைவிலா னந்த நாடதே யன்பு கூருள மூரதே குறையா, வறிவதே யலர்தா ரருணிதி யவர்பே ராகிலெம் மடி களா மவரே. 10

* மோனமே யமுத மொழியது முனியாக் கருணையே திருமுக மலர்தான், ஞானமே விநோத நடியதே போல ஞாலமு மாவரே யடியா, ரூனமே யொழிப்ப துண்பது ‡ மூலகே யுடுப்பது திசைகளே யொளிப்ப, $ தீனமி னெறிசே ருளமது தனிலே யெனினவ ரெங்களு யகரே. 11

‡ பலியே என்றும், $ தீனமாநெறிசே என்றும் பாடமுண்டு.

* ஆதியா மரனே யயனெடு மாலே யருகனே சுகதனே யெனவுஞ், சாதியா நின்ற சமயமா றெனவுந் † தருமன விகற்பங்கள் பலவும், பேதியா நின்று பிணங்குவித் தெவையும் பிணக்கிலே யிறந்தபே ரின்பச், சோதியா மறிவே யாகிநாம் வணங்கித் துதிசெயுந் தொல்லைநா யகரே. 12

† தருமதன் என்றும் பாடமுண்டு.

**தத்துவதேசிகம்.**

* தேள்ளுமா மறையுஞ் செப்புதற் கரிய தேவரே தேவர்தேவர்க்கு, முள்ளுமா றரிய வொருவரே யொருபே ரோருரு வொன்றுமில் லவரே, வெள்ளமா யொழுக விழிதொழு தெழுந்து விரும்பிடு மடியவர் தம்மை, யுள்ளவா றறிய வருள்வரே யாகி லவரெம்மை † யாண்டநா யகரே. 13

† யுடையநா என்றும் பாடமுண்டு.

**சிவப்பிரகாசதரிசனம்.**

விழிகொடெம் போல்வார் விளைப்பவ வடவி வேரற விழிக்கும்வித் தகரேன், மொழியினு லடிபோ முடலெலா முருக முடிவிலா வின்பமீ குவரே, லொழிவிலா னந்த மறைகளின் முடிவுமுணரறு பவமுமொத் துளரே, லழிவில்சிற் பரானந் தத்துருவினரே லவர்கொலெம் பரமதே சிகரே. (இஃததிகபாடம்).

இறைகுறியுரைத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2265.

## 5. இறைவர்சுதந்தரம்.

**வினவிளக்கம்.**

சேறிதருங் குரவ னூர்தந் திகழ்குறி யதனை யெல்லா
நெறிதரு முறையி னேத்தி நெக்குநெக் குருகி நின்றங்
கறிவுற வரிய வீச னருள்சுதந் தரத்தின் றன்மை
† யறைகுவ ரறிஞ ரெல்லா மதனிலே யறைகு வன்கேள். 1

† யறிகுவ என்றும் பாடமுண்டு.

**அனந்தானந்தமாலை.**

* சந்திரர் சூரியர் தாங்கவில் வானிற் சரிப்பதுவு
மந்திர மாமொழி யால்விடந் தீர்வது மாமுகிரு
னந்தரம் வந்துவித் தின்றிப் பொழிவது மாயிலென்று
நந்தமை யாளுடை யானல மாருஞ் சுதந்தரமே. 2

* தாங்கலி லம்பரத் தண்டமெ லாந்தலை நிற்பதுவு
மோங்கிய தம்பத்து ணின்றழ லோங்கா தொளிப்பதுவும்
வாங்கு திரைக்கடன் மண்மிசைத் தான்மிகை யாததுவு
மீங்கெனை யாளுடை யானெழி லாருஞ் சுதந்தரமே. 3

போதாநந்தசித்தி.

* உண்டன கல்லிரும் புட்பட வோங்குத ராக்கியிலே
மண்டிவெந் தேயிட மன்னுங் கருவங்கி மீதுவைத்துக்
கொண்டிடம் பாக்கிக் குடத்தினற் பூசணிக் காயெனவே
விண்டிட † லின்றிப் பிறத்தன்மெய்த் தேவன் சுதந்தரமே. 4

† லன்றித் தருவதெங் கோன்மெய்ச் என்றும் பாடமுண்டு.

* நாடு மிரவி மதிநிகழ் மீன்றொகை நாளொடுகோ
ளோடுந் தமக்கிறை யுற்றன் றமைத்தநி லேதுமொன்றும்
வாடுங் குறைவு மிகலு; மறவருகின்றதெந்தை
நாடுஞ் சுதந்தர மோநாடி டாதவர் நன்கிலரே. 5

ஞானசூளாமணி.

* வானினிற் புரைத்தல் வாயுவிற் சலனம் வன்னிவெப் பப்
பினிற் சுவைதான், பூவினிற் றிட்ப மதியினிற் றட்பம் புயலினீர்
புகல்பகற் கொளிதா, னானினுக் குணவு முடற்பொறை யாற்
றற் குறக்கமு முயிர்களின் பொருட்டாற், றுனமைத் தவையாய்
நின்றநற் றலைவன் றன்சுதந் தரத்தையா ரறிவார். 6

பூரணப்பிரகாசம்.

* † ஊனுமெய் பொறியு முறுபுல னைவ்யு முட்கா ணங்
களு முயிர்ப்பு, மானமுற் பகுதி யிருவினை கால மாயவூழ் மாயை
யைம் பூதந், தானெனிற் சடமா மவைதனித் தனியே தான்
பொருள் போனடத் திடுதன், ஞானநற் றலைவ னுயினே னையுமா
ளுயகன் றன்சுதந் தரமே. 7

† ஊனுமெய்ப் என்றும் பாடமுண்டு.

மெய்ந்நெறிவிளக்கம்.

மனையும் பொருள்சுற்ற மற்றுந் துறந்துவன் கானமெய்திப்
புனையுஞ் ‡ சடவுடல் போற்றார் புனல்கால் சருகயின்று
நினையு மவர்முத்தி யெய்தாது நிற்க நிலையில்சுகத்
தினையு மெனக்களித் தான்சொரு பன்றன் சுதந்தரமே. 8

‡ சடையுடல் என்றும் பாடமுண்டு.

* பூண்டிடுங் காயநன் றென்றுபுன் போகம் பொருந்துமெனை
யாண்டிடுங் காரண மியாதுகொன் மற்றழ லைந்துணின்று
மாண்டிடுந் தாபதர் மாண்டே விடமரு ளேற்களித்த
றாண்டிடுஞ் சோதியுட் சோதிச் சொரூபன் சுதந்தரமே. 9

சாதன நான்குஞ் சமைந்தவர்க் கேமுத்தி யல்லதில்லென்
றோதரு மாமறை யெல்லா மவையிற்றி னொன்றுமில்லாப்
பாதக னேனைப் பரம்பொரு ளாகத்தன் பாதம்வைத்தான்
சூதக மேதுமுண் டோசொரு பன்றன் சுதந்தரமே. 10

* பண்டேசெய் நற்றவத் தின்பரி ணமம் பலிப்பதென்று
கொண்டே சுருதிகள் கூப்பிடுங் $ கோதறு மெண்குணத்தாற்
கண்டேன் முனைந்தவ நான்கரு தாமற் கடைப்பிடிநற்
றொண்டே கொளவீ டளித்தான் சொரூபன் சுதந்தரமே. 11

$ கோதறு மென்குணத்தாற் என்றும் பாடமுண்டு.

பொங்கும் பெரும்பசி யாளர்நிற் பப்புளிங் தேக்கர்தங்கட்
கங்குண் மருந்துசெய் தேயமிழ் தார † வயிற்றியங்தோ
மங்கும் பிறவியஞ் சும்மதி யோர்நிற்ப மாமருளேற்
கெங்கு மருளளித் தானிறை வன்றன் சுதந்தரமே. 12

‡ வயிற்றினொடு என்றும் பாடமுண்டு.

ஆர்க்கருள் செய்திடு மென்றறி தற்கரி தையன்மெய்யே
பார்த்திடி னுத்தமர் பாதக ரென்னப் படுதலுண்டோ
மார்க்கமி லாவன்பர் வாழ்வென்ற னாவி மபக்கனென்று
மோர்க்கவொண் ணாவினை யாட்டுடை யான்றன் சுதந்தரமே. 13

* பூதமும் பவுதிகந் தானும் பொறிபுல னுள்ளமற்று
நாதமுங் காலமு மூழு நடாத்தல்செய் யாசடமா
லோதருஞ் சீவன் பரந்தன் னுணர்வுள்ள வெச்செயலு
மேதமுண் டோகெடு வீரிறை வன்றன் சுதந்தரமே. 14

மறைப்பா யுலகமெ லாம்வழு வாமல் விழுங்கியிட்ட
கறைப்பாச மாயக் கடுவிடந் † தீர்த்துண்மை காணவைத்தான்
விறைப்பா மகந்தி வேண்டாம் விடமவன் கையதன்றே
யிறைப்பால் விடின்மறைத் தேயிடு மீசன் சுதந்தரமே. 15

† தீர்ந்தும்மைக் என்றும் பாடமுண்டு.

இறைவர்சுதந்தரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2230.

## 6. இறைதிருவிநோதம்.

### வினாவிளக்கம்.

சோதியா மீசன் சுதந்தரத் தியல்பைத் துகளிலா வன்பர்கண் டுருகிக், காதன்மீ தூரக் கரையிலா வன்பாற் கண்களு மருவியே சொரிய, வோதுமா றறியா வுரைதழு தழுத்திட் டுரோமமெல் லாஞ்சிலிர்ப் பெய்தப், போதநா யகனார் தந்திரு விநோதம் புகலு வர் புகலுமா கேணீ. 1

### போதரத்னுகரம்.

* நாதமா யுரையொன் றுகிமூன் றெழுத்தாய் நான்குள வரு ணமாய் நனிமிக், கோதரு மைம்பத் தோரெழுத் தாகி யுலைவி லா மறைகளா கமமா, யேதமில் கலைக ளெவையுமாய்ப் பொருளா யினைந்தவை முழுதுமா யன்றி, நாதனார் திகழு நலமிகும் விநோத நாடிடா தவர்கணன் கிலரே. 2

* உளத்தினி னினைவா யுதித்துரை யாகி யுரையின்றிச் செ யலதா யுருத்துக்,களித்திடுஞ் செயலாற் கருதிரு வினையாய்க் காய கன் மங்களாய் மாறித்,திளைத்திடும் பவமாய்ச் சிவனுய்ப் பரமாய்த் திகழ்ந்தவை முழுதுமாய் நிகழு, மொளித்திக ழுணர்வா மிறைவ னார் விநோத மோர்விலா தவர்களு மர்களே. 3

* தானல திலதாற் றனிலெழு நினைவாற் றன்னலா மாயை யாற் றடித்து, வான்முதற் பூத முழுதுமா யுலகாய் மன்னுமண் † டலங்களாய் மருவு, மூனமில் சுவர்க்க நிரயமாய்ப் பயனு யுரை தரு முழுதுமா யொளிரு, மீனமின் ஞான விறைவனார் விநோதத் தின்புறு தவர்களே ழைகளே. 4

† டங்களாய் என்றும் பாடமுண்டு.

* மாலுமா யயனு யரனுமாய் வானோர் முழுதுமாய் வானவ ரிறையாய்ச், சிலமார் முனிவ ரியக்கர்கந் தருவர் சித்தர்கிம் புருடர் கின் னரரா, யேலுமா பூத கணங்களா யியலு மெண்ணில்சிற் றெய்வங்க ளவையாய், மூலமாய் நிகழு முதல்வனார் விநோத மொழிவுறு தவர்கண்மூ டர்களே. 5

---

### குறுந்திரட்டு.

### இறைவர்சுதந்தரம்.

மாத்தன லோடு மடவார் வயிற்றிடை வன்னியுமந்
திரத்தில் விடமுஞ் செழுங்கார் மதிமீன் றினகரனம்
பரத்தில் வாலும் பரவை நிலையும் பரமர்சுதந்
தரத்தினைக் காட்ட வறிகின்ற தில்லையித் தாரணியே.

### சுவானுபவசித்தி.

* கோன்றிடு பவனுய்க் கொலையுறு பவனுய்க் குணமிலி ‡ யாய்க் குணி தானுய், வென்றிடு பவனுய்த் தோற்பவ னுகி விரைபவ னுய்த்தணி பவனுய், நன்றுடை யவனுய்த் தீயவ னுகி நடுவொரு பொருளில தாகிச், சென்றுறு முணர்வாய்த் திகழ்தர நிகழுந் தேசிகன் றிருவிளை யாட்டே. 6

‡ யாய்க்குணர் என்றும் பாடமுண்டு.

### ஞானசூளாமணி.

* பழுதிலா வண்ட முற்றும் பண்ணியு மளித்த ழித்து
முழுதையு மறைத்து மூட † மறத்தனை வெளிப்ப டுத்து
மெழுதரு முழுது மாகி யிலங்கிடு மிறைவ னூர்தங்
கழிவறு விளையாட் டென்றன் கண்ணினின் றகலா வாறே. 7

† மனத்தையும் என்றும், மறைத்ததை என்றும் பாடமுண்டு.

### பூரணப்பிரகாசம்.

* உலகவன் விளையாட் டுடலவன் விளையாட் டுறுபொறி புல னவன் விளையாட், டிலகிய நனவு கனவவன் விளையாட் டிருளுறு மயலவன் விளையாட், டலர்தரு துரிய மதுவவன் விளையாட் டது கழல் வதுவவன் விளையாட், டலைபறு முழுது மெனையுடை யமல னிலகிய திருவிளை யாட்டே. 8

* பிறப்பவன் விளையாட் டிறப்பொடு பிணியும் பேறிழ வவ ன்விளை யாட்டா, மறப்பொடு நினைப்பு மகிழ்ச்சியுங் கலுழ்ச்சி மயக்கமுந் தெளிவவன் விளையாட், டுறக்கமு முணர்ச்சி யொடுக்க மும் விரிவு முண்டனு மவன்விளை யாட்டா, மிறைத்தனை யொழிவ தறமுழு தெனையா ளிறையவன் றிருவிளை யாட்டே. 9

* கல்வியுங் கல்விப் பயனதும் பயனுங் கதிகளு மவன்விளை யாட்டாஞ், செல்வமுந் திருவுந் திகழ்தரு மழகுஞ் சீலமு மவன் விளை யாட்டா, மல்லலுந் துயரு மழிபசி பிணியு மடைதரு மிடிய வன் விளையாட், டெல்லையி லகிலத் தெழுதரு மெவையு மிறைய வன் றிருவிளை யாட்டே. 10

* எறும்பது கடைகுஞ் சரமுத லான யோனிக ளவன்விளை யாட்டா, நறும்புனு முதற்கற் பகமுடி வாகி நாடுதா பரமவன் விளையாட், டறங்களு மறங்க ளமரரோ டசுர ரடையவு மவன்விளை யாட்டா, முறும்பொருண் முழுது மெனையுய வருளு மொழிவறு பரன்விளை யாட்டே. 11

* பத்தியும் பத்திப் பரிசது முயலும் பண்பது மவன்வினை யாட்டாஞ், சித்தியுஞ் சித்தித் திறங்களின் பிறிவுஞ் செல்வமு மவன்வினை யாட்டா, முத்தியு முத்திப் பயனுற மொழியும் விரகது மவன்வினை யாட்டா, மெத்திற மதுவு மொழிவற நிகழு மிறையவன் றிருவினை யாட்டே. 12

மெய்ந்நெறி.

* வையமு மாருயி ருந்திரி காலமும் வல்வினையு
மெய்யிட ரின்ப முடன்விரும் பாதிர யஞ்சுவர்க்க
முய்யுமு பாய மெனுமூபர் முத்தியு முத்தமனார்
செய்யவி னோதமல் லாற்றிரு வாணைமற் றொன்றிலையே. 13

திருவாய்மொழி.

* துன்பமு மின்பமு மாகிய செய்வினை யாயுல கங்களுமா
யின்பமில் வெந்நர காகி யினியநல் வான்சுவர்க் கங்களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப் பலபல மாய மயக்குகளா
லின்புறு மிவ்வினை யாட்டுடை யானைப்பெற் றேது மல்லலிலனே.

தத்துவதேசிகம்.

* துன்ப வின்பங்க ளாய்த்தொல் லுலகமா
யன்பி னீபவ னுயில வானுமாய்
முன்பி னின்றிய முத்தனு மாகியே
யின்ப மாய்வினை யாடு மிறைவனே. 15

இறைதிருவிநோதம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2295.

# 7. இறைதிருவிழியாட்சி.

விருவிளக்கம்.

செய்யதே சிகனார் செய்த திருவினை யாட்டின் றன்மை
யுய்யுமா கண்ட வன்ப ருளமெலா முருகி நைந்து
கையினு மலக மென்னத் தனையருள் கருணை நோக்கா
மெய்யனார் விழியி னாட்சி விளம்புவர் விளம்பு மாகேள். 1

## மூலசித்தி.

* முட்டிய குரம்பைபு மூளைக்குமுட லியாவும்
பட்டுவிழ வேகொடிய பார்வைகொடு பார்த்தான்
றிட்டிவிட மோகொடிது தேசிகர்தந் நோக்கோ
வட்டவிரி நீருலகின் வாழ்பவர் தமக்கே. 2

* உடம்பதென் வடிவ தென்று முலகமெய்ப் பொருள தென்று
மடம்படு மதியி னாலே மயங்கியே கழியு மென்னை
யுடம்பெலாங் கருணை யாய வுத்தமன் பார்த்த போதே
யடங்கலு நானே யான வருள்விழி யாண்ட வாறே. 3

* பொறிபுலன் கரணங் காணேன் புணர்தரு விடயங் காணே
னறிவுட னயர்வுங் காணே னகமித மெவையுங் காணேன்
மறவியு நினைவுங் காணேன் வள்ளலார் பார்த்த போதே
யறிவரு மறிவே யான வருள்விழி யாண்ட வாறே. 4

## அருணெறிவிளக்கம்.

* ஆரிய ஞார்திரு மேனியை யங்க † ணணைந்திடு மாகாதே
யண்டமு மாயையு மங்கழி யாவறி வாயிடு மாகாதே
காரிய காரண மாய வுபாதி கழிந்திடு மாகாதே
கற்பனை முற்று மிறந்த பெருங்களி கைப்படு மாகாதே
பாரியல் பாகிய பந்த வினங்கள் பறிந்திடு மாகாதே
பாதக னேனை யுயக்கொள் ‡ பரன்புகழ் பாடுது மாகாதே
பேரியல் பாகிய வின்பவெள் ளம்பெரி தெய்திடு மாகாதே
யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே.

† ணைந்திடு என்றும் ‡ பரன்கழல் என்றும் பாடமுண்டு.

* அன்றென வாமென நின்றெழு சங்கை யழிந்திடு மாகாதே
யாசை யினங்க ளடங்க மடிந்தழி யாவிடு மாகாதே
சென்று பரந்தெழு சிந்தை திரிந்து தெளிந்திடு மாகாதே
தேவர்க ளும்மறை யுந்தெளி யாதமை திண்ணம தாகாதே
துன்றி வரும்புல னும்பொறி யுந்துக ளாய்விடு மாகாதே
துன்பமு மின்பமு மாகு † பதங்க டொலைந்தன வாகாதே
யென்று நிரந்தர வின்பம திங்ஙன மெய்திடு மாகாதே
யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே.

† பவங்க என்றும் பாடமுண்டு.

* கன்றி வருஞ்சம யங்கள்பொய் மாயைசெய் கற்பித மாகாதே
கல்வியெ னும்மவ லக்கவ லைக்கடல் கைவிடு மாகாதே
நன்றியு மன்றியு மாமய னுச மடைந்திடு மாகாதே
நாமுமெய் யன்பர் தமக்கடி மைத்தொழி னண்ணுது மாகா
வென்று பகைத்திற மாறையும் வேரற வீசுது மாகாதே [தே
வேண்டிய வாவினை யாடியு முத்தி விளைந்திடு மாகாதே
யின்றித மும்மக மும்மறி வாகி யிலங்கிடு மாகாதே
யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே.

* அருக்க ருருத்திர ரிந்திரன் மாலய னுமவ ராகாதே
யலக்க ணறக்கொடி யேனையு மாள † லருட்கழ லாகாதே
திருக்கறி னும்முறி னுஞ்சிவ மாய்விட றிண்ணம தாகாதே
தேசிக னாரரு ளின்பெரு மைத்திற மாவதி தாகாதே
யுருக்கி யுருக்கி யுளத்தை யழித்தமு தூறிடு மாகாதே
யோதரி யேனுடை யாய்முறை யோவென வோதுது மாகாதே
யிருக்கை தனக்கிய லிப்படி யாகி யிருக்குமி தாகாதே
யெந்தை சிவப்பிர காச னருட்க ணெழிற்கடை பட்டிடினே.

† லருட்கழ காகாதே என்றும் பாடமுண்டு.

தத்துவமாலை.

கிறிபட்ட வேசமயங் கீழ்ப்பட்டார் வானோர்
முறிபட்ட தென்பிறவி முற்று—நெறிபட்ட
சீர்த்தக்க செய்ய சிவப்பிரகா சன்கடைக்கண்
பார்த்த தனைப்பட்ட வாறு. 9

இறைதிருவிழியாட்சி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2304.

## 8. இறைமொழியாட்சி.

விருவிளக்கம்.

இறைதிரு விழியி னாட்சி யின்புற நோக்கி யன்பர்
செறிதரு முவகை கூரச் செப்பிய பரிசு போல
வறிவருு மெலையி லின்ப வமலனர் மொழியி னாட்சி
யறைதரு பரிசை யுந்தா னழகுற வறைகு வன்கேள். 1

**போதரத்னகரம்.**

* திரும்பி டாவருட் டேசிகன் றிருமொழித் தேறலின் சுவையுண்
கரும்பு கன்னல்பால் சர்க்கரை யமுதுதே மாங்கனி முதலாக[டாற்
விரும்பு மின்னநற் சுவையெலாம் வேம்பொடு வீழிகாஞ் சிரைசீசீ
யரும்பு முற்பவ மறுத்துவி டளித்தலா லமுதமம் மொழியன்றே.

**போதாமிர்தம்.**

* சொல்லு மொன்றது சுருதியின் முடிவெலாந் துணியுமொன் றினைநல்கும், கல்லு மன்றது வலிதெனு முளமெலாங் கனியவே தகஞ்செய்யு, நல்ல வன்பருண் ஞானவா ரமுதமா நனிமிகு சுவை நல்கு, மெல்லை யின்றிய விறைதிகழ் திருமொழி யினியவா கண்டரே. 3

**நடராசமாலை.**

* ஆராத மாயப் பொறிபுல னந்தக் கரணமுன்னும்
பேராத சுற்றத் துடன்பிறப் பாகும் பெரும்பதியி
லோரா துடனிருந் தொப்பின்றி வாழ்கின்ற வாழ்வதெல்லாஞ்
சீரார் திருநடன் றன்றிரு வாய்மொழி செய்வளவே. 4

**மெய்ந்நெறி.**

* மைம்மையுண் டாவது மாயையுண் டாவது மாயைசெயுங்
கைம்மையுண் டாவதுங் காலமுண் டாவதுங் காதும்வினைப்
பொய்ம்மையுண் டாவதும் பூரண போதப் புகழ்ச்சொரூப
னிம்மைவந் தஞ்சலென் றிங்கொரு வார்த்தை யிசைப்பளவே. 5

* கருவார் பவமுங் கடும்பிணி யீட்டமுங் காலன்செயும்
வெருவார் மரணமு மேவுங் கதிகளும் வேறெனவே
மருவாரும் வையமு மார்க்கப் பிணக்குமெல் லாமிறைவ
னொருவா சகஞ்செய் வளவினெங் கோபுக் கொளித்தனவே. 6

**சுவானுபவசித்தி.**

* ஓதுங் கலைகளு மொவ்வா வுவலைச் சமயபின்ன
பேதங் களுமற்றும் பேசுப யாவையும் பேர்த்திதென
வேதும் பினைநின்ற தில்லையென் றன்னைக் கடைக்கண்வைத்து
நாத னுரைத்தருள் வாசகைத் தானித் தனைசெய்ததே. 7

**திருவந்தாதி.**

இழிந்தன வாய பிறப்பெண்ணில் கோடி யிமையவரா
யழிந்தன மானிட மத்துணை யாகு மவையவமே
கழிந்தன கண்டுமென் றத்துவ நாதன் கருணையினன்
மொழிந்தன னென்றது வேயாகி நின்றது முத்தியுமே. 8

ஞானவிநோதன்கலம்பகம்.

அலரா யினசெயு மைம்புலன் காளெம் மறுபகையாங்
கலர்காள் பலகுணங் காண்மலங் காள்கர ணங்களெனும்
பலர்கா ளருட்சொரூ பானந்த ஞர்பவ ளத்திருவாய்
மலரா வளவுமன் றேவெங்க ளோடுங்கள் வாழ்வுகளே. 9

இன்று ளேனின்றி லேனெனத் தோற்றுற
நின்று ளேனழி யாவகை நேயமோ
டின்று ளேசொரு பானந்தர் வாய்மொழி
யொன்று ளேபர மானந்த லோகமே. 10

இறைமொழியாட்சி முற்றிற்று.
ஆகச்செய்யுள் 2314.

## 9. ஆட்சியதருமை.

விறைவிளக்கம்.

அறிவரு மமலனூர்த மருண்மொழி விரகு நோக்கிக்
குறியற மிகுநல் லன்பர் குரைகட லெனுநல் லன்பான்
முறிவறு சுகம தாய முதல்வனூர் தம்மை யாண்ட
வறிவரு மருமை தன்னை யறைகுவ னறிக மைந்தா. 1

போதாமிர்தம்.

* அன்றய னமரர் கோனுக் கருளிட வறிவொ ணாமை
சென்றிடத் திசைக டோறுஞ் செய்தவ மென்னச் செய்து
வொன்றுமங் குணர வொண்ணு வுண்மையை யொழிவி லீச
னின்றெனக் கருளி யாண்ட வியல்பினி னரிய துண்டோ. 2

* ஓதுசா மத்தி னீறுஞ் சலிப்பின்றி யொன்ப தின்காற்
றீதற வுபதே சித்துந் தெரிந்திட வொண்ணு தொன்றைக்
காதலா லடியேன் காணக் கரத்தினு மலக மாக்கி
யாதனேன் றன்னை யாண்ட வதுதனி னரிய துண்டோ. 3

* தெரித்தரி விசயற் கன்று தேரிலீ ரொன்ப தின்காற்
கருத்துற வுபதே சித்துங் காணுமா றரிய வொன்றைத்
திரித்தொரு மொழியி னாலே சிறியனேற் குணரக் காட்டி
யருத்திசெய் திறையின் றென்னை யாண்டதி னரிய துண்டோ. 4

* நான்முக னமரர்க் கந்நாண் ஞானமங் குபதே சிக்க
வானவர்க் கைய மாக மழுவேந்தத் தேறு மென்றங்
கானவா றரிய வொன்றை யங்கையி னெல்லி போல
நானெனு முணர வாண்ட நலத்தினு மரிய துண்டோ. 5

போதரத்னாகரம்.

* அன்றரன் முனிவர்க் காலநீ ழலிலே யறிவினை யளிக்கவென் றிருந்து,மொன்றிய வவரி னல்வருக் குரைத்தல் லாதவர்க் குரைக் கொணு வொன்றை, யின்றிக பரத்தூக் காளலே லையுமென் போ லும்பா தகரையு மிறைபார்த், தன்றினப் பொழுதி னக்கணத் துணர வாண்டவிவ் வருமையோ தரிதே. 6

கரையறு மறையைக் கரைசெய்நீ ரொன்பான் கருதரு புரா ணகத் தாவாய், விரிதரு கால மூன்றையு முணர்ந்த வியாதன்மெய் யறிவுறன் மயங்கிப், பிரசையாஞ் சுகனைப் பின்செல வவனைப் பவத்தினிற் பிதாவென வியம்ப, வுரியதாம் பொருளொன் னுளங் கையிற் கனிபோ லுணர்த்திய வருமையோ தரிதே. 7

திருநூற்றந்தாதி.

அருளோ டெழுமற வாழியப் பாபிற வாழியிப்பா
விருளோ வியகரை யேறவுய்ப் பாயிந் தியங்களெனு
மருளோ டுழலு மனத்தேனை யாட்கொண்ட மற்றுனக்குப்
பொருளோ புவனங்கண் மூன்றையு மாட்கொள்கை புண்ணியனே.

அதிக்கிருதாமிர்தம்.

மாமேரு வில்லா வளைப்பதுஞ் செய்யலாம் வஞ்சர் திரிபுர மாளவும் பண்ணலா, மாமே நரிபரி யாயிடப் பண்ணவு மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 9

பாலக னுக்கன்று பாற்கட லீயலாம் பத்தர்க்கா வென்பூம் பாவையு மாக்கலா, மால மிடற்றணி யாக வருந்தலா மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 10

கறுத்தழ லுண்புரத் தன்பரைக் காக்கலாங் கராங்கொண் மக வைக் கரையிற் கொடுக்கலா,மறுத்திட்ட பாலனை யன்றழை யென் னலா மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 11

† காலத னுலன்று காலனைக் காயலாங் காமனைக் கண்ணழ லுண்ணவும் பண்ணலா, மாலிலே யானயற் கன்றழ லாகலா மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 12

† காதல என்றும் பாடமுண்டு.

இகலு மரவி னெழிற்பணைத் தாடலா மென்னே யிருண்மனப் பேய்முலை யுண்ணலா, மகிலமுண் டாலிலே மேற்றுயில் கொள்ளலா மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 13

மருதா மசுரரை மாளவு மூரலாம் வன்பாறை பெண்ணாக வந்தடி வைக்கலா, மரிதோ வரையெடுத் தானிரை காக்கவு மரியது நீயென்னை யாண்டதே யல்லவோ. 14

தத்துவதேசிகம்.

* வடமால்வரை வில்லும் வளைத்தலுமாம்
விடமாறலு மாம்விட வாளரவி
னடமாடலு மாநய மாகவெனெஞ்
சிடமாவெனை யாண்ட திறைக்கரிதே. 15

ஆட்சியதருமை முற்றிற்று.
ஆகச்செய்யுள் 2329.

## 10. இறையுடன்மகிழ்தல்.

விறைவிளக்கம்.

ஆட்சிய தருமை யோர்ந்தங் கழலுறு மெழுக தாகிக்
காட்சிய திறந்த வின்பக் கண்ணதா மிறைவ னோடு
மாட்சியி னன்பர் வாழ்ந்து மகிழ்ந்துரை செய்யு மாறுங்
கேட்டிடு மதியின் மிக்க கிளரொளி யறிவின் மைந்தா. 1

பேதாத்துகாம்.

* கண்ணதாய் மணியாய்ப் பாவையாய்க் கழியா வொளியதா யொளியினிற் றெளிவா,யெண்ணதா யெழுத்தா யியலதா யிசையா யிசைப்பய னுயதிற் சுவையாய், மண்ணுமாய் நீராய் வாயுவா யனலாய் வானமாய் வாதிலா வறிவா, யெண்ணமாய் முழுது மன்றிய விறைவ னென்னுளத் தினிதிருந் தனனே. 2

* வானநா டவரோ டிந்திர னயன்மான் மயக்கற வினந்தெரிந் திலரா, லானமா மறையி னீறுதா' மெவையு மறிவுறு தலறியே விடுமா, லேனைநா டவருந் தெரிவுறுர் மயங்க விதமக மிறந்தபே ரின்பத், தேனுமா யமிழ்தாய்த் திகழ்தரு மிறையென் சிந்தையுட் டிகழ்ந் திருந் தனனே. 3

### போதாமிர்தம்.

* ஓதும்மா றரியா னென்னையே கருதி யருளதா லுருவதாய் வந்து, பாததா மரையென் சென்னியிற் பதித்துப் பங்கயக் கண்களா னோக்கிப், போதமா வென்றன் புந்தியிற் புகுந்து புரணபூரணமதாய் நின்றே, யேதுமா யிலங்கு மெம்பிரா னென்றென் றிறைவனு ருடன்மகிழ்ந் தேனே. 4

* ஒன்றதோ பலவோ வுருவதோ வருவோ வுபயமோ யோகமோ வுணர்வோ, வன்றதோ வாமோ வென்றுநின் றெவரு மமலனை யறிவுறு ரயர, வென்றுமோர் படியாய் நின்றவா னவனு ரிங்குமா னிடமதா யெனையா, ளன்றியே யுடைய நம்பனு ரென்றே நாயனு ருடன்மகிழ்ந் தேனே. 5

* வினைகளின் சமமே வீடது வென்பார் வினைகளி னொன்றதே யென்பார், சொனவிரு வினையும் போனதே யென்பார் சொருபனை யறிவுறார் சுழல, நினைவரும் பொருளா நிமலன்மா னிடனாப் நீசனே னுளம்புகுந் திருந்த, கனிதனு ரமுகே கண்டுகண் டுருகிக் கரையற மகிழுகின் றேனே. 6

* அருளதே பொழியுங் கருணைமே னியனென் னகமே கோயில்கொண் டருளி, மருளதே துறந்து மனவுரை யிறந்த வடியருண் மருவுமா றருளிப், பொருளலே னையுமாள் புரணபூரணனர் புகழ்மிகு புனிதனு ரென்றென், றிருளதார் பவம்வே ரொடு மழி வுறவே யெம்பிரா னுடன்மகிழ்ந் தேனே. 7

### அனுபவசாரம்.

* அருள்பொழி மேனியு மாரா வழகு மமைத்தகையுந்
தெருள்புரி நோக்குந் திருப்புன் முறுவலுஞ் சென்றுறு
வெருளுறு வெம்பவம் வேரற வாளும் விரகுங்கண்டு [வோர்
மருளற வந்தெனை யாள்வள்ள லோடு மகிழுவனே. 8

### நடராசசரிதை.

* சுருதிபு ராண மிருதிதொல் லாகமச் சூழலெல்லாங்
கருதியுன் மேனியைக் கண்டறி யாதின்றென் கண்ணெதிரே
வருதி சிவப்பிர காசவந் தென்றன் மலர்க்கழலைத்
தருதியிவ் வற்புதத் தாலெமக் காருந் தரமல்லரே. 9

### ஞானவிநோதன்கலம்பகம்

உறவே யுயிருக் குயிரே யொருபற்று மற்றுநின்ற
துறவே சுடர்ச்சொரூ பானந்த னேதுயர் தீரக்கண்ட
திறவே யழிவுப டாச்செல்வ மேயென்றுந் தித்திக்கின்ற
நறவே சிறியே னுரைப்பதெவ் வாறுன்னை ஞாலத்துளே. 10

தானே வணங்குமென் சென்னியென் னாவுனைச் சாற்று
தொறு, மூனே யுருகு முரோமஞ் சிலிர்க்கு முகுமென்கண்ணீர்,
நானேது மொன்று மறிகின்றி லேன்வெறு ஞானகனத், தேனே
யருட்சொரூ பானந்த நீதந்த செல்வினையே. 11

திருக்கடைக்காப்பு.

மண்ணி னல்லவண்ணம் வாழலாம் வைகலு
மெண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே. 12

தேவாரம்.

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலு
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
யீச னெந்தை யிணையடி நீழலே. 13

பட்டணத்தார்பாடல்.

நானே பிறந்து பயன்படைத் தேனய னாரணனெங்
கோனே யெனத்தில்லை டம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென் † றீமையெல் லாமறந்து
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே. 14

† றீமையெல் லாமறுத்துத் என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

ஆரா வமுதே யடியே னுடல நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்கு கின்ற நெடுமாலே
சீரார் செந்நெற் கவரி வீசுஞ் செழுநீர்த் திருக்குடந்தை
யேரார் கோலந் திகழக் கிடந்தாய் கண்டே னெம்மானே. 15

தத்துவதேசிகம்.

* உள்ள லோதலொண் ணாதென் றுபநிடந்
தெள்ள லுற்றவன் றேசிக னாகவந்
தள்ள லார்பவ வாழிநின் றேற்றிய
வள்ள லோடு மகிழுமென் னுள்ளமே. 16

இறையுடன்மகிழ்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள். 2345.

## 11. இறையருள்காலம்புகழ்தல்.

விஞவிளக்கம்.

இறையுடன் மகிழ்ந்து நின்றங் கியம்பிய பரிசு போல
வறைவரு மருளி ளுகத் தமலனு ரருள வந்து
சேறிதரு காலந் தன்னைத் திகழ்ந்திடப் புகழ்ந்து நல்லோ
ரறைதரு பரிசை யுந்தா னறைகுவ னறிக மைந்தா. 1

அருணெறிவிளக்கம்.

* முற்காலந் தனைப்புகழ்வர் மூடரெல்லா முத்தியரு ளிடுவான் வந் திருந்து வைத்து, மிக்காரு நால்வரொழிந் தவர்க்கு ஞானம் விளம்பரிதாய் விட்டிலனோ வந்தக் காலந், தக்காரும் பாதகரு மெனவொன் றின்றிச் சரண்புகுந்தோ ரடங்கலுநற் சிவமே யாக, விக்காலத் திறையருளக் கண்டோ மாறு லீதன்றோ வுவமையிலா வினிய காலம். 2

* சாலவுநற் பரமாக முற்கா லத்தைச் சளருரைப்பர் சது முகன்வா னவர்கோ னுக்கு, மூலமரு ளிடவிருந்து முடிந்தி டாமை முயறவமென் றுமுற்று வித்தான் முன்னைக் காலங், கோல வருட் கழலடைந்தோ ரெவரு மந்தக் கணத்தினினற் பரமா கக் குரவ ஞர்தா, மோலமென வந்ததுவிக் கால மாறு லீதன்றோ வுவமையிலா வினிய காலம். 3

* கருத்தையறத் திரித்தருளிக் கண்ணே யாகக் காட்டியிடத் தெரியாமைக் கமலத் தோனும், வருந்தமுறும் வானவர்க்கு ஞா னஞ் சொன்ன வகைமழுவேந் துவஞனீர் தெளிமி னென்றான், சிரித்திடுமத் தனையன்றி யக்கா லத்தைச் செப்புவதெ னிக்காலத் திறைவ ஞர்தா, மிருத்தியிமைத் தனைப்பொழுதிற் காட்டக் கண் டோ மீதன்றோ வுவமையிலா வினிய காலம். 4

* ஒருதலற் றுணர்விலிகண் முற்கா லத்தை யொன்றன்றென் றுணர்கிலர்பார்த் தனுக்கு மாய, ஞருபரம் பொருள்பதினெண் கால றைந்து மவனையந் தீர்ந்திடவாய்த் திலதே யந்நாள்,சேருமவ ரெவர்களேயு மடைந்த போதே சிற்பரமே யாக்கிவிடுஞ் செய்ய கோல, மோர்பெறவந் தருளியதிக் காலத் தென்று லீதன்றோ வுவ மையிலா வினிய காலம். 5

ஞானசூளாமணி.

* சித்தந்தெளி வாகிய காலந் திசைதேச மிறந்திடு கால
மெத்தன்மை யருஞ்சிவ மாயே யிறவாவள மெய்திடு கால
மெய்த்தன்மை யராமடி யார்தா மிகவுங்களி கூர்தரு கால
முய்த்தென்னையு மாள வுவந்திங் கும்பன்புவி வந்தருள் காலம். 6

ஞானவிநோதம்.

* அருளைதிகழ் மேக மெழுந்திங் கறிவேபொழி கின்றிடு காலம்
பொருளைதிகழ் மாமறை ஞானப் பொலிவேவிளை கின்றிடு கால
மிருளைசெறி யும்பவம் வென்றங் கெல்லாரு மகிழ்ந்திடு கால
மருளைனையு மாள வுகந்திம் மண்மேலிறை வந்தருள் காலம். 7

சிவப்பிரகாசதரிசனம்.

* கருணாதிக ளோடற மேவுங் கமைதான்மிக வேவிளை கால
மருளான்மிக வானுல கந்தான் மணின்மானிடர் வாழ்தரு காலம்
பெருநான்மறை யீறுக டேடப் பேயேனையு மாள வுகந்தே
யொருமானிட னுய்வரு கால முவமாதிக மாகிய காலம். 8

ஆனந்தாமிர்தம்.

* மருவு மாசொடு தேசது வில்லா வமல வேதக மார்தரு காலம்
வெருவி மாயையும் விடிய காலம் வேறெலாமற வேவிளை காலங்
கரியு மார்தரு சாக்கிய முற்றுங் கண்ணி லேகரை வாகிய காலஞ்
சொருப ஞாடி யாரடி சூடித் தொண்ட னேன்மிக வாழ்தருகாலம்.

ஞானவிநோதன் கலம்பகம்.

கல்லையலா லுவமையிலா மணங்கனியுங் காலங் காதலெலா மீசனுக்கே கூரவருங் காலந், தொல்லையிலா கியபிறவி தொலைந்து விடுங் காலஞ் சொரூபானந் தச்சுடர்தான் றோன்றவருங் காலஞ், சொல்லியலா தொருசுகமா யென்னின்வே றின்றுந் தோன்றாத துணையடியென் றலைமே லேறி, யெல்லையிலா வின்பவெள்ளங் கரையழியுங் கால மென்னையுமாண் டருள்புரிவா னெழுந்தருளுங் காலம். 10

தத்துவதேசிகம்.

அந்தமிலா வானந்தக் கடல்கிளருங் கால மருண்மேக மெழுந் தெங்கும் பொழிகின்ற காலஞ், சிந்தையிலே திருநீற்றுக் கொடி தோன்றுங் காலஞ் சிறந்தன்பர் நிதிகொணர்ந்து சொரிகின்ற காலம், வந்தமருங் கோகழியான் வளர்கின்ற கால மகேந்திரமா மலைக்காற்று வந்துலவுங் கால,மெந்தமையா ளுடையபிரா னெழுந் தருளுங் கால மிப்பிறப்பை யறுத்திடுவா னெழுந்தருளுங் காலம்.

தத்துவதேசிகம்.

* ஞாங்கரும்பர் நாடரிய நளினமலர்ப் பதமென் றுய்த்தலை மேல் வீற்றிருக்க நல்கிவருங் கால, நீங்கரும்பொற் பதமெங்கு நிறைந்தொளிருங் கால நினைதோறுஞ் சொற்றெறுறுங்கண் ணீர் சொரியுங் காலங், கோங்கரும்பு முலைமடவார் துயர்தீருங் காலங் கோதிலன்ப ருளப்புலத்துக் கொழும்பிரசச் சுவையார், தீங்கரும் புண் கண்களிலே தித்திக்குங் காலஞ் † செய்யசொரு பன்கருணை திகழவருங் காலம். 12

† சிவப்பிரகா சன்கருணை என்றும் பாடமுண்டு.

இறையருள்காலமகிழ்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2357.

## 12. கழிந்தநாட்கிரங்கல்.

வினுவிளக்கம்.

என்னையா ளுடைய வெம்பிரா னருள்சே ரெழில்பெறுங் காலமே புகழ்ந்து, தன்னையே யனைய தம்பிரா னழகார் சரணபங் கயங்களே மருவி, யன்னையே யனையா னடியிணை பரவா தவங்கழி காலமே நோக்கி, யென்னையே யென்றென் றிரங்கிநின் றன்ப ரிசைத்திடு மியல்பையுங் கேளாய். 1

போதரத்னுகரம்.

* அறுதொழி லதனை யணையுநா ளதுவு மதில்விர குரைசெய் நா ளதுவு, முறுதரும் விடய மிசையுநா ளதுவு முலகிய லொழுகு நா ளதுவு, †மறிவிலர் கடையி னடையுநா ளதுவு ‡ மமலனை யடைவி னு ளதுவுங், கறையறு மறிஞ ரவமுறு கயமை யெனநினை கழியு நா ளவையே. 2

† மறிவிலாக் கடையே னடையுநா ளதுவு ‡ மமலனைப் பிரியுநா ளதுவுங் என்றும் பாடமுண்டு.

* சூரவனுர் புகழைக் கூறிடா நாளுங் கோலமே கண்டுகண் டுருகிப், பெருகிடா நாளு மன்பருட் செறிந்து பேசியே வாழிடா நாளு, மருளுரு தவரைப் பிரிவுறு நாளு மடியிணைக் கேவலைத் தலையான், மருவிடா நாளு மதிஞருக் கவமே மாயையிற் கழிந் தநா ளவையே. 3

போதாமிர்தம்.

* ஒருகா லருளா யுரவா வெனுமுன்
வருகா தல்செய்தாள் வளமார் குரவ
னருடா னறியா தவமே யிதுநாள்
வெருளார் பவமெய் துவதோ விதியே. 4

ஞானசூரியன்.

* எனக்கினிய பரம்பரனை யென்னுவிக் கின்னமுதை யெனது வைப்பைக், கனத்தபரஞ் சுடரினையென் கண்ணினையென் மணி யினையென் காதற் றேனை, யனைத்துயிர்க்கு முயிரினையா ரணப்பொ ருளை யருட்சொரூபா னந்தன் றன்னை, நினைத்தவல நீங்காதே † நெடுங்கால மவங்கழிய நின்றற் றேனே. 5

† நெடுங்காலம் வந்தழிய என்றும் பாடமுண்டு.

ஞானசூளாமணி.

* ஐம்புலன் றுனு மாரவந் தென்னை யன்னையி னன்புசெய் தரு ளித், தன்பெருந் தன்மை தனையெனக் களித்தா டம்பிரா னடிபர வாதே, வம்பதே கழிந்தேன் வரம்பில்கா லங்கள் வல்வினை மயக் கமுற் றந்தோ, வெம்பிரா னருளை யிழந்திருந் தின்று ளென்செ ய்தே னேழையே னென்னே. 6

* தன்னையே யருளத் தாஞெர்மா ணிடனுய்த் தமியனேற் கெ ளிதின்வந் தருளி, யன்னையே யனைய வன்புசெய் தழகா ரடியரு ளறிவிலே னையுமாள், பொன்னையே பரவிப் புகழ்ந்திடா தவமே போக்கினேன் போனவிந் நெடுநா, ளென்னையே யனையே னென் செய்தே † ஞனே னேழையே னேழையே னென்னே. 7

† ஞயே என்றும் பாடமுண்டு.

போதரத்னகரம்.

* கன்றினை நினைந்து காதல்செய் தெழுகற் றுவினுங் கடிதுற விரைந்து, நன்றியொன் றறியா வென்றனை யுவந்து ஞானவா ரமுதினை யளித்த, குன்றலொன் றின்றி யென்றுமொன் றுய குரு பர னருளறி யாதே, சென்றுபொன் றியநாள் வம்பனு யவமே தீவினை செய்தழிந் தேனே. 8

மெய்ம்மொழி.

சேர்ந்தியு மிருக்கக் காட்டஞ் சிதற்கொண்டு மண்ணு மாங்கே
யெந்தையே யின்ப ஞய விறைவநீ யிருக்க வென்னு
ளந்தனுய்க் காணு துன்னை யளவிலாக் கால மெல்லாம்
வந்ததே பிறந்தி றந்து மாயையின் வசத்த ஞயே. 9

### தத்துவதேசிகம்.

* காவி நேர்தடங் கண்ணியர் † மையலை மெய்யெனக் கருதுற்றென்
ஞவி யேயமிர் தேயென வுவந்தரு நரகிடை யாழாமே
கூவி யேதனைத் தந்தெனைக் கொண்டவன் குரைகழல் பரவாதே
பாவி யேனிகழ்ந் தின்னெடு நாளெலாம் பாழினுக் கிறைத்தேனே.

† தங்களா மையலை மெய்யென்று, வாவி என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

ஊன்கருவி னுண்ணின்ற சோதி யானை யுத்தமனைப் பத்தர் மனங் குடிகொண் டானைக், கான்றெரிந்த காண்டீப மேந்தி னானைக் கார்மேக மிடற்றானைக் கனலைக் காற்றைத், தான்றெரிந்திங் கடியேனை யாளாக் கொண்டு தன்னுடைய திருவடியென் றலைமேல் வைத்த, தீன்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத் தீவினையே னறியாதே திகைத்த வாறே. 11

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே. 12

### திருவாசகம்.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரிலைம்பு லன்களான்
முந்தை யாய கால நின்னை யெய்திடாத மூர்க்கனேன்
வெந்தையா விழுந்தி லேனெனுள்ளம் வெள்கி விண்டிலே
னெந்தை ‡ யாய நின்னை யின்ன மெய்தலுற் றிருப்பனே. 13

‡ கால நின்னை யெய்தலுற் என்றும் பாடமுண்டு.

### நக்கீரர்.

நம்பான் மதித்துறையுங் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூய் வணங்காதே—நம்பாவுன்
சீலங்க ளேத்தாதே தீவினையேன் யானிருந்தேன்
காலங்கள் போன கழிந்து. 14

கழிந்தநாட்கிரங்கல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2371.

## 13. கேடு நினைந்திரங்கல்.

### வினாவிளக்கம்.

வண்ணமும் வடிவு மின்றி மனவுரை யிறந்த வின்ப
நண்ணிமுன் பிழந்த நாட்கு நலம்பெற விரங்கி மன்னோ
வெண்ணரும் பரனை யெய்தா திகழ்ந்தகே டதற்கி ரங்கி
யுண்ணெகிழ்ந் தன்பர் கூறும் பரிசினை யுரைப்பன் மைந்தா. 1

### பூரணப்பிரகாசம்.

* வான நாடரு மறிவதற் கரியவன் மண்ணின்மா னிடனாகித், தான லாதொரு பொருளறும் பெருந்தன்மை தனையெனக் கருள் செய்து, தேனு மாரமு தமுமெனத் திகழுசிற் சொரூபனை நினை யாதே, யீன ஞானிக ளுடனிடர்க் கடலின்வீழ்ந் தென்செய்தே னானென்னே. 2

திகழ்ம றைக்கரி யவனெனக் கெளியவன் சிவப்பிர காசன்றன்
புகலு தற்கரும் பொற்கழ லெனதுளம் புரையற விருந்தார
மிருகு தர்க்கர்தம் மிருளுறு மறிவெனு மிடரிடை விழுந்தேனு
மிகப ரத்தினோ டிறைகழ றெரிவதற் றென்செய்தே னானென்னே.

### போதரத்னாகரம்.

ஆனைகாண் குருடர் போல வறுவகை வாத பேத
வூனதே பொருள தென்றிங் குழைத்தன னுவமை யில்லா
மானிட னாகி வந்தாள் வள்ளலை மருவி டாதே
கானனீ ரயின்று தாகந் தீர்வுறக் கருதி னேனே. 4

* கற்பிதப் ‡ பொறிக டம்மைக் கடவுளாக் கருதித் தொல்லை
யுற்பவந் தன்னு ணின்றே யுழைத்தன னென்னு ளொன்றுந்
தற்பதப் பொருளாய் நின்ற தம்பிரான் றாடொ ழாதே
புற்புதக் கனவிற் பொன்னாற் பூண்செயக் கருதி னேனே. 5

‡ பொருள்க என்றும் பாடமுண்டு.

* என்னுளே யீறி லாத வின்பமா மிறைவ னென்று
மன்னியே யிருக்க மூடர் மொழிகளே மருவிக் கேட்டுப்
பின்னமா யிருளிற் றாங்கிப் பிறிதற வுளத்தி ருந்த
கன்னலை யருந்தி டாதே காஞ்சிரை விருப்பி னேனே. 6

* ஒப்பிலா வுணர்வ தாய வோதரு மிறைவ னென்னு
ளிப்படி யென்று மெய்யே யிருந்திட விகலும் வாதக்
கற்பனைக் கடலுள் வீழ்ந்து கருதரு மீசன் பாத
வற்புத வமுது ணுதே யருவிட மருந்தி னேனே. 7

* உரைத்தொறு முள்ளுந் தோறு முணர்தொறுந் தித்தித் துள்
திருத்துறு மமிர்தா மீசன் றிகழ்ந்தினி திருக்க வென்று [ளே
மிரைத்துறு சமய வாத விடர்க்கடல் விழுந்து தேமாங்
‡ காத்துறு கனியி ருக்கக் கற்கடித் தெயிற்றி றேனே. 8

‡ கருத்துறு என்றும் பாடமுண்டு.

### தத்துவதேசிகம்.

ஆவ வின்பமா மமிர்தசா கரத்து † ணின் றருந்திட வறியாதே, நாவ றண்டென வுண்மையா ஞானநன் னயனமின் மையினுலே ‡ யாவ ருந்தொழு மிறைவனென் னுளத்துளே யென்றும்வீற் றிருக்கப்போய்த், தேவு வந்து $ வெண் டேரைநீ ரென்றுநான் சிந்தைசெய் தழிந்தேனே. 9

† ஆ ணருந்திட என்றும், ‡ யேவல் கொண்டரு ளிறைவனென் என்றும், $ வேண் டாதபா தகரைநான் என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

நோக்காதே யெவ்வளவு நோக்கி னானை நணுகாதே யாதொன்று நணுகி னானை, யாக்காதே யாதொன்று மாக்கி னானை யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத், தேக்காதே தெண்கடனஞ் சுண்டான் றன்னைத் திருப்புன்கூர் மேவுசிவ லோகன் றன்னை, நீக்காத பேரொளிசேர் நீரானை நீசனே னென்னேநா னினையாவாறே. 10

என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட் டென்னையோ ருருவ மாக்கிப், பின்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட் டென் னுள்ளங் கோயி லாக்கி, யன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண் டருள்செய்த வாரூ ரார்தம், முன்பிருக்கும் விதியின்றி முயல் விட்டுக் காக்கைப்பின் போன வாறே. 11

பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங் குண்டர்கடஞ் சொல்லே யேகேட், டுருகுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி, யருகுவித்துப் பிணிகாட்டி யாட் பிணிதீர்த்த வாரூ ரார்தம், மருகிருக்கும் விதியின்றி யறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே. 12

பப்போதிப் பவணுய்ப் பறித்தலொரு தலையோடே திரி தர் வேனை, யொப்போட வோதுவித்தென் னுள்ளத்தி னுள்ளிருந் தங் குறுதி காட்டி, யப்போதைக் கப்போது மடியவர்கட் காரமு தா மாரு ராரை, யெப்போது நினையாதே யிருட்டறையின் மலடு கறந் தெய்த்த வாறே. 13

கதியொன்று மறியாதே கண்ணழலத் தலைபறித்துக் கையி லுண்டு, பதியொன்று நெடுவீதிப் பலர்காண நகைநாணு துழிதர் வேற்கு, மதிதந்த வாரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகி யுய் யும், விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக் காய் ந்த வாறே. 14

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற சமணீசர் சொல்லே கேட்டுக், காவிசேர் கண்மடவார் கண்டோடிக் கதவடைக்குங் கள்வ னென்ற, ஞவியவம் போகாமே தவிர்த்தென்னை யாட்கொ ண்ட வாரு ராரைப், பாவியே னறியாதே பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே. 15

கேடு நினைந்திரங்கல் முற்றிற்று.

ஆகச்செய்யுள். 2386.

## 14. இறைவனைப்பிரிந்தழுங்கல்.

வினவிளக்கம்.

நிகரிலா விறையைக் கூடிடாக் கேட்டை நினைந்திரங் கியவ கை யதுபோன், மிருநன்மா லயனும் விரைமலர்க் கழல்கண் மேவு மா றறிவுறா் வெருவத், தகவொர்மா னிடனுய் வந்தவா ரமுதின் சரணபங் கயம்பிரிந் தழுங்கி, யகமெலா மடைய வழலுறு மெழு கா யறைகுவ ரதனையு மறிவாய். 1

போதாமிர்தம்.

* நித்தனே யொளிகட் கொளியதாய் நிகழு நிட்களா நினை வுரை யிறந்த, சித்தனே யென்றன் சிந்தையுட் டெளிவே செய்ய நற் சிவப்பிர காசா,மத்தனே னுய்ய மனிதனுய் வந்தாள் வள்ளலே நினைப்பிரிந் தழுங்கி, யெத்தினு னுய்வ தெங்குநான் புகுவ தென் செய்கே னெந்தைநீ யிசையே. 2

போதரத்னுகரம்.

* ஐம்பு லன்களு மாரவந் துருவா யன்னை தன்னினு மன்பு செய் தருளித், துன்ப வெள்ளந் துடைத்தெனை யாண்ட தோழ னென்றுணை வன்சொரூ பன்ற, னின்ப வார்கழல் பிரிந்திறைப் பொழுது மேழை யேனெங்ங னாற்றுவ தறியே, னென்பொ லாமணி யேயென தமுதே யீச னேமுறை யோதரி யேனே. 3

அருணைறிவிளக்கம்.

* அரியயன் புரந்தர னவர்கள் வாடிட
வுரியவன் பதுகொடு வுணர்வி லேனையாள்
பெரியநன் சொரூபனைப் பிரிந்து துன்புறு
மொருகண மொன்பது கோடி யூழியே. 4

* அருமறை துதிசெயு மமலன் மானிட
வுருவுகொண் டுணர்வறு மூட னேனையாள்
குருபரன் குரைகழல் பிரிந்து கோளுறு
மொருகண மளவிலா வூழி யூழியே. 5

போதரத்னுகரம்.

* உடலந் தன்னொடு முண்டுடுத் துழிதரு முள்ளவிக் குறைகால, முடிவொன் றின்றிய கருணைநற் குருபரன் முழுதருட் டிருக்கோல,மொடிவங் கொன்றற வொண்புல னரமொண் டுண்டு நான் களியாதே, யடுவெந் துன்புற வரியவன் கழல்பிரிந் தாற்றுமா றறியேனே. 6

திருவாசகம்.

உரியே னல்லே னுனக்கடிமை யுன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந், தரியே னாயே னின்னதென் றறியேன் சங்கரா கருணையினாற், பெரியோ னொருவன் கண்டுகொ ளென்றுன் பெய்கழலடிகாட்டிப், பிரியே னென்றென் றருளிய வருளும் பொய்யோ வெங்கள் பெருமானே. 7

பொய்யனே னகனெகப் புகுந்தமு தூறும் புதுமலர்க் கழலிணை யடிபி ரிந்துங், கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தே, னையனே யமுதே யருட்பெருங் கடலே யத்த னேயயன் மாற் கறிவொண்ணாச்,செய்யமே னியனே செய்வகை யறியேன் றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 8

24407

அறுக்கி லேனுட றுணிபடத் தீப்புக் கார்கி லேன்றிரு வருள் வகை யறியேன், பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன் போற்றி போற்றியென் போர்விடைப் பாகா, விறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க வென்செய் கேனிது செய்கவென் றருளாய், சிறைக்க ணேபுன லிலவிய வயல்சூழ் திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 9

காணு மதொழிந்தே னின்றிருப் பாதங் கண்டுகண் களிகூரப், பேணு மதொழிந்தேன் பிதற்று மதொழிந்தேன் பின்னையெம் பெருமானே, தாணுவே யழிந்தே னின்னினைந் துருகுந் தன்மை யென் புன்மைகளாற், காணு மதொழிந்தே னீயினி வரினுங் காணவு நாணுவனே. 10

### தத்துவதேசிகம்.

தேனார் கழல்சென் னியில்வைத் தெனையே
நானா விதமன் றியஞா னகனந்
தானா யருள்செய் தலைவற் பிரிவுற்
றானா வினையேம் பியிருந் தனனே. 11

நறவே † செய்த நாண்மலர் நான்பிரிவுற்
றுறுவே தனையொன் றுமுணர்ந் திலனே
யிறவே னடியே னினியேது செய்தும்
பிறவே னெனையாண் டபெருந் தகையே. 12

† பத என்றும் பாடமுண்டு.

தொண்டே செயுமன் பருடன் சொரூபன்
கண்டே யெனையாண் டதுகை விடவோ
வண்டோர் குழன்மா தர்மயக் குறநான்
பண்டே வலனென் பதுபார்த் திலனே. 13

இறைவனைப்பிரிந்தழுங்கல் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 2399.

## 15. இறைவனை நினைந்தழிதல்.

### வினாவிளக்கம்.

சூரவ னார்கழல் பிரிந்துற வழுங்கிய † குறியிலன் பருளன்பர்
பரவி னார்தமை யிறைவர்செய் பரிசொடு பரனரு ளியலுன்னி
யரிய நாதனை நினைந்தழிந் தழலுறு மெழுமெகன வுளநீரா
யருவி பாய்மிகு நயனமோ டுரைசெய்வ ரதனெறி யறிவோய்கேள்.

‡ குறியினல் லருளன்பர் என்றும் பாடமுண்டு.

### அருணெறிவிளக்கம்.

* வானவர்க் கரியா னென்போன் மனிதனாய் வந்த வாறு
மூனமற் றிடுநல் லன்ப ருடனெனை யாண்ட வாறு
மானநற் கழலென் னங்கைக் கனியென வளித்த வாறு
மீனமுற் றுழலு நாயே னேதுநா னறிகி லேனே. 2

* அரிய வாகம கோடிக ளோதியு மறிவரும் பொருடன்னை
யொருசொ லாலுளங் கையினிற் கனியென வுணர்த்திய வியல்பானு
முரிய வூனுறு பொறிபுல னுளமுயி ருண்டவா றதுதானுந்
தெரிகி லேனிறை தனைநினை † தழிந்துநான் செய்வதொன் றறி
யேனே. 3

† தழிந்துளஞ் என்றும் பாடமுண்டு.

### அருளியற்சதகம்.

* ஊன துண்டன னுறுபொறி யுண்டன னெண்புலன் மன
முண்டான், ஞான மோடுயிர் தனைமிக வுண்டனன் ஞாலமு முழு
துண்டா, னுன கோள்களு மாவியு முறுமெனை யனவர தமுமுண்
டா, னுனி லாவிறை தனைநினை வுறினழிந் தொழுகுமென் னுயிர்
தானே. 4

### ஞானசூளாமணி.

* எம்பி ரானிய னினைவுறி னிடையற வுகுமென துயிராவி [காற்
யென்பெ லாமழன் மெழுகென வுருகிடு மெழிலுற ‡ வெனுமோர்
றம்பி ரானெனை வுரைசெயி னெனதுயிர் தளர்ந்திடுந் துறவேமா
லும்ப ராளெனு மளவினி னழிகுவ னொழியவு மறியேனே. 5

‡ வெறுமோர்காற் என்றும் பாடமுண்டு.

### சொரூபானந்தநிலயம்.

* † நினையு நெஞ்சமு நிறைதளர்ந் தழிந்துற நெக்குநீ ராமன்றி
முனைவ னன்புக முரைசெயிற் கூறுவாய் மோனமா யுரைமாளும்
புனைசெய் காயமு மவன்பணி பொருந்திடிற் பொறிபுலச் செயன்
மனைய நீதியி னழிகுவ னிறைதிற மணைவுற வறியேனே.[மாளு 6

† நினையி னெஞ்சமு என்றும் பாடமுண்டு.

### பட்டணத்தார்பாடல்.

மயக்கமில் சொன்னீ யாயினு ‡ மற்றவர்
துயக்க நின்றிற மறியாச் சூழலு
முறைவிட முள்ள மாயினு மற்றது
கறைபட வாங்கே கரந்த கள்ளமுஞ்

‡ மற்றவை என்றும் பாடமுண்டு.

செய்வினை யுலகினிற் செய்வோ யெனினு
மவ்வினைப் பயனீ யுறுகா வண்மையு
மினத்திடை யின்பம் வேண்டிநிற் பணிவோர்
மனத்திடை வாரி யாகிய வனப்பு
மன்பி னடைந்தவர்க் கணிமையு நாடொறு
மென்பினை யுருக்கு மியற்கையை யாதலிற்
கண்டவர் தமக்கே யூனுடல் கழித
லுண்டென வுணர்ந்தன மொற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவ
துன்னிய செஞ்சடைத் தூய்மதி யோயே. 7

திருவாசகம்.

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது காமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே. 8

திருவாய்மொழி.

ஒத்தார்மிக் காரை யிலையாய மாமாயா
வொத்தாயெப் பொருட்கு முயிராயென் னைப்பெற்ற
வத்தாயாய்த் தந்தையா யறியாதன வறிவித்த
வத்தாநீ செய்தன வடியே னறியேனே. 9

நினைதொறுஞ் சொலுந்தொறு நெஞ்சி டிந்துகும்
வினைகொள்சீர் பாடிலு வேமெனு தாருயிர்
சுனைகொள்பூஞ் சோலைத்தென் காட்கரை யென்னப்பா
நினைகிலே னுனக் காட்செய்யு நீர்மையே. 10

கோளுண்டா னன்றிவந் தென்னுயிர் தானுண்டா
னாளுநாள் வந்தென்னை முற்றவுந் தானுண்டான்
காளநீர் மேகத்தென் காட்கரை யென்னப்பற்
காளன்றே பட்டதென் னாருயிர் பட்டதே. 11

ஆருயிர் பட்ட தெனதுயிர் பட்டது
பேரிதழ்த் தாமரைக் கட்கனி வாயதோர்
காரெழின் மேகத்தென் காட்கரைக் கோயில்கொள்
சீரெழி னற்றடந் தோட்டெய்வ வாரிக்கே. 12

இறைவனைநினைந்தழிதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2411.

# 16. பரமராகம்.

### வினாவிளக்கம்.

இறைவனை நினைந்த ழிந்தங் கெலையற வுருகு மன்பர்
முறிவறு சுகம தாகு முழுமுத லிறைவ னோடு
கறையறு பரம ராகக் காதன்மீ தூர நின்றங்
கறைவுறு பரிசை யுந்தா னறைகுவ னறிக மைந்தா. 1

### அருணேறிவிளக்கம்.

* ஆரணமாங் குயிலினங்கா ளரியசிவப் பிரகாசன்
பூரணமாந் திருவடிக்கே பொறியிலியே னுறுதுயர
மேரணமாம் விண்ணப்பஞ் செய்தெனையு மெம்பெருமான்
சீரணமாந் திருவுள்ளம் பற்றியிடச் செப்பீரே. 2

* நான்மறையி னீறுகளா ஞானநவில் குருகினங்கா
டேனனைய திருமொழியான் சிவப்பிரகா சப்பெருமான்
வானவரு மறியாத மலரடிக்கே வல்வினையே
னானவருட் காதலுமென் னூர்வமுநீ ருரையீரே. 3

அருமாயை மீன்கவரு மாகமமா மடநாரா
யொருநாம மோருருவந் தமக்கின்றி யொருகோடி
திருநாம முடையசிவப் பிரகாசர் திருவடிக்கே
வருகாதற் பெருவெளத்தென் வருத்தஞ்சென் றுரையாயே. 4

* அள்ளன்மிகு பவக்கழியி னருவினைமீன் கவர்ந்துவருந்
தெள்ளுகலைப் புள்ளினங்காள் செழுஞ்சுருதிக் குயிலினங்காள்
வள்ளல்சிவப் பிரகாசன் மலரடிக்கே வருகாத
லுள்ளமிகுத் தெனதுறுநோ யொருகாற்சென் றுரையீரே. 5

### திருக்கடைக்காப்பு.

கூடார விரைதேர்ந்து குளமுலவி வயல்வாழுந்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்ற னருளொருநாள் பெறலாமே. 6

குட்டத்துங் குழிக்கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்து
மிட்டத்தா லிரைதேரு மிருஞ்சிறகின் மடநாராய்
சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே. 7

கருவடிய பசுங்கால்வெண் குருகேயொண் கழிநாரா
யொருவடியா ளிரந்தாளென் றொருநாள்சென் றுரையீரே
செருவடிதோட் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
திருவடிதன் றிருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே. 8

திருவாய்மொழி.

வாயுந் திரையுகளுங் கானன் மடநாராய்
யாயு மமருலகுந் துஞ்சிலுநீ துஞ்சாயா
னோயும் பசலைமையு நீதாரா வெம்மேபோ
னீயுந் திருமாலா னெஞ்சங்கோட் பட்டாயோ. 9

என்செய்ய தாமரைக்கட் பெருமானார்க் கென்றூதா
யென்செய்பு முரைத்தக்கா லினக்குயில்கா ணீரலிரோ
முன்செய்த வல்வினையாற் றிருவடிக்கீழ்க் குற்றேவன்
முன்செய்ய முயலாதே னகல்வதுவோ விதியினமே. 10

விதியினாற் பெடைமணக்கு மென்னடைய வன்னங்காள்
மதியினாற் குறண்மாணா யுலகிரந்த கள்வற்கு
மதியிலேன் வல்வினையே மாளாதோ வென்றொருத்தி
மதியெல்லா முள்கலங்கி மயங்குமா லென்னீரே. 11

பெரியதிருமொழி.

தானாக நினையானேற் றன்னினைந்து நைவேற்கோர்
மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ
தேன்வாய வரிவண்டே திருவாலி நகராளு
மானாயற் † கென்னிலைமை யறியச்சென் றுரையாயே. 12

† கென்னுறுநோ என்றும் பாடமுண்டு.

திருவாசகம்.

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலின
ருண்ணின் றுருக்குவ ரன்னே யென்னும்
முண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும். 13

ஆடராப் பூணுடைத் தொல்பொடி பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே யென்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடு மிதுவென்னே யன்னே யென்னும். 14

திருவாய்மொழி.

பட்ட போதெழு போதறி யாள்விரை
மட்ட லர்தண் டுழாயென் னுஞ்சுடர்
வட்ட வாய்நுதி நேமி யீர்நும
திட்ட மென்கொ லிவ்வே ழைக்கே. 15

பெரியதிருமொழி.

உளங்கனிந் திருக்கு முன்னையே பிதற்று முனக்கன்றி யெனக்கன்பொன் றிலளால், வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ் சோலை மாயனே யென்றுவாய் வெருவும், களங்கனி முறுவற் காரிகை பெரிதுங் கவலையோ டவலஞ்சேர்ந் திருந்த, விளங்கனி யிவளுக் கென்னினைந் திருந்தா யிடவெந்தை யெந்தைபி ரானே.

தேவாரம்.

நிலைப்படா நான்கண்ட தேடீ கேளாய் நெருநலைநற் பகலிங் கோ ரடிகள் வந்து, கலைப்பாடுங் கண்ணினையுங் கலக்க நோக்கிக் கலந்துபலி யிடுவேனு னெங்குங் காணேன், சலப்பாடே யினியொ ருநாட் காண்பே னாகிற் றன்னாகத் தென்னாக மொடுங்கும் வண்ண, முலைப்பாலே படத்தழுவிப் போக லொட்டே னொற்றியூ ருறைந் திங்கே திரிவா னையே. 17

திருவாசகம்.

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து † மயர்வே னனலேந்தி
யாடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய். 18

† மலர்வே என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

கழிய மிக்கதோர் காதல ளிவளென் றன்னை காண்கொடாள்
வழுவில் கீர்த்தித் திருக்கு றுங்குடி நம்பியை நான்கண்டபின்
குழுமித் தேவர்குழாங்கள்கைதொழச் சோதிவெள் ளத்தினுள்ளே
யெழுவ தோருரு வென்னெஞ் சுள்ளெழு மியார்க்கு மறிவரிதே.

### தத்துவமாலை.

உருக்கி யுயிர்பரத்தோ டோரீ ருபாதி
கரக்குங் கருதரிய வீச—னிருக்கதுவு
நாடரிய ஞான நடன்மார்ப மென்முலைகள்
கூடிடுமேற் கூடலே கூடு. 20

ஆங்கென் வளைகொண் டளவிலா வின்பளித்த
தீங்கில் சிவப்பிரகா சன்புயங்கள்—பாங்கதுறச்
சென்று புணரு மளவுந் திகழடியார்
மன்றுதொறு மூர்வேன் மடல். 21

## குறுந்திரட்டு.

### பரமாகம்.

வண்ணங்கா ரெரிவெண்மை மரகதம்பொன் னெனவொண்ணாப்
பெண்ணங்கா ணலியல்லாப் பெற்றியனெம் பிரானேயென்
றன்னங்காள் குருகினங்கா ளறவழிந்தா ளருட்கழல்க
ளின்னங்காட் டுதியாகி லீடேறு மென்னீரே. 409

தாராவே மடநாராய் தாளிணைகை தொழுதேனுக்
காராத பெருங்காத லளித்தருளி யடியேனை
நேராகக் கொண்டார்க்கு நின்மலமா நிலைபிறழ்ந்து
வாராது வந்தாற்கென் வருத்தஞ்சென் றுரையீரே. 410

தாதாவே நாரணனே சங்கரனே சகத்தினினீ
யேதாவா யேதாகா யென்றென்றங் கினிதேத்திப்
போதாவே பொன்னடிபூண் டென்னடியாள் பொலிவழிந்தா
ளீதாமே தாமென்று லென்செய்யு மியம்பாயே. 411

பூவைகாள் பைங்கிளிகாள் புத்தேளிர் மூவர்முதல்
யாவரா லுந்தெரியா வெம்பெருமா னெனினல்லா
லாவிகாத் தற்குரியா ராரோவென் றடிவணங்கிப்
பாவியே னடிகூடும் பரிசதுநீர் பகரீரே. 412

வரியாரும் பூங்குயில்காண் மாமயில்காண் மலர்ப்பாத
மரியாலுந் திருமுடிபூண் டயனாலு மளப்பரிய
பெரியானைப் பெறவிரும்பும் பெற்றியவ ளானவென்னைச்
சிரியாதென் சிந்தைநோய் தீரும்வகை செப்பீரே. 413

குறித்திருக்குங் கூத்தாடுங் கும்பிட்டு நிற்கு
மறித்தயரும் வந்திக்கும் வாழ்த்து—மெறித்தசுட
ரம்போனே யென்னு மழுஞ்சிரிக்கு மென்னுடைய
கொம்பினே கொண்ட குறி. 22

பரமராகம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2433.

## தூறுந்திரட்டு.

### பரமராகம்.

புணர்பிரியா வன்றில்காள் புத்தேளிர் போற்றரிய
வுணர்வுணரா மையைக்கடந்த வுணர்வென்னி னொண்மலர்த்தா
ளிணைபிரியா திருக்கமுன மிட்டிலனென் செய்வானென்
றிணையிலியா கியவெந்தை பெருமானுக் கிசையீரே. 414

புறவின்வாழ் புறவினங்காள் புள்ளினங்காள் புண்ணியர்க
ளுறவிலே யகப்படுத்திக் கொளவுரிய வொண்சுடரைப்
பெறவினே காதலித்த பேதையைநின் பேரருளா
லிறவிலே யெடுத்துக்கொண் டருளாயென் றியம்பீரே. 415

நவ்வியினங் காள்கலைகாண் ஞானமணஞ் சேர்களினச்
செவ்விதரு திருமுகத்தன் செய்யசொரூ பானந்தன்
வவ்வியெனை மணங்கலந்த வள்ளன்மலர்த் தாளிணைக்கே
வெவ்வினையே னுள்ளுறுநோய் விண்ணப்பஞ் செய்யீரே. 416

தும்பிகாள் வண்டுகா டொழுதாரை யெழுநரகக்
கும்பிகா ணாதவகை தனைக்கொடுக்குங் குருபரனை
யும்பர்நா டற்கரிய வொண்சுடரைக் கண்டும்மை
நம்பினாண் மிகநொந்தா ளென்றொருகா னவில்வீரே. 417

கொண்டல்கா டொண்டருணுங் கோற்றேன்முன் வருவதுகாண்
மொண்டுநான் பருகவென விரும்புமெனை முற்பட்டுப்
பண்டைநா னெனவொன்றுஞ் சேராமே பவளவாய்
கொண்டநா தற்கடியேன் கூறுவதென் கூறீரே. 418

## 17. இறைவனைக்காண விரும்பல்.

### வினாவிளக்கம்.

பழுதறு மிறைவ ரோடு பரமரா கத்தான் மிக்கங்
கழலெதிர் மெழுக தாகி யறைந்தவா றதுபோ லன்பர்
பொழிதரு கருணை யீசன் பொலிந்தபொற் கோலங் காண்பா
னழுதகண் டொழுத கையா யறைதரு பரிசை யுங்கேள். 1

### தத்துவதரிசனம்.

* நாரண னிடந்து தேட நான்முகன் பறந்து தேடத்
தாரணி வந்து நாயேன் றன்னையே தேடி யாண்ட
சீரணந் திகழுங் கோலஞ் சிறியனேன் கவலை தீரக்
காரண பரனே யின்னங் காணுமா றருளி டாயே. 2

### சோருபானந்தநிலயம்.

* ஒன்றலா நாயி னேனைத் தேடிவந் தாண்டு கொண்ட
வென்றனு ருயிரே யென்ற னின்பமே யினிய தேனே
யுன்றனு ரரிய கோல மூமனேன் கவலை தீர
வின்றுநான் கண்டு வாழ வேழையேற் கருளி டாயே. 3

### தத்துவசரிதை.

* அங்கியைக் ததனு ணின்றங் கயன்முத லமர ருன்னை
யெங்குவந் துறுவ தென்றே யின்னமு மயர வென்னை
யிங்குவந் தாண்டு கொண்ட விறைவனே யிலங்கு கின்ற
பங்கயப் பாதங் காணப் பாவியேற் கருளி டாயே. 4

### திருவாசகம்.

மேலை வானவ ருமறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. 5

---

### குறுந்திரட்டு.

நற்பதங்க ளொன்றுநா னயந்திடே னுயர்ந்துளோர்
நிற்பதென் றுரைக்குநிட் களத்துவந்து நெஞ்சுறேன்
சொற்பதங் கடந்தமெய்ச் சொரூபவென்று நைந்துநின்
பொற்பதங்கள் கண்டுகண் களிக்கநல்கு போதமே.

எய்த்தே னாயே னினியிங் கிருக்க கில்லேன் † னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோ ரறியா மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் னகைகாண
வத்தா சால வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. 6

† னில்வாழ்க்கை என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

கோலமே தாமரைக் கண்ணதோ ரஞ்சன
நீலமே நின்றெனை தாவியை யீர்க்கின்ற
சீலமே சென்றுசெல் லாதன † முன்னெலாங்
காலமே யுன்னையெந் நாள்கண்டு கொள்வனே. 7

† முன்னிலாங் என்றும் பாடமுண்டு.

தேவிமா ராவார் திருமகள் பூமி யேவன்மற் றமரராட் செய்வார், மேவிய வுலக மூன்றுநின் னாட்சி வேண்டுவேண் டுருவநின் னுருவம், பாவியேன் றன்னை யடுகின்ற கமலக் கண்ணதோர் பவள வாய் மணியே, யாவியே யமுதே யலைகடல் கடைந்த வப்பனே காணுமா றருளாய். 8

மெய்ந்நெறி.

துடியே ரிடையார் சூழலெனுஞ் சுழியிற் பட்டுத் துவள்வேனை
விடியா மாய விருண்மாற்றி வேதித் தாண்ட வேதியனே
முடியா வடிமை செயமூவேழ் குலமு மொழியா வகையாண்ட
படிதா னில்லாத் திருமேனி பரனே காண வருளாயே. 9

நீதி செல்லா நெறிநின்று நிந்தித் தெவருந் தடிகொள்ள
வாது சொல்லித் திரிவேனை வாளா வடிமை கொண்டவனே
போது சேரு மயன்மாலுந் தேடப் புவிமேல் வந்தருளிப்
பாத மருளுந் திருக்கோலம் பரனே காண வருளாயே. 10

அற்புதத்திருவந்தாதி.

கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியு
மெண்ணா வெண்ணத்தா லெண்ணியும்—விண்ணோ
னெரியாடி யென்றென்று மின்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 11

இறைவனைக்காணவிரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2444.

## 18. இறைவனைக்கூடவிரும்பல்.

### வினாவிளக்கம்.

காணுமா விரும்பி நின்று கைத்தலை மிசைய வாகப்
பூணுமா றரிய கோனைப் புகன்றவா றென்ன வன்பர்
காணுமா வந்த நாதன் கழலிணை கூடும் வண்ணம்
பேணுமா விரும்பி நின்று பேசுமா றதனை யுங்கேள். 1

### அருணெறிவிளக்கம்.

* அருளதே திகழு மேனி யாரிய னவனி வந்து
மருளதே வடிவா மென்னை மலர்க்கழல் சூட்டி யாண்டெ
னிருளதே கடிந்து ளென்று மீறிலா வின்ப மாய
தெருளதே யருளுங் கோனைச் சென்றுகூ டுநா ளென்றோ.

* கருவுறு பவத்தி னின்றுங் கலங்கியே ‡ கழிவேன் றன்னைப்
பொருவறு போத மாகப் பொற்கழல் சூட்டி யாண்ட
மருவுற வினிய செய்ய வமுதினை மணியை யென்றன்
குருவினை நிகழ வேத்திக் கூடுநா ளென்று கொல்லோ. 3

‡ யழிவேன் என்றும் பாடமுண்டு.

### போதாமிர்தம்.

* மத்தனை மதியி லேனை வலிந்துவந் தாண்டு கொண்ட
பித்தனை யிருவர் தேடும் பிறப்பிறப் பிலியை மூலச்
சித்தனை யழியாச் செல்வச் சிவப்பிர காசத் தேனை
யத்தனை யடியேன் கூடி யாருநா ளென்றோ வென்றோ. 4

* பேயனை யேனை யாளப் பேதைமா நிலத்து வந்த
தாயனை யானை யென்றன் றந்தையைச் சயம்பு தன்னைக்
காயனைச் சொருபா னந்தக் கனியினைக் கன்ன றன்னை
மாயனைக் கூடி நாயேன் வாழுநா ளென்றோ வென்றோ. 5

---

### குறுந்திரட்டு.

ஒன்றா யவிநா சியுமா னுடனே
யென்றா வியையா வெமையா ளருளொன்
றன்றா வியவா வழுவா ருடனே
யென்றா வியையென் றுகொலெய் துவதே. 420

திருவாசகம்.

மின்னே ரனைய பூங்கழல்க ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு போற்றா நின்றா ரமரரெல்லாங்
கன்னே ரனைய மனக்கடையாய்க் கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
வென்னே ரனையே னினியுன்னைக் கூடும் வண்ண மியம்பாயே. 6

சீல மின்றி நோன்பின்றிச் செறிவே யின்றி யறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேற்கு
மாலுங் காட்டி வழிகாட்டி வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி யாண்டானைக் கொடியே னென்றோ கூடுவதே. 7

திருவாய்மொழி.

முந்நீர் ஞாலம் படைத்தவெம் முகில்வண்ணனே
யந்நா ணீதந்த வாக்கையின் வழியுழல்வேன்
வெந்நா ணோய்வீய வினைகளை வேரறப்பாய்ந்
தெந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவனே. 8

இறைவனைக்கூடவிரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2452.

## 19. இறைதிருக்குறிப்பாட்சி.

வி ரு வி ள க் க ம்.

அண்ணலா ரரிய பாதங் கூடுவா ருர்வ மெய்திப்
பண்ணினு லன்ப ரேத்தும் பரிசுபோற் பரம னுர்த
நண்ணருங் குறிப்பி னுட்சி நலம்பெற விரும்பி நல்லோ
ருண்ணெகிழ்ந் துருகி யேத்தும் பரிசது முரைசெய் வன்கேள்.

போதாத்துகரம்.

அன்பர் மூலபண் டாரமே யன்பர்க் காவி யேயமு தேயழி
வில்லா, வின்ப மேயென்று மீறிலாப் புகழே யெலையில் செல்வமே
யெதிரிலா † வாழ்வே, யன்பு செய்திடு மன்னையே யத்தா வரிய
நற்றுணை யேயருட் சொருபா, வுன்பெ ருந்திரு வுளக்குறிப் பாட்சி
யொன்று மேயல தொன்றும்வேண் டேனே. 2

† வழகே என்றும் பாடமுண்டு.

### அதிக்கிருதாமிர்தம்.

* வாதி லாதமே தார் மதிநலப் பயனே மருவு மன்பர்தம் மனத்
தினுட் டெளிவே, வேத நான்குநின் றுரைசெயும் பொருளே
வேறி லாவருள் வித்தகக் கனியே,நாத னேதிரு முகமலர்ந் தென
க்கு நல்கி டாவிடி னண்ணுநின் னன்ப, ரேதி லானென வெனை
யிகழ்ந் திடுவ ரெம்பி ரான்குறிப் பாட்சிசெய் தருளே. 3

எம்பி ரானெனைக் கருணையி னோக்கி யிலங்கு நின்றிரு முறு
வல்செய் தருளி, வம்ப னேனையு மூவகைகொண் டிங்கே வருக
வென்றரு ளாவிடி னடியா, ரெம்பி ரானெனை யேதிலார் போல
விகழ்வர் பின்னைநா னிறந்துபோ யிடுவேன்,செம்பொ னேயெனைத்
திருவுளத் தடைத்துன் செய்ய நற்குறிப் பாட்சிசெய் தருளே. 4

* செய்ய தாமரைக் கண்களா லென்னைத் திகழ நோக்கிநின்
றிருமுக மலர்ந்திங், கைய நீயெனை யிங்குவா வென்று னன்பு செய்
யினுன் னன்பரு மென்னைப், பைய லாமெனப் பரிந்துகாத் திடு
வர் பரம நின்னரு ளிலதெனிற் பாரார், செய்ய னேதிகழ் திருவு
ளத் தடைத்துன் சீர ருட்குறிப் பாட்சிசெய் தருளே. 5

### அருணைறிவிளக்கம்.

* மண்ணு ளார்பெரு வாழ்வு மதித்திடேன்
விண்ணு ளார்மிகு மின்பமும் வேண்டிடே
னெண்ண மாவ தெலாமெனக் கெம்பிரான்
றிண்ண மாகுந் திருக்குறிப் பாட்சியே. 6

* அரிய யன்பத மானதும் வேண்டிடேன்
பெரிய வீடும் பிறப்புமொன் றுக்கொளேன்
விரியு மென்விருப் பெல்லாம் விமலநீ
தெரிய வாளுந் திருக்குறிப் பாட்சியே. 7

### தேவாரம்.

திருவேயென் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே
செழுஞ்சுடர்நற் சோதி மிக்க,வுருவேயென் னுறவேயென் னூனே
யூனி னுள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற, கருவேயென் கற்ப
கமே கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவா,
யருவாய வல்வினைநோ யடையா வண்ண மாவடுதண் டுறையுறை யு
மமா ரேறே. 8

ஞால மேவிசும் பேகலந் தீமையே
கால மேகருத் தேகருத் தாற்ருெழுஞ்
சீல மேதிரு வீழி மிழலையுட்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே. 9

கருவ னேகரு வாய்த்தெளி வார்க்கெலா
மொருவ னேயுயிர்ப் பாயுணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுட்
குருவ னேயடி யேனைக் குறிக்கொளே. 10

முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
யொத்த னேயொரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையு
ளத்த னேயடி யேனைக் குறிக்கொளே. 11

திருவாசகம்.

முன்னின் ருண்டா யெனைமுன்னம் யானு மதுவே முயல் வுற்றுப், பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே, ‡ யென்னென் றருளி வாநின்று போந்தி டென்ரு விடினடியா, ருன்னின் றுவனு ரென்ஞரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. 12

‡ யென்னின் றருளி வரநின்று என்றும் பாடமுண்டு.

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலி யேன், சகந்தா னறிய முறையிட்டா மு றக்க வாறென் றென்ரு ரோ, மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற் குன், முகந்தான் ருரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 13

திருவாய்மொழி.

முன்னல் யாழ்பயி னூனரம்பின் முதிர்சுவையே
பன்னலார் பயிலும் பரமனே பவித்திரனே
கன்னலே யமுதே கார்முகிலே யென்கண்ணு
நின்ன லாவிலன்கா ணென்னைநீ குறிக்கொளே. 14

---

குறுந்திரட்டு.

* காவி யேர்கண் ணியர்வலை யிற்கடும்
பாவி யேனகப் பாடறப் பத்தருட்
கூவி யேயெனை யாண்ட குரவவென்
ஞவி யேயடி யேனைக் குறிக்கொளே. 421

## விண்ணப்பமாலை.

### (காப்புக்கூறியுரைத்தல்).

மாளாத வல்வினையை மாத்திரையின் மாற்றியெனை
யாளாகு மன்பருட னாண்டருளி - நீளாக
மென்னே யெனைக்காட்டி யாவையுமா யாசற்ற
பொன்னே புலையேனைக் கா. 15

மூலமே யென்றழைக்க முன்னின்றங் கோலமெனுங்
கோலமே செய்ய குருபரனே - ஞாலமே
விண்ணே பிறவே விரிந்தொடுங்க நின்றழியாக்
கண்ணே கடையேனைக் கா. 16

கலைவேடர் ‡ கட்டுங் கதற்றுவலைக் கெட்டா
நிலைவேட னெஞ்சினுளே காட்டிப் - பலவேட
மெல்லா மெழிலா ¶ ரடியாகக் கண்டந்த
செல்வா சிறியேனைக் கா. 17

‡ சுட்டுங் கதற்றுமவர்க் என்றும், ¶ ரடியராக் என்றும் பாடமுண்டு.

என்று மருளே யெனக்குடைமை யெம்பெருமாற்
கென்று மருளே யியல்பானா - லென்றுமுளத்
தெண்ணாமை யென்கடனா மேதுசெய்துங் காத்தருளல்
கண்ணாளா வுன்றன் கடன். 18

மடுவின் கரைமகவை வைத்ததாய் பார்வை
விடினங் கதுவிழுமா லென்னக் - கெடுவே
னுடையாய் திருக்குறிப்ப தோவியிடி னார்க்குங்
கடையா மெனைக்கருதிக் கா. 19

இறைதிருக்குறிப்பாட்சி முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2471.

## 20. இறையொடுநோதல்.

குரவ ஞார்குறிப் பாட்சியை விரும்பிக் கோதி லாவன்பர் குலவுமா றதுபோற், பரவு காதலோ டருவிசெய் நயனப் பத்தி யாலுடன் முற்றவும் விதிர்த்து, வெருவி வாயுரை குழறிமெய் முகிழ்த்து வெய்ய வங்கிமுன் மெழுகென வடியார், பொருவி லாத நல் லிறையொடு நொந்தே புகலு மாறது புகலுவ னதுகேள். 1

அருணெறிவிளக்கம்.

* வானம் வைத்தனை மாருதம் வைத்தனை மன்னு தீப்புனன் மண்ணென வைத்தனை, யூனும் வைத்தனை யுற்பவ மாரண முற்றும் வைத்துயர் முத்தியும் வைத்தனை, யான வித்தனை சித்திர முற்றிட வாகு லத்தலை வித்தயர் விப்பதெ, ஞனி *லக்கென வோவிதெ லாமென ஞான நற்சொரு பாவனை நோவனே. 2

போதாமிர்தம்.

பாரொடு விண்ணு மற்றைப் பாதல முழுது நீயே
யாருயிர்க் களைக ணீயே யடியனேற் கரசு நீயே
கூருநற் குரவ நின்ருள் கூடிடா தவர்போன் மையல்
சாருவித் திடுவ தானற் றலைவநா ஞரை நோவேன். 3

மூலசித்தி.

* போறிபுலன் கரணங் கட்குப் போனக மாக வென்னை
யறிவுற வாண்ட நீயே யழிந்திடக் கொடுப்ப தானு
லறைவதெ ஞரை நோவே ஞர்க்குரைத் திடுகே னென்னிற்
பிறிவறு சொரூபா வுன்னைப் பெயர்த்துநொந் திடுவ தல்லால். 4

போதரத்னுகரம்.

* குரவ நின்னல தொன்றறி யாவெனை
மருவு மைம்புலன் மாட்டளித் துன்கழற்
பரவி டாமற் படிறுசெய் தாற்பயன்
சொரூப னேயுள தோவிது சொல்லிடே. 5

* வினைகள் வந்திட வெம்பிணி வந்திடின்
புனைசெ யைம்புலப் போக மிடைந்திடி
னினைவ ருஞ்சொரூ பாநினை யன்றிவே
றுனவ ரும்பொரு ளொன்றையு நோவனே. 6

* தோய்ந்த பந்தி தொடர்ந்திடி னுந்துயர்
வந்து வந்து மயக்குறி னுங்கிளர்
சிந்தை பந்தனை செய்யினுந் தேசிகா
நைந்து நைந்துனை நான்மிக நோவனே. 7

திருக்கடைக்காப்பு.

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்தி மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே. 8

திருவாய்மொழி.

அறிவி லேனுக் கருளா யறிவா ருயிரானாய்
வெறிகொள் சோதி மூர்த்தி யடியே னெடுமாலே
கிறிசெய் தென்னைப் புறத்திட் டின்னங் கெடுப்பாயோ
பிறிதொன் றறியா வடியே னாவி திகைக்கவே. 9

ஆவி திகைக்க வைவர் குமைக்குஞ் சிற்றின்பப்
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ
தாவி வையங் கொண்ட தடந்தா மரைகட்கே
கூவிக் கொள்ளுங் கால மின்னங் குறுகாதோ. 10

வேதி யாநிற்கு மைவரால் வினையேனை மோதுவித் துன்றிருவடி
சாதியா வகைநீ தடுத்தென் பெறுதி யந்தோ
வாதி யாகி யகலிடம் படைத்துண் டுமிழ்ந்து கடந்திடந்திட்ட
சோதி நீண்முடி யாய்தொண்ட னேன்மது சூதனனே. 11

விண்ணுளார் பெருமாற் கடிமைசெய் வாரையுஞ் செறுமைம் புலனிவை, மண்ணுளென்னைப்பெற்றா லென்செயா மற்றுநீ யும் விட்டாற், பண்ணுளாய் கவிதன்னுளாய் பத்தியி னுள்ளாய் பரமீசனே வந்தென், கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளா யொன்று சொல்லாயே. 12

திருமாலை.

ஊரிலேன் காணி யில்லை யுறவுமற் றொருவ ரில்லைப்
பாரினின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னேயென் கண்ணனே கதறு கின்றே
னாருளர் களைக ணம்மா வரங்கமா நகரு ளானே. 13

இறையோடேநோதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2484.

## 21. இறைநிலைமயக்க முணர்தற்கருமை.

### வினாவிளக்கம்.

எலையற வுருகி நின்றங் கிறையொடு நொந்து நொந்து
தலைமிசை யிருகை கூப்பித் தழுதழுத் துரைத்த வன்பர்
கலைகளி னுணர வொண்ணாக் காரண னிலைம யக்க
மலைவற வறிய வொண்ணா வருமையு மறைவர் கேளாய். 1

### ஞானசூளாமணி.

* சுருதிகளுன் கீரொன்பான் மிருதிபுரா ணந்தான் றொகு சமய மாறுவியா கரணஞ்சோ திடநூல், கருதியவா கடங்கீதம் பரதமொடா யுதநூல் கதித்தமடை நூல்வருண மோவியவா ரணநூல், பொருதருநற் புரவியொடு பொன்மணிவாத் துவமாம் பூமிகலை கூபகலை பொற்புடைநற் சகுனந், திருதியுறச் சொற்கலையோ டெக்கலையு முணர்ந்துஞ் சிற்பரன்றன் செயல்வகையின் றிறமதுதேர் வரிதே. 2

### போதரத்னகரம்.

ஐம்பெரும் பூத மாறு † யலகிலண் டங்க ளாறு
யும்பரு நரரு மற்றெவ் வுயிர்களு முழுது மாறு
யின்பமு மிடரு மாறு யிசைந்தவை முழுது மல்லா
வும்பநின் மயக்க மோர்தற் குரியவ ரெங்கே யெங்கே. 3

† யகலிட முழுது மாறு என்றும் பாடமுண்டு.

* பாசமும் வீடு மாறுய் பந்தமுந் துறவு மாறுய்
மாசதுந் தேசு மாறுய் மயக்கமுந் தெளிவு மாறுய்
நாசமும் பிறப்பு மாறுய் நவின்றவை முழுது மல்லா
வீசநின் மயக்கு ணர்ந்தா ரிருநிலத் தெங்கே யெங்கே. 4

### மெய்ந்நெறி.

செய்து † முடித்தாற் றெரிவதலாற் றெரியா தொன்றும் பரன் செய்கை, யெய்த வருங்கா ‡ லந்தேசம் பாசம் வீடு முணர்ந்தவர்க்கு,மெய்யு நலத்தா ரதுவறிவ ரும்பன் றிறத்தோர் வேதுமிலா, மையன் மனத்தார் மமதையொடு மதிப்பர் சால மயல்கொண்டே.

† முடிந்தாற் என்றும், ‡ லந்தேச மலத்தை யெல்லா என்றும் பாடமுண்டு.

எம்பிரான் சிவப்பிர காச னியற்றிறந் தெரிக்கப் போமோ
வன்பர்பாற் றீங்கு போலா யணையவு மளவி லாத
வின்பமாம் பெருந லத்துக் கேதுவாய் முடியு மென்றான்
முன்புபின் பில்லான் செய்கை முடிந்தபோ தறிய லாமால். 6

ஒன்றையு மொருவ ராலு முணர்ந்திடத் தெரிவ தன்றா
னன்றுபோற் றீங்க தாயுந் தீங்குபோ னலம தாயு
மன்றிநன் கெழுந்து நன்கா யலதுதீங் கெழுந்து தீங்காய்ச்
சென்றலா லிறைவன் செய்கை முடிந்திடத் தெரியு மன்றே. 7

## போதாமிர்தம்.

* மறிகடன் மண்ணும் விண்ணு ‡ மருவுயிர் மற்று முற்று
முறைதரு மண்ட மியாவு முன்னுள தும்ப நீயுஞ்
செறிதரு மனுவி னுள்ளுந் திகழ்ந்தினி திருத்தி யென்று
லறிவரு மயக்க மூன்ற னருளிலார்க் கறிய லாமோ. 8

‡ மருவியு என்றும் பாடமுண்டு.

* பூதபௌ திகமு மற்றைப் பொறிபுலன் காண † மாய
பேதமாய்த் தோன்றி நீயே பிறிதொரு பொருளு மில்லாப்
போதமாங் குரவ நின்றன் பொற்புடை மயக்க மூன்ற
னீதியா மடியார்க் கல்லா னின்றவர்க் கறிய லாமோ. 9

† மாயை என்றும் பாடமுண்டு.

## அருணேறிவிளக்கம்.

* அனந்த கோடியா ரணங்களு மறிந்தில வமரரு மயர்கின்றார்
புனைந்த மாலயன் புரந்தர னறிகிலர் புவியினி லெவரோர்வார் [லாந்
நினைந்த தாயவை யவைதொறுங் கழன்றுளிர் நிமலநின் மயக்கெல்
தனந்த மின்றிய வடியவ ரறிகுத ருனைறி குதகுனே. 10

அன்ற தேமுத லின்றெதி ரளவுமிங் † கவனியி னருவானிற்
சென்ற காலமுற் றிகழ்தரு காலநற் செறிதர வருகால
மென்ற மூன்றினு மிறைவர்செய் தருண்மயக் கறிபவ ரெவரந்தோ
தன்ற னாரரு ளடியவ ரறிகுத றவிருத லதுதானே. 11

† கவனியில் வருவானிற் என்றும் பாடமுண்டு.

## தேவாரம்.

உரைக்குங் கழிந்திங் குணர்வரி யானுள்கு வார்வினையைக்
கரைக்கு மெனக்கை தொழுவதல் லாற்கதி ரோர்களெல்லாம்
விரைக்கொண் மலரவன் மாலெண் வசுக்களே காதசர்க
ளிரைக்கு ‡ மிதரார்க் கறியவொண் ணுனெங்க ளேகம்பனே. 12

‡ மிதர்க் என்றும் பாடமுண்டு.

திருக்கடைக்காப்பு.

கோடிகொ ளேற்றினர் கூற்றை யுதைத்தனர்
பொடிகொண் மார்பினிற் பூண்டதோ ராமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையு
ளடிகள் செய்வன வார்க்கறி வொண்ணுமோ. 13

திருவாய்மொழி.

அமைவுடை யறநெறி முழுவது முயர்வற வுயர்ந்து
வமைவுடை முதல்கெட லொடிவிடை யறநில மதுவா
மமைவுடை யமரரும் யாவையும் யாவருந் தானா
மமைவுடை நாரணன் மாயையை யறிபவர் யாரே. 14

திருச்சந்தவிருத்தம்.

உலகு தன்னை நீபடைத்தி யுள்ளொ டுக்கி வைத்திமீண்
டுலகு தன்னி லேபிறத்தி யோரி டத்தை யல்லையா
லுலகு நின்னொ டொன்றி நிற்க வேறுநிற்றி யாதலா
லுலகி னின்னை யுள்ள சூழல் யாவருள்ள வல்லரே. 15

நக்கீரர்.

கருத்துக்குச் சேயையாய்க் காண்டக்கோர் காண
விருத்தி திருக்கயிலை யென்று—லொருத்த
ரறிவா னுறுவார்க் கறியுமா றுண்டோ
நெறிவார் சடையாய் நிலை. 16

நின்னியல்பை யாரே யறிவார் நினையுங்கால்
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே—நின்னில்
வெளிப்படுவ தேழுலகு மீண்டு மொருபா
லொளிப்பதுவு மானா லுரை. 17

தத்துவமாலை.

கூறும் பரிசுநீ கூறரிய கொள்கையுநீ
மாறுங் கொடிய மயக்குநீ—தேறும்
பரிசுநீ யானாற் பரனேயுன் பண்பிங்
குரைசெய்வார் யாரே யுரை. 18

திருவந்தாதி.

தாதாவே நாரணனே சங்கரனே சாற்றரிய
வேதாவே வேதத்தின் மெய்ப்பொருளே—நாதாநீ
புக்கெவர்க்கு † முள்ளிருப்பப் பொய்யருளத் தேயிருளாய்த்
தக்கொளித்த வித்தகமென் சாற்று. 19

† மொத்திருக்கப் என்றும் பாடமுண்டு.

இறைநிலைமயக்க முணர்தற்கருமை முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2503.

## 22. கேடுகேண்டிரங்கி யிறைவனைப்புகழ்தல்.

வினாவிளக்கம்.

அத்தனார் நிலைம யக்க மறியொணா நிலைமை யெல்லாம்
பத்தரா னவர்கள் கூறும் பரிசுபோற் பரியு மன்பர்
மத்தமார் கேட துன்னி யழுங்கியே வள்ள லாரைப்
பொத்திலா வன்பான் மிக்குப் புகழுமா றதனை யுங்கேள். 1

பட்டணத்தார்பாடல்.

அன்றினர் புரங்க ளழலிடை யவியக்
குன்றுவளைத் தெய்த † குன்றாக் கொற்றவ
நுண்பொடி யணிந்த வெண்கோட் செல்வ
கயிலை நடந்தனைய வுயர்நிலை நோன்றாட்
பிறைசெறித் தன்ன விருகோட் டொருதிமிற்
பானிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமயச் செல்வன்
மணியெனப் பெற்ற வணியிய லன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
குயிலெனப் பேசு மயிலிளம் பேடை
வரிமுலை தாங்கிய திருமார்பு வல்லி
வைய மேழும் பன்முறை யீன்ற
வையை திருவயிற் றம்மைப்பி ராட்டி
மறப்பருஞ் செய்கை யறப்பெருஞ் செல்வி
யெமையா ளுடைய வுமையா ணங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரை பனிக்கைபோந் தனைய
தழைசெவி வெண்கோட் டலைவன் றந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கொலைகெழு கூர்வே
லமரர்த் தாங்குங் குமரன் றாதை
‡ பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கு

† குறையாக் கொற்றமொடு என்றும் பாடமுண்டு.
‡ பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும் என்றும் பாடமுண்டு.

மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்ற முளதோ நின்னினைந்
தெண்ணருங் கோடி யிடர்ப்பகை கடிந்து
கண்ணாறுஞ் சிற்றத்துக் காலனை வதையா
விறப்பையும் பிறப்பையு மிகழ்ந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிக டமதே பாவ மியாதெனின்
முறியாப் $ புழுக்கன் முப்பழங் கலந்த
வறுசுவை யடிசி லட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துத
லயினியின் குற்ற மன்று வெயிலின்வைத்
தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை *
தெண்ணீர்க் குற்ற மன்றுகண் ணகன்று
தேன்றுளி சிதறிப் பூந்துணர் துறுமி
வானுகங் கலந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவியர் பொடிப்ப
வடிபெயர்த் திடுவா னொருவ
னெடிது வருந்துத னிழற்றீங் கன்றே. 2

$ பருக்கன் என்றும் பாடமுண்டு.

அதிக்கிருதாமிர்தம்.

* இறைவனார் திருவுள் ளத்தி னேதுமோர் குறைவு முண்டோ
வறையுமா னிடனாய்த் தம்மை யைம்புலன் காண வந்து
குறைவிலா நிறைவை நல்கிக் கொடும்பவ மறுப்ப னென்றே
யறைகழ லணிய வுஞ்சென் றடைவுறா தழிவ ரந்தோ. 3

போதரத்னகரம்.

* என்னகே டிதுதா னையோ விமையவர்க் கரியான் வந்திங்
கன்னையி னன்பு செய்தே யருட்டிரு வடிவங் கொண்டு
தன்னையே யருளி யாண்ட தம்பிரான் றாள்கள் விட்டுப்
புன்னுனிப் பனிநீர் வாழ்வைப் புணர்வதற் குழல்வ தேதான். 4

போதரத்னவலி.

* மூவர் தேடியுங் காணுமா றரியநன் மூலமா மிறைவந்திங்
காவ வென்றருள் வடிவுகொண் டடியிணை யளிக்கவு மவன்பாத
மேவ லின்றிவிட் டழிவுறும் பொருள்களை விரும்பியேதிரிந்துந்தா
னுவ தொன்றுமங் கின்றியு மமைவுறா தவங்கழி கேடென்னே. 5

* ஒப்பி லானருள் வடிவுகொண் டணைந்தொரு மொழியினிற் றனைநல்கி, யிப்ப வங்கழித் தாண்டுகொண் டிருக்கவு மிறைகழ லதுவிட்டுப், பொய்ப்ப தாகிய விடயமன் பதுசெய்து புவியெலாந் திரிந்தெய்த்தங், குய்ப்ப தேதுமொன் றின்றியு மமைவுறு துழி தரு கேடென்னே. 6

அனுபவசாரம்.

* அறமு நல்கிடும் பொருளுட னின்பமு மருந்தவங் களுநல் குங், துறவுங் கல்வியுந் துணிவொடு நிலைமையுந் தூய்மையு மிக நல்கு, நிறமு நீர்மையு நினைந்தவை முழுவது நிகரில்வீ டது நல்கு, மறிவ னன்கழ லொழியவங் கவைநினைந் தழிபவ ரறி வென்னே. 7

அருணேறிவிளக்கம்.

* ஒன்றே யென்னி னொன்றேயா மனைத்தே யென்னி னதிற் பலவா, மின்றே யென்னி னிலனுண்டென் றுணர்வோர் முன்னே யுளனுகுஞ், சென்றே யென்னிற் செலவேயாஞ் செல்லா திங்கே யெனினங்கே, யொன்றே யீசன் றிருவுளமற் றுன்று தவர்தங் குறையல்லால். 8

நக்கீரர்.

பணியாதே முன்னிவனைப் பாவியேன் வாளா
கணியாத காலங் கழித்தே—னணியார்
கருமா மிடற்றெங் கயிலாயத் தெங்கள்
பெருமான தில்லைப் பிழை. 9

திருக்களிற்றுப்படியார்.

பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண். 10

கேகேண்டிரங்கி யிறைவனைப்புகழ்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2513.

## 23. தலைவனைநோக்கித் தமைவெறுத்துரைத்தல்.

### வினாவிளக்கம்.

தம்பி ரானருட் டிருவுளப் பெருமையுஞ் சார்ந்திடா தவர்கேடு மன்பி னுன்மிக வடியவர் புகழ்ந்துநின் றழலுறு மெழுகாகி யெம்பி ரானெனை யாண்டவ னிருவருக் கரியவன் றனைநோக்கி யெம்பி வெவ்வுயிர்ப் பொடுதமை வெறுத்துரை விளம்புவர் விளம் பக்கேள். 1

### போதரத்நாகரம்.

* தந்தை தாயுறு தாரமு மகவுடன் சாற்றிய திரளெல்லாம் பெந்த மாமுறு பிணியென வறிந்துநான் பேரிடர்க் கடல்வீழ்ந்து வந்து வந்திட ரின்பமாந் திரைபொர மடிந்தலைந் தழிந்தேவிட் டெந்தை யென்னைவந் தாண்டவ னென்பதற் றென்செய்து முடிந் தேனே. 2

* காய மானது நீரிடைக் குமிழிபோற் கழியுமென் றறிந்தேயு மாயு மூனினை மெய்யென முழுமல வயிறது வளர்த்தற்கே யாய தீவினை மருவியங் கழிதொழி லவைசெய்து கழிந்தேவிட் டேயு மாறெனை யாண்டவனென்பதற் றென்செய்து முடிந்தேனே.

### போதாமிர்தம்.

* விடைய மானது மெய்ந்நெறி மயக்கிடும் விடமதி னுறுமின்பங் கடையில் கானலி னீரொடு கனவினிற் பொருளதென் றறிந்தேயு முடைய நாயகன் கழலைவிட் டுலகினி னுணர்விலார் தொழிலெய்தி யிடையி லாதிர வொடுபகல் வருத்தமுற் றென்செய்தே னெனென் [னே. 4

* தம்பி ரான்கழற் கேவல்செய் கின்றிலேன் றத்துவ நெறி யோரே,னும்ப ரானடி யவர்க்கொரு பொருளினை யுதவுமா றதுமில் லேன், வம்ப தேதிரிந் துழன்றுகா கங்கள்போல் வயிறது வளர்த் தேபோ, யெம்பி ரானெனை யாண்டவன் கழல்பிரிந் தென்செ ய்தே னெனென்னே. 5

* தருமஞ் செய்திலேன் றானமுஞ் செய்திலேன் றவநெறி யது மோரேன், கருமந் தானுமோ ரிழிவறச் செய்திலேன் கலைகளி னுழைவில்லேன், வெருவு தீவினை யெரியினின் விட்டில்போற் சுழ ன்றுவீழ்ந் துணர்வின்றிக், குரவன் றாளிணை கனவிலுங் குறுகி டக் குறித்திலேன் கொடியேனே. 6

* இட்டிலேன்முன மாதவி னிப்பொழு தேற்பதே தொழிலா னேன், விட்டிலேனுறு வேட்கையின் விருப்பமும் விட்டன வவை யென்னைச், சிட்ட ஞர்கணத் தொருபொழு † துய்த்திலேன் சித டர்போற் றிரிந்தற்றேன், கட்ட னேனுறு கனவினு மிறைதனைக் கருதிடேன் கழிந்தேனே. 7

† துவக்கிலேன் என்றும் பாடமுண்டு.

தேவாரம்.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன் குற்றமே பெரிதுடையேன் கோல மாய, நலம்பொல்லே ஞன் பொல்லேன் ஞானி யல்லே னல்லாரோ டிஙைந்திலே னடுவே நின்ற, விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன் வெறுப்ப னவே மிகப்பெரிதும் பேச வல்லே, னிலம்பொல்லே னிரப்பதே யிய மாட்டே னென்செய்வான் ேறன்றினே னேழையேனே. 8

கற்றிலேன் கலைகண் ஞானங் கற்றவர் தங்க ளோடு
முற்றிலே ஞத லாலே யுணர்வுக்குஞ் சேய ஞனேன்
பெற்றிலேன் பெருந்த டங்கண் பேதைமார் தமக்கும் பொல்லே
னெற்றுளே னிறைவ னேஞ னென்செய்வான் ேறன்றி னேனே.

வென்றிலேன் புலன்க ளைந்தும் வென்றவர் வளாகந் தன்னிற்
சென்றிலே ஞத லாலே செந்நெறி யதற்குஞ் சேயே
னின்றுளே துளும்பு கின்றே னீசனே னீச னேயோ
வின்றுளே ஞளை யில்லே னென்செய்வான் ேறன்றி னேனே. 10

கழித்திலேன் காம வெந்நோய் காதன்மை யென்னும் பாச
மொழித்திலே னூன்க ணேக்கி யுணர்வெனு மிமைதி றந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற வினையெனுஞ் சரக்கைக் கொ
ண்டே, னழித்திலே னயர்ந்து போனே னதிகைவீ ரட்டனேரே.

திருமாலை.

போதெலாம் போது கொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன்
றீதிலா மொழிகள் கொண்டுன் றிருக்குணஞ் செப்ப மாட்டேன்
காதலா னெஞ்ச மன்பு கலந்திலே னதுத ஞலே
யேதிலே னரங்கற் கெல்லே யென்செய்வான் ேறன்றி னேனே.

உம்பரா லறிய லாகா வொளியுளா ரானைக் காகச்
செம்புலா லுண்டு வாழு முதலைமேற் சீறி வந்தார்
நம்பர மாய துண்டே நாய்களோஞ் சிறுமை யோரா
தெம்பிராற் காட்செ யாதே யென்செய்வான் ேறன்றி னேனே.

தவத்துளார் தம்மி னல்லேன் றனம்படைத் தாரி னல்லே
னுவர்த்தநீர் போல வென்ற னுற்றவர்க் கொன்று மல்லேன்
றுவர்த்தசெவ் வாயி னார்க்கே துவக்கறத் துரிச னானே
னவத்தமே பிறவி தந்தா யரங்கமா நகரு ளானே. 14

மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோ ரின்சொ லில்லை
சினத்தினாற் செற்ற நோக்கித் † தீவழி விளிவன் வாளா
புனத்துழாய் மாலை யானே பொன்னிசூழ் திருவ ரங்கா
வெனக்கினிக் கதியென் சொல்லா யென்னையா ளுடைய கோவே.

† தீவிளி என்றும் பாடமுண்டு.

திருவாசகம்.

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
றாற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலே
னேற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே. 16

தலைவனைநோக்கித் தமைவெறுத்துரைத்தல்

முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2529.

# 21. ஏவற்பணி.

## 1. ஏவல்விரும்பல்.

### வினாவிளக்கம்.

தமைவெறுத் துரைத்து நின்று தம்பிரான் றாள்கள் போற்றி
யமைவதற் றருகா நின்ற † வன்பர்கட் கெளிய நாத
னிமையவர்க் கரிய பாதத் தேவலை விரும்பி மேன்மே
லமலனுக் கறையு மாறு மழகுற வறைகு வன்கேள். 1

† வன்பர்க ளரிய நாத என்றும் பாடமுண்டு.

### போதாத்தாகரம்.

* எங்கணா யகனே யீரே ழுலகமும் பெறினும் வேண்டேன்
றுங்கவெண் சித்தி வேண்டேன் றுகளிலெண் செல்வம் வேண்டே
னிங்குவந் தென்னை யாண்ட விணையடிக் கேவல் செய்யும்
பங்கமில் செல்வ மொன்றும் பரமனே வேண்டும் வேண்டும். 2

* மாலயன் வாழ்வு வேண்டேன் வானவர் முழுதும் போற்றச்
சாலமூ வுலகு மாளுஞ் சக்கரச் செல்வம் வேண்டே
னேலவென் றென்னை யாண்ட வும்பநின் கழல்கட் கேவல்
சாலவும் விரும்பு கின்றேன் றந்திட வேண்டும் வேண்டும். 3

### போதாமிர்தம்.

* அத்தனேயெனக் கருளிட வேண்டுநின் னருட்கழ லிணைகட்கே
சித்த † மாதர மாய்மகிழ்ந் துகந்துநின் றிருப்பணி யதுசெய்ய
வெத்தி னாலுமெக் காலுமெவ் விடத்தினு முனையினி யிதுவேநான்
மெய்த்த வாவொடும் விரும்பிநின் றிரப்பன்வே றொருபொருள்
[வேண்டேனே. 4

† மார்தர மகிழ்ந்துகந் துகந்துநின் என்றும் பாடமுண்டு.

### அருணோதிவிளக்கம்.

* விடைய வெவ்விட மழிதர வினைகளு மடிதர விடயஞ்சென்
றடையு மைம்புல னறுபகை முறிதர வரும்பவ மிரிந்தேக
விடைய றுவகை யிரவொடு பகலுநின் னெழிறரு கழல்கட்கே
தடையி லாதர வதுகொடு பணிசெயத் தலைவதந் தருளாயே. 5

பட்டணத்தார்பாடல்.

வாழுந்தன மென்று தாழ்ந்தவர்க் குதவாது
தம்முயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்கா
துண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
யவியடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
யாரா வுண்டி யயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனு மொழுக்கமுங் கல்வியுந்
தம்மிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதம் மேவல் கேட்குஞ்
சிறாஅர்த் தொகுதியி னுறாஅப் பேசிப்
பொய்யொடு புன்மைதம் புல்லர்க்குப் புகன்று
மெய்யு மானமு மேன்மையு மொரீஇத்
தம்மைத் தேறி முன்னேயோர் கொடுப்ப
நன்மனைக் கிழத்தி யாகி யந்நிலைச்
† சாவுழிச் சாஅந் தகைமைய ளாயினு
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோ னொருத்தி யுண்டிவேட் டிருப்ப
வெள்ளுக் கெண்ணெய் போலத்தள் ளாது
பொருளி னளவையிற் போகம்விற் றுழுகு
மருளின் மடந்தைய ராகந் தோய்ந்து
மாற்றல்செல் லாது வேற்றோர் மனைவயிற்
கற்புடை மடந்தையர் பொற்புநனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியு
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
மிச்சையிற் படைத்த வெவ்வேறு ‡ காட்சியி
னகமலர்ந் தீவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங் குதவுத லின்றி
நாளு நாளு நாள்பல கழித்தவர்
தாளி னாற்றலுந் தவிர்த்துக் கேளிகழ்ந்
திகழும் பரமு மில்லை யென்று

† சார்வுழிச் சாருந் என்றும், ‡ காட்சி, யகனமர்ந் தீவார் போலவஃதா அன்று, முகனமர்ந் தினிது மொழிந்து வாங்கித், தகவின்றி நாளு நாளுநாள் பலகுறித், தவர்தாளி னாற்றலுந் தவிர்ந்து கேளிகந் என்றும்பாடமுண்டு.

பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னி னனையதஞ் செல்வத்தை விரும்பித்
தம்மையு மொருவ ராக வுன்னு
மேனையோர் வாழும் வாழ்க்கையு நனைமலர்ந்
தியோசனை கமழு முற்பல வாவியிற்
பாசடைப் பரப்பிற் பானிற வன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியு
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக
† பத்தர்க் கெய்ப்பில் வைப்பென வுதவு
முத்தித் தாள மூவா முதல்வநின்
றிருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களு மனைவியு மொக்கலுந் திருவும்
பொருளென நினையாதுன் னருளி னைநினை
திந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தன ரொதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவண
மறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடொன் றுதவுழி யெடுத்தாங்
கிடுவோ ருளரெனி னிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி
யோவாத் தகவி னரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயி ரனைத்தையும் பார்க்குஞ்
செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்க வுற்றநா யேற்குக்
குளப்படி நீரு மளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியு ‡ மிருவகைப் பொருளு
மொப்பினு மொவ்வாத் துப்பிற் றுதலி
னின்சி ரடியார் தஞ்சி ரடியார்க்
கடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
காற்றலை யேவவென் னுய்த்தலை யேற்றுக்
கண்டது காணி னல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே. 6

† பத்தர்க் கென்று மெய்ப்பிணி லுதவு என்றும், ‡ மிருவயிற் பேதமும் என்றும் பாடமுண்டு.

### திருவாசகம்.

கோள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறுமலர்க் கொன்றையா
னள்ளுங் கீழுளு மேலுளு மியாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே. 7

கண்டது செய்து கருணைமட் டுப்பருகிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக் கூவித்தொண்டு
கொண்டெனெந் தாய்களை யாய்களை யாய குதுகுதுப்பே. 8

### தத்துவசித்தி.

வைய நீபொரு ணீமதி நீயெனின்
† மெய்யி னுவது வேறுகைம் மாறிலை
யைய நின்கழல் சேரடி மைத்தொழில்
செய்யு மாறருள் தேசுடை வள்ளலே. 9

† மெய்ய என்றும் பாடமுண்டு.

### அற்புதத்திருவந்தாதி.

கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனே
† லண்டந் தரினு மதுவேண்டேன்—‡ முண்டஞ்சேர்
விண்ணுளுந் திங்களாய் மிக்குலக மேழினுக்குங்
கண்ணுளா வீதென் கருத்து. 10

† லண்டம் பெறினு என்றும், ‡ றுண்டஞ்சேர் என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்க டன்னடி யேனையுந் தாங்குத
லென்க டன்பணி செய்து கிடப்பதே. 11

ஏவல்விரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2540.

## 2. ஏவற்சிறப்பு.

### வினாவிளக்கம்.

அடியராரமு தடியருக் கெளியவ னரியநற் சொரூபன்றன்
படியிலாதநற் பதங்களுக் கேவலைப் பத்தர்கள் விரும்பித்தா [ள
மொடிவிலாவகை யுரைசெய்த வகையென வுரைத்தவே வலினுள்
முடிவிலாதிடு பெருமையு முரைசெய்வர் † முனிவற வதுகேளாய்.

† முனிவர என்றும் பாடமுண்டு.

### அதிக்கிருதாமிர்தம்.

* தருமமோடு தவம்பல வேள்விசெய்
கருமமோடுறு பல்கலைக் கல்வியும்
வருமொர் மாத்திரை வள்ளலுக் கேவல்செய்
பரமர் வேண்டுவ ரோவிந்தப் பாழ்களே. 2

* யோக மெட்டுட னெண்குநற் சித்தியு
மேகு நன்கதி யோடெண் குணங்களு
மாகு மோர்கண மண்டனுக் கேவல்செய்
பாகர் வேண்டுவ ரோவிந்தப் பாழ்களே. 3

* கால வஞ்சக முங்காய சித்தியுஞ்
சாலுஞ் சத்திமை யுந்தாது விச்சையு
மேல வந்தெனை யாண்டவ னேவல்செய்
பாலர் வேண்டுவ ரோவிந்தப் பாழ்களே. 4

* சவலை வாதமுஞ் சாற்றிய தர்க்கமுங்
கவலை நூல்களுங் கற்பித வேடமு
மவல ஞானமு மாண்டவ னேவல்செய்
பவரும் வேண்டுவ ரோவிந்தப் பாழ்களே. 5

* சத்த நூற்பல கற்குஞ் சமுக்கது
மத்தி னுள்ள தாமகங் காரமு
முத்த னார்கழற் கேவன் முயன்றிடும்
பத்தர் பாலுமுண் டோவிந்தப் பாழ்களே. 6

### அநுபவசாரம்.

* ஏவ லால்வரு மெண்வகைச் சித்தியு
மோவில் செல்வமு † மொன்றுமெய்க் கல்வியுந்
தாவில் வீடதுந் தானெனை யாண்டவ
னேவ லாலிதற் கொப்பிலை யில்லையே. 7

† மோய்விலாக் என்றும் பாடமுண்டு.

* பழுதி லேவல்செய் பாலன் மிசைச்செலும்
வழுவில் காலனு மாரண முற்றன
னழிவி லாவம லன்கழற் கேமுய
லொழிவி லேவலுக் கொப்பிலை யில்லையே. 8

அநுபூதிநிலைமை.

* இறைவ னுக்குறு மேவலி னொலொரு
சிறுவ னுத்திகழ் மேருவ தாயிடு
மறைகண் மற்றரி தென்பவற் றுள்ளெலா
மறையு மேவ லரும்பொரு ளென்னுமால். 9

பூரணப்பிரகாசம்.

* இருகையு மெடுத்து நின்றங் கெழின்மறை யிசைத்த தொன்றே
பொருவிலா கமபு ராண முதலெலாம் புகன்ற தொன்றே
யரியய னமர ரெல்லா மறுதிசெய் தற்ற தொன்றே
யருபர னேவ றன்மே லரும்பொரு ளில்லை யென்றே. 10

சொரூபானந்தநிலயம்.

* சூரவ னூர்கழற் குரைமனங் காயமுங் கோதற வொருமித்தே
யிரவி னோடுறு பகலுமன் புடனுகர் தியற்றிசெய் திடுமேவற்
பெருமை நான்மறை பெருகிய வாகம மிருதிகண் முதலெல்லா
மொருமை யாகநின் றோதுத லரிதென வோதிடு மதுதானே. 11

திருவாசகம்.

பாட்செய் விளாவிப் பயனிலியாய்த் திரிவேற்குக்
கீட்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையா
லாட்செய் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. 12

கோம்மை வரிமுலைக் கொம்பனையாள் பங்கனுக்குச்
செம்மை மனத்தாற் றிருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கு
மம்மை குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே. 13

திருவாய்மொழி.

கண்டேன் கமல மலர்ப்பாதங் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையா யினவெல்லாந்
தொண்டேசெய் தென்றுந் தொழுது வழியொழுகப்
பண்டே பரமன் பணித்த பணிவகையே. 14

ஏவற்சிறப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2554.

# 22. அன்பியற் பஷண.

## 1. அன்பினைவேண்டல்.

### வினாவிளக்கம்.

ஏவலின் பெருமை யெல்லா மெழில்பெற விசைத்த வன்ப
ரோவில்சீ ரருளா னும்பர்க் கரியவ னுடைய பாத
மேவிடு மன்பு வேண்டி விதிர்விதிர்த் துருகிக் கண்க
ளோவலி லருவி யாய்நின் றுரைப்பர்க ளுரைக்கு மாகேள். 1

### ஞானசூளாமணி.

* பாருளார் விசும்பி னுள்ளார் பாதாளத் துள்ளா ரெல்லாஞ்
சாருமா றறியா துன்னைத் தாந்தடு மாற வென்னைப்
பாருளே வினவி வந்தாள் பரமநின் கழல்கட் கன்பு
கூருமா விரும்பு வாருங் குறிப்பரோ பிறிது மொன்றை. 2

### அருணெறிவிளக்கம்.

* அருந்துயர்ப் பிறப்பே யாக வரியவீ டதுவே யாகப் [டேன்
பொருந்துமற் றவற்றி னாமா காதெனும் பொருண்மை வேண்
றிருந்துநற் கழல்கட் கன்பு தினந்தினம் வளர்ந்து ளோங்க
வருந்தவர்க் கரசே நாயேற் கருளிட வேண்டும் வேண்டும். 3

* அண்ணலே வருந்து கின்றே னார்வமோ பெரிதெ னுள்ளத் [ன்
தெண்ணமு மிதுவே யன்றி யிடையொரு பொருளும் வேண்டே
கண்ணிய வதுவே தென்னிற் கருதரு கழல்கட் கன்பே
யுண்ணெகிழ்ந் துருகி யோவா தோங்கிட வேண்டும் வேண்டும். 4

### போதரத்நாகரம்.

* சித்த னேயுனை யென்று மிரப்பனான் றேசி காவுனை யென்று மிரப்பனா, னித்த னேயுனை யென்று மிரப்பனா னின்மலாவுனை யென்று மிரப்பனான், சுத்த னேயுனை யென்று மிரப்பனான் சொரூப னேயுனை யென்று மிரப்பனா, னெத்தி னாலுமெப் போது மிரப்பனா னெம்பி ரான்கழற் கெல்லையி லன்பதே. 5

### போதாமிர்தம்.

* அண்ட முண்ட வருட்சொரூ பாவுனைக்
கண்டு கண்டு களித்திடு கின்றவத்
தொண்டர் தந்தொலை யாதநல் லன்பினை
யண்ட விங்கடி யேன்பெற வேண்டுமே. 6

திருவாசகம்.

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்ப ருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. 7

நாடகத் தாலுன் னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறு வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. 8

ஐயநின்ன தல்லதில்லை மற்றோர்பற்று வஞ்சனேன்
பொய்கலந்த தல்லதில்லை பொய்ம்மையேனெ னெம்பிரான்
மைகலந்த கண்ணிபங்க வந்துநின் கழற்கணே
மெய்கலந்த வன்பரன் பெனக்குமாக வேண்டுமே. 9

வேண்டும் வேண்டு மெய்யடியா ருள்ளே விரும்பி யெனை
யருளா, லாண்டா யடியே னிடர்களைந்த வமுதே யருமா மணி
முத்தே, தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்ட னேற்கு
முண்டாங்கொல், வேண்டா தொன்றும் வேண்டாது மிக்க வன்பே
மேவுதலே. 10

போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமு
மேகநின் கழலிணை யலாதி லேனெ னெம்பிரா
னாகம் விண்டு கம்பம்வந்து குஞ்சியஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்கடாரை யாறதாக வையனே. 11

அன்பினைவேண்டல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2565.

## 2. பத்திமான்மியம்.

வினாவிளக்கம்.

அன்பினை வேண்டி நின்றங் கண்ணலார் கழல்க ணோக்கி
யென்பெலா முருகி நீரா யிசைந்தவா றதுபோ லின்ன
மன்பதின் பெருமை யெல்லா மகங்குழைந் தார்வ மிக்கு
நன்பெரு மன்பர் கூறு நலமது நவிலு வன்கேள். 1

அருணேறிவிளக்கம்.

அன்பி னல்லற † மன்பி னன்பொரு
ளன்பி லின்ப மருந்தவ மன்பினு
லன்பின் ஞானமு முத்தியு மன்பலால்
வன்ப தாமறந் தானுமங் காகுமோ. 2

† மன்பினு லின்னரு என்றும் பாடமுண்டு.

அன்பி ‡ ஞற்கரு மந்தவம் யோகமு
மன்பி ஞற்செயு மைவகை வேள்வியு
மன்பி $ ஞன்முழு தாவது முத்தியு
மன்பி ஞலென் றறைந்திட வேண்டுமோ. 3

‡ ஞற்றரு என்றும், $ ஞன்முழு தாதலின் என்றும் பாடமுண்டு.

அனுபவசாரம்.

அன்பி லாதநல் லறங்களு மைவகை வேள்வியும் பிணமேயா, மன்பில் வாய்மையுந்*தானமு மொழுக்கமும் விரதமும் பிணமே † யாந், துன்பின் ஞானமுந் துகளிலெச் சமயமுஞ் சொல்லிடிற் பிணமேயா, மன்பி லாதிய லறம்பொரு ளின்பம்வீ டவற்றினுக் குயிருண்டோ. 4

† யா, மன்பின் ஞானமு மன்பிலெச் சமயமு மறைந்திடிற் என்றும் பாடமுண்டு.

அனுபூதிநிலைமை.

அன்பு ‡ பத்திநல் லாதர மார்வமங் கருத்தியோ டுறுநேய
மின்ப மார்விருப் புடனெழிற் காதலு மிராகமோ டெலையில்லாத்
துன்பி லாசையு மெனவிவை யீசனற் றுணேக்கழ லுறுபத்திக்
கென்ப தாம்பரி யாயநற் பெயரென விசைத்தனர் பெரியோரே.

‡ பற்றுநல் என்றும் பாடமுண்டு.

அனுபவாமிர்தம்.

* பத்தி தன்வடி வேதெனிற் பரம்பரன் படியிலா வடிவத்தை
மெய்த்த வன்பர்கண் டனுபவிப் பதுவலால் விளம்பிட விரகில்லா
வத்தன் மைத்தென வடியவ ருளத்தெழு மனுபவ வுருவத்தை
யித்தன் மைத்தென வியம்புத லரிதென வியம்பின மறையெல்
லாம். 6

அனுபூதிநிலயம்.

* மறைக ளீறுவா சாமகோ சரமென மாலயன் மயலெய்த
வறியு மாறெருரு வரும்விர கறநிக ழரியவ னவனன்பிற்
செறியு மாசற வுளவிருள் கடியுமத் திகழுளங் குடிகொண்டே
யுறையு மாதலி னன்பினன் பெருமையை யுணர்பவ ரெவரந்தோ.

மெய்ஞ்ஞானநிலயம்.

* முழுதுந் தன்னையே தழுவிட நழுவிடு மூலமா மிறைவந்து,பழுதொன் றின்றிய பத்திநன் வலையினிற் படுமெனு மதுகண்டா, லெழுதுங் கல்வியு மிலங்குநற் றவங்களும் யோகஞா னமுமெங்கே, யழிவொன் றின்றிய வன்பினன் பெருமையை யறையவு முடியாதே. 8

சிவானந்தநிலயம்.

பத்தி யாகுமெய்க் கடலிடை யெழுதரு மமுதுநற் பரமென்று, மெய்த்த பத்திநன் பாலிடை யெழுதரும் வெண்ணெயாமவனென்று, முய்த்த பத்திநல் லுளத்தினர்க் கடியர்போ லுழிதரு மிறையென்றுஞ், சுத்த ஞானிகண் மொழிவர்க டௌறச் சுருதியுஞ் சொலுந்தானே. 9

போதரத்னகரம்.

அன்ப தின்றியே யறைந்தநற் சாதன முழுதுடை யவர்கட்கு
மின்ப நல்லிறை வெளிப்படு கின்றில னிசைத்தவை முழுதின்றி
யன்ப தொன்றையு முடையவர்க் கவன்வெளிப் பட்டவ ரிதஞ்செய்தா, லன்பி னன்பெரு மைத்திற மொருவரா லறைந்திடு மளவன்றே. 10

சோநபாநந்தநிலயம்.

அன்ப தொன்றுமற் றருஞ்சிவ மொன்றுமென் றறிபவ ரறிவில்லா
ரன்ப தேசிவ மாயிருந் தமையறி பவரிறை யருள்பெற்றார் [லா
துன்ப வன்பவந் † துகளில்வீ டெனவிடை சொல்லிடு மவையெல்
மன்ப தாமமு தினைமுழுந் திடவுணு வயலவ ருரைதானே. 11

† துவங்களில் வீடெனச் என்றும் பாடமுண்டு.

பேரொளிவிளக்கம்.

நாடி னொளிமுற்று மாவன நாத மறையுச்சி சேர்வன
சூடின் மகுடத்தை நேர்வன தூய்நெறி வளர்க்கு நீரன
கூடி னமுதத்தை யீவன கூற வருமொப்பி லாதன
பாடி னளவிற் படாதன பாவை பரபத்தி பாதமே. 12

சித்தத் திருவைச் சிவயோ கினியைத் திகிரிப் படையாளைத்-திகழ்நா மகளைத் தெரிவார் தெளிவைத் திசைசூழ் நிலமாதைச், சத்திச் சமைவைத் தவமா னவளைச் சமயங் களின்வேரைத்-தனிநா யகியைச் சயமா மகளைச் ‡ சகதண் டத்தாயைச்,சுத்திச் சுடரைச் சுருதிக் குயிலைத் தொழுவார் பெருவாழ்வைத்-துறவித் துணையைப் பிறவிப் பகையைத் தொலையா வமுதத்தைப்,பத்திப் பயனைப் பரபத் தியையெப் பதமுந் தருவாளைப்-பரவுந் தொழிலார் படிறென் றறியார் பவமுங் குறுகாரே. 13

‡ சதகண் டத்தாயை என்றும் பாடமுண்டு.

திருக்கடைக்காப்பு.

சித்தந் தெளிவீர்காள், ளத்த ஞருரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. 14

பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப் - பாலேபோ காமேகாவாப் பகையறு வகைநினையா, முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்-மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச், சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்-சேர்வார்தாமே தாஞகச் செயுமவ னுறையுமிடங், கத்திட்டோர் சட்டங்கம் கலந்திலங்கு நற்பொருள் - காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. 15

தேவாரம்.

அளைவாயி லரவணைசத்த வழகன் றன்னை யாதரிக்கு மடியவர்கட் கன்பே யென்றும், விளைவானை மெய்ஞ்ஞானப் பொருளா ஞனை வித்தகனை யெத்தனையும் பத்தர் பத்திக், குளைவானை யல்லாதார்க் குளையா தானை யுலப்பிலியை யுட்புக்கென் மனப்ப சாசு, கிளைவானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே. 16

திருவாசகம்.

பத்தி வலையிற் படுவோன் காண்க. 17

முத்திக் குழன்று முனிவர்குழா நனிவாட
வத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலிற் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 18

திருவாய்மொழி.

பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்புநம் மரும்பெற லடிகண்
மத்துறு கடைவெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்
டெத்திற முரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளியே. 19

பத்திமான்மியம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2585.

# 25. அன்புப் பணை.

## 1. அன்பர் கூட்டம்.

### வினாவிளக்கம்.

இணையி லாதவ னிமையவர்க் கரியவ னேழைகட் கெளிவந் தான், புணைய தாகிய பொற்கழற் குற்றிடும் பொய்யிலன் பதந் தன்னின், றுணையி லாதநற் பெருமையைத் துதிசெயத் தொண்ட ரன் பொடுநின்றே, யணைவ தாகிய வன்பர்தங் கூட்டமு மறைகுவ ரதுகேளாய். 1

### போதாநந்தகரம்.

* மபல கற்றிடு மதிநல மளித்திடு மகிழ்வொடு மடியென்னுஞ்
செயல றுத்திடுஞ் சிவமது திகழ்த்திடுந் திகழ்தரு தெளிவாகி
யயல றுத்திடு மகமித முதல்வரு மடையவு மொருநாமா
மியலி சைத்திடு மிறைவன தடியவ ரெழின்மிகு திரடானே. 2

* ஆல மார்தரும் பிறவியை யறுத்திடு மன்பொடு பகையில்லாச்
சீல மேதருஞ் சினமுதல் களைதருஞ் சென்றடை பவர்க்கெல்லா
மூல மாகிய வொருபொருண் முழுத்திடு முனிவிலா வருளாய
கோல மார்தரு குருபர னடியவர் குலவிய திரடானே. 3

* ஓது நான்மறைப் பொருண்முடி வினையொரு மொழியினி லுரைசெய்யுங், காதும் வாதநற் கவலையெ லாங்கெடக் கருணையே மிகநல்கும், பேத மாமயற் பேரிருள் கழிதரப் பேரொளி † பெரிதோங்க, நாத னுய வந்தநற் சொரூபனல் லடியவர் திரடானே. 4

† பெரிதோங்கு என்றும் பாடமுண்டு.

### போதாமிர்தம்.

* ஆதி யேயென வலறுவர் விழுவ ரழன்மெழு கெனவுருகிடுவர்,பேதை யேனைவந் தாண்டதெ னென்பர் பித்தனே யென்றுபித் தாவர், நாத நாதவென் றகமகிழ்ந் திடுவர் நக்குநக் கேங்கிநின் றழுவ, ரோது மாறதோ வொளிமிகு சொரூப னுைப்பிலா வடியவரியல்பே. 5

அருணைஇறிவிளக்கம்.

* கருத்தெலாங்கரைந் துருகிநைந் திடுவார் கழலிணை கண்டு கண் டுகப்பார், வருத்தமெய் திடுவார் வள்ளலே யென்று மகிழு வார் புகழுவார் வாழ்வார், சிரித்துநின் றழுவார் செயலுரை யிறந்து சித்திரம் போலவே நிற்பார், திருத்தியென் றனையாள் செய்யநற் சொரூபன் றிகழுநல் லடியவர் திறனே. 6

அதிக்கிருதாமிர்தம்.

* தோத்திரப் பொருளைச் சொல்லுவார் கேட்பார் சுடருநற் கழல்களை முன்னே, நேத்திய வுரைக ளுடனிசைத் திடுவார்†ரெஃகிய பொருளைமெச் சிடுவா, ரோர்த்துள மகிழா வொருவருக் கொருவ ருறவுறத் தழுவுவா ருவப்பார், பார்த்துவாழ்ந் திடுவார் பரமநற் சொரூபன் பழவடி யார்திறட் பரிசே. 7

† ரெய்திய என்றும் பாடமுண்டு.

ஞானசூளாமணி.

* எவ்வகைப் பொருளு மிறைவனற் கழலா யிருந்தவா றென் னென வியப்பார், கைவகைப் பொருளா யெவர்க்குமொத் திருப் பக்† கண்டிடா மையினெனக் கலுழ்வார், தெய்வநற் கழல்கள் செய்யும்வல் லபத்தைத் தெரியுமோ தானெனத் திகைப்பா, ரெவ்வகைச் செயலு மிழந்திருந் திடுவா ரிதுவிறை யடியவர்க் கியல்பே. 8

† கண்டிடா தென்னெனக் என்றும் பாடமுண்டு.

திருவாசகம்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. 9

இன்னிசை வீணைய ரியாழின ரொருபா லிருக்கொடு தோத் திர மியம்பின ரொருபாற்,றுன்னிய பிணைமலர்க் கையின ரொரு பாற் றொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற், சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற் றிருப்பெருந் துறையுறை சிவபெரு மானே, யென்னையு மாண்டுகொண் டின்னருள் புரியு மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 10

அன்பர்கூட்டம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2595.

# 2. அன்பரிற்கூடவிரும்பல்.

### வினாவிளக்கம்.

ஆர்வமுற் றறிஞ ரன்பர்தங் கூட்டத் தருணல *முரைத்தவா றதுபோற், சாருதற் கரிய தலைவனற் சொரூபன் சரணபங் கயங்களே நோக்கி, யாருமற் றறியா வருணலத் திரளா மடியரிற் கூடிட விரும்பிக், கூறுமற் றடியார் கூறிடும் பரிசுங் கோதறக் கூறுவ னதுகேள். 1

### போதரத்னகரம்.

* மமதை யோடகங் கார வன்பிணியு மதமு மானமு மையலுங் கழிய, வமைவ தேமிக வாறுநெஞ் சினறு யறிவி லேனும் வந் தடையு நாளென்றோ, கமல நான்முகன் கண்ணனோ டமரர் கருது மாரறி யாவண நின்ற, வமல னேயுன தாரருட் கடல்சேர்ந் தாரு மன்பர்தம் மழகுறுந் திரளே. 2

* விடய வேட்கையும் வெகுளியு மதியா மேலெ ழுச்சியு மெனுமிவை யொழிய, வடையு மன்பினோ டாறுநெஞ் சினறு யாத னேனும்வந் தடையுநா ளென்றோ, குடிய தாகவந் தடிமை கொண் டருளுங் குருப ராவருட் குணப்பெருஞ் சொரூபா,தடையி லாவகை யுனதரு ளடியார் சரண பங்கயந் தன்னினன் குறவே. 3

* செருக்குடன் சினமுஞ் செற்றமு மிகலுந் தீச்சொலுந் தீச்செயன் முழுதுந், திருக்குறும் பிறப்பு மிறப்புமூப் பொழியச் சிறியனே னடையுநா ளென்றோ, கருக்குழி யினிநான் கண்டிடா வண்ணங் கழலிணை தந்தகற் பகமே,யுருக்கிடு முனதா ளுடையநல் லடியா ரொண்கழ னன்குவந் துறவே. 4

### போதாமிர்தம்.

* கனவு தன்னினு மிமையவ ரின்னங் கண்டி டாதநின் கழலிணைக் கமலம், வினவி வந்தெனக் களித்தனை யளித்தால் விமல நானரு மையுமறி குவனோ, வனைய நின்பெரு மரியநல் லருடா னங்க ணத்தமிழ் தாயிடா வண்ணம், புனையு முன்பழ வடியவர் திரளுட் புலைய னேன்பொருந் திடும்வண மருளே. 5

அருணைறிவிளக்கம்.

* அரியதோ வுலகம் படைத்தளித் தழிக்கு மமலவுன் விளை யாட்டு விச்சை, யரியதோ வுன்னு ளகிலமு மடக்கி யணுவுணீ யடங்கரு விச்சை, யரியதோ வயன்மா ளிறப்பவென் றன்னை யருட்கணுன் முழுந்தநோக் கிச்சை, யரியதுன் னடியா ரடி யெனக் கருளு மாரிய விச்சையே யன்றோ. 6

அதிக்கிருதாமிர்தம்.

* எல்லையி லருளால் வந்திங் கியாவரு நிற்க வென்னைக்
கல்லினைக் கனிசெய் தாண்ட கடவுளே கருணை மூர்த்தி
சொல்லினுக் கரிய தூய்ய சொரூபவா ரமுதே யுன்ற
னல்லடி யவர்கள் கூட்ட நாயினேற் கருள வேண்டும். 7

* என்றுமோர் தன்மைத் தாகு மீறிலா வின்ப மாமுன்
பொன்றிகழ் கமல பாதம் புரையற நிறைந்தெ னுள்ளந்
துன்றியே யிருந்தக் காலுந் தொண்டர்தந் திரளு ளன்றி
யென்றுமின் சுவைதா ராதா லெனக்கதே யருள வேண்டும். 8

திருவாசகம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேயுன் பழவடி யார்திரள் வான்குழுவிற்
கெழுமுத லேயரு டந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன்பொன்னம் பலத்தரசே.

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்ப னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
வீசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. 11

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப், பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக் கூத்தா, மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வா வென்றுன், றெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. 12

செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேநின் பழவடி யார்கூட்ட
மடியேன் காண வாசைப் பட்டேன் கண்டா யம்மானே. 13

திருவாய்மொழி.

களிப்புங் கவர்வு மற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்
றொளிக்கொண்ட சோதியு மாயுடன் கூடுவ தென்றுகொலோ
துளிக்கின்ற வானிந் நிலஞ்சுட ராழிசங் கேந்திமுத்தி
யளிக்கின்ற மாயப் பிரானடி யார்கள் குழாங்களையே. 14

நெடுமாற் கடிமை செய்வேன்போ லவனைக் கருத வஞ்சித்துத்
தடுமாற் றற்ற தீக்கதிகண் முற்றுந் தவிர்ந்த சதுர்நினைந்தாற்
கொடுமா வினையே னவனடியா ரடியே கூடு மதுவல்லால்
விடுமா றென்ப தென்னந்தோ வியன்மூ வுலகும் பெறினும்மே. 15

தனிமாப் புகழே யெஞ்ஞான்று நிற்கும் படியாற் றான்றோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தா யுலக மூன்று முளைப்பித்த
தனிமாத் தெய்வத் தளிரடிக்கீழ்ப் புகுத லன்றி யவனடியார்
நனிமாக் கலவி யின்பமே நாளும் வாய்க்க நங்கட்கே. 16

வாய்க்கத் தமியேற் கூழிதோ றூழி யூழி மாகாயம்
பூக்கொண் மேனி நான்குதோட் பொன்னா ழிக்கை யென்னம்மா
னீக்க மில்லா வடியார்தம் மடியா ரடியா ரடியாரெங்
கோக்க ளவர்க்கே குடிகளாய்ச் செல்லு நல்ல கோட்பாடே. 17

தத்துவமாலை.

நெக்குள்ள மூற்றுமணற் போலே நெகிழ்ந்துடனு
முக்கென்பு முள்ளு ளுடைந்துருகு—மெய்க்குன்றி
ளுசற்ற வன்ப ரடியா ரடிகூடற்
கேசற்றே னெங்குற்றே னெய்த்து. 18

அன்பரிற்கூடவிரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2613.

## 3. அன்பரிற்கூடிய வியப்பு.

### வினாவிளக்கம்.

அமல ஞானிக ளடியரிற் கூடிட விரும்பி
விமல னார்தமை வேண்டிநின் றுரைத்தவா றதுபோ
னிமல வன்பரு ணிலையுறக் கூடிய வியப்பு
மமல வன்பர்க ளறைகுவ ரதனையுங் கேளாய். 1

### போதாமிர்தம்.

* யாவ ராலுமொன் றறிவரி யமலனென் போல்வர்
தாவ வென்றெனை யாண்டவற் புதமுமன் றியிலை
யோவி லாததன் னொளியுரு வடியரு ளடியேன்
மேவி வாழுமா செய்தவித் தகமலால் வியவேன். 2

### ஞானசூளாமணி.

* நாளுந் தேடியு நான்மறை நாடிட வரிய
வாளுங் கோலம்வந் தாண்டவற் புதமுமன் றியிலே
கேளுங் கேளுமிவ் வதிசயங் கீழ்மேலு முண்டோ
நாளுந் தன்னடி யருளெனைக் கூட்டிய நலமே. 3

* கேளுங் கோள்புவி யுள்ளவர் விசும்புளோர் கீழோர்
தாளுந் தோளுமாய்ச் சதுமறைக் கரியவன் சகத்தே
யாளுங் கோலம்வந் † தாண்டது மன்றியே யந்தோ
மீளுந் தன்னடி யருளெனைக் கூட்டிய வியப்பே. 4

† தாண்டவற் புதமுமன் றியிலே என்றும் பாடமுண்டு.

### போதரத்னகரம்.

* மறைக ளுக்குநல் வானவ ருக்குமண் ணுலகி
னுறைப வர்க்குமற் றுலகிலுள் ளவர்க்குமங் கறைகோ
விறையு மோர்வறத் தமதுளத் தொளித்தநல் விறைவர்
தறிவி லேனையாண் டடியரிற் கூட்டின னன்றே. 5

### அனுபவசித்தி.

* கல்ல தாகுமென் னுளங்கனிந் தொழுகிடுங் கருதரு † கழல் கட்கே, யெல்லை தானறு மென்பெலா முருகிடுங் கண்கள்கார் மழைபோலுஞ், சொல்லு மாறல வெழுதரு மதிசயந் துகளுறு கடையேனுஞ், செல்வ னாரடி யவர்நடு வெய்திடச் செய்திடு மிய ருனே. 6

† கழல்கட்கன், பெல்லை என்றும் பாடமுண்டு.

### போதாத்னுகாம்.

* ஓதி டாமலெக் கலைகளின் பொருள்களு முதித்திடு மூல கெல்லாம், போத மாயெழும் போதக விரகினுட் பங்களும் புரிந் தோங்கு, நீதி வாய்மையோ டுறுகமை நிலவிய வியவிசை நிகழுந் தா, ஞதி யாரடி யாரவை கூடிய வதிசய மதுவந்தோ. 7

* நித்த ஞாரு ளியநெறி தெரிவது நிமலாற் கழலென்னுஞ்
சுத்த வாரமு தூறுசுவை தருவதுஞ் சொருபனூர் கழற்கன்பாம்
பித்த தாகிய பெருநலம் விளைவதும் பேரெழி லடியார்பா
லத்தி ஞலடி யவரவை கூடிய வதிசய மளவன்றே. 8

### திருவாசகம்.

வைப்பு மாடென்று மாணிக்கத் தொளியென்று மனத்திடை யுருகாதே, செப்பு நேர்முலை மடவா ரியர்தங்க டிறத்திடை நை வேனை, யொப்பி லாதன வுவமணி லிறந்தன வொண்மலர்த் திருப் பாதத், தப்ப னண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே.

நீக்கி முன்னெனைத் தன்னெடு நிலாவகை குரம்பையிற் புகப் பெய்து, நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத், தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி, யாக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. 10

உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம் போற், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு ளப்பொருள் பாராதே, பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொற் றெளியாமே, யத்த னண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. 11

நீதி யாவன யாவையு நினைகிலே னினைப்பவ ரொடுங்கூடே
னேத மேபிறந் திறந்துழல் வேன்றனை யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர னிரந்தா மாய்நின்ற
வாதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய வதிசயங் கண்டாமே. 12

### திருவாய்மொழி.

வியன்மூ வுலகும் பெறினும்போய்த் தானே தானே யானாலும்
புயன்மே கம்போற் றிருமேனி யம்மான் புனைபூங் கழலடிக்கீழ்ச்
சயமே யடிமை தலைநின்றார் திருத்தாள் வணங்கி யிம்மையே
பயமே யின்ப மியான்பெற்ற துறுமோ பாவி யேனுக்கே. 13

உறுமோ பாவி யேனுக்கிவ் வுலக மூன்று முடனிறையச்
சிறுமா மேனி நிமிர்த்தவெஞ் செந்தாமரைக்கட் டிருக்குறள
னறுமா விரைநாண் மலரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார்
சிறுமா மனித ராயென்னை யாண்டா ரிங்கே தெரியவே. 14

குறுகா நீளா விறுதி கூடாவென்னை யூழி
சிறுகா பெருகா வளவி லின்பஞ்சேர்ந் தாலு
மறுகா லின்றி மாயோ னுனக்கேயா ளாகுஞ்
சிறுகா லத்தை யுறுமோ வந்தோ தெரியவே. 15

திருவெண்பாவந்தாதி.

நமக்குடைய நாயனார் செய்தநல ஞாலத்
தெமக்கியம்ப லாகு மியல்போ—தமக்கன்
படுத்தா ரடியா ரடியாரைப் போற்றக்
கொடுத்தா ரெனையடிமை கொண்டு. 16

பெரியதிருமொழி.

பண்டேனமாயுலகை யன்றிடந்த பண்பாளா வென்று நின்று,
தொண்டானேன் றிருவடியே துணையல்லாற் றுணையிலேன்
சொல்லுகின்றேன், வண்டேந்து மலர்ப்புறவின் வண்சேறை
யெம்பெருமா னடியார் கூட்டங், கண்டேனுக் கிதுகாணீ ரென்
னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்கு மாறே. 17

தத்துவமாலை.

இனியோர் குறையுமிலோ மெல்லாநாம் பெற்றோந்
துனியார் பவமுந் தொலைந்தோ—நனியாருஞ்
சித்தர்க்குச் செய்ய சிவப்பிரகா சன்றிருத்தாட்
பத்தர்க்காட் பட்டோம் பணிந்து. 18

மிக்காரொப் பாருண்டோ வேறாக வென்றனக்குத்
திக்கார் சிவப்பிரகா சன்றன்சீ—ரெக்காலும்
பாடப்பெற் றேன்பரிந்து பத்தர்கணத் துள்ளேபுக்
காடப்பெற் றேன்பெற்றா ரார். 19

அன்பரிற்கூடியவியப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2632.

## 4. அன்பர்தஞ்சிறப்பு.

### வினாவிளக்கம்.

அருளார் கூட்ட மதுவெய்தி யன்பால் வியந்தங் கறைந்தாற்போன்
மருளா மென்னை வலிந்தாண்ட வள்ள லார்தம் மலர்ப்பாதப்
பொருளே கொண்டு பொலிகின்ற பொய்யி லன்பர் சிறப்புந்தான்
றெருளா மன்பர் செப்புவரத் திறமு மறைவன் றிகழ்மைந்தா. 1

### அருணெறிவிளக்கம்.

* எப்பொருளு முள்ளாகப் பெரிய வாகி யிலங்கிடுமை பூதங்க ளவையு முள்ளாச், செப்பரிய மாயைபெரி ததுவுள் ளாகத் தெரிந்துணர்வாய் நீபெரிமை திகழு நின்னை, யொப்பரிய தன்னுளதாப் பெரிது நாம மோங்கடியீர் நாவுளது முறைவ தானு, லிப்பரிசு பெரியசின தடியார் தம்மி லிறைபெரிமை யெனுமதுவு மிசைவ தன்றே.

### முதுநீதப்பிரகாசம்.

* அன்று பஞ்சவர்க் கரியதூ துறலா லரிய பாண்டவர் தூத னென் பேரு, மொன்று பார்த்தனுக் கூருதேர்ப் பாகா யோது பார்த்தசா ரதியெனும் பேரு, மென்று மீசனுக் கெலையிலா மறைக ளிசைக்கு மாதலி னன்பர்தம் பெருமை, யொன்று மாமறை யோதுமா றறியா வோத வல்லவ ருலகினிங் கெவரே. 3

* மிகுதி கூறியங் கன்பனோ டவுணன் வெகுண்டு தூணினைத் தட்டியங் கொட்ட, வகமெ லாமகிழ்ந் தருகுமன் பனுக்கா யன்று தூணினி லாதிநற் பிரம, மொருமொ கென்றிட முழங்கியே தோன்ற விரைத லான்முக முடலம்வே றுருவாய்ச், சகம துய்ந் திடத் தோன்றலா லன்பர் தஞ்சிறப்பினைச் சாற்றுவா ரெவரே. 4

### சிவாநந்தநிலயம்.

* மாலு நான்முகற் கரியநற் பாதம் வழியெ லாங்குழி யாக வோ ரிரவுங், கோலு மன்பர்நற் றாதுமாய்ப் பாவை கோயில் சென்றுழந் திட்டது முன்னஞ்,சாலு சங்கிலிக் கொற்றியூ ரதனிற் சந்து செய்துழந் திட்டதுங் கண்டாற்,கோலு மன்பர்தங் குலவிய பெருமை கூற வல்லவர் குவலயத் தெவரே. 5

### மெய்ந்நெறி.

* அவமற மறைக ளெல்லா மருவமென் றுரைக்கு நீயே
புவியினி லுருவ தாகிப் புகுந்துறத் தேடி யெங்கு
நவமுறு மன்ப ருள்ள நாடியே வாழ்தி யென்றா
லவமறு மன்பர் மேன்மை யறிபவ ரெங்கே யெங்கே. 6

### மெய்ஞ்ஞானநிலயம்.

* நின்ற னன்பர்க ணினைந்ததே குறித்து நினைவின் முந்திநீ ரெடிதுசெய் திடலாற், றுன்று மன்பர்கள் சொன்னவா குறித்துத் துகளி லாவகை துணிந்துசெய் திடலா, லொன்று மன்பர்கள் செய்ததே தவமா வுகந்து கொண்டுநீ யொன்றிடு மியல்பா, லென்று மேவலிப் பரிசிறை ‡ யென்றா லன்பர் தஞ்சிறப் பென் பகர் வதுவே. 7

‡ யியன்றா என்றும் பாடமுண்டு.

### *அதிக்கிருதாமிர்தம்.

* அழிவிலாத் திருவு மளவிலா வலியு மளவிலாப் பெருமையு முடனே, முழுதுமாய்த் திகழு மூலமா மிறையை முழுந்தவே யன்பர்தா முடையா, ரழிவிலா விறைவற் காருளா ரென்போ மாத லா லன்பர்தம் பெருமை, யொழிவிலா விறைதா னறிகுத லல்லா லொழுகுத லன்றிவே றுண்டோ. 8

### போதாத்தனகரம்.

* கண்டிடக் கண்ணுங் கருதிட மனமுங் கழலிணை புகழ்ந் திட நாவு, மண்டனற் கழலைத் தழுவிடக் கையு மடியிணை சூட்டி டத் தலையும், வண்டெனக் கழற்றேன் மணமுணக் குமிழும் வண் புகழ் கேட்டிடச் செவியு, முண்டுமற் றன்பர்க் கவர்கடம் பெரு மை யுலகினி லுணரவல் லவரார். 9

### திருவந்தாதி.

வேதிய னார்சொரு பானந்த னாரடி யாரடிக்கீழ்ப்
பூதியி னாற்பிற விக்கொடு நோய்விட்டுப் போகுமென்றால்
வாதியர் நாவலங் காட்டி வடிக்கின்ற வார்த்தைகளா
லூதிய நாமறி கின்றிலங் காணு முலகத்திலே. 10

வனமே மருவியென் வார்குழல் வாணகை மான்விழியார்
தனமே மருவியென் னென்செய்வ தோதம்பி ரானைத்தங்கள்
மனமே மருவி யிருக்கவைப் பாரை வணங்கியவ
ரினமே மருவ † விருப்பமுண் டாகி னிதையத்திலே. 11

† விருப்பதுண் என்றும் பாடமுண்டு.

ஞானவிநோதன் கலம்பகம்.

கற்றவர்க ளாவாருங் கருத்துடைய ராவாருங் கருதிற் றெல்லாம்
பெற்றவர்க ளாவாரும் பிறந்தவர்க ளாவாரும் பீடு சேர்ந்த
நற்றவர்க ளாவாரு ஞானிகளா மாவாரு நன்மை யெல்லாந்
துற்றவர்க ளாவாருஞ் சொருபானந் தர்க்கடிமைத் தொழில்செய்
[வாரே. 12

திருக்கடைக்காப்பு.

வீதிபோக் காவன வினையை வீட்டுவன
வோதியோர்க் கப்படாப் பொருளையோர் விப்பன
தீதிறே வன்குடித் தேவதே வெய்திய
வாதியந் தம்மிலா வடிகள்வே டங்களே. 13

பொன்வண்ணத்தந்தாதி.

உலகா ளுறுவீர் தொழுமின்விண் ணாள்வீர் பணிமினித்தம்
பலகா முறுவீர் நினைமின் பரமனை யொன்றலுற்றீர்
நலகா மலரா லருச்சிமி னுணர கத்துநிற்கு
மலகா முறுவீ ரரனடி யாரை யலைமின்களே. 14

கைலைபாதிகாளத்திபாதி யந்தாதி.

பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றுஞ்
சிறப்புடைய ரென்றாலுஞ் சீசீ—யிறப்பிற்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி யாள்வா
ரடியாரைப் பேணா தவர். 15

அன்பர்தஞ்சிறப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2647.

## 5. அன்பர்திறத்தினறிகுறி.

வினாவிளக்கம்.

அன்பர்தம் மடியே முதன்முடி யளவு மழலுறு மெழுகென வுருகி, யின்பமா ரன்பர் சிறப்பிசைத் தாற்போ லெலையிலாக் காதன்மீ தூர, வென்பெலா முருகு மன்பர்தந் திறத்தங் கறிகுறி யிசைப்பரப் பரிசுந், துன்பெலா மகலத் துரிசற வறைவன் றுகளறக் கேட்டிடு மைந்தா. 1

### அருணோறிவிளக்கம்.

* அந்தண ரரசர் வணிகர்வே ளாள ரரிவைய ரிழிகுலத் துள்ளார், வந்தவில் லறத்தர் துறவினர் ‡ திகழு மாதவர் பாதக ரென்னுஞ், சிந்தனை வேண்டா திகழுநற் சொரூபன் றிருவடி சென்னியிற் சூடி, யந்தமில் பரமா யிருந்திடு மவர்க ளழகுறு மன்பரென் பவரே 2

‡ பழிக்கும் பாதகர் மாதவ என்றும் பாடமுண்டு.

### அனுபவசாரம்.

* செய்வன மறையார் மறைவன செய்யார் செகமெலா மழியினு மசையார், மெய்யல துரையார் மேவின பவங்கள் வெந்துவீழ்ந் திடவலால் விழியார், கைதவ மறியார் காதலர் பகைஞர்க் கருளலாற் கருதிட வறியா, ரையநற் சொரூப னடியிணைக் குரிய வழகுறு மன்பரென் பவரே. 3

* சாத்திரச் சடிலைத் தலைபறி யறியார் சகலவே தாகமப் பொருளை, வார்த்தையொன் றாலே மகிழ்தர வுறைவர் மதுரமாஞ் சிலமே மொழிவர், பார்த்தவப் பொழுதே பழவினை யழியப் பண்ணுவர் பயனில மொழியா,ரேத்துதற் கினிய விணையடிக் குரிய வெழின்மிகு மன்பரென் பவரே. 4

* சாதியுங் குலமுந் தருமமுந் தயவுஞ் சதுமறை முதற்கலை பலவு, மோதிய நலமு முடையரே யெனினு முண்மையை யுணர்ந்திறை கழற்கே, காதன்மீ தூருங் கருத்தில ராகிற் கருதுவர் புலையரிற் கடையே, யாதலி னிறைதா ளருள்பெறு மவரே யாம்வணங் கடிகளா மவரே. 5

### அனுபூதிநிலயம்.

* அறுவகைச் சமயத் தறையுமெய்ப் பொருளு மறுபத்து நான்குறற் கலையு, மறுவறப் பயின்று மாசறத் திகழு மதிஞரா மவர்களே யெனினுங், குறைவறத் தன்னைக் கொடுத்திடுங் குரவன் குரைகழல் புனைந்தவ ரன்றேற், பறையர்மற் றவரே பறையரே யெனினு மருளுடை யவர்பரம் பரரே. 6

### போதாமிர்தம்.

* வேதமோ டங்க மாகம புராண மிருதியே முதற்கலை பலவு, மோதியங் குணர்ந்தே யொழுக்கமும் வழுவா வுலைவிலாத் தவத்தின ரெனினுஞ், சோதிநற் சொரூபன் றுணைக்கழல் சூடித் துகளறத் தன்மையுணர்ந் திலரே, லாதர்மற் றவரே யறிவில ரேனு மருள்பெறி னவர்கண்மா தவரே. 7

* காலமே தகமுங் காயமே தகமுங் காலமூன் றையுமுணர்ந் துலகஞ், சாலவே தகமுஞ் சாபநல் லருளூந் தகமிக வுடையரே யெனினுஞ், சீலமார் சொரூபன் றிருவடி புனைந்து சிற்பரம் பொருளுணர்ந் திலரேன், ஞாலமார் † மூட ரவர்கணன் கிலரு மருள் பெறி னமர்களங் கவரே. 8

† மூக என்றும் பாடமுண்டு.

போதரத்நாகரம்.

* சடையினைப் பரித்துந் தலையினைப் பறித்துஞ் சீவரந் தாது கற் கலிங்க, முடையெனப் புனைந்து முடைகளைத் தவிர்ந்து மூனுறக் கங்களைத் துறந்தும், படியினிற் சருகும் வாயுவு மயின்றும் பாரொடு கல்லிடைத் துயின்று, மிடையதுற் றுழனு மிவையருட் சொரூபன் மெய்யருள் பெறுதவர்க் கியல்பே. 9

* உரைப்பது ஞானம் போலவே யாகி யுணர்ந்தவர் வேடமுங் கொண்டு, நிரைத்துற வகல நீளமுண் டாக நிலவிய கலைகளு மொழிந்து, சுரைப்பயி லிடங்கள் சுவடுகொண் டெய்திச் சொல்லொடு செயலவை வேறுய்ச், சரித்திடு மவர்க டாமருட் சொரூபன் றமரலா தவர்களென் றறியே. 10

* ஊழலால் வருவ தொருபொரு ளில்லை யென்றுரைத் துண்டுடுத் திருக்கக்,கேழிலாச் செல்வங் கிடைத்திடு மென்று கிறிபடு சாதனை செய்து, பாழதற் கிறைத்துப் பலரகந் திரியும் பண்பிலாக் கூடாசா ரங்க, டாழ்பவர்க் கருளுந் தலைவனற் சொரூபன் றமரலா தவர்கடங் குறியே. 11

* வடித்திடச் சொல்லி மனம்பறை யறைய மதியிலா தவர்களுக் கினமாய்ப், பிடித்தது பிடித்துப் பிணங்கியாய் வின்றிப் பித்தெனப் பொருள்களும் பிதற்றிப், படித்தவப் பொருளைப் பிறர்க் குரைத் தவர்கள் பக்கமே பிண்டமிட் டொன்று,மடித்தலை யறியா தவங்கழிந் திடுத லடியரல் லாதவர்க் கியல்பே. 12

திருக்கடைக்காப்பு.

எங்கேனும் மியாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியு மெம்பெருமா னெருதேறிக்
கொங்கேயு மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் றன்மைகளே. 13

தேவாரம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து ‡ தரணியொடு வானாளத் தருவ ரேனு, மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகி,னங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யரா யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்,கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்ப ராகி னவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

‡ தரணியெலா முழுதாளத் என்றும் பாடமுண்டு.

திருவாய்மொழி.

சன்மசன் மாந்த ரங்காத் தடியர்களைக் கொண்டுபோய்த்
தன்மை பெறுத்தித்தன் றாளிணைக்கீழ்க் கொள்ளு மப்பனைச்
செம்மை பிதற்றவல் லாரைப் பிதற்று மவர்கண்டீர்
நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே. 15

குலந்தாங்கு சாதிக ணாலினுங் கீழிழிந் தெத்தனை
நலந்தா னிலாதசண் டாளர்சண் டாளர்க ளாயினும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணன் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தா ரடியார் தம்மடி யாரெம் மடிகளே. 16

அன்பர்திறத்தினறிகுறி முற்றிற்று.

ஆகச்செய்யுள் - 2663.

## 6. அன்போடுகூடாவன்பருக்கஞ்சுதல்.

வினா விளக்கம்.

அடியார்தம் பரிசு மடியரல் லாத வயலவர் குறியுமங் குரைத்துப், படியதொன் றில்லாப் பரம்பரன் கழற்கே பத்தரா மடியவர் பின்னுங், குடியதொன் றாக வடிமைகொண் டருளுங் குரைகழற் கன்பிலா வன்ப, ரடைதருங் கூடா வன்பினுக் கஞ்சி யறைதரு பரிசையுங் கேளாய். 1

போதரத்னகரம்.

* அந்தணர் தமக்குநீர்ப் போக்குமப் பொருளு மாற்குவாய்ப் போக்குமப் பொருளும், பின்றமக் கென்னு ரென்பதெவ் வுலகும் பெருகிட வறிந்திடும் பொருளே, தந்தமக் கருளு மிறைவனற் காத்தே சகலமு முதகமாய்க் கொடுத்தும், பின்றமக் கவற்றி னன்புசெய் திடுமப் பேதையர்க் கஞ்சிடா தவரார். 2

* † தேவர்தே வாருந் தேசிகன் கரத்தே சிறைதரு முயிருடல் பொருளைப், பாவியே னுதகம் பண்ணிவைத் தஞ்சா தவற்றினைப் பண்டுபோற் பற்றி, யோவிடா தன்பு செய்துபின் செல்லு முணர் விலா தவர்களைக் கண்டாற், றேவரே யெனினு மஞ்சியஞ் சொளிப் பர் தெளிந்தவர் கேட்டுமஞ் சாரோ. 3

† :தேவதே வர்க்குந் என்றும் பாடமுண்டு.

* உழியுழி வந்த வுலைவிலாப் பவத்தை யொருமொழி யால றுத் தருளு, மழிவினன் குரவ னம்பொனன் கரத்தே யன்றுத கங்கொடுத் தவற்றைத், தழுவுறு மனத்துச் சழக்கரைக் கண்டாற் சதுமுக னரிபுரந் தரனு, மழலென நடுங்கி யகலநின் றிடுவ ரஞ் சிடா தவர்சகத் தாரே. 4

போதாமிர்தம்.

* அடியிணை மலர்கள் சூட்டி யாண்டவன் கீழ்க்க ணன்பா
யிடையற வுருகி மேன்மே லின்புறு தவரைக் கண்டா
லடியது தொடங்கி யுச்சி யளவுமங் கழல்போன் மண்டி
மிடைதரு மச்ச மெய்தா விமலர்க ளில்லை யில்லை. 5

அநுபவசித்தி.

* அழலினுக் கஞ்சார் வேலை யாலகா லத்துக் கஞ்சார்
முழுதழி பிரள யத்துக் கஞ்சிடார் முடிவை யஞ்சா
ரழிவறு மறிஞ ரென்று மஞ்சுவ ரன்ப ‡ ராகி
யொழிவறு மன்பின் மிக்கங் குருகிடா வூமர் கட்கே. 6

‡ ராய்வைத், தொழிவறு என்றும் பாடமுண்டு.

அதிக்கிருதாமிர்தம்.

* என்று மஞ்சுவ னிணையடி சூட்டிடப் பெற்றுப்
பின்றும் பேதையர் போல்வயி றதுவளர்த் திடுத
லொன்றுந் தான்பொரு ளாகவே யுழன்றிறை கழற்கே
நன்றன் பின்றிய கண்ணிலாக் கூழைநாய் களுக்கே. 7

* நாளு மஞ்சுவன் ஞானவா ரமுதினைப் பெற்று
மாளுந் தாள்களுக் கடியரல் லாதவர் போலத்
தாளுந் தேய்ந்துறு கலர்கடை தொறுந்தடு மாறி
நீளுந் தீவயி றதுவளர்த் துழலுநீ சருக்கே. 8

### ஞானசூடாமணி.

* கண்க ளித்திட வந்துநற் கருணைக் கழல்கள் சூட்டிய கட
வுளை யொழிய, மண்டு தித்திடு மாலய னாலும் வந்து தோன்றி
னும் வணங்குவ னேதா, னெண்ட ரக்கழ லருளிறை யொழிய
வேக தேசமோர் பொருளுமுண் டாகக்,கண்டு கேட்டிடுஞ் சவலை
நாய் களைநான் கனவு தன்னினுங் காணவுஞ் சுவனே. 9

### திருவாசகம்.

புற்றில்வா ழரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. 10

வன்புலால் வேலு மஞ்சேன் வளைக்கையார் கடைக்க ணஞ்சே
னென்பெலா முருக நோக்கி யம்பலத் தாடு கின்ற
வென்பொலா மணியை யேத்தி யினிதருள் பருக மாட்டா
வன்பிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. 11

வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல் கொளினு மஞ்சே
னிருவரான் மாறு காணா வெம்பிரான் றம்பி ரானாந்
திருவுரு வன்றி மற்றோர் தேவரெத் தேவ ரென்ன
வருவரா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. 12

தறிசெறி களிறு மஞ்சேன் றழல்விழி யுழுவை யஞ்சேன்
வெறிகமழ் சடைய னப்பன் விண்ணவர் நண்ண கில்லாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
வறிவிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. 13

கோணிலா வாளி யஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்சே
னீணிலா வணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
வாணலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே. 14

அன்போடுகூடாவன்பருக்கஞ்சுதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2677.

# 26. நெஞ்சுப்பாவண.

## 1. அன்பொடுகூடாநெஞ்சினைநோதல்.

### விநுவிளக்கம்.

அன்பர் தந்திறத் தாகிய வினைத்து மறைந்த வாறது போல நல் லடியா, ரின்ப வன்பது நெஞ்சினி னல்லா லிலங்கி டாமையி னன்பொடு கூடாத், துன்பு நெஞ்சட ஞெந்துநொந் தழிந்து சொல்லு கின்றவத் தன்மையு மெல்லா, மன்பு துன்றிய வரியநற் புதல்வா வறைவர் நன்குற வதனையு மறியே. 1

### போதரத்னகாம்.

* மால திர்ந்தில ஞன்முக னறியான் மறைக ளுன்குநின் றலறியு மறியா, மூல நன்பர னெளிதுவந் தருளி மூட னேனையு மாண்டு கொண் டிருந்த, சில முந்திருக் கருணையு மருளுந் திகழு கோலமு நினைந்துளைந் துருகிச், சால வன்புசெய் திடுகிலை நெஞ்சே தவறு செய்தெனைத் தான்கெடுத் தாயே. 2

### போதாமிர்தம்.

* அறிவ ரும்பர னெளிதின்வந் தீன்ற வன்னை தன்னிலு மன்பு செய் தருளிச், செறியு நன்கழல் சென்னியிற் சூட்டித் தெளிவி லேனையு மாண்டுகொண் டிருந்த, விறைவ னென்கிலை யெழிலருணினைந் திட் டெரியின் மீதுறு மெழுகென வுருகாய், கிறிப டுந்துயர் செய்தெனைக் கெடுத்தாய் கீழ்மை நெஞ்சமே கிடந்துழைத் தாயே. 3

### அனுபவசாரம்.

* புலையுறு செயலாற் புலனுறு போகப் புகலரும் விடத்தையே நுகர்தற், கலம்வரு மவலக் கடலுளே தலைகீ ழாகவே விழுந் தழி நெஞ்சே, கலைகளி னுணர்வுக் கரியநற் சொரூபன் கழல்களை நினைந்துளைந் துருகி, யெலையறு மன்பா மமுதினை விரும்பா தேது கொண் டென்செய்தாய் கெடுவாய். 4

### ஞானவிநோதம்.

* சேயனுரை யுணர்வுக் கரியநற் சொரூபன் றேசிக னுயெழுந் தருளி, யயலற வென்னைத் தன்னுரு வாக்கி யன்பரு ளாண்டு கொண் டிருக்கக், கயமுறு நெஞ்சே கடைகள்போல் விடயங் காதலித் தலம்வரு கின்றுய், நயமது முணராய் நன்றியு மறியாய் காணிலி நீதுணை யன்றல். 5

### மூலசித்தி.

* அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவு.மளவிலாப் பகைநமக் கெனவுந், துன்பமார் சோக மோகமே முதலாந் துயரெலாம் விளை விட மெனவு, மின்பவீ டெய்தா திடற்கிடை யூறு மிருளுமென் றியம்புவர் பெரியோர், துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே துணையலை துணையலை யெனக்கே. 6

### திருவாசகம்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை † துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

† துணையலை என்றும் பாடமுண்டு.

அறிவி லாதவெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை ‡ யருளிமெய்ந்,நெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப் பந்தனை யறுப் பானைப், பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிண நெஞ்சே, கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே. 8

‡ யருளிமே, னெறியெ என்றும் பாடமுண்டு.

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையெம் மதியிலி மட நெஞ்சே, தேறு கின்றிலை யினியுனைச் சிக்கெனச் சிவனவன் றிர டோண்மே, னீறு நின்றது கண்டனை யாயினு நெக்கிலை யிக்காயங், கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. 9

கிற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாழ்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டன வெல்லாமு
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு மளவறுக் கில்லேனே. 10

### திருவந்தாதி.

தேசிகன் பாதங்கள் சிந்திக்க வேசிந்தை செய்திருக்கும்
வாசிகண் டாலு மறக்குமென் னேயிந்த மாயவாழ்க்கைப்
பாசிகண் டானந்த வாரிகண் டாரப் பருகப்பெறு
நாசிகண் டாலுச் செவிதுவக் கோடு நயந்துநின்றே. 11

இதையா லயத்தி லிருப்பா ரறிய விரந்துருகிப்
பதையா திருப்பதென் பாவிநெஞ் சேபர னருளாற்
சிதையா தொழியிற் சிறுகாய் 'விடுமிச் சிலசமயக்
கதையான் மனக்கணக் கால்விடு மோவிக் கடும்பிறப்பே. 12

மற்றிலைப் பற்றென்று வாழ்வித்த நாதன் மலரடியைப்
பற்றில மற்றொன்றைப் பற்றா தொழிந்திலைப் பற்றியொன்றும்
பெற்றில யாயினும் பேய்த்தேரை நீரெனும் பின்றொடர்ச்சி
யற்றில யென்செய்கின் றாய்நெஞ்ச மேயழிந் தற்றனையே. 13

அற்றார் தமக்கன்பு செய்வா ரருட்சொரு பானந்தனார்
நற்றா யினுநல்கி நற்றா ளிணைதந்து நாடரிய
வற்றாத வானந்த வாரியுள் ளேநம்மை வைக்க நெஞ்சே
பெற்றாலு மொன்றும் பெறாதாரை யொக்குநின் பெற்றிகளே.

நின்பெற்றி தன்னை நினைக்கவுண் டோநெஞ்ச மேநிறையப்
† பொன்பெற் றிருக்கப் புனைந்துகொள் ளாய்புன் குரம்பையிலே
தன்பெற்றி தன்னைத் தருந்தம் பிரான்வந்து சார்ந்திருக்க
‡ வென்பெற்று நீயிந்தி யஞ்சொன்ன வாசெய் கினைக்கின்றதே.

† பொன்பெற்று வைத்தும் என்றும், ‡ வென்பெற்றை என்றும் பாடமுண்டு.

கெடும்பரி சேயுனக் குள்ளதெல் லாங்கெடு வாய்மனமே
படும்பரி சேதையும் பார்க்கிலை நீயிந்தப் பாழுடம்பைச்
சுடும்பரி சேகண்டு வைத்துமெங் கோவைத் தொழுதுடம்பு
விடும்பரி சேதென் றுணரா யிதென்ன விதிவகையே. 16

ஞானவிநோதன் கலம்பகம்.

ஒழித்திலை சிற்றின்ப முண்டிலை நீயுண்டு முண்மைதனில்
விழித்திலை மெய்ச்சொரு பானந்த வென்று வெறுமொருகான்
மொழித்திலை தீமை மொழிந்தற் ‡ றனைபல மோகமென்றுங்
கழித்திலை யாவி கழிந்தனை யேயென் கடைநெஞ்சமே. 17

‡ றனைமல என்றும் பாடமுண்டு.

ஆகின் றவையழி யாநின் றமையறி யாநின் றறிகிலை யருவா ளுள், போகின் றதுபுகு தாதென் றறிகிலை பொய்யென் றறிகிலை மெய்யென்றே, சாகின் றனைபிற வாநின் றனைதடு மாறும் படிகெடு வாய்நெஞ்சே, யாகின் றளவினு மாகின் றிலைசொரு பானந்த ரோடுற வாமன்பே. 18

தத்துவசரிதை.

துறவி னடுத்திலை தொண்டிற் பணிந்திலை தொல்கழற்கே
யுறவி னெடுத்தொரு மாமல ரிட்டிலை யுட்புகுந்தென்
பிறவி கெடுத்த பெருமானை யைம்புல னாரப்பெற்று
மறவி கொடுத்தநெஞ் † சேயென்செய் தாயென்னை மாயத்திலே.

† சேயென் செயா யென்னை என்றும் பாடமுண்டு.

24402

தத்துவவிளக்கம்.

எளிவந்த தோகெடுவா யெல்லாந் துறந்து
களிவந் திலிங்கினைந்து கண்ணீர்—துளிவந்த
தில்லைகாண் சிந்தையுனக் கெங்கேனுங் காணெஞ்சே
யல்லைகா ணானுடையார்க் கன்பு. 20

அன்போடுகூடாநெஞ்சினைநோதல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2697.

## 2. நெஞ்சினையிரத்தல்.

விறுவிளக்கம்.

அன்பொடு கூடா* நெஞ்சினை நொந்தே யறிஞரங் கறைந்தவா றதுபோற், றுன்புறு மையற் றொடக்கற வெறிக்குஞ் சோதியாஞ் சொரூபனுக் கன்பை, நன்குற நாளு நண்ணுதற் பொருட்டா னலந்திகழ் நெஞ்சினை யிரந்தங், கன்புறு மடியா ரறைந்திடும் பரிசு மறைகுவ னதனையுங் கேளாய். 1

சோதபானந்த நிலயம்.

* சாலவு மிரந்தே னுன்னைத் தமியனேற் குதவு நெஞ்சே
ஞாலமு மற்று முற்று மாகியே நவையொன் றில்லாக்
கோலமாஞ் சொரூபன் செய்ய குரைகழற் குறுநல் லன்பே
மேலுமேல் வளர்ந்து ளோங்க விரும்பிட வேண்டும் வேண்டும்.

ஞானசூடாமணி.

* உன்றனை யிரக்கின் றேனு னொப்பிலா வினிய நெஞ்சே
பன்றியு மன்ன மாயும் பார்விசும் பயன்மா றேடி
யொன்றுமங் குணர வொண்ணு வொப்பினற் சொரூபற் கன்பே
யென்றுநீ விரும்பி யென்ற னிடர்கெடுத் திடவும் வேண்டும். 3

போதரத்நகரம்.

* கன்னலுந் தேனும் பாலுங் கனிகளு முனக்கொப் போதா
னென்னுடை யினிய நெஞ்சே யானுனை யிரந்து கொண்டேன்
மன்னுநற் றிருந டன்றன் மலரடிக் கெலையி லன்பா
யுன்னுதற் கரிய கோலங் கண்டுகொண் டுருகி டாயே. 4

தத்துவசாரம்.

* உடையிழந் தவன்கை யேபோ லுதவினீ யூழி யூழி
யடைதரு மிடுக்க ணீத்த வமுதினு மினிய நெஞ்சே
முடிவொடு முதலு மில்லா முழுமுதற் சொரூபற் கன்பே
மிடைதர வேண்டு மென்றே மிகமிக விரப்ப னுன்னை. 5

மூலசித்தி.

* உண்மையை யுணரு நெஞ்சே யெனக்குறு துணைநீ யானு
லெண்ணரு மெண்ண மெல்லா மெனக்கினி முடிந்த தன்றோ
திண்ணிலை யடியர்க் கன்பன் றிருநடன் கழற்க ணன்பே
யெண்ணுமற் றொன்றும் வேண்டா விதுவுனை யிரப்ப தென்றும். 6

திருக்கடைக்காப்பு.

நன்னெஞ்சே யுனையிரந்தே னம்பெருமான் றிருவடியே
யுன்னஞ்செய் திருகண்டா யுய்வதனை வேண்டுதியே
லன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை யெப்போதும்
பன்னுஞ்சீர் வாயதுவே பார்க்கண்ணே பரிந்திடவே. 7

நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழுநாஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 8

திருவாய்மொழி.

நெஞ்ச மேநல்லை நல்லையுன் னைப்பெற்றா
லென்செ யோமினி யென்ன குறைவிலம்
மஞ்ச னைமல ராண்மண வாளனைத்
துஞ்சும் போதும் விடாது தொடர்கண்டாய். 9

நெஞ்சினையிரத்தல் முற்றிற்று.
ஆகச்செய்யுள் 2706.

## 3. நெஞ்சினையுடன்படுத்தல்.

விறுவிளக்கம்.

நிமல னார்கழற் கன்பரா மவர்க ணெஞ்சை யன்பது செய்தி
டென் றிரந்த, சமைவு போலநெஞ் சினையுடன் படுத்துச் சாற்று
மாறது தன்னையு முரைப்பன், கனமையும் வாய்மையுங் கருணை
யுந் தயாவுங் கல்வி ஞானமுங் கருதுசாந் தியுமா, மமைவெலா
மிக வுடையநல் லறிஞர்க் கதிப கேளக மகிழ்ந்தது தனையே. 1

### தத்துவசாரம்.

* நெஞ்சமே யென்சொன் மிஞ்சிநீ யழியும் பொருள்களை நினைந் துழன் றமையால், வஞ்சமே செய்யு மாயவல் வினையால் வன்பவக் கடலுளே மடிந்தாய், நஞ்சமார் செயலை விட்டுநீ நம்மை யாளுநற் சொரூபனற் கழற்கே, யெஞ்சிடா வன்பு செய்திடற் கியைந்தா லேதுமோர் குறைநமக் கிலையே. 2

* நீயலாற் பெரியா ரில்லைகா ணெஞ்சே நீயெனக் குடன்படா வந்நாட், காயமே வடிவாய்க் கண்ணிழுந் தவலக் கடலுளே விழுந்துகால் குலைந்தே, னுயநீ யென்னோ டின்றுடன் பட்டிங் கழகிய திருநடன் கழற்கே, மேயபே ரன்பே யாதலா னமக்கு மேவுதற் கரியதொன் றிலையே. 3

### போதரத்னகரம்.

* காயநீர்க் குமிழி யதினுறு மின்பங் கானலிற் புனலது தனக் கங், காயவத் துயர மளவிலை யதுநீ யாய்வுறு மையினழிந் தற் றாய், நீயினிக் கவலை மயல்களைத் தவிர்ந்து நெஞ்சமே வந்தெனக் குடன்பட், டாயநற் சொரூபற் கன்பதே யிசைந்தா லரியதே தார்நமக் கெதிரே. 4

### போதாமிர்தம்.

* உன்னையே யல்லா லொருதுணை யுளதோ வுனையொழிந் திறைகழ லடைந்தேன், பொன்னையே பெற்றும் பொதிந்திடக் கூறை பொருந்திடாப் பொறியில ராமா, லென்னைநீ வந்திங் குடன் படத் தழுவி யெம்பிரான் றிருநடன் கழற்கே, மன்னுபே ரன்பே மருவுநன் னெஞ்சே வையகத் தரியதே தெமக்கே. 5

### மெய்ந்நெறி.

* பாராய் நெஞ்சே பத்தர்கள் வைப்புப் பரமீசன்
பேரா துள்ளந் தன்னு ளிருக்கப் பிறர்போல
வோரா தேநின் றுழிதா றீதென் றுடன்வந்தே
தீரா வன்பைச் சிற்சொரு பற்குச் செய்யாயே. 6

* பொய்யா மையற் கனவது போலும் புணரின்ப
மெய்யா மென்னக் கருதிமு ழேடும் விறனெஞ்சே
யையோ பொல்லா தறுதவி ரென்னோ டுடனுய்வந்
தெய்யா வண்ண மெந்தை கழற்கன் பியையாயே. 7

* தேராய் நெஞ்சே தீயவை செய்தார் கெடுமாறு
மாரா யுஞ்சீர் நின்னை யலால்வே † றுடையாரார்
வாராய் நீவந் தென்வச மாறு னமையொப்பா
ரார்தா னிங்குண் டோவிலை யங்கு மிலையன்றே. 8

† றறிவாரார் என்றும் பாடமுண்டு.

பட்டணத்தார் பாடல்.

பேசு வாழி பேசு வாழி
யாசையொடு மயங்கி மாசுறு மனனே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையு முண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியு
நிறைந்தன குறையு முயர்ந்தன பணியும்
பிறந்தன விறக்கும் பெரியன சிறுக்கு*
மொன்றொன் றொருவழி நில்லா வன்றியுஞ்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறன் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தி னுயர்ந்தோர் நலத்தினின் வந்தோ
† ரனையரெக் குலத்தின ரிறந்தோ ரனையவர்
பெயரு நின்றில போலுந் தெரி
னீயு மஃதறி யன்றே மாயப்
பேய்த்தேர் போன்று நீப்பரு முறக்கத்துக்
கனவே போன்று நனவுபோ் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மைய ‡ ரிழிவுழிச் சார்ந்தனை நீயு
நன்மையிற் றிரிந்த புன்மையை யாதலி
னழுக்குடைப் புலன்வழி யிழுக்கத்தி னொழுகி
வளைவாய்த் தூண்டிலி னிரைவாய் $ விழுங்கும்
பன்மீன் போலவு
மின்னுபு விளக்கத்து விட்டிற் போலவு
மாசையாம் பரிசத் தியானைபோலவு
மோசையி னழிந்த புள்ளுப் போலவும்

† ரனையரெங் என்றும், ‡ ரிழிவு சார்ந்தென் னீயும் என்றும்,
$ விரும்பும் என்றும் பாடமுண்டு.

வீசிய மணத்தின் வண்டு போலவு
முறுவ துணராச் செறுவுழிச் சேர்ந்தனை
நண்ணூ னூற்றுத் தன்னகப் படுக்கு
மறிவில் கீடநேர்ந் தழிதி போலவு
மாசைச் சங்கிலிப் பாசத் துட்பட்
டிடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்திக்
கறவை நினைந்த கன்றென விரங்கி
மறவா மனத்து மாசறு மடியார்க்
கருள்சுரந் தளிக்கு மற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்று ளாடு
மிறைவ னென்கிலை யென்னினைந் தனையே. 9

பா துறை - நெஞ்சிற்கமைவுரை.

அமையாதே பெற்றதனு லாங்காங்கு நன்றென்
றிமையா தெழுந்தோடு கின்றாய்—சமையாச்
சிறுமைக்கு வித்ததுவாந் தேராய் மனனே
மறுமைக்கு மலைமேத மறைப்பு. 10

இருந்தவிடத் தேதும்வரக் கண்டிருப்ப தன்றோ
பெருந்தகைமைக் காபரணம் பேதாய்—மருந்தெனவே
யாங்கினியார் தங்கடையிற் சென்றிடினு மாதரியார்
பாங்கிதுகாண் பாழ்நெஞ்சே பார். 11

இல்லாத தில்லை யுளதுதவி ராதென்று
நல்லார் துணிபொருளை நாடுங்கா—லெல்லா
மமைந்தபடி யேவருமா லாங்கசைவெ னெஞ்சே
சமைந்தபொரு டாமுணர்வார் தாம். 12

ஒன்பதுவா யாறு மலஞ்சொரிய வூத்தைகமழ்
புன்புலையாங் குற்றப் புலாலுடம்பை—யன்புடனே
யேத்துவார் வைவா ரிழிவுரைப்பா ரல்லாதா
ரர்த்தமா மெய்யுணர்வார்க் காங்கு. 13

வாயுவன னீர்பிணிதான் மற்றும் பலபலவா
வாயசட வேறுவினை லாம்புயனுக்—கேயவொரு
செற்றநலங் கொண்டிலையேற் சேதனவே துத்தனையு
மற்றவண நெஞ்சே மதி. 14

வியந்துரை.

நானுரைக்க வொன்று நலஞ்சிறந்து கேணெஞ்சே
வானுரைக்கு மாறறியா மாமணிதான்—யானுரைக்கும்
வண்ணத்த னய்வந்த மாறாத வான்பொருளை
யெண்ணத்தான் வாரா யிரந்து. 15

திருவாசகம்.

இருந்தென்னை யாண்டா னிணையடியே சிந்தித்
திருந்திரந்து கொண்ணெஞ்சே யெல்லாந்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவா யென்மனத்தே வந்து. 16

நெஞ்சினையுடன் படுத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2722.

## 4. நெஞ்சினையுணர்த்தல்.

வினாவிளக்கம்.

நின்மலன் சொரூப னன்பர் நெஞ்சுடன் படுத்து ரைத்த
தன்மைபோ னெஞ்சு தன்னைத் தானுணர்ந் துணர்த்து மாறுந்
தொன்மையா மறையி னீறுந் துதித்திடு ஞான வேந்தே
நன்மையா லன்ப தோங்க நவிலுவ னயந்து கேளாய். 1

போதரத்னகரம்.

* ஒப்பி லாததோ ரொண்பொரு ளதுதனை யுனக்குணர்த் திடு கின்றேன், வைப்பு மாடெனக் குயிர்வழி மதிநல முழுதுமாஞ் சொரூபன்றன், றப்பி லாதபொற் கழற்கணன் பொன்றுமே தலைமையா வதுநெஞ்சே,யுய்ப்ப தாமுல கேழும்விட் டின்பமு மொன்றுமோர் பொருளன்றே. 2

போதாமிர்தம்.

* ஆர ணங்களு மமரரு மறிதர வரியதொன் றினைநெஞ்சே
யோர வுன்றனக் குணர்த்திடு கின்றன னதுவுளத் தொன்றக்கே
ளூர ணன்றிசை முகனரன் மகேசனற் சிவமென நவில்கின்ற
கார ணன்குரு பரனல திலதெனக் கருதிடு மதுதானே. 3

ஞானசித்தி.

* சோக மோகமிக் கிடுதுயர்ப் பவங்கெடத் தொலேவில்வீ டுறவென்றங், காரு சிந்தனை யடியால் லாதவர்க் கடியரெண் ணலர் நெஞ்சே, யேக மாய்முழு தினுமுடி பொருளவ ரெண்பொரு ளது நீகே, ளாக மாகிவந் தாண்டவன் கோலமன் போடுகண் டிடல் காணே. 4

ஆனந்தாமிர்தம்.

* சத்தமே பொருளெனச் சளமுறக் கதறுமச் சடரோ டொன்றிச், சித்தனூர் கழலுறு தவர்கள்போற் றிரிவதென் சீசீ நெஞ்சே, நித்தனூர் நிமலநற் சொரூபனூர் நிகழுமோர் மொழித ளுலே, யத்தனு ரரியநற் சொரூபமுன் வடிவதா மைய மின்றே. 5

ஆனந்தசித்தி.

* மண்க லங்கினும் வானது பொய்ப்பினும் வரைகளுந் தடுமாறி விண்க லங்கினும் விரிசுடர் வீழினும் வேலேயும் வறளாய்மற் றெண்க லங்கினு மிலேயிலே யொருதுய ரிதுவுண ரெழிநெஞ்சே கண்க லங்கெமை யாண்டநற் சொரூபனற் கழலிணை நமக்குண்டே.

தத்துவசூளாமணி.

* பானு வம்புலி யிருளதாய்த் திசைகெடப் பாணியுந் தழலாகி யான வங்கியுங் குணங்கெடக் குளிர்ந்துமற் றடங்கலு நிலேமாறித் தான ழிந்திடு பொழுதினு மொருதுய ரிலேயிலே தனிநெஞ்சே யூன ழிந்திடு பொழுதினுஞ் சொரூபனே யுவந்துகண் டிடுநின்றே.

ஞானவிநோதன்கலம்பகம்.

உரைசெய் மனனே யுரைசெய் மனனே
கரையி லாசைக் கடலிடைப் பட்டுக்
கலங்கித் திரையின் மலங்கி யலேந்தலேந்து
பன்னெடு நாளாற் பாரிடை விசும்பிடை
மன்னுப யாவினும் வந்துழி வந்துழி
யோரோ ருருவி னுடலெடுத் தழிந்தது
பாரே முன்றே பழுவென்பு பகரி
னட்டமா கிரியி னெட்டடுக் குடைத்தே
குழவியிற் பருகிய செழுமுலேப் பாலிவ்
வெழுகட லதனி னெழுமைய தன்றே
மலர்தலே யுலகத்துப் பலபல மாக்கட்குத்

தாயென வீன்றுந் தந்தையென வளித்துஞ்
சேயெனப் பிறந்துந் தெவ்வரெனப் பகைத்துங்
கணவரெனப் புணர்ந்துந் துணைவரெனச் செறிந்து
மோரோ ரியோனியி னுற்றதும் பிறந்ததும்
பாரேழ் சூழ்கடல் படுதிரை தொகுத்த
நுண்மணல் பகரினு மெண்வகை யரிதே
யிவ்வகை பிறந்திறந் தியல்வுழி யவ்வையிற்
கூடிய பொருள்க ளுடுவ தரிதே
கல்வியிற் கழறிய சொல்லள விலதே
மறுமை யின்றி மற்றவை யனைத்தும்
பிறிதில நீயே யறிதி யன்றே
யன்ன தன்மையை யறிந்தறிந் தின்னு
மென்ன தியானென் றிசைந்து மன்னு,
வடிவு மெழிலும் வனப்புறு கல்வியுங்
குடியுந் திருவுங் குலனு மிடுவதோர்
நாமமுஞ் சுமந்து நமபிற வென்று
சாமள வுஞ்சழக் குரைத்துப் போமிது
தன்னு லிந்தப் பன்னெடுங் கால
மென்னீ பெற்றனை யியம்பே யன்னே
பயனில செய்து கழியா தயனர
னிந்திர னெடுமா லின்னமு நிற்பச்
சிந்துரச் சேவடி யந்தரத் தின்றித்
தீண்டவிப் புவியிற் சீரடி யார்களை
யாண்டுகொண் டருளவோ ரந்தண னாகி
வந்தருள் சொரூபா னந்தனைச்
சிந்தைசெய் யிடருறு பந்தம்வீ டறவே. 8

வந்த வரலா றென்று மறியாய் மண்டு புலனார் கொண்டு செலவே, பந்த நெறியே சென்று மனனே பங்க முறநீ மங்கி யழியா, தெந்தை பெருமா னின்ப வடிவா கின்ற சொருபா னந்த னிருதாள், சிந்தை மயலால் வந்த பவநோய் சிந்தும் வகைநீ சென்று செறியே. 9

கோடிய மயலான் மங்கைமார் குழறு மொழியே கொண்டுநீ
முடிய விங்ஙனே யின்றுபோய் முறிகை மதிகே டென்றிரா
யடியர் பவநோய் மங்கவே யருளுஞ் சொருபா னந்தனார்
படியின் மிசையே வந்ததாள் பணிய நினையாய் நெஞ்சமே. 10

திருவந்தாதி.

நயவா விடயத்து ணேயுநெஞ் சேநம்மை நன்னெறிசேர்த்
துயவா தரிக்க வுரைக்கலுற் றேனுரை யாடுதொறும்
வியவா வுருகா விழிபனி யாநின்ற மெய்யடியார்
கயவா மனப்பங் கயத்தானை யேத்துதல் காரியமே. 11

வெண்பாவந்தாதி.

ஏதுசெய்தா லேதாமென் றேமாக்கு நெஞ்சமே
தீதுசெய்யா தெப்போதுஞ் சிந்தியாய்—போதுசெய்யா
தண்ணலுநம் பால்வருங்கா ணங்கவன்றன் பூங்கழற்கே
நண்ணலுமா குங்கா ணமக்கு. 12

திருக்கடைக்காப்பு.

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்ட வுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய காள கண்ட
னவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே.

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந் திதுநம் மில்லம், புன்புலா னாறுதோல் போர்த்துப்பொல் லாமையான் முகடு கொண்டு, முன்பெலா மொன்பது வாய்தலார் குரம்பையின் மூழ்கிடாதே, யன்பனா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே. 14

தேவாரம்.

நன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கட னீர்சுருங்கிப்
பன்னெடுங் கால மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னொடுஞ் சூளறு மஞ்சனெஞ் சேயிமை யாதமுக்கட்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டாயிப் புகலிடத்தே.

மண்பா தலம்புக்கு மால்கடன் மூடிமற் றேழுலகும்
விண்பா றிசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சனெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோந் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே. 16

திருச்சந்தவிருத்தம்.

அத்தனாகி யன்னை யாகி யாளுமெம் பிரானுமா
யொத்தொவ்வாத பல்பிறப் பொழித்து நம்மை யாட்கொள்வான்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முண் மேவினா
ரெத்தினா லிடர்க்கடற் கிடத்தி யேழை நெஞ்சமே. 17

### திருவந்தாதி.

விரும்பினை சிற்றின்ப மற்றத னாலும் விரகினெஞ்சே
நிரம்பினை யின்றினி யன்னது விட்டு நெறியினின்று
கரும்பினை யத்தனை நித்தலு மேத்திக் கழறொழுநீ
தரும்பினை யானந்த நின்னிற் பிறங்குந் தனியிருப்பே. 18

குறியுற்ற தொன்றுண்டு நன்னெஞ்ச மேகோதை கொண்டிருண்
நெறியுற்ற வார்குழ னித்தில மன்ன முகிணகைமான் [டு
மறியுற்ற நோக்கி மணவாளன் மாணிக்க வார்கழலைச்
செறியுற்று நீயது தேர்வாய் தெளியுஞ் சிவபதமே. 19

பணியென்று நாதனை மற்றவன் பங்கயப் † பாததூளி
யணியென்று மேனியி லாறென்று மாறையு மைந்துநான்குந்
தணியென்று மீறிலி யாவையு மாய்நின்ற தன்மையுன்னித்
துணியென்று நீநெஞ்ச மேயது வீடுறுந் தீர்த்துறையே. 20

† பாதவணி என்றும் பாடமுண்டு.

### பாடுதுறை - நெஞ்சிற்கமைவுரை.

போய்க்கனவும் பேய்த்தேரும் போலுமுடல் போமளவுஞ்
சிக்கெனவே நாதன் றிருவடியை—நெக்குருகிப்
பூண்டுவிடா தேகிடந்து போற்றியிடு நெஞ்சேநீ
மீண்டுபிற வாதே விட. 21

நெஞ்சினையுணர்த்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2743.

## 5. நெஞ்சோடு மகிழ்தல்.

### வினாவிளக்கம்.

நெக்குநெக் குருகு கின்ற நெஞ்சுடை யடியார் நெஞ்சை
யொக்கவங் குணர்த்தி னாற்போ லொளிமிகு கழலோ டொன்றி
புக்கிடு நெஞ்சி னோடே யுவந்துதா மகிழ்ந்து கூறித்
தக்கிடும் பரிசை யுந்தான் சாற்றுவன் ஞான வேந்தே. 1

### போதரத்னுகாம்.

* அளவி னற்றவ மென்செய்தாய் நெஞ்சமே யருமறை யது தேடித், தளர விச்சகந் தன்னிலென் போலவே தாறெனார்மா னிடனுகி, வளமு றப்பழ வடியரோ டாண்டுநம் மதிதிருப் பதியாக் கொண், டுளவ னைத்தையு முண்டுநற் சொருபனு ருவந்திருந் தமையாலே. 2

### அனுபவசாரம்.

* என்ன பாக்கிய மிதுவென வதிசய மெனதுடல் பொருளாவி
தன்ன தாக்கியொப் பரியநற் சொரூபனென் றன்னையுந் தானுக்கி
முன்ன மாக்கிய வுலகுயிர் பரமெனு முழுதுமங் கிலவாக்கிப்
பின்னை யாக்கிய பரிசுநந் தரமதோ பெருநல முடைநெஞ்சே. 3

### நடராஜசரிதை.

* உற்ற மாதவ மென்செய்தாய் நெஞ்சமே யுருத்திர னயன்மாலு
மற்றும் வானவர் முனிவர்கள் கனவிலு மதிக்குமா றறியாத
முற்று மாகிய முழுமுத † திருநடன் மூடனேற் கெளிவந்து
கற்றி லோமையு மாண்டடி யாருடன் கருணைசெய் தமையாலே. 4

† திருநட னனவினி லெளிவந்து என்றும் பாடமுண்டு.

### சொருபாநந்தநிலயம்.

* என்றுமொரு தன்மையுறு ¶ மின்பவடி வாயே
நின்றபடி நின்றசொரு பன்கழல்க ளுன்றன்
புன்றலை யிருந்துள நிறைந்துபொலி வெய்தத்
துன்றுதவ மென்செய்தனை தொல்லையினி னெஞ்சே. 5

¶ மின்பவறி என்றும் பாடமுண்டு.

### சுவானுபவசித்தி.

* வானம் வந்திடு காலெரி நீர்புவி
யான வந்த வகண்டமு மாகிய
கோன வன்குர வன்சொரு பன்கழற்
றேனை யுண்டு திகழ்ந்ததென் னெஞ்சமே. 6

### மூலசித்தி.

* எய்தா தனவே தரிதே தினியென்
மைதா வுறுநெஞ் சிறைவன் கழலை
மெய்தா வியவன் பின்பிகுந் ததகோ
பொய்தா வியவன் றுயர்போ யறவே. 7

### சொரூபானந்த தரிசனம்.

* வந்தெனைப் புல்கிவண் முத்தமுந் தந்துச்சி மோந்திடத்தா
னுந்தனைப் பெற்றின் றுருதநுண் டேவொரு காலயர்ந்துஞ்
சிந்தனை மற்றொன் றறத்தே சிகன்சொரூ பன்கழற்றே
னைந்தலுற் றுண்டன்பி னுஃமகி ழாநின்ற நன்னெஞ்சமே. 8

* ஏதரி தேதிய லாதது வென்றனக் காரெதிர்தா
னுதனன் பாயுத நற்சொரூ பானந்த னுண்மலர்த்தா
ளோதியன் பாயழல் சேர்மெழு காகி யுருகுகின்ற
வாறினெஞ் சுண்டுகண் டீர்மகிழ் தோள்வலி மற்றெனக்கே.

### ஞானவினோதன்கலம்பகம்.

ஆனே னதுநா னென்றிங் கோது மளவேயா
மூனே வடிவா மவரோ டுழலா வகைநெஞ்சே
தானே சொரூபா னந்தன் கமலந் ‡ தாள்வந்தன்
பானேர் படமா தவமென் செய்தாய் பகராயே. 10

‡ தாள்வந்துன் என்றும் பாடமுண்டு.

### தேவாரம்.

வென்றுனைப்புல னைந்துமென் றீவினை
கொன்றுனைக்குணத் தாலே வணங்கிட
நன்று நன்மனம் வைத்திட ஞானமா
மொன்றுனைக்கண்டு கொண்டதென் னுள்ளமே. 11

### திருக்கடைக்காப்பு.

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கண்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 12

### தேவாரம்.

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
சென்ன லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 13

எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபர
னந்த மில்புக ழாரூ ரரனெறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே. 14

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையனந்
தலையின் மேலு மனத்துளுந் தங்கவே. 15

### திருவாய்மொழி.

கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று
ரெண்டானு மின்றி யேவந் தியலுமா
றுண்டானை யுல கேழுமோர் மூவடிக்
கொண்டானைக் கண்டு கொண்டனை நீயுமே. 16

### திருவாசகம்.

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்ட ருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
யுண்டாமோ கைம்மா றுரை. 17

### அற்புதத் திருவந்தாதி.

இனியோநா முய்ந்தோ மிறைவன்றாள் சேர்ந்தோ
மினியோ ரிடரில்லோ நெஞ்சே—யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண். 18

### திருவந்தாதி.

தானிருக்கும் வண்ணத்தைக் காட்டித்தன் றாளிணைக்கீழ்
யானிருக்கும் வண்ண மெனக்களித்த—தேனிருக்கு
முன்னரிய தோர்சொருப னுள்ளிருக்க நெஞ்சமே
யென்னரிய தெல்லா மெளிது. 19

### வியந்துரை.

பாதங்கள் கண்டிருந்து பாராட்ட நாம்பெற்றோ
மேதொன்றும் வேண்டா மினிநெஞ்சே—வேதங்கள்
கண்டறியா தேமாக்கக் கண்ணெதிரே வந்தாண்டு
கொண்டவனார் தம்மருளே கொண்டு. 20

நெஞ்சொடுமகிழ்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2763.

# 27. தோத்திரப்பாவணா.

## 1. பாடவிரும்பல்.

### வினாவிளக்கம்.

நெஞ்சுடன் மகிழ்ந்து நின்று நின்மல னுரைத்தாற் போல
வெஞ்சலி லிறைவ னைப் பாடிட விரும்பி யென்றும்
வஞ்சமி லன்பர் கூறும் வகையது மறைகு வன்கே
டுஞ்சலும் பிறப்பு நீத்த சுத்தரூ பத்து மைந்தா. 1

### சொரூபானந்தநிலயம்.

* ஆதி வீடெனு மளவிலா வின்பமு ‡ மருந்தியெ னதுவல்லா
லோது மூவுல கங்களு மோர்பொரு ளாகவுன் னுவனேதான்
வேத நாயக சொரூபநின் வியன்கழல் பாடவேண் டுவன்மேன்மே
னுத னனல தொருபொருள் கனவினு நனவிலும் வேண்டேனே.

‡ மருத்தியென் பதுவல்லா என்றும் பாடமுண்டு.

### அனுபவசாரம்.

* விண்ணு ளும்பதம் வேண்டி டாதநான்
மண்ணு ளுஞ்செல்வ மதிப்பே † னேமனத்
தண்ணு வென்றன தார்வ முன்கழல்
பண்ணு ருந்துதி பாட வேண்டவே. 3

† னேபினே, யண்ணு என்றும் பாடமுண்டு.

### சொரூபானந்ததரிசனம்.

* நாத்த ழும்பிட நாயகன் சொரூபனு மங்களை நவின்றேத்தி, யார்த்தெ ழுந்தழன் மெழுகென வுருகியங் கங்கள்விண் டழுதா றிப், பேர்த்தோர் போதினும் பிறிதொரு பொருளறப் போருட் பெருமான்றன், கீர்த்தி பாடிட விரும்புவ னதுவலாற் கேட்கவும் வேண்டேனே. 4

### போதாமிர்தம்.

* நான்முக னரன்மா னுடிட வரியாய் நலமிகு சொரூபாவென்
னனல வாநீ யவனியி லுருவா யடைபவர் தமையெல்லா
ஞானம துருவா யிடமொழி விரகி னலமிகு மெழில்பாடத்
தேனன மொழியாய் தேசிக பரனே திருவுள மதுசெய்யே. 5

### மூலசித்தி.

* பாதமே புகழ்ந்து நின்று பாடநான் வேண்டும் வேண்டு
மோதுநின் புகழெப் போது முரைக்கநான் வேண்டும் வேண்டு
நாதநற் சொரூப நின்சீர் நவிலநான் வேண்டும் வேண்டு
மேதுமற் றுளசொற் கூறு திருக்கநான் வேண்டும் வேண்டும். 6

### ஞானவிநோதன் கலம்பகம்.

ஞாலம் புகுந்தருளி நாயேனை யாட்கொண்ட
சீலம் புகழுமா செய்கண்டாய்—கோலங்கொண்
டாண்டானை மாறு வருட்சொரூபா னந்தனை
வேண்டா வடியேற்கு வேறு. 7

### திருவாசகம்.

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை மாலு நான்முகத் தொருவன் யாரினு, முன்ன வெம்பிரான் வருக வென்னெனை முழுது மியாவையு மிறுதி யுற்றநாட், பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப் பெய்க ழற்கணன் பாயெ னாவினாற், பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப் பாவ நாசநின் சீர்கள் பாடவே. 8

பாட வேண்டுநான் போற்றி நின்னையே பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக், காட வேண்டுநான் போற்றி யம்பலத் தாடு நின்கழற் போது நாயினேன், கூட வேண்டுநான் போற்றி யிப் புழுக் கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம், வீட வேண்டுநான் போற்றி வீடுதந் தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

### தத்துவமாலை.

வானோ ரறியா மருந்தே மறைதேடு
மானாத பேரின்ப வாரமுதே—தேனாரு
நின்பாத நற்கமல நீசனே னெப்போது
மன்பாக வேத்த வருள். 10

பாடவிரும்பல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2773.

---

### குறுந்திரட்டு.

நாட்டின் பத்தை நயக்கிலே னந்தோ
வீட்டின் பத்தையும் வேண்டலன் மெய்ம்மையே
காட்டின் பக்கழற் றுமரை யேபுகழ்
பாட்டின் பத்தைப் பருகிக் களித்திலேன். 422

## 2. புனிதனைப்பாடாப் புலவருக்கிசைத்தல்.

### வினுவிளக்கம்.

பரமனைப் புகழ்ந்து பாடிட விரும்பிப் பழுதற வுளமெலா முருகி, வரமுறத் திகழு மறிஞரங் கறைந்த வகையென வமலனற் கழலைச், சிரமுறப் பொதிந்து திகழ்ந்திடப் புகழாத் தீப்புல வோர் தமைக் குறித்துப், பரமனற் புகழே பாடுதற் கன்பர் பகர்ந்திடும் பரிசையுங் கேளாய். 1

### திருப்பாட்டு.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வி னுந்தொண்டர் தருகிலாப், பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்கா, ளிம்மை யேதருஞ் சோறுங் கூறையு மேத்த லாமிடர் கெடலுமா, மம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே. 2

மிடுக்கி லாதானை வீம னேவிறல் விசய னேவில்லுக் கிவ னென்றுங், கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறி னுங்கொ டுப் பாரிலைப், பொடிக்கொண் மேனியன் புண்ணிய னெந்தை புகலூர் பாடுமின் புலவீர்கா, ளடுக்கு மேலம ருலக மாள்வ தற் கியாது மையுற வில்லையே. 3

எள்வி ழுந்திடம் பார்க்கு மாயினு மியார்க்கு மீகில னாயினும், வள்ள லேயென்றன் மஞ்சனே யென்று வாழ்த்தி னுங்கொடுப் பாரிலைப், புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக லூரைப் பாடுமின் புலவீர்கா, ளள்ளற் பட்டழுந் தாது போவதற் கியாது மையுற வில்லையே. 4

### திருவாய்மொழி.

சேருங் கொடைப்புக ழெல்லையி லானையோ ராயிரம்
பேரு முடைய பிரானை யல்லான்மற்றி யானறிகிலேன்
மாரி யனையகை மால்வரை யொக்குந்திண் டோளென்று
பாரிலோர் பற்றையைப் பச்சைப் பசும்பொய்கள் பேசவே. 5

---

### குறுந்திரட்டு.

சோல்லாம் வண்ணங் கொண்டு துதிக்கிற் சொரூபன்று
ளல்லா நல்கு மின்புறு வீடுந் தருமிங்கே
பொல்லா வாழ்க்கைப் புகழிலர் தம்மைப் புலவீர்கா
ளில்லா தெல்லாஞ் சொல்லி யிரந்தா லென்பெற்றே. 423

என்றுவ தெத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காண்
மன்று மனிதரைப் பாடிப் படைக்கும் பெரும்பொருண்
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் பாடினாற்
றன்னாக வேகொண்டு சன்மஞ்செய் யாமையுங் கொள்ளுமே. 6

கொள்ளும் பயனில்லைக் குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்துநும் வாய்மை யிழக்கும் புலவீர்காள்
கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல் லாந்தருங் கோதிலெம்
வள்ளன் மணிவண்ணன் றன்னைக் கவிசொல்ல வம்மினோ. 7

ஞானவினோதன் கலம்பகம்.

புயமே குன்றமு மதுகை புயலே யென்று புலவீர்காள்
கயமே யன்றி நயவாரைக் கவிநீர் பாட றவிர்வீர்கா
டுயர்மே லின்றி யிடமேவுஞ் சொரூபா னந்த வெனின்ஞான
மயமே யுங்கள் வடிவாகி மறுகால் வந்து பிறவீரே. 8

* மொழிகிலீர் சொரூபா னந்தர் மொய்கழல் வெய்ய வாழ்க்கை
கழிகிலீ ரிரங்கி யாளுங் கருணையை நினைந்து கண்ணீர்
பொழிகிலீர் புலவீர் பொய்யே பொருளலா தவரைப் போற்ற
வொழிகிலீ ரவமே யுங்க ளுரையெலா முகுத்தீ ரன்றே. 9

போதா தனன்மா லரனே யெனினும் பொய்யில்லா
வேதா கமமெய்ப் பொருடான் மெய்கண் டவரேனு
நாதா வெனையா ளுடையாய் சொரூபா னந்தாவென்
றோதா தவர்மேன் மையெலா மொன்றுக் † குடலன்றே. 10

† குடனன்றே என்றும் பாடமுண்டு.

தத்துவமாலை.

அசையு மனிதரைநீ ராசையினாற் பாடி
வசையில்புகழ் வாளா வுகாதே—யிசைதிகழு
நற்புலவீ ரெல்லாம் பெறலாகு ஞானகனச்
சிற்சொருபன் சீர்பாடுஞ் சேர்ந்து. 11

* தானே தனையருளத் தாரணியில் வந்தருளும்
வானோனைப் பாடா மதியிலிகா—ளானா
திடுவார்கை பார்த்திங் கிடுகடைக டோறுங்
கெடுவார்பட் டாரே கிறி. 12

சேரும் புகழுடையான் சென்றடையாச் செல்வுடையா
னூரன்ப ருள்ள முகந்துடையான்—பேரன்பே
வேண்டியதே தானுடைய வித்தகனூர் சீரொழிய
மாண்டிடினும் பாடேனுன் மற்று. 13

மதுரக் கவியுடைய வண்புலவீர் வம்மின்
சதுரார்க் கரியானைச் சாற்று—மெதிரின்றி
மூவுலகுந் தந்தருளி முற்றுவற் றுவீடுந்
தாவறவே தந்தருளுந் தான். 14

புனிதனைப் பாடாப் புலவருக்கிசைத்தல் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2787.

## 3. தோத்திரச் சிறப்பு.

### வினவிளக்கம்.

பத்தி யான்மிகு பழையநல் லடியவர் பரமன தருள்பாட
மெய்த்த சிந்தையி லவன்கழி புலவரை விளம்பிய வகையேபோற்
சுத்த வார்கழற் றோத்திரச் சிறப்பதுஞ் சொல்லுவர் துகளில்லா
ரத்தை யானுனக் கழகுற வறைகுவ னதுதனை யறிமைந்தா. 1

### ஆனந்தாமிர்தம்.

* ஆர ணங்களின் சிரத்திலா கமத்தினி லறைதரு சமயத்திற்
சீர ணந்திகழ் செபந்தவ வேள்வியிற் றியானமேயா கறுதன்னிற்
கார ணன்சொரூ பன்கழ றேடுவர் கண்ணிலா தவரந்தோ
பூர ணன்கழல் புகழ்பவர் மொழியினுட் பொலிந்திருந் ததுதானே.

### சொரூபானந்த நிலயம்.

* அவல நூல்களு மறைதரு மளவையுங் கொண்டலம் வருகின்ற
சவலை ஞானிக டத்துவன் கழலிணை தாமறி குவதெங்கே
கவலை தீர்தர வல்லவா சொல்லிநற் கழல்களைத் துதிக்கின்ற
தவலி லாதவர் மழலைமென் மொழியது சரணபங் கயந்தானே. 3

### போதரத்நாகரம்

* ஏழை காளிது தான்மதி கேடுநீ ரிறைவனைத் தவந்தீர்த்த
மூழி யோகமற் றுபாயஞா னங்களி னுணருதற் குழல்கின்றீர்
கேழி லாவருட் சொரூபனல் லருளியற் கீர்த்திபா டிடுகின்ற
தாழ்வி லாமொழி † யினனவ னீர்தடு மாறுத றவிர்வீரே. 4

† யின்னன்பர் நீர்தநி என்றும் பாடமுண்டு.

### அருணெறிவிளக்கம்.

* துதியி னுக்கிறை யெளிவரு மென்பது சுருதியு முரையாடு
மதுவு நிற்கவன் றொண்டனுக் கெளிவரு மதிசய மறியீரோ
முதிய முத்தமிழ் விரகனு வுக்கிறை முதல்வரு மவரெல்லாம்
பதியி னைத்துதி செய்தவ ராதலிற் பாட்டுளான் பரமன்றான். 5

* சதுரி மூந்தறி மால்கொண்டு தன்னையாள் குருபான் றனக்கன்பாய்த், துதிசெ யுந்திரு வாதவூ ரனுக்கிறை செய்தவா தணியீரோ, மதிவ ரன்சட கோபனன் மழிசைக்கோன் மங்கைமற் றுளரெல்லா, மதிர்ந டன்கழற் றுதியின ராதலி னதனல மளவன்றே. 6

### போதரத்னகரம்.

* ஆரங் காரகின் மான்மதம் பனிதமோ டழகுறும் விரைமற்றுஞ்
சேருஞ் செங்கம லங்கழு நீர்முதற் சீர்விரை நிறமுந்தா
ஞேருங் காலொழி வறமிகு சொரூபன தொளிமிகு துதியேபோற்
சீருஞ் செவ்வியுந் திகழ்விரை நிறமதுஞ் சிறந்திட மாட்டாதே. 7

### சொரூபானந்தநிலயம்.

* கரும்பி னற்சுவை யமுதுதே மாங்கனி கட்டிசர்க் கரை பாறேன், விரும்பு நற்பல வின்சுளை மிக்குள சுவைகளு மவையெல்லாந், தெரிந்தி டத்துறு வேம்பினுங் கைத்தது தேசிகன் சொரூபன்ற, னரும்பு நற்றுதி யதிமது ரமதுடை யமுதருந் தினனுக்கே. 8

### திருவந்தாதி.

இல்லாத தொன்றை யுளதா நினைந்திங்ங னேகழியும்
பொல்லாத வென்னைப் பொருளாக வாண்டிப் பொறிகுலைக்க
வல்லானை வாக்கு மனமுமொன் றாக வழுத்தினர்க்கு
நல்லானை யேத்துவ னென்றனக்கே நகைவருமே. 9

### ஞானவினோதன்கலம்பகம்.

பாதந் தலையிற் பதித்தென் பவங்களைந்த
† நாதன் சொரூபா னந்தன் பரங்கருணை
கேதங் கெடச்செவியாற் கேட்குந் தொறுமென்னு
வோதுந் தொறுமுருகி ‡ நீராகு மூனே. 10

† நாதன் பரன் என்றும், ‡ நீராவுகு என்றும் பாடமுண்டு.

24407

மதிக்கை மதிகே டென்றிரீர் மலப்பொ தியைநீ ரென்றுநீ
ருதித்து மறியா நின்றனோ யொழிக்க நினையா நின்றிலீர்
கதிக்கு நெறியே தென்பிரேற் கருத்தின் மிகுநே யங்கொடே
துதித்த பொழுதே சிந்தைநோய் துடைப்பர் சொருபா னந்தரே.

### திருக்கடைக்காப்பு.

கோழைமிட றுக்கவி கோளுமில வாகவிசை கூடும்வகையா
யேழையடி யாரவர்க ளியாவைசொன சொன்மகிழு மீசனிடமாந்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே. 12

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங் காட்டுளார் நாட்டுளா ரெனவும், வழியுளா ரெனவு மலையுளா ரெனவு மண்ணுளார் விண்ணுளா ரெனவுஞ், சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார் தொண்டர்வாய் வந்தன சொல்லும், பழியுளார் போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதி யாரே. 13

நன்றுடை யானைத் தியதில் லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிருமே. 14

### திருவாய்மொழி.

யானு மேத்தி யேழுலக முற்று மேத்திப் பின்னையுந்
தானு மேத்தி னுந்தன்னை யேத்த வேத்த வங்கெய்துந்
தேனும் பாலுங் கன்னலு மமுது மாகித் தித்திப்ப
யானு மெம்பி ரானையே † யெய்தி னேனு னுய்வானே. 15

‡ யேத்தி னேன்யா என்றும் பாடமுண்டு.

என்றைக்கு மென்னையுய் யக்கொண்டு போகின்ற
வன்றைக்கன் றென்னைத்தன் னாக்கியென் னாற்றன்னை
யின்றமிழ் பாடிய வீசனை யாதியாய்
நின்றவென் சோதியை யென்சொல்லி நிற்பனே. 16

ஆமுதல் வனிவ னென்றுதற் றேற்றியென்
னாமுதல் வந்து புகுந்துநல் லின்கவி
தூமுதற் ‡ குத்தரந் தன்னைச் சொன்னவென்
வாய்முத லப்பனை யென்று மறப்பனே. 17

‡ பத்தர்க்குத் தான்றன்னைச் என்றும் பாடமுண்டு.

சீர்கண்டு கொண்டு திருந்துநல் லின்கவி
நேர்பட யான்சொல்லு நீர்மையி லாமையி
னேர்விலா வென்னைத்தன் னாக்கியென் னாற்றன்னைப்
பார்பர வின்கவி பாடும் பரமனே. 18

உதவிக்கைம் மாறென் னுயிரெனவுற் றெண்ணி
னதுவுமற் றங்கவன் றன்னதென் னாற்றன்னைப்
பதவிய வின்கவி பாடிய வப்பனுக்
கெதுவுமொன் றிலைச்செய்வ திங்கு மங்குமே. 19

† வழிபட் டோட வருள்பெற்று மாயன் கோல மலரடிக்கீழ்
சுழிபட் டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளத் தின்புற் றிருந்தாலு
மிழிபட் டோடு முடலினிற் பிறந்து நின்சீர் யான்கற்று
மொழிபட் டோடுங் கவியமுத நுகர்ச்சி யுறுமோ முழுதுமே. 20

தேவாரம்.

கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
னாடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே. 21

க்ஷேத்திரத் திருவெண்பா.

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே—கூற்றுதைத்தா
னாடரவங் கச்சா வரைக்கசைத்த வம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல். 22

ஞானவினோதன்கலம்பகம்.

பட்ட மதகரிமேற் பல்லூழி யாண்டவனி
வட்ட முழுதாளு மன்னர்பத—மட்டோ
சொருபானந் தன்கீர்த்தித் தொல்லமுதை வாரிப்
பருகா வுருகும் பகல். 23

தோத்திரச்சிறப்பு முற்றிற்று.
ஆகச்செய்யுள் 2810.

---

குறுந்திரட்டு.

துனிதனைத் தொகுமுடற் சுமைது டைத்தெனைப்
புனிதமாய்ப் புரணபூ ரணம தாக்கிய
மனிதனார் கழற்றுதி யமுதை மாந்தினே
னினிதெனு ரெலையிலா வின்ப வீடுமே. 424

† இது சில பிரதியி லில்லை.

# 28. மங்கலப்பவணா.

## 1. மங்கலவரம்.

### வினாவிளக்கம்.

துகளி னன்கழ றொழுதுநல் லடியவர் துதிநல முறைசெய்து
நிகழும் வையகம் வளமுற நிகரின்மங் கலவர மதுவேண்டி
மிகவி யந்தழு தலறிமெய் யன்பொடு விளம்பிய வியருனுஞ்
சகம கிழ்ந்திட வறைகுவ னதுதனை யறிதக வுடைமைந்தா. 1

### போதரத்னாகரம்.

* உலக நன்குற வொழிவறு பரமுனி யொப்பிலான் கழல்வாழ்க
வலகின் மாமறை மனுநெறி யழகுற வமலனற் கழல்வாழ்க
கலக நோய்பசி கருவொடு மழிதரக் கருணையங் கழல்வாழ்க
வெலையி லாநல மெவருமெய் திடவெனை யாண்டவன் கழல்வாழ்க.

### நடராஜசரிதை.

* தம்பி ரான்கழ லருளுக சகமெலாந் தருமமே தழைத்தோங்க
வெம்பி ரான்கழ லருளுக வின்பமே யெய்தியா வரும்வாழ்க
நம்ப லாதுல கினினுள நவையெலா நாசமெய் துகவென்றே
யும்ப ரான்றிரு நடன்கழல் களிவியா னுவந்துகொள் வரமீதே. 3

### போதாமிர்தம்.

* மன்னர் கோன்மனு நெறியினின் வழங்குக மழைபொழிந் துலகெல்லா, மன்ன நீடுக வருளறம் பெருகுக வாண்டவன் கழல் சூடிப், பின்ன மாகிய பேதைமை நீங்குக பேருல கதுவென்றே, யென்னை யாளுடை யெழின்மிகு சொரூபனை யானிரந் ததுதானே.

### சிவப்பிரகாசதரிசனம்.

* சாந்தி தாந்திநல் லுபரதி 'துவந்துவ சமத்துவந் தழைத் தோங்கி, வாய்ந்த மயித்திரி யாதிவிட் டிச்சைவண் பத்திதான் வளர்ந்தேமிக், கேய்ந்த ஞானவா ரமுதமுண் டியாவரு மின்பநற் சிவமாகச், சேர்ந்து நாந்திகழ் சிவப்பிர காசனைச் சிறந்துகொள் வரந்தானே. 5

* மையலொன்றற மன்னுநற் சிவத்தினை மலர்க்கையா மலகம்போ
லைய நீயெனக் கருளிய பெருநலம் யாவரும் பெறவேண்டுஞ்
செய்ய மாமறை களுந்திகழ் மூவருந் † தேர்வதற் கரிதாய
மெய்யர் மெய்யனற் சிவப்பிர காசயான் வேண்டிய வரமீதே. 6

† தெரிப்பதற் என்றும் பாடமுண்டு.

### திருக்கடைக்காப்பு.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க தீயவெ லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 7

### பேரொளிவிளக்கம்.

மாமழை யுடைப்புயல் வரக்கடவ நாளால் வந்துதவு மாறு நில மன்னர்கொடை யென்னும், தூமதி யருட்கதிர் சொரிந்திலகு மாறுந் துன்பமுறு வாரடைய வின்பமுறு மாறும், காமநெறி விட்டநெறி காதல்செயு மேலோர் கலங்குபிற விக்கடல் கடந்து கரை யேறிச், சேமமிகு சித்தியெனு முத்திபெறு மாறுஞ் செய் தருளு வாயிறைவி செய்தருளு வாயே. 8

### தத்துவமாலை.

* கல்லா நெஞ்சைக் கனிசெய்து செம்பொற் கழல்சூட்டி
நல்லா ரெல்லா மேமுற நாயேற் கருள்செய்து
சொல்லா னெஞ்சாற் றொடர்வறு சற்சிற் சுகவெள்ள
மெல்லா ரும்பெற் றின்புற வேண்டு மிறையோனே. 9

வேதமுடி வினின்விளைவா கமத்தின்மிகு பயன்மிருதி புராண சாரங், கோதறுஞா னிகண்மொழிகள் குலவியநல் லனுபூதி குறி யி லின்பம், வாதவிருட் கெழிலிரவி மன்னுசிவம் வெளிப்படுத்து மணிநற் றீபஞ், சோதிசிவப் பிரகாசன் றொகுத்தமைத்த திரட் டெனுநற் சிவப்பிர காசம். 10

† வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே. 11

மங்கலவரம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் 2821.

---

† காற்றெதிர் தூற்றுங் கறங்கது போலுமென் காதலினன்
மாற்றரு மேழ்பிற விக்கடல் சுற்றி மயங்குமெனை
யாற்றரு முத்திக் கரையினி லேற்றி யசஞ்சலமாய்
வீற்றிரென் றானறி வானந்த தேசிக வித்தகனே.

இது பதினொன்றாவது செய்யுளாகச் சில பிரதியி லிருக்கின்றது.

# சொரூபானந்தர் நாமஸ்துதி.

## பாடுதுறை.

திருமாலுஞ் சேவின்மிசைத் திகழ்வானும் பூவின்மிசைச் செறி
வானுஞ் சீர்பெருகு மறைநாலுந் தேடியின, மருமாலங் காயயர
வடியேனென் றுகவென தகமேநின் றாரமுத மிகமேவும் பாதநம,
வெறிமாகங் காலொடுயிர் தரைநீரென் றாழ்மதியென் னிருநாலங்
காகியவை யலவாகுங் கோலநம, துரிசாமென் றீயவினை யறநாளுங்
கூரவருள் சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 1

பலவாயொன் றாகிநிகழ் பரமானந் தாயநம பரவாநின் றார்
கள்பரு கமுதாகும் பாதநம, மலவாகந் தீரவென தலைமேவும்
பாதநம வலிதாநெஞ் சூடுருக வருவாயுன் பாதநம, வுலவாவன்
பாலுருகி யுடையாயென் றோலமிட வுரியார்கண் காணவரு மொ
ளியாருங் கோலமொரு, சொலவாலென் பாலருள விசையாயுன்
பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 2

மதியாதுன் பாதமலர் மருவாவென் பாவிமன மருவாநின்
றாரமிர்தம் வளராநின் றுய்பெருக, விதியாதென் றோதவினி யினி
யாநின் காருணிய வியல்போவென் றோதிலல திறைவாவெஞ் சாத
முழு, நிதியாயன் பாயெனது ணிறைவாயன் போடுபக னிசிதா
னெஞ் சானதுக வுருகாநின் றேகழல்க, டுதியாநின் றொழிய வ
றியாய்நின் பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம.

உலகாய்நின் றுய்விரவி யுயிராய்நின் றுயலகி லுணர்வாய்நின்
றுயடைய வுடையாயென் றுலொளிசெய், திலகாருன் கோலமல
தெதுதானுண் டாய்நிகழ்வ திதுதானன் றுகுமென வெதுவேறு
ண் டாமிறைவ, கலகாய்நின் றுலுமிது கலகாநின் சீரலது கதிவே
றுண் டாகமதி கருதாதென் றாயமுடி, துலகாநின் றுளலது சும
வாதன் பாகிவிளை சொருபானந் தாயநம சொருபானந் தாயநம.

கனியேயென் கோபெரிய களியேயென் கோகடலு ளமுதே
யென் கோவரிய கதியேயென் கோவினிய, தனியேயென் கோவ
டியர் சரணேயென் கோவெனது தவமேயென் கோவெனது தலை
வாவென் கோமுனிவர்,முனியேயென் கோவென்முழு முதலேயெ
ன் கோகருணை முகிலேயென் கோவிறைவ முறையோவென் கோ
வெனது, துனியேகும் பார்வையருள் சுகமேயென் கோவருள்
செய் சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 5

குறையாதொன் றுளுமற நிறைவாகும் பாதநம குறியாநின் சோதிதரு குரவாநின் பாதநம, சிறையாவென் றீமனமு ளுறைவாய்நின் பாதநம சினமார்வந் தீரவரு டெளிவாகும் பாதநம, மறையாலுங் கோதின்முனி கணமாகஞ் சேரமரர் மதியாலுந் தாளின்வழி படுமோநின் றுய்யுமறு, துறையாலுஞ் சார்வரிய சுடரேநின் பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 6

வழுவாவன் பாலினிய மனனுல்வந் தார்மதுர மொழியானன் றுயமது மலராலுன் றுள்கடொழு, தெழுவாரிங் காதரவோடிறைவாவென் றேலமிட வெழிலாருந் தீமெழுக தெனவேநின் றுவவுட, னழுவாரிந் திராதியர னயன்மாலங் காகவருள் வலியாருங் காணும்வகை யடியேனுன் றுளிணைக, டொழுமாவந் தாளுமென துணையாகும் பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 7

அழலாலுண் டாய்கட லதுவாகுந் தீயபவ மதிலேநின் றுழுமெனை யருளாலன் போடரிய, கழலாகுஞ் சீர்பெரிய கரையேவந் தேறவருள் கனியேயுன் கோலமல ரடியேகண் காணவரு, ளெழிலாருஞ் சீரடிய ரடியாலங் கேவுதொழி லினிதாமன் போடுமென சிரமேகொண் டாருமிது, தொழிலாநெஞ் சோடுமுன தடியேனுங் கூடவருள் சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 8

உரையாடுந் தோறுமென துளமானந் தாதிசய மொழியாதன் பாயுருகி விழியாறங் கோடிமிகு, திரையாய்வந் தாலுமென செயலாலன் றீதோர்செயல் சிறியேனென் றுளுமிது தெரியேனந் தோவருள்செய், புரையாதொன் றுளுமறு புலையேனெஞ் சாரும்வகை புகுதாவெஞ் சாமலுழல் புலமாகுந் தீயமிகு, துரையாவுந் தீரவெழு சுடராகும் பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம.

அறவாநின் பாதநம வமலாநின் பாதநம வருளேநின் பாதநம வழகாநின் பாதநம, திறவாநின் பாதநம செறிவேநின் பாதநம சிவமேநின் பாதநம தெளிவேநின் பாதநம, வுறவாநின் பாதநம வுயிரேநின் பாதநம வுணர்வேநின் பாதநம வொளியேநின் பாதநம, துறவாநின் பாதநம சுகமேநின் பாதநம சொருபானந் தாயநம சொருபானந் தாயநம. 10

சோருபாநந்தர் நாமஸ்துதி முற்றிற்று.

# மாதவம்.

பாடுதுறை.

தித்தம ஞேவி காரமென்று தற்குண ராது விடுறப்
புத்தக மோதி மாளுகின்ற புத்தர்முன் னான வாதிகள்
கத்தில்வி ழாத வாறுவந்து கைக்கொளு நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 1

† போத்தையில் வூன மாகிவந்த புற்புத நானெ னாவகை
சத்திய ஞான மானவின்ப தத்துவ மாக வேசெய
வித்தக வேட மாகிவந்த மெய்த்தவ நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 2

† பொத்திய வூன மாகிவந்த புற்புத மாகி நானெ னாது, சத்திய ஞான மானவின்ப தத்துவ மாகு வானென என்றும் பாடமுண்டு.

அத்தனை வேறி லாதெழுந் தத்தமி யாத சோதிசிற்
சத்தென வேத மோதுதொந் தற்பொரு டானி தாமெனச்
சித்தநல் வேட மாகிவந்து செப்பிய நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே 3

சித்த விகார மாகிநின்று சிற்சட வேறு பாடுசெய்
பெத்தமும் வீடு மாய்மயங்கு பித்தது தீரு மாறுசற்
சித்தென தாக மாகவொன்று செப்பிய நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 4

முத்தனை மூல நாடிலொன்றை முற்படு மாதி மூலனைச்
சுத்தனை மேனி தானிதென்று சுட்டவொண் ணாத சோதியைச்
சித்தனை வேறி லாவனந்த சிற்சுக லோக † தியாகியை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 5

† தாயியை என்றும் பாடமுண்டு.

முத்தியை மேவ யானிங்ஙன் முற்பட மேவி மொய்கழற்
பத்தியை மேவ மேனிகொண்டு பத்தர்கள் சூழ மேவுகுந்
தெத்தியென் னாவி வாரியுண்டு மெற்றுதி பேணு மீசனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 6

இத்தனை யோர்வு ‡ ருதுநெஞ்சி விட்டிடை மாதர் பாலுற
மத்தரின் வீழு மாறுகண்டு வைத்தெனை மாசி லாதமெய்த்
தத்துவ மாக வேதகஞ்செய் சற்குரு நாத னார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 7

‡ ருதநெஞ்சி என்றும் பாடமுண்டு.

வித்தக மாக † வேபரந்த மெய்ப்பொருள் போலு மேதினி
கத்தல மேவு மூதையம்பு கட்டழல் சோம சூரியர்
சித்திய மான ஞானிகளந்த சித்திர காரி யார்தமை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 8

† வேபரந்து மெய்ப்பொருள் போல என்றும் பாடமுண்டு.

தோத்தற மாடு வீடுமைந்தர் சுற்றமொ டாசை மாறிமெய்ப்
பத்திமெய்ஞ் ஞான மேவுசிந்தை பற்றிவி டாது மேவுகின்ற
வுத்தம சீல ரோடுவந்தெ னுச்சியின் மேவு பாதனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 9

ஒத்ததொவ் வாத தாயலைந்த வுற்பவ வேலை பாழ்பட
நித்தமெய்ஞ் ஞான மாமனந்த நிர்க்குண தீர மேறிநற்
பத்தர்கள் பாடி யாடவந்த பதும் விராச பாதனை
யெத்தனை யூழி மாதவஞ்செய் திப்படி காண லாவதே. 10

மாதவம் முற்றிற்று.

## அருமை.

பாடுதுறை.

நான்மறை யோதிப் பொருள்வி ரித்து
நாடறி யக்கல்வி சாற்றி னாலுந்
தானது வாகை யரிது காணுஞ்
சலிப்பற நிற்கை யரிது காணும். 1

எல்லையி லாகம மேற வோதி
யேதுக்க ளெல்லா மியம்பி னாலு
மல்ல லறுக்கை யரிது காணு
மறிவா யிருக்கை யரிது காணும். 2

இணங்காமை யெல்லா மறத்து றந்தே
யிருட்டற வேதாந்த மோதி னாலும்
பிணங்கா திருக்கை யரிது காணும்
பேரின்ப மாகை யரிது காணும். 3

பற்றற விட்டுத் தலைப றித்துப்
பாணியைப் பண்ணிப் பயின்றக் காலு
முற்ற நிலைநிற்கை யரிது காணு
முடிய நிலைநிற்கை யரிது காணும். 4

ஆறு சமயப் பொருளுங் கற்றே
யங்குள்ள தர்க்கங்கள் சாற்றினாலு
மாறி யிருக்கை யரிது காணு
மதுவிது வாகை யரிது காணும். 5

தேறி யுலக மனைத்தினையுஞ்
சிற்பர ‡ மாகத் தெளிந்தக் காலு
மாறி யிருக்கை யரிது காணு
மவிரோத மாகை யரிது காணும். 6

‡ மாகநாஞ் செப்பினாலும் என்றும் பாடமுண்டு.

வேறு பிறிதிலா † மேன்மை கண்டு
வித்தார மாக விளம்பினாலு
மாறி யிருக்கை யரிது காணு
மவிரோத மாகை யரிது காணும். 7

† மெய்ம்மை தன்னை என்றும் பாடமுண்டு.

அருமை முற்றிற்று.

## பகிடி.

கழியாம னூழியூழி யுறவாகி வருகின்ற
கருவினை நாசனென் றிடுபகிடி
கண்டிருந் தெனையாளக் † கழல்காட்டிக் கொடியிட்ட
கருணைமா மலையனென் றிடுபகிடி.
‡ விழியாலே தனையாக வெனைமாளச் சதுர்செய்த
விரகினை யுடையானென் றிடுபகிடி
விரவியே யுடனாயி ருலகங்கண் முழுதையும்
விரவாத வீரனென் றிடுபகிடி. 1

† கழல்கட்டி என்றும், ‡ விழியாவே என்றும் பாடமுண்டு.

அறிவானொ டறிபொரு ளாகியே யெழுஞ்செல்ல
லழகுறத் திரித்தானென் றிடுபகிடி
யறிபொரு ளறிவினி லறிவித்தவ் வறிவையு
மறிவானி லழித்தானென் றிடுபகிடி.

பொறிபுலன் கரணங்கள் புகல்சிவ பரனென்னும்
பொருளற விழித்தானென் றிடுபகிடி
பொருவிலா வொளிவாகிப் புரையற நிறைந்துள்ள
புரணமே யானேனென் றிடுபகிடி. 2

சதகோடி விதமாக வெழுந்திடுஞ் சடங்கினைச்
சாடிய சதுரனென் றிடுபகிடி
சதுமறை யொருமூவர் தலையுற வணங்கியுஞ்
சாருதற் கரியானென் றிடுபகிடி
மதமானந் துணையாக வஞ்சகத்தே செலுமெனை
வலிந்துவந் தாண்டானென் றிடுபகிடி
வாசாம கோசர வடிவினை மலர்க்கையின்
மணியென வளித்தானென் றிடுபகிடி. 3

பகிடி முற்றிற்று.

## திருமுடியடைவு.

சிவனருளைப் பெற்ற தேசிக வசிட்டனுஞ் சிறக்குகன புதுனவனொடு சித்தயோகி நித்திய நாதனிராண காலனுங் திகழநந்த வேகனும், அவ்வருள தானபர மானந்தர் சிவானந்த ரருளுங்கிருபானந்தரும் பெரியதிரு வள்ளுவன் வரமாசி லாமணியு மானசிவ சுந்தரியொடே, பவமறவே வந்தபர மானந்த நாதனும் பகருமாரதிராசன பாங்குடைப் நல்லபர மானந்த தீர்த்தரும் பரமானந்த யோகியு, மவமறவே வந்தவய் யானன தேவரா சய்யனுட னேயையரு மருளான மண்டரா மானந்த ராமிவர்க ளருளுமா சாரியர்களே. 1

பெருந்திரட்டு
(குறுந்திரட்டுடன்).
முற்றிற்று.

குருவே துணை.

Dr. U. V. S. ... LIBRARY